ஆண்டறிக்கை 2017

தேசிய சேமிப்பு வங்கி

இலங்கை : இலாபமீட்டும் வங்கி

ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு

ஆண்டறிக்கை
2017

தேசிய சேமிப்பு வங்கி

உள்ளடக்கம்

ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு

04

முகவுரை — 06

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான வரலாறு — 08

தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை 2017 பற்றி — 09

2017 வரலாறு

12

சிறப்புக் கூறுகள் — 14

எமது கதாநாயகர்கள் — 19

தலைவரின் செய்தி — 20

பொது முகாமையாரின்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு — 26

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான வர்த்தக மாதிரி — 32

தொழிற்பாட்டு சூழல் — 37

அக்கறையுடைய தரப்பினர் — 46

பொருண்மையான விடயங்கள், இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள் — 52

எமது மூலோபாயம் — 63

முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும் — 72

நிதியியல் மூலதனம் — 73

பிரதான வியாபார பிரிவுகளின் மீளாய்வு — 85

அறிவுசார் மூலதனம் — 92

தயாரிக்கப்பட்ட மூலதனம் — 100

மனித மூலதனம் — 108

சமூக மற்றும் உறவு மூலதனம் — 124

இயற்கை மூலதனம் — 142

ஐ.நா இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான தேசிய சேமிப்பு வங்கியின் எண்ணம் — 146

ஆளுகை — 155

பணிப்பாளர் சபை — 156

நிறுவன முகாமைத்துவம் — 160

நிறைவேற்று முகாமைத்துவம் — 162

பிரதம முகாமையாளர்கள் — 163

நிறுவன ஆளுகை — 165

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை — 190

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை — 193

சபை நியமனக் குழுவின் அறிக்கை — 195

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு — 196

சபை கடன் குழுவின் அறிக்கை — 198

சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு — 200

இடர் முகாமைத்துவ அறிக்கை — 201

நிதியியல் அறிக்கைகள்

239

நிதியியல் நாட்காட்டி —— 240

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை —— 241

நிதியியல் அறிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள் —— 248

நிதியியல் அறிக்கைகளில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்று —— 250

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை —— 252

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று —— 253

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை —— 255

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று —— 256

நிதி நிலைமைக் கூற்று —— 258

பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று —— 260

காசுப் பாய்ச்சல் கூற்று —— 264

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் —— 265

பிற்சேர்க்கைத் தகவல்

371

உற்பத்திகளும் சேவைகளும் —— 372

ஐ.அ. டொலர்களிலான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று —— 376

ஐ.அ. டொலர்களிலான நிதி நிலைமைக் கூற்று —— 378

2016 இன் 1ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகளின் III ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள் —— 379

ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் —— 392

புள்ளிவிபரக் குறிகாட்டிகள் 2008–2017 —— 397

வைப்புப் பகுப்பாய்வு —— 399

உலகளாவிய அறிக்கையிடல் முனைப்புக்களின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண் —— 400

தொடர்புடைய வங்கிகள் —— 404

பரிமாற்றுக் கம்பனிகள் —— 405

நிதியியல் மற்றும் வங்கியியல் அருஞ்சொற்கள் விளக்கத் தொகுப்பு —— 408

நிறுவனத் தகவல் —— 412

தொலைநோக்கு

உமது சேமிப்புக்களுக்கான மிகவும் நம்பத்தகுந்ததும் நாடப்படுவதுமான தெரிவாக திகழ்தல்.

பணி

எமது வாடிக்கையாளர்களது சேமிப்புக்களையும் முதலீட்டுத் தேவைகளையும் அதி உயர் மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு முழுமையான நிதியியல் தீர்வுகளை வழங்குகின்ற அதேவேளை எமது அனைத்து அக்கறைதாரர்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்தல்.

விழுமியங்கள்

தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நம்பிக்கையினையும் பரஸ்பர கண்ணியத்தினையும் ஒருமைப்பாட்டினையும் படைப்பாற்றலினையும் எதிரொலிப்பதற்காக உறுதியான விதத்தில் பதிலிறுத்துவோம்.

ஆண்டறிக்கை – 2017
ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு

தேசிய சேமிப்பு வங்கி
வடிவமைப்பு:
எஸ்மார்ட் மீடியா ஆண்டறிக்கை கம்பனி

ISBN 978-955-1619-13-8

ஒப்பற்ற வரலாறு:



1861

முகவுரை

தேசிய சேமிப்பு வங்கியானது நிதியியல் உட்சேர்த்தல் கோட்பாட்டினை நிறுவும் பொருட்டு நாட்டில் காணப்பட்ட நான்கு மரபு ரீதியான சேமிப்பு நிறுவனங்களை ஒரு நிறுவனமாக பாராளுமன்றச் சட்டமொன்று ஒன்றுசேர்த்த போது 1972 இல் தாபிக்கப்பட்டது. இதன் பயனாக, அத்தருணத்திலேயே எமது ஒப்பற்ற வரலாறு ஆரம்பித்து, ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்த சேமிப்பு மரபினை நாம் பாரம்பியாமாக பெற்றுள்ளோம்.

நாட்டின் பாரிய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியாக நாம் வகுப்பு, பாலினம் அல்லது அந்தஸ்த்தினை கருத்தில் கொள்ளாது அனைத்து இலங்கையர் மத்தியிலும் சேமிப்பு கலாசாரமொன்றினை பேணிவளர்ப்பத்ற்காக தனித்துவமான பொறுப்பாணையொன்றினை பொறுப்பேற்றுள்ளோம். சமூகத்தின் அனைத்து வகுப்பினருக்குமான வங்கியாக இருப்பது நாமே என்பதனை 19.9 மில்லியன் கணக்குகள் சான்றுபகிர்கின்றன.

நாம் தோற்றம் பெற்றதிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியானது தேசத்துக்கு வலுவூட்டும் தூண் ஒன்றாக செயற்படுகின்றது. எமது பணி, தொலை நோக்கு மற்றும் விழுமியங்கள், முன்னணி நிதியியல் நிறுவனமொன்றாக உறுதிப்பாடு, வேறான்றியுள்ள தன்மை, மற்றும் நிதியியல் பாதுகாப்பினை அடைந்து கொள்வதற்காக தேசத்திற்கு வலுவூட்டுகின்ற எமது அர்ப்பணிப்பு என்பவற்றை முகப்பு அட்டை மீதான தூண் உள்ளடக்குகின்றது.

ஒவ்வொரு கற்களாலுமான எமது தூண் முழுத் தேசத்திற்கும் நிழலளிப்பதற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. இதனால், எமது 45ஆவது ஆண்டு நிறைவினை நாம் கொண்டாடுகையில், இலங்கை மீதும், நிதியியல் துறை மீதும் நாம் பிரதிபலிப்பதுடன் மிகமுக்கியமாக எமது ஒப்பற்ற வரலாற்றினூடாக அனைத்து உயிர்கள் மீதும் நாம் ஏற்படுத்திய எண்ணப்பதிவினை பிரதிபலிக்கின்றோம்.

எமது ஒப்பற்ற வரலாறானது மக்களுக்காக மக்களால் வரையப்பட்டதாகும். அச்சிந்தனையுடன் ஒப்பற்ற ஒரு வரலாறு: எண்ணப்பதிவு இனை உங்களிடம் முன்வைக்கின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான வரலாறு

1972 நாட்டில் காணப்பட்ட நான்கு மரபுரீதியான சேமிப்பு நிறுவனங்களை தேசிய சேமிப்பு வங்கி என அழைக்கப்படும் ஒரு நிறுவனமாக ஒன்றுசேர்த்தலினை பாராளுமன்றச் சட்டமொன்று வசதிப்படுத்தியது.

1979 சீட்டிழுப்பொன்றுடன் கூடிய சேமிப்பு சான்றிதழின் அறிமுகம்

1981 கிராமிய மக்களை சென்றடைவதற்கு நடமாடும் வங்கித் தொழில் அலகினை தேசிய சேமிப்பு வங்கி அமுல்படுத்தியது.

1994 முதலாவது தன்னியக்க இயந்திரம் நிறுவப்பட்டது.

1995 வியாபாரத்தை பன்முகப்படுத்துவதற்காக தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் திருத்தப்பட்டது.


1998 ஹபன், புஞ்சி ஹபன் கணக்குகள் தொடங்கப்பட்டது.

1999 தேசிய சேமிப்பு வங்கி நிட்டம்புவையில் 100 ஆவது கிளைக்கான கதவுகளை திறந்தது. – இதுறு மிதுறு கணக்கின் தொடக்கம்

2000 தேசிய சேமிப்பு வங்கியின் துணைக் கம்பனியான என்எஸ்பி நிதி முகாமைத்துவக் கம்பனி நிறுவப்பட்டது.

2002 ஸ்த்ரீ கணக்கின் தொடக்கம்

2003 பிட்ச் ரேடிங் லங்கா லிமிடட் இடமிருந்து AAA(lka) தரப்படுத்தலினை பெற்றுக்கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி திகழ்ந்தது.



2004 சர்வதேச வங்கித் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

2008 24X7 தேசிய சேமிப்பு வங்கி அழைப்பு நிலையம் நிறுவப்பட்டது.

2011 மதவாச்சியில் அதன் 200 ஆவது கிளையின் கதவுகளை தேசிய சேமிப்பு வங்கி திறந்தது.

2012 தேசிய சேமிப்பு வங்கி அதன் 40 ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடியது

2013 இலங்கையின் வங்கியொன்றின் மூலம் ஐஅடொ 750 மில். தனியொரு பாரிய முறியொன்றின் வழங்கல்

2014 உயர்கல்வி கற்கைகளுக்காக புத்தி தனிப்பட்ட கடனின் தொடக்கம்.

2016 கோபாயில் அதன் 250 ஆவது கிளையினை திறந்தது.

"இலங்கையில் பாதுகாப்பான வங்கி" ஆக தேசிய சேமிப்பு வங்கியினை குலோபல் பைனான்ஸ் தரப்படுத்தியது.

வர்த்தக நிதியளித்தலில் கால் பதித்தது.

ரூபா 6 பில்லியன் பெறுமதியான தேசிய சேமிப்பு வங்கியின் முதலாவது தொகுதிக் கடன் விநியோகம்

2017 ரூபா ஒரு ரில்லியன் சொத்துத் தளத்தினை எய்திய முதலாவது சிறப்பியல்பு வங்கியாக திகழ்ந்தது.

GRI 102-1

தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை 2017 பற்றி

இது, 2017 ஆம் கலண்டர் ஆண்டுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் நான்காவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையாகும். இவ்வறிக்கை பொருளாதார, சமூக, உயிர்சூழலியல் மற்றும் நிறுவன ஆளுகை விளைவுகளினுள் உள்நோக்கொன்றினை வழங்கி நிதியியல் மற்றும் நிதியியலற்ற தகவல்களை உள்ளடக்குகின்றது. இவ்வாண்டின் அறிகையானது ஆண்டறிக்கை 2016: ஒப்பற்ற வரலாறு: தொடர் என்ற கடந்த அறிக்கையின் ஒரே மாதிரியான அறிக்கையிடும் வடிவமொன்றினை பின்பற்றுகின்றது. இவ்வறிக்கையானது தேசிய சேமிப்பு வங்கியின் மூலதத்துவங்களாக விளங்குகின்ற தனிப்பட்ட மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கின்ற நோக்குகளுக்கிடையிலான தொடர்புகளை தெளிவான, அனைத்தையும் உள்ளடக்குகின்ற எடுத்துரைப்பொன்றாக விளங்குகின்றது.

ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு என்பதை எவ்வாறு பொருள் கொள்வது

ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு, வரலாற்றொன்றின் வடிவத்தினை எடுக்கின்றது. இது 1972 இல் அதன் தோற்றத்திலிருந்து தேசிய சேமிப்பு வங்கியின் ஒப்பற்ற வரலாற்றினை பின் தொடர்கின்றது. அறிக்கையின் முதலாவது பாகம் “முகவுரை” என தலைப்பிடப்பட்டுள்ளது. இது அறிக்கையினை அறிமுகம் செய்கின்றது. இரண்டாம் பாகம் “2017 வரலாறு” என தலைப்பிடப்பட்டு மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது வங்கி எவ்வாறு பயணித்தது, அதன் மையக் குறிக்கோள்களை எவ்வாறு அடைந்தது, எதிர்கால சவால்களை சந்திப்பதற்கு தேசிய சேமிப்பு வங்கி எவ்வாறு தயாராகின்றது மற்றும் தேசத்தின் மீதும் அதன் மக்கள் மீதும் தேசிய சேமிப்பு வங்கி எவ்வாறு எண்ணப்பதிவொன்றை தோற்றுவித்துள்ளது என்பது பற்றிய தகவல்களை வழங்குகின்றது. இப் பிரிவினை தொடர்ந்து “தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான வியாபார மாதிரி” காணப்படுகின்றது. இது பெறுமதியினை தோற்றுவிப்பதற்கான வங்கியின் வகிபாகங்களையும் அதன் மூலவளங்களின் பயன்பாட்டினையும் எடுத்துரைக்கின்றது. இது, வங்கியின் அக்கறைதாரர்களின் ஈடுபாட்டுச் செயன்முறை, பொருண்மியம் மற்றும் உபாயப் பணிப்புரை என்பவற்றையும் எடுத்துரைக்கின்றது. ஆளுகையென தலைப்பிடப்பட்ட பிரிவானது நிறுவன ஆளுகையினை எடுத்துரைக்கின்றது. இதனை தொடர்ந்து நிதியியல் கூற்றுகள் காணப்படுகின்றன.

இவ்வாண்டு அறிக்கையானது அச்சு மற்றும் பிடிஎப் பதிப்புகளில் உருவாக்கப்பட்டுள்ளது. பிடிஎப் பதிப்பு எமது இணையத்தளமான www.nsb.lk இல் கிடைக்கப்பெறுகிறது.

our website – *www.nsb.lk*

நிலைத்திருக்கும்தன்மை

நிலைத்திருக்கும்தன்மையின் கோட்பாடுகள் வங்கியின் உபாயத்தில் உட்பொதியச் செய்யப்பட்டுள்ளதுடன் பெறுமதி தோற்றுவித்தலிலும் மூலதன உருவாக்கத்திலும் அதன் வியாபாரத்தின் அடிப்படையினை தோற்றுவிக்கின்றது. வங்கியானது அது மேற்கொள்கின்ற சமூகப் பொருளாதார உயிர்ச் சூழலியல் எண்ணப்பதிவுகளை மதிப்பிடுவதுடன் அது தொழிற்படுகின்ற சமூகம் மற்றும் சுற்றாடல் மீதான ஏதேனும் எதிர்மறையான தாக்கங்களை தணிப்பதற்கும் நடவடிக்கைகளை எடுக்கின்றது. இதனால், நிலைத்திருக்கும் தன்மையானது நிதியியல் அறிக்கையிடுதலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதுடன் இவ்வறிக்கையில் தனியான நிலைத்திருக்கும்தன்மை மீளாய்வுகள் காணப்படவில்லை.

GRI 102-10, 45, 46

அறிக்கை எல்லையும் பொருண்மியமும்

இவ்வாண்டறிக்கையின் ஒட்டுமொத்த எல்லையானது "வங்கி" என தனியாகவும் "தொகுதி" என கூட்டாகவும் முறையாக இனங்காணப்பட்டுள்ள தேசிய சேமிப்பு வங்கியினையும் அதன் முழுமையான உரித்துடைய துணை நிறுவனமான என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் இனையும் உள்ளடக்குகின்றது. 2014 அறிக்கையில் பின்பற்றப்பட்ட கட்டமைப்புக்கு இசைவாக முக்கிய நிதியியல் நோக்குகள் வங்கியினதும் தொகுதியினதும் பின்னணியில் கலந்தாராயப்பட்டுள்ள அதேவேளை நிதியியல் அல்லாத நோக்குகள் வேறு வகையில் குறிப்பிட்டாலன்றி வங்கியின் பின்னணியில் கலந்தாரயப்பட்டுள்ளன. இவ்வறிக்கையானது பொருண்மியமானதும் முக்கியத்துவமிக்கதுமான நோக்குகள் மீது கவனம் செலுத்துகின்றது. இது, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் பெறுமதி உருவாக்குவதற்கான வங்கியின் இயலுமையினை இக்காரணிகள் கணிசமான அளவு பாதிக்கலாம் என்ற ரீதியின் அடிப்படையில் அமைந்த மதிப்பீடொன்றாகும். பொருண்மியத்தினை நிர்ணயிக்கும் செயன்முறை 52ஆம் பக்கத்தில் "பொருண்மையான விடயங்கள், இடர்கள் மற்றும் வாய்ப்புகள்" என்ற தலைப்பிடப்பட்ட பிரிவின் கீழ் கலந்தாராயப்படுகின்றது.

GRI 102-12, 48, 49, 50, 51, 52, 54

இணங்குவித்தல்

வங்கியின் ஆண்டறிக்கை 2017 ஆனது 2017 ஜனவரி 1 தொடக்கம் டிசம்பர் 31 வரையான 12 மாத காலத்தினை உள்ளடக்குவதுடன் நிதியியல் மற்றும் நிலைபெறுதன்மை அறிக்கையிடுதலுக்கான வழமையான வருடாந்த அறிக்கையிடல் சுழற்சிக்கு இசைவாக காணப்படுகின்றது. தேசிய சேமிப்பு வங்கி அதன் கடந்த ஆண்டறிக்கைகளை தொகுப்பதில் உலகளாவிய அறிக்கையிடல் முனைப்புகளுக்கான (GRI) வழிகாட்டல்களை பின்பற்றியது. நிலைபெறுதன்மை அறிக்கையிடுதலுக்காக அண்மையில் வெளியிடப்பட்ட உலகளாவிய அறிக்கையிடல் முனைப்பு தர நியமங்களுக்கு நாம் மாறுதலடைந்துள்ளோம். அத்துடன் இவ்வறிக்கையானது உலகளாவிய அறிக்கையிடல் முனைப்பு மையத் தெரிவுகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த வியாபாரத்தில் இன்றியமையாத பாகமொன்றாக வங்கியின் தற்போது காணப்படுகின்ற உள்ளக மற்றும் வெளிவாரிக் கட்டுப்பாடுகள் அத்துடன் உத்தரவாத முறைமைகளுக்கு இது உட்படுத்தப்படுகின்றது. எல்லைகளின் நோக்கெல்லை மற்றும் நோக்கு என்பவற்றில் முன்னைய அறிக்கையிடும் காலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றல்கள் எதுவும் காணப்படவில்லை. 2017 மார்ச் 28 ஆம் திகதியிடப்பட்ட மிக அண்மைய முந்திய ஆண்டறிக்கையானது 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற 12 மாத காலத்தினை உள்ளடக்கியது. ஒப்பீட்டு நிதியியல் தகவல்கள், மீள் வகைப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது மீள்குறிப்பிடப்பட்டிருப்பின் தொடர்புடைய பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

வங்கியின் நடவடிக்கைகளை ஆளுகின்ற அடிப்படை நியதிச் சட்டங்கள் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் 1988 இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள் அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பனவாகும். இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கடந்த காலங்களில் போன்று அனைத்து ஏற்புடைய சட்டங்கள்,

ஒழுங்கு விதிகள் மற்றும் தரநியமங்களுக்கு இணங்குகின்ற விதத்தில் காணப்படுவதுடன் 239 ஆம் பக்கத்தில் ஆரம்பிக்கின்ற நிதியியல் கூற்றுகள் மீதான பிரிவின் கீழ் தோன்றுகின்ற பல்வேறு அறிக்கைகள் மற்றும் கூற்றுகளில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இவ் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையானது பொருத்தமானவிடத்து பின்வரும் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றுகின்றது.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் மன்ற கட்டமைப்பு

  [www.theiirc.org]
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை
- ஸ்மார்ட் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடும் முறையியல்கள்

  [www.smart.lk]
- உலகளாவிய அறிக்கையிடல் முனைப்பு (ஜீஆர்ஐ) நிலைத்திருக்கும் தன்மை வழிகாட்டல்கள் ஜீஆர்ஐ தரநியமங்கள்

  [www.globalreporting.org]

வெளிவாரி உத்தரவாதம்

ஆண்டறிக்கையினை உருவாக்குவதில் வங்கி அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நியதிச் சட்ட தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகியுள்ளது. நிதியியல் கூற்றுகள், அரசாங்க கணக்காய்வின் மூலம் கணக்காய்வுச் செய்யப்பட்ட அதேவேளை நிலைபெறுதன்மை மீதான உத்தரவாதம் கேபிஎம்ஜி ஸ்ரீலங்கா மூலம் வழங்கப்பட்டது.

GRI 102-53

வினவல்கள்

இவ்வறிக்கை பற்றிய உமது கருத்துக்களையும் விசாரணைகளையும் வரவேற்கின்றோம். உமது கருத்துக்களை அல்லது விசாரணைகளை தேசிய சேமிப்பு வங்கியின் நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு, இலக்கம் 255, காலி வீதி, கொழும்பு 03 க்கு முகவரியிடப்படலாம்
(மின்னஞ்சல்: *nsbgen@nsb.lk*)

2017 வரலாறு

2017 வரலாறானது அனைத்து செயற்பரப்புகளிலும் தேசிய சேமிப்பு வங்கியின் எண்ணப்பதிவு உணர்த்தப்பட்டதனை அடையாளப்படுத்துகின்ற வரலாற்று திருப்புமுனைமிக்க சாதனைகளுடன் நிறைந்திருந்தது. தேசிய சேமிப்பு வங்கியானது அதன் சொத்துத் தளத்தில் ரூபா 1 ரில்லியனை எய்தி ரூபா 14 பில்லியன் கொண்ட ஒரு போதுமில்லா உயர்வான வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூபா 9.6 பில்லியன் கொண்ட வரிக்குப் பிந்திய உயர்வான இலாபத்தினையும் பதிவு செய்து அதன் 45 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது. மேலும், 2017ஆம் ஆண்டு 1.3% கொண்ட செயற்படா கடன் விகிதத்தினை எய்தியதனை தேசிய சேமிப்பு கண்டதுடன் இது வங்கித் தொழில் துறை சராசரியின் மிக்க குறைவான வற்றுக்கு மற்றியில் காணப்படுகின்றன.

தலைவர் அவரது செய்தியில் 2017 இல் தேசிய சேமிப்பு வங்கியின் மிகவும் முக்கிய செயலாற்றுகையினை கொண்டாடுகின்ற அதேவேளை ஒட்டுமொத்தமாக துறைமீதான "சிக்கல்வாய்ந்த" தொழில் நுட்பத்தின் தாக்கத்தினையும் பிரதிபலிக்கின்றது. துறையின் டிஜிட்டல் மயப்படுத்தப்படுவதனூடாக தோற்றுவிக்கப்படுகின்ற புதிய நிதியியல் சூழல் அமைப்பில் இயைபுடையதாக இருக்க வேண்டிய முக்கியத்துவத்தினை அவர் வலியுறுத்துகின்றார். மேலும் தேசிய சேமிப்பு வங்கி இயைபுடையதாக நிலைத்திருப்பதற்கு ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தேவைகளுக்கும் எதிர்பார்க்கைகளுக்கும் புதிய மற்றும் சிறந்த நிதியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் அதன் அக்கறைதாரர்களுடன் பௌதீக ரீதியாகவும் மெய்நிகராகவும் தேசிய சேமிப்பு வங்கி தொடர்புபட்டும் ஈடுபட்டும் இருக்க வேண்டும் என்பதனை தலைவர் வலியுறுத்துகின்றார்.

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, அவரது மீளாய்வில் இக் குறிப்பிடத்தக்க மைற்கற்கள் வங்கியினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைசார்ந்த உபாய பணிப்புரையின் உத்வேகத்துக்கு சான்றுபகிர்கின்றன என்றும் இறை மற்றும் நாணயக்கொள்கைகளின் அபிவிருத்திகளுடன் உயர்வான போட்டி மிக்க சூழல் ஒன்றில் திசைப்படுத்துவதன் மூலம் இவை எய்தப்பட்டது என்றும் எடுத்துரைக்கின்றார். 2017 இல் தொடர்சியாக 15ஆவது ஆண்டாகவும் பிட்ச் ரேடிங் லங்கா லிமிடட் இனால் "AAA (lka)" தரப்படுத்தலினை பெற்ற ஒரே ஒரு உள்நாட்டு வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி விளங்கியதுடன் தேசிய சேமிப்பு வங்கியானது பிரான்ட் பைனான்ஸ் மூலம் இலங்கையில் 5ஆது மிகப் பெறுமதிமிக்க வர்த்தக நாமமாக தரப்படுத்தப்பட்டது.

2017 வரலாறானது இவ்வருடத்தினுள் தேசிய சேமிப்பு வங்கியில் ஒப்பற்ற வரலாறு எவ்வாறு விருத்தியடைந்தது: வங்கியின் வியாபார தொழிற்பாடுகளில் தன்மையும் நோக்கெல்லையும், உபாயப் பணிப்புரை, வளர்சியினதும் பரிணாமத்தினதும் முக்கிய தருணங்கள் என்பவற்றை எடுத்துரைக்கின்றது. வங்கியின் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத சிறப்புக்கூறுகள் வெளிப்படையான நிதியியல் தன்மைகள் மற்றும் வங்கியின் முக்கிய அக்கறைதாரர்களுக்கான அனைத்து ஏனைய தொடர்புடைய தகவல்கள் என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது. இது சவால்களை எதிர்கொள்வதற்கான வங்கியின் தயார் நிலையினை எடுத்துரைப்பதுடன் எதிர்காலத்திற்கான கண்ணோட்டமொன்றினையும் வழங்குகின்றது.

இதுவே 2017இன் ஒப்பற்ற வரலாறு: எண்ணப்பதிவு என்பதாகும்...

சிறப்புக் கூறுகள்

GRI 102-7

நிதியியல் சிறப்புக் கூறுகள்

டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	வங்கி			தொகுதி		
	2017	2016	மாற்றம் %	**2017**	2016	மாற்றம் %
ஆண்டுக்கான பெறுபேறுகள் (ரூபா மில்லியன்)						
மொத்த வருமானம்	**107,817**	87,399	23.36	**108,056**	88,039	22.74
நிதியியல் பெசேவ மற்றும் வரிவிதிப்புக்கு முன்னர் இலாபம்	**17,522**	16,094	8.87	**17,236**	16,209	6.34
வரிவிதிப்புக்கு முன்னர் இலாபம்	**14,029**	13,303	5.46	**13,645**	13,397	1.85
வருமான வரிச் செலவுகள்	**4,419**	3,805	16.14	**4,595**	3,835	19.82
வரிவிதிப்புக்கு பிந்திய இலாபம்	**9,610**	9,498	1.18	**9,050**	9,562	(5.36)
ஆண்டின் இறுதியில் உள்ள நிலை (ரூபா மில்லியன்)						
அக்கறை தாரர்களின் நிதியங்கள் (மொத்த பங்கு மூலதனம்)	**40,222**	32,246	24.73	**41,266**	33,787	22.14
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டியது/ வாடிக்கையார்களிடமிருந்து வைப்புகள்	**737,213**	657,280	12.16	**737,213**	657,280	12.16
நிதியியல் முதலீடு – முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை	**544,273**	505,824	7.60	**547,924**	507,625	7.94
மொத்த கடன்களும் வருமதிகளும்	**390,323**	325,543	19.90	**389,036**	324,744	19.80
மொத்த சொத்துகள்	**1,012,103**	911,704	11.01	**1,018,795**	921,603	10.55
சாதாரண பங்கொன்றின் தகவல் (ரூபா)						
உழைப்பு (அடிப்படை)	**15.50**	29.68	(47.78)	**14.60**	29.88	(51.14)
உழைப்பு (குன்றியது)	**15.50**	29.68	(47.78)	**14.60**	29.88	(51.14)
தேறிய சொத்துகள் பெறுமதி	**60.03**	52.01	15.43	**61.59**	54.49	13.02
விகிதங்கள்						
தேறிய வட்டி இலாபம் (%)	**2.59**	2.89	(10.38)	**2.60**	2.89	(10.38)
சராசரி பங்குரிமையாளர் நிதியங்கள் மீதான வருவாய்	**26.52**	29.37	(9.70)	**24.12**	28.21	(14.51)
சராசரி சொத்துகள் மீதான வருவாய்	**1.46**	1.51	(3.42)	**1.41**	1.51	(6.67)
உழைப்பில் ஆண்டுக்காண்டு வளர்ச்சி	**1.18**	9.52	(87.64)	**(5.36)**	8.27	(164.79)
நியதிச் சட்ட விகிதங்கள்						
திரவச் சொத்துகள்(%) – குறைந்தபட்ச தேவைப்பாடு 20%	**73.44**	72.56	1.21	**N/A**	N/A	–
திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் (%) குறைந்தபட்ச தேவைப்பாடு 80% (70% – 2016)	**376.18**	393.96	(4.51)	**N/A**	N/A	–
மூலதனத் தேவைப்பாடுகள் (பாசல் III)						
பாசல் III – அடுக்கு 1 – குறைந்தபட்சத் தேவைப்பாடு 7.75%	**11.93**	11.31	5.48	**12.65**	12.03	5.15
பாசல் III – மொத்த மூலதனம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 11.75%	**15.31**	13.86	10.46	**16.00**	14.54	10.04

நிதியியல் இலக்குகளும் சாதனைகளும் – வங்கி

நிதியியல் குறிகாட்டிகள்	இலக்குகள் 2017	சாதனைகள்				
		2017	2016	2015	2014	2013
தேறிய வட்டி இலாபம் (%)	2.66	**2.59**	2.89	3.32	2.98	1.74
சராசரி சொத்துகள் மீதான வருவாய் (%)	1.35	**1.46**	1.51	1.51	1.46	0.39
சராசரி பங்குரிமையாளர் நிதியங்கள் மீதான வருவாய் (%)	27.67	**26.52**	29.37	29.37	30.20	5.15
வருமானத்தில் வளர்ச்சி (%)	23.72	**23.36**	10.24	10.24	18.78	23.95
ஆண்டுக்கான இலாபத்தில் வளர்ச்சி (வரிக்கு பிந்திய இலாபம்)	11.06	**1.18**	9.52	9.52	479.98	(68.54)
மொத்தச் சொத்துகளின் வளர்சி (%)	11.23	**11.01**	7.50	7.50	19.12	28.61
மூலதனத் தேவைப்பாடுகள் (பாசல் III)						
பாசல் III – அடுக்கு 1 – குறைந்தபட்சத் தேவைபாடு 7.75%	7.75% மேல்	**11.93**	11.31	N/A	N/A	N/A
பாசல் III – மொத்த மூலதனம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 11.75%	11.75% மேல்	**15.31**	13.86	N/A	N/A	N/A

GRI 102-7

நிதியியல் அல்லாத சிறப்புக் கூறுகள்



நிதியியல் மூலதனம்

ரூபா 107,817 மில்லியன்
தோற்றுவிக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி

ரூபா 4,623 மில்லியன்
வியாபாரப் பங்காளர்கள்

ரூபா 78,445 மில்லியன்
வைப்பாளர்கள்

ரூபா 13,442 மில்லியன்
அரசாங்கம்

ரூபா 6,887 மில்லியன்
ஊழியர்கள்

ரூபா 20 மில்லியன்
சமுதாயம்

ரூபா 4,400 மில்லியன்
பிடித்துவைக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி

ரூபா 103,417 மில்லியன்
பகிரப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி



புலமைச் சொத்து மூலதனம்

ஐ.அ.டொ 168 மில்லியன்
வர்த்தக நாமப் பெறுமதி

5ஆவது மிகவும் பெறுமதிமிக்க வர்த்தக நாமம்
பிரான்ட் பைனான்ஸ் தரப்படுத்தல்

ரூபா 319 மில்லியன்
மென்பொருளில் முதலீடு

பி + உறுதி
எஸ்என்பி குலோபலிடமிருந்து

பி + உறுதி பிட்ச் ரேடிங் இடமிருந்து
உலகத்தரப்படுத்தல்

AAA(lka)
பிட்ச் ரேடிங் லங்கா லிமிட்ட் இடமிருந்து
தேசியதரப்படுத்தல்



தயாரிக்கப்பட்ட மூலதனம்

253 கிளைகள்	**9** பிராந்திய அலுவலகங்கள்
4,062 அஞ்சல் அலுவலகங்கள்	**4,000** லங்கா பே ஊடாக தன்னியக்க இயந்திரங்கள்
33 பரிமாற்று இல்லங்கள்	**14** தொடர்புடைய வங்கிகள் சர்வதேச உறவுகள்



மனித மூலதனம்

4,470
மொத்த ஊழியப்படை

216 மொத்த ஆட்சேர்ப்புகள்	**6:5** அனைத்து மட்டங்களிலும் பாலின விகிதம் (ஆண் : பெண்)
ரூபா 34.4 மில்லியன் பயிற்சியின் மொத்த மூலதனம்	**96.7%** தக்க வைத்தல் வீதம்



சமூக மற்றும்
உறவு மூலதனம்

19.9 மில்லியன்
மொத்த கணக்குகளின் எண்ணிக்கை

ரூபா 78,445 மில்லியன்
வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி

ரூபா 20 மில்லியன்
நிறுவன சமூக கருத்திட்டங்களில் முதலீடு

225,950
தொலைபேசி மூலம் கிடைக்கப்பெற்ற விசாரணைகளின் எண்ணிக்கை

147
வழங்குனர்களின் எண்ணிக்கை



இயற்கை மூலதனம்

ரூபா 1.7 மில்லியன்
என்எஸ்பி விவசாயக் காடாக்கத்தில் முதலீடு

25,000
என்எஸ்பி விவசாயக் காடாக்கத்தினூடாக விநியோகிக்கப்பட்ட மரக் கன்றுகளின் எண்ணிக்கை

902
பகிர்ந்தளிக்கப்பட்ட சூழலியல் கடன்களின் எண்ணிக்கை

ரூபா 686 மில்லியன்
பகிரந்தளிக்கப்பட்ட சூழலியல் கடன்களின் மொத்த தொகை

3.5மில்லியன்
2016 முதல் குறைக்கப்பட்ட தாள் பயன்பாட்டின் எண்ணிக்கை

27,614 ஜிகாஜூல்ஸ்
சக்தி நுகர்வு

எமது கதாநாயகர்கள்



GRI 102-14

தலைவரின் செய்தி

கடந்த 45 வருடங்களாக மலர்வுற்ற தேசிய சேமிப்பு வங்கியின் ஒப்பற்ற வரலாற்றில் 2017 ஆம் ஆண்டானது மற்றுமொரு வசீகரமிக்க அத்தியாயமாகும். எமது 2017 வராலாறானது, அனைத்து செயற்பரப்புகளிலும், குறிப்பாக ரூபா ஒரு ரில்லியன் சொத்து தளத்தை எய்திய முதல் சிறப்பியல்பு வங்கி மற்றும் வரிக்குப் பிந்திய இலாபமாக அதிகூடிய ரூபா 9.6 பில்லியனை அடைந்தமை என்ற எண்ணப்பதிவினை தோற்றுவிக்கின்ற பல வரலாற்று திருப்புமுனைச் சாதனைகள் நிறைந்ததாகும். பாராட்டத்தக்க இப் பெறுபேறுகள், 1972 இல் ஆரம்பித்த எமது ஒப்பற்ற வரலாற்றில் ஆர்வத்துடன் பாராட்டவேண்டிய மற்றுமொரு அத்தியாயத்தினை எழுதுகின்ற எமது சீரிய ஆளுகையினையும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கான எமது அர்ப்பணிப்பினையும் வெளிக்காட்டுகின்றன. எதிர்வரும் மூன்றாண்டுகளுக்காக எமது நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்துகின்ற மூன்றாண்டு வியாபாரத் திட்டத்துடன் (2017 – 2019) உடனமைந்து, தேசிய சேமிப்பு வங்கியானது எதிர்காலத்தினை எதிர்கொள்வதற்கு வலுமிக்கதாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசத்தின் மீது எண்ணப்பதிவை ஏற்படுத்துகின்றோம்

தேசிய சேமிப்பு வங்கியின் ஒப்பற்ற வரலாறானது இலங்கையின் ஒவ்வொரு உயிரையும் தொடுவதற்காக எமது 20 மில்லியன் கணக்கு தொகையினையும் தாண்டிச் செல்கின்றது. அரசுக்கு உரித்தான வங்கியொன்றாக, தேசத்தின் பொருளாதாரத்தில் நாம் உறுதியாக வேரூன்றியுள்ளதுடன் எமது தனித்துவமிக்க வழியில் நாம் தேசத்திற்கு பணியாற்றுகின்றோம். பொருளாதார மற்றும் சமூக கருத்திட்டங்களின் ஊடாக பெறுமதியினை தோற்றுவிப்பதற்கு, அரசாங்கம் திரட்டுகின்ற வரிகள், அறவீடுகள் மற்றும் பங்கிலாபங்கள் ஊடாக தேசிய சேமிப்பு வங்கியானது 2017 இல் மாத்திரம் அரசாங்கத்திற்கு ரூபா 13.4 பில்லியன் தொகையினை பங்களிப்புச் செய்தது. தேசிய சேமிப்பு வங்கியும், எமது வாடிக்கையாளர்களும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்கேற்பதுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் நிலைபெறுதன்மையினையும் பேணுவதற்கு துணையளிக்கின்றன.

"சிக்கல்வாய்ந்த" அமைப்பொன்றில் இயைபானதாக நிலைத்திருத்தல்

2017 இன் எமது சாதனைகளை கொண்டாடுகையில், "நிலைத்திருத்தல்" மற்றும் "சிக்கல்வாய்ந்த" தொழில்நுட்பங்கள் ஊடாக அதிகரித்த வேகத்தில் மாறுதலடைகின்ற உலகம் பற்றி நாம் புரிந்துகொண்டுள்ளோம். சிறப்பியல்புமிக்க, அரசுக்குரித்தான வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கியானது மிகச்சிறந்த இயைபுடையதாக விளங்குகின்றமை அத்தியாவசியமாகின்றது. துறையினை டிஜிட்டல் மயப்படுத்துவதனூடாக புதியதொரு நிதியியல் சூழல் அமைப்பொன்று தோற்றுவிக்கப்பட்டுவருகின்றது. இயைபுமிக்கதாக நிலைத்திருப்பதற்கு, ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தேவைகளுக்கும் எதிர்பார்க்கைகளுக்கும் பொருந்துகின்ற புதிய மற்றும் சிறந்த நிதியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் எமது முக்கிய அக்கறைதாரர்களுடன் பௌதீக ரீதியாகவும் மெய்நிகராகவும் நாம் தொடர்புபட்டும் ஈடுபட்டும் இருக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

என்எஸ்பி ஐசேவர்

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமிக்க புதுமைபடைக்கும் உற்பத்தியான ஐசேவர் என்ற உற்பத்தியானது இப் புதுமையான நிதியியல் அமைப்புத்தோற்றத்தில் வாய்ப்புமிகு வினைத்திறன்கள், செலவுச் சிக்கனம் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் என்பனவற்றை சாதகமாக பயன்படுத்துவதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் உபாயத்தின் முதன்மை உதாரணமொன்றாகும். தேசிய சேமிப்பு வங்கியின் முதன்மையான எண்ணியல் உற்பத்தியான ஐசேவர், இலங்கையர் மத்தியில் சேமிப்புச் கலாசாரமொன்றினை பேணி வளர்க்கும் தேசிய சேமிப்பு வங்கியின் குறிக்கோளினை பூர்த்தியடையச் செய்கின்றது. நாடுமுழுவதும் வியாபித்துள்ள 16000+ எம்கேஸ் சில்லறை வணிகங்களைப் பயன்படுத்தி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் பணத்தினை சேமிப்பிதற்கு என்எஸ்பி ஐசேவர் எமது வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கின்றது.

தேசிய சேமிப்பு வங்கியின் மாதிரிக் கிளை

"என்எஸ்பி கனெக்ட்" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் மாதிரிக் கிளை எண்ணக்கருவானது அதிக போட்டிமிக்க நிதியியல் சூழல்அமைவில் சாதகமான எண்ணப்பதிவினை தோற்றுவிப்பதற்கும் இயைபுடையதாக நிலைத்திருப்பதற்கும் தேசிய சேமிப்பு வங்கியின் உபாய தூண்டலின் மற்றுமொரு எடுத்துக்காட்டாகும். மாதிரிக் கிளை எண்ணக்கருவானது டிஜிட்டல் வங்கிச் சேவைக்காக "ஸ்மார்ட் ஸோன்" என்ற தேவைக்கேற்ற வசதியுடன் 2017 ஆம் ஆண்டில் பொரலஸ்கமுவ டிஜிட்டல் கிளையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் எண்ணக்கரு 2018 இல் நாடுமுழுவதும் 50 கிளைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

விளையாட்டுத் திடல்

இலங்கை பொருளாதாரமானது 2017 இல் 3.1% வளர்ச்சி கண்டது. இது, இயற்கை அனர்த்தங்களின் காரணமாக மதிப்பிடப்பட்ட வளர்ச்சிக்கு கீழ் இருந்தது. 2017 இன் முதல் அரையாண்டில் பணவீக்க அழுத்தங்களை எளிதாக்குவதற்கு நாணயக் கொள்கையினை இறுக்கமாக்கியதற்கு மத்தியில், கொடுகடன் வளர்ச்சியானது தனியார் நுகர்விற்கும் முதலீட்டுக்கும் ஆதரவளித்து வலுவானதாக காணப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிய நிகழ்சித் திட்டங்களின் மூலம் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புகளை பின்பற்றுவதன் ஊடாக இலங்கையானது நடுத்தர காலம் மீது பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினை ஸ்திரப்படுத்துவதற்கும் சாத்தியமான வளர்சிக்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.7% இற்கு வகை கூறுகின்ற இலங்கை வங்கிதொழில் துறையானது நிதியியல் இடையீட்டுச் செயலாற்றல் மற்றும் நிதியியல் உட்சேர்த்தல் என்பவற்றில் இன்றியமையாத வகிபாகமொன்றை ஆற்றுவதுடன் பொருளாதார வளர்சியினை வசதிப்படுத்துகின்றது. ஒட்டுமொத்தமாக துறையானது இலாபத்தன்மை மற்றும் வைப்புத்தளம் என்பவற்றில் வளரச்சி கண்டதுடன் ஆரோக்கியமான சொத்து விகிதத்தினை பேணியது.

பாசல் III கட்டமைப்பின் முழுமையான நடைமுறைப்படுத்தல் 2019 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படும். இது, வங்கியின் நிலைத்திருக்கும் தன்மையினை வலுப்படுத்தும், அத்துடன் துறையில் ஒருங்கிணைப்புக்கு வழி வகுக்கும். மேலும், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்மொழியப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 நியமங்களை பின்பற்றலானது 2018 முதல் வங்கிகளின் மதிப்புக் குறைதல் ஏற்பாட்டினை அதிகரிக்கும்.

இடர் முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் கலாசாரத்தினைப் பேணிவளர்க்கின்ற தேசிய சேமிப்பு வங்கியின் உயர்வான நிறுவன ஆளுகைத் தரநியமங்கள், பரிணமிக்கின்ற கட்டமைப்புக்களை புரிந்து கொள்வதற்கு அவசியமான வழிமுறைகளை வங்கி எடுப்பதனை அனுமதிக்கின்றது. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்துவதற்கு தயாராவதற்கு தேசிய சேமிப்பு வங்கி, ஏனையவற்றுக்கு மத்தியில் பாசல் III மூலதனப்போதுமை மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுகின்றது.

எமது நிதியியல் எண்ணப்பதிவு

மேலே குறிப்பிடப்பட்டது போன்று தேசிய சேமிப்பு வங்கியின் நிதியியல் எண்ணப்பதிவானது, இவ்வாண்டின் போது எய்திய மனநிறைவுமிக்க பல நிதியியல் மைற்கற்களுடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் நாம் 1.3% கொண்ட மொத்த செயற்படா கடன் விகிதத்தினை எய்தினோம். இது வங்கி தொழிற்துறை சராசரியில் மிகக் குறைவானவற்றுக்கு மத்தியில் காணப்படுவதுடன் தேசிய சேமிப்பு வங்கியின் தலைசிறந்த சொத்து தரத்தினை எடுத்துக்காட்டுகின்றது. வட்டிச் செலவில் கணிசமான அதிகரிப்பின் தாக்கமும் தேறிய வட்டி எல்லை வீதத்தில் விளைகின்ற வீழ்ச்சியும் வியாபார அளவின் கணிசமான அதிகரிப்பின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. இதன் விளைவாக, வட்டி வருமானமானது ரூபா 100 பில்லியனை விஞ்சியிருந்தது. மற்றுமொறு நிதியியல் சிறப்புக்கூறாக தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதம் 15.3% இற்கு மேம்பட்டிருந்தது இது, அரச வங்கித்தொழில் துறையில் மிக உயர்வானதாகும்.

அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரேயொரு வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கியானது அதன் வாடிக்கையாளர்களின் வைப்புகளுக்கும் அதன் மீதான வட்டிக்கும் 100% பாதுகாப்பினை வழங்குகிறது. இதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கியானது சேமிப்பதற்கு மிகப்பாதுகாப்பான இடமாக ஆக்கப்படுகின்றது. வங்கியின் உறுதிப்பாடு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை பிரதிபலிக்கின்ற பிச் ரேடிங் லங்கா லிமிடட் தொடர்சியாக 15 ஆவது ஆண்டாகவும் வங்கிக்கான AAA(lka) தரப்படுத்தலினை மீள்உறுதிசெய்தது. இலங்கையில் 5ஆவது மிகவும் பெறுமதிமிக்க வர்த்தக நாமமாக ப்ரான்ட் பைனானஸ் தேசிய சேமிப்பு வங்கியினை தரப்படுத்தியுள்ளது என்பதனை அறிவிப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாராட்டுகள் தேசிய சேமிப்பு வங்கியின் ஆற்றல் வாய்ந்த ஆளுகை மற்றும் மீளெழுச்சி மிக்க உபாய பணிப்புரை என்பவற்றுக்கான சான்றொன்றாவதுடன் அவை இலங்கையின் நிதியியல் அமைப்பில் நாம் ஏற்படுத்தியுள்ள எண்ணப்பதிவிற்கு சான்றளிக்கின்றன. நாம் இயைபாக நிலைத்திருத்தல், தொடர்புபட்டிருத்தல், மற்றும் ஈடுபட்டிருத்தல் என்பவற்றுக்கான எமது முயற்சிகளுடன் மாத்திரம் ஓயப்போவதில்லை. எதிர்காலத்தில் எமது அக்கறைதாரர்களுக்காக தொடர்ந்தும் பெறுமதியினை கொண்டுசேர்ப்போம்.

உலக மட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் எண்ணப்பதிவு

கொந்தளிப்பான உலகப் பொருளாதார காலநிலை தணிவுற்றதனால், உலகப் பொருளாதாரம் 2017 இல் 3% வளர்ச்சியொன்றினை எய்தி, 2011 முதல் அதிகூடிய வளர்ச்சியினை அடைந்தது. உலகப் பொருளாதாரத்தில் சுழற்சிமிக்க ஏற்ற இறக்க மீட்பானது அடுத்துவரும் பல ஆண்டுகளுக்கு நிலையாக இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் வணிகப் பொருள் ஏற்றுமதிகளின் திருப்பத்தின் காராணமாக 2018 இல் 4.5% இனையும் 2019/20 களில் 4.7% சராசரியினையும் எய்துகின்ற வளர்ந்து வரும் சந்தைகளிலும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களிலும் துரிதமடையும்.

பன்முகப்படுத்தல் நோக்குடன் தேசிய சேமிப்பு வங்கியின் பெயர், சர்வதேச வங்கித் தொழில் மற்றும் வர்த்தகப்படுத்தல் சேவைகள் ஊடாக கரைகடந்து எடுத்துச்செல்லப்படுகின்றது. தற்போது தேசிய சேமிப்பு வங்கியானது அரப் தேசிய வங்கி, சவுதி அரேபிய எக்ஸேன்ஜ் கம்பனி மற்றும் சிங்கப்பூர் டீபிஎஸ் வங்கி போன்ற பிரபல்யம்மிக்க சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பல ஆண்டுகளாக கட்டியெழுப்பிய சர்வதேச வங்கித் தொழில் உறவுகளின் பாரியளவிலான வலையமைப்பினை கொண்டுள்ளது. 2017 இல், தேசிய சேமிப்பு வங்கியின் உள்முக பணவனுப்பல்கள் ரூபா 26 பில்லியன் தொகை கொண்ட 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33% பாரியளவு வளர்ச்சியை அனுபவித்ததுடன் வெளிநாட்டு நாணய வைப்புத்தளமானது 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ரூபா 9.4 பில்லியனாகவிருந்தது. ஆண்டுக்காக ரூபா 221 மில்லியன் பெறுமதி கொண்ட நாணயக் கடிதங்களை திறந்ததன் ஊடாக வர்த்தக நிதி வியாபாரம் செழிப்புற்றது. எதிர்காலத்தில் எமது சர்வதேச வியாபாரத்தினையும் வெளிநாட்டு வலையமைப்பினையும் விஸ்தரிக்கப்பதற்காக உள்முக மற்றும் வெளிமுக பணவலுப்பல்களுக்காக பிரபல்யம்மிக்க சர்வதேச சந்தையினுள் நாம் தொடர்ந்தும் ஊடுருவுவோம்.

நிலைபெறுதன்மை மீதான எண்ணப்பதிவொன்றினை தோற்றுவிப்பதனை நோக்கி

நிலைதிருக்கும்தன்மைக் கோட்பாடுகள் எமது உபாயத்தில் உட்பொதியச் செய்யப்பட்டுள்ளதுடன் எமது வியாபாரத்தினதும் நாம் செய்கின்ற ஒவ்வொன்றினதும் அடிப்படையினை தோற்றுவிக்கின்றது. நாம் மேற்கொள்கின்ற சமூக, பொருளாதார மற்றும் உயிர்ச் சூழலியல் எண்ணப்பதிவுகளை மதிப்பிடுவதுடன் நாம் தொழிற்படுகின்ற சமூகத்தின் மீதும் சூழலின் மீதும் ஏதேனும் பாதாகமான தாக்கங்களை தவிர்ப்பதற்க்கு நடவடிக்கைகளை எடுக்கின்றோம். கடந்த வருடத்தில் நாடு பூராகவும் மீள்புதிப்பிக்கத்தக்க சக்தியினை பரவச்செய்வதை நாம் ஊக்குவித்ததுடன் என்எஸ்பி எக்கோ லோன்ஸ் போன்ற பசுமை வங்கித் தொழில் முயற்சிகளையும் பின்பற்றினோம். இம் முயற்ச்சிகளுக்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் அதேவேளை எமது தேசிய சேமிப்பு வங்கி விவசாயக்காடாக்க செயற்திட்டத்தினூடாக எமது காபன் சுவடுகளை குறைப்பதற்கு நாம் மற்றுமொறு நடவடிக்கையினை எடுத்துள்ளோம். இக் கருத்திட்டமானது 93 ஆவது உலக சிக்கன தினத்தினை கொண்டாடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி விவசாய காடாக்கத்தினூடாக 2020 ஆம் ஆண்டளவில் ஒரு மில்லியன் மரக் கன்றுகளை விநியோகிப்பதற்கு நாம் திட்டமிடுகின்றோம். இவ்வருடத்தில் மாத்திரம் நாம் நாடுபூராகவும் 25000 மரக்கன்றுகளை விநியோகித்துள்ளோம்.

மேலும், எமது வியாபாரத்துடனும் தொழிற்பாடுகளுடனும் நேரடியாக தொடர்புள்ள நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி இலக்குகளை (SDG) நாம் தொடர்ந்தும் நிறைவு செய்வதனால் ஐக்கிய நாடுகளின் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு துணையளிப்பதற்கு ஆதரவளிப்பதற்கு நாம் வாக்குறுதியளித்துள்ளோம். தேசிய சேமிப்பு வங்கியின் வரலாற்றில் முதற்தடவையாக நிதிசார அறிக்கையிடுதலுக்காக சுயாதீன உத்தரவாத அறிக்கையொன்றினை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம். நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது அர்ப்பணிப்பு மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் எமது ஆண்டறிக்கையினுள் எடுத்துரைக்கப்படுகின்றன (146 ஆம் பக்கத்தைப் பார்க்க). இவ்வுலக சவால்களானது உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் காத்திரமான, பல்துறை ஆர்வலர் கூட்டிணைப்புகளை வேண்டுகின்றன என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் அத்துடன் எமது முயற்சிகளில் இணைவதற்கு எமது அனைத்து ஆர்வலர்களையும் நாம் அழைக்கின்றோம்.

நாளை பற்றிய கண்ணோட்டம்

தேசிய சேமிப்பு வங்கியின் ஒப்பற்ற வரலாறு 45 வருடங்கள் பழைமை வாய்ந்ததாக காணப்படுகின்ற அதே வேளை நாம், 180 வருடங்களுக்கு மேற்பட்ட நிதியியல் மரபுரிமைகளை கொண்டுள்ளோம். எமது வரலாறு முழுவதும் நாம் இயைபுடன் நிலைபெற்றிருந்துள்ளோம், தொடர்ந்து அவ்வாறு செய்வோம். எமது உபாயக் குறிக்கோள்கள் அனைத்தும் எமது அக்கறைதாரர்களுடன் ஈடுபடுகின்றதை நோக்கியும் தொடர்புபடுவதை நோக்கியும் இயக்கப்பட்டுள்ளன. எமது வியாபரத்தினை பன்முகப்படுத்தும் எமது இலக்கில் நாம் நிலைத்திருக்கத்தக்க வளர்ச்சி, எமது உள்ளகச் செயன்முறைகளை சீர்படுத்தல் மற்றும் எமது உற்பத்தி வழங்கல்களை ஏந்திப்பிடித்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை நாம் நாடுவோம். அதிநவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் முதலிடுவதன் மூலம் எமது டிஜிட்டல் சுவடுகளை மேன்படுத்துவதன் மீது நாம் கவனம் செலுத்துவோம். முடிவாக பன்முகப்படுத்தப்பட்ட உட்சேர்கின்ற மற்றும் வெளிப்படையான விதமொன்றில் எமது அக்கறைதாரர்களுக்கு தொடர்ந்தும் பெறுமதியினை கொண்டுசேர்ப்போம்.

பாராட்டுத் தெரிவித்தல்

பொது முகாமையாளர் மற்றும் முகாமைத்துவ அணி மூலம் தலைமை வகிக்கப்படும் அர்ப்பணிப்பும் விசுவாசமும் மிக்க ஊழியர் அணிக்கு நான் முதலாவதாகவும் முக்கியமாகவும் நன்றி கூறுகின்றேன். ஆண்டின் விதிவிலக்கான செயலாற்றுகையானது வங்கிக்கான அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தின் காரணமாக ஏற்படுத்தப்பட்டது. அவர்களது வழிகாட்டல்களுக்காக பணிப்பாளர் சபையின் எனது மதிப்பிற்குரிய சக உறுப்பினர்களுக்கும் அவர்களது பங்களிப்பினை நாம் பாராட்டுகின்ற எமது வாடிக்கையாளர்களுக்கும் ஏனைய அக்கறைதாரர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும். தேசிய சேமிப்பு வங்கிக்கு இன்றியமையாத உதவியளித்தமைக்காக அஞ்சல் மா அதிபருக்கும் அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் நான் மிகுந்த பாராட்டை தெரிவிக்கின்றேன். முடிவாக அவர்களது தொடர்ச்சியான ஆதரவுக்கும் வழிகாட்டல்களுக்கும் கௌரவ அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர், கௌரவ அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள், கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், கௌரவ நிதி மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர், நிதி அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் அலுவலர்கள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அலுவலர்கள், சட்ட மா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது அணி மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அவர்களது அணி ஆகியோருக்கு எனது நன்றிகள் உரித்தாகும்.



அஸ்வின் டி சில்வா
தலைவர்
2018 மார்ச் 12



பொது முகாமையாளரின்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

தேசிய சேமிப்பு வங்கியானது 2017இல், அனைத்து முக்கிய வர்த்தக விடயப்பரப்பிலும் உன்னதமான நிதியியல் செயலாற்றுகை மற்றும் அமைப்பியல்சார்ந்த வளரச்சியொன்றினை பதிவுசெய்து அதன் 45 ஆவது ஆண்டுநிறைவைக் கொண்டாடியது. இறைக்கொள்கை மற்றும் நிதியியல் கொள்கைகளில் அபிவிருத்திகளுடன் கூடிய உயர்வான போட்டிமிக்க சூழலொன்றில் கவனமாகவும் பாதுகாப்பாகவும் திசைப்படுத்துவதன் மூலம் இக் குறிப்பிடத்தக்க மைல்கற்கள் அடையப்பெற்றன. இவை, வங்கி பின்பற்றிய நடைமுறைசார்ந்த உபாய பணிப்புரையின் உத்வேகத்திற்கு சான்றளிக்கின்றன. சந்தை சவால்கள் எவ்வாறிருப்பினும் தேசிய சேமிப்பு வங்கியானது இலங்கையில் சேமிப்பு கலாசாரமொன்றினைப் பேணிவளர்ப்பதற்கான அதன் தனித்துவமிக்க பொறுப்பாணையினை உண்மையாக தொடர்ந்தும் பற்றிப்பிடிக்கும்.

வரலாறுபடைக்கும் செயலாற்றுகை

வங்கியானது 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ரூபா 1 ரில்லியன் கொண்ட சொத்துத் தளத்தில் நிலையான மைல் கல்லொன்றினை அடைவதற்கு ஒப்பீட்டு ரீதியாக அதன் தொழிற்பாட்டில் 45 வருட கால குறைந்த காலப் பகுதியினுள் வரலாறொன்றினை தோற்றுவித்தது. 2016 இல் இருந்து ரூபா 79.9 பில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றுடன் ரூபா 737.2 பில்லியன் அடைவதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புத் தளத்தில் 12.2% வளர்ச்சி மூலம் சொத்துகளின் 11% வளர்ச்சி அடிப்படையில் துணையளித்தது. சில்லறை மற்றும் நிறுவனத் துறைகள் இரண்டிலும் வங்கியின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியல் ரூபா 388.0 பில்லியனை அடைவதற்கு 19.8% தனிச்சிறப்புமிக்க வளர்ச்சியொன்றினை பதிவு செய்தது.

மற்றுமொறு வரலாற்றுச் சாதனையாக தேசிய சேமிப்பு வங்கியானது ஒருபோதுமில்லாத அதன் வரிக்கு முந்திய இலபாத்தினை 5.5% வளர்சியுடன் ரூபா 14.0 பில்லியனாகவும் வரிக்குப் பிந்திய இலாபத்தினை ஒருபோதுமில்லாத அளவு 9.6 பில்லியனாகவும் பதிவு செய்தது. அரசாங்க பிணையங்களின் வர்த்தகத்திலிருந்து ரூபா 1.1 பில்லியன் இலாபத்துடன் ஒன்றிணைந்த வியாபார அளவுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது அரசாங்க பிணையங்கள் சந்தையின் எமது வலுவான பிரசன்னத்தை எடுத்துக்காட்டி இச் செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்தது. மேலும், தேசிய சேமிப்பு வங்கி, கடந்த 3 வருடங்களில் ரூபா 13.0 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபமொன்றினை தொடர்சியாக பதிவு செய்துள்ளது.

கட்டணம் மற்றும் தரகு வருமானம், வர்த்தகப்படுத்தல், நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம் மற்றும் ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற வட்டியல்லாத வருமானமானது 2016 இன் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 1.0 பில்லியனுக்கு எதிராக ரூபா 4.4 பில்லியனை தொட்டு 337.08% வீத மனநிறைவான வளர்ச்சியொன்றினை பதிவுசெய்வதற்கு பங்களிப்புச் செய்தது. வட்டிச்செலவில் கணிசமான அதிகரிப்பின் தாக்கமும் அதன் விளைவாக தேறிய வட்டி வருமானத்தில் வீழ்ச்சியும் வியாபார அளவுகளில் கணிசமான அதிகரிப்பொன்றினால் எதிரீடு செய்யப்பட்டது. இதன் விளைவாக வட்டி வருமானமானது ரூபா 103.4 பில்லியனாகவிருந்தது.

மேலும் ஒருதடவை வரலாறு படைத்து, மொத்துச் செயற்படா கடன் விகிதம் 2016 இன் 1.6% உடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறைச் சராசரியில் மிகவும் குறைவானற்றில் ஒன்றாக 1.3% இற்கு குறைவடைந்தது. செயற்படா கடன் விகிதத்தின் மேம்படுத்துகையானது கடன்கள், முற்பணங்களில் கணிசமான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டிருந்ததுடன் வங்கியின் கடன் சொத்துப்பட்டியலின் ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவத்தினையும் தலைசிறந்த சொத்துத் தரத்தினையும் வங்கியின் இடர் முகாமைத்துவத்திற்கான முன்மதிமிக்க அணுகுமுறையினையும் எடுத்துக்காட்டுகின்றது. வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதமானது அரச வங்கித் துறையில் உயர்வானதொன்றாக, மனநிறைவுமிக்க 15.3%ஆக காணப்பட்டது.

மெய்நிகர் மற்றும் பௌதீக அடிச்சுவடுகளை விரிவடையச் செய்தல்

180 வருடங்களுக்கும் மேற்பட்ட நிதியியல் பாரம்பரியத்துடன் தேசிய சேமிப்பு வங்கியானது பல பிளவு மாறுதல்களை சந்திக்க வெற்றிகரமாக கட்டியமைக்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது கையடக்கத் தொலைபேசி, இணையத்தள பாவனை பெருகிச்செல்வதனால் வங்கித் தொழிற்துறை உலகளாவிய துரித டிஜிட்டல் மயமாக்கத்தினை ஏற்றுக்கொள்வதுடன் டிஜிட்டல் வங்கித் தொழில் சேவைகள் மரபு சார்ந்த கிளை வங்கித்தொழிலினை வழக்கொழியச்செய்யவில்லையென்பதையும் ஏற்றுக்கொள்கின்றது. எமது தொழிற்பாடுகளை தொழில்நுட்பம் "சில்கல் படுத்த" அனுமதிப்பதனை விட நாம் தற்போது காணப்படுகின்ற எமது கிளை வலையமைப்பினை புதுமைப் படுத்துவதறகும் படிப்படியாக அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கையெடுத்துள்ள அதேவேளை மாறிவருகின்ற தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வதற்காக போட்டிமிக்க டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுத்துள்ளோம். கடந்த வருடங்களில் எமது உபாய பதிலிறுத்தல்கள், சமூகத்தின் அனைத்து வகுப்பு வாடிக்கையாளர்களுக்கும் பௌதீக அதேபோன்று மெய்நிகர் செயற்பரப்பில் சேவையளிப்பதில் சிறந்த வாடிக்கையாளர் அனுபவமொன்றினை வழங்குவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை நாம் அவதானித்துள்ளோம்.

தேசிய சேமிப்பு வங்கியானது அதன் பரந்த அடைவினை 253 கிளைகளாக விரிவுபடுத்தியுள்ளது. எமது நாடுபூராகவுமுள்ள விரிவான வாடிக்கையாளர் தொடுநிலையங்கள் 4,062 அஞ்சல் அலுவலகங்களை உள்ளடக்குகின்றது. மேலும், ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிட்டலுடனான பங்கேற்புடன் புதுமைபடைக்கும் டிஜிட்டல் உற்பத்திகளான என்எஸ்பி ஐசேவர் என்ற உற்பத்தியின் அறிமுகத்துடன் எமது வாடிக்கையாளர்கள் நாடுபூராகவுமுள்ள 16000+ எம்கேஸ் சில்லறை வணிகங்களைப் பயன்படுத்தி பணத்தினை சேமிக்க முடியும். "மாதிரிக் கிளை" எண்ணக்கருவானது "என்எஸ்பி கனெக்ட்" வர்த்தக நாமத்தின் கீழ் 2017 இல் ஆரம்பிக்கபட்டுள்ளதுடன் 2018 இல் நாடுபூராகவும் 50 கிளைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

2017 இல், வங்கியின் பிராந்திய தொழிற்பாட்டு கட்டமைப்பானது மறுசீரமைக்கப்பட்டதுடன் அனைத்து கிளைகளும் இவ்வாண்டின் போது 09 பிராந்தியங்களினுள் ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், 2017 இல், கிளைகளின் செயலாற்றுகையினையும் வாடிக்கையாளர் திருப்தியினையும் மதிப்பிடுவதற்காக வாடிக்கையாளர் மன்றங்களையும் பிராந்திய மட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களையும் கிளைகள் ஆரம்பித்தன.

கற்றல் கலாசாரத்தினை முன்னேற்றமடையச் செய்தல்

எமது தொடர்ச்சியான வெற்றிக்கு தொடர்சியான கற்றல் மிக முக்கியமானதென்பதனை நாம் முரணின்றி ஏற்றுக்கொண்டுள்ளோம். எமது வருடாந்த பயிற்சித் நிகழ்சித்திட்டங்கள், எமது அறிவுப்பகிர்வு மற்றும் ஒன்று திரட்டிய அறிவு மற்றும் அனுபத்துடன் கூடிய எமது புலமைச் சொத்து மூலதனம் என்பவற்றினூடாக தேசிய சேமிப்பு வங்கியினுள் கற்கும் கலாசாரமொன்றினை நாம் தோற்றுவித்துள்ளோமென்பதை கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். அர்ப்பணிப்பும் உயர்திறனும் விசுவாசமும் மிக்க எமது ஊழியர் அணியில் பலர் 10 வருடங்களுக்கு கூடிய சேவையினைக் கொண்டுள்ளதுடன் வியாபார தலைவர்களாக உருவாவதற்கு தேசிய சேமிப்பு வங்கியில் நிலவுகின்ற கற்கும் கலாசாரத்தை தழுவியுள்ளதுடன் எமது அக்கறைதாரர்களுக்கு சிறந்த பெறுமதியினையும் வழங்குகின்றனர்.

2017இல் 252 பயிற்சி நிகழ்சித்திட்டங்களில் ரூபா 34.4. மில்லியனுக்கு மேல் முதலிடப்பட்டது. இது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நடவடிக்களையும் உள்ளடக்குவதுடன் 45,347 கொண்ட அதிகளவிலான பயிற்சி மணித்தியாலங்களையும் பதிவு செய்கின்றது. ஊழியரொருவருக்கான பயிற்சி மணித்தியாலயங்களில் சராசரி எண்ணிக்கை 12 மணித்தியாலங்களாக இருந்ததுடன் பங்கேற்பு வீதமானது 88% ஆகவிருந்தது. தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து 53 பங்கேற்பாளர்களுக்காக 14 வெளிநாட்டு பயிற்சி நிகழ்சித் திட்டங்களும் காணப்பட்டன. எமது தனித்துவமிக்க கற்றல் கலாசாரத்தை பேணுவதற்கு நாம் பயிற்சித் திட்டங்களில் தொடர்ந்தும் முதலிடுவோம்.

மகளிர் வலுவூட்டலை நோக்கி

இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேல் கொண்டுள்ள பெண்களை வலுவூட்டலானது நடுத்தர வருமான அந்தஸ்த்தினை அடைவதற்கான இலங்கையின் பயணத்தை உத்வேகமிக்கதாக்கும் என்பதனை நாம் அங்கீகரிக்கின்றோம். தேசிய சேமிப்பு வங்கியானது விசேடமான உற்பத்திகள் மற்றும் எமது ஊழியப்படையில் பெண்களை இயலச்செய்தலூடாக பெண்களை வலுவூட்டுவதற்கு முழுமையான அணுகுமுறையொன்றினை எடுத்துள்ளது. எமது மொத்தப் ஊழியப்படையில் 58% கொண்ட பெண்களுடன் அனைத்து மட்டங்களிலும் பெண்கள் விகிதாசாரம் 6:5 என்ற மிகவும் ஆரோக்கியமான விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதையிட்டு நாம் பெருமைப்பட முடியும். பாலின அடிப்படையில் பாரபட்சம்காட்டாத சமவாய்ப்பு தொழில் தருநராக நாம் திகழ்கின்றோம்.

2017 இல் எமது முதன்மை உற்பத்தியான ஸ்திரி என்பது இலங்கை பெண்களின் நிதியியல் சுதந்திரத்தினை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளதுடன் சீர்செய்யப்பட்டு மீளத்தொடங்கப்பட்டது. சேமிப்புகளை திரட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் 2017 இல் தேசிய சேமிப்பு வங்கியின் கருப்பொருளின் பாகமொன்றாக இம் மீளத்தொடங்குதல் அமைந்திருந்தது. புதிய நலன்களுடன் வர்த்தக தூதர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் உற்பத்தியும் மீளத்தொடங்கப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட வழிமுறைகளூடாக பெண்களை வலுவூட்டுவதில் உதவியளிப்பதற்க்கு நாம் தொடர்ந்தும் முயற்சிகளை வழங்குவோம்.

நாளை பற்றிய கண்ணோட்டம்

எமது பன்முகப்படுத்தலை நோக்கிய உபாயமானது சர்வதேச சந்தைகளில் எமது பிரசன்னத்தினை அதிகரிப்பதற்காக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு இட்டுச்சென்றுள்ளது. 2017 இல் சர்வதேச சந்தைகளில் உறுதியான வளர்ச்சியிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட சிறப்பான வாய்ப்புகளின் அனுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கு நாம் ஈடுபட்டோம். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடமிருந்து அதிகமான பணவனுப்பல்களை கவருவதற்காக நாம் ஐரோப்பிய, கனேடிய மற்றும் ஐக்கிய இராச்சிய சந்தைகளில் நுழைவதற்கு திட்டமிடுகின்றோம். கடந்த 3 வருடங்களுக்கு மேல் அளவு கடந்த வளர்சியை காண்பித்துள்ள பணவனுப்பல்களின் சந்தைப்பங்கினை மேம்படுத்துவதற்கு நாம் எண்ணுகின்றோம்.

எமது சேமிப்பு உற்பத்திகளை விரிவுபடுத்துவதக்கு நாம் கவனம் செலுத்துவோம் என்பதுடன் மாஸ்டர் அட்டை மற்றும் வீசா சிப் பற்று அட்டைகளை நாம் தொடர்ந்தும் வழங்குவோம். இதன் மூலம் எமது வாடிக்கையாளர்கள் உலகம் முழுவதும் அவர்களது கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பினை அனுபவிப்பர். 2017 ஆம் ஆண்டில் இலங்கை சேமிப்பு வங்கியினை கையகப்படுத்துவதற்கான பூர்வாங்க அடிப்படை பணிகளையும் நாம் ஆரம்பித்தோம். கையேற்புடன் தொடர்புபட்ட உரிய சிரத்தை ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு அதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எமது மூன்றாண்டு வியாபாரத் திட்டம் 2017 – 2019 இனை பின்பற்றி நாம் சில்லறை வங்கியொன்றாக சுவடுபதிப்பதை விரிவுபடுத்தவுள்ளோம். எமது டிஜிட்டல் முன்முயற்சிகளையும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினையும் தொடர்ந்தும் மேன்படுத்துவதற்காக ஐசேவர் மற்றும் என்எஸ்பி ரீச் போன்ற புதுமைப்படைக்கும் உற்பத்திகள் 2018 இல் உயர் முன்னுரிமை பெற்றிருக்கும். எமது தனித்துவம்மிக்க வழியில் இலங்கை சமூகத்தின் அனைத்து வகுப்புகளிலிருந்தும் தோன்றுகின்ற எமது வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான அனுபவமொன்றினை வழங்குவதற்காக அண்மையான டிஜிட்டல் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பிரபல்யம்மிக்க வங்கித் துறையாக நாம் எமது பாரம்பரிய வழியினை தொடர்ந்தும் பின்பற்றுவோம்.

பாராட்டுத் தெரிவித்தல்

இறுதியாக, எமது 2017 ஒப்பற்ற வரலாற்றினை ஏற்படுத்துவதற்கு ஏதுவான பங்காற்றியவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன். அவர்களது தொடர்ச்சியான உறுதுணைக்கும் நேர்த்தியான ஆளுகைக்கும் தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் எனது முகாமைத்துவ அணிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கௌரவ அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர், கௌரவ அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள், கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், கௌரவ நிதி மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர், நிதி அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் அலுவலர்கள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அலுவலர்கள், அஞ்சல் மா அதிபர் மற்றும் அலுவலர்கள், சட்ட மா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது அணி மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அவர்களது அணி ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

தேசிய சேமிப்பு வங்கியின் அர்ப்பணிப்பும் விசுவாசமும்மிக்க அணி, எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் பற்றுறுதி மற்றும் எமது அக்கறைதாரர்கள் இன்றி எமது 2017 வெற்றி வரலாறு சாத்தியமாக இருந்திருக்காது. எமது ஒப்பற்ற வரலாற்றில் மற்றுமொரு எண்ணத்ததைக் கவருகின்ற அத்தியாயத்தினை உருவாக்கியமைக்காக அனைவருக்கும் நன்றி.



எஸ்.டி.என். பெரேரா

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

2018 மார்ச் 12

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான வர்த்தக மாதிரி

சேமிப்பு கலாச்சாரத்தை ஊக்குவித்தல், நாட்டுக்குப் பணிபுரிதல் மற்றும் பங்களித்தல் மற்றும் இலங்கைச் சமூகத்தின் அனைத்து பிரிவினதும் தேவையைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் இணையற்ற உரிமைக் கட்டளையானது வங்கியின் இணையற்ற வியாபார மாதிரியை உருவாக்குவதற்கான தூண்களை உருவாக்கியுள்ளது.

எமது வியாபார மாதிரியானது, எமது நோக்கம், பணி, விழுமியங்கள் மற்றும் எமது மூலோபாயத் தூண்களில் வழிகாட்டப்பட்டவாறு, வங்கியின் பெறுமதி உருவாக்கச் செயன்முறையின் மேலோட்டமான ஆய்வொன்றை வழங்குகிறது. முழுமையாகப் பார்க்கையில், நாம் தொழிற்படுகின்ற சூழ்நிலை, உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பொருளாதாரங்கள் மற்றும், இத்துறையில் காணப்படும் போக்குகள் ஆகியவற்றை தொழிற்பாட்டு சூழல் பிரதிபலிக்கிறது. இப்பிரிவு, துறையின் அச்சுறுத்தல்கள், வாய்ப்புக்கள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் ஆகியவற்றினை உள்ளடக்குகிறது.

“அக்கறைதாரர்கள்” பகுதியில் எமது பெறுமதி உருவாக்கத்தில் எமது இயலுமை மீது கணிசமான தாக்கத்தைக் கொண்டிருக்கும் குழுக்கள் மற்றும் அவர்களுடனான ஈடுபாட்டுக்குப் பயன்படுத்தப்படும் முறைகள் ஆகியனவற்றை மேலோட்டமாகக் குறிப்பிடுகின்றோம். மேலும், அக்கறைதாரர்கள். எவ்வவாறு எமது வியாபார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தினர் என்பதையும், 2017ல் வங்கி எவ்வாறு அவர்களுக்கான பெறுமதியை உருவாக்கியதென்பதையும் இது உள்ளடக்குகிறது.

எமது வியாபார மாதிரியின் மதிப்பீடு, செயற்பாட்டுச் சூழல் ஆகியன சாதகமான செயற்பாட்டுடனான அக்கறைதாரர் ஈடுபாட்டுடன் பெறுமதியை அதிகரிக்கக் கூடிய அல்லது குறைக்கக் கூடிய எமது பொருண்மையான விடயங்கள் மற்றும் பார்வைகள் ஆகியவற்றினைச் சீராக்கம் செய்தன. இவை பொருண்மையான விடயங்களிலிருந்து ஏற்படக்கூடிய இடர் மற்றும் வாய்ப்புக்களுடன் வங்கியின் மூலோபாய உருவாக்கத்துக்கு வழிவகுத்தன. “எமது மூலோபாயமானது” தேசிய சேமிப்பு வங்கியின் வியாபாரத்திட்டம் மற்றும் வங்கியின் மூலோபாய வழிகாட்டுதல்களையும் மேலோட்டமாக விளக்குகிறது.

முக்கிய வளங்கள் மற்றும் தொடர்புகள் (உள்ளீடுகள்)

நிறுவனத்திலிருந்தான உள்ளீடு

நிதியியல் மூலதனம்
பார்க்க பக்கம்
3 லிருந்து 89

தயாரிக்கப்பட்ட மூலதனம்
பார்க்க பக்கம்
100 லிருந்து 105

அறிவுசார் மூலதனம்
பார்க்க பக்கம் 92லிருந்து
99

சமூகத்திலிருந்தான முதலீடு


மனிதவள மூலதனம்
பார்க்க பக்கம்
108லிருந்து 121

சமூக மற்றும் உறவு மூலதனம்
பார்க்க பக்கம் 124லிருந்து 139

இயற்கை மூலதனம்
பார்க்க பக்கம்
142லிருந்து 145

பெறுமதி உருவாக்கம்

நிறுவன ஆளுகை



இடர்முகாமைத்துவ மற்றும் இணக்கப்பாடு

நிதி மற்றும் நிதிசார் செயலாற்றம் (வெளியீடுகள்)

பொருளியல்

வரிக்கு பிந்திய இலாபம் – ரூ.9.6 பில்
சொத்துத் தளம் – ரூ.1.01 ரில்.
செலுத்தப்பட்ட வட்டி – ரூ.78.4பில்
வழங்கப்பட்ட கடன்கள் – ரூ.187.3பில்
அரசுக்கான பங்களிப்பு: ரூ.13.4பில்

கிளைகள் – 253
அஞ்சல் வலையமைப்பு – 4062
தன்னியக்க காசு இயந்திரங்கள – 286
ICT முதலீடு – ரூ.712.4 மில்

சமூகம்

ஊழியர் நலன்கள் – 114 பக்கம் பார்க்க
வழங்கப்பட்ட பதவி உயர்வுகள – 824
ஊழியர் தொகை – 4470
ஆட்சேர்ப்புக்கள் – 216
பயிற்சிக்கான முதலீடு – ரூ.34.4 மில்.
பயிற்சிக்கான மணித்தியாலங்கள் – 45347
தக்கவைத்திருக்கும் வீதம் – 96.7%

வர்த்தகநாமப் பெறுமதி – ஐ.அ.டொ 168 மில்.
வர்த்தகநாம சந்தைப்படுத்தல் – 5வதுஅதிபெறுமதியுடையது
பிட்ச் ரேட்டிங் லங்கா (lka) – AAA (lka)
S&P உலக தரப்படுத்தல் – B+ நிலையான
பிட்ச் தரப்படுத்தல் – B+ நிலையான

சூழல்

கணக்குகளின் எண்ணிக்கை – 19.9 மில்லியன்
சமூக அபிவிருத்தி முதலீடு – ரூ. 20.4 மில்.
சமூகத்துக்கான பங்களிப்பு – 135ம் பக்கம் பார்க்க

விநியோகிக்கப்பட்ட மரக்கன்று – 25,000
முதலீடு – ரூ. 1.8 மில்.
வழங்கப்பட்ட சூழலியல் கடன்கள் – 902
வழங்கப்பட்ட சூழலியல் கடன்களின் பெறுமதி – ரூ. 686 மில்.

அக்கறைதாரர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி (வெளியீடு)

பங்குதாரர்

நிதி உறுதிப்பாடு
நாட்டுக்கான பங்களிப்பு

வாடிக்கையாளர்

விரிவாக்கப்பட்ட வியாபார வாய்ப்பு
விரிவாக்கப்பட்ட அணுக்கம் மற்றும் வசதி
நிதியியல் உள்ளடக்கம்
திறன்வாயந்த வாடிக்கையாளர் சேவை
விரிவான உற்பத்தித்தொகுப்பு
தொழில்நுட்ப உற்பத்தி வழங்கல்

ஊழியர்கள்

ஊழியர் ஈடுபாட்டின் அதிகளவிலான மட்டம்
பாதுகாப்பாக வேலை செய்யக்கூடிய சூழல்
உள்நாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவித்தல்
ஊழியர் திருப்தி மற்றும் பற்றுறுதி

ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள்

சமூக அபிவிருத்தி
எடுத்துக்காட்டான இணக்கப்பாட்டுக் கலாச்சாரம்


வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள்

வழங்குனர்களுடன் சிறந்த தொடர்பை கட்டியெழுப்புதல்

சமூகம் மற்றும் சுற்றாடல்

சூழலில் வியாபார எதிர்மறை தாக்கங்களை குறைத்தல்
வலுச் செயற்திறன்
பொறுப்பான நிறுவன பிரஜை
புதுப்பிக்கக்கூடிய வலுவை நோக்கி நகர்தல்
உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்களை அதிகரிக்க ஆதரவளித்தல்

எமது மூலோபாய செலுத்துனர்கள்



தொழிற்பாட்டு சூழல்

வங்கியின் மீது ஆதிக்கம் புரியும் உள்ளக மற்றும் வெளிப்புற காரணிகளின் ஒட்டுமொத்த விளைவாகவே செயலாற்றும் சூழ்நிலை விளங்குகின்றது. உலகளாவிய மற்றும் இலங்கை மட்டத்தில் நேரும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள், வங்கியின் மூலோபாய தீர்மானங்கள் மற்றும் நிதி செயற்பாடுகள் மீது தாக்கம் செலுத்தும் என்பது குறித்து தே.சே.வ அறிந்துள்ளது. பின்வரும் பகுதியானது, 2017ம் ஆண்டின் நுண் மற்றும் பாரிய சூழ்நிலைப் போக்குகள் குறித்து எடுத்துரைக்கின்றது.

உலக பொருளாதாரம்

உலகளாவிய நிதி நெருக்கடிகள் குறைந்து கொண்டு வரும் இந்தக் காலகட்டத்தில், உலக பொருளாதாரம் 2017ம் ஆண்டில் வலுப்பட்டுள்ளது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சி விகிதமானது, 3% இனை அடைந்துள்ளதுடன், இது 2011ம் ஆண்டு எய்திய அதியுயர் விகிதத்திற்குப் பின்னர் பெற்றுக்கொண்ட சாதனை வளர்ச்சியாகும். உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, எதிர்வரும் வருடங்களில் ஸ்திரமான நிலையில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய உற்பத்தித்திறன் 2017ம் ஆண்டில் 3.7% வளர்ச்சியினை பெற்றுள்ளது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய வளர்ச்சி எதிர்வுகூறல், 3.9% என மீள உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மீள்திருத்தமானது, அதிகரித்துள்ள உலகளாவிய வளர்ச்சி துரிதத்தினை பிரதிபலிப்பதுடன், அண்மையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்க வரிக் கோட்பாட்டு மாற்றங்களும் தாக்கத்தினை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மேம்பட்ட வளர்ச்சியானது, அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் மேற்கொண்ட செயற்பாடுகளின் தூண்டல்களினால் மட்டுமல்லாது, 2017ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சி 2.3% இனாலும் அதிகரித்து, முதலீட்டு செலவீனங்கள், கையிருப்புகளில் குறிப்பிடத்தக்க மீள்மாற்றங்கள், வெளிக்கள கேள்விகள் வலுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மீதான, எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலான பலப்படுத்தல் காரணமாக நேரிட்டது. வளர்ச்சியானது, அனைத்து பெரும் பொருளாதரங்களில் துரிதப்படுத்தப்பட்ட நிலையில், குறித்த இந்த முன்னேற்றமானது, யூரோ பிராந்தியத்தில் குறிக்கப்பட்ட முன்னேற்றமானது எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகமான வலுவினை அளித்தவாறு 2.4%. வளர்ச்சியினை காண்பித்தது. மற்றுமொரு அபிவிருத்தியடைந்த பொருளாதார வளர்ச்சியாக, ஜப்பானிலும், 2017ம் ஆண்டில், மதிப்பிடப்பட்ட 1.7% வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. இந்த வளர்ச்சியானது, உள்நாட்டு கேள்விகள், நுகர்வோரின் செலவுசெய்தல் செயற்பாடுகளின் மீட்டெடுப்பு, நிதி ஊக்கிகள் பொதியின் செயல்படுத்தல் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது

2017ம் ஆண்டில் கிழக்கு மற்றும் தென் ஆசிய நாடுகள் உலகளாவிய வளர்ச்சியில் ஏறத்தாழ பாதியளவு வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது. இதில் சீனா மாத்திரம் 6.8% என்ற மூன்றிலொரு விகித பங்களிப்பினை நல்கியது. ஆர்ஜென்டீனா, பிரேசில், நைஜீரியா ஆகியவற்றில் இருந்த பொருளாதார சரிவுகள் நிவர்த்தி செய்யப்பட்ட நிலையில், ரஷ்ய கூட்டமைப்பு அளித்த பங்களிப்பு காரணமாகவும் 2016 மற்றும் 2017ம் ஆண்டுக் காலப்பகுதியில் உலகளாவிய வளர்ச்சியானது, துரித கதியில் மேம்பட்டது. இந்த தலைகீழ் மாற்றமானது, உலக வர்த்தக மீளெழுச்சி மற்றும் முதலீட்டு நிலமைகள் மீதான மேம்பாடுகளால் ஆதரவளிக்கப்பட்டது.

எதிர்கால கண்ணோட்டம்

மேம்பட்ட உலகளாவிய பொருளாதார நிலமையானது, நாடுகள், தமது குறைந்த கார்பன் பொருளாதார வளர்ச்சி, சமச்சீரின்மைகளை குறைத்தல், பொருளாதார வேறுபாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மந்தமாக்கும் ஆழப்பதிந்த தடைகளை இல்லாதொழித்தல் போன்ற நீண்ட கால சிக்கல்களை நிவர்த்தி செய்யும் கோட்பாடுகளை உருவாக்க கால்கோளாகியதென்றால் மிகையாகாது. இந்த வளர்ச்சியினை ஒன்றிணைத்து,

ஸ்திரமான முடுக்கத்தினை உற்பத்தி சார் முதலீடுகள் மீது செலுத்தி, அதன் ஊடாக மத்தியகால வாய்ப்புகளை பெற்றுக்கொள்தலே இதன்போதான சவாலாக உள்ளது.

எழுச்சிபெற்றவாறு அபிவிருத்தியடைந்துவரும் ஆசியா, 2018–19ம் ஆண்டுகளில் 6.5% வரையான வளர்ச்சியினை பெற்றுக்கொள்ளும். வளர்ச்சியானது, சீனாவில், படிப்படியாக மிதமான வளர்ச்சியினை பெற்றுக்கொள்ளும். இந்தியா 2018–19ம் ஆண்டுக் காலப்பகுதியில் அதிக வளர்ச்சியை பெறும். எழுச்சியுறும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் (EMDEs) துரித வேகத்தில் முடுக்கப்பட்டு, 2018ம் ஆண்டில் 4.5% இனையும் 2019–20ம் ஆண்டு காலப்பகுதியில் சராசரியாக 4.7% வளர்ச்சியினையும் காண்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேம்பட்ட பொருளாதாரங்கள், 2017ம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அதே வளர்ச்சி மட்டத்தினையே தொடர்ந்து பேணும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் மேம்பட்ட பொருளாதாரம், எதிர்பார்க்கப்பட்ட உயர்வினை பெறும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்கால கண்ணோட்டத்திற்கான இடர், கீழிறக்கத்தினையே காண்பிக்கின்றது. நிதிச் சந்தையில் உள்ள ஏற்ற இறக்கங்கள், வழக்கத்திற்கு மாறான வகையில் மிகுந்த குறைவினை காண்பிப்பதுடன், சொத்து விலைகள் உயர் பெறுமானத்தினை பெற்றுள்ளதுடன், திடீர் சந்தை மாற்றங்கள், இடர் நேரிடுதலையே பரிந்துரைக்கின்றது. அதிகரித்த வர்த்தக பாதுகாப்புவாதம் மற்றும் உயரும் புவிசார் அரசியல் அழுத்தங்கள் ஆகியன உணர்வுசார் விடயங்கள் மீது அழுத்தத்தினை பிரயோகித்தவாறு, மீட்சியினை சீர்குலைக்கக்கூடும். நீண்ட கால அடிப்படையில் நோக்கும் போது, சாத்தியமான வெளியக வளர்ச்சி வேகம் குறைவதுடன், உலகளாவிய பொருளாதாரம் எதிர்கொள்ளும் பின்னடைவு மீது தாக்கம் செலுத்தியவாறு, வாழ்க்கை தரநிலை மற்றும் வறுமைக் குறைப்பு மீதும் பாதகமான சூழ்நிலைகள் மற்றும் சேதங்களை ஏற்படுத்தக்கூடும்

இலங்கைப் பொருளாதாரம்

இலங்கை 2017ம் ஆண்டில் 3.1% வளர்ச்சியினை ஜுன் மாதத்திற்கான எதிர்வுகூறலை விட குறைவாக பெற்றது. இது வறட்சி காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவற்றின் காரணமாகவே நேரிட்டது. பணவீக்க அழுத்தங்களை இலகுவாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட பணக் கோட்பாட்டு இலகுவாக்கல் மத்தியிலும் 2017ம் ஆண்டின் முதல் அரையாண்டில் கடன் வளர்ச்சியானது, தனியார் நுகர்வு மற்றும் முதலீடுகளை பலப்படுத்தியவாறு, வலுவான கடன் வளர்ச்சியுடன் நிலைகொண்டது.

சேவைத் தொழிற்துறையானது. நாட்டின் 55.8% வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தது. இது 2016ம் ஆண்டில் பெற்றுக்கொண்ட 3.2% இனை விட விஸ்தரிக்கப்பட்ட வளர்ச்சியாகும். குறிப்பாக தொலைத்தொடர்பாடல், நிதியியல்சேவைகள் மனித ஆரோக்கியம், காப்புறுதி, மொத்த மற்றும் சில்லறை வணிகம் ஆகியனவே இதன் மீது அதிக ஆதிக்கம் செலுத்தியது. தொழிற்துறை செயற்பாடுகள் 27.2% பங்கினை கொண்டவாறு நேர்மறை தாக்கத்தினை வெளிப்படுத்தியபடி 3.9% என்ற மிதமான வளர்ச்சியினை காண்பித்தது. இந்த பங்களிப்பில், கட்டுமாணம், சுரங்கம் மற்றும் குவாரி, உற்பத்தி தொழிற்துறைகள் உள்ளடங்குகின்றன. விவசாய தொழிற்துறையானது, நாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக நிலவும் சாதகமற்ற காலநிலை, கடும் வரட்சி, அதீத மழைவீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக வெறுமனே 0.8% வளர்ச்சியையே காண்பித்தது. இந்த நிலையானது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தடைக்கல்லாக விளங்கியது. இலங்கை ரூபாய் இன், அமெரிக்க டொலருக்கு எதிரான தேய்மானமானது, 2017 டிசம்பர் மாத இறுதியில் 2% சரிவினை சந்தித்தது. இது அதிகரித்த இறக்குமதி செலவீனம், கடன் சேவைகளுக்கான கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் அரசாங்க பிணைகள் மீதான குறைப்பு ஆகியவற்றின் காரணமாக நேரிட்ட வெளிநாட்டு வெளிச்செல்லல் அதிகரிப்பின் ஊடாக நேர்ந்தது.

பணவீக்கம்

அதிகரித்த உணவுப்பொருட்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் ஆகியவற்றின் காரணமாக கடுமையான பண கோட்பாடுகள் மற்றும் கடன் வளர்ச்சியின் குறைப்பு ஏற்படுத்தப்பட்டமைக்கு மத்தியிலும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (NCPI) இனை அடிப்படையாக கொண்ட பணவீக்கமானது, 2017ம் ஆண்டில் 7.3% உடன் நிறைவுற்றது. பெறுமதி சேர் வரியானது, தெரிவுசெய்யப்பட்ட தனியார் துறையின் ஆரோக்கியம் சார்ந்த பொருட்கள் மீதான விலக்களிப்பை நீக்கி விஸ்தரிக்கப்பட்டது. இந்த விகிதமானது, 2016 நவம்பர் மாதத்தில் 11% இல் இருந்து 15% ஆக அதிகரிக்கப்பட்டதுடன், இது 2017ம் ஆண்டே முழுமையாக உணரப்பட்டது.

நாணயக் கொள்கை

2016ம் ஆண்டு முதல் IMF ஆதரவுடன் அமுலில் உள்ள நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் வரும் 3 வருட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை இலங்கை முன்னெடுக்கின்றது. பாரிய நிலைப்படுத்தல் மற்றும் இரு மாபெரும் வரி மீளமைப்பு ஆகியன, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் அரைப்பகுதியில் எட்டப்பட்ட விளைவுகளாகும். இதன்படி, பணக் கொள்கை, பணவீக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையிலும், பண அழுத்தங்கள், கடன் அதிகரிப்புகளை மட்டுப்படுத்தும் வகையிலும் இலங்கை மத்திய வங்கியினால் இறுக்கப்பட்டது. கொள்கை வட்டியானது, 25 அடிப்படை புள்ளிகளால் 2017 மார்ச் மாதத்தில் உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக, நிலையியல் வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் நிலையியல் கடன் வழங்கல் வசதி விகிதம் (SLFR) ஆகியன முறையே 7.25% மற்றும் 8.75% ஆக அதிகரித்தது. இதன் விளைவாக, சந்தை வட்டி வீதங்கள், வர்த்தக வங்கிகளின் வைப்புகள் மற்றும் கடன் வழங்கல் விகிதங்கள் காரணமாக ஆண்டில் முதல் அரையாண்டில் உயர்வினை காண்பித்தது. இந்த போக்கினை மாற்றியவாறு, ஆண்டின் இரண்டாவது அரையாண்டில், குறுகிய கால விகிதங்கள், உள்நாட்டு பணச்சந்தையில் நிலவிய திரவத்தன்மை மேம்படுத்தல்களை பிரதிபலித்து கீழ்நோக்கிய வகையில் திருத்தியமைக்கப்பட்டது,. திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு, முதன்மைச் சந்தைகளில் 2017ம் ஆண்டின் முதல் காலாண்டில் அதிகரித்தது. இது அரசாங்கத்திடமிருந்தான நிதிகள் தொடர்பிலான அதிகரித்த கேள்வி ஊடாக நேர்ந்தது.

வெளியகத் துறை

நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமதியானது, 2016 உடன் ஒப்பிடுகையில் 10.2% அதிகமாகவும்இ கடந்த காலங்களில் பதியப்பட்ட சிறந்த பெறுபேறான 2014ம் ஆண்டு பெற்றுக்கொண்ட 11.1 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் விட கூடுதலாகவும், அனைத்து காலகட்டங்களுடனும் ஒப்பிடுகையில், 2017ம் ஆண்டு உயர் சாதனை பெறுதியான 11.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பதிவுசெய்தது. இது முக்கியமாக, தேயிலை, பெட்ரோலியம் பொருட்கள், ஆடைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் கடலுணவுகள் ஆகியவற்றின் ஊடாக முடுக்கப்பட்டது. GSP+ வசதியினை மீள நிர்ணயித்தமை, ஐரோப்பிய சந்தைகளுக்கு மீன்வள தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையானது தளர்த்தப்பட்டமை போன்றவை, நாட்டின் ஏற்றுமதி வருமதிகளில் மேம்படுத்தல்களை அளித்தது. இறக்குமதி செலவீனமானது, 9.4% ஆல் 20.98 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. வரலாற்றின் அதியுயர் அதிகரித்த இறக்குமதி செலவீனமாக இது, அதிகரித்த எரிபொருள், அரிசி, தங்கம் மற்றும் அடிப்படை உலோகங்களின் இறக்குமதி காரணமாக நேரிட்டதுடன், இதன் விளைவாக 2016ம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட 8.87 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு எதிராக, 9.62 பில்லியன் அமெரிக்க டொலர் வணிக பற்றாக்குறை விரிவடைதலையும் நாட்டில் ஏற்படுத்தியது. வெளிநாட்டு பணியாளர்களின் வைப்பு வெளிநாட்டு நாணயப்பரிமாற்ற வருவாயின் முக்கிய ஆதாரமாக திகழும் நிலையில், இது 1.1% ஆல் 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாக தேய்வடைந்தது. அநேக மேம்பட்ட பொருளாதாரங்கள், எழுச்சியுறும் சந்தைகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பாதகமான புவிசார் அரசியல் நிலமைகள் நிலவியதன் காரணமாக வெளிக்கள பொருளாதார மீட்பு, மந்த கதியில் பயணித்ததால் நேரிட்டது.


இறைக் கொள்கை

மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) மீதான வருமான விகிதமானது, கடந்த ஆண்டில் பெற்றுக்கொண்ட 14.2% இல் இருந்து 2017ம் ஆண்டு 13.8% ஆக குறைவடைந்தது. இது 2016ம் ஆண்டில் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான 1.9% வரி அற்ற வருமானத்திலிருந்து 1.2% ஆக குறைவடைந்தமையாலாகும். மீண்டும் மீண்டும் ஏற்படும் செலவுகள் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான மொத்த செலவீனங்கள் மற்றும் நிகர கடன்கள் ஆகியன கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட 19.6%யை விட 19.3% என குறைவடைந்தது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை கடந்த ஆண்டில் காணப்பட்ட 5.4% லிருந்து இந்த வருடம் 5.5% ஆக உயர்ந்தது.

பொதுப்படு கடன்

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதத்திற்கான நாட்டின் பொதுப்படு கடனானது, 79.3% ஆக விளங்கிய நிலையில், பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர் நிலையினை காண்பித்தது. இதற்கு மேலதிகமாக, கடன் தொகுப்பானது, பல்றே குறிகாட்டிகளின் சுட்டிக்காட்டல்களின் அடிப்படையில், வெளிக்கள கடன்களுடன் தொடர்புபட்ட தேய்வினை காண்பித்தது. உயர் மத்திய வருமான தரநிலை நோக்கிய நாட்டின் மாற்றமானது, வர்த்தக கடன் தவணை அதிகரிப்பினை வெளிப்படுத்தியமையால், செலவு மற்றும் இடர்களின் அதிகரிப்பினையும் உயர்த்தியது.


வருடாந்த மொ.உ.உ வளர்ச்சி



வருடாந்த மொ.உ.உ வளர்ச்சி	2017	2016
விவசாயம்	-0.8	-3.8
தொழிற்துறை	3.9	5.8
சேவைகள்	3.2	4.7
மொ.உ.உ	3.1	4.5

வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் மற்றும் வைப்பு விகிதங்கள் 2017

[%]



எதிர்காலக் கண்ணோட்டம்

சர்வதேச நாணய நிதியம் (IMF) 2018ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதரமானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 5% வீத அதிகரிப்பினை எட்டும் என கருதும் நிலையில், ஸ்திரமடையும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்தியாவை தவிர்த்து, பிராந்தியத்தின் வளர்ச்சியானது, ஆண்டுக்கான சராசரி வளர்ச்சியாக 5.9%இல் ஸ்திரமானதாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது உள்நாட்டு கேள்விகள் வலுவானதாகவும், ஏற்றுமதிகள் சரியான போக்கிற்கும் வந்துள்ளமையினாலேயே சாத்தியமாகியுள்ளது.

இலங்கையின் பொருளாதார மறுசீரமைத்தல் நிகழ்ச்சிநிரலானது, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக, பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மையினை தக்கவத்துக்கொள்ளக்கூடிய சாத்தியங்களை கொண்டுள்ளதுடன், இந்த நிலையானது, சாத்தியமான குறுகிய கால வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் எனவும் நம்பப்படுகின்றது. பொதுக்கடன் ஆனது, நடப்பு நிதி ஒருங்கிணைப்புகள் காரணமாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த நிலமையானது, நிதிக்கான இடத்தினை திறப்பதுடன், சாத்தியமான வளர்ச்சிக்கு சகாயமளிக்கும், மனித மூலதன முதலீடுகள் மீது பொதுமக்கள் செலவுசெய்தலுக்கு நாடு வழியமைத்துக்கொடுப்பதற்கும் ஆதரவளிக்கும்.

அரசாங்கத்தின் நோக்கங்கள் காரணமாக மாற்றீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு செலாவணிச் சட்டமானது, நாணயப்பரிவர்த்தனை விகிதங்களின் நெகிழ்வுத்தன்மையினையும், மேலும் சிறந்த பரிவர்த்தனை முகாமைத்துவத்தினையும் அளிக்கும் தாரளமயமாக்கல் நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்துகின்றது. இதன் ஊடாக மேலும் நேரடி வெளிநாட்டு மூலதனங்களை (FDI) ஈர்க்க முடியும் என்பதுடன் இலகுவான முறையில் மூலதனங்களை பெற்றுக்கொள்தலும் ஊக்குவிக்கப்படுகின்றது. நிதிப்பற்றாக்குறையினை குறைத்தல் மற்றும் வரி இணக்கப்பாட்டினை இலகுபடுத்தல் ஆகியவற்றினை நோக்காக கொண்டு, 2017ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிறப்பிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டமானது, உட்கட்டமைப்பு முதலீடு உள்ளிட்ட, வளர்ச்சி மேம்பாட்டினை அளிக்கும் செலவிடுதலுக்கு ஆதரவளிக்கும் மேலதிக வருமானத்திற்கு வழியமைத்துக்கொடுக்கும்.

இதற்கு மேலதிகமாக, நிதி ஒருங்கிணைப்பினை இலக்காக கொண்ட அரசாங்கத்தின் கோட்பாடுகள் மீதான மறுசீரமைப்பு, முதலீட்டாளர்களை கவரும் வகையிலான, வெளிநாட்டு முதலீட்டு கோட்பாடுகளில் மாற்றம், ஒருங்கிணைந்த ஏற்றுமதி மூலோபாயத்தினை வடிவமைத்தல் மற்றும் வெளிநாட்டு உறவுகளை மேம்படுத்தல்

ஆகியன, நீண்ட கால பொருளாதார அபிவிருத்தி மற்றும் நாட்டின் வளர்ச்சி சாத்தியம் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்க நேர்மறைத்தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் வங்கியியல் தொழிற்துறை

இலங்கையின் வங்கியியல் துறையானது 13 உள்நாட்டு மற்றும் 12 சர்வதேச உரித்துப்பெற்ற வர்த்தக வங்கிகளையும் (LCB) ஏழு உரித்துப்பெற்ற விசேட வங்கிகளையும் (LSB) கொண்டு விளங்குகின்றது. இந்த நிறுவனங்கள், பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வங்கிகளாக, அவற்றின் சொத்து அளவுகளை கருத்திற்கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய முதன்மை ஆறு வங்கிகள் (ரூ. 500 பில்லியனுக்கும் மேற்பட்ட சொத்துகளை கொண்டுள்ளவை) சொத்துகள், கடன்கள், முன்பணங்கள் மற்றும் வைப்புகள் ரீதியாக ஆதிக்கத்துடன் கூடிய சந்தைப்பங்கினை கொண்டுள்ளன. இலங்கையின் நிதிச் சேவைகள் துறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7% பங்கினைக் கொண்டுள்ளதுடன் நிதி இடைமுகமாக செயற்பட்டவாறு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சகாயமளிக்கும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அரசாங்கத்தின் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் தொடர்புபட்டதாக, வங்கித் தொழிற்துறையானது, நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதில் முக்கிய பங்கினை வகித்தவாறு, நாடளாவிய ரீதியில் அனைவருக்குமான அணுக்கம் மற்றும் கட்டுப்படியான நிதித் தீர்வுகள் ஆகியவற்றினை அளிக்கின்றது.

வளர்ச்சி

வங்கித் தொழிற்துறையின் மொத்த சொத்துகள், 2016ம் ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 10.8% வளர்ச்சி உடன் ஒப்பிடுகையில், 2017ம் ஆண்டின் இறுதியில் 13.77% உடன் ரூ. 10.3 ட்ரிலியன்களாக வளர்ச்சியுற்றது. இது கடன் மற்றும் முதலீட்டு தொகுப்புகளை விஸ்தரித்தல் ஊடாகவே சாத்தியமானது. வங்கித்துறையின் மிகப்பெரும் சொத்து அடிப்படையாக திகழும் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள், 16.2% ஆல் விரிவடைந்தது. இது போக்குவரத்து, வர்த்தக நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி துறை ஆகியனவற்றுக்கு, அதியுயர் சந்தை வட்டி வீதங்களுக்கு மத்தியிலும் பாரியளவில் வழங்கல்களை அளித்ததன் மூலமே சாத்தியப்பட்டது.

இலாபத்தன்மை

வங்கித் தொழிற்துறையானது, 2017ம் அண்டுக் காலப்பகுதியில் (வரிக்கு பிந்திய) இலாபமாக ரூ. 138.9 பில்லியன்களை பதிவுசெய்தது. இது 2016ம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.2% அதிகரிப்பாகும். வலுவான நிகர வட்டி வருமானம் மற்றும் குறிப்பிடத்தக்க முதலீட்டு ஈட்டங்கள் ஆகியன இணைந்து, சிறப்பான செயற்திறனை அளிப்பதான முதன்மை காரணிகளாக விளங்குகளின்றன. இந்த பிரிவின் சொத்துக்ள் மீதான வருவாய்கள் (ROA) மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய்கள் (ROE) ஆகியன முறையே 2.0% மற்றும் 17.6% ஆக நிறைவுற்றன.

சொத்து தரநிலை

செயற்பாடற்ற கடன்கள் விகிதமானது, 2016ம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2.6% ற்கு மாறாக, வங்கிகள் சுவீகரித்துக்கொண்ட மீளப்பெறல் அளவுகோல்கள் மற்றும் அதியுயர் கடன் வளர்ச்சி தொகுப்பு ஆகியவற்றினால் முடுக்கிவிடப்பட்ட நிலையில் 2017 டிசம்பர் இறுதிப்பகுதியில் 2.5% ஆக குறைவடைந்தது. செயற்பாடற்ற கடன்களானது ரூ. 18.4 பில்லியனில் இருந்து ரூ. 160.7 பில்லியனாக அதிகரித்தமையும் குறிப்பிடத்தக்கது.

நிதி நிலை

நிதி பெறுகைக்கான முக்கிய ஆதாரமாக விளங்கும் வைப்புகள், வங்கித்துறையின் மொத்த சொத்துகளில் 71.9% இனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. வங்கித் துறையின் மொத்த வைப்பு தளமானது, தவணை வைப்புகள் ஊடான மேல்நோக்கிய வட்டி வீச்சுப் போக்கு நிலவிய நிலையில், 2017ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் 17.5% விஸ்தரிப்புடன், ரூ. 7.4 ட்ரில்லியன்களாக உயர்ந்தது. துறைசார் கடன்கள் 5.3% வீழ்ச்சியுடன் ரூ. 1.6 ட்ரில்லியன்களாக திகழ்ந்தது. இது ரூபாய் கடன்களில் வீழ்ச்சி மற்றும் இலங்கை மத்திய வங்கியானது கொள்கை விகிதங்களை 25 bps இனால் அதிகரிக்கும் வகையில் அறிக்கையிட்டமை ஆகியன மூலமே நேர்ந்தது.


மூலதனவாக்கம்

உயர் சதவீதத்துடன் கூடிய, தரமிக்க முதலீட்டினை கொண்டிருத்தல் குறித்த வங்கித்துறை மீதான அதீத அழுத்தம், புதிய பாசல் III இன் வழிகாட்டலை அமுல்படுத்தியதுடன், மேலும் அதிகரித்துள்ளது. வங்கித் துறையின் போதுமானளவு மூலதன மட்டங்கள் அதன் கடன் விஸ்தரிப்பினால் வீழ்ச்சியடைந்த போதும், குறித்த வருடத்திற்குள் எழக்கூடிய எந்தவொரு பாதகமான அதிர்ச்சிகளையும் எதிர்கொள்ளும் வகையில் போதுமானளவு மூலதன மட்டங்களை பேணுகின்றது. அடுக்கு 1 இடர் நிறையேற்றப்பட்ட போதுமை விகிதம் (RWCAR) மற்றும் ஒட்டுமொத்த RWCAR ஆகியன 2016ம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.6% மற்றும் 15.6% விகிதங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் முறையே 12.4% மற்றும் 15.2% ஆக விளங்குகின்றது.


திரவத்தன்மை

வங்கித்துறையின் திரவத்தன்மை நிலைமையானது, ஆரோக்கியமான மட்டத்தினை பேணியவாறு வந்ததுடன், சட்டபூர்வ திரவத்தன்மை சொத்துகள் விகிதமானது (SLAR), நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கோரிக்கையான 20% இற்கு மேலதிகமாக 27.2% ஆக பேணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தவிர மொத்த சொத்துக்களுக்கு எதிரான திரவத்தன்மை மிகுந்த சொத்துகள் விகிதம் 28.3% ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

சொத்து மற்றும் கடன்களின் வளர்ச்சி



வைப்புகள் மற்றும் கடன் பெறல் வளர்ச்சி



எதிர்கால கண்ணோட்டம்

இலங்கை மத்திய வங்கியானது வங்கிகளின் வலுவினை உறுதிப்படுத்தும் வகையிலும், வாடிக்கையாளர்களை பாதுகாக்கும் நோக்குடனும், கோட்பாட்டு மறுசீராக்கல் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றின் ஊடாக ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு சட்டகத்தினை மேலும் பலப்படுத்தியுள்ளது. பாரிய ஒழுங்கமைப்பு தேவைகள், வங்கியியலின் செலவீனத்தினை அதிகரிக்கும் என்பதுடன், கடன் வளர்ச்சியையும் தாமதிக்க செய்யும்.

இலங்கை மத்திய வங்கியின் திட்ட வரைவு 2018: முதன்மை முனைப்புகள்

- இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவனமானது, 2018 ஜனவரி 01ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இ.நி.அ.நி. SLFRS 9 (நிதியியல் கருவிகள்) விதிமுறைகளை அளித்துள்ளது. IFRS 9 இனை நடைமுறைப்படுத்துகையில் மேற்கொள்ளப்படும் பதிவழிப்பு பரிசோதனைகளுக்கிணங்க "நேரிட்ட இழப்பு மாதிரி" க்கு மாற்றாக "எதிர்பார்த்த இழப்பு மாதிரி" இனை ஏற்றுக்கொள்வதானது, வங்கிகளின் மதிப்பீட்டு இழப்பு ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது.

- பாசல் III இனை முற்றாக நடைமுறைப்படுத்துமிடத்து, உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட முக்கிய வங்கிகளின் (DSIBs) ஆகக் குறைந்த மூலதன போதுமை விகிதமானது, 2019 ஜனவரி மாதம் முதற்கொண்டு 14% ஆக திகழும். ஆகக்குறைந்த முதலீட்டு தேவைப்பாடுகள் அதிகரிக்கப்படுமிடத்து, வங்கிகள் அழுத்தங்களுக்கு உட்படக்கூடும். இலங்கை மத்திய வங்கியானது, செயற்திறனும், சக்தியும் நிறைந்த வங்கித்துறையின் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல் குறித்து நோக்கிய நிலையில், உரித்துப்பெற்ற வர்த்தக வங்கிகள் (LCB) மற்றும் உரித்துப்பெற்ற விசேட வங்கிகள் (LSB) ஆகியவற்றின் ஆகக்குறைந்த முதலீட்டு கோரிக்கைகளை அதிகரித்துள்ளது. ஆகக்குறைந்த முதலீட்டு தேவையினை மேம்படுத்தலானது, பாசல் III சட்டகத்தினை இலங்கையிலுள்ள வங்கிகள் பின்னடைவு ஏற்படுவதிலிருந்து தவிர்த்தலை வலுப்படுத்தும் வகையில் அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும். அத்துடன் இந்த அமுல்படுத்தலானது, வங்கித்துறையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கலாம். இதற்கமைவான, 2020ம் ஆண்டு அமுலுக்கு வரும் வகையில் ஏற்கனவே செயற்படும் வங்கிகள் பின்வருமாறு ஆகக்குறைந்த முதலீட்டு கோரிக்கையினை கொண்டிருத்தல் வேண்டும்:

தற்போது செயற்படும் வங்கிகளுக்கான ஆகக்குறைந்த முதலீட்டு தேவை

வங்கி வகை	ஆகக்குறைந்த முதலீட்டு தேவை ரூ. பில்.
உள்நாட்டு LCBs	20.0
உள்நாட்டு LSBs	7.5

- நேரடி வரிகளை மேம்படுத்தும் நோக்குடன் புதிய உள்நாட்டு இறை வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள அநேகவரிச் சலுகைகள் அகற்றப்பட்டமை மற்றும் அரச பிணைகள் மீதான உத்தேச வரி நீக்கம், கடன் மீள்கொடுப்பனவு அறவீடுகள் மீதான 0.02% வரிவிதிப்பு ஆகியன வங்கிகளின் வரிப்பொறுப்பினை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- புதிய வெளிநாட்டு பரிவர்த்தனை நிர்வாக சட்டகத்தின் அறிமுகமானது, பொருளாதாரத்தில், முதலீட்டு பரிவர்த்தனை மீது தளர்வினை அளிக்கும்

- இலங்கை மத்திய வங்கியானது, பணதூய்த்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நிதியீட்ட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை, நிதி அறிவாற்றல்சூழலை உருவாக்கி, வலுப்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கின்றது.

- செயற்திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை மிகுந்த பணவீக்கத்தினை இலக்காக கொண்ட கட்டமைப்பானது (FIT), 4–6% வரையான பணவீக்க இலக்குடன் கூடிய பொருளாதாரத்தினை, விலை நிலைத்தன்மையினை பாதுகாக்கும் நோக்குடன் முன்னெடுக்கின்றது.

- முன்னர் உள்நாட்டு வங்கி பிரிவின் (DBU) சொத்துகள் மீது இருந்தவாறன்றி, வங்கியின் மொத்த சொத்துகளை அடிப்படையாக கொண்ட மாற்றத்தினை அடிப்படையாக கொண்டு இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நாணய கடன்கள் மீதான எல்லைகளை நெறிப்படுத்தும் வகையில் நிதியீட்டம் வழியிலான பரிவர்த்தனைகள் மீது ஏற்கனவே விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

- கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்குடன், அளவீடுகள் மற்றும் நடை முறைப்படுத்தல்களை ஏற்றுக் கொண்டு, அதனை முன்னெடுத்து, காசு மீது தங்கியிராத சமூகத்தினை கட்டியெழுப்புதல்.

- அரசிற்கு உரித்தான நிறுவனங்களை (SOEs) சீர்திருத்தி எதிர்காலத்தில் நேரிடக்கூடிய நிதி இழப்புகள் நேராது, அரசாங்கம் மற்றும் அரச வங்கிகளின் ஐந்தொகை மீது நேர்மறைதாக்கத்தினை அளிக்கும், முக்கிய அரசிற்கு உரித்தான நிறுவனங்களை பாதுகாத்தல்.

GRI 102-40


அக்கறையுடைய தரப்பினர்

எமது அக்கறைதாரர்களின் ஈடுபாடு செயல்முறைகள்

பொறுப்பான, பல்வகைமை பொருந்திய நிதி வழங்குனரான எமக்கு அக்கறைதாரர்களுடனான உறவுமுறை மிக முக்கியமானதாகும். நிலையான வளர்ச்சியினை அடைவதன் மூலமாக நீண்டகால பெறுமதியை எமது அக்கறைதாரர்களுக்கு ஏற்படுத்துவதுடன், அவர்களது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக சமூகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் நீண்டகால வர்த்தக மூலோபாயங்கள் எமது அக்கறைதாரர்களின் நலன்களுடன் எப்பொழுதும் இணைந்ததாகவே இருக்கும். செயல்திறன்மிக்க அக்கறைதாரர்களின் ஈடுபாடு செயன்முறையானது அவர்களுடன் நீடித்த உறவினை உருவாக்குவதுடன் அவர்களுக்கு சிறந்த அக்கறைதாரர் அனுபவத்தினையும், சேவையும் வழங்குகின்றது. அக்கறைதாரர்களுடனான கருத்தாடல் மூலமாகப் பெறப்பட்ட பின்னூட்டங்கள், ஒத்துழைப்புக்கள் இன்னும் பிற விடயங்கள், (கீழே பட்டியலிடப்பட்டுள்ளன) எமது வணிகத்தின் சமூக-சுற்றுச்சூழல் மற்றும் ஆளுகை இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை மதிப்பிட்டு அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உதவுகிறது.

எமது அக்கறைதாரர்களின் ஈடுபாட்டு செயன்முறையின் மூன்று கட்டங்கள்:



அக்கறைதாரர்களை இனம்காணல்


தே.சே. வங்கியில் பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்கள் அக்கறை வைத்திருக்கின்றன. எமது செயற்பாடுகள், மூலோபாயம், நடத்தை மற்றும் வணிக நடவடிக்கைகளினால் ஈர்க்கப்பட்ட குழுக்கள் மற்றும் தனிநபர்கள் எமது பொருட்கள், சேவைகள் மற்றும் செயல்பாடுகள் மூலமாக எங்கள் அக்கறைதாரர்களாக உள்ளார்கள். அவர்களுடனான உறவு மற்றும் பராமரிப்பின் அடிப்படையில் அவர்களை கீழ்வரும் ஆறுவகையாக வகைப்படுத்த முடியும்.

பங்குதாரர்	வாடிக்கையாளர்கள்	ஊழியர்கள்	ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் அரச நிறுவனங்கள்	வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள்	சமூகம் மற்றும் சூழல்

GRI 102-42

அக்கறைதாரர்களை இனம்காணலும் முன்னுரிமை வழங்கலும்

எமது அக்கறைதாரர்களுக்கு வங்கி விவகாரங்களில் அவர்களின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமை வழங்குகிறோம். அவ்வாறே, அவர்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே வருவதுடன், அதன் அடிப்படையில் அவர்களுக்கான பெறுமதியை உருவாக்குவதுடன் முன்னுரிமை அடிப்படையிலுள்ள பிரச்சனைகளை சமப்படுத்தவும் செய்கிறோம். மேலும், மேண்டலோஸ் வரைபுக்கு அமைவாக அக்கறைதாரர்களை நாம் இனம்கண்டு கொள்ளுகிறோம்.



ஈடுபாட்டு வழிமுறைகள்

அக்கறைதாரர்களுடனான ஈடுபாடு என்பது எமது வணிகம், எமது மூலோபாயம், எமது வருடாந்த அறிக்கையிடல் செயற்பாடு, மற்றும் நாடெங்கும் முன்னெடுக்கப்படுகின்ற எமது செயற்பாடுகளின் முக்கிய அங்கமாகும். உள்ளூர், பிராந்திய மற்றும் நாடளாவிய குழுக்களுடனான கூட்ட கலந்துரையாடல்கள் மூலமாக எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களின் செயல்பாடுகள் நிர்ணயம் செய்யப்படுகிறது. எமது பல்வேறு அக்கறைதாரர்களிடமும் கருத்துக்களை கேட்பது, அவர்களுடன் திறந்த உரையாடலை மேற்கொள்வது, அவர்களின் கருத்துக்களுக்கு பதிலளிப்பது என விடாமுயற்சியுடன் செயல்படுவது எங்களுக்கு மிகவும் முக்கியமாகும்.

எமது ஒவ்வொரு அக்கறைதாரர் குழுக்களினதும் முக்கிய விடயங்களின் சுருக்கம் மற்றும் 2017 இல் எமது அக்கறைதாரர்களின் ஈடுபாட்டினை வெளிப்படுத்தும் அட்டவணை கீழே:

 **வாடிக்கையாளர்**	தனிநபர்கள் நிறுவனங்கள் பெரு நிறுவனங்கள் முயற்சியாளர்கள்
 **ஊழியர்கள்**	நிரந்தர ஊழியர்கள் ஒப்பந்த ஊழியர்கள் வெளிப்புற ஊழியர்கள் பணியாளர்கள்
 **பங்குதாரர்**	இலங்கை அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நிதியமைச்சு
 **வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குபவர்**	வழங்குனர்கள் பயன்பாட்டு சேவை வழங்குனர்கள் வேறு சேவை வழங்குனர்கள்
 **ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் அரச நிறுவனங்கள்**	இலங்கை மத்தியவங்கி அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு (MPED) இறைவரி திணைக்களம் கணக்காய்வாளர் திணைக்களம் ஏனைய அரச மற்றும் தொழில்முறை நிறுவனங்கள்
 **சமுதாயம் மற்றும் சூழல்**	சமுதாயம் அழுத்தக்குழுக்கள் ஊடகம்

ஈடுபாட்டு வழிமுறைகள்	ஈடுபடும் நடவை										தேவையும் விருப்பங்களும்
	தேவைக்கேற்ப	தொடர்ச்சியாக	இடைவெளியில்	ஆண்டுதோறும்	காலாண்டு	மாதந்தம்	3 வருடத்துக்கு ஒருமுறை	வெளியிடப்படும்போது	தொடர்ந்து		
தனிநபர் கூட்டங்கள்	●										சிறந்த வாடிக்கையாளர் சேவை, நாடு முழுவதுமான அணுகல் சேவை, குறைந்த சிக்கல் தன்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட இலகு வசதிகள், புதுமையான நிதி சேவைகள்/தீர்வுகள், பணமதிப்புக்கேற்ப, பொறுப்பான வங்கி சேவைகள், இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புணர்வு, முதலீடுகளுக்கான பாதுகாப்பு, அணுகல் மையங்களின் சுற்றுச்சூழல்.
வாடிக்கையாளர் அணுகல் மையம்	●										
அழைப்பு மையம்	●										
நிறுவன நிகழ்வுகள்	●										
நிறுவன இணையம்	●										
வாடிக்கையாளர் விழிப்புணர்வு திட்டங்கள்		●									
சமூக பொறுப்புடைமை நடவடிக்கைகள்	●										
விளம்பர பிரச்சாரங்கள்			●								
அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள்	●										
சமூக ஊடகங்கள்		●									
முறையான கூட்டங்கள்			●								கவர்ச்சிகரமான ஊதியம்,தொழில்முறை வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான பயிற்சி வாய்ப்புகள், அனுபவமிக்க செயல்திறன் மற்றும் மேம்பாடு, செயல்திறன் கொண்ட செயல்திறன் மேலாண்மை, வேலை மற்றும் வாழ்க்கை சமநிலை, பாதுகாப்பானதும் நேர்மறையற்றதுமான ஊக்குவிப்புத் தன்மைகொண்ட பணி சூழல், குறை தீர்க்கும் பொறிமுறை, கூட்டு பேரம், அங்கீகாரம் மற்றும் வெகுமதி, வேலைப் பாதுகாப்பு மற்றும் வெற்றிகரமான திட்டமிடல்.
முறைசாரா/அவசர கூட்டங்கள்	●										
மீளாய்வு கூட்டங்கள்	●										
செயல்திறன் மதிப்பீடுகள்			●								
உள்ளக செய்தித்தாள்					●						
சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள்	●										
பயிற்சி திட்டங்கள்		●									
அக இணையம்		●									
நலன் நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகள்		●									
கூட்டு ஒப்பந்தங்கள் மீதான பேச்சுவார்த்தைகள்							●				
ஆண்டறிக்கை				●							நிலையான செயல்திறன், நிலையான எதிர்கால வளர்ச்சி மூலோபாயம், அரச பிணையங்கள் மற்றும் திட்டங்களில் முதலீடு, நிறுவன ஆளுகை, இடர் மேலாண்மை, விதிமுறைகளுடன் செயற்படல், அரசாங்கத்திற்கு பங்களித்தல்.
நிதி அறிக்கைகள்					●						
இணையதளம்		●									
ஊடக வெளியீடுகள் மற்றும் பத்திரிகை மாநாடுகள்	●										
கொள்வனவு திட்டம்				●							ஒப்பந்த நடைமுறைகளை சரியான நேரத்தில் வெளியிடல், சரியான நேரத்தில் கொடுப்பனவை செய்தல், கொள்முதல் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, கொள்முதல் செயல்பாடுகளை ஆவணபடுத்தல், எதிர்கால வர்த்தக வாய்ப்புகள், நேர்மையான மற்றும் பொறுப்பான நீண்டகால உறவை கட்டியெழுப்பல், பரிவர்த்தனையை இலகுபடுத்தல், நிலையான வர்த்தக உறவுகளை பேணுதல்.
கொள்வனவு செயல்முறை	●										
வழங்குனர்கள்/சேவை வழங்குனர்களுடனான கூட்டங்கள்	●										
கள ஆய்வுகள்	●										
குத்தகை அறிவிப்புக்கள்	●										
பொருட் செயல்விளக்கம்	●										
தகவல்/அறிவிப்புகள் வெளியீடு	●										
வழிகாட்டல் மற்றும் சுற்றறிக்கைகள்						●		●			வங்கியின் செயலாற்றுகை, சட்ட மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குதல், தொழில் மற்றும் ஒழுங்குமுறை குழுக்களுக்கு பங்களித்தல், பொறுப்புணர்வுடன் வரி செலுத்துதல், நிறுவன ஆளுகை நடைமுறைகள், இடர் மேலாண்மை, நிலையான வணிக நடைமுறைகள் ஆகியவற்றுடன் இணங்கும் அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள்.
நிதி அறிக்கைகள்											
சட்டரீதியான பரிசோதனை			●								
ஒழுங்குமுறை அறிக்கையிடல்	●										
ஒழுங்குபடுத்துநர் பிரதிநிதிகளுடன் நேர்காணல்கள் மற்றும் சந்திப்புகள்	●										
தொழில் மன்றங்கள் மற்றும் கூட்டங்கள்	●										
தளக் கண்காணிப்பு	●										
சேவை வழங்கும் மார்க்கங்கள்										●	சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள், வேலை வாய்ப்புகள், நிதி ஆதாயம், சமூக அபிவிருத்தி, நெறிமுறை வணிக நடைமுறைகள்
நிறுவன இணையம்										●	
அழைப்பு மையம்										●	
பத்திரிகை வெளியீடுகள், மாநாடுகள் மற்றும் ஊடக பிரச்சாரங்கள்	●										
அனுசரணையாளர்கள்	●										
பொது தொடர்பு நடவடிக்கைகள்	●										
அரச உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளித்தல்	●										
சமூக பொறுப்புடைமை நடவடிக்கைகள்	●										

அக்கறைதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குதல்

சமூக – பொருளாதார சுற்றுச்சூழலில் தே.சே.வ ஒரு அங்கமாகவுள்ளதுடன், எம்மை சார்ந்திருக்கும் அக்கறைதாரர்களையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம் எங்கள் அக்கறைதாரர்களுடன் வலுவான உறவுகளை பேணுவதுடன் அவர்களின் அக்கறையையும் அங்கீகரிக்கின்றோம். பரஸ்பர நன்மைகளை வழங்கக்கூடிய பாதிப்பை ஏற்படுத்தாத உறவுகளை வளர்ப்பதெனவும் உறுதியளிக்கிறோம்.

	ஏன் இவை முக்கியமானவை		எவ்வாறு நாம் உருவாக்குகிறோம்		
வாடிக்கையாளர்கள்		எங்கள் வணிகத்தின் மையமாக வாடிக்கையாளர்கள் உள்ளதுடன் வாடிக்கையாளர் சார்ந்தவொரு இலாபகரமான மற்றும் நிலையான வர்த்தகத்தை எட்டுவதற்கான அடிப்படையை வழங்க முடிகிறது. வாடிக்கையாளர்கள் வழங்கும் நிதியாதாரத்தின் பிரகாரம் எம்மால் கடன் வசதியை வழங்க முடிகிறது.	சேமிப்புக்களை நாம் பாதுகாக்கும் அதேசமயத்தில் அவை முதலீட்டுடன் சேர்ந்து வருமான வளர்ச்சியை தொடர்ந்து கொண்டிருக்கும்.	அதிக திறனுள்ள வழிகளின் ஊடாக, குறைந்த மற்றும் அதிக வசதியான வங்கித் தேர்வுகளை வழங்குதல்.	வாடிக்கையாளர்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் புதுமையான தீர்வுகளை உருவாக்குதல்.
ஊழியர்கள்		திறன்கள், அனுபவம் கொண்ட எங்கள் ஊழியர்கள் வணிகத்தின் தினசரி நடவடிக்கைகளைகொண்டு செல்ல எடுக்கும் செயல்பாடுகள் வாடிக்கையாளர் திருப்தி அளவுடன் நேரடியாக தொடர்புபடுவது தொடர்பில் எவ்வாறு உணர்கிறார்கள்.	நாங்கள் செயல்படும் சமூகத்திலிருந்தே மக்களை வேலைக்கமர்த்தல்.	கவர்ச்சிகரமான ஊதியம் மற்றும் அவர்கள் பெறுமதி சேர் செயல்பாடுகளுக்கு வெகுமதி வழங்குதல். திறன் பயிற்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள். ஊக்குவித்தலும், வேலையை தொடர்வதற்கான உந்துதலும்.	
பங்குதாரர்கள்		இலங்கை அரசாங்கமே ஒரே ஒரு பங்குதாரராக இருப்பதனால், பொருளாதார பின்னடைவு மற்றும் நிதி ஸ்திரத்தன்மை ஆகியவற்றுக்கான பிரதான பங்களிப்பை எதிர்பார்க்கிறது.	அரச பாதீடுகள். நிறுவன வரிகள், ஊழியர்களின் PAYE வரி ஆகிவற்றின் மூலமாகவும் அரச பினையங்களில் முதலீடு செய்வதன் மூலமாகவும் பங்களிப்பு செய்கின்றோம்.	வளர்ச்சியடையும் வருமானத்தினை நிலையான வருமானமாக உருவாக்குதல் (வெளிப்புற தாக்கங்களுக்கு உட்பட்டு), இட நேர்வுகளை நிர்வகித்தல் மற்றும் செலவீனங்களை நிர்வகித்தல் ஆகியவற்றின் மூலமாக எங்கள் செலவீன அடிப்படையை உச்சப்படுத்துகிறோம்.	உறுதியான வங்கியியலை பராமரிப்பதுடன், பாதுகாப்பானதும் , உறுதியானதுமான வங்கி செயல்பாடுகள் மூலமாக நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் இடநேர்வுகளையும் குறைகின்றோம்.
கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள்		வங்கி வணிகத்துக்கான அனுமதிபத்திரத்தினை வழங்கியுள்ளார்கள்.	பாதுகாப்பான மற்றும் நிலையான வங்கியியல் முறையை செயல்படுத்தக்கூடிய நிலையான வங்கி நடை முறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாக சேவையை வழங்குதல்.	கட்டுப்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமைவாக, அமைப்புரீதியான இடநேர்வை குறைத்தல். வங்கியில் வாடிக்கையாளர் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதுடன் நிறுவன நற்பெயருக்கு ஏற்படக்கூடிய	இடநேர்வை குறைத்தல். சரியான நேரத்தில் மற்றும் விரிவான ஒழுங்குமுறை தகவல்களை வெளிப்படுத்துதலும் வழங்குதலும்.
வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குபவர்		எங்கள் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான உபகரணங்கள் மற்றும் நிபுணத்துவ ஆதரவு சேவைகளை வழங்குகிறது. பொருட்கள் மற்றும் சேவைகளை வினைத்திறன் வாய்ந்தவகையில் வழங்குவதில் தாக்கம் செலுத்துகிறது.	வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் ஆரோக்கியமான, பரஸ்பர பயன்மிக்க உறவை கொண்டிருத்தல்.	வழங்குனர்களுடன் நேரடித்தொடர்பை எப்போதும் கொண்டிருப்பதுடன், குறைந்த காலத்திற்குள் ஒப்பந்தம் மற்றும் பணம் ஆகிவற்றினை வழங்குதல்.	
சமுதாயம் மற்றும் சூழல்		சமூகத் தன்மை என்பது நிலைத்திருத்தல் மற்றும் வெற்றியை அடிப்படையாகக்கொண்டது, மேலும் இது நமது நோக்கம் மற்றும் தூரநோக்கத்துக்கு அடிப்படையாக இருக்கிறது. நீண்டகாலம் வர்த்தகம் நிலைத்திருக்கக்கூடிய சாத்தியத்தன்மையை உறுதிப்படுத்துவதுடன், நாம் பயணித்து கொண்டிருக்கும் சமூகங்களுக்கும் சூழலுக்கும் சாதகமான பங்களிப்பை வழங்குவதை உறுதிபடுத்துவோம்.	பொருளாதார பரிமாற்றத்தின் முதுகெலும்பாக செயல்படும் பரிவர்த்தனைகளுக்கு உதவுதல்.	நிலையானதும், நிரந்தரமுமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமாக சமுதாயத்தின் வளர்ச்சியை உறுதிபடுத்துவதுடன் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் உதவுதல்.	திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான தயாரிப்புகளையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துதல்.

2017ல் எவ்வாறு பெறுமதி உருவாக்கப்பட்டது				2018 தொடர்பான கண்ணோட்டமும் அதற்கு அப்பாலும்	
	183.7பில்லியன் நீடிக்கப்பட்ட புதிய கடன். நாம் 60.2 பில்லியன் வட்டி வருமானத்தினை சேமித்தவர்களுக்கு வழங்கியுள்ளோம். எங்கள் வங்கிகிளைகளை 253 ஆக உயர்த்தியுள்ளதுடன், அவற்றின் மூலமான சேவைகளை	இலகுபடுத்தியுள்ளதுடன் இணையவங்கி மற்றும் ATM மூலமாக பணவைப்பையும் ஏற்று கொள்ளுகிறோம். Isaver என்கிற புதிய நுட்பத்தின் ஊடாக வாடிக்கையாளர்களின் நிதியியல் ரீதியான செயல்பாடுகளுக்கும், பொருத்தமான பொருட்களை கையாளவும் வழிவகுத்துள்ளோம்.	CEFT ணூடாக கொடுப்பனவு தாமதங்களை குறைத்தல். Lanka pay தொடர்பிணூடாக வாடிக்கையாளர் அணுக்கத்தை அதிகரித்தல்.	எமது வாடிக்கையாளரை மையப்படுத்திய மூலோபயத்தின் பிரகாரம், வாடிக்கையாளர்களுக்கு ஏதுவான, வினைத்திறன்வாய்ந்த, புதுமையான மற்றும் ஏனைய போட்டியாளர்களுடன் ஒப்பிடுமிடத்து சிறந்ததான விலையிடல் பொருட்களையும், சேவைகளையும் வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்.	நாம் வாடிக்கையாளர்களின் திருப்தியையும், அனுபவத்தையும் அதிகரிக்கும் வகையில் எங்களது ஆய்வு திறமைகளையும், பாவனையாளர் அனுப்வம்சார்ந்த திட்டங்களையும் மேம்படுத்த எதிர்பார்ப்பதுடன், வினைத்திறன் வாய்ந்த சந்தைப்படுத்தல் பிரச்சார உத்திகளை பயன்படுத்தவும் எதிர்பார்க்கிறோம்.
	216 புதிய மற்றும் நிரந்தர ஊழிய வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம். 6.9 பில்லியன் ரூபாவை ஊழியர்களுக்கு ஊதியமாகவும் இன்னபிறகொடுப்பனவாகவும் வழங்கியுள்ளோம். இது பகிரப்பட்ட மொத்தநிதியில் 6.4% மாகும்.	ரூ 34.4 மில்லியன் பயிற்சி மற்றும் ஊழியர் திறன் அபிவிருத்திக்காக முதலிடப்பட்டுள்ளது. ஊழியப்படையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 58%மாக அதிகரித்துள்ளது. 30 வயதுக்கு குறைந்த இளைய சமுதாயத்தின் 38% மானவர்கள்	டிஜிட்டல் சார்ந்த மாற்றத்துக்கு உறுதுணையாக அமைந்துள்ளார்கள்.	ஊழியர் அனுபவம் மற்றும் அவர்களது வினைத்திறனை தொடர்ச்சியாக அதிகரிப்பதில் நாம் கவனம் செலுத்துவதுடன், இதனை வினைத்திறன்வாய்ந்த குழு மூலோபாயங்கள் மூலமாகவும் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.	
	அரச வரிவருமானத்திற்கும் அறவீட்டுக்கும் 8.3 பில்லியன் பங்களிப்பு செய்துள்ளோம். இது மொத்த பகிர்தலில் 7.7%மாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கம் ரூ. 5.1 பில்லியனை பங்கிலாபமாக பெற்றுக்கொண்டுள்ளது.	வரிக்கு முன்னதான இலாபம் 5%மாக அதிகரித்துள்ளது. மொத்த சொத்துக்களின் பெறுமதி ஒரு திரில்லியன் ரூபாவை தாண்டியுள்ளது. செலவுக்கும் வருமானத்துக்குமான வீதம் 38%மாக குறைவடைந்துள்ளது.		உறுதியானதும், இலாபகர மானதுமான வணிகமான நாம் தொடர்ச்சியாக எமது ஊழியர்கள் மற்றும் செயல்பாடுகளில் முதலீடு செய்ய எதிர்பார்க்கிறோம். இது நிறுவனத்தின் பெறுமதியை அதிகரிப்பதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் சமுகத்தினையும் விசலாமாக்க உதவக்கூடும்.	நாம் இணங்குவித்தல் மற்றும் இடநேர்வு செயல்பாட்டு கலாசாரம் மூலமாக தொடர்ச்சியாக நிலையான செயல்திறன்மிகு பெறுபேறுகளை தொடர்கிறோம்
	AAA (lka) பிட்ச் ரேட்டிங் லங்கா தரப்படுத்தல் மதிப்பீட்டை கடந்த 15 வருடங்களாக தொடர்ச்சியாக கொண்டுள்ளது. வரிப்பங் களிப்பாக ரூ. 7.9 பில்லியன் உள்ளது. 60%க்கு மேற்பட்ட முதலீட்டினை அரச பிணையங்களில் செய்ததன் மூலமாக அரசுக்கு தேவையான நிதியை வழங்கியுள்ளோம்.	விதிகளுக்கு இணக்கமான இடநேர்வு தொடர்பில் பூச்சிய சகிப்புத்தன்மை அணுகுமுறையை கடைப்பிடித்து வருகின்றோம். எமக்கான அனைத்து பெறுபேறுகளிலும், எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைய முயற்சி செய்துள்ளோம். பாசல் III தேவைப்பாட்டின் பிரகாரம் அடுக்கு Iல் 11.93% மூத்தினை கொண்டுள்ளோம். இது இலங்கை மத்திய வங்கி	குறிப்பிட்டுள்ள 7.75% மூத்தினை விட அதிகமாகும். அத்துடன் திரவத்தன்மை பாதுகாப்புவிகிதத்திலும் 376.18% என்கிற நிலையை கொண்டுள்ளோம். இதுவும், இலங்கை மத்தியவங்கியினால் பிரேரிக்கப்பட்ட குறைந்தது 80% இலக்கினை விடவும் அதிகமானது என்பதுடன், 2018ல் NSFR விகிதத்தினை 100%மாக அடைய எதிர்பார்த்துள்ளோம்.	நாம் எதிர்காலத்தில் கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கத் தேவைகளை நிறைவேற்றுவோம்.	நாம் அரசாங்கத்துடனும், ஒழுங்கு முறையை நடை முறைபடுத்தும் நிறுவனங்களுடனும் வெளிப்படையாக இருக்க முயற்சி செய்வதுடன், அதற்கு மூலதன நிர்வாகம், இடநேர்வு மற்றும் இணக்க மூலோபாயம் ஆகியவற்றினை பயன்படுத்த முயற்சிக்கிறோம்.
	மின்சாரம், நீர் பயன்பாடு மற்றும் தொலைபேசி மற்றும் இணைய பாவனைக்காக 295 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளோம். 100% மான சேவை வழங்குனர்கள் உள்நாட்டவர்களாகும்.			பொறுப்புணர்வு வாய்ந்த வங்கியாக இருப்பதன் மூலமாக வழங்குனர்களுடன் இணைந்து சிறப்பாக செயலாற்றும் ஒரு அமைப்பாக இருப்பதுடன், அவர்களுடன் மிகச்சிறந்த உறவை தொடர்ந்து பேணுவோம்.	
	உட்கட்டமைப்பு விருத்திக்கான நிதிப் பொறுப்பாக சாதனைமிகு ரூ. 19.14 மில்லியன் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 6486 வீடுகளை அமைப்பதற்கான நிதி எங்களால் வழங்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் மின்சார பயன்பாட்டை குறைத்து சூரியசக்தி மூலமான மின்னை பயன்படுத்துவதனை ஊக்குவிக்க, அதுசார் கடன் திட்டம்	உருவாக்கப்பட்டு, அதனுடாக இதுவரை 902 கடன்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சமூகம்சார் நிகழ்வுகளுக்கும், திட்டங்களுக்கும் சுமார் 20.4 மில்லியன் ரூபா முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. 135ம் பக்கத்தில் மேற்கூறிய நிதிக்கான சமூகம்சார் திட்டங்கள் மற்றும் அதன் நலன்கள் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும். NSB Agroforestry	எனும் மரநடுகை திட்டத்தில் நாடு பூராகவும் 25,000 மரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.	சமூகத்தில் பொறுப்புக்கூறக்கூடிய பிரஜையாக நாம் உள்ள நிலையில், நமது வளங்களை சமூகத்துடன் இணைந்ததாக சமனிலை தவறாது பயன்படுத்தும் பொறுப்பு நமக்கு உள்ளது.	நாம் தொடர்ச்சியாக பேண்தகு முறையிலான நடைமுறைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவதுடன், சமூகத்துடன் இணைந்த வங்கி மூலோபாயங்களை முன்னெடுக்கவும் எதிர்பார்க்கிறோம்.


GRI102-11 GRI 103-1, 2, 3

பொருண்மையான விடயங்கள், இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்

இந்தப் பகுதி தே.சே. வங்கியின் முகாமைத்துவ அணுகுமுறை தொடர்பிலான கட்டமைப்பு, சமூக பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் வெளிப்புற சூழலின் தாக்கம் ஆகியவற்றின் வழியாக வங்கியின் போக்கு மற்றும் வங்கியின் செயல்பாடுகள் மற்றும் அதுசார்ந்த முக்கியமான விடயங்களை விவாதிக்கின்றது.

எமது ஒருங்கிணைந்த அணுகுமுறையின் பிரகாரமே வணிகத்தினை கொண்டு சென்றுகொண்டு இருக்கிறோம். எமது முக்கிய விடயங்கள் வணிக பெறுமதியில் குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் தாக்கத்தை செலுத்தக்கூடிய விடயங்களைக் கொண்டிருக்கிறது. அதிகரிக்கும் பங்குதாரர்களின் கவலைகள், சந்தையில் ஏற்படும் புதிய மாற்றங்கள் மற்றும் அபிவிருத்தி என்பனவும் முக்கிய விடயங்களை தீர்மானிப்பதாக உள்ளது.

எங்கள் வணிகரீதியான திறன், சமூக பொருத்தப்பாடு மற்றும் அக்கறைதாரர்களுடனான உறவுமுறை ஆகிவற்றினை பாதிக்கக்கூடியவற்றினையே நாம் கணக்கில் கொள்கின்றோம். முக்கியமாக தாக்கத்தை செலுத்தக்கூடிய விடயங்கள் மற்றும் பிரச்சனைகளை ஆய்வு செய்யும் வணிக மாதிரி (பக்கம் 34), செயல்பாட்டு சூழல் (பக்கம் 37), அக்கறைதாரர் நிர்வாக வழிமுறைகள் (பக்கம் 48), இடநேர்வு முகாமைத்துவ செயன்முறைகள் (பக்கம் 201) என்பவற்றில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளன.




முக்கிய விடயங்களுக்கான இவ்வரைபானது ஆய்வில் இனங்காணப்பட்ட மிக பொருத்தமான விடயங்களை, வணிகம் மற்றும் அக்கறைதாரர்களுக்கான முக்கியம் மற்றும் அவற்றுக்கிடையான வலுவான இடைத்தொடர்புகளின் அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தி விளக்குகின்றது. அதுபோல வங்கியால் இனம்காணப்பட்ட முக்கிய விடயங்கள் GRI தரநிலைகளுக்கு அமைவாகவும் GRI தரநிலைமைகளுக்கு அமையாதவகையிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

GRI 102-47

GRI தலைப்பு	வங்கி செயல்பாட்டில் தாக்கமானவை	எல்லைகள்	பொருண்மியமானவை	
			வங்கிக்கு	அக்கறைதாரர்களுக்கு
GRI 200: பொருளியல்				
201 பொருளியல் செயல்திறன்	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
202 சந்தை பிரசன்னம்	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
203 மறைமுக பொருளியல் தாக்கம்	அதீதம்	சமூகம்	அதீதம்	அதீதம்
204 கொள்முதல் செயன்முறை	குறைவு	உள்ளக	அதீதம்	குறைவு
205 ஊழல்தடுப்பு	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
206 எதிர் போட்டி நடத்தை	குறைவு	சமூகம்	குறைவு	குறைவு
GRI 300: சுற்றுச்சூழல்				
301 மூலப்பொருள்	குறைவு	உள்ளக	குறைவு	குறைவு
302 சக்தி	நடுத்தர	உள்ளக	நடுத்தர	நடுத்தர
303 நீர்	நடுத்தர	உள்ளக	நடுத்தர	நடுத்தர
305 உமிழ்வு	குறைவு	உள்ளக	நடுத்தர	நடுத்தர
306 கழிவுகள்	நடுத்தர	சுற்றுச்சூழல்	குறைவு	நடுத்தர
307 சுற்றுச்சூழல் இணங்கமைவு	குறைவு	சுற்றுச்சூழல்	குறைவு	நடுத்தர
GRI 400: சமூகம்				
401 வேலைவாய்ப்பு	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
403 தொழில் சுகாதார மற்றும் பாதுகாப்பு	நடுத்தர	உள்ளக	நடுத்தர	நடுத்தர
404 கல்வி மற்றும் பயிற்சி	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
405 பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
406 பாகுபாடின்மை	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
407 சங்கங்களின் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
413 உள்ளூர் சமூகங்கள்	நடுத்தர	சமூகம்	நடுத்தர	நடுத்தர
415 பொது கொள்கை	குறைவு	சமூகம்	குறைவு	நடுத்தர
416 வாடிக்கையாளர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு	நடுத்தர	வாடிக்கையாளர்	நடுத்தர	அதீதம்

GRI தலைப்பு	வங்கி செயல்பாட்டில் தாக்கமானவை	எல்லைகள்	பொருண்மியமானவை	
			வங்கிக்கு	அக்கறைதாரர்களுக்கு
417 சந்தைப்படுத்தல் மற்றும் சிட்டையிடல்	அதீதம்	உள்ளக/ வாடிக்கையாளர்	அதீதம்	அதீதம்
418 வாடிக்கையாளர் தனியுரிமை	அதீதம்	வாடிக்கையாளர்	அதீதம்	அதீதம்
419 சமூக பொருளாதார இணங்கமைவு	நடுத்தர	சமூகம்/சுற்றுசூழல்	நடுத்தர	அதீதம்
ஏனைய தலைப்புகள்				
A இடர் மேலாண்மை மற்றும் வணிக தொடர்ச்சி	அதீதம்	உள்ளக	அதீதம்	அதீதம்
B *இலத்திரனியமயமாக்கல் மற்றும் வழங்குமுறைகளை உச்சமாக்குதல் வாடிக்கையாளர்*	அதீதம்	உள்ளக/ வாடிக்கையாளர்	அதீதம்	அதீதம்
C சமூக பொறுப்புடைமை நடவடிக்கைகள்	நடுத்தர	வெளியக	நடுத்தர	நடுத்தர



ஆண்டறிக்கையின் ஏனைய பகுதிகளுடன் வாசிப்பாளர்களுக்கு இணைப்பை ஏற்படுத்தும் முகமாக எமது அனைத்து முக்கிய விடயங்களை முக்கியமான ஆறு விடயங்களாக பின்வருமாறு தொகுத்துள்ளோம்:

1. மாறக்கூடிய மற்றும் நிச்சயமற்ற சமூக பொருளாதார சூழல்
2. அதிகரித்ததுவரும் ஒழுங்குமுறைகள், ஆளும்முறை மற்றும் இடர் மேலாண்மை, மற்றும் புதிதாக வரும் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள்
3. அருமையானதும் மாற்றம் அடைந்துவரும் திறன்களுக்கான தேவைகள்
4. தொழிற்துறையில் போட்டித்தன்மையை தொடர்வதுடன், நிலையான பெறுபேறுகளை தொடர முயற்சித்தல்
5. விரைவான தொழில்நுட்ப வளர்ச்சிகள்
6. மாற்றமடைந்துவரும் வாடிக்கையாளர் தேவைகள்

மேற்கூறிய விடயங்கள் சார்ந்த தாக்கங்களை எமது மூலோபாயங்கள் கொண்டு குறைக்க முயற்சிப்பதுடன், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை மேலாண்மையாளர்களின் தலையீடுகள் மூலமாக குறைத்து அவற்றிலிருக்க கூடிய வாய்ப்புக்களை வணிகத்தின் பெறுமதியை அதிகரிக்க பயன்படுத்திக் கொள்ளுகிறோம்.

வங்கியின் பின்வரும் முக்கிய விடயங்களும் அதுசார் பிரச்சனைகளும், அவற்றின் இடநேர்வு மற்றும் வாய்ப்புக்களின் தாக்கத்தை வெளிப்படுத்துவதுடன் அவற்றுக்கு எமது மூலோபாயங்கள் மூலம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதனையும் சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், எமது மூலோபாய பிரதிபலிப்புக்கள் நாம் எதிர்கொள்ளும் இடநேர்வின் தாக்கத்தின் தீவிரத்தன்மை மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றின் நிகழ்தகவுகளில் சார்ந்துள்ளது.

மாறக்கூடிய மற்றும் நிச்சயமற்ற சமூக பொருளாதார சூழல்

பேரினப் பொருளியல் காரணிகள் எமது வணிகத்தின் நிலையான வளர்ச்சி மற்றும் சந்தை கடப்பாடுகளை பாதிக்கின்றன. அதிலும், சர்வதேச மற்றும் உள்நாட்டு பொருளாதார தளம்பல் நிலையானது பணவீக்கம், வட்டிவீதம் மற்றும் நாணயமாற்றுவீதம் ஆகிவற்றின் மூலமாக பெரும் தாக்கத்தை செலுத்துகிறது. இலங்கை பொருளாதாரமும் இதன் விளைவாக ரூபாய் மீதான அழுத்தம், இறக்குமதிகளுக்கான பணவீக்க அதிகரிப்பு, கடன்தர மதிப்பீட்டில் குறைவு என பாதிக்கப்பட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த நிலையானது நாட்டின் கடன் அளவை அதிகரித்துள்ளதுடன், வருமான அளவை குறைத்துள்ளது. அத்துடன், பணவீக்கத்தையும் எரிபொருள் விலைகளையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இதனால், நுகர்வோர் பெருவாரியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**மொத்த தேசிய உற்பத்தி வீத குறைவு, பணவீக்கத்தின் அதிகரிப்பு, வட்டிவீதம் மற்றும் நாணயமாற்று வீதத் தளம்பல் வணிகத்தின் இடநேர்வை அதிகரிக்கிறது.**	மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மந்தம் நுகர்வோரின் செலவீனம், கடன் நிலை மற்றும் பொது தனியார் துறை ஆகியவற்றின் முதலீடுகளையும், சில்லறை மற்றும் நிறுவன கடன்நிலையையும் பாதிக்கின்றது. மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மந்தம் பணவீக்கத்தினை அதிகரித்துள்ளதுடன் வருமானத்தை குறைத்துள்ளது. இது பொது மக்களின் சேமிப்பு இயலுமையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகரித்துள்ள பணவீக்கம் வங்கியின் நாளாந்த செலவீனங்களையும், செலவீனங்கள் தொடர்பான அழுத்தத்தையும் அதிகரித்துள்ளது. வருமான அதிகரிப்பில் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கம் முதலீட்டை பாதித்துள்ளதுடன் செயற்படாத கடன்களின் இடநேர்வையும் செலவீனங்களையும் அதிகரித்துள்ளது.	பேரினப் பொருளியலின் மாற்றங்களுக்கு தொடர்ச்சியாக பிரதிபலிப்பதுடன், இடநேர்வுகளை குறைத்து வாய்ப்புக்களை உச்சப்படுத்துகிறோம். கவர்ச்சிகரமான வைப்பு வகைகளையும் அதற்கேற்ப பொருத்தமான ஈர்ப்பு விலை நிர்ணயங்களையும் உறுதி செய்தல். புத்திசாதுரியமான இடர்மேலாண்மை அணுகுமுறை மற்றும் வணிகத்தின் இடநேர்வு சட்டகத்திற்கமைவாக எதிர்கொள்ளும் உத்திகளுக்கு பொருத்தமான சந்தை பிரிவுகளில் தொடர்ந்து இலாபமீட்டுதல். தொழில் மற்றும் தொழில்துறை போக்குகளுக்கு தொடர்புடைய சந்தை நுண்ணறிவினைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.
வாய்ப்புக்கள்	**உயர்ந்து செல்லும் வட்டி வீத சூழலில் வருவாய் உற்பத்தி திறனை அதிகரித்தல்.** **அரசினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள் அதிகரித்துள்ளது.**	கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டிவீத அதிகரிப்பானது வட்டி வருமானத்தை அதிகரித்துள்ளது. நிறுவன கடன் வசதிகளை மேம்படுத்துவதுடன், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளித்தல்.	பொருளாதார சரிவுகள் மற்றும் இறுக்கமான ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளுக்கேற்ப மூலதனத்தையும், வணிக திரவத்தன்மையும் ஸ்திரமாகப் பராமரித்தல். அர்ப்பணிப்பு மற்றும் உறுதியான அணுகுமுறையுடன் கடன் தொடர்பில் பொறுப்புடன் செயற்படல். வாடிக்கையாளரின் இடநேர்வுகள் மற்றும் தேவைகளை புரிந்துகொண்டு வாடிக்கையாளர் சேவை செயல்படல்.
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		ஒழுங்குபடுத்துநர்கள், அரச நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், சமூகம் மற்றும் சூழல்.	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர், வளர்ச்சி, தொழிற்பாடுகள், இடநேர்வு மற்றும் இணங்கமைவு.	

ஒழுங்குமுறையில் இறுக்கத்தன்மை, கட்டுப்பாடு மற்றும் இடர்நேர்வு, மற்றும் மாற்றமடையும் விதிமுறைகள்

நிதி சேவைகள் மற்றும் தொழில் ஒழுங்குமுறை அவசியமாக இருந்தாலும், தற்போது அவை கடுமையானதாகிவிட்டது. இந்த ஒழுங்குமுறைகள் அனைத்து தொழிற்துறையிலுமுள்ள வணிகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் இடநேர்வை குறைப்பதாக இருக்கவேண்டும். மிகவேகமாக மாற்றமடையும் ஒழுங்குமுறைகள் நிதிசேவை வழங்குனர்களின் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கும் இயலுமையையும் விரைவுத் தன்மையிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கலாம். இதனால் வணிகத்தின் செலவீனங்கள் அதிகரிப்பதுடன், வணிகத்தை கொண்டு செல்வதிலும் கடினத்தன்மை ஏற்பட்டுள்ளது. அத்துடன், முதலீட்டுக்கு அதிக வருமானம் எதிர்பார்க்கும் முதலீட்டாளர்கள் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்களால் திரவத்தன்மையை நிதிசேவை வழங்குனர்கள் அதிகமாகக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது.

உலகளாவிய ஒழுங்குமுறை கட்டமைப்புகள் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. அவை வங்கிகள் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு வாடிக்கையாளரதும் நலன்களை கருத்தில் கொண்டும், நிதிசந்தையின் ஸ்திரத்தன்மையை கருத்தில்கொண்டும் தீர்மானங்களை மேற்கொள்வதை உறுதி செய்கிறது. எனவே, நாம் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் இலங்கையின் வளர்ச்சியடையும் பொருளாதாரத்துக்கும், ஸ்திரமான நிதியியல் சந்தைக்கும் பங்களிக்க முயற்சிக்கிறோம்.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மற்றும் ஒழுங்குமுறை அபிவிருத்திகள் வருமாறு:** – *பாசல் III செயல்படுத்தல்* – IFRS 9 *செயல்படுத்தல்* – *இறைவரி சட்டம்* – *வெளிநாட்டு நாணயமாற்று சட்டம் வணிகத்தின் வணிக மாதிரியை பாதிக்கலாம்*	ஒழுங்குபடுத்தல்களுக்கான தேவைகள் வருமானம், கிரயம் மற்றும் வங்கியின் ஐந்தொகையில் தாக்கத்தை செலுத்துகிறது. (முன்னேற்பாடுகள் அதிரிக்க, இலாபளவு குறைகிறது) அதிகமான ஒழுங்குமுறைக்கான செலவு, ஒழுங்குமுறைகளை பின்பற்றாமைக்கான அபராதங்கள் மற்றும் நற்பெயருக்கான இடநேர்வு. தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கான முதலீடு செய்யும் நேரத்தை குறைக்கிறது. IFRS 9 பயன்பாடு மற்றும் அமுலாக்கலின் விளைவாக ஏற்படும் குறைபாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்குள் ஏற்படும் இடநேர்வுக்கான செலவுகளை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.	ஒழுங்குமுறை மாற்றங்களைக் கண்டறிந்து, மதிப்பிடுவதற்கும், பதிலளிப்பதற்கும் ஒரு ஒருங்கிணைந்த, விரிவான மற்றும் சரியான அணுகுமுறையை கொண்டிருத்தல். வணிகத்துக்கான கட்டமைப்புக்களை புரிதலுடன் உருவாக்குவதுடன், அதனை திட்டமிட்டு நிர்வகிப்பதுடன் பொருத்தமானவகையில் அறிக்கையிடல். குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைமுறைப் படுத்துவதற்கு தயாராகவுள்ள உள்ளக மாதிரிகள் மற்றும் செயல்முறைகளை மதிப்பாய்வு செய்வதன் மூலமும் ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புடைய ஒழுங்குமுறை சட்டத்தின்பிரகாரம் பின்பற்றலும். இலஞ்ச ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை செயல்படுத்துவதுடன், பணதூய்த்தல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி நிதிரீதியான இலஞ்சம் பெறல் மற்றும் ஏனைய குற்றங்களை தடுத்தல்.
வாய்ப்புக்கள்	பொருளாதார சரிவு நிலையிலும், பொருளாதார வளர்ச்சி நிலையிலும் வங்கிகள் ஸ்திரமானநிலையை ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் கவனத்தை அதிகரித்தல்.	திறமையான நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் சிறந்த மேலாண்மை மற்றும் அதிக செயல்திறன் சில பகுதிகளில் இடநேர்வை குறைக்கும்.	
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		ஒழுங்குபடுத்துநர்கள், அரச நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள்	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர், வளர்ச்சி, செயல்பாடுகள், இடநேர்வு மற்றும் இணங்கமைவு மற்றும் நற்பெயர்	

அருமையான மற்றும் மாற்றம் அடைந்துவரும் திறன்களுக்கான தேவைகள்

ஊழியர்கள் எங்கள் வணிகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளார்கள். அத்துடன் உயரிய வாடிக்கையாளர் சேவை மாதிரி முறைகளில் முதன்மையான இணைப்பாக உள்ளனர். வங்கிகள் மற்றும் நிதிசேவை வழங்குனர்களின் தொழிற்பாட்டை மேலும் சிக்கலாக்கி வருகிறது. மிகச்சிறந்த சேவையை வழங்கல், வணிக ஐந்தொகையை இடநேர்வுகளுக்கு மத்தியிலும் ஸ்திரமாக பேணல், வாடிக்கையாளர் பெறுமதியை அதிகரித்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அதீத திறன்வாய்ந்ததும், வாடிக்கையாளர் சார்ந்த பகுப்பாய்வுத்திறன் கொண்ட ஊழியர்களும் அவசியமாகிறார்கள்.

எமது மூலோபாய அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க எமது ஊழியர்களை அனுமதித்துள்ளோம். மிகச்சரியான நபர்கள் சரியான இடத்தில் நியமித்தல், பொருத்தமான பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றின் மூலமாக எமது வெற்றி மற்றும் புத்தாக்கத்தினை சாத்தியப்படுத்தியிருக்கிறோம். எமது வாடிக்கையாளர்கள் திருப்திகரமான சேவையை பெற்றிராதபோது, அது எமது வணிகத்தினை எதிர்மறையாக பாதிக்கிறது. தற்போதைய நிலையில், இலங்கையில் விசேட திறன்களை கொண்ட ஊழியப்படையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது விசேட திறன்களை கொண்டவர்களை வேலைக்கமர்த்துவதில் போட்டித்தன்மையை, வங்கி மற்றும் நிதிசேவை சந்தையில் அதிகரித்துள்ளது.

எமது ஊழியர்கள் எமது விழுமியங்கள் மற்றும் மூலோபாயாங்களை புரிந்துகொண்டு வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதை உறுதிசெய்து கொள்கின்றோம். நாங்கள் எமது ஊழியர்களுக்கு அவர்களது முழுமையான திறமையை உணர்ந்துகொண்டும், மேலதிக திறன்களை விருத்தி செய்துகொண்டும்,மாற்றமடையும் உலகுக்கு ஏற்ப செயல்பட அனுமதித்துள்ளோம்.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**விசேட திறன்கள் மற்றும் அதிவிசேட திறன்கள் கொண்டவர்களை தேர்வு செய்யும்போது ஊழியச் சந்தையில் கடும்போட்டி நிலவுகிறது.** **ஊழியர்கள் மற்றும் திறன்களுக்கு இடையிலான இடைவெளியை குறைப்பதற்கான மாற்றத்தை செய்தல்.** **எதிர்காலத்துக்கு தேவையான திறன்களையும், ஊழியர்களுக்கு தேவையான தொழில்நுட்ப வளர்ச்சியை வளர்த்தெடுப்பதற்கான கேள்வி அதிகரித்துள்ளது.** **வாழ்க்கை மற்றும் வேலைக்குமிடையிலான சமநிலை.**	பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தொடர்ச்சியாக முதலீடு செய்வதுடன், ஊழியர்களுக்கு திறன்களுக்குமிடையிலான இடைவெளியை குறைத்தல். அதீத திறன்கொண்ட ஊழியர்களை வேலைக்கமர்த்துதலும், பிரத்தியேக பயிற்சிகளை கொண்டு செல்வதற்கும் அதீத செலவீன அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கிறது. திறனற்ற ஊழியர்களின் செயற்பாடுகள் வாடிக்கையாளர் அனுபவத்திலும், திருப்தியிலும் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகிறது.	திறமையானவர்களை கவரவும் தக்கவைத்துக் கொள்ளவும் பொறுப்புவாய்ந்த ஆடசேர்ப்பு கொள்கையை கொண்டிருத்தல். பெறுபேற்று கலாச்சாரம்: நேர்த்தியான மற்றும் வெளிப்படையான செயல்திறன் மேலாண்மையானது சுய அபிவிருத்தி திட்டங்களுடன் தொடர்புடையதாக இருத்தல். ஊழியர்களுக்கான கற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் புதுமையானதாகவும் வினைத்திறனாகவும் இருத்தல். செயல்முறை திறமை மற்றும் அடுத்தடுத்த திட்டமிடல்.
வாய்ப்புக்கள்	**சரியான அணுகுமுறையுடன் சிறந்த திறன்களை ஈர்க்கும் திறன்.** **புதுமை மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு எம் ஊழியர்களை தயார்செய்தல்.**	ஊழியர் அனுபவங்கள் மற்றும் மதிப்பீட்டு முன்மொழிவுகள் மீது எதிர்பார்ப்பு அதிகரிகிறது.	சமூக பொருளாதார சூழலில் மாற்றங்களுக்கேற்ப எமது உத்திகளை பயன்படுத்தி ஊழியர்கள் வேகமாகவும் பொறுப்பாகவும் செயலாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள்.
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		வாடிக்கையாளர்கள், ஊழியர்கள். வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள்	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர், வளர்ச்சி, ஊழியர்கள், இடர் மற்றும் இணங்கமைவு, செயல்பாடுகள் மற்றும் நற்பெயர்	

தொழிற்துறையில் போட்டிதன்மையை கொண்டிருப்பதுடன் நிலையான பெறுபேறுகளை வெளிப்படுத்தல்

இலாபம் மற்றும் இலாபத்தை தொடர்ச்சியாக கொண்டிருக்க அக்கறைதாரர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும். இலங்கையின் மிகப்பெரிய வங்கியான நாம் சேமிப்பு கலாச்சாரத்தை ஊக்குவிப்பதுடன் வங்கியின் நிலைத்திருக்கும் தன்மைக்கு பெறுமதிசேர் மதிப்பை அதிகரிக்கக்கூடிய செயல்பாடுகளில் தங்கியுள்ளோம். பெறுமதி தொடர்பிலான மதிப்பீடு ஒவ்வொரு அக்கறைதாரருக்கும் வேறுபடுவதுடன், இந்த அனைவருக்கும் பரஸ்பர நன்மையை வழங்கக்கூடியதாகவும், ஒவ்வொருவரது தேவைகளை புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

நிதிசார் சேவை வழங்குபவர்கள் வாடிக்கையாளர்களின் தேவை விருப்பங்களின் அடிப்படையில் தொழில்நுட்ப மாற்றங்களை பயன்படுத்தி வணிகத்தில் புதுமைகளை உட்புகுத்துகிறார்கள். அதிகரித்துவரும் கட்டுப்பாட்டு நியமங்கள் சந்தையில் புதியவர்கள் நுழைவதற்கான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதுடன், மாற்று தீர்வுகளை வழங்கும் வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களிடமிருந்தான போட்டித்தன்மையையும் அதிகப்படுத்தியுள்ளது.

வங்கிதுறை தொழில்நுட்பதுறையை தன்னுடன் இணைத்துகொண்டு இயங்கத் தொடங்கிவிட்டது. இதனால், வங்கிகள் மீது வாடிக்கையாளர்களுக்கு கணிசமான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அத்துடன், வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையானவற்றினை பெற்றுக்கொள்ள அதிகாரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**போட்டி அதிகரித்தல்.** **சந்தை பங்கை இழத்தல்.** **பலவீனமான வியாபார அளவு** **செலவை நிர்வகித்தல்.** **தொழில்நுட்ப போட்டி.**	போட்டி இலாபத்தையும், வருமானத்தையும் குறைக்கிறது. இலாபத்தை குறைத்து செலவை அதிகரித்தல். வாடிக்கையாளரை தக்கவைக்கவும், கையகப்படுத்தவும் செலவு அதிகரித்தல்.	புதிய பொருள் அபிவிருத்தி மற்றும் மாற்று விற்பனை முறையில் கவனம் செலுத்துதல். முதலீட்டு கலவை, நிதிக்கான விலையிடல் முறைமை மற்றும் செலவுகளை முறைமைபடுத்தல். வங்கிகிளைகளை சார்ந்த முறையை தவிர்த்து சுயசேவையை முறையை நோக்கி நகர்த்தல்.
வாய்ப்புக்கள்	**வருமான பரவலாக்கல்.** **புதுமை மற்றும் போட்டித்தன்மையை நோக்கி நிறுவனத்தை உந்துதல்.**	அரசாங்க பிணைய முதலீட்டில் சார்ந்திருப்பதை குறைத்தல் மற்றும் கட்டண அடிப்படையிலான வருவாயை அதிகரித்தல். வாடிக்கையாளரை மையப்படுத்தி செயல்படல்	தற்போதைய வருமானத்தை ஸ்திரபடுத்திக்கொண்டே புதிய வருமானமூலத்தையும், செலவு வினைத்திறனையும் கையாளல். வணிக குறிக்கான நற்பெயரை அதிகரித்தல்
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		வாடிக்கையாளர்கள், ஊழியர்கள். வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள்	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர்கள், வளர்ச்சி, செயல்பாடுகள், இடர் மற்றும் இணங்கமைவு, நற்பெயர் மற்றும் ஊழியர்கள்	

வீரைவான தொழில்நுட்ப அபிவிருத்திகள்

தொழில்நுட்ப புரட்சியானது நிதிசேவையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நிதிசந்தையில் எம்மை நிலைநிறுத்திக் கொள்ள தொடர்ச்சியாக புதுமையை நோக்கி செல்லவேண்டியதாக இருக்கிறது. எனவே, புதுமையான தயாரிப்புக்களை வழங்குபவர்களுடன் இணைத்து வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்யவேண்டியதாக உள்ளது.

கடந்த சில வருடங்களாக எங்கள் தொழில்நுட்ப தளங்களை மேம்படுத்துவதில் முதலீடுகள் செய்துள்ளோம். இது தொழில்நுட்பம் சார் குற்றங்களை தடுக்கவும், அனைத்து வணிக பகுதிகளையும் இணைக்கவும் உதவியாக உள்ளது.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**கிளவுட் கணனியல், தரவுகள், மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வு, இயந்திர கற்றல், மெய்நிகர் நாணய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு அறிமுகம் ஆகியவை வாடிக்கையாளர் நடத்தையை மாற்றுகிறது.** **இணைய பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை பேணுதலுக்கான அச்சுறுத்தல்.** **தகவலுக்கான பெறுமதி அதிகரித்தல்.** **வழமைக்கு மாறான போட்டியாளர்கள் சந்தை பங்கினை கைப்பற்ற முயற்சி செய்தல்.**	போட்டித்தன்மை மிக்க சூழலில் தொடர்ச்சியாக ஈடுபட புதிய தொழினுட்பங்களை அறிமுகம் செய்யவோ அல்லது தகவமைத்துக்கொள்ளவோ வேண்டும். தொழில்நுட்பத்திற்கும் பாதுகாப்பு அமைப்புகளுக்கும் மூலதன முதலீடுகள் செய்தல். முகாமைத்துவ தொழில்நுட்பம், தகவல் மற்றும் இணைய அபாயங்கள் தொடர்பான முகாமைத்துவ சிக்கல் அதிகரித்து வருகின்றது. பாதுகாப்பு முறைமைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் நாளாந்த செயல்பாடுகளில் ஏற்படும் பாதிப்புக்களுடன் நற்பெயருக்கு ஏற்படும் களங்கம்.	தொழில்நுட்பம்சார் தொடர்பாடலை மேம்படுத்துவதுடன், வாடிக்கையாளர்களுக்கான அனுபவத்தினை உச்சப்படுத்தல். உள்ளக செயல்முறையை தொழில்நுட்பம்சார் தானியங்க செய்தல். தொழில்நுட்பம், செயல்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளில் தொடர்ச்சியான முதலீட்டை செய்தல். தொழில்நுட்ப உட்கட்டமைப்பை ஸ்திரப்படுத்தல்.
வாய்ப்புக்கள்	**வினைத்திறனை அதிகரித்தல்** **குறைவான செலவிலும், வேகமாகவும் விநியோகம் செய்தல்.** **தொழில்நுட்பத்தின் புதிய போக்குகள்.**	வாடிக்கையாளரை மையப்படுத்திய சேவைகளை முன்னெடுப்பதன் மூலம், ஒட்டுமொத்த செலவுகளை குறைத்தல். புதிய வருமான மூலங்களை உருவாக்கும் திறன். வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதும் திறமையாக செயல்படும் திறன். இணைய பாதுகாப்பை பலப்படுத்துவது வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது.	
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		ஒழுங்குபடுத்துநர்கள், அரச நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள்	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர் வளர்ச்சி, மக்கள், இடர் மற்றும் இணங்கமைவு, செயல்பாடுகள் மற்றும் நற்பெயர்	

வாடிக்கையாளர் தேவைகள் மாற்றமடைதல்

வாடிக்கையாளரின் தேவைகளை புரிந்துகொண்டு வினைத்திறனாகவும், திறமையாகவும் பூர்த்தி செய்வதன் மூலமாக அவர்களுடன் நீண்டகால உறவினை பலப்படுத்தி கொள்கிறோம். வங்கிக் கிளைகள், தொலைபேசி மற்றும் இணையவங்கி மூலமாக திறம்படசேவை வழங்க முயற்சி செய்கிறோம். வாடிக்கையாளரை முன்னிறுத்தி, வாடிக்கையாளரின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதை நோக்காக கொண்டு செயல்படுவேத எமது வங்கியின் கலாசாராமாக உள்ளது.

இடநேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்		பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்	மூலோபாய எதிர்வினை
இடநேர்வுகள்	**வங்கியின் பல்வேறு சேவைகள், சேவையின் தரம் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசம் ஆகியவற்றில் வாடிக்கையாளர் அதீத அக்கறை கொண்டுள்ளமையால் விசுவாசத்தில் குறைவும், வாடிக்கையாளர் இழப்பும் ஏற்படுகிறது.** **வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகள் அதிகரித்தல்.**	வாடிக்கையாளரை கையக்கப்படுத்துதல் மற்றும் தக்கவைக்கும் செலவுமட்டம் அதிகரித்தல். தொழில்நுட்பத்திலும், புதுமையிலும் அதீத முதலீடு. சுய சேவை தளங்களால் வாடிக்கை யாளர்களுடனான உறவுகள் மற்றும் வணிக மாதிரியில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. நுகர்வுக்கான கடன் அதிகரித்தல்.	நீண்டகால உறவுமுறை மூலமாக அவர்களின் தேவைகளுக்கு வினைத்திறனாக செயலாற்றல். வங்கிக் கிளைகள், தொலைபேசி மற்றும் இணையவங்கி மூலமான வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல். ஆலோசனை தொடர்பான பயிற்சியும் ஆலோசனையை வேறுபடுத்தும் காரணியாக மாற்றுதல். வாடிக்கையாளர் மையப்படுத்திய வழிமுறைகளுக்கு அவர்களை மாற்றல
வாய்ப்புக்கள்	**அதிக ஆலோசனை தேவை.** **சமூகம் மற்றும் சூழலில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல்.**	ஸ்திரமான வணிகத்தினை கொண்டு நடாத்த சமூகத்தின் மீதான நம்பிக்கையை அதிகரித்தல். நிதி ஆலோசனைகள் மற்றும் இன்னும் பிற சேவைகள் மூலமாக வாடிக்கையாளரிடம் விசுவாசத்தை அதிகரித்தல்.	பொறுப்புடனான கடன் வழங்கல், நிதி உள்ளடக்கம் மற்றும் பேண்தகு இலக்கினை (SDG) கருத்திலெடுத்து நிலைத்திருக்கும் தன்மையை வலுப்படுத்தல். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை முறையாக பராமரித்தல்.
சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள்		ஒழுங்குபடுத்துநர்கள் அரச நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள்	
மூலோபாயக் கவனப் பகுதிகள்		வாடிக்கையாளர் வளர்ச்சி, மக்கள், இடர் மற்றும் இணங்கமைவு செயல்பாடுகள் மற்றும் நற்பெயர்	

எமது மூலோபாயம்

எமது மூலோபாயமானது குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகாலங்களில் பெறுமதி உருவாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வலுவான வியாபர அலுவலை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இது "அதிகளவில் நம்பத்தகுந்ததும், உங்களது சேமிப்புக்களுக்காகத் தெரிவுகளின் பின் நாடப்பட்டதுமாக விளங்கி" எனும் எமது நோக்கத்தை உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது. மூன்றாண்டு காலத்துக்கான புதிய வியாபாரத்திட்டமொன்றின் துணையுடன் (2017–2019) வங்கியானது, கவனம் செலுத்தவேண்டிய முக்கியமான மூலோபாயங்களை கொண்டுள்ளது. மூலோபாயத் திட்டத்தை விருத்தி செய்யும் நோக்கில், பல்வேறு மட்டங்களிலான வங்கி அலுவலர் மற்றும் முகாமைத்துவத்தின் பங்களிப்புடன் நிறுவன அளவிலான உள்ளடக்க முறையொன்று மேற்கொள்ளப்பட்டது. இது, அனைத்து நிறுவன முகாமைத்துவ உறுப்பினர்களுடனான ஆழமான கலந்துரையாடல்கள், அனைத்து அலுவலர் தரத்திலுள்ள ஊழியர்களுடனான அதிகளவிலான செயற்பாட்டுடனான விதிவிட செயலமர்வுகள் மற்றும் அலுவலர்கள் தமது எடுத்துரைப்புக்கள், நோக்கங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கக்கூடிய வாய்ப்பினைக் கொண்ட தீவிரமான ஆராய்ச்சி ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் மூலோபாயமானது, நீண்டகாலம் மற்றும் குறுங்காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரையுமான இருபிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

நீண்டகால மூலோபாயங்கள்

எமது வியாபாரத்திட்டத்தினுடாக, நடைமுறைப்படுத்தக்கூடிய ஐந்து நீண்டகால மூலோபாயங்களை வங்கி அடையாளம் கண்டுள்ளது. அவை: டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வங்கிகள் உருவாகுதல், மக்களால் இயக்கப்படுதல், பன்முகப்படுத்தல், புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வலு மற்றும் உறுதிப்பாடு என்பனவையாகும்.

டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வங்கியாகுதல்

வங்கித்தொழில் மற்றும் நிதிச்சேவைத் தொழில் வளர்ச்சியில் அடுத்த கட்டத்தின் ஆரம்பமாக வங்கித் துறையானது அடிப்படை மாற்றங்கள் மற்றும் இலத்திரனியமயப்படுத்தல் ஆகியவற்றினூடாக செல்கிறது. தேசிய சேமிப்பு வங்கி தொழில்நுட்பத்தினை எதிர்கால வளர்ச்சியை அடைவதற்கான இன்றியமையாத மையப் போட்டித்தன்மையுடையதாகவும் மற்றும் எழுச்சியான வேறுபாடாகவும் நோக்குகிறது. அதிகரிக்கும் வாடிக்கையாளர்களின் தேவைகள், சமூக மற்றும் மக்கள் தொகை, இயல் அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் பொருளாதார நோக்குகள் ஆகியன இலத்திரனியல்மயப்படுத்தலிலான முதலீட்டுக்கு வங்கி மீது அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. வங்கியானது பின் அலுவலக முறைமைகளில் மையச் செயன்முறைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் முன்அலுவலகத்தளங்களை விருத்தி செய்தல் ஆகியவற்றின் மூலம் முதலிலிருந்து கடைசிவரையான முறையில் இலத்திரனியல்மயப்படுத்தலை இணைத்து முடிவான நவீனமயப்படுத்தலை ஏற்றுக்கொள்ளுகிறது. விரைவான, திறன் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினால் ஆதரவளிக்கப்பட்ட அதிகரித்த இலத்திரனியல்மயமாக்கப்பட்ட வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தலை அனுமதிப்பதற்கு, வாடிக்கையாளரை மையப்படுத்திய பல்வேறு அளவுகளிலான விநியோக வழிமுறை மற்றும் நவீனமயப்படுத்தல் உற்பத்திகள் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய தெளிவான மூலோபாயங்களை உள்ளடக்கிய முழுமையான இலத்திரனியல்மயப்படுத்தலை வங்கி வழங்குகிறது.

மக்களால் இயக்கப்படுகிறது

எமது பெறுமதியைப் பங்கிடுகின்ற மற்றும் வங்கியின் வெற்றியைத் தமது தனிப்பட்ட பொறுப்பாகக் கருதும் மக்களே எமது நோக்கத்தை அடைவதற்கான அடிப்படையாகக் காணப்படுகின்றனர். வங்கித்துறையின் தற்போதைய சூழ்நிலையில் விரைவான மற்றும், நிலையான மாற்றம் ஆகியன மாதிரியொன்றாகக் காணப்படுவதால் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சரியான தேர்ச்சி மற்றும் இயல்பினைக் கொண்டவர்களாக ஊழியர்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதை வங்கி தேவைப்படுத்துகிறது. இலத்திரனியல்மயப்படுத்தும் மாற்றத்தின் சாராம்சமானது, விரைவு, நெகிழ்ச்சித்தன்மை, தன்னுரிமை மற்றும் புதிய அமைப்புக்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும். இது திறந்த சூழல் வாய்ப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை உருவாக்குவதுடன் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றுக்கான செயற்பாடு ஆகியவற்றையும் அனுமதிக்கின்றது. செய்முறைகளின் இலத்திரனியல்மயப்படுத்தல், இலத்திரனியல்மயப்படுத்தல் தீர்வுகளை ஏற்படுத்துதல், இலத்திரனியல்மயப்படுத்தலை பரவலாக்குதல், மூலோபாய கலாச்சாரப் பெயர்வுகள், அதிகமான வாடிக்கையாளர் தொகுதியை நாடுதல் மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை ஆகியன மக்களின் நடத்தை மற்றும் தேர்ச்சி ஆகியவற்றில் மாறுதலுடன் கூடிய தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். எனவே, வங்கியானது மாற்றம், சேவைத்திறன் கலாச்சாரத்தை ஊக்குவித்தல், இடர் மற்றும் இணக்கத்தரப்பு கலாச்சாரத்தை ஏற்படுத்துதல், பயிற்றுவித்தல் மற்றும் வளர்ச்சியை விருத்தி செய்தல் மற்றும் அவர்களது தொழில் முழுவதிலும் வெற்றியைப் பெறுதல் ஆகியனவற்றினுடாக மக்களைத் தயார்படுத்தும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

பன்முகப்படுத்தல்

வங்கியானது மிகவும் நம்பத்தகுந்ததும், சேமிப்புக்களுக்காக தெரிவுகளின் பின் பெறப்பட்டதுமாக விளங்கும் நோக்கத்துடன் இணைந்ததாக புதிய முதலீடுகள் மற்றும் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக வியாபாரத்தினைப் பன்முகப்படுத்தும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது. தேசிய வரவு செலவுத் திட்ட எடுத்துரைப்புக்கு அமைவாக, தேசிய சேமிப்பு வங்கி இலங்கை சேமிப்பு வங்கியின் கையேற்பு தொடர்பில் கவனத்தைச் செலுத்தும். இது நிதியியல் சேவைகளின் புதிய பிரிவுகளுடன் முயற்சியற்ற சந்தைப் பிரிவுகளை அடைந்ததன் மூலம் இலங்கை வங்கித் தொழிலுக்கும் பொது சேவை துறைக்கும் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் வளர்ச்சியடையும் வெளிப்படுத்துகையை வழங்குமென நம்புகிறது. மேலும், அடிப்படையான அமைப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் சந்தைக்கு புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக மரபுரீதியான் வங்கிச் சேவைகள் அதேபோன்ற வங்கியல்லாச் சேவைகள் ஆகியவற்றிலிருந்தான பங்களிப்பை வழங்குகின்றது. தற்போதைய போட்டித்தன்மையுடைய செயற்பாட்டுச் சூழலில் வருவாய்க்கான புதிய வழிமுறைகளை எதிர்பார்த்துள்ளது.

புதுமைபுகுத்தல்

இலத்திரனியல் தொழில்நுட்பம் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளினால் எந்தவொரு நிறுவனத்தினதும் வளர்ச்சி, செயலாற்றம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றினைக் கொண்டு நடாத்துபவர்களில் ஒருவராக புதுமை புகுத்தல் விளங்குகின்றது. ஏற்படுகின்ற வாய்ப்புக்களின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வியாபாரச் செயன்முறைகள், விநியோக வழிமுறைகள், பெறுமதி தொடர்கள் மற்றும் வியாபார மாதிரிகள் ஆகியவற்றில் புதுமை புகுத்தலை இயங்கச் செய்வதன் வாயிலாக வங்கியானது தனது வாடிக்கையாளர்களுக்கான புதுமை புகுத்தல் தீர்வுகளை விருத்தி செய்கிறது. புதுமை புகுத்தலைப் பேணக்கூடிய சூழல் ஒன்றை வங்கி உருவாக்கும். இது, வாடிக்கையாளர் அனுபவம், நிதியியல் உள்ளடக்கம் ஆகியவற்றுக்குப் பங்களிப்பை வழங்குவதுடன் சமூகத்தின் மீது சாதகமான தாக்கம் ஒன்றையும் ஏற்படுத்தும்.

வலிமை மற்றும் உறுதிப்பாடு

உறுதியான மூலதனம் மற்றும் திரவத்தன்மையுடைய தாங்கிருப்புக்கள் ஆகியன நிதியியலின் உறுதிப்பாட்டுக்கான முக்கிய செலுத்துனராக இருக்கும். மூலதன வலிமையும் அதிகரிக்கச் செய்தல் மற்றும் ஆழ்ந்த திரவத்தன்மை நிலைமையை விருத்தி செய்தல் ஆகியவற்றின் வாயிலாக பங்குதாரர்களின் நீண்டகாலப் பெறுமதியை உருவாக்கக்கூடிய, வலிமையான மற்றும் உறுதிப்பாட்டுடடான வங்கியைக் கட்டியெழுப்பும் நோக்கத்தினையே தேசிய சேமிப்பு வங்கி தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும். எவ்வாறாயினும், உறுதிபாடென்பது, இயல்பான வளர்ச்சியினால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. முன்னேற்றமடைந்த செயற்றிறன் வாயிலாகவும் உருவாக்கப்படுகிறது. எமது சட்ட நிரூபணத்தினைப் பேணும்வகையில் எமது விவேகமான இடர்தீர்வு மற்றும் சட்டமியற்றக்கூடிய தகுதிகள் நாம் வளர்ச்சிக்கான முயற்சிக்களை மேற்கொள்ளுகின்றோம். உயர்வான வியாபார அலுவல்களை அதிகளவில் பெற்றுக்கொள்ளல், கிளைகளின் பரந்த அளவிலான அடிச்சுவட்டினை ஆற்றல் வாய்ந்ததாக்குதல் மற்றும் வலையமைப்பு மற்றும் உந்துதல் அடிப்படையிலான தொடர்ச்சியிலான விரிவாக்கம் ஆகியவற்றின் வாயிலாக எமது வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு எண்ணியுள்ளோம். அதேவேளை, எமது இடர் மற்றும் கலாச்சாரத்தையும் வலுப்படுத்தவுள்ளோம்.

குறுங்கால மற்றும் நடுத்தர கால மூலோபாயம்

எமது மூலோபாய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, எமது மூலோபாய ஒழுங்குமுறைச் செயற்பாட்டின் முக்கிய மூலோபாயத் தூண்களாக பின்வருவனவற்றை ஏற்படுத்தியுள்ளோம்.

வாடிக்கையாளர்களுக்கானவை:

தேசேவ இனை வங்கித் தெரிவாக மேற்கொள்ளக் கூடிய வகையில், உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் அதியுயர்வான வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றினை வழங்குவதன் வாயிலாக அவர்களது தேவைப்பாடுகளை விளங்கிக கொண்டு தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்தல்.

ஊக்கமுடைய, இயக்க ஆற்றல் வாய்ந்த குழு:

ஈடுபாட்டுடனான ஊழியர்கள் ஈடுபாடுடனான வாடிக்கையாளர்களுக்கு வழிவகுத்தனர். போட்டிக்கு அப்பால் எம்மை நிலைத்நிறுத்திய ஊழியர்களில் முதலீடு செய்ய வேண்டிய கடப்பாட்டினை நாம் கொண்டுள்ளோம்.

உறுதியான செயலாற்றம்:

சில்லறைக்கடன் வழங்கலுடன் தொடர்பான வியாபார அலுவல்களின் அளவுகளை அதிகரிப்பதிலும் உறுதியான வைப்புக்களை அதிகரிப்பதிலும் நாம் கவனம் செலுத்துவோம்.

பொறுப்புடையதும் சமூகரீதியில் கடப்பாடுடையதும்:

ஆழமான சமூகவேர்களுடன் சிறப்பியல்பு வங்கியொன்றாக எமது சமூக அபிவிருத்தி செயற்திட்டங்களில் SDGகளுக்கான எமது பங்களிப்பினை நாம் வழங்கியுள்ளோம்.

முன்மாதிரியான இடர் மற்றும் இணங்குவிப்பு கலாச்சாரம்:

வங்கியின் பாதுகாப்புக்காக இடர் முகாமைத்துவத்துக்கான விவேகமான அணுகுமுறையை ஏற்படுத்துவதற்கான கடப்பாட்டினை நாம் கொண்டுள்ளோம்.

தொழிற்பாட்டு ரீதியில் அதிவிசேடமானது:

உயர்தர வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர் அனுபவங்களை வழங்குவதற்காக நாம் தொடர்ந்தும் எமது தொழிற்பாடுகள் மற்றும் உள்ளகச் செயன்முறைகளை இலகுபடுத்தியும், தரப்படுத்தியுள்ளோம்.

உச்ச மூலதன முகாமைத்துவம்:

எமது மூலதன வலுவை அதிகரித்தல் மற்றும் உறுதியான திரவ நிலைமையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் வாயிலாக நாம் தொடர்ந்தும் எமது அடிப்படைகளை முன்னேற்றுகின்றோம்

வள ஒதுக்கீடு

வள ஒதுக்கீடு என்பது நிறுவன மூலோபாயத்தைச் செயற்படுத்துவதில் மிக அதிகளவில் சிக்கலான ஒன்றாகும். மூலதனவள வடிவத்தில் வங்கி அதிகளவிலான வளங்களைக் கொண்டுள்ளது. அதாவது நிதியியல், அறிவுசார்ந்த தயாரிக்கப்பட்ட மனித, சமூக மற்றும் தொடர்பு மற்றும் இயற்கை ஆகியவற்றை எமது அக்கறைதாரர்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய பெறுமதியை தேசேவ முன்மாதிரியுடன் ஒதுக்கீடு செய்கிறது. எமது மூலோபாயமானது அனைத்து முதலீடுகளும் சமமான மூலவள ஒதுக்கத்தைப் பெறக் கூடியவகையில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

எமது மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துகையில், வருவாய்களை பாதிக்கக் கூடிய பற்றாக்குறையான நிதி மற்றும் நிதியல்லா மூலவளங்களின் ஒதுக்கீட்டில் இயல்பான வர்த்தகத்தில் தொடர்பில் தேசேவ பேரண்ட மீளாய்வொன்றை மேற்கொள்ளுகிறது.

வாடிக்கையாளரை நோக்கியவை

2017 முக்கியமான முன்னெடுப்புக்கள்

- வாடிக்கையாளர் அடைவுமையங்களின் விரிவாக்கம்
- அதிகளவிலான வசதிகளை வழங்குதல்
- புதிய உற்பத்திகளை அறிமுகபடுத்தல்
- பெறுமதி கூட்டப்பட்ட சேவைகளை வழங்குதல்

2017ல் அடையப்பட்டவைகள்

- தயாரிக்கப்பட்ட மூலதனம் 102ம் பக்கத்தில் பார்க்கவும்
- வாடிக்கையாளர் மூலதனம் 126 – 131 பக்கம் பார்க்க

2018 ஒரு பார்வை

- நிதி மூலதனம் பக்கம் 86
- தயாரிக்கப்பட்ட மூலதனம் பக்கம் 105
- சமூகம் தொடர்பான மூலதனம் பக்கம் 139

உறுதியான செயலாற்றம்

2017 முக்கியமான முன்னெடுப்புக்கள்

- வருவாய் உருவாக்கத்தினை அதிகரித்தல்
- வருவாய்களில் அதிகரிப்பினை அடைதல்
- வைப்புத்துறை மற்றும் கடன்துறையை விரிவாக்கல்
- கையகப்படுத்தல், வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை இணங்காணல்
- நட்டமடையும் கிளைகளை இலாபம் சம்பாதிக்கும் நிலைக்கு மாற்றுதல்

2017ல் அடையப்பட்டவை

- பொது முகாமையாளர்/ பி.நி.அ வின் மீளாய்வு
- 73 – 89 பக்கம் பார்க்க

2018 ஒரு பார்வை

- நிதி மூலதனம் 86 – 89 பக்கம் பார்க்க

தொழிற்பாட்டு ரீதியில் சிறப்பானது

2017 முக்கியமான முன்னெடுப்புக்கள்

- செயற்திறனை அதிகரிப்பதுடன் வருமானத்திற்கான செலவைக் குறைத்தல்
- செயற்பாட்டில் முன்னேற்றம் ஏற்படுத்தும் தகவல் தொழில்நுட்பத்தில் முதலீடு
- சிறந்த சேவையை வழங்கும் எமது மக்களுக்கான முறைகள் மற்றும் செயல்முறையில் முதலீடு செய்வதுடன் போட்டித்தன்மையை கொண்டிருத்தல்.
- கடன்தரத்தினை உயர்த்துதல்.

2017ல் அடையப்பட்டவை

- நிதி மூலதனம் பக்கம் 86
- அறிவுசார் மூலதனம் பக்கம் 96 – 99

2018 ஒரு பார்வை

- தயாரிக்கப்பட்ட மூலதனம் பக்கம் 105
- அறிவுசார் மூலதனம் பக்கம் 96 – 99
- நிதி மூலதனம் பக்கம் 86

ஊக்கமுடைய விரைவு இயக்க சூழலுடைய குழு

2017ல் முக்கிய முன்னெடுப்புக்கள்

செயலாற்றம் வாயிலான கலாச்சாரத்தை கட்டியெழுப்புதல்

மூலோபாய மற்றும் வியாபாரத் திட்டமிடல் செயல் முறையில் பங்கெடுப்பதற்கு ஊழியர்களுக்கு ஊக்குவித்தல்.

சிக்கலான தொழில்கள் மற்றும் தலைமைத்துவத் தேர்ச்சியிலான பயிற்சி ஊக்கமளித்தல்.

பரந்த அளவிலான தொடர்ச்சியான அபிவிருத்தித் திட்டங்கள்

தொழில்சார் பரீட்சைகளை நிறைவுசெய்வதற்கான ஊழியர்களுக்கு ஊக்கமளித்தல்.

நலன்கள் மற்றும் பாடத்திட்ட நடவடிக்கைகள் வழங்குவதன் மூலம் ஊழியர்களுக்கு ஊக்கமளித்தல்.

2017ல் அடையப்பட்டவை

மனித மூலதனம்
112 – 118 பக்கம் பார்க்க

2018 ஒருபார்வை

மனித மூலதனம் பக்கம் 121

பொறுப்பு வாய்ந்ததும், சமூகரீயில் கடப்பாடுடையதும்

2017ல் முக்கிய முன்னெடுப்புக்கள்

சமூகம் மற்றும் சூழலுக்கு ஆதரவளிப்பதன் வாயிலாக எடுத்துக்காட்டான நிறுவன பொறுப்பு நடைமுறைகள்.

முக்கியமான பங்குதாரர்களுடன் முயற்சியுடன் ஈடுபடுதல

பங்குதாரர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

2017ல் அடையப்பட்டவை

நிதி மூலதனம்
பக்கம் 86

சமூகம் தொடர்பான மூலதனம் பக்கம் 135-139

இயற்கை மூலதனம் 143-145

2018 ஒருபார்வை

சமூகம் தொடர்பான மூலதனம் பக்கம் 139

இயற்கை மூலதனம்
பக்கம் 145

மிகச் சிறந்த மூலதன முகாமை

2017ல் முக்கிய முன்னெடுப்புக்கள்

புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை எதிர்பார்த்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் மூலமான மூலதன முகாமைத்துவம்.

சொத்துத்தளத்தில் முன்னேற்றம்.

செயற்பாடற்ற சொத்துக்களைக் குறைத்தல்

2017ல் அடையப்பட்டவை

நிதி மூலதனம்
பக்கம் 77,82 மற்றும் 84

இடர் முகாமைத்துவ அறிக்கை பக்கம் 236 – 238

2018 ஒருபார்வை

தலைவரின் அறிக்கை
பக்கம் 23

இடர்முகாமைத்துவ அறிக்கை
237 பக்கம்

விவேகமான இடர் மற்றும் இணக்கமான கலாச்சாரம்

2017ல் முக்கிய முன்னெடுப்புக்கள்

ஆழமான சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ நடைமுறையின் நடைமுறைப் படுத்தல் மற்றும் வலுப்படுத்தல்

ஊக்கத்துடன் இடரை மதிப்பீடு செய்தல் மற்றும் குறைத்தல் மற்றும் செயற்திறன் வாய்ந்த ஆளுகை முறைகளை பேணல்.

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தெரிநிலை முன்னெடுப்புக்கள் மற்றும் கட்டாயமான இணக்கப் பயிற்சி

2017ல் அடையப்பட்டவை

நிதி மூலதனம் பக்கம் 84

மனித மூலதனம் பக்கம் 119

சமூகம் தொடர்பான மூலதனம் பக்கம் 125

இடர்முகாமைத்துவ அறிக்கை பக்கம் 201-238

2018 ஒருபார்வை

அக்கறைதாரர்கள் பக்கம் 51

நிதியியல் மூலதனம்
பக்கம் 88 – 89

இடர் முகாமைத்துவ அறிக்கை பக்கம் 237

விளைவிக்கக்கூடிய இச்செயன்முறையில் சமநிலைவையை ஏற்படுத்திக்கொள்ளுவதற்கு முயற்சி செய்கிறது. விவேகமான மூலதன ஒதுக்கீடு மற்றும் முகாமையானது, நிலையான வளர்ச்சியிலான முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

வளங்கள்	வளங்களை முகாமைத்துவம் செய்தல்	குறிப்பு
ஊழியர்கள்	மூலோபாய முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கும், வியாபாரத்தேவைகளுக்கு ஈடுகொடுக்கவும் நாம் எமது தொழிற்பாட்டையும் பேணுகின்றோம்.	மனித மூலதனம் பக்கம் 108
வாடிக்கையாளர்கள் தொடர்பு	எமது வாடிக்கையாளர்களின் பற்றுதியை அவர்கள் தேவைகளை விளங்கிக் கொள்ளல் மற்றும் எம்முடனான அவர்களது அனுபவத்தை முன்னேற்றுதல் ஆகியவற்றின் மூலம் ஆதரிக்கின்றோம். செயற்திறன் வாய்ந்தவகையில் எமது வாடிக்கையாளர் தளத்தை முன்னேற்றமடையச் செய்யத்தக்கவகையில் தொழில்நுட்பத்தை ஆற்றல் வாயந்ததாக ஆக்கியுள்ளோம்.	வாடிக்கையாளர் மூலதனம் பக்கம் 126
தொழில்நுட்பம்	தொழில்நுட்பத்திலான எமது முதலீடுகள், வியாபாரத்தில் எமது விரிவுக்கு ஆதரவளிக்கும் தகவல் தொழில்நுட்ப அடிப்படைகளுக்கு ஆதரவளிப்பதை உறுதி செய்கின்றன. இவ்வாண்டிலிருந்து எமது செலவழிப்பானது மையத்தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வலுப்படுத்தியதிலிருந்து, வாடிக்கையாளர் அனுபவத்தை அதிகரிப்பதற்காக எமது இழக்க அடிப்படையிலான வரிசலுகைகளைக் கட்டியெழுப்புவதற்கே மாற்றமடைந்தது.	உற்பத்தி மூலதனம் பக்கம் 103 அறிவுசார் மூலதனம் பக்கம் 96
சமூகம் மற்றும் ஏனைய தொடர்புகள்	எமது தொடர்புகளை சட்டபூர்வமாக்குதல் மற்றும் நற்பெயர் மற்றும் நம்பிக்கை வாயிலாக நாம் கட்டியெழுப்பியுள்ளோம்.	சமூகம் தொடர்பு மூலதனம் பக்கம் 124
உட்கட்டமைப்பு	எமது கிளை அமைப்பினை அவற்றின் அடைவினை அதிகரிக்கக்கூடிய நம்பிக்கையை உயர்த்தியதுடன் சேவை வரிசைகளிலிருந்து கிளைகள் விற்பனை மையங்கள் மாற்றப்பட்டன பயன்படுத்துவோரின் அனுபவம் மற்றும் பயன்படுத்தும் நேரக்குறைப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு காசு மீளப்பெறும் மையங்களை அதிகரித்ததுடன் தற்போதுள்ள தன்னியக்க காசு இயந்திரங்களை தரமுயர்த்தியுள்ளோம்.	தயாரிக்கப்பட்ட மூலதனம் பக்கம் 102
இயற்க்கை மூலவளங்கள்	பசுமையைக் கட்டியெழுப்பும் முன்னெடுப்புக்களில் எமது சூழல் தொடர்பிலான குறைப்பிற்கான முயற்சியைக் கொண்டுள்ளோம். பசுமை வங்கித்தொழில் முன்னெடுப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.	இயற்கை மூலதனம் பக்கம் 142
நிதி மூலதனம்	விநியோகிக்கப்படத்தக்க நிதிப் பெறுமதியை உருவாக்கிய பதிவுசெய்யப்பட்ட வருவாய்களைக் கொண்ட மற்றுமொரு ஆண்டு. Basel III CARக்கான அதிகரிப்பினையேற்படுத்தக்கூடிய நிதியியல் ஆழத்தை உறுதிப்படுத்தக்கூடிய எமது இலாபத்தை தக்க வைத்துக்கொள்ளுவோம்.	நிதி மூலதனம் பக்கம் 73
வைப்புத்தளம்	அதிகமான போட்டிக்கு மத்தியிலும் எமது வாடிக்கையாளர் வைப்புக்களை நாம் அதிகரித்துள்ளோம்.	நிதி மூலதனம் பக்கம் 83

மூலதனத் தேவைப்பாடுகளை முகாமை செய்தல்

மூலதன முகாமைப்படுத்தலில் தேசிய சேமிப்பு வங்கி சுறுசுறுப்பான உள்ளடக்கமான மற்றும் முன்னோக்கிய பார்வையுடனான அணுகுமுறையை மேற்கொள்ளுகிறது. கீழேயுள்ளவை, 2017ல் ஒவ்வொரு மூலதனத்துடனும் தொடர்புடைய ஆரம்ப வர்த்தகமுறைகளாக விளங்குகின்றது.

நிதி மூலதனம்

இயல்பான நிதி மூலதன வளர்ச்சி மற்றும் தொழிற்பாட்டுச் செயற்திறனிலான முன்னேற்றம் ஆகிய அனைத்து மூலதனத்திலும் விரிவை ஏற்படுத்தின. எனினும், ஆகக்குறைந்த முதலீடு மட்டமொன்று பேணப்படுவதற்கான வங்கியின் தேவைப்படானது. எமது ICT முறைமைகளிலான முதலீடுகளில் வீழ்ச்சியொன்றை ஏற்படுத்தும்

தயாரிக்கப்பட்ட மூலதனம்

எமது அடைவிலும், நாடெங்கிலுமுள்ள வாடிக்கையாளர் மையங்களிலும் ஏற்பட்ட விரிவாக்கமானது மூலதனத்தில் குறைப்பை ஏற்படுத்தியது. வங்கியானது எமது வியாபாரத்துக்கு ஆதரவான அவசிய முதலீடுகளாக இதனை நோக்குவதுடன் எதிர்காலத்தில் நிதி சம்பந்தமான வருவாய்களுக்கும் இது வழி வகுக்கும். வங்கி, சூழல் தொடர்புடைய உறுதியான நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள உட்கட்டமைப்பினை முன்னேற்றுதல் மற்றும் சமகாலப்படுத்துதல் ஆகியவற்றினூடாக சூழல்மீதான எந்த எதிர்மறையான தாக்கத்தினையும் குறைப்பதற்காக விசேடமான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

அறிவுசார் மூலதனம்

அறிவுசார் மூலதனத்திலான முதலீடுகள், தொழிற்பாட்டுத் திறன், உள்ளக முறைமைகள் மற்றும் வங்கியின் செய்முறைகள் ஆகியவற்றினை முன்னேற்றுவதற்கு வழிவகுத்துள்ளது. ICT உட்கட்டமைப்பிலான வங்கியின் முதலீடுகள், தயாரிக்கப்பட்ட மற்றும் அறிவுசார் மூலதனத்தில் சாதகமான தாக்கத்தைக் கொண்டிருப்பினும் நிதி மூலதனம் மீது எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருக்கும்.

மனித மூலதனம்

ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள், நலம் தொடர்பான நன்மைகள் மற்றும் ஊழியர்களின் நலனை அதிகரிக்கக்கூடிய முன்னெடுப்புக்கள் ஆகியன மனித மற்றும் சமூக மற்றும் தொடர்பு மூலதனம் மீது சாதகமான தாக்கத்தை கொண்டிருப்பதுடன் நிதி மூலதனத்தை எதிர்மறையாகப் பாதித்திருந்தன. வங்கி ஊழியர்களின் பயிற்சிக்கான முதலீடுகள், அறிவுசார் முதலீடுகள் அதிகரிப்பை விளைவித்திருக்கிறது.

சமூகம் மற்றும் உறவுசார் மூலதனம்

மேற்கொள்ளப்படும் CSR செயற்த்திட்டத்தினூடாக சமூகம் மற்றும் சூழல் மீதான மேற்கொள்ளப்படும் மூலதனம், சமூக மற்றும் சூழல் மீதான இயற்கை மூலதனங்களை வலுப்படுதியதுடன், குறுங்காலத்தில் எமது நிதி மூலதனத்தை குறைத்தன. இம்முன்னெடுப்புக்கள் பொருளாதார மற்றும் சூழல் உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்கும்.

இயற்கை மூலதனம்

தயாரிக்கப்பட்ட மூலதனத்திலான எமது தொழிற்பாடுகளின் விரிவு இயற்கை மூலதனத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. புதுப்பிக்கக்கூடிய மூலவளங்கள், திறன்வாய்ந்த வலு முகாமைத்துவம், கடதாசியற்ற தொடர்பாடல்கள், பசுமைக் கட்டடங்கள், சூரிய கலங்களை நிறுவுதல் மற்றும் மேலும் அதிகமானவற்றின் பயன்பாடு போன்ற முன்னெடுப்புக்களை ஏற்றுக்கொள்ளுவதன் மூலம் சூழல் மீதான தனது தொழிற்பாடுகளில் ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளை வங்கி மேற்கொண்டுள்ளது.

தைரியமாக, புதியவொரு இலத்திரனியல் உலகை நோக்கி...

தேசேவ இலத்திரனியல்மயப்படுத்தப்பட்ட புதிய நிதியியல்சார் சூழலியலை தோற்றுவித்திருக்கிறது. அதுபோல, தொடர்ச்சியாக அக்கறைதாரர்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புபட்டு இருப்பதற்கும், அவர்களுடன் இணைந்து செயலாற்றவும் இலத்திரனியல் இடைவெளியை குறைக்கவேண்டும் என்பதனை உணர்ந்து செயல்படுவோம்.



முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

நிதியியல் மூலதனம்


நிதி மூலதனம் என்பது முக்கியமாக மூலதனத்தின் வேறு வடிவங்களை மாற்றுவதன் மூலம் மதிப்புக்களை உருவாக்கப் பயன்படும் நிதிகளின் தொகுப்பாகும். இந்த மூலதனம் நிதி (பங்கு மூலதனம் மற்றும் கடன்) மற்றும் தொழிற்பாடுகள் (வைப்பு) மூலம் எழுப்பப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் நிதி, அங்கீகரிக்கப்பட்ட இடர் சட்டகத்தினுள் நிலையான வருமானத்தை உருவாக்கவும் மற்றும் குறைந்தபட்ச சட்டத் தேவைகளை பூர்த்தி செய்யவும், மீண்டும் தொழிற்பாடுகள் மற்றும் மூலதன முதலீட்டுத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

கண்ணோட்டம்

2017 ஆம் ஆண்டு, தேசிய சேமிப்பு வங்கிக்கான ஒரு முக்கியமான ஆண்டு ஆகும். ஆண்டு முடிவில் எப்போதுமில்லாதவாறு உயர்வான வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூபா. 9.6 பில்லியன் கொண்ட வரிக்குப் பிந்திய உயர்வான இலாபத்தினையும் பதிவு செய்து கொண்டது. வங்கியானது அனைத்து முக்கிய வியாபார செயற்பாடுகளிலும் வளர்ச்சியை கண்டது. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் அரச பிணையங்களின் வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட ரூபா. 1.1 பில்லியன் என்பவை இச் செயலாற்றத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்தன. வினைத்திறன் மிக்க சந்தைப்படுத்தல் திட்டங்களின் அமுலாக்கம், வர்த்தக நாமத்தை வலுப்படுத்துதலின் மீதான முதலீடுகள் மற்றும் செயலாற்றுத் திறன் வாய்ந்த இடர் முகாமைத்துவம் போன்ற மற்றைய காரணிகளும் இந்த சாதனைகளை எளிதாக்கியது. வட்டிச் செலவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் வட்டி எல்லை வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உருவான தாக்கத்தை வியாபார கொடுக்கல் வாங்கல்களிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பு ஈடு செய்தது. இதன் விளைவாக, வட்டி வருமானமானது ரூபா. 103.4 பில்லியனைப் பதிவு செய்தது.

தேசிய சேமிப்பு வங்கி ரூபா. 1 ரில்லியனைக் கொண்ட மாபெரும் சொத்துத் தளத்தைக் கொண்ட முதலாவது சிறப்பியல்பு உரிமம் பெற்ற வங்கியானமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். கடன் தொகுதியின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் மற்றும் சிறப்பான சொத்துத் தரத்தை நிரூபிக்கும் முகமாக மொத்த செயற்படாக் கடன்களின் விகிதம் வங்கித்தொழில் துறைச் சராசரியில் மிகவும் குறைவானவற்றுள் ஒன்றான 1.3% இற்கு குறைவடைந்தது. பண உள்வருகைகள் வியாபாரத்தின் அதிகரித்துச் செல்லும் சந்தைப் பங்கானது, புலம்பெயர் இலங்கையர்கள் வங்கியின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றது.

வங்கியின் செயற்படாத கடன் வீதம் (மொத்தம்)
எதிர் வங்கித்துறை



ஆண்டு	வங்கி %	வங்கித்துறை %
2013	7.0	5.6
2014	7.6	4.2
2015	3.5	3.2
2016	1.6	2.6
2017	**1.3**	**2.5**

வருமானக் கூற்றின் பகுப்பாய்வு

சுருக்க வருமானக் கூற்று

விடயம்	2017	2016	அதிகரிப்பு / (குறைவு) ரூ. மில்.	வளர்ச்சி %
வட்டி வருமானம்	**103,400**	86,390	17,010	19.69
வட்டிச் செலவு	**78,445**	60,923	17,522	28.76
வட்டியல்லா வருமானம்	**4,417**	1,009	3,408	337,80
செயற்பாட்டுச் செலவு	**11,047**	10,344	703	6.80
மதிப்பிழப்புச் செலவு	**693**	(100)	793	(795.37)
வரிக்கு முன்னரான இலாபம்	**14,029**	13,303	726	5.46
வரி	**7,913**	6,596	1,317	19.96
வரிக்குப் பின்னரான இலாபம்	**9,610**	9,498	112	1.18

GRI 201-1

நேரடியான பொருளாதார பெறுமதி விரிவாக்கமும் விநியோகமும்

	2017 ரூ. மில்.	2016 ரூ. மில்.
நேரடி பொருளாதார பெறுமதி உருவாக்கம்	**107,817**	87,399
செயற்பாட்டுச் செலவு	**4,643**	3,613
வைப்பாளர்கள்	**78,445**	60,923
ஊழியர்கள்	**6,887**	6,235
மூலதனம் வழங்கியவர்கள்	**5,111**	12,026
அரசாங்க பங்கு இலாபம் நீங்கலாக	**8,331**	7,225
நேரடி பொருளாதார பெறுமதி பிடித்து வைக்கப்பட்டது	**4,400**	(2,623)
நேரடி பொருளாதார பெறுமதி விநியோகிக்கப்பட்டது	**103,417**	90,022

தேறிய வட்டி வருமானம்

வங்கியின் மொத்த வருமானத்தில் 95.9%ஐ பிரதிபலிக்கின்ற வட்டி வருமானமானது கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா. 86.4 பில்லியனை விட 19.7% ஆல் உயர்வடைந்து இவ்வாண்டில் ரூபா. 103.4 பில்லியனை அடைந்தது. வட்டி வருமானத்திலேற்பட்ட வலுவான வளர்ச்சியையொட்டி வங்கியின் மொத்த வருமானமும் 23.4% ஆல் அதிகரித்து ரூ. 107.8 பில்லியனை எய்தியது. இது கடன் மற்றும் முற்பணங்களின் துறையில் பரந்தளவில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் அரச பிணையங்களின் மீதான வட்டி வருமானம் ஆகியவற்றால் உந்தப்பட்டது.

கடன் மற்றும் முற்பணங்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானமானது குறிப்பிடத்தக்க 33.9% அதிகரிப்புடன், 2016 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 32.7 பில்லியனுக்கு எதிராக நடப்பாண்டில் ரூபா. 43.8 பில்லியனை அடைந்தது. வங்கியின் வட்டி வருமானத்திற்கு 56.9% பங்குடன் பாரியளவிலான பங்களிப்பைத் தொடர்ச்சியாக செய்து வரும் இலங்கை அரச முறிகளிலிருந்தான வட்டி வருமானம் 2016 இன் ரூ. 53.1 பில்லியனிலிருந்து 11% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 58.9 பில்லியனை அடைந்தது.

வட்டிச் செலவு கடந்த வருடத்தில் அறிக்கையிடப்பட்ட ரூ. 60.9 பில்லியனுக்கு எதிராக 28.8% ஆல் ரூ. 78.4 பில்லியனாக வளர்ச்சியடைந்தது. 35.6% ஆல் வளர்ச்சியடைந்து ரூ. 60.2 பில்லியனை அடைந்த, ஏனைய வாடிக்கையாளர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டிச் செலவே இதன் பிரதான காரணியாகும். உயர்ந்து செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் குறுங்கால வைப்புகளுக்கான உயர்ந்து செல்லும் மீள்விலையிடல் ஆகியவற்றால் 2017 இல் வட்டிச் செலவினங்களில் ஒரு உறுதியான அதிகரிப்பு ஏற்பட்டது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் அரச பிணையங்களின் மீதான முதிர்ச்சிக்காகப் பிடித்து வைக்கப்பட்ட முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கும் மேலாக வட்டி செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு தேறிய வட்டி வருமானத்தை பாதித்ததுடன் தேறிய வட்டி எல்லையையும் சுருங்கச் செய்தது. இதன் விளைவாக, வங்கியின் மொத்தச் செயற்பாட்டு வருமானத்தில் 85.3% வகை கூறும் தேறிய வட்டி வருமானம் 2016 இன் ரூ. 25.5 பில்லியனிலிருந்து 2017 இல் 2% ஆல் ரூ. 25 பில்லியனுக்கு குறைவடைந்தது. தேறிய வட்டி எல்லையும் கடந்த வருடத்தில் பதியப்பட்ட 2.9% இலிருந்து 2.6% ஆக வீழ்ச்சியடைந்தது.

வட்டியல்லா வருமானம்

மொத்த வருமானத்தில் வட்டியல்லா வருமானமானது 4.1% பங்களிப்பை செய்வதுடன் கட்டணம் மற்றும் தரகு வருமானம், வர்த்தகத்திற்கான நிதி முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/நட்டம் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தையும் உள்ளடக்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து கூறுகளிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் வங்கியின் வட்டியல்லா வருமானத்தை 337.8% ஆக அபார வளர்ச்சியடையச் செய்து 2016 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட ரூ. 1 பில்லியனுக்கெதிராக 2017 இல் ரூ. 4.4 பில்லியனை தொடச் செய்தது.

- கட்டணம் மற்றும் தரகு வருமானம் 20.4% ஆல் உயர்வடைந்து ரூ. 783.8 மில்லியனை அடைந்தது. இது ஆண்டின் போது 23.3% வளர்ச்சியடைந்து ரூ. 675.4 மில்லியனை வருமானமாகப் பெற்ற கடன்களிலிருந்து பெறப்பட்ட கட்டணம் மற்றும் தரகினால் பெறப்பட்டதாகும்.

- வர்த்தகத் துறையிலிருந்தான தேறிய வருமானமானது, வட்டி வீதங்களிலிருந்து பெறப்பட்ட சந்தைக் குறி (Mark to Market) இலாபத்தின் உதவியுடன் 352.4% வளர்ச்சியைப் பெற்று கடந்த வருடம் பெற்ற ரூ. 39.3 மில்லியன் நட்டத்திற்கெதிராக இவ்வாண்டு ரூ. 1.2 பில்லியன் இலாபத்தை அடைந்துள்ளது.


- வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களினடிப்படையில் உண்டான இலாபம், விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதி முதலீடுகளிலிருந்தான இலாபம் மற்றும் சேய் நிறுவனத்திடமிருந்தான பங்கிலாபம் ஆகியவற்றின் விளைவாக ஏனைய தொழிற்பாட்டு வருமானமானது ரூ. 357.3 மில்லியனிலிருந்து 381.5% ஆல் ரூ.1.7 பில்லியனாக வளர்ச்சியடைந்தது.

மொத்தத் தொழிற்பாட்டு வருமானம்

தேறிய வட்டி வருமானத்திலேற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் தரகு மற்றும் கட்டணம், வியாபார வருமானத்திலிருந்தான தேறிய இலாபத்துடன் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் என்பனவற்றிலேற்பட்ட முன்னேற்றம் இணைந்து மொத்தத் தொழிற்பாட்டு வருமானமானது 2016 இலிருந்த ரூ. 26.3 பில்லியனை விட 11.1% ஆல் அதிகரித்து ரூ. 29.3 பில்லியனை அடைவதற்கு முக்கிய பங்காற்றின. வட்டியுடன் தொடர்புடைய கருவிகள்/சாதனங்கள் மற்றும் பங்குகளிலிருந்து பெறப்பட்ட தேறிய மற்றும் தேறாத இலாபங்களின் பொருட்டு மொத்தத் தொழிற்பாட்டு வருமானத்திற்கு வட்டியல்லா வருமானத்திலிருந்தான பங்களிப்பும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் மேம்பட்டுள்ளது.

மொத்த செயற்பாட்டு வருமானம்

[ரூபா. மில்.]



	2013 ரூ. மில்	2014 ரூ. மில்	2015 ரூ. மில்	2016 ரூ. மில்	2017 ரூ. மில்
தேவவ	10,107	21,380	26,983	25,467	**24,955**
ஏனைய வருமானம்	1,097	3,512	678	359	**3,634**
தேறிய தரகு மற்றும் கட்டணங்கள்	195	286	364	513	**674**


பெறுமதிக் குறைப்புச் செலவீனங்கள்

முன்னேற்பாடான இடர் முகாமைத்துவ அணுகுமுறை பிரயோகத்தினால் சொத்துத் தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றமானது கடன் தொகுதியில் ஏற்பட்ட வளர்ச்சியினாலுண்டான பெறுமதிக் குறைப்பு ஏற்பாட்டை பகுதியளவு ஈடு செய்தது. இதன் விளைவாகப் பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு ரூ. 792.9 மில்லியனால் அதிகரித்தது. இது, எதிர்பாரா நட்டங்களுக்கான பாதுகாப்பாக வங்கியின் ஏற்பாட்டுக் காப்பை முன்னெற்றமடையச் செய்தது.

தொழிற்பாட்டு செலவுகள்


தொழிற்பாட்டுச் செலவுகள் கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ரூ. 10.3 பில்லியனுக்கெதிராக 6.8% அதிகரிப்பைப் பதிவிட்டு ரூ. 11 பில்லியனாக நிலைத்துள்ளது. இவ் அதிகரிப்பானது முதன்மையாக ஆளணிச் செலவில் ஏற்பட்ட 10.4% வளர்ச்சியால் தூண்டப்பட்டது. புதிய உட்சேர்க்கைகள் மற்றும் துறைசார் அமைதியை நிலைநிறுத்தவும் நீண்ட காலமாக நிலவி வந்த குறைபாடுகளை தீர்க்கும் முகமாக நிரந்தர பிரிவினுள் உள்ளெடுத்தமை போன்றவற்றின் விளைவாகவே ஆளணிச் செலவு அதிகரித்தது. எனினும், தொழிற்பாட்டு செலவுகளிலேற்பட்ட வளர்ச்சி நாட்டின் சராசரி பணவீக்க வீதமான 7.3% இலும் பாதீட்டு எதிர்பார்ப்பின் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்திற்கும் கீழாக பேணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வங்கியானது தனது செலவுகளை செயல்திறன் வாய்ந்த வகையில் முகாமை செய்தமை, வரவேற்கத்தக்க வகையில் பெறுமதி சேர் வரி நீங்கலான வருமானத்துக்கான செலவு விகிதம் 2016இல் காணப்பட்ட 39.6% இற்கு எதிராக 38% ஐ பதிவு செய்யவும் அதன் துறை சார் போட்டியாளர்களுக்கும் கீழான விகிதத்தைப் பதிவு செய்யவும் வழி கோலியது.

செயற்பாட்டுச் செலவுகளின் உள்ளடக்கம்



செலவு	2017		2016		வளர்ச்சி %
	ரூ. மில்.	%	ரூ. மில்.	%	
ஊழியருக்கான செலவு	**6,887**	**62.3**	6,235	60.3	10.45
ஏனைய நிருவாகச் செலவு	**4,161**	**37.7**	4,109	39.7	1.26
	11,047	**100.0**	10,344	100.0	6.80

வருமானச் செலவு விகிதம்




ஆண்டு	வருமானத்திற்கான செலவு %
2013	62.2
2014	36.7
2015	37.4
2016	39.7
2017	**38.0**

வரி விதிப்பு

நேரடியான மற்றும் மறைமுக வரிகளாக வங்கியின் அரசாங்கத்திற்கான பங்களிப்பானது 19.9% ஆல் அதிகரித்து கடந்த வருடத்தின் ரூ. 6.6 பில்லியனை விட 2017 இன் போது ரூ. 7.9 பில்லியனாக அதிகரித்தது. இத்தொகை ரூ. 4.4 பில்லியன் பெறுமதியான வருமான வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேச நிர்மாண வரியான ரூ. 3.5 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேச நிர்மாண வரி ரூ. 2.8 பில்லியனில் இருந்து குறித்த ஆண்டில் ரூ. 3.5 பில்லியனாக 25.2% வளர்ச்சியை பதிவு செய்து அதிகரித்துள்ளது. நவம்பர் 2016 இல் 11% இலிருந்து 15% ஆக உயர்த்தப்பட்ட ஆனால் 2017 இலேயே முழுதுமாக உணரப்பட்ட நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியே இதற்கான முதன்மைக் காரணியாகும். நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேச நிர்மாண வரி ஆகியவை வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப்படாததால் வருடத்திற்கான வருமான வரியும் கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட ரூ. 3.8 பில்லியனுக்கு எதிராக 16.1% ஆல் ரூ. 4.4 பில்லியனாக அதிகரித்தது.

வரி




ஆண்டு	பெ.சே.வரி ரூ. மில்.	தே.நி.வரி ரூ. மில்.	வருமான வரி ரூ. மில்.
2013	624	-	1,095
2014	1,745	291	3,606
2015	2,062	375	4,361
2016	2,406	386	3,805
2017	**3,083**	**411**	**4,419**

இலாபமீட்டும் தன்மை

இவ்வருடம் வங்கி தனது வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு 2016 இல் ரூ. 13.3 பில்லியனிலிருந்து 5.5% ஆல் வளர்ச்சியடைந்து ரூ. 14.0 பில்லியனை பதிவு செய்து கொண்டது. வரிக்கு முன்னரான இலாபத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் போல் அல்லாது, உயர் வருமான வரி வீதத்தால் மட்டுப்படுத்தப்பட்டதன் மத்தியிலும் வரிக்கு பிந்திய இலாபமானது 2016 இல் ரூ. 9.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது சார்பளவில் அதிக மாற்றமடையாது 2017 இல் ரூ. 9.6 பில்லியனாக 1.2% ஆல் மட்டுமே அதிகரித்தது. கடன் மற்றும் முற்பணங்கள் துறையின் விரிவாக்கம் மற்றும் வட்டியல்லா வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியானது தேறிய வட்டி எல்லையின் வீழ்ச்சி மற்றும் பெறுமதி குறைப்பு மற்றும் வரிகளின் அதிகரிப்புக்கு மத்தியிலும், வங்கியை அதி உயர் இலாபத்தை பதிவு செய்வதற்கு வழிசமைத்தது.

சொத்து தளத்தில் ஏற்பட்ட 11% வளர்ச்சியின் விளைவாக சொத்துக்களின் மீதான வருவாய் 1.5% எனும் அதே அளவிலேயே பேணப்பட்டது. சொத்து, பொறி மற்றும் ஆதனத்தின் மீது உருவான மீள் மதிப்பீட்டு மிகையான ரூ. 4.5 பில்லியன் பொருட்டு பங்கு மூலதனம் மீதான வருவாய் கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 29.4% ஐ காட்டிலும் குறைவடைந்து 26.5% இல் நிறைவுற்றது.

வரிக்கு முந்திய இலாபமும் வரிக்கு பிந்திய இலாபமும்




ஆண்டு	வமுஇ ரூ. மில்.	வபிஇ ரூ. மில்.
2013	2,279	1,184
2014	10,472	6,867
2015	13,034	8,672
2016	13,303	9,498
2017	**14,029**	**9,610**

தேசத்திற்கான பங்களிப்பு

வங்கியானது விசேட கட்டணம், பங்கிலாபம், அறவீடு மற்றும் காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு போன்ற வழிகள் ஊடாக வரிகளுக்கு மேலதிகமாக தேசத்தின் அபிவிருத்திக்கு தேசத்தின் சேமிப்பு வங்கியாக அதன் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குகின்றது. அரசாங்கத்திற்கான தேசத்தின் பங்களிப்பாக கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ. 19.2 பில்லியனுக்கு எதிராக 2017 ஆம் ஆண்டின் போது ரூ. 13.4 பில்லியனை பதிவு செய்தது. நிலையான வளர்ச்சியின் பொருட்டு இலாபத்தை தக்கவைத்துக் கொள்ளும் முடிவின் பெறுபேறாக, வங்கியின் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு இவ் ஆண்டில் குறிப்பிடத்தக்க பங்கிலாபமாக ரூ. 5.1 பில்லியனை செலுத்தியது. இது 2016 இல் செலுத்திய ரூ. 12 பில்லியனை விட 57.5% ஆல் குறைவானதாகும்.

தேசத்திற்கான பங்களிப்பு



ரூ. மில்.	2017 ரூ. மில்.
பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமாண வரி	**3,494**
வருமான வரி	**4,419**
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட சிறப்புக் கட்டணம்.	**320**
பங்கிலாபம்	**5,111**
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்பு	**96**
மொத்தம்	**13,440**

நிதி நிலைப் பகுப்பாய்வு

சொத்து

நிதி நிலைச் சுருக்கம்

	2017 ரூ. மில்.	2016 ரூ. மில்.	2017 %	2016 %
மொத்த சொத்து	**1,012,103**	911,704	**100**	100
நிதியியல் முதலீடு – முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை	**544,273**	505,824	**53.78**	55.48
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	**360,310**	291,977	**35.60**	32.03
வங்கிகளிடமிருந்தான கடன்கள் மற்றும் வருமதிகள்	**27,715**	31,834	**2.74**	3.49
வர்த்தகப்படுத்தலுக்கான ஏனைய நிதியியல் முதலீடுகள்	**6,472**	20,291	**0.64**	2.23

வங்கியானது ஆண்டின் இறுதியில் மைல்கல் சாதனையாக ரூ. 1 ரில்லியன் சொத்துத் தளத்தை அடைந்து கடந்த ஆண்டிலிருந்த ரூ. 911.7 பில்லியனிலிருந்து 11% ஆல் உயர்வடைந்தது. தேசிய சேமிப்பு வங்கி ரூ. 1 ரில்லியனை அடைந்த முதலாவது சிறப்புரிமம் பெற்ற வங்கியாக திகழ்வதோடு மட்டுமல்லாது அதன் உருவாக்கத்திலிருந்தான 45 வருடங்களுள், குறுகிய காலத்தில் ரூ. 1 ரில்லியனை அடைந்த இலங்கையிலுள்ள வங்கி என்ற பெருமையையும் தக்கவைத்துக் கொள்கின்றது. மொத்த சொத்துத் தளத்தின் 95% இற்கும் மேலான பங்கை வகிக்கின்ற வட்டி உழைக்கும் கடன் துறையும் நிதியியல் முதலீடுகளும் முக்கிய/வியாபார செயற்பாடுகளின் மீதான கவனத்தின் செயலாற்ற உறுதியினை பிரதிபலிக்கின்றது.


வங்கியின் கடன்கள் மற்றும் முதலீடுகள் துறையானது 2017 இன் போது 10.5% வளர்ச்சியுடன் ரூ. 92.1 பில்லியனால் அதிகரித்தது. மொத்த கடன்கள் மற்றும் முதலீடுகளின் அதிகரிப்பில் 69.7% ஆக காணப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 64.2 பில்லியன் அதிகரிப்பே முதன்மையாகப் பங்களித்தது. எனினும், தேறிய மூலதன இலாபங்களை பெற்றுக்கொள்ளலின் பொருட்டு அகற்றப்பட்ட வர்த்தகப்படுத்தலுக்கான தொகுதி மற்றும் விற்பனைக்காக கிடைக்கத்தக்க தொகுதியில் ஏற்பட்ட எதிர்மறை வளர்ச்சியான ரூ. 14.3 பில்லியன் மத்தியிலேயே அடையப்பட்டது. வைப்புகளுக்கான அரச பிணையங்கள் 2016 இன் 66.4% இலிருந்து 2017 இன் முடிவில் 62.1% ஆக வீழ்ச்சியடைந்தமையே இதற்கு சான்று பகர்கின்றது.

கடன்கள் மற்றும் வருமதிகள்

சொத்தின் உள்ளடக்கமானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பாரியளவில் மாற்றமடையவில்லை. முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் 53.8% பங்குடன் முதன்மையானதாக இருப்பதைத் தொடர்ந்து கடன்கள் மற்றும் வருமதிகள் மொத்தச் சொத்தில் 38.3% ஐ பிரதிபலிக்கின்றது. ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சி கடந்த வருட ரூ. 292.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 23.4% ஆல் அதிகரித்து ரூ. 360.3 பில்லியனை அடைந்தது. நிறுவன கடன் மற்றும் சில்லறைக் கடன் பிரிவுகளான தனிப்பட்ட கடன்கள், வைப்புகளுக்கு எதிரான கடன்கள் மற்றும் தங்க நகைகளுக்கான முற்பணங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி மொத்த வளர்ச்சிக்கு துணையளித்ததுடன்

மொத்த தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்களின் வங்கியின் சந்தைப் பங்கினை 2016 இல் 5.7% இலிருந்து இவ்வருட முடிவில் 5.9% இற்கு முன்னேற்றவும் அனுமதியளித்தது. கடன்கள் மற்றும் வருமதிகள் துறையானது உட்கட்டமைப்பு, கட்டுமானம், வீடமைப்பு மற்றும் கல்வித்துறைகளை கருத்திற் கொண்டு பல துறைகளிடையே பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடன் வளர்ச்சி



ஆண்டு	கடன் சொத்துப்பட்டியல் ரூ. பில்.	வளர்ச்சி %
2013	166	2.4
2014	223	33.8
2015	272	22.0
2016	324	19.2
2017	**388**	**19.8**

முதலீடுகள்

முதிர்வுக்காக வைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் கடந்த வருடம் அறிக்கையிடப்பட்ட ரூ. 505.8 பில்லியனுக்கு எதிராக சிறியளவான அதிகரிப்பான 7.6% ஆல் உயர்வடைந்து ரூ. 544.3 பில்லியனை எய்தியது. ஆனபோதிலும், அதிக வருமானத்தைத் தோற்றுவிக்கக் கூடிய கடன்கள் மற்றும் வருமதிகளை நோக்கிய பரவலாக்கம் மற்றும் சந்தைத் தளம்பல்களுக்கான அபாயத்தை மட்டுப்படுத்தலின் நிமித்தம் முதலீடுகளை அகற்றுதல்/விற்பனை செய்தலானது, வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டிருந்த நிதிச் சொத்துக்களை 2016 இல் இருந்த ரூ. 20.3 பில்லியனுக்கு எதிராக 68.1% ஆல் வீழ்ச்சியடையச் செய்து இவ் ஆண்டில் ரூ. 6.5 பில்லியன் எய்துவதனை இயலச் செய்தது. விற்பனைக்காக கிடைக்கத்தக்க துறைகளும் முதலீட்டு இலாபங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மேற்கொண்ட விற்பனைகளின் விளைவாக ரூ. 0.5 பில்லியனால் குறைவடைந்தது.

சொத்துத் தரம்

கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியுடன் இணைந்து பாதுகாத்துக் கொள்ளும் இடர் அணுகுமுறையும் துணை நின்றதால் வங்கியானது துறை ரீதியான மொத்த மற்றும் தேறிய செயற்படாக் கடன் வீதத்தை முறையே 2.5% மற்றும் 1.3% க்கு குறைவாக பேண இயலுமாக இருந்தது. ஏற்பாட்டுக்காப்பு கடந்த வருடம் பதிவு செய்யப்பட்ட 36.1% உடன் ஒப்பிடும் போது 46% ஆக உயர்வடைந்தது. இதன் பிரகாரம், மொத்த செயற்படாக் கடன் விகிதம் மற்றும் தேறிய செயற்படாக் கடன் விகிதம் 2016 இல் அறிக்கையிடப்பட்ட 1.6% மற்றும் 1.5% ஐ ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2017 இல் முறையே 1.3% மற்றும் 1.2% ஆக மேம்பட்டது.


பொறுப்புக்கள்

மொத்தப் பொறுப்புக்கள் கடந்த ஆண்டில் பதிவு செய்த ரூ. 879.5 பில்லியனை விட 10.5% வளர்ச்சியை பதிவு செய்து 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 971.9 பில்லியனாக அதிகரித்தது. இது வாடிக்கையாளர் வைப்புக்கள் விரிவாக்கத்தால் முடுக்கப்பட்டது. நிதியளித்தல் உள்ளடக்கம் மாற்றமில்லாது ஒரே அளவிலேயே காணப்படுவதுடன், மொத்த சொத்துக்களில் 78% வாடிக்கையாளர் வைப்புகளினால் நிதியளிக்கப்படுகின்ற வேளை எஞ்சியவை முதன்மையாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களால் நிதியளிக்கப்படுகின்றது.

வைப்புக்கள்

வங்கியின் வைப்புத் தளமானது கடந்த வருடத்தில் ரூ. 657.3 பில்லியனை விட 12.2% அல்லது அதி உயர் வைப்புத் திரட்டலான ரூ. 79.9 பில்லியனால் அதிகரித்து ரூ. 737.2 பில்லியனை எய்தியது. ரூ. 188.2 பில்லியனை அடைய 6.7% ஆல் அதிகரித்த சேமிப்பு வைப்புக்களைக் காட்டிலும் ரூ. 549.0 பில்லியனை எட்டுவதற்கு நிலையான வைப்பில் பதிவு செய்யப்பட்ட 14.2% வலுவான வளர்ச்சியானது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் வைப்புக்கள் கலப்பில் நிலையான வைப்பின் பங்கை 2016 இன் 73.2% இருந்து 74.5% ஆக அதிகரிக்கச் செய்தது. இத்தகைய நிதிகள் அரச பிணையங்களில் முதலிடுவதைக் காட்டிலும் கடன்களை வழங்கவே முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது. இது வைப்புக்கான அரச பிணையங்களில் முதலீட்டு விகிதத்தை 66.4% இருந்து 2017 இன் முடிவில் 62.1% ஆக குறைவடையச் செய்து குறிப்பிடத்தக்க சாதனையொன்றை நிலைநாட்டியது. மேலும், கடந்த ஆண்டில் காணப்பட்ட 44.1% க்கு எதிராக வைப்புகளுக்கான கடன்கள் விகிதத்தையும் மேம்படுத்தியது.

வைப்பு வளர்ச்சி



ஆண்டு	வைப்புத் தளம் ரூ. பில்.	வளர்ச்சி %
2013	502	9.7
2014	554	10.4
2015	596	7.5
2016	657	10.3
2017	**737**	**12.2**

பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள்

வாடிக்கையாளர் வைப்புக்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களானது நிதியளித்தல் மூலங்களின் 22.2% ஆகக் காணப்படுகின்றது. சர்வதேச முறிகள், விநியோகிக்கப்பட்ட துணையளிக்கப்பட்ட தொகுதிக் கடன்கள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விநியோகிக்கப்பட்ட பிணையங்கள் என்பவையே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கான பிரதான பங்காளர்களாகும். இவை 2016 இன் ரூ. 213.2 பில்லியனிலிருந்து 5.2% ஆன சொற்பளவிலான வளர்ச்சியை பதிவு செய்தது. 2017 இல் ரூ 224.1 பில்லியனை தொட்டது. இவ்வளர்ச்சியானது 2016 இல் இருந்த ரூ. 54.1 பில்லியனுக்கு எதிராக ரூ. 61.3 பில்லியனாக 13.2% ஆல் அதிகரித்த ரெப்போ கடன்களாலே உந்தப்பட்டது.

மூலதனம்

பங்கு மூலதன உரிமையாளர்களுக்கான நிதி ரூ. 32.2 பில்லியனிலிருந்து 24.7% அதிகரிப்புடன் ரூ. 40.2 பில்லியனாக உயர்வடைந்தது. மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் ஏனைய ஒதுக்கங்களில் ஏற்பட்ட மிகையான ரூ. 4.5 பில்லியன் மற்றும் ரூ. 7.0 பில்லியனுடன் இணைந்து ரூ. 500 மில்லியன் கோரப்படாத வைப்பு ஒதுக்கத்தை மூலதனமாக்கியமை இந்நிதி அதிகரிப்புக்கு ஆதரவளித்தன. மொத்தச் சொத்துக்களுக்கு நிதியளித்த பங்கு மூலதனமானது டிசம்பர் 2016 இல் பதியப்பெற்ற 3.5% இலிருந்து நடப்பு ஆண்டில் 4% ஆக மட்டுமே உயர்ந்தது.

இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வங்கித்துறைக்கு 01 ஜூலை 2017 இல் இருந்து நடைமுறைக்கு வருமுகமாக பாசல் III இனை அறிமுகம் செய்தது. முழுமையான அமுலாக்கமானது 01 ஜனவரி 2019 இல் நிறைவுறுமாறு 18 மாதம் வரையான காலப்பகுதியில் மூன்று படி நிலைகளாக இடம்பெறும். நிறைவுற்றலின் போது வங்கியானது அடுக்கு I மூலதனப் போதுமை விகிதமாக (மூ.போ.வி) 10% ஐயும் மொத்த மூலதன போதுமை விகிதமாக 14% ஐயும் பேண வேண்டிய தேவை ஏற்படும். மூலதனப் போதுமை விகிதங்கள் அடுக்கு I மற்றும் அடுக்கு II 2017 இன் இறுதியில் முறையே 11.9% மற்றும் 15.3% ஆக நிறைவுற்றது. இது ஆகக் குறைந்த ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாடுகள் 7.75% (அடுக்கு I) மற்றும் 11.75% (அடுக்கு II) ஐ விட உயர்வாகவே காணப்பட்டது.

நியதிச் சட்டத்தின் திரவத்தன்மைச் சொத்துக்கள் விகிதம் தொடர்பில் வங்கியானது குறைந்த பட்ச தேவைப்படுத்தலான 20% இலும் மிக உயர்வான 73.4% ஐ கொண்டிருக்கின்றது. பாசல் III க்கு இணங்க, வங்கியை விற்றலின் போது கிடைக்கத்தக்க உயர்தரமிக்க திரவச் சொத்துக்களை விளக்கும் திரவ நிலைக் காப்பு விகிதம், குறைந்த பட்ச தேவைப்படுத்தலான 80% ஐ விட உயர்வாக 376.2% எனும் பெறுமதியை அடைந்துள்ளது. மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்களுக்கிணங்க கிடைக்கத்தக்க நிலையான நிதியளித்தல் அடிப்படையில் வங்கியானது “ஆரோக்கியமாக” காணப்படுகின்றது. தேறிய நிலையான நிதி விகிதமானது (தே.நி.நி.வி) குறைந்த பட்ச தேவைப்படுத்தலாகிய 100% க்கு எதிராக 31 டிசம்பர் 2017 இல் 135% ஆகக் காணப்பட்டது.

பிரதான வியாபார பிரிவுகளின் மீளாய்வு

எமது பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நிலையான வியாபார மாதிரியின் ஊடாக நாம் திறன்மிகு நிதி உற்பத்திகள் மற்றும் முழுமையான சேவைகளை அனைத்து சமூகத் தரப்பினரையும் உள்ளடக்கிய எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம். பன்முகப்பட்ட தொடர்புபட்ட செயற்பாடுகள், சேவைகள் மற்றும் உற்பத்திகள் உடனான வேறுபடுத்தப்பட்ட வியாபார பிரிவுகள் என்பன வேறுபட்ட தேவைகளையுடைய எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கல்களை மேற்கொள்ள இயலச் செய்கின்றன. எமது பிரதான வியாபாரப் பிரிவுகளின் சீரான முகாமைத்துவமானது சிறந்த செயலாற்றுகைக்கும் மூலதன அதிகரிப்பிற்கும் வழிவகுக்கும். பிரதான வியாபார பிரிவுகளின் தோல்வியானது பாரிய வருமானம், இலாபம் மற்றும் பெறுமதி இழப்பிற்கு வழி வகுக்கும் என்ற கருத்தை நாம் அறிந்துள்ளோம். வங்கியின் பிரதான வியாபாரப் பிரிவுகளின் முன்னணி நிலையை புத்திசாதூரியமான ஆளுகை மற்றும் விவேகமான இடர் முகாமைத்துவம் என்பவற்றினூடாக நிலை பெறவும் வலிமையடையவும் செய்துள்ளோம். எமது பிரதான வியாபாரப் பிரிவுகளாவன:



கிளை வங்கித் தொழில்



சர்வதேச வங்கித் தொழில் மற்றும் வியாபார சேவைகள்



திறைசேரி



நிறுவனக் கடன்



கிளை வங்கித் தொழில்: எமது இருப்பை நாடளாவிய ரீதியில் உணர்த்தல்

வாடிக்கையாளர்கள் தமது நாளாந்த வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்வதற்காக விரைவாக ஏற்கப்படுகின்ற மெய்நிகர் வங்கித் தொழில், சுயசேவை மற்றும் வங்கித் தொழில் டிஜிற்றல் மயமாக்கம் காரணமாக இணைய வழி, தொலைபேசி வங்கிச் சேவை நோக்கி நகர்கிறார்கள். தேசிய சேமிப்பு வங்கியின் மூலோபாயமானது டிஜிற்றல் மயமாக்கத்துடன் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் நாம் வாடிக்கையாளர் மீது ஏற்படுத்தும் எண்ணப்பதிவில் கவனம் செலுத்துகின்றோம். எமது வாடிக்கையாளர்கள் அனைத்து சமூகத்தினையும் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் சிலர் இன்னும் மரபு ரீதியான வங்கித் தொழிலை விரும்புகின்றனர். நாம் எண்ணியல் எதிர்காலத்திற்கு தயாராகவுள்ள போதும் நேருக்கு நேரான வாடிக்கையாளர் தொடர்பு கூடிய நன்மைகளை விளைவிக்கும் என நம்புகிறோம். குறிப்பாக விற்பனை தொடர்பான ஆலோசனைகளும் மற்றும் சிக்கலான கொடுக்கல் வாங்கல்களும் சுயசேவைக்கு பொருத்தமற்றவை.

எமது கிளை வலையமைப்பானது 253 கிளைகளுடன் வலுவானதாகவும் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் கிளை வங்கித் தொழிலானது பரந்த அளவிலான உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்குகின்றது. எமது வைப்பு உற்பத்தியானது சேமிப்பு உற்பத்தி தொகுதியையும் மேலும் தவணை உற்பத்தி தொகுதியையும் உள்ளடக்கியுள்ளது. எமது சில்லறைக் கடன் சொத்துப் பட்டியலானது தனிநபர் கடன், கல்விக் கடன், வீட்டுக் கடன், வாகனக் கடன், வைப்புகளுக்கெதிரான கடன் மற்றும் அடகு என்பவற்றைக் கொண்டுள்ளது.

எமது பிரதான 2017 க்கான மூலோபாயக் குறிக்கோள்களாவது, குறைந்த செலவு கொண்ட வைப்புக்களை அதிகரிப்பதும், நிதிகளை உச்சமாகப் பயன்படுத்தி செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதும் மற்றும் பல் ஊடக மூலோபாயம் மூலம் எமது கால்தடத்தினை விரிவுபடுத்துவதுமாகும். 2017 இல் கிளை வங்கித் தொழில் எதிர்கொண்ட சமூக அரசியல் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் பற்றி அறிய தயவு செய்து "தொழிற்பாட்டுச் சூழல்" எனும் பாகத்தை பக்கம் 39 இல் பார்க்கவும்.

2017 இல் எம்மால் செய்யப்பட்டவை

கிளை வங்கித் தொழிலை சீர்படுத்த பல பிரதான முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பிராந்திய அலுவலகங்களை வலுப்படுத்த பிராந்திய முறைமைகள் ஒன்பது பிராந்தியங்களுக்கு கீழ் மீளமைக்கப்பட்டுள்ளது.

"மாதிரிக் கிளை" எனும் கருப்பொருளில் குறிப்பிட்ட திறன் மிகு வலையத்திற்கான டிஜிற்றல் வங்கித் தொழில் 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

சூழலியல் கடன்கள் மற்றும் மீள் சுழற்சி செய்யக் கூடிய சக்திக்கு மாறுதல் தொடர்பான பசுமை வங்கித் தொழில் முன்னெடுப்புக்கள் நிறைவடைந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பல புதிய சில்லறை உற்பத்தி புதுமைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கிளை வலையமைப்பினூடாக ஊக்குவிக்கப்பட்டன: என்எஸ்பி ரீச்+, என்எஸ்பி ஐசேவர், என்எஸ்பி இகோ கடன் மற்றும் சொந்துரு பியச வீட்டுக்கடன்.

2017 இற்கான எமது செயலாற்றுகை

வங்கியானது தனது வரலாற்றில் ஆகக் கூடிய வைப்புத் தொகையை பதிவு செய்தது. வங்கி பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட காலத்தில் ரூ. 75 பில்லியனை வைப்பாக திரட்டியது. வங்கியின் வைப்புத் தளம் ரூ. 737 பில்லியனாக 12.2%. வளர்ச்சியை எட்டியது. இந்த குறிப்பிடத்தக்க அடைவிற்கான முக்கிய காரணியாக தவணை வைப்புகளில் ரூ. 62.6 பில்லியன் அதிகரிப்பு கருதப்பட்டது. தவணை வைப்புக்கள் 13.5% வளர்ச்சியைக் கண்டது. இதில் நிறுவன தவணை வைப்பு அதிகரிப்பு பெரும் பங்களிப்பைக் கொண்டுள்ளது. வைப்புத் திரட்டு ரூ. 12.8 பில்லியனால் அதிகரித்து 7.3% வளர்ச்சியைப் பதிவு செய்தது.

சில்லறைக் கடன் சொத்துப் பட்டியலானது 20.0% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 213.8 பில்லியனை அடைந்தது. இது மத்திய வங்கியின் நடவடிக்கை மூலம் சந்தை திரவத்தன்மை இறுக்கமாக்கப்பட்ட நிலையில் அடையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பிரதானமாக தனி நபர் கடனானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 37.3% அதிகரித்திருந்தது. அடகு சொத்துப்பட்டியல் 15% வளர்ச்சியடைந்து 2016 ற்கான எதிர்மறை வளர்ச்சியை மாற்றியமைத்தது. நீண்டகால தவணை வைப்பிற்கான கேள்வி 24.8% ஆல் அதிகரித்து வட்டி வீத சூழல் காரணமாக உயர்வடைந்தது.

எதிர்காலத்தை நோக்கிய பார்வை

எமது பல் வியாபார மற்றும் பல் வழி அணுகுமுறை தொடர்வதுடன் வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல வெளிப்படையான உற்பத்திகள் வழங்கப்படும். எதிர்வரும் ஆண்டில் குறித்த சில உற்பத்திகள் மற்றும் சேவைகள் மீள் தொடங்கப்படுவதுடன் மாதிரிக் கிளை எண்ணக்கரு மற்றும் பசுமை வங்கித் தொழில் முன்னெடுப்புக்கள் மேலும் விரிவாக்கப்படும். சேவை தரத்தினை மேம்படுத்தும் நோக்கில், வாடிக்கையாளர் சேவை அனுபவத்தினை மதிப்பீடு செய்வதற்கு புதிய நடைமுறைகள் செயல்படுத்தப்படும். மேற் கூறப்பட்டவையானது 2018ல் வங்கியினால் அதிகூடிய தரமிக்க, பன்முகப்படுத்தப்பட்ட, வாடிக்கையாளர் அனுபவத்திற்காக மேற்கொள்ளப்படவுள்ள முன்னெடுப்புகளுள் சில ஆகும்.

சர்வதேச வங்கியியல்: உலக எண்ணப்பதிவினை ஏற்படுத்தல்

வருடாந்த சாதனைக்கான விருது வழங்கும் நிகழ்வானது, கல்வியில் (கபொதா சாதாரண நிலை, கபொதா உயர் தரம், மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகள்) மற்றும் ஊழியர்களின் குழந்தைகளின் விளையாட்டு மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஏனைய சாதனைகளை அங்கீகரிக்க நிகழ்த்தப்படுகிறது. வங்கியின் தே.சே.வ மீதான ஊழியர் உறுதிப்பாட்டிற்கும் விசுவாசத்திற்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக 25 மற்றும் 35 ஆண்டுகள் சேவை காலத்தை நிறைவு செய்த பணியாளர்களை அங்கீகரிப்பதற்காக வருடாந்த விழாவை ஏற்பாடு செய்கிறது 2017 ஆம் ஆண்டில், 21 ஊழியர்கள் வெகுமதியைப் பெற்றனர், அவர்களில் 15 பேர் 35 ஆண்டு கால சேவைக்காக கௌரவிக்கப்பட்டனர்.

தலைமை அலுவலக சிற்றுண்டிசாலையில் இருந்து உணவிற்கான சலுகை விகிதங்கள் ஊழியருக்கு மற்றும் பணியாளர்கள் மற்றும் வங்கி கிளைகள் மற்றும் பிரிவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு வழங்கப்படுகின்றன

தே.சே.வ நல்ல நேரங்களிலும் சவாலான காலத்திலும் ஊழியர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் ஆதரிக்கிறது. ஒரு ஊழியரின் இறந்த நிகழ்வில், தங்கியிருப்போருக்கு நிதி ஆதரவு வழங்குகிறது

வேலை வாழ்க்கை சமநிலையினை ஊக்குவித்தல்

எமது மனிதவள ஊழியர்கள் ஏனைய ஊழியர்கள் பணிபுரியும் வாழ்க்கைச் சூழலைப் பெறுவதற்கு திறன்மிகு முறைகளை பயன்படுத்துகின்றனர், இது பணியாளர்களின் முக்கிய அம்சங்கள் அனைத்திற்கும் கவனத்தை செலுத்துவது போல அவற்றை எங்கள் பணியாளர்களுக்கு உணர்த்த அனுமதிக்கிறது. சுற்றுலா பயணங்களை ஊக்குவிப்பது போன்ற வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் எங்கள் ஊழியர்களுக்கு உதவுகிறோம். பிரபலமான விடுமுறை இடங்களில் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக சுற்றுலா பங்களாக்களை நிறுவுகிறோம் குழந்தை பிறந்த ஆறு மாதங்களுக்கு தாய் பாலூட்டலுக்காக தாய்மார்களுக்கான ஒரு மணி நேரம் நெகிழ்வான வேலை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் 2017 மாதத்தின் படி நாட்டிலுள்ள பல்வேறு இடங்களில் 15 விடுமுறை பங்களாக்களை வங்கி கொண்டுள்ளது அனுராதபுரம், கண்டி, கதிர்காமம், அம்பாந்தோட்டோட்டை, நுவரெலியா (இரண்டு பங்களா), மகியங்கனை காலி, பண்டாரவளை, பதுளை, தம்புள்ள, சாவகச்சேரி, பெலியட்ட, மரவில போன்றவை. தியத்தலாவ, ஒரு புதிய பங்களா இந்த ஆண்டு திறக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், கதிர்காமத்தில். ஒரு புதிய பங்களாவை திறப்பதன் மூலம் எங்கள் சுற்று பங்களாக்களை விரிவுபடுத்துவதை நாங்கள் நம்புகிறோம்

பெற்றோர் கடமைக்கான விடுமுறை

கடை மற்றும் அலுவலக சட்டப்படி, பெண் ஊழியர்கள் பெற்றோருக்கு (மகப்பேறு) விடுமுறை வழங்கப்படுகிறது. எமது பெண் ஊழியர்களுக்கு அனைத்து விதத்திலும் மகப்பேறு விடுப்பு மற்றும் நன்மைகளுக்கு உரிமையுண்டு நாங்கள் மூன்று நாட்களுக்கு தந்தைமாருக்கு விடுமுறை வழங்குகிறோம்.

GRI 404-3

செயல்திறனை நிர்வகித்தல்

தே.சே.வ இல், நாம் ஒரு நியாயமான, வெளிப்படையான மதிப்பீட்டு முறையை கொண்டிருக்கிறோம். படிவரையறையின் அடிப்படையில் பணியாளர்களின் செயல்திறனை வங்கி மீளாயும். இது தொடர்ச்சியான செயலாகும். எங்களது பணியாளர்கள் ஒவ்வொருவரும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட அடிப்படைகளுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்படுகிறார்கள். ஆண்டு செயல்திறன் மேலாண்மை குறித்த தே.சே.வ இன் கொள்கையானது ஊழியர்களின் செயல்திறன் இடைவெளிகளை, பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளை அடையாளம் காணுவதற்காக வரையப்பட்டிருக்கிறது. செயல்திறன் மதிப்பீடுகளானது ஊதியம், பதவி உயர்வு, வருடாந்த போனஸ் மற்றும் ஊதியம் தொகுப்புகளில் மதிப்பாய்வுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

வங்கியில் உள்ள ஒரு செயல்திறன் உந்துதல் கலாச்சாரத்தை விரிவுபடுத்த விரிவான கேபிஐ அடிப்படையிலான செயல்திறன் முகாமை மற்றும் மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தும் பணியில் தே.சே.வ உள்ளது. அமுலாக்கத்தின் முதல் கட்டமாக, சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கி 2018 ஆம் ஆண்டிலிருந்து வங்கி முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும். புதிய இலக்கை பற்றி தெரியப்படுத்த 378 ஊழியர்களின் பங்களிப்புடன், தே.சே.வ 12 பயிற்சித் திட்டங்களை நடத்தியது.

பணியாளர் குறைகளை கையாளுதல்

ஊழியர் எதிர்பார்ப்புகள் நிர்வாகத்தால் நிறைவேற்றப்படாத போது எழும் குறைகளை தீர்க்க வேண்டிய அவசியத்தை தே.சே.வ அறிந்திருக்கிறது வங்கியானது “படிமுறை” நடைமுறையினை குறை கையாளுதலுக்கு பாவிக்கிறது மற்றும் “திறந்த கதவு” முறையினை பாவிக்கிறது, இங்கு மனிதவள குழுவினால் நியமிக்கப்பட்ட சுயேட்சையான குழுவினால் குறைகள் கையாளப்படுகிறது. அனைத்து குறைகளும் நியாயமான முறையில் கையாளப்படுகிறது. அனைத்து சமூகத்தின் பகுதிகளுக்குமான வங்கியாக எம்மை அடையாளப்படுத்தியுள்ளதோடு அனைத்து கூட்டங்கள் சுற்றறிக்கைகள் மற்றும் விளம்பரங்கள் மூன்று தேசிய மொழிகளிலும் பாவிக்கப்படுகிறது.

எச்சரிக்கை வழங்கும் கொள்கை

குற்றம் மற்றும் அநீதிக்கு எதிராக பாதுகாத்தல் மற்றும் முன்னரே இனம்காட்டல், பதிவு செய்தல், கண்காணித்தல், மீளப்பெறல், மற்றும் தொடரல் என்பன தொடர்பில் எச்சரிக்கை வழங்கும் கொள்கையை தே.சே.வ கொண்டுள்ளது. இது ஊழியர்கள் கணக்கீடு, நிதியறிக்கை, உள்ளக கட்டுப்பாடு, அநீதி, இலஞ்சம், தவறான நடத்தை, கணக்காய்வு என்பன பற்றி பயமின்றி முறையிட உதவுகிறது. இந்த முறைமை மூலம், ஊழியர்கள் பயமின்றி எதுவித பாரபட்சமும் பாதிப்புகள் இன்றி தமது குறைகளை முறையிட முடிகிறது.

GRI 205-2

நடத்தை முறைமை

ஒழுக்கம் பற்றிய விடயங்களில் தொழிலாளரை அறிவூட்ட நடத்தை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலஞ்சம், குற்றம், மற்றும் அநீதிகளுக்கு வங்கி ஒருபோதும் சகிப்பதில்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு வங்கி கடுமையான ஒழுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

GRI 406-1

பல்முகத்தன்மையினை உறுதிப்படுத்துதல் மற்றும் சமனான வாய்ப்பு

நாம் அனைத்தும் உள்ளடங்கலான சமானான வாய்ப்பு வழங்கும் தொழில்தருனராகும். நாம் பால், திருமண நிலை, இனம், நிறம், சமயம், உடல் அங்கவீனமம், கற்றல் சவால், வயது என்பன அடிப்படையில் வேறுபடுத்துவதில்லை. நாம் அனைத்து தொழிலாளருக்கும் சமனான வாய்ப்பு மற்றும் நியாயமான நடத்தலை உறுதிப்படுத்துகிறோம். நமது ஆட்சேர்ப்பு கொள்கையும் மேற்குறித்த காரணிகளை பின்பற்றுகிறது. வருடத்தினுள் எது விதமான பாகுபாடு பற்றிய விடயங்களும் அறிக்கையிடப்படவில்லை என்பதை இட்டு மகிழ்கிறோம்.

வேலைத்தள சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

ஊழியர்களின் உடல் நலத்தினை கவனிப்பது எமது கடமையாகும். தே.சே.வ இன் சுகாதார முன்னெடுப்பின் கீழ் நாம் பல சுகாதார திட்டங்களை நிறுவியுள்ளது. தே.சே.வ இன் தலைமையகத்தில் முன்னணி தனியார் வைத்தியசாலையினால் முகாமைபடுத்தப்படும் ஒரு உள்ளக மருத்துவ நிலையமுள்ளது. மாதத்திற்கு இரு முறை சிறப்பு தேர்ச்சிபெற்ற மருத்துவர்கள் மருத்துவ நிலையத்திற்கு வருவர். மேலும் முன்னணி தனியார் வைத்தியசாலைகளினால் கிளினிக்கும் நடாத்தப்படுகிறது.

மேலும் ஊழியர்கள் சிறப்பு தேர்ச்சிமிக்கவர்களால் நடாத்தப்படும் மனஅழுத்த முகாமைத்துவம், கண் பாதுகாப்பு மற்றும் நோய் தடுப்பு தொடர்பான கருத்தரங்குகளில பங்கு பெற வாய்ப்பளிக்கப்படுகின்றனர். தொழிலாளர்களின் மருத்துவ நன்மைகள் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானக்கப்படுகிறது. மற்றும் கடுமையான நோயின் போது உதவுவதற்பான காப்பீடும் உண்டு. மருத்துவ காப்பீட்டிற்கு மேலதிகமாக நிரந்தர ஊழியர்களுக்கு வங்கி உதவி திட்டங்களில் உள்ளடங்குகின்றனர்.

இறப்பு மற்றும் நிரந்த அங்கவீனத்தின் போது ஆகக்கூடிய ரூபா 1 மில்லியன் தங்கியிருப்போருக்கு வழங்கப்படும். 2017 இன் போது ஒரு வேலைத்தள விபத்து அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தே.சே.வ கிளையினதும் பாதுகாப்பு பிரிவானது பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பான வேலைத் தளத்தை பேண அறிவுறுத்தப்பட்டுள்ளது. கண்காணிக்கும் கமரா மற்றும் எச்சரிக்கை முறைமை மூலம் நெருக்கடியை கையாளும் விதம் ஊழியர்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளார்கள். பாதுகாப்பான வேலைத்தளத்தை உருவாக்கும் விதமாக விரிவான பாதுகாப்புத் திட்டம் நடைமுறையிலுள்ளது.

GRI102-41 GRI407-1

ஒன்று சேர்வதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசல்

வங்கியினுள் தொழிற்படும் தொழிற்ச்சங்கங்கள், ஜாதிக சேவக சங்கம, இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர வங்கி ஊழியர் சங்கம், நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் மற்றும் அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம் என்பவற்றை உள்ளடக்கும். முகாமைத்துவம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையிலான நமது உறவு மிகவும் ஆரோக்கியமாக உள்ளது என்பதையிட்டு மகிழ்கிறோம். தே.சே.வ இத்தொழிற்சங்கங்களுடன் தொடர்ச்சியாக கூட்டங்கள் நடாத்துவதன் மூலம் தொழிலாளர்கள் மகிழ்வாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகிறது. அனைத்து நிரந்தர ஊழியர்களும் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படுவார்கள். சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகள் கூட்டு ஒப்பந்தத்தின் படி மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தீர்மானிக்கப்படுகிறது. எமது வெளிப்படையான மற்றும் வினைத்திறனான கொள்கையினால் அறிக்கையிடப்பட்ட காலத்தினுள் எது வித சட்ட மீறல்கள் மற்றும் கூட்டு பேரம் பேசல் இடம்பெற வில்லை.

2017 இல் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

எந்தவொரு நிறுவனத்திலும் மனித வளத்தினை முகாமை செய்வது மிக சிக்கலானதாகும். வினைத்திறன் மிக்க மனித வள முகாமைத்துவமானது மிக ஒன்றுபட்ட, மிக உற்பத்தி திறனான, மிக ஈடுபாடுடைய நிறுவனத்தினை உருவாக்கும். எமது மனித வளத்தினை கருத்தில்கொண்டு தே.சே.வ பல சாவால்களை வருடம் முழுவதும் எதிர்கொண்டது

தொழில்நுட்ப புத்தாக்கத்தின் காரணமாக வங்கித்துறையின் டிஜிட்டல் மயமாக்கல் வங்கித்துறையின் பிரதான சவாலாகும். வயது முதிர்ந்த ஊழியப்படையானது தொழில்நுட்பத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் சவாலாகும். தே.சே.வ ஊழியர்களுக்கான டிஜிட்டல் சூழல் தொடர்பிலான பயிற்சிகளின் போது சவாலினை எதிர் கொண்டது. எமது "மாதிரி வங்கி" முன்னெடுப்பு வங்கி மற்றும் அதன் ஊழியர்களை டிஜிட்டல் எதிர்காலத்திற்கு மாற்றுவதற்கு உதவும்.

நாட்டின் மிலேனியல் பகுதியினரினை கையாளுதல் மற்றுமொரு சவாலாகும். வங்கியானது இளைய தலைமுறையினை கவருதற்காக வங்கி உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல்களை பாவிக்கிறது.

எமது முன்னெடுப்புக்களின் பலன் எதிர்காலத்தில் தெரியும். இலாபத்தன்மைக்கான கேள்வி மற்றும் நிதித்துறை நிறுவனங்களுக்கிடையிலான போட்டியே அனைத்திற்கும் அடிப்படையாகும். நாம் இங்த போக்குகள் பற்றி நன்கு அறிவோம். எமது இலக்கு நிலைத்து நிற்கும் நிறுவனத்தினை நிறுவுவதாகும்.

மற்றுமொரு சவாலானது KPI அடிப்படையிலான மதிப்பீட்டு திட்டத்தின் அறிமுகமாகும். நாம் பயிற்சிகளுக்கு பின்னர் படிப்படியாக இது பற்றிய விழிப்புணர்வினை தே.சே.வ குடும்பத்திற்கு ஏற்படுத்துகிறோம்.

எதிர் காலத்தை நோக்கிய பார்வை

எதிர்கால தலைமுறை மற்றும் தொழிநுட்ப திறன் வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான எதிர்கால தேவையை நாம் கொண்டிருப்பதால் நாம் டிஜிட்டல் தொழிநுட்பத்தை உள்வாங்குவதோடு தொடர்ச்சியான ஊழிய பயிற்சி மற்றும் மேம்படுத்தலில் ஈடுபடுவோம். எமது ஊழியர்கள் சிறந்த தொழில் அனுபவத்தினை பெறவும் மற்றும் ஈடுபடவும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதோடு அவர்களின் தொழில்வன்மையை முன்னேற்ற கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் கருத்துக்களை ஒவ்வொரு துடிப்பிலும் உணர்ந்து கொள்ளலாம்.

தே.சே.வ இன் தனித்துவமான வரலாறு 45 வருடங்கள் பழமையானதாயினும் எமது நிதியியல் பாரம்பரியம் 180 வருடத்திற்கும் மேற்பட்டதாகும். எமது ஒப்பற்ற வரலாற்றின் மூலம் நாம் தேசத்தின் இதயத் துடிப்பை அறிந்துள்ளோம். அதே போல் எமது தனித்துவமான இதயத் துடிப்பினையும் தேசம் அறிந்துள்ளது



சமூக மற்றும் உறவு மூலதனம்



19.9 மில்லியன் மொத்த கணக்குகளின் எண்ணிக்கை	வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி **ரூ. 78,445 மில்**	*POS* பரிவர்த்தனைகளின் பெறுமதி **ரூ. 10,513 மில்.**
POS வாடிக்கையாளர்களுக்கு **ரூ. 13.5 மில்** கடன் வழங்கப்பட்டது	மொத்த சிஎஸ்ஆர் முதலீடு **ரூ. 20 மில்.**	தொலைபேசி மூலம் பெற்ற விசாரணைகளின் எண்ணிக்கை **225,950**
43,895 வெப்-சேட் ஊடான விசாரணைகள்	**767,656** ஸ்திரி கணக்குகள்	வழங்கப்பட்ட அட்டைகள் **234,500**
13 வது ஹபன் புலமைப்பரிசில் விருதுகளில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை **214**	**50 பள்ளிகள் 5,000 மாணவர்கள்** வெள்ள நிவாரணத்திற்கான தே.சே.வ இன் சி.எஸ்.ஆர் (CSR) முனைப்பு ஊடாக உதவியளிக்கப்பட்டனர்	**144 கருத்தரங்குகள்** **72,000 மாணவர்கள்** ஹப்பன் புலமைப்பரிசில் கருத்தரங்கு தொடர்

எமது அங்குரார்ப்பணம் தொடக்கம், நம்பிக்கை, பெறுமானங்களை பகிர்ந்துகொள்தல், சமூகத்திற்கு பங்களிப்பு செய்தல், சுற்றுச்சூழலை பாதுகாத்தல் ஆகியவற்றினை அடிப்படையாக கொண்ட உறவுகளை கட்டமைத்தலே தேசிய சேமிப்பு வங்கியின் மையக்கருத்தாக விளங்குகின்றது. சமூகங்கள், பங்குதாரர் குழுக்கள், ஏனைய வலையமைப்புகளுடனான உறவாடல்கள் எமது சமூக மற்றும் உறவு முதலீட்டிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. முதன்மை பங்குதாரர்களுடனான ஊடாடலானது, அவர்களின் அக்கறை குறித்து கவனத்தில் எடுத்துக்கொள்தல், அவர்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்தல் ஆகியன முதலீட்டினை பேணி மேம்படுத்துவதற்கான மையப்புள்ளியாக விளங்குகின்றன. எமது வெற்றியில் சமபங்கினை அளிக்கும் எமது கட்டுப்பாட்டாளர்கள், அரசாங்கம் (எமது பிரதான பங்குதாரர்), வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தக பங்காளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியோருடனான உறவினை நாம் அங்கீகரித்து கௌரவிக்கின்றோம். எமது வர்த்தக செயற்பாடுகள் சமுதாயத்தின் பல்வேறு விடயங்களில் நேர்மறைத்தாக்கத்தினை அளிக்கின்றது என்பதுடன், எமது உறவாடல்கள் சரியான மற்றும் செயற்திறனுடைய முறையில் முகாமை செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் நாம் மூலோபாயங்கள் மற்றும் கட்டமைப்பினை கொண்டுள்ளோம். எமது வர்த்தக நடவடிக்கைகளின் ஸ்திரத்தன்மையினை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கும் சமுதாயம் மற்றும் சமூகங்களின் நல்வாழ்க்கைக்கு நாம் அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றி வருகின்றோம்.

ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மூலதனம்

தேசிய சேமிப்பு வங்கியில் அனைத்திற்கும் மேலாக வெளிப்படைத் தன்மைக்கு நாம் மிகுந்த முக்கியத்துவத்தினை அளிப்பதோடு, கோரப்படும் நடைமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைகள் ஆகியன முறையாக நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தும் வகையில் அர்ப்பணிப்புணர்வுடன் சேவையாற்றுகின்றோம். அரச உரித்து பெற்ற வங்கி என்ற வகையில், தேசிய சேமிப்பு வங்கியானது, வங்கியியல் சட்டம், நிதிச் சட்டம், நிதிப் பரிவர்த்தனைகளை அறிக்கையிடும் சட்டம், பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு சட்டம், தேசிய சேமிப்பு வங்கியின் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகள் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அனுசரித்து, அதற்கு ஏற்றவாறு இணக்கப்பாட்டுடன் செயற்படுகின்றோம் தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாடுகள் யாவற்றிலும் இலங்கை மத்திய வங்கியினால் வகுக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு விதிமுறைகள் கிரமமாக பின்பற்றப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, தேசிய சேமிப்பு வங்கியானது, வங்கியின் செயற்பாடுகள் குறித்த தகவல்களை காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, வங்கியானது, நேரடி பொறுப்பு அமைச்சகம், பொது தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்ச்சியான தொடர்பாடலை பேணுகின்றது. அத்துடன் வங்கியானது, நிதி அமைச்சு, உள்நாட்டு இறைவரிகள் திணைக்களம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை கண்காணிப்பு சபை மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றுடனும் காலத்திற்கு காலம் தேவையான தொடர்பாடல்களை மேற்கொள்கின்றது.

GRI 205-2, 3 GRI 206-1

இணக்கப்பாட்டு கலாசாரம்

தற்போதைய வர்த்தக செயற்பாட்டு சூழ்நிலையில், இணக்கப்பாடு ஆனது, எதிர்பாராது நேரிடக்கூடிய இடர்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில், நிறுவனம் ஒன்று எவ்வாறு தயார் நிலையில் உள்ளது என்பதை கணிக்கும் ஒரு அளவுகோலாக மாறியுள்ளது. அரச வங்கி என்ற நிலையில், தேசிய சேமிப்பு வங்கியானது, முன்மாதிரி கூட்டாண்மை பிரஜை வகிபாகத்தினை கொண்டிருக்க வேண்டும் என்பதை அறிந்துள்ளது. எமது வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த நடைமுறைகளை கைக்கொள்தல் ஆகியன, இணக்கப்பாட்டு கலாசாரத்தினை எமது செயற்பாடுகளில் நாம் உள்ளடக்கியுள்ளதனை வெளிப்படுத்துகின்றது.

இணக்கப்பாட்டு கலாசாரம் குறித்த சபையின் கண்காணிப்பு, தலைமைத்துவத்திலிருந்து கீழுள்ளோருக்கான தொடர்பாடல் ஆளுகை செயற்பாடுகளில் உயர் தரநிர்ணயங்கள் ஆகியவற்றின் உதவியுடன் கோரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு சார் தேவைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுடன் முழுமையாக இணங்கி ஏற்று நடத்தல் குறித்து நாம் உறுதியுடன் உள்ளோம். இணக்கப்பாட்டு தரநிர்ணயம் மற்றும் நடைமுறைகள் குறித்து பணியாளர்களுக்கு கற்றுக்கொடுத்தல் குறித்த இந்த இணக்கப்பாட்டு கலாசாரத்தினை நிறுவன மட்டத்தில் மேம்படுத்துவதற்கு உதவியாக விளங்குகின்றது. எங்கள் செயற்திறன் சார்ந்த அணுகுமுறைகள், அனைத்து சட்டபூர்வ கோரிக்கைகளையும் நிறைவுசெய்தவாறு, இணக்கப்பாடு பூரணப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், ஊழல், எதிர்மறையான நடவடிக்கை, நம்பகத்தன்மையற்று நடாத்தல், ஏகபோக நடைமுறை, பொருட்கள் சேவைகளின் பயன்பாடு போன்றவற்றுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் இணக்கப்பாடின்றி செயற்பட்டமைக்காக விதிக்கப்படும் எந்தவித தண்டப்பணமோ, பணம் சாராத தண்டனைகளோ வங்கிக்கு கிடைக்கவில்லை.

வாடிக்கையாளர் மூலதனம்

வாடிக்கையாளர்களே தேசிய சேமிப்பு வங்கியின் ஆதாரமாக விளங்குகின்றனர். வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட மூலோபாயத்தினை பின்பற்றும் நாங்கள், வாடிக்கையாளர்களின் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு வேண்டிய நடைமுறைகளையும் தீவிரமாக முன்னெடுக்கின்றோம். உயர் தரம் மிக்க வாடிக்கையாளர் எதிர்பார்ப்பினை, வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் சேவை சௌகரியத்தினை மேம்படுத்தல், நவீன வங்கியியல் நடவடிக்கைகளை உட்புகுத்தல், வாடிக்கையாளர்களின் சேவை எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்தல், வாடிக்கையாளர்களின் திருப்தியை கண்காணித்தல், போன்ற செயற்பாடுகளின் வழியாக அறிந்து, அதனை நிறைவேற்றுதலை கடப்பாட்டுடன் மேற்கொள்கின்றோம். கடந்த பல வருடங்களில், தேசிய சேமிப்பு வங்கியானது, தரமிகுந்த வாடிக்கையாளர் அனுபவத்தினை பன்முக ஊடக அணுகுமுறை வழியாக அளித்து வருகின்றது. எமது விஸ்தரிக்கப்பட்ட வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட சேவைத் தொகுப்பானது, இலங்கையின் அனைத்து சமூக பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. எமது உயர் தரமிகுந்த சேவையானது, பரந்த கிளை வலையமைப்பு, மொபைல் மற்றும் இணைய வங்கியியல் சேவைகள், ஏனைய எண்ணியல் (டிஜிட்டல்) ஊடகங்கள் என பல்வகைமை ஊடாக அளிக்கப்படுவதனால், வாடிக்கையாளர்கள், வங்கியுடன் இலகுவான, தடையற்ற, நேரடி தொடர்பாடலை மேற்கொள்வது எளிதாக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக்குமான வங்கி


தேசிய சேமிப்பு வங்கியானது, அனைத்து சமூகத்தினருக்குமான ஒரு வங்கியாகும். இது வெறுமனே ஒரு கோட்பாடாக அன்றி, நிஜமாகவே கைக்கொள்ளப்படுகின்றது. தேசிய சேமிப்பு வங்கியின் "தேசிய" என்ற பதத்திற்கு உண்மையாக விளங்கும் நாங்கள், வங்கிச் சேவைகள் இல்லாத மற்றும் குறைந்தளவு வங்கிச் சேவையினை பெறுவோர் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சேவையாற்றுகின்றோம். வங்கியின் வைப்பு தளமானது, 12.2% வளர்ச்சியுடன் ரூ. 732 பில்லியன் என்ற அதீத உயர்வினை அடைந்தது. வங்கியின் கடன்கள் மற்றும் முற்பண தொகுப்பானது, 20.0% வளர்ச்சியுடன் ரூ. 388 பில்லியனை தொட்டது. குறிப்பிடத்தக்க இந்த பெறுமானங்கள், இலங்கையில் சேமிப்புக் கலாசாரத்தினை வளர்த்தெடுப்பதான எமது கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. வாடிக்கையாளர்கள் மற்றும் வைப்புத்தளத்தின் படிப்படியான வளர்ச்சியானது, தேசிய சேமிப்பு வங்கியானது, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பு மற்றும் நம்பிக்கையினை பெறுவதற்கான கால்கோளாக திகழ்கின்றது. இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் என்ற வகையில், எமது வாடிக்கையாளர்களுடன், அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாத்திரமன்றி, தலைமுறைகளைக் கடந்த உறவாடலுடனான வலுவான பிணைப்பினை கொண்டுள்ளோம். சமூகத்தின் பல்வேறு பிரிவினைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் பன்முக தேவைகள் மற்றும் நோக்கங்களை கருத்திற்கொண்டு நான் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்றோம்.

வங்கியின் உற்பத்தி தொகுப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் பொருட்கள் சேவைகள் குறித்த முழுமையான விபரங்களை துணைத்தகவல் பிரிவு 372 இல் பார்வையிட முடியும்.

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வட்டி


[ரூ. பில்.]



வருடம்	2013	2014	2015	2016	2017
வைப்புகள் மீது வழங்கப்பட்ட வட்டி	49,416	41,500	36,257	44,366	60,162

உற்பத்தி வாரியாக மதிப்பாய்வு செய்யப்பட்ட கடன் சொத்துப்பட்டியல்

[%]



சௌகரியமாக்கப்பட்ட வங்கிச் சேவைகள்

எளிதான, இலகுவாக அணுகக்கூடிய, சௌகர்யமான வங்கித்தீர்வுகளை தேசிய சேமிப்பு வங்கி, வாடிக்கையாளர்களுக்கு அளித்துள்ளது, எமது தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள், ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு இணங்க, அது உங்கள் கணக்கினை முகாமை செய்தல், இலகுவாக கடன்களை பெறுதல், அல்லது உங்கள் நிதி செயற்பாடுகள் தொடர்பில் கண்காணித்தல் என எந்தவொரு விடயத்தினையும், வாடிக்கையாளரின் நேரத்தினை சேமித்தவாறு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 250ற்கும் மேற்பட்ட விஸ்தரிக்கப்பட்ட கிளை வலையமைப்பு, நேரடி வங்கிச்சேவைகளை பெறும் மையங்கள், ஒன்லைன் மற்றும் எஸ்.எம்.எஸ் (SMS) வங்கியியல், ஏராளம் அட்டைத் தெரிவுகள் என வங்கியினை அணுகுவதற்கான பல்வேறு வழிகளை நாம் கொண்டுள்ளோம்.

விற்பனைமைய (*POS*) வங்கியியல் – *NSB Reach*

குறைவான வங்கிச் சேவைகளை பெறும் மக்கள், தமது தனித்துவமிக்க பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய சேமிப்பு வங்கியானது அதன் விற்பனைமைய வங்கியியல் சேவையினை (POS banking) அறிமுகப்படுத்தியது. 300ற்கும் மேற்பட்ட இந்த விற்பனைமைய வங்கியியல் சேவை கருவிகள் வங்கியின் 253 கிளைகளில் செயற்படுத்தப்படுகின்றன. 2017ம் ஆண்டில் மட்டும் POS வங்கியியல் சேவையானது ரூ. 10.5 பில்லியன் விற்பனையினை 6.6 மில்லியன் பரிவர்த்தனைகள் ஊடாக பெற்றுக்கொண்டது. POS கருவிகளுடன் தூரப்பிராந்திய கிராமங்கள் நகரங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களுக்கு செல்லும் வங்கி உத்தியோகத்தர்கள், தேசிய சேமிப்பு வங்கியின் சேவைகளை மிக இலகுவாக அணுகக்கூடிய வகையில், எங்கு, எப்போதெல்லாம் வாடிக்கையாளர்களுக்கு இந்த சேவை தேவைப்படுகின்றதோ, அப்போதெல்லாம் வழங்குகின்றார்கள். இதற்கும் மேலதிகமான சேவையை அளிக்கும் வகையில், சுய தொழில், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முனைவோர் ஆகியோரை ஊக்குவிக்கும் நோக்குடன் “NSB Reach +” ஊடாக எமது POS வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகளையும் நாம் அளிக்கின்றோம். தேசிய சேமிப்பு வங்கி, 2017 நவம்பரில் அங்குரார்ப்பணம் செய்த நாளில் இருந்து, ஒரு மாதம் மட்டுமேயான குறைந்த காலப்பகுதிக்கும் NSB Reach + ஊடாக ரூ. 13.4 மில்லியன் பெறுமதியான 44 கடன்களை அளித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களால், குறித்த POS கருவி மூலம் வீட்டுப்பயன்பாட்டு சேவைகளுக்கான பில்களையும் செலுத்த முடியும்.

மாகாணம்	பரிமாற்றங்களின் எண்ணிக்கை	பெறுமதி ரூ. மில்.
மத்திய	677,690	1,080
கிழக்கு	610,455	781
வட மத்திய	364,415	714
வடமேற்கு	728,490	1,370
வடக்கு	890,316	1,011
சப்ரகமுவ	528,034	765
தெற்கு	753,998	1,061
ஊவா	377,005	597
மேற்கு	1,727,826	3,133
மொத்த தொகை	6,658,229	10,513



டிஜிட்டல் வங்கியியல்

வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகங்கள் ஆகியன, கிளை ஒன்றுக்கு சென்று வங்கிச் சேவைகளை முன்னெடுப்பதை தவிர்த்து, டிஜிட்டல் முறையில் வங்கிச் சேவைகளை மேற்கொள்தலை விரும்பும் காரணத்தினால், டிஜிட்டல் வங்கிச் சேவைக்கு மிகப்பெரும் கேள்வி எழுந்துள்ளது. வங்கிச் சேவை துறையில், செயற்திறனும் செயலாற்றலும் மிகுந்த டிஜிட்டல் பொருட்கள் மற்றும் சேவைகளை, பன்முக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தமது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கும் வகையில், டிஜிட்டல் மயமாக்குதலை தமது வங்கிச் சேவையில் உட்புகுத்தியுள்ளது. இந்த டிஜிட்டல் மயமாக்கலானது, கிளைகளை மையமாக கொண்ட வங்கியியல் மாதிரியிலிருந்து விடுபட்டு, வாடிக்கையாளர்களை மையமாக கொண்ட வங்கியியல் சேவைக்கு மாறுவதனால், வாடிக்கையாளர்கள், தமக்கு விரும்பிய ஊடகங்களை தமது வங்கிச் சேவைகளுக்காக தேர்வு செய்த படி, தமது தனிப்பட்ட விருப்புகளின் அடிப்படையில் தடையற்ற வங்கிச் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். எமது ஒன்லைன் மற்றும் SMS வங்கியியல் சேவைகள், மேம்பட்ட அணுக்கம் மற்றும் சௌகர்யத்தினை அளிக்கும் அதே வேளை, டிஜிட்டல் சேவைத் தொகுப்பானது, வருடா வருடம் இணைக்கப்படும் மேலதிக சேவைகள் வழியாக மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. இலங்கையர்களுக்கிடையில் சிறப்பாக சேமிப்பு கலாசாரத்தினை ஊக்குவிக்கும் தேசிய சேமிப்பு வங்கியின் iSaver ஆனது, செயற்திறன் மிகுந்த டிஜிட்டல் சேவைக்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. எதிர்காலத்தினை நோக்கிய எமது வாடிக்கையாளர்களின் வசதி கருதி சிறந்த சேவைகளை அளிக்கும் விதத்தில் எமது டிஜிட்டல் மயமாக்கப் பட்ட சேவைகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளோம

அட்டை சேவைகள்

தேசிய சேமிப்பு வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு பல்வித அட்டைத் தெரிவுகளை அளிக்கின்றது. 2017ம் ஆண்டில் வங்கியானது, அதன் பற்று அட்டை மற்றும் அதற்கான கட்டமைப்பு சேவையினை மேம்படுத்தியதுடன், புத்தாக்க தயாரிப்பு வழிமுறை ஊடாக அதன் பற்று அட்டை வர்த்தகத்தினை துரிதப்படுத்தியது. எமது வாடிக்கையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள விஸ்தரிக்கப்பட்ட ATM வலையமைப்பின் ஊடாக தமது கணக்குகளில் பணத்தினை வைப்பிலிடவோ, மீளப்பெற்றுக்கொள்ளவோ முடியும். தேசிய சேமிப்பு வங்கியின் மாஸ்டர் அட்டை அல்லது விசா பற்று அட்டை ஆகியன, இணைக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகள் ஊடாக, வாடிக்கையாளர்கள் பரிவர்த்தனைகளை நிறைவுறுத்துவதற்கு அனுமதிக்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியானது, என்.எஸ்.பி ஈசி அட்டை தளம் (NSB Easy Card) வழியாக அளிக்கும் பெறுமானங்கள் மற்றும் சேவைத் தரத்தினை மேலும் வலுப்படுத்தியது. ஈசி அட்டைகள், மேலதிக இணைப்பு, ஆண்டு, காலதாமத அல்லது பிந்திய கொடுப்பனவுக் கட்டணம் இன்றி, வங்கியின் நிலையான வைப்பு உரிமையாளர்களுக்கு கடன் வசதிகளை அளிக்கின்றது.

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையிலான வாடிக்கையாளர் சேவையினை அளித்தல்

தேசிய சேமிப்பு வங்கி நிகரற்ற வாடிக்கையாளர் சேவையினை அளிப்பதன் ஊடாக வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தும் நோக்குடன் அர்ப்பணிப்புணர்வோடு செயலாற்றுகின்றது. வாடிக்கையாளர்களின் குறைகளை கையாள்வதற்கென பன்முக ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தேசிய சேமிப்பு வங்கியின் அழைப்பு நிலையம், வங்கி மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையிலான இருவழி தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த வகையிலான நேரடி தொடர்பாடல் மாபெரும் பெறுமதியினை அளித்துள்ளதுடன், உன்னத வாடிக்கையாளர் அனுபவத்திற்கும் பங்களிப்பு செய்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் அழைப்பு நிலையம் 24/7 சேவையினை அளிப்பதோடு, மிகச்சிறந்த சாத்தியமான வாடிக்கையாளர் சேவையினை நல்குகின்றது. இங்கு பெறப்படும் அழைப்புகள் முதலில் முகவர்களால் கையாளப்படுகின்றது. தொடர்ந்து ஏதாயினும் பிரச்சினைகள் இருப்பின், குறிப்பிட்ட பிரிவின் தலைமை அதிகாரிகளுக்கு அழைப்பு அனுப்பி வைக்கப்படும். வாடிக்கையாளர்கள் குறியீட்டு இலக்கம் ஒன்று அளிக்கப்படுவதுடன், குறித்த புகார்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படும். வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் மற்றும் அதனை நிவர்த்திக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, அவை ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு முகாமைத்துவத்திற்கு விளங்கப்படுத்தப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் தமது புகார்களை நாடளாவிய ரீதியிலுள்ள 253 கிளைகளில் பணியாற்றும் சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்களிடமும் முறையிட முடியும். பயிற்சி பெற்ற இந்த பணியாளர்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த தேவையான எந்தவொரு விபரத்தினை அளிப்பதுடன், முறைப்பாடுகளை கையாள்வதற்கான திறனையும் கொண்டுள்ளனர். நாடளாவிய ரீதியிலுள்ள கிளைகளில், வாடிக்கையாளர்கள் தமது பரிந்துரைகளை தெரியப்படுத்தும் வகையில் ஆலோசனைப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் www.nsb.lk என்ற தேசிய சேமிப்பு வங்கியின் இணையத்தளம் வழியாக இணைய வழியில் அடையலாம். இந்த தளமானது, சேவை விபரங்கள், கடன் விகிதங்கள், வைப்பு விகிதங்கள், முகாமைத்துவ குழுவினரின் தொடர்பு விபரங்கள் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. வாடிக்கையாளர்கள் மின்னஞ்சல், ஸ்கைப், வெப்ச்சேட் போன்ற ஏனைய டிஜிட்டல் முறைமைகளை பயன்படுத்தியும் வங்கியினை அணுகலாம்.

	2017	2016
தொலைபேசி மூலம் பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	**225,950**	200,045
வெப்சேட் (Webchat) ஊடான விசாரணைகளின் எண்ணிக்கை	**43,895**	40,009
பெறப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	**176**	184
தீர்க்கப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	**28**	26
அட்டைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை – விற்பனையின் மையம்	**1,968**	1,673
அட்டைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை – அட்டை விசாரணைகள்	**1,534**	1,608
இலங்கையின் மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள்	**None**	None
நிதி குறை தீர்ப்பாளரிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள்	**None**	None
ஒரு அழைப்புக்கு பதிலளிக்க எடுக்கப்பட்ட சராசரி நேரம்	**<30 Sec**	< 30 Sec
மின்னஞ்சல் ஊடான விசாரணைகளின் எண்ணிக்கை	**1,963**	1,968

GRI 418-1

வாடிக்கையாளர் அந்தரங்கம் பேணல்

நாம் அதியுன்னத சேவையினை அளிப்பதற்கு தகவல்கள் அனுசரணையளிக்கின்ற போதும், எமது முதன்மை முன்னுரிமையாக, வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்தல் விளங்குகின்றது. இது, வாடிக்கையாளர்கள் குறித்த தகவல்களை இரகசியமாக பாதுகாத்து வைத்திருப்பதிலேயே தங்கியுள்ளது. உங்கள் அந்தரங்க தகவல்களை பாதுகாக்கும் விதத்திலான அண்மைய தொழினுட்பங்கள் மீது நாம் தொடர்ந்து முதலீடு செய்துவருகின்றோம். ஏற்கனவே நடப்பிலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் எமது குழுவினருக்கு பயிற்சிகளையும் நாம் அளித்து வருகின்றோம். இதற்கு மேலதிகமாக "வாடிக்கையாளர் அந்தரங்கம்" பேணுதல் என்பது, தேசிய சேமிப்பு வங்கியின் சட்டங்களில் அத்தியாவசிய அம்சமாக விளங்குவதுடன், வாடிக்கையாளர் சாசனத்தின் முக்கிய அங்கமாக திகழ்கின்றது. 2017ம் ஆண்டில், வாடிக்கையாளர் அந்தரங்கம் மீறப்பட்டமை அல்லது வாடிக்கையாளர்கள் தொடர்பான தரவுகளில் இழப்புகள் ஏற்பட்டமை தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை.

GRI 417-2, 3

பொருட்கள் மற்றும் சேவைகள் பொறுப்புடமை

வைப்புகள் மற்றும் கடன் சேவைகள் மீதான வட்டி விகிதம், கட்டணங்கள் மற்றும் பரிவர்த்தனை விகிதங்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களும், கிளைகளில் உள்ள காட்சித்திரைகள், இலத்திரனியல் ஊடகம் மற்றும் கூட்டாண்மை இணையத்தளம் ஆகியவற்றின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளும், இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களிடம் தெளிவாகவும், முறையாகவும் தொடர்பாடல் செய்யப்படுகின்றது. மதிப்பாய்வுக்குட்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதியில், பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்களை வெளிப்படுத்தல் அல்லது சந்தைப்படுத்தல் தொடர்பாடல் விதிமுறைகள் தொடர்பில் இணக்கப்பாடற்ற செயற்பாடுகள் இடம்பெற்றதாக எந்தவொரு முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை.

GRI 102-13

தொழிற்துறை வலையமைப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் என்ற வகையில், எமது சகபாடிகள் மற்றும் வலையமைப்புடன் தொடர்ச்சியான தொடர்பாடல்களை மேற்கொண்டு, முழு தொழிற்துறையினையும் வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றோம். தொழிற்துறை சார் கருத்துக்களங்கள் மற்றும் பட்டறைகள் ஆகியவற்றில் பங்கேற்கும் நாம், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நலன்களில் ஆதிக்கம் செலுத்துவதிலும் முன்னிற்கின்றோம். வங்கியானது, பின்வரும் நிறுவனங்களுடன் அங்கத்துவம் வகிப்பதுடன், இதன் ஊடாக தொழிற்துறை பங்கேற்பாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பாடலையும் பேணுகின்றது.

- தேசிய வணிகக் கழகம்
- லங்கா க்ளியர் பிரைவேற் லிமிடட்
- இலங்கை முதலாளிமார் சம்மேளனம்
- உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான தொலைத்தொடர்பாடல் சங்கம் (SWIFT)
- இலங்கை SWIFT பாவனையாளர் குழுமம்
- Eurogiro குளோபல் கொடுப்பனவு சமூகம்
- உலக சேமிப்பு வங்கியியல் கல்வி நிறுவனம்

2017ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

ஒவ்வொரு வருடமும் தேசிய சேமிப்பு வங்கியானது, பன்முக வாடிக்கையாளர் தொடுபுள்ளிகளை இலக்கு வைத்து, நாடளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களை அணுகுதல் மற்றும் அவர்களின் திருப்தியை மேம்படுத்தும் வகையில், சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. எமது ஊக்குவிப்பு நடவடிக்கைகள், வாடிக்கையாளர்களுக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்படுகின்றன. சந்தை ஆய்வுகள் ஊடாக, தேசிய சேமிப்பு வங்கியின் சந்தைப்படுத்தல் குழு, வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் ஈடுபாடு ஆகியவற்றினை கண்டறிந்து, அதற்கேற்ற வகையிலான மூலோபாய சூத்திரம் ஒன்றினை வகுக்கின்றது. இந்த மூலோபாயமானது, தொடர்ந்து, நடவடிக்கையாக மாறுகின்றது. இதன் போது, குழுவினர், குறித்த வருடத்தில் சந்தைப்படுத்தப்படவுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

2017ம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியானது, வாடிக்கையாளர்களினை வங்கி சென்றடைதல் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றினை மேம்படுத்தும் வகையில் ஒரு தொகுதி விசேட சந்தைப்படுத்தல் முனைப்புகளை மேற்கொள்ள தீர்மானித்தது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2017ம் ஆண்டு மேற்கொண்ட பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

NSB iSaver

தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து 253 கிளைகளிலும், NSB iSaver அங்குரார்ப்பணம் குறித்த நாடளாவிய ஊக்குவிப்பு விளம்பர செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

NSB U-Trust

எமது வெளிநாட்டு நாணய ரெமிட்டன்ஸ் சேவையான NSB U-Trust ஆனது, இலங்கையை சேர்ந்த புலம்பெயர் சமூகத்தினர் மத்தியில் மிகுந்த பிரபலத்தை பெற்ற சேவையாக விளங்குகின்றது. U-Trust இனை விஸ்தரித்து, பிரபல்யப்படுத்தும் நோக்கிலும், Valutrans, Al Rajhi வங்கி, மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள நாணய பரிவர்த்தனை நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து இலங்கைக்கு வரவு வைக்கப்படும் ரெமிட்டன்ஸ் எண்ணிக்கையினை அதிகரிக்கும் வகையிலும் நாம் "அங்கிருந்து பணம், இங்கிருந்து பரிசு" (Cash from there, Gifts from here) என்ற அதிஷ்டலாப சீட்டிழுப்பு ஒன்றினை இரண்டாவது தடவையாக மேற்கொண்டோம். இந்த விளம்பர ஊக்குவிப்பானது, ஊக்குவிப்பு பொருட்கள் முதல் விளம்பரங்கள் வரையென பல்வகை ஊடகங்களால் பிரபலப்படுத்தப்பட்டது. ஸ்கூட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள், ஹோம் தியேட்டர் கட்டமைப்புகள், tab'கள், LED தொலைக்காட்சிகள், மொபைல் தொலைபேசிகள், துவிச்சக்கரவண்டிகள் போன்ற பல்வேறு வெகுமதிகள் 60 வெற்றியாளர்களுக்கு அளிக்கப்பட்டன.

ஸ்த்ரீ

தேசிய சேமிப்பு வங்கியின் ஸ்த்ரீ கணக்கானது, 2017 ஜனவரி 19ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து வெற்றிகரமாக மீள அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. எமது பெண் வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டும் வகையில், ஏராளம் பெறுமதி சேர்க்கைகளை அளித்தவாறு இந்த சேவை மீள் அறிமுகம் செய்யப்பட்டது. பரிசு வவுச்சர்கள், வாழ்க்கைப்பாணி குறித்த புத்தகங்கள், குடைகள் போன்றவை முதன்மை சேமிப்பாளர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. நாடளாவிய ரீதியிலான பிரசார ஊக்குவிப்பு நடவடிக்கை ஒன்றும், ஸ்த்ரீ கணக்கினை பிரபலப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது.

ஹப்பன்

ஹப்பன் என்பது 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான சேமிப்பு கணக்காகும். அதிகரித்து வரும் சந்தை போட்டிகளுக்கு மத்தியில் ஹப்பன், புஞ்சி ஹப்பன் மற்றும் தபால் ஹப்பன் போன்ற கணக்குகள் பிரபல்யப்படுத்தும் நோக்கில், வங்கியானது, 2017 மே 15ம் திகதி புதிய வெகுமதித் திட்டம் ஒன்றினை முன்னெடுத்தது. அதன்படி பென்சில் தொகுதிகள், மழைக்கோட், குடைகள், தண்ணீர் போத்தல்கள் போன்றன முதன்மை சேமிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

வாடிக்கையாளர்களுடன் டிஜிட்டல் முறையில் தொடர்பாடுதல்

வங்கித் தொழிற்துறையில், பொருட்கள் மற்றும் சேவைகளை பிரபல்யப்படுத்துதல், துரித கதியில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய காலகட்டத்தில், சமூக ஊடக வலைத்தளங்களில் டிஜிட்டல் பிரசன்னத்தினை கொண்டிருத்தல் வர்த்தக நாமங்களைப் பொறுத்தவரையில் முக்கியமான விடயமாகும். டிஜிட்டல் சந்தைப்படுத்தல் என்பது, கிடைக்கும் அனைத்து டிஜிட்டல் ஊடகங்களையும் உபயோகித்து, ஒரு சேவை அல்லது வர்த்தக நாமத்தினை ஊக்குவிக்கும் செயன்முறையாகும். தேசிய சேமிப்பு வங்கியானது, கட்டுப்படியான கட்டணத்தில், இலக்கு வைக்கப்பட்ட, துல்லியமான அளவீடுகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்ட டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முறைமையின் அனுகூலங்களைக் கண்டறிந்து கொண்டதுடன், சமூக ஊடக தளங்கள், பங்கேற்பாளர்களுடன் பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான வலுவான கருவியாக விளங்குதல் குறித்து தெரிந்து கொண்டதோடு, குறித்த இந்த ஊடகங்கள் வழியாக ஊடாடும் வாடிக்கையாளர்களை வர்த்தகநாம அபிமானிகளாக மாற்ற முடியும் என்பது குறித்தும் அறிந்துகொண்டது. தேசிய சேமிப்பு வங்கியானது, மொபைல் மற்றும் டிஜிட்டல் வங்கியியல் செயலிகள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் செயன்முறைகள் குறித்த செயற்திறன்மிகு தகவல்களை அளிக்கின்றது. எமது வங்கி வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு மேலதிகமாக அனைத்து கூட்டாண்மை விபரங்கள் மற்றும் செய்திகளை சமூக ஊடக வலைத்தளங்களில் அனைத்து வாடிக்கையாளர்களுக்காகவும் பகிர்ந்துகொள்கின்றோம்.

2017 ஓகஸ்ட் மாதத்தில் எமது டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை மீள்நிர்ணயம் செய்த நாம் எமது ஒன்லைன் பிரசன்னத்தினை தீவிரமாக கட்டமைக்க ஆரம்பித்தோம். இந்த முனைப்பில் facebook, YouTube, twitter மற்றும் LinkedIn ஆகிய சமூக வலைத்தளங்களில் ஊக்குவிப்பு பிரசாரங்களை நாம் முன்னெடுத்தோம்.



www.facebook.com/ NSBSLOfficial



https://www.linkedin.com/ company/nsbslofficial/



www.nsb.lk



https://twitter.com/ NSBSLOfficial



https://www.youtube.com/channel/ UCv5lA_fM2_L8fd9xObUlhuQ

GRI 102-9

வர்த்தக பங்குடமையாளர் மூலதனம்

தேசிய சேமிப்பு வங்கியானது, எமது தொகுதிகளுடன் பங்குடமையினை பேணுவோரை, நாம் முன்னெடுக்கும் வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாக நோக்குகின்றோம். கடந்த பல வருடங்களாக, திடமானதும், உற்பத்தித்திறன் மிக்கதுமான நீண்டகால உறவாடலினை நாம் எமது வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், வெளியக ஒப்பந்த சேவை வழங்குனர்கள், தொடர்புடைய வங்கிகள், ஏனைய பங்குதாரர்கள் என அனைவருடனும் கொண்டுள்ளோம். அரச வங்கி என்ற வகையில், முன்னுதாரணமிக்க கூட்டாண்மை நடவடிக்கைகளை பேண வேண்டிய பொறுப்புடமை எமக்குண்டு. உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகப் பங்காளர்களுடனான எமது தொடர்புகள் யாவும் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடனேயே பேணப்படுகின்றன.

வெளியக ஒப்பந்த சேவை கொள்கை

வங்கியின் வெளியக ஒப்பந்த சேவை (outsourcing policy) கொள்கையானது, 2012ம் ஆண்டின் 02ம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரகாரம் "உரித்துப்பெற்ற சிறப்பு வங்கிகளின் வர்த்தக செயற்பாடுகளுக்காக வெளியக ஒப்பந்த சேவை பெறல்" (Business Operations of Licensed Specialised Banks) விதிமுறைகளுக்கு அமைவாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த கோட்பாடானது, வெளியக ஒப்பந்த சேவைகளை பெற்றுக்கொள்வது அனுகூலமளிக்கும் அல்லது அத்தியாவசியம் என்ற நிலையில், மைய செயற்பாடுகள் இன்றிய ஏனைய செயற்பாடுகளுக்காக வெளியக ஒப்பந்த சேவைகளை பெற்றுக்கொள்ளும் வேளையில் பின்பற்றும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

வெளியக ஒப்பந்த சேவை கொள்கையாளது, வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் வெளியக ஒப்பந்த சேவையினை பெற்றுக்கொள்கையில், சபை பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினரின் கண்காணிப்பு உள்ளிட்ட, கருத்திற்கொள்ள வேண்டிய ஏனைய முக்கிய விடயங்கள் குறித்து விதிமுறைகளை வகுத்துள்ளது.

தொடர்பாடல் கொள்கை

அரசுக்கு சொந்தமான நிதி நிறுவனம் என்ற வகையில் வங்கியின் கூட்டாண்மை தொடர்பாடல் நடவடிக்கைகள் யாவும் சரியான நேரத்தில், துல்லியமாக, அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக, அதிகாரபூர்வமாக மற்றும் வங்கி தொடர்பான விடயங்களில் பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கியதாக இருத்தல் அவசியமாகின்றது. வங்கியின் அனைத்து தொடர்பாடல்களும் பொறுப்புடமை மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை நிவர்த்தி செய்யும் வகையில், தேசிய சேமிப்பு வங்கியானது, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்றினை கொண்டுள்ளது.

GRI 204-1

கொள்முதல் கொள்கை

வங்கி நடவடிக்கைகள் யாவும் தடையற்ற விதத்தில் முன்னெடுக்கப்படுதலை சாத்தியப்படுத்தும் வகையில் அனைத்து தேவையான பொருட்கள், கருவிகள் மற்றும் சேவைகள் யாவும் தேவையான நேரத்தில் கிடைத்தலை உறுதிப்படுத்தியவாறு, செலவீனத்தினை கட்டுப்படுத்தியபடி கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதே கொள்முதல் கொள்கையின் நோக்கமாக விளங்குகின்றது. இன்று வரை, நியம மற்றும் செயற்திறன் மிகுந்த கொள்முதல் நடைமுறைகளையே நாம் பின்பற்றி வருகின்றோம். இந்த இணக்காப்பாட்டு நடைமுறைகள், பேண்தகைமை கோட்பாடுகளுடன் ஒத்துப்போவதை உறுதிப்படுத்தும் வகையில், எமது வழங்குனர்கள் கடுமையான தரநிலைப்படுத்தல்களை பேண வேண்டும். எமது கோட்பாடுகள் – கொள்வனவு ஆதாரங்களை பெறுதல், கொள்முதல் செயன்முறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகிய செயற்பாடுகளின் போது வெளிப்படைத்தன்மை பேணப்படுவதை உறுதி செய்கின்றது.

எங்கள் கொள்முதல் கையேடானது, அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக உள்ளது. கொள்முதல் கையேட்டுக்கு அமைவாக, மூன்று மட்ட கொள்முதல் குழுக்களானது, அதிகாரத்துடன் இயங்குகின்றது. இந்த செயன்முறையின் ஒரு அங்கமாக, வங்கியானது, உள்நாட்டை அடிப்படையாக கொண்ட வழங்குனர்களிடமிருந்தே கொள்வனவு செய்கின்றது. ஒவ்வொரு ஆண்டும், வருடாந்த கொள்முதல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதுடன், குறித்த திட்டத்திற்கு அமைவாகவே கொள்முதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய சேமிப்பு வங்கியானது, நிலையான சொத்துகள், நுகர்வோர் பொருட்கள், தகவல் தொடர்பாடல் மற்றும் மென்பொருள் உட்கட்டமைப்பு, வெகுமதிப் பொருட்கள், பிரின்டிங், சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் கட்டுமாண சேவைகள் போன்றவற்றின் கொள்வனவுகளுக்கும், விசேட சந்தர்ப்பங்களில், ஆலோசனை சேவைகளுக்காகவும் வெளிப்புற விநியோகஸ்தர்களிடமிருந்தான சேவைகளை பெற்றுக்கொள்ளும்.

உறவாடல் முகாமைத்துவம்

தேசிய சேமிப்பு வங்கி கடந்த வருடத்தில், வணிக பங்காளர்கள் மற்றும் வங்கி சகபாடிகளுடனான உறவாடல்களை பேணும் வகையில் பல்வேறு முனைப்புகளை முன்னெடுத்தது. அது மாத்திரமன்றி வங்கியானது, புதிய உறவாடல்களை கட்டமைத்துக் கொள்தல் குறித்தும் இலக்கு வைத்தது.

பின்வரும் முனைப்புகள் தேசிய சேமிப்பு வங்கியினால் 2017ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

- தேசிய சேமிப்பு வங்கிக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவுமுறையினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், வெளிநாட்டு முகவர்கள் மற்றும் பரிமாற்ற இல்லங்களுக்கு (exchange house) சென்றது. தேசிய சேமிப்பு வங்கியின் வர்த்தக உறவாடல் அலுவலர்கள், உயர் தரமிக்க வாடிக்கையாளர் சேவையினை தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர் தளத்திற்கு அளிக்கும் வகையில், பரிமாற்ற இல்ல பணியாளர்களுடன் தொடர்பினை பேணினார்கள்.
- உலகளாவிய ரீதியில் உள்ள இலங்கை தூதுவராலயங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களில் இடம்பெற்ற கலாசார நிகழ்வுகளின் போது பல்வேறு சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பல்வேறு பயிற்சி அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன
- புதிய சந்தைகளை கைப்பற்றும் வகையில், தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களுடன் சிறந்த உறவாடல்கள் பேணப்பட்டன
- மோட்டார் வாகன முகவர்கள் மற்றும் நிதி வர்த்தக துறையினருடன் புதிய இணைப்புகள் உருவாக்கப்பட்டன

GRI 413-1

தேசிய சேமிப்பு வங்கி சமூகத்தின் மீது நிஜமான தாக்கத்தினை மேற்கொள்கின்றது

அரசாங்கத்துக்கு சொந்தமான வங்கி என்ற வகையில், முன்னுதாரணமிக்க கூட்டாண்மை பிரஜையாக திகழ வேண்டிய பொறுப்புடமை தேசிய சேமிப்பு வங்கிக்கு உண்டு. இதன் பிரகாரம் நாம் நடக்கையில் எமது சமூதாயம் மற்றும் சுற்றுச்சூழல் மீது நாம் கொண்டுள்ள தாக்கத்தின் அளவு குறித்து அறிந்துள்ள நாங்கள், சமூக பெறுமானத்தினை, ஸ்திரமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக உருவாக்குவதனை கடப்பாட்டுடன் கிரமமாக மேற்கொள்கின்றோம். 1972ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாள்முதல், நீண்ட கால அடிப்படையிலான பெறுமானங்களை எமது வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், நாம் செயலாற்றும் சமூகம் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றுடன் பகிர்ந்து வருகின்றோம். எமது தலைவரின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததன் அடிப்படையில், பேண்தகைமையே, எமது வினைத்திறன் மிகுந்த பாதை மற்றும் செயற்பாடுகளில் முக்கிய அம்சம் வகிக்கின்றது. ஒரு அரச நிறுவனம் என்ற வகையில், ஏனைய வர்த்தக சமூகங்களுக்கு நாம் முன்னுதாரணமாக நாம் விளங்க வேண்டும்.

எமது வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், சமூகம் மற்றும் சுறறுச்சூழல் ஆகியவற்றின் நலன்கள் மீது கரிசனை செலுத்த வேண்டிய கடமை எமக்குண்டு என்பதையும், எமது வணிக நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் மற்றும் சமூகங்கள் மீது ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் நாம் அறிந்துள்ளோம். அனைத்து சமூக–பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்த அக்கறை ஆகியன எமது வர்த்தக மாதிரி, மைய வர்த்தக செயற்பாடுகள் மற்றும் அனைத்து தீர்மானங்களிலும் ஒருங்கிணைந்துள்ளன. பேண்தகைமை நிறைந்த சமூக பெறுமானம் மற்றும் கூட்டாண்மை பெறுமதியினை ஒருங்கே உருவாக்குவதே எமது உச்ச இலக்காகும்.

ஒவ்வொரு வருடமும் தேசிய சேமிப்பு வங்கியினால் பல்வேறு சமூக நலத்திட்டங்கள், அபிவிருத்தி செயற்திட்டங்கள் போன்றவை ஒழுங்கு செய்யப்படுகின்றன. சமூக நல்வாழ்வு, தேசிய ஆரோக்கியம், கல்விக்கான ஆதரவு மற்றும் ஏனைய சமூக, கலாசார, சமய நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய கடப்பாடும் எமக்குண்டு. அந்த வகையில் பின்வரும் செயற்பாடுகள் 2017 ம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும்:

GRI 203-1

தேசத்தின் உற்பத்தித்திறனை கட்டமைப்பதில் எமது பங்களிப்பு

மத்திய துரிதவழிப்பாதை (Central Expressway) போன்ற இலங்கையின் பாரியளவிலான உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு வங்கி கடன் அளித்துள்ளது. இதன் ஊடாக, அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, மேல் மாகாணத்திலுள்ள தொழிற்துறை செறிவினை விஸ்தரிக்கும் வேளையில், அதற்கு வேண்டிய அணுகுமுறை மற்றும் செயற்பாட்டு வசதிகளை அதிகரித்தவாறு, எழக்கூடிய இடர்களை குறைக்க முடியும். இதற்கு மேலதிகமாக மத்திய துரிதவழிப்பாதையானது, நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களின் தொழிற்துறை சாத்தியங்களை அதிகரித்தவாறு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்யும்.

சமூக நல்வாழ்வில் எமது பங்களிப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ், களுத்துறை மாவட்டத்திற்கான உணவு நிவாரணம்

மோசமான வானிலை காரணமாக, துரித வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில் களுத்துறை மாவட்டம் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியானது, கல்வி அமைச்சு மற்றும் தொழின்முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்ட வாசிகளுக்கு வெள்ள நிவாரணம் அளிக்கும் முனைப்பொன்றை ஒழுங்கு செய்தனர்.

தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த முனைப்பானது, 50 பாடசாலைகளை சேர்ந்த 5000 பாடசாலை மாணவர்களுக்கு உதவும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றது. இந்த திட்டத்தின் கீழ், நாம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களை திருத்தியமைத்துக்கொடுத்ததுடன், 24 அப்பியாசக் கொப்பிகள், எட்டு பேனாக்கள், ஆறு பென்சில்கள், மூன்று அழிரப்பர்கள், ஒரு அடி மட்டம் ஆகியவற்றினை உள்ளடக்கிய காகிதாரி பொதியொன்றும் மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

இந்த திட்டத்தில், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள புளத்சிங்கள, பதுரலிய, மத்துகம பிராந்திய மாணவர்க்கு கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள், வெள்ளப்பாதிப்புக்குட்பட்ட பாடசாலைகளின் விபரங்களை அளித்தன. குறித்த கிளைகளின் சிபாரிசுகள், இந்த நிவாரண செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளையில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட பாடசாலைகள், உட்கட்டமைப்பு புனர்நிர்மானத்திற்கு தேவையான செலவீன மதிப்பீட்டினை பிராந்திய வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகாரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டுமென கோரப்பட்டது.

மொத்தமாக ரூ. 9 மில்லியன் தொகை இந்த செயற்திட்டத்திற்காக திரட்டப்பட்டது. இதில் ரூ. 5 மில்லியன் வங்கியினால் பங்களிப்பு செய்யப்பட, மிகுதி ரூ. 3.8 மில்லியன் தொகையானது, தேசிய சேமிப்பு வங்கி பணியாளர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தினை நன்கொடையாக அளித்ததன் மூலம் திரட்டப்பட்டது. இந்த வெள்ள நிவாரண செயற்திட்டத்திற்காக மொத்தமாக ரூ. 4.2 மில்லியன் செலவானது. மிகுதியாயிருந்த ரூ. 4.5 மில்லியன் ரூபாய், மற்றுமொரு தேசிய முக்கியத்துவம் பெறும் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் உத்தேசத்துடன், வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதியத்தில் சேமிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் தினம் 2017

கவலைகள் மற்றும் ஏக்கங்கள் இன்றி, ஆரோக்கியமான வாழ்வினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் முதியவர்களுக்கு ஆதரவும், பராமரிப்பும், ஆறுதலும், சௌகர்யமும் தேவை என்பதை தேசிய சேமிப்பு வங்கி அறிந்து வைத்துள்ளது. இந்த "சர்வதேச முதியோர் தினம்" "எதிர்காலததை நோக்கி பயணித்தல்" (Stepping into the future) என்ற கருத்தாக்கத்தின் கீழ் 2017 ஒக்டோபர் 01ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வானது, முதியோருக்கான தேசிய செயலகம் (NSE)) மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வுக்கான பிரதான அனுசரணையினை தேசிய சேமிப்பு வங்கி அளித்தது.

இந்த நிகழ்வானது, 100 வயதுக்கு மேற்பட்ட முதிய ஆண்களையும், 75 வயதுக்கு மேற்பட்ட முதிய பெண்களையும், 14 ற்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றெடுத்தோரையும் கௌரவித்து கொண்டாடியது.

வங்கியானது, இந்த நிகழ்வுக்காக ரூ. 600,000.00 இனை அனுசரணையளித்தது. 100 வயதுக்கும் மேற்பட்ட 235 எண்ணிக்கையிலான முதியவர்களுக்கு ரூ. 2,000.00 பெறுமதியான பரிசு வவுச்சர்கள் அளிக்கப்பட்டன. அத்துடன், ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 முதியவர்களுக்கு 10 விசேட வெகுமதிகள் அளிக்கப்பட்டன. வழங்கப்பட்ட பரிசுகளுக்கான மொத்த செலவீட்டுத் தொகை ரூ. 490,000.00 ஆகும்

மெத்சரண புலமைப்பரிசில்

மீதொட்டுமுல்ல நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் அளிக்கும் வகையில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வானது, நகரத் திட்டமிடல் மற்றும் நீர் விநியோக அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை AIA காப்புறுதி நிறுவனம் ஆகியவற்றினால் அனுசரணை அளிக்கப்பட்டது. 2017 நவம்பர் 16ம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் ரூ. 25,000 பெறுமதியான புலமைப்பரிசில்கள் 107 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி ரூ. 1.2 மில்லியன் தொகையினை இதற்கென பங்களிப்பு செய்தது.

விரு சுமித்துரு – மரணித்த மற்றும் விசேட தேவையுடைய யுத்த வீரர்களுக்கான வீட்டுத்திட்டம்

பாதுகாப்பு அமைச்சு மற்றும் ரணவிரு செவண அதிகாரசபை ஆகியன, மரணித்த மற்றும் விசேட தேவையுடைய போர் வீரர்களுக்கு 750 வீடுகளைக் (300 புதிய வீடுகள், 450 பகுதியளவு கட்டப்பட்ட வீடுகள்) கட்டமைத்துக் கொடுக்கும் வகையில் செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்தது. தேசிய சேமிப்பு வங்கி இந்த செயற்திட்டத்திற்காக ரூ. 1.2 மில்லியன் இனை நன்கொடையளித்தது.

பொரள்ளையில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வெகுமதி பொதி விநியோகம்

கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் மத்தியில் தேசிய சேமிப்பு வங்கி 3,000 பரிசுப்பொதிகளை விநியோகித்தது. இந்த வெகுமதிப் பொதிகள் தரம் 01 மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக தேசிய சேமிப்பு வங்கி ரூ. 2.1 மில்லியனை முதலீடு செய்தது.

கல்வி மீதான எமது பங்களிப்பு

தேசிய சேமிப்பு வங்கி, ஹப்பன் புலமைப்பரிசில் நிகழ்வினை தொடர்ச்சியாக 13வது தடவையாக முன்னெடுப்பு

தேசிய சேமிப்பு வங்கி, தரம் 5ற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நோக்குடன் வருடாந்தம் இந்த நிகழ்வினை முன்னெடுத்து வருகின்றது. இந்த விருது நிகழ்வானது, ஹப்பன் கல்விக் கருத்தரங்கு தொடரின் இறுதிநிலையாக விளங்குகின்றது. 13வது 1ஹப்பன் புலமைப்பரிசில்கள் விருது நிகழ்வானது, 2017 ஒக்டோபர் 31ம் திகதியன்று, நெலும் பொக்குண அரங்கில் இடம்பெற்றது.

விருது பெற்ற 214 மாணவர்களில் 13 மாணவர்கள், கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பிரச்சனை உள்ள விசேட தேவை கொண்டோராக விளங்குகின்றனர். கற்றல் குறைபாடுகள் உள்ள பிள்ளைகளின் கடும் உழைப்பு மற்றும் கடப்பாட்டினை தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கின்றது. அதற்கமைய கற்றல் குறைபாடு உள்ள பிள்ளைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் ரூ. 195,000 தொகை அவர்களுக்கென வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ளது.

17வது ஹப்பன் புலமைப்பரிசில் கருத்தரங்குத் தொடர்

ஹப்பன் தரம் 5 புலமைப்பரிசில் கருத்தரங்கு தொடரானது, நாட்டின் எதிர்கால தலைவர்களையும், தேசிய கல்வி செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதுமான தேசிய சேமிப்பு வங்கியின் முனைப்புகளில் ஒரு அங்கமாக விளங்குகின்றது. 2017ம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 144 கருத்தரங்குகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 72,000 மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். நாடளாவிய பாடசாலைகளில் இருந்து தமிழ் சிங்கள மொழி மாணவர்கள் கலந்துகொண்ட இந்த கருத்தரங்குகள், புகழ்பெற்ற கல்வியாளர்களால் நடாத்தப்பட்டது, இந்த வருடத்தில் இம்முனைப்புக்கென ரூ. 3.4 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, 2001ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்றது.

நனோத கல்வி மேம்பாட்டு திட்டம்

கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள 15 கல்வி வலயங்களை சேர்ந்த க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் இந்த கருத்தரங்கு மத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்டது. மொத்தமாக 30 கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், தேசிய சேமிப்பு வங்கியானது இதற்காக ரூ. 2,946,400.00இனை ஒதுக்கியது

ஆரோக்கியம் பேணல் வீடயங்களில் எங்கள் பங்களிப்பு

ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்கா

தற்போது இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட, இரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வசித்து வரும் நிலையில், இவர்களில் 500,000 வரையானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோராவர். இவர்களுக்கு சரியான மருத்துவ மற்றும் கண் பராமரிப்பு வசதிகளுக்கான அணுகுதல் கிடைப்பதில்லை. ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்கா நிறுவனமானது, மருத்துவ தேவைகளைக் கொண்ட இலங்கையின் கிராமப்புறங்கள் மற்றும் புறநகரங்களைச் சேர்ந்த முதியவர்களின் தேவை கருதி நடமாடும் மருத்துவ முகாம்களை நடாத்தி வருகின்றனது. தேசிய சேமிப்பு வங்கியானது, தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வேண்டிய நிதி உதவியினை ஹெல்ப் ஏஜ் இற்கு அனுசரணை அளிக்கின்றது. ஹெல்ப் ஏஜ் ஆனது, மருத்துவ பரிசோதனைகள், இருபார்வை (bifocal) மூக்குக் கண்ணாடிகளுக்கான நன்கொடை, வாசிப்பு கண்ணாடிக்கான நன்கொடைகள், கண் புரை சத்திரசிகிச்சைக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

நவீன மருத்துவ உபகரணங்கள், வைத்தியர்கள், தாதிகள், மருத்துவ உதவியாளர்கள் உள்ளிட்டோரை கொண்ட குழுவொன்று பேருந்தொன்றில், நாட்டின் தூரப்பிராந்தியங்களுக்கு பயணம் செய்து, வசதி குறைந்த வயோதிபர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவியினை அளிக்கின்றனர். இந்த பேருந்தில், மருந்தகம், உடனடியாக வழங்கப்படக்கூடிய இலவச மூக்குக் கண்ணாடிகள் உள்ளிட்ட நாளாந்தம் 150 பேருக்கு இலவச சிகிச்சை அளிக்கக்கூடிய அனைத்து வசதிகளும் உள்ளடங்கியுள்ளன

2017ம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கியானது, ஒன்பது நடமாடும் மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாம்களுக்கு ரூ. 1.8 மில்லியன்களை அளித்தவாறு அனுசரணையளித்தது. இதன் மூலம் 1500ற்கும் மேற்பட்ட இலங்கையின் மூத்த பிரஜைகள் பயன்பெற்றனர். ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்கா, களுத்துறை, தங்காலை, காலி, கல்கமுவ, மீரிகம, குருநாகலை, குளியாப்பிட்டி மற்றும் ஹெலமட ஆகிய இடங்களில் கண் பரிசோதனை முகாம்களை நடாதியது

கொழும்பு /ப்ரெண்ட் இன் நீட் சங்கத்தினால் ஒட்டுசுட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் மருத்துவ முகாம்

தேசிய சேமிப்பு வங்கி மற்றும் கொழும்பு/ப்ரெண்ட் இன் நீட் சங்கம் (Friend-In-Need Society) ஆகியன இணைந்து ஒட்டுசுட்டான் நகரில நடமாடும் ஆரோக்கிய மருத்துவ முகாமிற்கு அனுசரணை அளித்தது. இந்த முகாமில் 1,500 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்பார்வை, கேட்டல் மற்றும் நீரிழிவு பரிசோதனைகளை மேற்கொள்ளும் அனுகூலத்தினை பெற்றனர். செயற்கை உடல் உறுப்புகள் திருத்தி அளிக்கப்பட்டதுடன், 20 ற்கும் மேற்பட்டவர்களுக்கு செயற்கை உறுப்புகள் அளிக்கப்பட்டன. வங்கியானது, இந்த மருத்துவ முகாமிற்காக ரூ. 389,000.00 இனை பங்களித்தது

எதிர்காலத்தை நோக்கிய ஒரு பார்வை

தேசிய சேமிப்பு வங்கியானது, எமது பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் ஏனைய பங்குடமையாளர்களுடன் கொண்டிருக்கும் உறவாடல் ஊடாக பெறுமானத்தினை உருவாக்கும் வகையில் சீரிய முனைப்புகளை முன்னெடுத்து வருகின்றது. எதிர்வரும் வருடங்களில், எமது வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பன்முக சேவை விநியோக அணுகுமுறையினை மேம்படுத்த தேசிய சேமிப்பு வங்கி உத்தேசித்துள்ளது. இந்த இலக்கினை அடையும் நோக்குடன் வங்கியானது, அர்ப்பணிக்கப்பட்ட வாடிக்கையாளர் பதிலளிப்பு முகாமைத்துவ தீர்வினை(CRM) அளிக்கும் சேவையினை, வங்கியின் அழைப்பு நிலையத்தில் ஸ்தாபித்துள்ளது. இந்த பிரிவானது, அனைத்து கிளை வலையமைப்பு மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றினை இணைக்கும் விதத்தில் செயற்படும். இந்த பிரிவானது, வாடிக்கையாளர்களின் குறைகளை கேட்டறிந்து, அதற்கு சரியான முறையில் பதில் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும். தேசிய சேமிப்பு வங்கியானது, டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக முன்னெடுத்துள்ளதுடன், டிஜிட்டல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலையும் மேம்படுத்துகின்றது. அதுமாத்திரமன்றி, தேசிய சேமிப்பு வங்கியின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மூலோபாயமானது மீள்நிர்ணயம் செய்யப்படவுள்ளது. வங்கியின் சந்தைப்படுத்தல் குழுவானது, பன்முக ஊடகங்கள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் வழியாக, எமது பரந்துபட்ட சேவை வழங்கல் குறித்த விழிப்புணர்வினை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் முன்னெடுக்கும். அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய சந்தை திட்டம் ஒன்று சந்தைப்படுத்தல் திணைக்களத்தினால், அதிகளவானோரை சென்றடையும் வகையிலும், வாடிக்கையாளர் தளத்தினை உயர்த்தும் வகையிலும், வைப்பு திரட்டலை அதிகரிக்கும் நோக்குடனும் மேற்கொள்ளப்படும்.

அங்குரார்ப்பணம் செய்த நாள் முதல், தேசிய சேமிப்பு வங்கியானது, நாடளாவிய ரீதியில் அது சேவையளிக்கும் சமூகங்களுடன் ஒன்றிணைந்த பங்களிப்பினை நல்கி வருகின்றது. தொழிற்துறை விற்பன்னர்களின் ஆலோசனைகளை பெற்றவாறு, உள்ளக கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வுக் கோட்பாட்டினை மேம்படுத்தவுள்ள தேசிய சேமிப்பு வங்கியானது, அதன் ஊடாக வங்கியின் சமூகம் சார்ந்த கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளை நெறிப்படுத்தி முகாமை செய்ய விளைகின்றது. கொள்கை ஒன்றினை பேணுவதன் ஊடாக சிறப்பான நிறுவனம் சார் நடவடிக்கைகள் மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நிர்வகித்தல் போன்றவற்றினை முன்னெடுக்க உதவுகின்றது. தேசிய சேமிப்பு வங்கியின் மைய பெறுமானங்களின் உதவியுடன் தேசிய சேமிப்பு வங்கியானது, சமூகத்திற்கு பிரதியுபகாரம் செய்தலை தொடரும். சமுதாயத்தில் நிலவும் சமூக, பொருளாதார தேவைகள் குறித்து துல்லியமாக அறிந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியானது, நீண்டகால பெறுமானத்தினை உருவாக்கியபடி, பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மை மிகுந்த எதிர்காலத்தினை கட்டியெழுப்புவதில் கைகோர்க்கும்.

தனியொருவருக்காக அன்றி ஒரு சந்ததியின் நன்மைக்காகவே ஒரு மரம் நாட்டப்படுகின்றது.

93வது உலக சிக்கன நாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட, சுற்றுச் சூழலை பேணும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் சிறப்பு நிலை செயற்திட்டமான தேசிய சேமிப்பு வங்கியின் வேளாண் காடு வளர்ப்பு (Agro forestry), 2020ம் ஆண்டில் ஒரு மில்லியன் செடிகளை விநியோகம் செய்யும்



இயற்கை மூலதனம்

பௌதீக சார் செயற்பாடுகள் குறைவாக முன்னெடுக்கப்படும் சேவையினை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனம் என்ற வகையில், வங்கியின் செயற்பாடுகள், மாசு உமிழ்வுகள் அல்லது ஆபத்தான கழிவுகளை வெளியிடுதல் போன்ற சுற்றுச்சூழலை நேரடியாக தாக்கும் விடயங்களை கொண்டிருப்பதில்லை. எனினும், பொறுப்புணர்வுமிக்க பொது நிறுவனம் என்ற வகையில், சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களை எதிர்கால தலைமுறையினரின் நன்மை கருதி பார்காக்க வேண்டிய கடமை உண்டென்பதை வங்கி அறிந்துள்ளது.

காகிதாதிகள், நிலையான சொத்துகள் மற்றும் விளம்பர பிரசாரங்களுக்கான ஊக்குவிப்பு சாதனங்கள் தவிர்த்து நாம் எந்தவொரு பொருட்களையும் உற்பத்தி செய்வதில்லை என்பதுடன், இதன் காரணமாக இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் புறக்கணிக்கத்தக்கவை. எமது வணிக வளாகங்கள் கூட, கவனமாக பரிசீலிக்கப்பட்டு தெரிவுசெய்யப்படுவதுடன், சுற்றாடலுக்கு குறைந்தளவு தாக்கத்தினை அளிக்கும் வகையில் கவனமாக கட்டுமாணம் செய்யப்படுகின்றன.

ஐ.நா SDG களின் வழிகாட்டுதலின் பேரில், இலங்கை அரசாங்கம் பேண்தகைமை முனைப்புகள் பலவற்றினை அமுல்படுத்தியுள்ளது. அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையிலும், பொறுப்புணர்வு மிக்க கூட்டாண்மை அங்கத்தவர் என்ற வகையிலும், சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத இவ்வாறான முனைப்புகள் பலவற்றிற்கு நாம் எமது ஆதரவை தெரிவித்துள்ளோம். சூழல் கட்டமைப்பில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றோம் என்பதையும் நாம் அறிந்துள்ளோம். சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை எதிர்கால சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் பாதுகாக்கும் நிமித்தம் பல்பரிமாண அணுகுமுறையினை நாம் சுவீகரித்துள்ளோம்.

டிஜிட்டல்மயப்படுத்தல் சுற்றுச் சூழலுக்கு உதவுகின்றது

கடந்த பல வருடங்களாக டிஜிட்டல் வங்கியியல் செயற்பாடுகளில் முதலீடு செய்துள்ள தேசிய சேமிப்பு வங்கியானது, புத்தாக்க டிஜிட்டல் சேவைகளை அளித்தவாறு, டிஜிட்டல் நடைமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடானது, காகிதத்தினை அடிப்படையாக கொண்ட கட்டமைப்புகள், களஞ்சியப் படுத்துவதற்கான இடப்பரப்பு ஆகியவற்றின் தேவையை தானியங்கி முறையில் இல்லாதொழிப்பதோடு, கார்பன் தடத்தினையும் குறைக்க உதவும் என்பதை நாம் அறிந்துள்ளோம்

NSB iSaver

தேசிய சேமிப்பு வங்கியின் iSaver கணக்கு அறிமுகத்துடன், ஒரு பொத்தானை அழுத்துவதன் ஊடாக பணத்தினை சேமிக்கக்கூடியதாக உள்ளது. இதன் மூலம், காகிதங்களின் பாவனை இல்லாதொழிக்கப்படுவதுடன், பிற வழிகளில், வளங்களை நுகர்தலும் குறைக்கப்படும்

ஏனைய டிஜிட்டல் முனைப்புகள்

குறைந்த காகிதப் பாவனையினைக் கொண்ட நடைமுறைகளை முன்னெடுப்பதன் ஊடாக காகிதம் அற்ற வணிக செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தும் வகையில் பின்வரும் முனைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

- காகிதப் பாவனையை குறைக்கும் வகையில், அச்சிட்ட கடிதங்களுக்கு பதிலாக மின்னஞ்சல்களை பெறும் வகையில் பதிவு செய்து கொள்ளுமாறு, எமது வாடிக்கையாளர்களை நாம் ஊக்குவிக்கின்றோம்
- சக்தி மற்றும் வளங்களை சேமிக்கும் வகையில், வாடிக்கையாளர்கள் தமது வங்கி நடவடிக்கைகளை இணையம், மொபைல் மற்றும் SMS வங்கியியல் சேவைகள் ஊடாக மேற்கொள்ள நாம் ஊக்கமளிக்கின்றோம்
- சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் ஏனைய வழிமுறைகளை குறைத்து, ஒன்லைன் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் வழியாக டிஜிட்டல் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை நாம் அதிகரித்துள்ளோம்

பசுமை சார் வங்கியியல் முனைப்புகள்

செயற்திறன்மிகு சக்தி வளத்தினை கட்டமைத்தல்

வங்கியானது அதன் அனைத்து செயற்பாடுகளிலும், செயற்திறன்மிகு சக்திவள பயன்பாடு முன்னெடுக்கப்படுதலை உறுதி செய்யும் நோக்கில், பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது, புதுப்பிக்கத்தக்க சக்திவள பாவனைக்கு படிப்படியாக மாற்றமடைந்து வரும் இத்தருணத்தில், 2017ம் ஆண்டில் ஐந்து கிளைகளில் சூரிய சக்தி கட்டமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த கிளைகளில் உள்ள மின்சார உபகரணங்களை பாதுகாக்கும் நோக்குடன் மின்னல் ஒடுக்கி (lightning arrester) ஒன்றும் நிறுவப்படும். ஸ்ப்ளிட் குளிரூட்டிகளுக்கு பதிலாக, சக்தி வளத்தினை சேமிக்கும் வகையில், இன்வெர்ட்டர் முறையில் செயற்படும் குளிரூட்டிக் கட்டமைப்புகளை தலைமை அலுவலகத்தில் நிறுவியுள்ளோம்.

பசுமைக்கடன் வழங்கல் முனைப்புகள்

தேசிய சேமிப்பு வங்கியானது, இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் லங்கா மின்சார கம்பனி (தனியார்) லிமிட்டட் (LECO) ஆகியவற்றுடனான பங்குடமையினை தொடர்ந்தவாறு, சக்திவளம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சூர்ய பல சங்க்ராமய என்ற சமுதாயம் சார்ந்த மின்சக்தி தயாரிப்பு செயற்திட்டத்திற்கு சகாயமளித்தது. தேசிய சேமிப்பு வங்கியின் சுற்றுச்சூழல் கடன் திட்டம், புதுப்பிக்கத்தக்க சக்திவளத்திற்கு மாற நினைக்கும் இலங்கையர்களுக்கு தேவையான நிதி உதவியினை அளிக்கின்றது. இந்த செயற்திட்டமானது, பயனாளர்கள் தமது மின்சார பாவனைப்பட்டியலில் சேமிப்பினை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதுடன், அதன் ஊடாக தேசிய சக்திவளக் கட்டமைப்பிற்கு பங்களிப்பு நல்கவும் வழியமைத்துக்கொடுக்கின்றது. வாடிக்கையாளர்கள் நெற்–மீற்றரிங் கட்டமைப்பு, நெற்–கணக்கியல் கட்டமைப்பு மற்றும் நெற் ப்ளஸ் கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தெரிவுகளில் ஒன்றினை தேர்வு செய்ய முடியும்.

GRI 302-1

சக்தி நுகர்வு

எமது முதன்மை சக்தி வள ஆதாரமாக மின்சாரமே விளங்கும் நிலையில், இது முற்றுமுழுதாக தேசிய மின்விநியோக அமைப்பினாலேயே பூர்த்தி செய்யப்படுகின்றது. ஆண்டுக்கான எமது மின்சார பாவனை 27,614 ஜிகா யூல்களாக விளங்கிய நிலையில், எமக்கு சொந்தமான கிளைகளுக்கு சூரிய சக்தி கட்டமைப்பினை பொருத்தியிருப்பதன் ஊடாக மின்சார பாவனையை குறைக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். இதற்கு மேலதிகமாக, சக்திவள பாதுகாப்பினை குறைத்தல் மற்றும் LED மின்விளங்குகள், பாவனையில் இல்லாத வேளையில், மின்சார உபகரணங்களை மின்சாரபோக்கில் இருந்து துண்டித்தல், தேவையற்ற மின்விளக்குகளை அணைத்து விடுதல், காகிதங்களை அச்சிடுதலை குறைத்தல் போன்ற இன்ன பிற விடயங்களை கடைப்பிடிப்பதன் ஊடாக எரிசக்தி நுகர்வினை குறைப்பது போன்ற முக்கிய விடயங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளக பணியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

ஏனைய சக்தி வளப் பாதுகாப்பு முனைப்புகள்

கிளைகள் மற்றும் அலுவலக கட்டடங்கள் உள்ளிட்ட எமது செயற்பாடுகள் யாவற்றின் ஊடாக தேசிய சேமிப்பு வங்கி, நேரடியாக சுற்றுச்சூழல் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. தண்ணீர், காகிதம், எரிசக்தியினை செயற்திறனுடன் பயன்படுத்தல், சிறந்த கழிவு மேலாண்மை உள்ளிட்ட வங்கியின், சக்தி வளத்தினை பாதுகாக்கும் முனைப்புகள் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அற்ற வளங்களின் பாவனையை குறைத்தல் மற்றும் வளங்களை பாதுகாத்தல் தொடர்பில், பணியாளர்களுக்கு தொடர்ச்சியாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகின்றது.
- கிளைகளுக்கான கட்டடங்களை கட்டமைக்கும் வேளையில், தேசிய சேமிப்பு வங்கியானது, இயற்கை வளங்கள் மீது எதிர்மறை தாக்கம் ஏற்படாதிருக்க அதிகபட்ச முனைப்புகளை மேற்கொள்கின்றது.
- வங்கியானது, LED கணணி திரைகளையே உபயோகிக்கின்றது.
- தேசிய சேமிப்பு வங்கியின் விளம்பர ஊக்குவிப்பு பொருட்கள் யாவும் மக்கிப்போகும் தன்மை கொண்டவை
- வங்கியானது, வீட்டுக் கடன்களை அளிக்க முன்னர், உள்ளூர் அதிகார சபைகளிடமிருந்து, இல்லக் கட்டுமாணங்களுக்கான சட்டபூர்வ அனுமதியினை பெற்றுள்ளமையை சமர்ப்பிக்குமாறு கோருகின்றது.
- வழமையான வங்கி அலுவல் நேரங்களுக்கு மட்டுமே குளிரூட்டி பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- வங்கியானது, CFC அற்ற குளிரூட்டி இயந்திரங்களை மாத்திரமே பாவனை செய்கின்றது

தேசிய சேமிப்பு வங்கியின் வேளாண் காடு வளர்ப்பு – 2020ம் ஆண்டில் ஒரு மில்லியன் தாவரங்கள்

மரங்கள், மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை என்பதை நாம் அறிந்துள்ளோம். ஏற்கனவேயுள்ள காடுகளும், நாம் நாட்டும் மரங்களும் இணைந்து, உலகத்தினை சிறந்த இடமாக மாற்றுவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. மரங்கள் சிறந்த மண்ணை கட்டமைப்பது மாத்திரமன்றி, சக்தி–சேமிப்பினை அளிக்கும் நிழலை அளித்தவாறு, புவி வெப்பமடைதலை குறைப்பதோடு, ஆயிரக்கணக்கான வெவ்வேறு உயிரினங்களுக்கான வாழ்வாதாரமாகவும் திகழ்கின்றது, நகரப்புறங்களில் காற்றின் ஓசோன் மட்டத்தினையும் மரங்கள் வெகுவாக குறைக்கின்றன.

தேசிய சேமிப்பு வங்கியின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கினை இலக்காக கொண்ட, சிறப்புநிலை செயற்திட்டமான வேளாண் காடு வளர்ப்பு (Agro forestry), 93வது உலக சிக்கன தின கொண்டாட்டத்தினை சிறப்பிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் வேளாண் காடு வளர்ப்பு திட்டமானது, 2020ம் ஆண்டளவில, ஒரு மில்லியன் தாவரங்களை விநியோகித்தலை இலக்காக கொண்டுள்ளது. இந்த செயற்திட்டமானது, முதன்மை தொழிற்துறை அமைச்சின் “தன சவிய” நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை சபை ஆகியவற்றுடன் இணைந்து, வருமானம் பெறுவதற்கான புதிய ஆதாரத்தினை உருவாக்குதல் மற்றும் சுற்றாடலை பேணல் ஆகியவற்றினை நோக்காக கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

வங்கியானது, 25,000 மிளகுச் செடிகள் மற்றும் தென்னை நாற்றுகளை நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அதன் கிளை வலையமைப்பு வழியாக அளித்துள்ளது.ஒவ்வொரு கிளைக்கும், வாடிக்கையாளர்கள் மத்தியில் விநியோகிக்குமாறு 100 செடிகள் வழங்கப்பட்டன. வயது, வாழ்க்கை நிலை, சமூக நிலை க்கு அப்பால் சென்று, ஏராளம் வாடிக்கையாளர்கள் இந்த முனைப்பில் தீவிர பங்கேற்பினை செலுத்தினர்.

சவால்கள்

- இலாபமீட்டல் மற்றும் நிதிக்கடன்களை தீர்க்கும் திறன் ஆகியவை முக்கிய அம்சங்களாக விளங்கும் துறை ஒன்றில், செயற்திறன்மிகு சக்தி வள பாவனை முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளக் கட்டமைப்புகளை நிறுவுதல் ஆகியன உயர் முதலீட்டு மூலதனங்கள் தேவையான விடயமாக விளங்குவதால், வங்கியானது, இந்த நிதிச் சுமையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
- முறையான கழிவு மேலாண்மை மற்றும் விளைவுகளை அளவிடுதல் போன்ற விடயங்கள் மேலும் முன்னேற வேண்டியுள்ளது.
- மின்னணு கழிவுகளை அகற்றலை குறைத்தல்
- தொடர்ச்சியாக விரிவடைந்து வரும் வணிக ஸ்தாபனம் ஒன்றில் சக்திவள பாவனையை குறைத்தல் கடினமான விடயமாகும். அத்துடன், புதிய கிளைகள் கட்டமைக்கப்பட்டு, புதிய பணியாளர்கள் பணியமர்த்தப்படும் சூழ்நிலையில், தேசிய சேமிப்பு வங்கி எரிசக்தி குறைப்பு நடவடிக்கைகளில் சவாலினை எதிர்கொள்கின்றது.

எதிர்காலத்தை நோக்கிய ஒரு பார்வை

எமது சுற்றாடலை பாதுகாப்போம் என்ற கடப்பாட்டினை நாம் கொண்டுள்ள நிலையில், கார்பன் காற்தடத்தினை குறைக்கும் வகையில் எமது அணுகு முறைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எமது மைய வங்கியியல் தீர்வுகள், தரவு முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் வங்கியியல் சேவைகளை தானியங்கி மயப்படுத்தல் ஊடாக எமது சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் நேர்மறை தாக்கத்தினை ஏற்படுத்த நாங்கள் பாடுபடுகின்றோம். இதற்கு மேலதிகமாக, காகித பாவனையினை குறைக்கும், அதி நவீன தானியங்கி, பண வைப்பு இயந்திரங்களை கட்டமைக்க நாம் தீர்மானித்துள்ளோம். தொலைவு மாநாட்டு (tele conferencing) வசதிகள் மற்றும் தொலைத் தொடர்பாடல் வசதிகளை அதிகளவில் பயன்படுத்த எண்ணியுள்ள நாம், முடியுமான வேளைகளில், வெப்பினார் ஊடாக ஒன்லைன் பயிற்சிகளை அளிக்க நினைக்கின்றோம். இதன் ஊடாக செயற் திறன்மிகு சக்திவள பாவனை நிறைந்த அலுவலக இடங்களை மேம்படுத்த முடியும். சூரிய சக்தியினை எமது அனைத்து கிளைகளிலும் உபயோகிப்பதான எமது முனைப்பு தொடர்ச்சியாக விஸ்தரிக்கப்பட்டு வரும் நிலையில், 2018ம் ஆண்டில் 50 கிளைகளில் இந்த கட்டமைப்பு நிறுவப்படும். ஐ.நா SDGகளுடன் இணைந்ததாக, எமது வினைத்திறன், வணிக தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தலை நாம் தொடர்ந்தும் மேற்கொள்கின்றோம்.

ஐ.நா இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான தேசிய சேமிப்பு வங்கியின் எண்ணம்

உலகளாவிய சமத்துவமின்மை, பாதுகாப்பற்ற தன்மை மற்றும் அநீதி குறித்து குறிப்பிட்ட இலக்குகளின் மூலம் 2030 இல் அடையப்பட வேண்டிய ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகள் வளர்ச்சி, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களை இயற்கை வளங்களை நிர்வகிப்பதற்கும், உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் ஒருங்கிணைக்கின்றன.

தலைவரின் செய்தியில் குறிப்பிட்டுள்ளபடி, தே.சே.வ இன் மூலோபாயத்தில், வணிக நடவடிக்கைகள், உள்கட்டமைப்பு மற்றும் பலவற்றில் நிலைத்தன்மையும் அடங்கும். தே.சே.வ எப்போதும் ஒரு நிலையான, குறைந்த கார்பன், மற்றும் முழுமையான எதிர்காலம் தொடர்பில் தமது பங்கினை அறிந்துள்ளது. இவ்வாறு, உலகளாவிய நிலையான இலக்குகளை தெளிவாகவும், விரிவாகவும் விளங்கிக்கொண்டு மற்றும் தொடர்புகொண்டு, அதன் சாதனைக்கு பணிபுரிகின்றது.

தே.சே.வ எங்கள் அனைத்து வணிக நடவடிக்கைகளின் நிலைத்து நிற்கும் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது. சாதகமான மற்றும் திட்டமிட்ட பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை வழங்குவதற்கான அதிக சாத்தியங்களைக் கொண்டிருக்கும் வாய்ப்புகளை அடையாளம் கண்டு பிடிப்பதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நாங்கள் பங்குதாரர், பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றுச்சூழல் மீதான நேரான தாக்கங்களை அதிகரித்து நிலையான வளர்ச்சிக்கான நமது உணர்வைப் பகிர்ந்துகொள்ள மக்கள், அமைப்புகள் மற்றும் சமூகங்களுடன் இணைகின்றோம். ஐ.நா. SDG க்கள் 2030 இல் அடைவதற்கான வாய்ப்புக்களை நாம் அடையாளம் காண்போம்.

பின்வரும் வரைபடம் ஐ.நா. SDG களுக்கு தே.சே.வ பங்களிப்பை கோடிட்டுக் காட்டுகிறது. எங்கள் செயற்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் பல்வேறு SDG பூர்த்தி செய்கின்றன. எனவே ஒரு விரிவான பார்வையை வழங்குவதற்கு பொருத்தமான SDG களை ஒன்றாக இணைத்துள்ளோம்.





உதவித்தொகை திட்டம், விவசாய கடன்கள், நிதியுதவி, நன்கொடைகள்.

சொண்டுரு பியச கடன் திட்டம்.

அனர்த்த உதவி திட்டங்கள்: "NSB CSR மிஷின்", மற்றும் களுத்துறை மாவட்டத்தில் வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புதல்.

ஸ்த்ரீ சேமிப்பு கணக்கு

போரின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு விரு சுமிதுரு வீட்டுத் திட்டங்கள்

மெத்சரன புலமைபரிசில்

மிகப்பெரிய உரிமம் பெற்ற சிறப்பு வங்கி என்ற வகையில், நாம் அனைத்து இலங்கையர் மத்தியிலும் சேமிப்புக் கலாசாரத்தை வளர்ப்பதுடன் நிதி உட்சேர்ப்பு நோக்கியும் செயற்படுகின்றோம். புதிய வேலைவாய்ப்புக்கள், சமூக அபிவிருத்தி திட்டங்கள், நிதி ஆதாரத்தை அடைய உதவுவதன் மூலம் வாடிக்கையாளர்களை மேம்படுத்தல், கிராமப்புற வேலை வாய்ப்புகளை உருவாக்கல், எங்கள் முக்கிய வணிக நடவடிக்கைகள் மூலம் மறைமுக வேலைவாய்ப்புக்கு பங்களித்தல் மூலம் வருமானத்தை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் இந்த இலக்குகளை நாங்கள் அணுகுகிறோம். ஆண்டு முழுவதும் பின்வரும் திட்டங்கள் தொடங்கப்பட்டன:




ஒட்டுசுட்டானில் கொழும்பு *Friend-In-Need* சமுக நடமாடும் சுகாதார முகாம்

தே.சே.வ முதியோருக்கான நடமாடும் மருத்துவ மற்றும் கண் முகாமிற்காக இலங்கை *Help Age* இற்குஅனுசரணையளித்தமை


2017 சர்வதேச முதியோர் தின கொண்டாட்டம்

கற்றல் சவால்களையுடைய பிள்ளைகளுக்கான ஹபன் புலமைபரிசில்


தே.சே.வ நல்ல உடல் நலத்திற்காக பல்வேறு சமூக நலத்திட்டங்கள் மூலம் வேலை இட சுகாதாரத்திற்காக முதலீடு செய்கிறது. எங்கள் ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும், நாங்கள் வலுவான தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகள், பாதுகாப்பான, வேலை சூழலை உருவாக்குவதன் மூலம் விரிவான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மருத்துவத் திட்டங்களை வழங்குகிறோம். மற்றும் பணியாளர் நல்வாழ்வை மேம்படுத்த ஊக்கங்கள் மற்றும் நலன்களை வழங்குகிறோம் நாம் வேலை வாழ்க்கை சமநிலையினை ஊக்குவிக்கிறோம் நாம் ஒரு மனிதபிமான அணுகுமுறையில் குறிப்பாக முதியவர்கள், மற்றும் வேறுபட்ட கற்றல் தேவைகளுடைய குழந்தைகளுக்குரிய திட்டங்களுக்கு நிதி வழங்கியுள்ளோம், இலங்கையில் பல்வேறு சுகாதார முகாம்களுக்கு நிதியுதவி வழங்கிய *SDG* உடன் தொடர்புடைய பின்வரும் திட்டங்கள் கடந்த 2017 இல் மேற்கொள்ளப்பட்டன:




உயர்கல்வியை மேம்படுத்துவதற்கு தே.சே.வ உறுதியளித்துள்ளது. கல்விக்கான கல்வியறிவு மற்றும் சம வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான கல்வி முயற்சிகளுக்கு அனைத்து இலங்கையர்களுக்கும் எமது சிறப்பான கட்டளை மூலம், நாம் நிதி கல்வியறிவுகளை வளர்க்கின்றோம். சமுதாயத்தின் பல பகுதிகளிலும், சேமிப்பு மற்றும் நிதி முகாமைத்துவம் வளர்க்கப்படுகிறது. எங்களுடைய விரிவான கிளை வலையமைப்பில் பணியாளர்களால் எங்கள் நிதி நிர்வாக நிபுணத்துவம் எங்கள் வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மேலும், எங்கள் தயாரிப்புப் பிரிவு சேமிப்பு மற்றும் கடன் தயாரிப்புகளின் பயன்பாட்டினை வாடிக்கையாளர்கள் அதிகரிக்க உதவுகிறது. இலங்கையர்கள் கல்வி மற்றும் நிதி திட்டமிடுகின்றனர். ஆண்டுதோறும் நாங்கள் கல்வி கருத்தரங்குகளையும், குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் சிறந்த கருத்தரங்கை நடத்துகிறோம். நாங்கள் தொழில்முறையை அதிகரிக்க தொடர்ந்து முதலீடு செய்கிறோம் உள்ளூர் ஊழியர்களின் தகுதிகளை உயர்த்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் நாம் முதலிடுகின்றோம். SDG க்கு ஏற்புடைய பின்வரும் திட்டங்கள், கருத்தரங்குகள், விருது விழாக்கள், என்பன 2017 ல் நடத்தப்பட்டன.



பெண்களை வலுப்படுத்துவதன் மூலம் அடுத்த தலைமுறையை வலுப்படுத்த முடியும் என தே.சே.வ நம்புகிறது. பொது முகாமையாளரின் மீளாய்வுக் கூற்றின் அடிப்படையில் நாம் பெண்களை எமது சிறந்த உற்பத்திகள் மூலமும் எமது ஊழியப்படையிலுள்ள பெண்களையும் வலுப்படுத்துகின்றோம். நாம் ஒரு சம வாய்ப்பு வழங்கும் தொழில் தருனர் மற்றும் நாம் பாலின அடிப்படையிலான பாகுபாடு அற்ற தன்மை மற்றும் தலைமைத்துவத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்துள்ளோம், புதிய தாய்மார்களுக்கு பெற்றோர் விடுப்பு கொள்கைகள் பெண் தொழிலாளர்களுக்கு உதவுகிறது. எமது ஆரோக்கியமான ஆண்களுக்கு பெண் விகிதம் 6:5 அனைத்து மட்டங்களிலும் காணப்படுவதோடு எங்கள் மொத்த பணியாளர்களில் 58% பெண்கள். நாங்கள் பெண்களின் சந்தையைப் பார்க்கிறோம் ஸ்த்ரீ சேமிப்பு போன்ற தனித்துவமான பெண்கள் தயாரிப்புகளை வழங்குகிறோம் இலங்கை பெண்களுக்கு நிதியியல் சுதந்திரம், மற்றும் வாழ்க்கைத் தரத்தினை பேண பல்வேறு வழிகளில் வலுச்சேர்க்கின்றோம்.



தேசம் மற்றும் சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்து வரும் இலங்கையருக்கு சேவை செய்வதற்காக பலப்படுத்தப்பட்ட ஒரு உள்நாட்டு நிதி நிறுவனமாகும். எமது நாடு முழுவதும் அடையத்தக்க 253 கிளைகள், மற்றும் 4,000 POS நிலையங்கள் மூலம் எமது பிரசன்னத்தை விரிவாக்கியுள்ளோம். எமது வங்கிச் சேவையானது நாட்டிலுள்ள வங்கிச் சேவை கிடைக்கப்பெறாத மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்கத்தக்க வகையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நாம் வேலை வாய்ப்புகளை நேரடியாகவும், நமது நிதியுதவி மூலம் மறைமுக வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறோம். அரசாங்கத்துடனான எங்கள் கூட்டாண்மை மூலம் நாட்டின் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நாங்கள் பெரிய அளவில் நிதியுதவி செய்துள்ளோம்.



எமது தலைவரின் உரையில் குறிப்பிட்டவாறு நாம் தொழிற்படும் சமூகம் மற்றும் சூழலில் சமூக, பொருளாதார, சூழல் தொடர்பில் எதிரான தாக்கத்தினை தடுக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். நீடித்து நிற்கும் சமுதாயம் மற்றும் சூழலை உருவாக்க நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். பசுமை வங்கி முறைமை மூலம் சக்தி தூய்மையாக்கல் மற்றும் மீள்உற்பத்தி செய்யக்கூடிய சக்திக்கான நாடளாவிய திட்டங்களுக்கு உதவியளிக்கிறோம். நமது சக்தி பயன்பாட்டில் மீள் புதுப்பிக்கப்படக்கூடிய சக்தியினை பெருமளவு கொண்டுள்ளோம். எமது டிஜிட்டல் உட்கட்டமைப்பு தொடர்பான முதலீடுகள் கடதாசி பாவனையற்ற குறைந்த காபன் பயன்பாட்டிற்கு பங்களிக்கிறது. இத்துறையின் டிஜிட்டல்மயமாக்கல் நீடித்து நிற்கும் நகர மற்றும் சமுதாயங்களை உருவாக்க உதவும்.



தே.சே.வ இன் விவசாய காடாக்கம்: தே.சே.வ நாடு முழுவதும் 25,000 மிளகுத் தாவரங்கள் மற்றும் தேங்காய் நாற்றுக்களை விநியோகித்துள்ளது.

ஒரு சேவை சார்ந்த நிறுவனமாக இருப்பதனால் குறைந்த பௌதீக உள்ளீட்டு வளப்பாவனை மூலம் நாம் குறைந்தளவிலான கழிவுகளை சூழலுக்கு அகற்றுகிறோம். நிலம் மற்றும் நீர்வாழிகளின் வாழ்வை பாதுகாப்பது அவசியத்தை நாம் அறிவோம். எமது புத்தாக்க நிதி கருவிகளான பசுமைக் கடன் மற்றும் பசுமை வங்கி முயற்சிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்கிறது. நாம் சூழல் பாதிப்பை மட்டுப்படுத்தும் புதிய கட்டுமானத்தை உறுதி செய்கிறோம். மேலும், 2017ல் நாங்கள் ஒரு இலட்சிய சமூகம் என்ற மரம் நடுகை திட்டத்தை துவங்கினோம். தே.சே.வ விவசாய காடாக்கம், 2020 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் தாவரங்களை விநியோகிக்க திட்டமிட்டுள்ளது. தற்போது 25,000 தாவரங்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளது.



சமாதான மற்றும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு தே.சே.வ கடமைப்பட்டுள்ளது. ஒரு முன்மாதிரி பெருநிறுவன குடிமகனாக, நாம் அனைத்து ஒழுங்குமுறை மற்றும் சட்ட தேவைகள் அனைத்தையும் கடைப்பிடித்து, எமது வியாபாரத்தை நியாயமான, வெளிப்படையான மற்றும் நெறிமுறை முறையில் நடத்துகிறோம். விநியோகத்தர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பரிவர்த்தனையின் போது நெறிமுறை கலாசாரம் பின்பற்றப்படுகிறது. ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில், அரசாங்க நிறுவனங்கள், அரசு மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் வலுவான கூட்டணியை நாங்கள் வளர்த்துள்ளோம். நெறிமுறை வணிக நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக, நடத்தை விதிமுறை, எச்சரிக்கும் கொள்கை, லஞ்சம் மற்றும் ஊழல் அறிக்கை மற்றும் பிற செயல்முறைகள் மற்றும் கொள்கைகள் போன்ற நடைமுறைகளை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

GRI 102-56

Independent Assurance Report to National Savings Bank

KPMG
(Chartered Accountants)
32A, Sir Mohamed Macan Markar Mawatha,
P. O. Box 186,
Colombo 00300, Sri Lanka.

Tel : +94 - 11 542 6426
Fax : +94 - 11 244 5872
: +94 - 11 244 6058
: +94 - 11 254 1249
Internet : www.kpmg.com/lk

We have been engaged by the Directors of National Savings Bank ("Bank") to provide reasonable assurance and limited assurance in respect of the Sustainability Indicators as identified below for the year ended 31 December 2017. The Sustainability Indicators are included in the National Savings Bank's Integrated Annual Report for the year ended 31 December 2017 (the "Report").

The Reasonable Assurance Sustainability Indicators covered by our reasonable assurance engagement are:

Assured Sustainability Indicators	Integrated Annual Report Page
குயெஉயைட ர்பொடபொவள	15

The Limited Assurance Sustainability Indicators covered by our limited assurance engagement are:

Limited Assurance Sustainability Indicators	Integrated Annual Report Page
Sustainability performance indicators – Non-Financial Highlights	16-18
Information provided on the following capitals	
Financial	73-84
Intellectual	92-99
Manufactured	100-105
Human	108-121
Social and Relationship	124-139
Natural	142-145

Our Conclusions

Our conclusion has been formed on the basis of, and is subject to, the matters outlined in this Report. We believe that the evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our conclusions.

Reasonable Assurance Sustainability Indicators

In our opinion, the Reasonable Assurance Sustainability Indicators, as defined above, for the year ended 31 December 2017 are, in all material respects, prepared and presented in accordance with the Consolidated Set of Global Reporting Initiative Sustainability Reporting Standards Guidelines.

Limited Assurance Sustainability Indicators

Based on the limited assurance procedures performed and the evidence obtained, as described below, nothing has come to our attention that causes us to believe that the Limited Assurance Sustainability Indicators, as defined above, for the year ended 31 December 2017, have not in all material respects, been prepared and presented in accordance with the Consolidated Set of Global Reporting Initiative Sustainability Reporting Standards Guidelines.

KPMG, a Sri Lankan partnership and a member firm of the KPMG network of independent member firms affiliated with KPMG International Cooperative ("KPMG International"), a Swiss entity.

M.R. Mihular FCA
T.J.S. Rajakarier FCA
Ms. S.M.B. Jayasekara ACA
G.A.U. Karunaratne FCA
R.H. Rajan ACA
P.Y.S. Perera FCA
W.W.J.C. Perera FCA
W.K.D.C Abeyrathne FCA
R.M.D.B. Rajapakse FCA
C.P. Jayatilake FCA
Ms. S. Joseph FCA
S.T.D.L. Perera FCA
Ms. B.K.D.T.N. Rodrigo FCA

Principals - S.R.I. Perera FCMA(UK), LLB, Attorney-at-Law, H.S. Goonewardene ACA
Ms. C.T.K.N. Perera ACA

KPMG

Management's Responsibility

Management is responsible for the preparation and presentation of the Reasonable Assurance Sustainability Indicators and the Limited Assurance Sustainability Indicators in accordance with the Consolidated Set of Global Reporting Initiative Sustainability Reporting Standards Guidelines.

These responsibilities includes establishing such internal controls as management determines are necessary to enable the preparation of the Reasonable Assurance Sustainability Indicators and the Limited Assurance Sustainability Indicators that are free from material misstatement whether due to fraud or error.

Management is responsible for preventing and detecting fraud and for identifying and ensuring that the Bank complies with laws and regulations applicable to its activities.

Management is also responsible for ensuring that staff involved with the preparation and presentation of the description and Report are properly trained, information systems are properly updated and that any changes in reporting encompass all significant business units.

Our Responsibility

Our responsibility is to express a reasonable assurance conclusion on the Bank's preparation and presentation of the Reasonable Assurance Sustainability Indicators and a limited assurance conclusion on the preparation and presentation of the Limited Assurance Sustainability Indicators included in the Report, as defined above.

We conducted our assurance engagement in accordance with Sri Lanka Standard on Assurance Engagements SLSAE 3000: Assurance Engagements other than Audits or Reviews of Historical Financial Information (SLSAE 3000) issued by The Institute of Chartered Accountants of Sri Lanka.

We have complied with the independence and other ethical requirements of the Code of Ethics issued by The Institute of Chartered Accountants of Sri Lanka.

SLSAE 3000 requires that we plan and perform the engagement to obtain reasonable assurance about whether the Reasonable Assurance Sustainability Indicators are free from material misstatement and limited assurance about whether the Limited Assurance Sustainability Indicators are free from material misstatement.

Reasonable Assurance Over Reasonable Assurance Sustainability Indicators

The procedures selected in our reasonable assurance engagement depend on our judgement, including the assessment of the risks of material misstatement of the Reasonable Assurance Sustainability Indicators whether due to fraud or error.

In making those risk assessments, we have considered internal controls relevant to the preparation and presentation of the Reasonable Assurance Sustainability Indicators in order to design assurance procedures that are appropriate in the circumstances, but not for the purposes of expressing a conclusion as to the effectiveness of the Bank's internal controls over the preparation and presentation of the Report.

Our engagement also included assessing the appropriateness of the Reasonable Assurance Sustainability Indicators, the suitability of the criteria, being the Consolidated Set of Global Reporting Initiative Sustainability Reporting Standards Guidelines, used by the Bank in preparing and presenting the Reasonable Assurance Sustainability Indicators within the Report, obtaining an understanding of the compilation of the financial and non-financial information to the sources from which it was obtained, evaluating the reasonableness of estimates made by the Bank, and re-computation of the calculations of the Reasonable Assurance Sustainability Indicators.

KPMG

Limited Assurance on the Assured Sustainability Indicators

Our limited assurance engagement on the Limited Assurance Sustainability Indicators consisted of making enquiries, primarily of persons responsible for the preparation of the Limited Assurance Sustainability Indicators, and applying analytical and other procedures, as appropriate. These procedures included:

- interviews with senior management and relevant staff at corporate and selected site level concerning sustainability strategy and policies for material issues, and the implementation of these across the business;
- enquiries of management to gain an understanding of the Bank's processes for determining material issues for the Banks's key stakeholder groups;
- enquiries of relevant staff at corporate and selected site level responsible for the preparation of the Limited Assurance Sustainability Indicators;
- enquiries about the design and implementation of the systems and methods used to collect and report the Limited Assurance Sustainability Indicators, including the aggregation of the reported information;
- comparing the Limited Assurance Sustainability Indicators to relevant underlying sources on a sample basis to determine whether all the relevant information has been appropriately included in the Report;
- reading the Limited Assurance Sustainability Indicators presented in the Report to determine whether they are in line with our overall knowledge of, and experience with, the sustainability performance of the Bank;
- reading the remainder of the Report to determine whether there are any material misstatements of fact or material inconsistencies based on our understanding obtained as part of our assurance engagement.

The procedures performed in a limited assurance engagement vary in nature and timing from, and are less in extent than for, a reasonable assurance engagement, and consequently the level of assurance obtained in a limited assurance engagement is substantially lower than the assurance that would have been obtained had a reasonable assurance engagement been performed. Accordingly, we do not express a reasonable assurance conclusion on the Limited Assurance Sustainability Indicators.

Purpose of Our Report

In accordance with the terms of our engagement, this assurance report has been prepared for the Bank for the purpose of assisting the Directors in determining whether the Bank's Reasonable and Limited Assurance Sustainability Indicators are prepared and presented in accordance with the Consolidated Set of Global Reporting Initiative Sustainability Reporting Standards Guidelines and for no other purpose or in any other context.

Restriction of Use of Our Report

Our report should not be regarded as suitable to be used or relied on by any party wishing to acquire rights against us other than the Bank, for any purpose or in any other context. Any party other than the Bank who obtains access to our report or a copy thereof and chooses to rely on our report (or any part thereof) will do so at its own risk. To the fullest extent permitted by law, we accept or assume no responsibility and deny any liability to any party other than the Bank for our work, for this independent assurance report, or for the conclusions we have reached.



Chartered Accountants
Colombo

14 April 2018

ஆளுகை

பணிப்பாளர் சபை



திரு. அஸ்வின் டி சில்வா

தலைவர்

திரு. அஸ்வின் டி சில்வா 16 ஆண்டுகளுக்கு மேலாக, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இல் இலங்கை மற்றும் சிங்கப்பூரில் பணிப்பாளர்/கூட்டாண்மை வங்கிச் சேவை உள்ளடங்கலாக பல்வேறு சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை உள்ளடக்கி வங்கித் துறையில் பன்முக அனுபவத்தைப் பெற்றவர். நிதி, கடன், கூட்டாண்மை நிதி ஆலோசனை வழங்குதல் மற்றும் கூட்டாண்மை வங்கித் தொழில் போன்றவற்றினையும் இவை உள்ளடக்குகின்றன.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் அமெக்ஸ் ட்ரவல் உடன் தொடர்புடைய சேவைகளில் நாட்டுக்கான முகாமையாளராகவும் இவர் பணியாற்றினார்.

திரு. அஸ்வின் டி சில்வா அமெக்ஸ் நிறுவனத்தின் தர நிர்ணயத்திற்கான கௌரவமிக்க தலைவர் விருதினையும் பெற்றவர். திரு. டி சில்வா, அசோசியேட்டட் மோட்டர் வேய்ஸ் கம்பனியில் நான்கு ஆண்டுகள் குழு நிதிப் பணிப்பாளராகவும், செலிங்கோ சேமிப்பு வங்கியில் பொது முகாமையாளர்/பி. நி. அ. போன்ற பதவிகளையும் வகித்தவர். 2015 பெப்ரவரி 09 இல் தேசிய சேமிப்பு வங்கியில் தனது நியமனத்தினை பொறுப்பேற்பதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் என். ஆர்.ஏம்.ஏ. குழுவில் குறிப்பிடத்தக்க அளவு காலப்பகுதியில் வணிக நுண்ணறிவுப் பகுதியின் பொது முகாமையாளராகவும் பணியாற்றினார். இவர் முழுமையாக உடைமையாக்கப்பட்ட துணை நிறுவனமான தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனியின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் இலங்கைப் கே.பி.எம்.ஜீ நிறுவனத்தில் பணியாற்றியதுடன் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உடனிணை உறுப்பினராகவுமுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தினதும் (FCMA) மற்றும் CPA FCPA (அவுஸ்திரேலியா) இனதும் உடனிணை உறுப்பினராகவும் இவர் உள்ளார்.



திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன

பணிப்பாளர்

திரு. அபேரத்ன, இலங்கை நிருவாக சேவை – சிறப்புத் தரம், களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகமாணி (விசேட) (1991) பட்டத்தினையும் சமூகவியலில் (2010) முதுமாணிப் பட்டத்தினையும் இரண்டாம் முதுமாணிப் பட்டத்தினையும் (வணிக முதுமாணி) (M.Com) பெற்றுள்ளார்.

இவர் 2012 டிசம்பர் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் தபால் மா அதிபராவார். இலங்கை நிருவாக சேவையில் 22 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவத்தை இவர் சபைக்குக் கொண்டு வந்துள்ளார். 2005 – 2008 வரை மினுவாங்கொடை பிரதேச செயலாளராகவும், 2009 – 2010 வரை தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாகவும், 2010 இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அத்தியாவசிய கருத்திட்டத்தின் (ஆசிய அபிவிருத்தி வங்கி) சமூக/பாலின மற்றும் மீள் குடியமர்த்தல் விசேட நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழக மனித வள முன்னேற்ற நிறுவகத்தின் வருகை தரு விரிவுரையாளராகவும் உள்ளார். இவர் சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார். களனிப் பல்கலைக்கழகத்தின் வணிக மற்றும் நிதி முகாமைத்துவத் திணைக்களத்தின் ஆலோசனைக் குழுவின் வெளியக உறுப்பினராகவும் இவர் பணிபுரிகின்றார்.

2012 பெப்ரவரி 09 இல் தே. சே. வ. இன் பணிப்பாளர் சபைக்கு இவர் நியமிக்கப்பட்டார். 2012 மே 23 தொடக்கம் 2012 ஒகஸ்ட் 05 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தே. சே. வ. இன் பதில் தலைவராகவும் இவர் கடமையாற்றினார்.

இவர் தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவக் கம்பனிச் சபையிலும் பணியாற்றுகின்றார்.



திரு. ஏ.கே. செனவிரத்ன

பணிப்பாளர்

ஆனந்த கிட்சிரி செனிவிரத்ன, இலங்கை நிருவாக சேவையில் (SLAS) விசேட தர அலுவலராவார். 2018 ஜனவரியிலிருந்து திரு. செனவிரத்ன நிதியமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினதும், இலங்கை வெகுசனத் தொடர்பினதும் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து இராசாயனவியல் (விசேட) பட்டத்தினைப் பெற்றுள்ளார். இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்திடமிருந்து வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

1995 இல் இவர் இலங்கை நிருவாக சேவையில் இணைந்தார். தனது உள்ளக சேவைப் பயிற்சி ஆண்டின் முடிவில் 1996 இல் நிதியமைச்சின் நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2006 இல் அதே அமைச்சின் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இவர் 2015 இல் நியமிக்கப்பட்டார். 2018 இல் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமைகளைப் பொறுப்பேற்கும் வரை அங்கே பணியாற்றினார்.

தற்போது அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPC), வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத் தாபனம் மற்றும் டி லா று லங்கா கரன்சி அன்ட் செக்குரிட்டி பிரின்ட் (பிரைவேற்) லிமிட்டெட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகின்றார்.



திரு. சுரங்க நாவுலகே

பணிப்பாளர்

திரு. நாவுலகே 2015 பெப்ரவரி 09 அன்று தேசிய சேமிப்பு வங்கி சபைக்கு நியமிக்கப்பட்டார். வங்கிப் பணியில் 36 வருட அனுபவத்துடன் வங்கி நிறைவேற்றுத் தர அலுவலராக ஓய்வு பெற்றார்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகமாணி விசேட பட்டத்தினையும் இலங்கை வங்கியாளர் நிறுவனத்திடம் இருந்து வங்கிச் சேவை மற்றும் நிதிச் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

இவர் நிதி அமைச்சின் கைத்தொழில் உறவுகளுக்கான முன்னாள் உதவிச் செயலாளராகவும் தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபையின் முன்னாள் உறுப்பினராகவும் செயற்பட்டார். திரு. நாவுலகே தேசிய தொழிலாளர் கற்கைகள் நிறுவனம் மற்றும் ஜொப்ஸ் நெற்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிப்பாளராக பணியாற்றியுள்ளார்.

இவர் தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிட்டெட்டில் பணிப்பாளராகக் கடமையாற்றுவதுடன் தேசிய சம்பள மற்றும் அமைப்புக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.



திரு. அஜித் பத்திரண

பணிப்பாளர்

திரு. அஜித் பத்திரண, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் (BASL) செயலாளராகப் பணிபுரிந்துள்ளார். இவர் சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஷ்ட குழு உறுப்பினராக இருந்ததுடன், சட்டத்தரணிகள் சங்கத்தின் பல குழுக்களுக்குத் தலைவராகவும் பதவி வகித்தார்.

திரு. பத்திரண 27 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சட்டத்தரணியாவார். இவர் உத்தியோக பூர்வமற்ற நீதவானும், சமாதான நீதவானும் ஆவார். அத்துடன் குற்றவியல் சட்ட, சட்டத்தரணியாகச் செயற்படுவதுடன் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களில் பல பிரபல்யம் வாய்ந்த வழக்குகளில் தோற்றியுள்ளார்.

2015 மார்ச் 20 அன்று திரு. பத்திரண சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் தே.சே.வ முகாமைத்துவக் கம்பனி லிமிட்டெடின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.



திரு. சந்திம ஹேமச்சந்திர

பணிப்பாளர்

திரு. ஹேமச்சந்திர 2015 நவெம்பர் 02 அன்று சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர், ஐக்கிய இராச்சியத்தின் மிடில் செக்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபாரம், கணிதம் மற்றும் கணனி விஞ்ஞானமாணிப் பட்டங்களைப் பெற்றவர். பிரித்தானிய கணனிச் சங்கத்தின் (FBCS) உடனிணை உறுப்பினராவார். அவுஸ்திரேலியா கணனிச் சங்கம் (MACS) மற்றும் தொழில் சார் வங்கியாளர்களின் அமைப்பு (APB) ஆகியவற்றின் உறுப்புரிமையையும் பெற்றுள்ளார்.

இவர் 2011 தொடக்கும் சைகொம் (MSC), பேர்கார்ட், மலேசியா ஆகியவற்றின் பிரதம தொழில்நுட்ப அலுவலர் ஆவார். இவர் இருபத்தி ஆறு (26) வருடங்களுக்கு மேலான தகவல் தொழில்நுட்ப துறைசார் அனுபவத்தைக் கொண்டுள்ள அலுவலராக விளங்கியதுடன் ஐக்கிய இராச்சியம், மலேசியா, இலங்கை மற்றும் கென்யா ஆகிய நாடுகளின் மிகப் பெரிய நிதி நிறுவனங்களில் பெரிய அளவிலான மற்றும் உயர் தொழில்நுட்ப ரீதியான சிக்கலான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பரந்த அளவிலான அறிவையும் திறமையையும் கொண்டவராக விளங்குகின்றார்.

சீகொம் (SCICOM) நிறுவனத்தில் இணைவதற்கு முன்பு மிகப் பழமையானதும், இலங்கையின் மிகப் பெரிய காப்புறுதிச் சேவை வழங்குநராகவும் விளங்குகின்ற அரசுடமையின் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் (SLIC) சிரேஷ்ட அலுவலராக (CO) கடமையாற்றினார்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்திலான ஆழமான அறிவு, மென் பொருள் அபிவிருத்தித் திறன் மற்றும் பெரிய அளவிலான மற்றும் சிக்கலான தகவல் மற்றும் தொடர்பாடல் செயற்றிட்டங்களின் (ICT) முகாமையில் அதிகளவிலான வெற்றிகரமான பின்னணியையும் வெளிப்படுத்தினார்.

பல அரச/தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கியதுடன் இலங்கையின் மூன்று தேசிய ஆலோசனைச் சபைகளுக்கு ஆலோசகராகவும் பணியாற்றினார்.

தனது ஆரம்ப காலங்களில் ஐக்கிய இராச்சியத்தின் பிரித்தானிய ஹார்ட்போர்ட் பெயமவுன்ட் எஞ்சினியறிங் நிறுவனத்தில் முறைமை ஆய்வாளராகப் பணிபுரிந்தார். அதன் பின் இலங்கை கொமர்ஷல் வங்கி பி.எல்.சி. இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (ICT) சிரேஷ்ட முகாமையாளராகவும், இலங்கையின் ஹட்டன் நசனல் வங்கி பிஎல்சி இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் வங்கித் தொழிற்பாடுகளின் தலைவராகவும் (பிரதிப் பொது முகாமையாளர்/பிரதம தகவல் அலுவலர்) மற்றும் ஸ்டாண்டார்ட் வங்கித் தொகுதியின் கிழக்கு ஆபிரிக்க தலைமை அலுவலகமான (CFC) கென்யாவிலுள்ள ஸ்ரான்பிக் வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் தலைவராகவும் (CIO) பதவிகளை வகித்தார்.



திரு. அனில் ராஜகருண

பணிப்பாளர்

இவர் 2015 நவெம்பர் 02 இல் இவர் தேசிய சேமிப்பு வங்கியின் சபைக்கு நியமிக்கப்பட்டார். திரு. ராஜகருண கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து சட்ட முதல் பகுதியினை (சட்டமாணி பகுதி I) பெற்றுள்ளார். இவர் 22 வருட அனுபவத்துடன் கூடிய சட்டத்தரணியாவார். பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நிலையத்திலிருந்து வெளிநாட்டு விவகாரங்கள் டிப்ளோமாவையும் இவர் பெற்றுள்ளார்.

2002 – 2004 காலப் பகுதியில் பணியாற்றுப் பணிப்பாளராக கடமையாற்றியமையினால் தேசிய சேமிப்பு வங்கியுடன் இது இவரது இரண்டாவது பணிப்பாளர் நியமனம் ஆகும்.

திரு. எஸ்.டி.என். பெரேரா

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

தேசிய சேமிப்பு வங்கியின் 16வது பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு. எஸ்.டி.என். பெரேரா 2015 மார்ச் 12 அன்று நியமிக்கப்பட்டார். இந் நியமனத்திற்கு முன்னர் இவர் பதில் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றி வந்ததுடன் சுமார் மூன்று தசாப்த கால அவரது தொழிலின் போது அனைத்துத் தொழிற்பாட்டுப் பிரிவுகளையும் உள்ளடக்கி சேவையாற்றியுள்ளார்.

திரு. பெரேரா வர்த்தகமாணி விசேட பட்டத்தினையும், வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அத்துடன், ஐக்கிய அமெரிக்காவின் சான்றுபடுத்தப்பட்ட (CISA) தகவல் முறைமைக் கணக்காய்வாளராகவும் இருந்தார்.

இவர் தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிட்டெட்டின் பணிப்பாளருமாவார்.

திரு. பெரேரா "ரஜரட்ட சங்வர்த்தன வங்கி" மற்றும் "பிரதேச அபிவிருத்தி வங்கி" ஆகியவற்றில் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

திருமதி. அனுபமா முஹாந்திரம்

சபைச் செயலாளர்

சட்டத்தரணியான திருமதி. அனுபமா முஹாந்திரம், ஐக்கிய இராச்சியத்தின் கார்டிப் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்தில் முதுமாணிப் (LLM) பட்டத்தினையும், மனிப்பால் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் (MBA) முதுமாணிப் பட்டத்தினையும், இலங்கையின் சட்டக் கல்வியின் ஒருங்கிணைக்கப்பட்ட சபையிலிருந்து வங்கித் தொழில் மற்றும் காப்புறுதிச் சட்டத்தில் சட்டப் பின் படிப்பு அற்றோணி டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

2016 டிசெம்பர் 06 இல் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபைக்குச் செயலாளராக நியமிக்கப்பட முன்பு 2015 நவெம்பரி லிருந்து 2016 டிசெம்பர் வரை பணிப்பாளர் சபைக்கான உதவிச் செயலாளராக இவர் பணிபுரிந்துள்ளார். தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிட்டெட்டின் கம்பனிச் செயலாளராக இவர் 2015 இலிருந்து 2017 வரை கடமையாற்றியுள்ளார்.

வங்கிச் சேவை மற்றும் நிதித் துறையிலான 22 ஆண்டுகளைக் கொண்ட அனுபவத்தில், 18 ஆண்டுகளுக்கும் மேலாக இவர் மக்கள் வங்கியில் சட்ட அலுவலராகவும், பணிப்பாளர் சபைக்கான உதவிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திருமதி. முஹாந்திரம் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் வருகை தரு விரிவுரையாளராகவும் (வர்த்தகச் சட்டம்) இருப்பதுடன், இலங்கையின் வங்கிகளின் சபையின் சங்கம்/கம்பனிச் செயலாளர்களின் நிறுவுனர் செயலாளராகவும் விளங்குகிறார்.

நிறுவன முகாமைத்துவம்



திரு. எஸ்.டி.என். பெரேரா
பொது முகாமையாளர்/
பிரதம நிறைவேற்று அதிகாரி



திரு. ஜகத் கமநாயக
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்



திரு. கே. ரவீந்திரன்
பிரதிப் பொது முகாமையாளர்
(ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்)



திரு. எம்.பீ.ஏ.டபிள்யூ. பீரிஸ்
பிரதிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



திரு. ஏ.சீ. கமகே
பிரதிப் பொது முகாமையாளர்
(சில்லறைக் கடன்)



செல்வி. ஜி.வி.ஏ.டி.டி. சில்வா
பிரதிப் பொது முகாமையாளர்
(திறைசேரி)



திரு. எம். கிரிதரன்
ஆலோசகர் (சட்டம்)



திரு. பீ. ஏ. லயனல்
ஆலோசகர் (திறைசேரி)
(2018 சனவரி 2 வரை)



திரு. கே.பி. விஜேரத்ன
பிரதிப் பொது முகாமையாளர்
(நிதியும் திட்டமிடலும்)



செல்வி. சீ.எஸ். ஜேசுடின்
பிரதிப் பொது முகாமையாளர்
(கடன்)



திருமதி. பீ.பி.ஜே. குணசேகர
பிரதிப் பொது முகாமையாளர்
(சர்வதேசம்)



திரு. பி.ஏ. அபேசூரிய
பிரதிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)



திரு. கே.கே.வி.வி.எல்.
டபிள்யு. கருணாதிலக
பிரதிப் பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)



திரு. ஜி.டபிள்யு.ஈ. ஜயவீர
பிரதிப் பொது முகாமையாளர்
(கணக்காய்வு)
2018 சனவரி 01 இலிருந்து

நிறைவேற்று முகாமைத்துவம்



திரு. பீ.எஸ். வசந்த திலக
உதவிப் பொது முகாமையாளர்
தகவல் தொழில்நுட்பம்
(திட்டமிடலும் துணைச் சேவையும்)
(2018 பெப்ரவரி 12 இலிருந்து ஓய்வு பெற்றார்)



திருமதி. கே.பி.டி.எம்.டி. சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



திருமதி. எச்.ஆர். சில்வா
உதவிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)
(2018 பெப்ரவரி 20 இலிருந்து ஓய்வு பெற்றார்)



திரு. கே.எம்.டபிள்யூ. கருணாரத்ன
உதவிப் பொது முகாமையாளர்
(பொறியியல்)



திரு. எம்.ஸ்.ஏ.ஜே.எவ். கோமிஸ்
உதவிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



திருமதி. எம்.ஏ. கோமஸ்
உதவிப் பொது முகாமையாளர்
(திட்டமிடல்)



செல்வி. எம்.என்.ஏ. பெர்னாண்டோ
உதவிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)



திரு. ஜே.எச்.ஸ். சந்திரரத்ன
உதவிப் பொது முகாமையாளர்
(பொறியியல்)

பிரதம முகாமையாளர்கள்

பிராந்திய முகாமையாளர்கள்

1

ஏ. எல். ஏ. ஹலீம்
பிராந்திய முகாமையாளர் - கிழக்கு

2

திருமதி எச். எம். எஸ். எல். பெர்னான்டோ
பிராந்திய முகாமையாளர் - மேற்கு 1

3

திருமதி டி. டி. விக்ரமசிங்க
பதில் பிராந்திய முகாமையாளர் - தெற்கு

4

கே. கமலநாதன்
பதில் பிராந்திய முகாமையாளர் - வட மேற்கு

5

திருமதி எச். ஆர். கருணாமுனி
பதில் பிராந்திய முகாமையாளர் - மேற்கு 2

6

திருமதி வி. எம். எஸ். சந்தலதா
பதில் பிராந்திய முகாமையாளர் - மத்திய

7

யூ. வத்துகேவா
பதில் பிராந்திய முகாமையாளர் - சப்ரகமுவ

8

என். பகீதரன்
பதில் பிராந்திய முகாமையாளர் - வடக்கு

கிளை முகாமைத்துவம்

9

திருமதி டபிள்யு. பி. யு. ஏ. டி. சில்வா
பிரதம முகாமையாளர் - கிளை முகாமைத்துவம்

10

டபிள்யு. எம். ஆர். பீ. வீரகோன்
பிரதம முகாமையாளர் - கிளை முகாமைத்துவம்

கிளைத் தொழிற்பாடுகள்

11

திருமதி ஆர். ஏ. என் என் விஜயசிங்க
பிரதம முகாமையாளர் - ஹோமாகம கிளை

12

செல்வி. ஏ. ஜே. டி. மெல்
பிரதம முகாமையாளர் - பாணந்துறை கிளை

13

திருமதி ஏ. எம். சீ. அத்தநாயக்க
பிரதம முகாமையாளர் - கண்டி

14

ஏ. எச். சந்திரதாச
பிரதம முகாமையாளர் - கம்பஹா கிளை

15

திருமதி சீ. என். ஏகநாயக்க
பிரதம முகாமையாளர் - நகரக் கிளை

16

எம். எம். எம். மன்சூர்
பிரதம முகாமையாளர் - கல்முனை
(2018 மார்ச் 22 இல் ஓய்வு பெற்றார்)

17

யூ. முனசிங்க
பிரதம முகாமையாளர் - பத்தரமுல்ல கிளை

18

டீ. சீ. ஒலபொடுவ
பிரதம முகாமையாளர் - கிரிபத்கொட கிளை

19

எம். என். சீ. பெரேரா
பிரதம முகாமையாளர் - சிலாபம் கிளை

20

பீ. எம். திலகரத்ன பண்டார
பிரதம முகாமையாளர் - பதுளை கிளை

21

டபிள்யு. ஏ. கே. விஜேரத்ன
பிரதம முகாமையாளர் - மாத்தறை கிளை

22

எஸ். பி. சுரங்க
பிரதம முகாமையாளர் - காலி கிளை

கணக்காய்வு மற்றும் விழிப்புணர்வு

23

பீ. ஏ. பெரேரா
பிரதம முகாமையாளர் - கணக்காய்வு மற்றும் விழிப்புணர்வு

அட்டை நிலையம்

24

கே. டீ. கே. கே. விஜேவர்தன
பிரதம முகாமையாளர் - அட்டை நிலையம்

நிறுவனக் கடன்/ சில்லறைக் கடன்

25

பீ. டீ. ஏ. பெரேரா
பிரதம முகாமையாளர் - கடன்

26

திருமதி கே. ஜீ. தமயந்தி
பிரதம முகாமையாளர் - கடன்
(2018 பெப்ரவரி 28 இல் ஓய்வு பெற்றார்)

27

ஏ. பி. சீ. ஆர். விஜேபால
பிரதம முகாமையாளர் - அடகு

28

ஆர். சீ. சமரசிங்க
பிரதம முகாமையாளர் - கடன்

நிதி மற்றும் திட்டமிடல்

29

திருமதி எஸ். எஸ். ஜே. பி. எஸ். டீ. சில்வா

பிரதம முகாமையாளர் - நிதி

30

எச். எஸ். பி. ரணவீர

பிரதம முகாமையாளர் - நிதி

மனித வள அபிவிருத்தி

31

கே. எஸ். வீரசேன

பிரதம முகாமையாளர் - பயிற்சி

32

கே. ஏ. பி. பெரேரா

பிரதம முகாமையாளர் - ஆளணி
(2018 ஜனவரி 26 இல் ஓய்வு பெற்றார்)

தகவல் தொழில் நுட்பம்

33

ஜீ. எம். எஸ். பீ. பெர்னாண்டோ

பிரதம முகாமையாளர் -
தகவல் தொழில் நுட்பம்

34

எம். சீ. ராஜபக்ஸ

பிரதம முகாமையாளர் -
தகவல் தொழில் நுட்பம்

35

ஏ. கே. எல். இலேசிங்ஹ

பிரதம முகாமையாளர் -
வலையமைப்பும் தொடர்பாடலும்

36

எல் .சீ. சேனாநாயக்க

பிரதம முகாமையாளர் - வன்பொருள்

37

ஏ. பி. ஆர். டீ. சொய்சா

பிரதம முகாமையாளர் -
தகவல் முறைமை பாதுகாப்பு

சர்வதேச வங்கித் தொழில்

38

எம். வி. ஜீ. சுசில்குமார

பிரதம முகாமையாளர் -
சர்வதேச வங்கித் தொழில்

திறைசேரி

39

எச். எம். ஜீ. பி. ஜே. ஹேரத்

பிரதம முகாமையாளர் - திறைசேரி

40

திருமதி எஸ். டபிள்யூ. ஏ. வீரசிங்க

பிரதம முகாமையாளர் - திறைசேரி

இணக்குவித்தல், சட்டம் மற்றும் இடர்

41

திருமதி ஐ. கே. எல். சசி மகேந்திரன்

பிரதம முகாமையாளர் -
இணக்குவித்தல்

42

திருமதி ஆர். பீ. ஏ. எம். பி. ராஜநாயக்க

பிரதம முகாமையாளர் -
இடர் முகாமைத்துவம்

43

திருமதி எம். ஏ. பி. முகாந்திரம்

பணிப்பாளர் சபையின் செயலாளர்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

44

எம். டபிள்யூ. கே. சீ. த சில்வா

பிரதம முகாமையாளர் - ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி

துணைச் சேவைகள்

45

திருமதி சீ. டபிள்யூ. பதிரன

பிரதம முகாமையாளர் - வழங்கல்

46

கே. ரீ. எஸ். எஸ். குணவர்த்தன

பிரதம முகாமையாளர் - பாதுகாப்பு

47

டி. எம். சீ. பீ. பீ. திசாநாயக்க

பிரதம முகாமையாளர் -
பொது முகாமையாளர் பிரிவு

48

டி. எல். பீ. அபயசிங்க

பிரதம முகாமையாளர் -
தே. சே. வ. நிதி முகாமைத்துவக்
கம்பனி லிமிட்டெட்

49

கே. ஏ. ஆர். குணதிலக்க

பிரதம முகாமையாளர் -
பொது நலம்

நிறுவன ஆளுகை

நிறுவன ஆளுகை என்பது, பங்குதாரர்கள் மற்றும் பங்குரிமையாளர் தொடர்பில் நிறுவனமொன்று நிருவகிக்கப்படக்கூடிய சட்டங்களின் செயல்முறையாகும். வங்கியானது வரைச்சட்டத்தினூடாக விருத்தி செய்யப்பட்டும், தொழிற்படுத்தப்பட்டும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டும் மற்றும் கட்டுப்படுத்தப்பட்டுமுள்ளது. வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள், பொது மக்களின் நம்பிக்கையை வளரச் செய்வதுடன் வைப்பாளர்களைப் பாதுகாக்க வேண்டியவையாயுமள்ளன. நிறுவன ஆளுகையானது, நிதி நிறுவனங்களின் மரபுரீதியிலான மேற்பார்வையைப் பூர்த்திசெய்தல் வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் நிதி நிறுவனங்கள் மீதான பொது மக்களின் நம்பிக்கையை வளர்த்தல் போன்றவற்றுடன் நேர்மை மற்றும் தரத்துக்கும் பங்களிப்புச் செய்கிறது.

தேசிய சேமிப்பு வங்கியின் (தே.சே.வ.) பணிப்பாளர் சபையானது, ("சபை") நிறுவன ஆளுகையென்பது தனது செல்வாக்குத் திறன் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்கின்ற மிகப் பெரிய கருவியாகும் என்பதில் நம்பிக்கை கொள்ளும் வேளையில் வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பங்குதாரர்களுடன் ஆரோக்கியமான உறவு முறையைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு ஆழமான அடிப்படையையும் வழங்குகிறது.

வங்கியின் நோக்கத்தின் ஒரு பகுதியாக அதிகளவில் நம்பத் தகுந்ததும், சேமிப்புக்காகவும், முதலீட்டுத் தீர்வுகளுக்காகவும் தேசிய சேமிப்பு வங்கி நிறுவன ஆளுகையில் உயர்ந்த தரத்தினைப் பேணுகின்றது. நிறுவன ஆளுகையில் உயர்ந்த தரத்தினைப் பேணுகின்றது. நிறுவன ஆளுகை என்பது நிறுவன கலாச்சாரம் மற்றும் வங்கியின் பெறுமதிகளிலிருந்தே ஏற்பட வேண்டுமென்பதுடன் எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவை அல்ல என்பதிலும் தே.சே.வ நம்பிக்கை கொண்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை

தேசிய சேமிப்பு வங்கியானது அடிப்படையில் தரங்களை நிறுவுவதில் பரந்த அளவில் முக்கியமானதாகக் காணப்பட்டதுடன் நேர்மை, நியாயமான ஈடுபாடு, ஒழுக்க விதிகள் மற்றும் நீதி நெறி, சட்டம்/ஒழுங்கு முறையிலான இணக்கப்பாடு, வெளிப்படைத் தன்மை அனுகூலமான தேர்ச்சி போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி, தனது நடவடிக்கைகளை மேற்கொள்கையில், பணிப்பாளர் சபை மற்றும் அனைத்துத் தொழிற்பாட்டு மட்டத்திலுள்ள அலுவலர்கள் வரையான சிரேஷ்ட முகாமைத்துவத்தினது அதி உயர் முதன்மைத் தெரிவாக நிறுவன ஆளுகைப் பெறுமதியினைக் கொண்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் சபை மற்றும் அனைத்து அலுவலர்களும் உயர்தரம் மிக்க தொழில்சார் நியமங்கள் மற்றும் தொழில் ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் தமது கடமைகளை நிறைவேற்றும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், வங்கியியல் சட்டம், நிதிச் சட்டம், நிதியியல் அறிவித்தல் சட்டம், பணம் தூய்த்தலைத் தடுக்கும் சட்டம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் சிறந்த தொழில்சார் நடைமுறைகளுடன் இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) வழங்கப்பட்ட பணிப்புரைகள் ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள சிறந்த நிறுவன ஆளுகை நடைமுறைகளுடன் முழுமையாக இணங்கிச் செல்ல வேண்டிய அர்ப்பணிப்பினையும் கொண்டுள்ளனர். இலங்கை மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அவற்றின் திருத்தங்கள்/நாளதற்குக் கொண்டு வரப்படுபவை ஆகியன தேசிய சேமிப்பு வங்கியினால் வலுவான ஆளுகைக்காக சிறந்த முறையில் பின்பற்றப்பட்டன.

வங்கியானது அதன் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களை செய்திப் பத்திரிகைகளில் வெளியிடுவதுடன், அதன் நிதியியல் கூற்றுக்களை ஆண்டுதோறும் பாராளுமன்றத்தில் முன்வைக்கின்றது. வங்கித் தொழில் சட்டத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் நிதிக் கூற்றுக்கள் ஒவ்வொரு கிளைகளிலும் வைக்கப்படுகின்றன. வங்கியின் அலுவல்களில் பொது மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றமையை இது உறுதிப்படுத்துகிறது. நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் தெரிவு செய்யப்பட்ட கிளைகள் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனங்களினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. இது வங்கி, அதன் பொறுப்புக் கூறல் தன்மையை வெளிப்படுத்துதலில் வங்கியின் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிக்கச் செய்கிறது.

தேசிய சேமிப்பு வங்கியின் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது.

- தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவத்தில் அனைத்து மட்டங்களிலும் பொறுப்புடைமை மற்றும் பொறுப்புக் கூறலை ஊகித்தல்
- சபை நியமித்த உப குழுக்களுடாக சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட குறித்த பொறுப்புடைமைகளின் மேற்பார்வையினை உறுதி செய்தல்.
- வங்கி தனது வியாபார குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு வங்கிக்கான முகாமைத்துவத்தின் சிறந்த கட்டமைப்புக்களை நிர்ணயித்தல்.
- தொழில் மற்றும் "தேசிய சேமிப்பின்" உண்மையான தாற்பரியம் என்பவற்றுக் கிடையிலான சமநிலையொன்றினைப் பேணுதல் அத்துடன், முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்குப் பொருத்தமான பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
- பாதுகாப்பான மற்றும் சாத்தியமான சூழல் ஒன்றினைத் தோற்றுவிப்பதற்கு வங்கியின் தொழில் நடவடிக்கைகள் மற்றும் ஏற்படத்தக்க இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மதிப்பிடுதல்
- சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்களில் புதிய கருத்துக்களை உட்செலுத்தி வசதியளித்து நட்பு ரீதியான உறவினைப் பேணுதல்.
- ஆளுகை ஒழுங்கு விதிகளை அமுலாக்குவதற்கும் அவற்றுடன் இணங்குவதற்கும் இயைபுடைய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களில் செயற்பாடு மிக்கதோர் வகிபாகத்தைக் கொண்டிருத்தல்.
- உள்ளகக் கணக்காய்வு, இணங்குவித்தல் மற்றும் இடர் முகாமைத்துவத் தொழிற்பாடுகள், வியாபாரத் துறைகளின் சுயாதீனம் என்பவை உள்ளடங்கலாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேற்பார்வை செய்தல்.
- தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், ஒழுங்குபடுத்துநர்களின் சட்டங்கள் மற்றும் பணிப்புரைகளின் அனைத்துத் தேவைப்பாடுகளையும் கடைப்பிடித்தல்.
- மையச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது சமூகப் பொறுப்புடைமையினை மனதிற் கொள்ளல்.

வங்கிக்கு ஏற்புடைய அனைத்து ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை வங்கி கடைபிடிக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை வங்கியின் இணங்குவித்தல் செயற்பாட்டுப் பிரிவானது கொண்டுள்ளது. இப்பிரிவு மாற்றமடையும் இணங்குவித்தல் செயற்பாட்டுச் சூழ்நிலையினை உரியவாறு சமகாலப்படுத்துவதுடன் தொடர்பான பதவி உறுப்பினர்களுக் கிடையில் புதிய பணிப்புரைகளை முறையாகத் தெரியப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு வங்கியின் பிரிவுகள் மற்றும் கிளைகளிலும் மேற்கொள்கின்றது. இப்பிரிவு கிளைகளிலும் பிரிவுகளிலும் இணங்குவித்தல் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. வெளிப்படைத் தன்மையினையும் நம்பகத் தன்மையினையும் உறுதி செய்யும் பொருட்டு நிர்ணயிக்கப்பட்ட கால வரையறையொன்றுக்குள் வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் உரிய காலத்தில் கணக்காய்வு செய்யப்படுகின்றன் மற்றும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றன, மற்றும் ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக இணங்குவித்தல் செயற்பாட்டுப் பிரிவு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேலும், இணங்குவித்தல் தொழிற்பாட்டின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்காக இப் பிரிவு வருடாந்த அரசாங்கக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஆகியவற்றுக்கு உட்படுகின்றது.

2017 ஆம் ஆண்டை மேலோட்டமாகப் பார்க்கையில் இணங்குவிப்புப் பிரிவானது பணம் தூய்த்தலைத் தடுக்கும் (AML) முறைமையை ஏற்படுத்தியதுடன் அதனை நடைமுறைப்படுத்தலையும் ஆரம்பித்தது. இணங்குவித்தல் பற்றிய தெரிநிலைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் கிளை மட்டத்திலான பயிற்சியை அறிமுகம் செய்தல், உயர்ந்த அளவிலான தெரிநிலையை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டதுடன், அதிக எண்ணிக்கையிலான அலுவலர்கள், பொது இணங்குவிப்பு, பணம் தூய்த்தலைத் தடுத்தல் மற்றும் பொருந்தக் கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றி இணங்கு விப்புப் பிரிவில் பயிற்றுவிக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டிலும் இணங்கு விப்புப் பிரிவு வெற்றிகரமான இணங்குவிப்புக் கலாச்சாரத்தை இலக்கு வைத்து தனது செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. தொடர்பான தரப்புக் கொடுக்கல் வாங்கல் (RPT) தகவல் தொடர்பில், தகவல் தொழில் நுட்பப் பிரிவுடன் இணைந்து இணங்குவிப்புப் பிரிவானது, பணிப்பாளர்களையும் முக்கிய முகாமைத்துவ ஆளணி மற்றும் தொடர்பான தரப்புக் கொடுக்கல் வாங்கல் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய தகவல்பெறும் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தியது. தொடர்பான தரப்புக் கொடுக்கல் வாங்கல் அறிவித்தலானது, அறிமுகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் அதிக வலுவுடையதாகக் காணப்பட்டதுடன் இணங்கு விப்புப் பிரிவைப் பொறுத்தவரையில் 2017 ஆம் ஆண்டானது அதன் இலக்கினை அடையும் ஆண்டாகக் காணப்பட்டது.


வங்கிப் பணிப்புரை 3 (6) இல் கூறப்பட்டுள்ளதற்கு அமைவாக ஆறு சபைக் குழுக்களை நிறுவியது. இவை நேரடியாகவே சபைக்கு அறிக்கைகளை வழங்கும். சபைக் கணக்காய்வுக் குழு (BAC), சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC) மற்றும் சபை நியமனக் குழு (BNC) சபை கடன்

குழு (BCC) மற்றும் சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு (BITSC) ஆகிய உப குழுக்களுக்கு அவற்றின் அதிகார வரம்பின் கீழ் வரும் விடயங்கள் குறித்து சபைக்கு பரிந்துரைகளைச் செய்யும் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமையும், நேர்மையும் நிதித் தகவல்களின் மீளாய்வுகளும் அவற்றின் நேர்மையும், தொழிலின் முக்கியமான இடர் மூலங்களும், இடர் காரணிகளும் மற்றும் வங்கியின் நிறுவன ஆளுகையும் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் சபையின் கணக்காய்வுக் குழுவும் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவும் சபைக்கு உதவி செய்யும். நிறுவன ஆளுகைப் பிரயோகங்களுக்கு அமைவாக செயற்பாடுகளின் தீவிரமான பகுதிகளை செயற்பாட்டு மட்டத்துக்குப் பகிர்ந்தளிக்காமல் தனது அதிகாரத்திற்குள் சபை தக்க வைத்துக் கொள்ளும். இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் படி தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் வேறு வேறானவையாகும்.

நிறுவன ஆளுகையின் ஒழுங்கமைப்புப் பட்டியல் GRI 102-18

உயர்ந்த தரத்திலான மூலோபாய வழிகாட்டல்களை வகுப்பதன் மூலம், வங்கியின் முழுமையான பொறுப்புக்களையும் வகை கூறலையும் மேற்பார்வை செய்பவராகவும் பொறுப்பேற்பவராகவும் விளங்கும் பணிப்பாளர்கள் சபை அத்தகைய மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கியுள்ளது. இவர் தலைமை தாங்கும் மற்றும் தலைமைத்துவத்தை வழங்கும் மற்றும் வழிகாட்டும் நிறுவன முகாமைத்துவத்தினூடாக நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்துபவராகவும் உள்ளார்.

நிறுவன ஆளுகையின் ஒழுங்கமைப்புப் பட்டியல்



நிறுவன முகாமைத்துவக் குழு	– நி.மு.கு.	செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு	– செ.இ.மு.கு.
சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு	– சொ.பொ.மு.கு.	உற்பத்தி அபிவிருத்திக் குழு	– உ..அ.கு.
முதலீட்டுக் குழு	– மு.கு.	மனித வளங்கள் குழு	– ம.வ.கு.
கடன் குழு	– க.கு.	நிறுவன கேள்விக் கோரல் முகாமைத்துவ குழு	– நி.மு.கே.கோ.கு. பெரியது
செயலாற்றல் மீளாய்வுக் குழு	– செ.மீ.கு.	நிறுவன கேள்விக் கோரல் குழு	– நி. கே.கோ.கு. சிறியது
கிளைத் தொழிற்பாடுகள் வழிகாட்டல் குழு	– கி.தொ.வ.கு.	குத்தகை மற்றும் புதிய முதலீட்டுக் குழு	– கு.பு.மு.கு.
தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழு	– த.தொ.வ. குழு	பங்கு மூலதனக் குழு	– ப.மு.கு.
சந்தைப்படுத்தல் குழு	– ச.கு.		

2017 ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களுக்கு வருகை தந்த சபை உறுப்பினர்கள்

பணிப்பாளர்களின் பெயர்கள் தற்போதைய பணிப்பாளர்கள்	நியமனத் திகதி	வருகைக்கான தகைமை	வருகை தந்தது
திரு. அஸ்வின் டி சில்வா – தலைவர்	2015 பெப்ரவரி 9 அன்று நியமிக்கப்பட்டார்	16	16
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன – பதவி வழிப்பணிப்பாளர்	2012 பெப்ரவரி 9 அன்று நியமிக்கப்பட்டார்	16	14
திரு. சுரங்க நாவுலகே – பணிப்பாளர்	2015 பெப்ரவரி 9 அன்று நியமிக்கப்பட்டார்	16	16
திரு. அஜித் பத்திரன – பணிப்பாளர்	2015 மார்ச் 20 அன்று நியமிக்கப்பட்டார்	16	14
திரு. ஏ கே செனிவிரத்ன – பதவி வழிப்பணிப்பாளர்	2015 மே 27 அன்று நியமிக்கப்பட்டார்	16	14
திரு. சந்திம கேமச்சந்திர – பணிப்பாளர்	2015 நவெம்பர் 2 அன்று நியமிக்கப்பட்டார்	16	13
திரு. அனில் ராஜகருணா – பணிப்பாளர்	2015 நவெம்பர் 2 அன்று நியமிக்கப்பட்டார்	16	16

2007 இன் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பணிப்புரைக்கு இணங்க சபையினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுக்களுக்கான 2017 ஆம் ஆண்டின் நோக்கெல்லை, செயற்பாடுகள் மற்றும் வருகைகள் ஆகியன கீழே தரப்பட்டுள்ளன.

1. சபைக் கணக்காய்வுக் குழு (சககு)

சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையானது பிரதானமாக பணிப்பாளர் சபையின் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதாகும். அவை வங்கியின் நிதிக் கூற்றுக்களின் நேர்மைத் தன்மையைப் பேணுதல் மற்றும் வங்கியின் நிதிக் கூற்றுக்களை அதன் ஆண்டறிக்கைக் கணக்குகள் வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் வங்கியின் முக்கியமான நிதித் தீர்வுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றின் முக்கியமான நிதி அறிக்கையிடல் தீர்வுகளை மீளாய்வு செய்தல் என்பனவாகும்.

சபைக் கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். இவர்கள் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகள், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுப் பட்டயம் மற்றும் அது தொடர்பிலான சபைத் தீர்மானங்களுக்கான நிறுவன ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்கப் பணிப்புரையின் கீழ் 3(6)(ii) இன் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைவாக கூட்டத் தொடர்களை நடாத்துவர். சபைச் செயலாளர் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணியாற்றுவார். தேசிய சேமிப்பு வங்கியின் ஏழு பணிப்பாளர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை – 1995 இன் எண் 28 கொண்ட தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 8(i) இன் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதுடன் சபைக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களை உள்ளடக்கி, அனைத்து உப குழுக்களினதும் உறுப்பினர்கள் மேற்கூறப்பட்ட ஏழு (7) உறுப்பினர்களிலிருந்தே நியமிக்கப்படுவர். இவர்கள் சபைக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்றுவதற்குத் தேவையான தராதரம், தேர்ச்சி மற்றும் அனுபவங்களைக் கொண்டிருப்பர். குழுவானது, சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குள்ளேயே தொழிற்பட்டது. பட்டயத்தின் நியதிகளின்படி, குழுவின் நோகெல்லையானது, பணிப்பாளர் சபைக்குப் பின்வரும் விடயங்களில் தமது மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உதவுவதாகக் காணப்படும். அவை (அ) வங்கியின் நிதிக் கூற்றுக்களின் உண்மைத் தன்மை (ஆ) வங்கியின் இடர் முகாமைத்துவத் தொழிற்பாட்டின் விளைவு (இ) வங்கியின் வெளியகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டுச் செயலாற்றம் (ஈ) வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டுச் செயலாற்றம் என்பனவாகும்.

வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பு முறைமை மதிப்பீடு செய்வதற்கு இக்குழு உதவி செய்வதன் மூலம், இடர் முகாமைத்துவம் குறித்து வங்கியிடம் முழுமையான கொள்கை ஒன்று இருப்பதை உறுதி செய்வதுடன், வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பு முறையின் பயன்பாட்டினைக் கணிப்பீடு செய்வதாகவும் இருக்கும்.

மேலும், சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுடன் வங்கி இணங்கி ஒழுகுதலையும் மதிப்பீடு செய்யும். சட்டங்களும் ஒழுங்கமைப்புகளும் இணங்கி ஒழுகப்படுவதற்கான அமைப்பு முறையின் பயனாற்றலை மீளாய்வு செய்வதுடன், முகாமைத்துவ புலனாய்வுகளின் பெறுபேறுகளையும் மற்றும் இணங்கிச் செயற்படாத எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தொடர்ந்து அவதானிக்கவும் செய்யும்.

சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை 190 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

2. மனித வளங்களும் ஊதியங்களும் குழு (மவஊகு)

இக்குழுவானது, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதுடன், காலத்துக்குக் காலம் அத்தகைய இலக்குகள் தொடர்பான செயலாற்றல்களை மதிப்பீடு செய்கின்றது. மேலும், ஊதியங்கள், நன்மைகள் மற்றும் செயலாற்றத்தின் அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்கான அடிப்படையையும் தீர்மானிக்கும். வங்கியின் சார்பாக மனித வள அவிபிருத்தி, மூலோபாயமான அபிவிருத்தியையும் மீளாய்வு செய்யும். அத்துடன் சபையின் ஏனைய குழுக்களுக்கும் அனைத்து மனித வள விடயங்கள் தொடர்பான செயற்பாட்டுக் குழுக்களுக்கும் ஆலோசனை வழங்குவதிலும் பங்கேற்கின்றது. மனித வளங்களும் ஊதியங்களும் குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்களில் அனைத்துப் பணியாட்கள் தொடர்பான விடயங்களும் உள்ளடங்கும்.

பொது முகாமையாளர்/பி.நி.அ. குழுவுக்குத் தகவல்களை வழங்குவதுடன், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பங்கள் தவிர அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொள்வர். சபையின் செயலாளர் மனித வள மற்றும் ஊதியங்கள் குழுவின் செயலாளராகக் கடமையாற்றுகிறார். குழுவானது கூட்டு உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியங்களைத் தீர்மானிப்பதற்குப் பொறுப்பாக உள்ளது.

சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலுள்ள அலுவலர்களுக்கான அனைத்து முக்கிய மனிதவளக் கொள்கைகள், முன்னெடுப்புக்கள், சம்பள அமைப்புக்கள் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றைக் குழு மீளாய்வு செய்கிறது. இச் செயல்முறையில் அவசியமான தகவல்களும், எடுத்துரைப் புக்களும், பொது முகாமையாளர்/பி.நி.அ. மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்திடமிருந்து பெறப்பட்டன. குழுக் கூட்டங்கள், தேவையடிப் படையில் காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டன

மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை 193 மற்றும் 194 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

3. சபை நியமனக் குழு (சநிகு)

நியமனங்கள் குழு தனது நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு அறிவிக்க வேண்டும். பணிப்பாளர் சபையின் செயலாளர் சபை நியமனக் குழுவுக்கான செயலாளராகவும் பணியாற்றுகிறார்.

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் முக்கிய முகாமைத்துவ பதவிகளினதும் நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகளைக் கருத்திற் கொள்வதற்குத் தேவையான தகைமைகளான பதவிக்கான தகுதிகள், அனுபவங்கள் மற்றும் முக்கிய பண்புகள் போன்றவற்றிற்கான மூலப் பிரமாணங்களை குழு நிர்ணயிக்கும். பணியாள் தொகுதியினரின் நியமனங்கள் தொடர்பான விடயங்களின் கொள்கைகள் மூலோபாயங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு மேலதிகமாக நியமனங்கள் மற்றும் நியமிக்கும் உரிமைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்கமைப்பாளர்களுக்குத்தேவைப்படும் கண்காணித்தல், மதிப்பிடுதல் மற்றும் சபையின் சார்பாக தீர்மானங்களை எடுத்தலுக்கு வங்கியின் இணங்குவிப்பை உறுதிப்படுத் துவதற்குத் தேவைப்படும் கொள்கைகள் அல்லது நடைமுறைகள் குறித்து பொதுவான மேற்பார்வையை வழங்குவதற்கும் சபை நியமனக் குழு பொறுப்பாக இருக்கும்.

நியமனக் குழுவின் அறிக்கை 195 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

4. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (பி.ஐ.ஆர்.எம்.சி.)

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவானது அனைத்து இடர்களையும் அதாவது வங்கியின் கடன், சந்தை, திரவத் தன்மை, செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்கள் போன்ற இடர்கள் அனைத்தையும் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் ஊடாகவும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாகவும் மதிப்பீடு செய்கின்றது.

வங்கிக்கான பணிப்பாளர் சபையானது 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பணிப்புரைகளுக்கும் இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகைக்கும் அமைவாக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினை நிறுவியது. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவானது, மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர்/பி.நி.அ. மற்றும் இடர் பிரிவுகளைக் கண்காணிக்கும் இடர் முகாமைத்துவத்தின் தலைவரையும் உள்ளடங்கியுள்ளது. பணிப்பாளர் சபையின் செயலாளர், குழுவின் செயலாளராகவும் கடமையாற்றுவார்.

குழு இடர்கள் தொடர்பான கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் வங்கியோடு தொடர்புடைய இடர் மற்றும் இணங்குவித்தல் தொடர்பான எடுத்துரைப் புக்களை மீளாய்வு செய்கின்றது. ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது அதிகாரத்துக்குட்பட்ட எடுத்துரைப்புக்களுக்கு அங்கீகாரம் வழங்கியதுடன், சபையினால் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டிய எடுத்துரைப்புக்கள்/அறிக்கைகளை பணிப்பாளர்களுக்கு எடுத்துரைத்துள்ளது.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அனைத்து முகாமைத்துவத் தரக் குழுக்களினதும் போதுமை செயற்றிறன் ஆகியவற்றை மீளாய்வு செய்வதுடன், இதில் கடன் குழு மற்றும் சொத்து – பொறுப்புக் குழுக்கள் போன்றன அடங்குவதுடன் அவற்றில் குறித்த இடர்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து, குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் எண்ணிக்கை, தரம் ஆகிய ரீதியில் இவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கும். வங்கியின் கொள்கைகள், விதிமுறைகளுக்கு ஏற்பவும் ஒழுங்குபடுத்தல் மேற்பார்வைத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் குழுவினால் தீர்மானிக்கப் பட்டவாறு அத்தகைய இடர்கள் எச்சரிக்கை மட்டங்களைத் தாண்டுகின்ற சந்தர்ப்பத்தில் குறித்த இடர்களின் தாக்கத்தினைத் தணிப்பதற்கு உடனடி சீர் செய்தல் நடவடிக்கைகளை குழு எடுக்கும்.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு சபைக்கு தனது இடர் மதிப்பீட்டு அறிக்கையை முன்வைத்து அதன் யோசனைகளையும் அல்லது வழிகாட்டல் களையும் கிரமமான அடிப்படையில் பெற்றுக் கொள்ளும். வங்கி தனது அனைத்துத் துறைகளிலும் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், வழிகாட்டல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுக்கு இணங்கி நடப்பதை மதிப்பீடு செய்ய சுயாதீன இணங்குவிப்புச் செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ளவும் குழுவிடம் காலத்துக்குக் காலம் அறிக்கை சமர்ப்பிக்கவும் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை பிரதான முகாமைத்துவக் குழுவிலிருந்து இணங்குவிப்பு அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கும்.

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 196 மற்றும் 197 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

5. சபைக் கடன் குழு

சபைக் கடன் குழுவானது (ச.க.கு.) வங்கியின் கடன் கொள்கை மற்றும் முதலீட்டுக் கொள்கை தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய சபையின் உப குழு ஒன்றாகும். அத்துடன் குழுவுக்கு வழங்கப்பட்ட எல்லைக்குள் கடன் வசதிகள் மற்றும் முதலீட்டுக்கு ஒப்புதல் வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கும் சபைக் கடன் குழுவானது (ச.க.கு.) சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பொது முகாமையாளர்/பி.நி.அ. மற்றும் கடன் பிரிவிலுள்ள பிரதிப் பொது முகாமையாளர்கள் ஆகியோரின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு வருகை தருவதுடன், ஏனைய சிரேஷ்ட அலுவலர்கள் தேவைப்படும் போது சபைக் கடன் குழுக் கூட்டங்களுக்கு வருகை தருவர்.

சபைக் கடன் குழுவானது,

- கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்பான கொள்கை மட்டத்திலான ஆவணங்கள் உள்ளடங்கலாக கடன் மற்றும் முதலீடுகள் தொடர்பில், வங்கியின் மூலோபாயக் கொள்கைகளை அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்யவும்,
- சபைக்கு வழங்கப்பட்ட அதிகார மட்டங்களை விதந்துரைக்கவும்,
- வழங்கப்பட்ட அதிகார எல்லைகளுக்குள் கடன் குழு மற்றும் முதலீட்டுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட கடன் மற்றும் முதலீட்டு எடுத்துரைப்புகளுக்கான அங்கீகாரத்தை வழங்கவும்,
- வழங்கப்பட்ட அதிகார எல்லைக்கு மேல், கடன் மற்றும் முதலீட்டு எடுத்துரைப்புக்களை ஒப்புதலுக்காக.'. கவனத்தில் எடுப்பதற்காக சபைக்கு எடுத்துரைக்கவும்,
- புதிய சொத்து உற்பத்திகள் மற்றும் நடைமுறைகளை சபையின் ஒப்புதலுக்காக/கவனத்தில் எடுப்பதற்காக விதந்துரைக்கவும்/அனுப்பி வைக்கவும்.
- கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு/அல்லது அதனுடன் இணைந்து மதிப்பீடு செய்வது தொடர்பில் ஒப்புதலளிக்கவும்/ ஆலோசனை வழங்கவும்.
- கடன் நிருவாகம், கடன் மீளப்பெறுகை நிறுத்துவதற்கு முன்பதான செயல் முறைகள் உரித்தாக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை போன்ற அனைத்து விடயங்கள் தொடர்பில் கடன் குழு/முதலீட்டுக் குழுவினை வழிநடத்தவும்/ ஆலோசனை வழங்கவும்,
- ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களுடன் இணைந்து சபையினாலும் ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபைகளினாலும் ஏற்படுத்தப்பட்ட வரையறைகள் மற்றும் அளவுகளுக்கு எதிராக கடன்கள் மற்றும் முற்பனங்கள் மற்றும் முதலீட்டுத் துறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கவும்
- வங்கியின் கடன் விடயத்தைப் பொறுத்தவரையில் இடர்களை முகாமை செய்யவும், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகளைவலுப்படுத்தவும் பொருத்தமான முறைமைகளின் நடைமுறைப்படுத்தலை உறுதி செய்யவும். அதிகாரத்தைப் பெற்றுள்ளது

கூட்டத்தின் குறிப்புக்கள், ஏற்றுக் கொள்ளப்படுதவற்காக பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

சபைக் கடன் குழு அறிக்கை 198 ஆம் பக்கத்தில் தரப்பட்டள்ளது.

6. சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு

1971 இன் 30 ஆம் இலக்க தே சே வ சட்டம் மற்றும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பட்டயத்துடன் இணைந்த வகையில் வங்கியின் முழுமையான தகவல் தொழில்நுட்ப வரையமைப்பினை உள்ளடக்கி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவுக்கு (ச.த.தொ.மூ.கு.) சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவின் உறுப்புரிமையானது, சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். சபைச் செயலாளர் குழுவுக்கான செயலாளராகவும் செயற்படுகின்றார். தகவல் தொழில்நுட்பத்தின் நோக்கெல்லையை மேற்பார்வை செய்யும் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர்கள் ஆகியோர் அழைப்பின் பேரில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் வருகை தருவர்.

தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவானது,

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (த.தொ.தொ.நு.) தொடர்பில் வங்கியின் மூலோபாய நோக்கங்களுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், தேவைப்பட்டவாறும், தேவைப்பட்டபோதும் ஏனைய சபை உப குழுக்களுடன் தகவல் தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் கொள்கை ஆவணங்கள், ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், வங்கியின் ஒப்புதலளிக்கப்பட்ட மூலோபாயத்துக்குள் புதிய தொழில்நுட்ப நடைமுறைப்படுத்தலுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் நிருவகித்தல் ஆகியவற்றுக்கும்.
- பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவுக்கு, சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு அதிகாரம் வழங்குவதற்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது

குழுக் கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவைப்படும் போது நடைபெறும். குழுவின் "கோரம்" இரண்டு உறுப்பினர்களாகும்.

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு அறிக்கை 200 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின் வருகை

நிறுவன ஆளுகைப்படி 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கையும், நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் ஒவ்வொரு பணிப்பாளர்களினதும் வருகையும் கீழே காட்டப்பட்டுள்ளன.

பெயர்கள்	பணிப்பாளர் அந்தஸ்து	சபைக் கணக்காய்வுக் குழு	மனித வளங்களும் ஊதியங்களும் குழு	சபை நியமனக் குழு	சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு	சபை கடன் குழு	சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு
நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க இவ் ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த கூட்டங்களின் எண்ணிக்கை		04	04	02	04	N/A	N/A
இவ் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை		10	10	01	05	08	05
திரு. அஸ்வின் டி சில்வா – தலைவர்	தலைவர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற (தலைவர் ச.ம.வ.ஊ.கு., ச.க.கு., ச.த.தொ.மூ.கு.)	N/A	10 2015 மார்ச் 12 இலிருந்து தலைவர்	N/A	N/A	08 2017 பெப்ரவரி 3 இலிருந்து தலைவா	05 2017 பெப்ரவரி 3 இலிருந்து தலைவா
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன – பதவி வழிப்பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற (தலைவர் ச.க.கு., ச.நி.கு.)	10 2015 நவெம்பர் 30 இலிருந்து தலைவர்	10	01 2017 பெப்ரவரி 3 இலிருந்து தலைவர்	N/A	N/A	02
திரு. சுரங்க நாவுலகே – பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற	N/A	N/A	N/A	05	N/A	N/A
திரு. அஜித் பத்திரன – பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற	N/A	08	01	N/A	02	N/A
திரு. ஏ.கே. செனிவிரத்ன – பதவி வழிப்பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற (தலைவர் ச.ஒ.இ.மு.கு.)	08	N/A	01	05 2015 நவெம்பர் 30 இலிருந்து தலைவர்	N/A	N/A
திரு. சந்திம கேமசந்திர – பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற	N/A	N/A	N/A	01	06	05
திரு. சுனில் ராஜகருண – பணிப்பாளர்	பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற	10	N/A	N/A	02	05	N/A

N/A ஏற்புடையது அல்ல
0 – வருகை தர வேண்டிய ஆனால் வருகை தராதது

தேசிய சேமிப்பு வங்கியில் இணங்குவிப்பு

ஆண்டுக்குரிய நிறுவன ஆளுகை அறிக்கையானது 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டல் மற்றும் 2017 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையில் அதைத் தொடர்ந்த திருத்தங்களின் நியதிகளின் படி வெளியிடப்படும்.

மேலேயுள்ள வழிகாட்டல்கள் வங்கியினால் பின்பற்றப்பட்டமை கீழே தரப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (1)	**சபையின் பொறுப்புக்கள்**	
3 (1) (i)	பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் வங்கியின் பாதுகாப்பையும் உரிமையையும் சபை வலுப்படுத்தியது	
3 (1) (i) (அ)	வங்கியின் மூலோபாய நோக்கங்களையும் நிறுவன மதிப்பீடுகளையும் அங்கீகரித்ததுடன் மேற்பார்வையும் செய்தது. அத்துடன் வங்கி முழுவதும் இவை தெரிவிக்கப்படுவதையும் உறுதி செய்தது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் மூலோபாய நோக்கங்களும் நிறுவனப் பெறுமதிகளும் 63ஆம் பக்கத்தில் எடுத்துக்காட்டப்பட்டவாறு சபையினால் தீர்மானிக்கப்பட்டன. இவை 2017 – 2019 காலப்பகுதிக்கான சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து மட்டங்களிலுமுள்ள ஊழியர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டன.
3 (1) (i) (ஆ)	வங்கியின் ஒட்டுமொத்த வர்த்தக மூலோபாயத்தையும், ஒட்டுமொத்த இடர் கொள்கைகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக் கூடிய இலக்குகளுடனான பொறிமுறைகள் ஆகியவற்றை அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்காவது அங்கீகரித்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபை அனுமதித்த மூன்று ஆண்டுகளுக் கான மூலோபாயத் திட்டம் (2017 – 2019) நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது வர்த்தக மூலோபாயம், வழிகாட்டல் மற்றும் அளவிடக் கூடிய இலக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மூலோபாய வர்த்தகத் திட்டமானது சுழற்சித் திட்டமாகக் காணப்பட்டு ஆண்டு தோறும் நாளதற்குக் கொண்டு வரப்பட்டும், மீளாய்வு செய்யப்பட்டும் உள்ளது. மூலோபாய வர்த்தகத்திட்டம் (2018 – 2020) 2017 இல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.
3 (1) (i) (உ)	பிரதான இடர்களை அடையாளங் கண்டு இடர்களை விவேகமாக முகாமைத்துவம் செய்யத்தக்கதாக பொருத்தமான அமைப்பு முறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கையை அங்கீகரித்தல், பிரதான இடர்களை ஆளுகை அமைப்புக்கள் ஆகியவற்றை அடையாளங் காணுதல் மற்றும் பிரதான இடர்களை அளவீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான முறைமைகளை நடைமுறைப்படுத்தல் ஆகியவை தொடர்பில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு சபைக்கு எடுத்துரைப்புக்களை மேற்கொள்ளும். பின்வரும் அறிக்கைகள் இது தொடர்பில் ஆழமான விளக்கத்தைத் தருகின்றன. • ஆம் பக்கங்களிலுள்ள இடர் முகாமைத்துவ அறிக்கை. • ஆம் பக்கங்களிலுள்ள சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை.
3 (1) (i) (ஈ)	வைப்பாளர்கள், கடன் பெறுநர்கள், கடனாளிகள் மற்றும் பங்குதாரர்கள் உள்ளடங்கலாக அனைத்துப் பங்கு உரிமையாளர் களுடனான தொடர்பாடல் கொள்கை யொன்று நடைமுறைப்படுத்தப்படுவதை அங்கீகரித்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (1) (i) (உ)	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகளின் போதுமைத் தன்மையையும் நேர்மையையும் மீளாய்வு செய்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (i) (ஊ)	சர்வதேசக் கணக்கீட்டு நியமங்களில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை அடையாளங் கண்டு பதவி அளித்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (i) (எ)	அதிகாரத் துறைகளை வரையறை செய்வதும் பணிப்பாளர்களினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரதும் (KMP) முக்கிய பொறுப்புக்களை வரையறை செய்வதும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவானது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான அதிகார எல்லைகளையும் முக்கிய பொறுப்புக்களையும் வரையறை செய்கிறது. பணிப்பாளர் சபையின் அதிகார எல்லையானது தே சே வ சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் ஆளப்படுகிறது.
3 (1) (i) (ஏ)	முக்கிய முகாமைத்துவ ஆளணியினரால் (KMP) வங்கியின் கொள்கைகளில் ஏற்றவாறான மேற்பார்வை இருப்பதை உறுதி செய்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (i) (ஐ)	பணிப்பாளர்கள் சபையின் சொந்த ஆளுகைப் பிரயோகங்களின் திறனாற்றல்கள் காலத்துக்குக் காலம் மதிப்பீடு செய்யப்படும். தெரிவு முறைகள், பணிப்பாளர்களினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரதும் நியமனங்களும் தேர்ந்தெடுத்தல்களும் ஈடுபாடுகளின் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல், பலவீனங்களைத் தீர்மானித்தலும் அவசியமான இடங்களில் மாற்றங்களை நிறைவேற்றுவதுமாகியவை இவற்றில் உள்ளடங்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. பணிப்பாளர்கள் அமைச்சரினால் 1971 இன் தே1சே1வ சட்டத்தின் 30 ஆம் இலக்க 8 ஆம் பிரிவின் கீழ், 1995 இன் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு நியமிக்கப்படுவார்கள். முரண்பாடுகள் எவையும் இருப்பின் அவற்றைக் கவனிப்பதற்கென பணிப்பாளர்களிடமிருந்து தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களின் ஈடுபாடுகள் குறித்த ஆண்டுக்கான பிரகடனங்கள் பெற்றுக் கொள்ளப்படும். தொடர்புடையவர்களது கொடுக்கல் வாங்கல் கொள்கையானது, நலன்களின் முரண்பாடுகளைச் சரி செய்வதற்காக நடைமுறையிலுள்ளது.
3 (1) (i) (ஒ)	முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்குப் பொருத்தமான தொடர் அமர்வாளர், திட்டம் இருப்பதை வங்கி உறுதிப்படுத்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (i) (ஓ)	கொள்கைகளை மீளாய்வு செய்தல், தொடர்பாடல் வரிசைகளை நிறுவுதல் மற்றும் நிறுவன நோக்கங்கள் குறித்த முன்னேற்றங்களைக் கண்காணிப்பது போன்றவற்றுக்காக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் தேவை அடிப்படையில் கிரமமாக சந்தித்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் செயலாற்றம், மூலோபாயம், கொள்கை மற்றும் அவர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் பற்றி சபை மற்றும் முன்னேற்றத்துக்கான உப குழுக்களுடன் கூட்டங்களில் கிரமமாகக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவர்.
3 (1) (i) (ஔ)	ஒழுங்கமைப்புச் சூழலை விளங்கிக் கொள்வதும் ஒழுங்கமைப்பாளர்களுடன் பயனாற்றலுடைய தொடர்பாடல்களை வங்கி பேணுவதை உறுதிப்படுத்தலும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (i) (க)	வெளியக கணக்காய்வாளர்களை வாடகைக்குப் பெறுவதிலும் மேற்பார்வை செய்வதிலும் உரிய கவனம் எடுத்தல்	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தே சே வ சட்டத்தின் பிரிவு 37 இன் படி கணக்காய்வாளர் நாயகம், வங்கிக்கான வெளியகக் கணக்காய்வாளராக நியமிக்கப்படுகின்றார்.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (1) (ii)	தலைவரையும் பிரதம நிறைவேற்று அதிகாரியையும் சபை நியமிப்பதுடன் பணிப்புரை 3 (5) இல் தரப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு ஒத்ததாக தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் நடவடிக்கைகளையும் பொறுப்புக்களையும் நிர்ணயிப்பதுடன் அங்கீகாரமும் அளிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. 1971 இன் தே சே வ சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ், 1995 இன் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு தலைவர் அமைச்சரினால் நியமிக்கப்படு கின்றார். தே சே வ சட்டத்தின் பிரிவு 26 (1) தகுதியான மற்றும் சரியான ஒருவரை வங்கியின் பொது முகாமையாளராக சபை நியமிக்க முடியுமென்பதைத் தெரிவிக்கின்றது. இவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் செயற்பட முடியும். தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3 (1) (iii)	சபைக் கூட்டங்கள் கிரமமாக நடைபெறுவதுடன் மாதாந்த இடைவெளிகளில் குறைந்தது ஆண்டிற்கு பன்னிரண்டு முறைகளாவது சபைக் கூட்டங்கள் கூட்டப்படும். அத்தகைய கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களில் வருகை தருவதற்கு உரித்துடைய பெரும்பான்மையான பணியாட்கள் அவற்றிற்கு நேரடியாக சமுகமளித்து ஊக்கத்துடன் ஈடுபடுவார்கள். எழுத்து மூலமாக தீர்மானங்களைப்/ பத்திரங்களை சுற்றுக்கு விடப்படுவதனூடாக பணிப்பாளர்களின் அனுமதியைப் பெறுவது இயன்ற வரையிலும் தவிர்க்கப்படும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (iv)	வங்கியின் வர்த்தகத்தை ஊக்குவிப்பதும் இடர்களை முகாமைத்துவம் செய்வதும் பற்றியதான விடயங்களும் பிரேரணைகளும் இருப்பின் கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் அத்தகைய விடயங்களும் பிரேரணைகளும் உட்சேர்க்கப்படுவதற்கு அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் உதவும் வகையில் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதை சபை உறுதிப்படுத்தும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (v)	பணிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களுக்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் அவை முன்னறிவிக்கப்படுவதை சபையின் நடைமுறை உறுதி செய்யும். ஏனைய சபைக் கூட்டங்கள் அனைத்துக்கும் நியாயமான முன்னறிவித்தல் தரப்படும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (vi)	12 மாத காலப்பகுதியில் உடனடியாக அடுத்துவரும் கூட்டங்களில் குறைந்தது மூன்றில் இரண்டுக்கும் குறைவாக வருகை தந்த பணிப்பாளர் அல்லது தொடர்ந்து நடந்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதவர்கள் பணிப்பாளராக இருப்பதிலிருந்து நீக்கப்படுவதை சபையின் நடைமுறைகள் உறுதிப்படுத்தும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. பணிப்பாளர்களின் வருகை தொடர்பான விபரங்கள் 168 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. 12 மாத காலப் பகுதியில் உடனடியாக அடுத்து வரும் கூட்டங்களில் குறைந்தது மூன்றில் இரண்டுக்கு வருகை தராத அல்லது தொடர்ந்து நடந்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத பணிப்பாளர்கள் இருக்கவில்லை.
3 (1) (vii)	1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தும் ஒருவரை கம்பனிச் செயலாளராக சபை நியமிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (viii)	சபையின் நடைமுறைகளும் பிரயோகிக்கப்பட வேண்டிய அனைத்து விதிகளும் ஒழுங்கு விதிகளும் ஒழுங்கு முறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக கம்பனிச் செயலாளரின் ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (ix)	சபைக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளை சபையின் செயலாளர் பேணுவார். எந்தவொரு ஏற்ற நேரத்திலும், ஏற்ற அறிவித்தலுடனும் அத்தகைய கூட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்படுவதற்காக எந்தவொரு பணிப்பாளருக்கும் திறந்திருக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (1) (x)	சபை அதன் கடமைகளைச் செயற்படுத்தும் போது அக்கறையுடனும், விவேகமாகவும் நடந்து கொண்டுள்ளதா என்பதை கூட்ட அறிக்கையிலிருந்து சேகரித்துக் கொள்ளும் வாய்ப்பிற்காக சபைக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் போதுமான விபரங்களுடன் பதிவு செய்யப்படுகின்றன. சபைக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஆழத்தை மதிப்பீடு செய்வதற்கு ஒழுங்கமைப்பாளர்களுக்கும் கண்காணிப்பு அதிகாரிகளுக்கும் தேவையான குறிப்புக்களை அளிப்பதாகவும் கூட்ட அறிக்கைகள் இருக்கும். எனவே, சபைக் கூட்டத்தின் குறிப்புக்கள், தெளிவான முறையில் பின்வருவனவற்றை உள்ளடக்குவதாக அல்லது குறிப்பிடுவதாக இருக்கும். (அ) தனது தீர்மானங்களில் சபையால் பயன்படுத்தப்பட்ட தரவுமற்றும் தகவல்களின் தொகுப்பு ஆ) சபையால் கவனத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள் இ) சபை தனது கடமைகளை உரிய கவனத்துடனும் விவேகத்துடனும் மேற்கொள்கின்றதா என்பதை விளக்கக்கூடிய, விடயத்தைத் தேடும் கலந்துரையாடல்கள் மற்றும் வாதம் மற்றம் மாறுபட்ட கருத்துக்கள் ஈ) சபையின் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளுடனான இணக்கப்பாட்டினையும், அவசியமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி நடப்பதையும் எடுத்துக் காட்டக் கூடிய பொருத்தமான நிறைவேற்று அலுவலர்களின் அத்தாட்சியும் உறுதிப்படுத்தலும். உ) வங்கிக்கு ஏற்படக் கூடிய இடர்கள் பற்றிய சபையின் அறிவு மற்றும் விளக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகள் மற்றும் ஊ) தீர்ப்புக்களும் சபையின் தீர்மானங்களும்	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (xi)	வங்கியின் செலவில் பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை நாடுவதற்கு நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் போது பணிப்பாளாள்களுக்கு அவை கிடைப்பதற்கு சபை ஒத்துக் கொள்ளும் நடைமுறை ஒன்று இருக்கும். வங்கிக்கான அவர்/அவள்/அவர்களது கடமைகளைச் செயற்படுத்துவதற்கு தொடர்புடைய பணிப்பாளர்கள் அல்லது பணிப்பாளர்களுக்கு உதவுவதற்காக பணிப்பாளர்களுக்கு வேறு வேறான சுயாதீனமான தொழில் சார் ஆலோசனைகளை வழங்குவதற்கான தீர்மானத்தை சபை மேற்கொண்டுள்ளது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் செலவில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை நியாயமான தேவைப்பாட்டுடன் பெற்றுக் கொள்வதனை பணிப்பாளர்களுக்கு இயலச் செய்வதற்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையானது தற்போது நடைமுறையிலுள்ளது.
3 (1) (xii)	ஏனைய நிறுவனங்கள் அல்லது தொடர்புடையவர்களுடனான கடப்பாடுகளில் முரண்பாடுகள் தென்படுவதைப் போல தோன்றும் போது தமது நடவடிக்கைகளின் ஈடுபாடுகளில் முரண்பாடுகள் தென்படுவதை பணிப்பாளர்கள் தவிர்ப்பார்கள்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (1) (xiii)	வங்கியின் நெறிப்படுத்தலும் கட்டுப்பாடும் தனது அதிகாரத்தின் கீழ் இருப்பதைத் திடமாக உறுதிப்படுத்தும் வகையில் அதன் தீர்மானத்திற்கென விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களின் முறைமையான பட்டியல் சபையிடம் உள்ளது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (1) (xiv)	வங்கியினால் அதன் கடப்பாடுகளைச் சந்திக்க முடியாத அல்லது அவ்வாறு தோன்றும் நிலைமையில் அல்லது திவாலாகப் போகின்றது அல்லது வைப்பாளர்களுக்கும் ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கும் தரப்பட வேண்டிய கொடுப்பனவுகளை இடைநிறுத்தப் போகின்ற நிலையில் உள்ளதென சபை கருதுமாயின் எந்தவொரு தீர்மானமும் அல்லது நடவடிக்கையும் எடுக்க முன்னர் வங்கியின் நிலைமையை இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அத்தகைய நிலைமை இவ்வாண்டில் ஏற்படவில்லை
3 (1) (xv)	நாணயச் சபையின் மூலதன போதுமை விகிதத்தின் தேவைப்பாடுகளின் மட்டங்களுக்கு அமைவாகவும் ஏனைய விவேகமான முறைகளிலும் வங்கியின் மூலதனம் அதிகரிக்கப்பட்டுள்ளதை சபை உறுதி செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனான இணக்கத்தையும், வங்கியின் வரையறுக்கப்பட்ட இடர் தீர்ப்பனவையும் உறுதிப்படுத்துவதற்காக சபையானது மூலதனப் போதுமை மற்றும் ஏனைய விவேகமான வழிமுறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கிறது. வங்கியானது, ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்கிறது.
3 (1) (xvi)	இப் பணிப்புரைகளின், பணிப்புரை 3 உடனான இணங்குவிப்பைக் குறிப்பிடும் வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையை வங்கியின் ஆண்டறிக்கையில் சபை பிரசுரிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிறுவன ஆளுகை அறிக்கை ஆண்டறிக்கையின் 165 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.
3 (1) (xvii)	இப் பணிப்புரைகளின் கீழ் வருடாந்தம் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரும் சுய மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும் அமைப்பு முறை ஒன்றை சபை கைக்கொள்வதுடன் அத்தகைய மதிப்பீடுகளின் பதிவை பேணவும் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (2)	**சபையின் தொகுப்பு**	
3 (2) (i)	சபையிலுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 இற்குக் குறைவாகவும் 13 இற்கு அதிகமாகவும் இருத்தலாகாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தே சே வ சட்டத்தின் பிரிவு 8 (1) இன் படி தலைவர் உட்பட ஏழு பணிப்பாளர்களை சபை கொண்டுள்ளது.
3 (2) (ii) (அ)	பிரதம நிறைவேற்று அதிகாரப் பதவி வகிக்கும் பணிப்பாளர் ஒருவர் தவிர்ந்த ஏனைய பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் ஒன்பது வருடத்தை விஞ்சலாகாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (2) (ii) (ஆ)	2008 ஜனவரி 01 அன்று ஒன்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள அல்லது 2008 டிசெம்பர் 31 இற்கு முன்னர் எந்தவொரு நேரத்திலும் பூர்த்தி செய்துள்ள பணிப்பாளர் ஒருவர் 2009 ஜனவரி 1 இலிருந்து ஆரம்பிக்கும் வகையில் மேலும் ஆகக் கூடிய மூன்று ஆண்டு காலத்திற்கு பணிப்பாளராகத் தொடர முடியும்.	ஏற்புடையதல்ல.
3 (2) (iii)	நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை, சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றிற்கு மேற்படாதவிடத்து வங்கியின் ஊழியர் ஒருவர் வங்கியின் பணிப்பாளராகத் தெரிவு செய்யப்படலாம் அல்லது நியமனம் செய்யப்படலாம். (இதன் பின்னர் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் குறிப்பிடப்படும்) அவ்வாறான நிலைமையில் நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பார்.	ஏற்புடையதல்ல.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (2) (iv)	எது உயர்வானதோ அதற்கமைய சபை குறைந்தது மூன்று சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை அல்லது மொத்தப் பணிப்பாளர் எண்ணிக்கையில் மூன்றில் ஒருவரைக் கொண்டிருக்கும்.	தே சே வ சட்டத்தின் பிரிவு 8 (1) (அ) இற்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவர். அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்களாக இருப்பதோடு சுயாதீனம் அற்றவர்களாயும் உள்ளனர்.
3 (2) (v)	சுயாதீன பணிப்பாளர் ஒருவரை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு மற்றுமொரு பணிப்பாளர் நியமிக்கப்படும் நிகழ்ச்சியின் போது அவ்வாறு நியமிக்கப்படுபவருக்கும் சுயாதீன பணிப்பாளருக்கென உள்ள தகைமையே ஏற்புடையதாக இருக்கும்.	ஏற்புடையதல்ல.
3 (2) (vi)	மூலோபாயங்கள், செயலாற்றல்கள் மற்றும் மூல வளங்கள் குறித்த விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளைக் கொண்டு வருவதற்கு நம்பகத் தன்மையுள்ள பதிவுகளையும்/அல்லது அவசியமான திறமைகளும், அனுபவமும் உள்ளவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருப்பார்கள்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவசியமான தகவல்களை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் குறிப்புக்கள் 156 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
3 (2) (vii)	சபையின் கூட்டங்கள் ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்டவை அல்ல. ஆயினும் அத்தகைய கூட்டங்களுக்கு வருகை தருபவர்களில் அரைப்பங்கிற்கு அதிகமானோர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருந்தாலன்றி அத்தகைய கூட்டங்களை நடத்துவதற்கான கோரம் ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தேவைப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை இருப்பின் கூட்டங்கள் நடத்தப்படலாம்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தே சே வ சட்டத்திற்கு அமைவாக சபையின் கோரம் 4 ஆகும். இது பணிப்பாளர்களில் அரைப்பங்கினருக்கும் அதிகமாகும். அத்துடன் அனைத்து ஏழு பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர்.
3 (2) (viii)	வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்துகின்ற அனைத்து நிறுவனங்களின் தொடர்பாடல்களையும் போன்றதாகவே சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களும் தெளிவாக அடையாளம் காணப்படுவர்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. ஆண்டறிக்கையின் 171 மற்றும் 245 ஆம் பக்கங்களைத் தயவுசெய்து பார்க்கவும்
3 (2) (ix)	சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்யும் போது முறைமையானதும், வெளிப்படையானதுமான நடைமுறைகள் பின்பற்றப்படும். சபையின் தொடர் அமர்வு நியமனங்களில் ஒழுங்கு முறையான நடைமுறைகள் ஏற்றவாறு வைக்கப்பட்டுள்ளன.	தே சே வ சட்டத்தின் பிரிவு 8 (1) (அ) இற்கு அமைவாக அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்கள் செய்யப்படும்.
3 (2) (x)	அமய வெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் அனைவரும் அவர்களின் நியமனத்திற்கு அடுத்துவரும் முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் தேர்ந்தெடுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்	ஏற்புடையதல்ல.
3 (2) (xi)	பணிப்பாளர் ஒருவர் பணி இடத்திலிருந்து பதவி விலகினால் அல்லது அகற்றப்பட்டால், பணிப்பாளரின் பதவி விலகலையும் அல்லது அகற்றப்பட்டமையையும் அவ்வாறு பதவி விலகியதற்கான அல்லது அகற்றப்பட்டதற்கான காரணத்தையும் சபை அறிவிக்கும். அத்துடன் பங்குதாரர்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் தேவையுள்ள ஏதாகிலும் விடயங்கள் உள்ளனவா என்பதையும் அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் உறுதி செய்யும்.	ஏற்புடையதல்ல.
3 (2) (xii)	வங்கி ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது பணியாள் ஒருவர் வேறொரு வங்கியில், அத்தகைய வங்கி முதலில் குறிப்பிடப்பட்ட வங்கியின் உப கம்பனியாக அல்லது கூட்டுக் கம்பனியாக இருந்தால் மட்டுமன்றி பணிப்பாளராக நியமனம் பெறத் தேர்ந்து எடுக்கப்பட அல்லது முன்மொழியப்பட இயலாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் ஒரு பணியாளராகிய சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் பிரதேச அபிவிருத்தி வங்கியில் (RDB) தேசிய சேமிப்பு வங்கியின் பங்கு உரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (3)	**பணிப்பாளர்களின் தகுதி மற்றும் நேர்மையை மதிப்பீடு செய்யும் மூலப் பிரமாணங்கள**	
3 (3) (i) (அ) மற்றும் (ஆ)	பணிப்பாளராகக் கடமையாற்றும் ஒருவரின் வயது 70 வயதை விஞ்சலாகாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (3) (ii)	வங்கியின் உப நிறுவனங்கள், துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கும் அதிகமான கம்பனிகள்/ ஸ்தாபனங்கள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிப்பாளராக தனி ஒருவருக்கு பதவி வகிப்பதற்கு முடியாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (4)	**சபையில் ஒப்படைக்கப்படும் முகாமைத்துவ நடவடிக்கைகள்**	
3 (4) (i)	பகிரப்படும் ஒழுங்குகள் ஏற்றவாறு உள்ளனவா என்பதை பணிப்பாளர்கள் கவனமாக ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்வார்கள்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (4) (ii)	சபைக் குழு, பிரதம நிறைவேற்று அதிகாரி, நிறைவேற்றுப் பணிப்பாளார்களுக்கு அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு எந்த ஒரு விடயத்தையும் சபை ஒப்படைக்காது விடலாம். சபையின் கடமைகளை நிறை வேற்றுவதற்கு, அவ்வாறான ஒப்படைப்புகள் குறிப்பிடத்தக்க இடையூறை ஏற்படுத்தலாம் அல்லது இயலுமையைக் குறைத்து விடலாம் எனும் நோக்கத்துடன் சபை இவ்வாறு செய்யலாம்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (4) (iii)	வங்கியின் தேவைகளுடன் சம்பந்தப்பட்டதாக அதிகார ஒப்படைப்பு இருப்பதை உறுதி செய்வதற்கு கிரமமான அடிப்படையில் அதிகார ஒப்படைப்பு ஏற்றவாறு இருப்பதை சபை மீளாய்வு செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (5)	**தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும்.**	
3 (5) (i)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் செயற்பாடுகள் வேறுபட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் அதே ஆளினால் செயலாற்றப்படலாகாது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் செயற்பாடுகள் இரு வேறுபட்டவர்களால் மேற்கொள்ளப்படும்.
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் சுயாதீனமான பணிப்பாளராகவும் இருப்பார். தலைவர், சுயாதீனமான பணிப்பாளராக இல்லாத விடத்து, பொருத்தமான ஆவணப்படுத்தப்பட்ட விடயங்களுடன் சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை சிரேஷ்ட பணிப்பாளராக சபை நியமிக்கும். சிரேஷ்ட பணிப்பாளரின் நியமனம் வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படும்.	ஏற்புடையதல்ல. தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற மற்றும் சுயாதீனமமற்ற பணிப்பாளராக உள்ளார். எனினும், சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை, சிரேஷ்ட பணிப்பாளராக நியமிக்க வேண்டிய தேவைப்பாடு எதனையும் தே சே வ சட்டம் கொண்டிருக்கவில்லை.
3 (5) (iii)	சபைத் தலைவரையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் சபை தனது நிறுவன ஆளுகை அறிக்கையில் அடையாளம் காட்டுவதுடன் அவர்களுக்கு இடையிலான எந்த உறவுகளையும் சபை அறிக்கையில் வெளிப்படுத்தும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபை அங்கத்தவர்கள் மற்றும் பொது முகாமையாளா/பிரதம நிறை வேற்று அதிகாரியின் விபரத்திரட்டு 156 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (5) (iv)	தலைவர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவார். சபை திறமையாகவும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவார். அத்துடன், ஏற்ற நேரத்தில் சபையினால் அனைத்து முக்கிய விடயங்களும் ஏற்றவாறு ஆராயப்படுவதையும் உறுதி செய்வார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தலைவர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் சபை தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் திறமையாகச் செயற்படுவதையும் உறுதிப்படுத்துவார். அனைத்து முக்கியமான விடயங்களையும் சபையானது ஏற்ற நேரத்தில் ஆராயும்.
3 (5) (v)	தலைவர் ஒவ்வொரு சபைக் கூட்டத்தினதும் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதிலும் அங்கீகரிப்பதிலும் முக்கிய பொறுப்பைக் கொண்டிருப்பார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபைக்கான செயலாளர் தலைவரின் வழிகாட்டலின் கீழ் நிகழ்ச்சி நிரலை வரைவார்.
3 (5) (vi)	சபைக் கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்கள் சரியானவாறு அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் விளக்கப்பட்டுள்ளதையும் ஏற்ற நேரத்தில் போதுமான தகவல்கள் பணிப்பாளர்களுக்குக் கிடைப்பதையும் தலைவர் உறுதி செய்வார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (5) (vii)	சபையின் அலுவல்களில் அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையாகவும் உற்சாகத்துடனும் பங்களிப்புச் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதுடன் வங்கியின் சிறந்த நலன்கள் குறித்து சபை இயங்குவதையும் தலைவர் உறுதி செய்வார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. பணிப்பாளர்களின் சுய மதிப்பீட்டு நடைமுறையில் தலவரின் பங்களிப்பு மதிப்பீடும் சபையின் செயலாற்றத்தின் ஒட்டு மொத்த மதிப்பீடும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3 (5) (viii)	முக்கியமாக நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களின் பயனாற்றலுடைய பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் நிறைவேற்று அதிகாரம் உள்ள மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கு இடையிலான உறவைப் பலப்படுத்துவதையும் தலைவர் உறுதி செய்வார்.	ஏற்புடையதல்ல. நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்கள் இன்மையால் இது பொருத்தமுடையதல்ல.
3 (5) (ix)	முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது ஏனைய நிறைவேற்று அதிகாரக் கடமைகளில் உள்ளவர்களுடன் நேரடியான மேற்பார்வையிடும் நடவடிக்கைகளில் தலைவர் ஈடுபடமாட்டார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிறைவேற்றுத் தரம் அற்றவகையில் தலைவர் செயற்படுவதுடன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை மேற்பார்வை செய்வதற்காக நிறைவேற்றுத் தரத் தொழிற்பாடுகளில் ஈடுபடவில்லை.
3 (5) (x)	பங்குதாரர்களுடன் பயனுள்ள தொடர்பாடலைப் பேணுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் பங்குதாரரின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படுவதையும் தலைவர் உறுதி செய்வார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டவரைப் பிரதிநிதித்துவப் படுத்துபவராக பங்குதாரர் சபையில் விளங்குவார். இவர், தே சே வ சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பணிப்பாளராக நியமிக்கப்படுவார்.
3 (5) (xi)	வங்கியின் செயற்பாடுகள், வர்த்தகம் ஆகியவற்றின் நாளாந்த முகாமைத்துவக் கடமைகளின் அதி உயர் மட்ட நிர்வாகியாக பிரதம நிறைவேற்று அதிகாரி செயற்படுவார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (6)	**சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள்**	
3 (6) (i)	இப்பணிப்புரையின் பணிப்புரை 3 (6) (ii), 3 (6) (iii), 3 (6) (iv) மற்றும் 3 (6) (v) களில் தரப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு வங்கியும் ஆகக் குறைந்தது நான்கு சபைக் குழுக்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிவிக்கும். அனைத்துக் குழுக்களும் செயலாளர் ஒருவரை நியமிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. குழுக்கள் ஆறும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. சபையின் செயலாளர் அனைத்து ஆறு குழுக்களினதும் செயலாளராகக் கடமை புரிவார். சபைக் கணக்காய்வுக் குழுவும், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவும் சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவும் மற்றும் சபை நியமனக் குழுவும் சபை கடன் குழுவும் மற்றும் சபை தகவல் தொழில்நுட்பம் மற்றும் மூலோபாயக் குழுவும் உரிய சபைக் குழுக்களின் தலைவரூடாக நேரடியாக சபைக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்.
3 (6) (ii)	**கணக்காய்வுக் குழு தொடர்பில் பின்வரும் ஒழுங்கு விதிகள் பிரயோகிக்கப்படும்.**	
3 (6) (ii) (அ)	குழுவின் தலைவர், கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வுத் துறையில் தகைமைகளும் அனுபவமும் கொண்டிருக்கக் கூடிய சுயாதீனமுடைய நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராவார்.	ஏற்புடையதல்ல. சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவர், நிறைவேற்று அதிகாரமற்றவராயும் சுயாதீனமற்றவராயும் உள்ளார். சபையின் அனைத்து அங்கத்தவர்களும் தே சே வ சட்டத்திற்கு அமைவாக நியமிக்கப்படுகின்றனர்.
3 (6) (ii) (ஆ)	குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (ii) (இ)	பின்வரும் தொடர்புடைய விடயங்கள் குறித்து குழு பரிந்துரை செய்யும். (i) தொடர்புடைய நியமத் தேவைப்பாடுகளுடன் இணங்குவிப்பை வழங்குவதற்கென கணக்காய்வு சேவைகளுக்காக வெளியிலிருந்து கணக்காய்வாளர்களை நியமிப்பது. (ii) காலத்துக்குக் காலம் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் கணக்காய்வாளர்களுக்கான வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல். (iii) பொருத்தமான கணக்கீட்டு நியமங்களைப் பிரயோகிப்பது மற்றும (iv) கணக்காய்வுப் பங்காளர்களின் பதவிக்காலம் ஐந்து வருடங்களை விஞ்சுமாயின் கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் பதவியிலிருந்து விலகுதல் அல்லது விலக்கப்படுதல் என்பவற்றுடன் குறித்த கணக்காய்வுப் பங்காளரை முந்திய பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து மூன்று வருடங்களின் பின்னரே மீள அமர்த்த முடியும்.	கணக்காய்வாளர் நாயகம் தே சே வ சட்டத்தின் படி வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராக நியமிக்கப்படுவதுடன் அதன் காரணமாக அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன. ஏற்புடையதல்ல.
3 (6) (ii) (ஈ)	பொருத்தமான நியமங்கள் மற்றும் நற்பிரயோகங்களுக்கு ஏற்புடையதாக வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரமும் நோக்கங்களும் கணக்காய்வு நடைமுறைகளின் செயற்றிறனும் இருப்பதை குழு மீளாய்வு செய்வதுடன் கண்காணிப்பையும் மேற்கொள்ளும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளியிலிருந்து வரும் கணக்காய்வாளாராக இருப்பதால் சுதந்திரமும் நோக்கங்களும் பேணப்படுகின்றன. சபையின் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்களுடன் கணக்காய்வு நடைமுறைகளின் திறனாற்றல் ஆராயப்படுகின்றது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (6) (ii) (உ)	கணக்காய்வு அல்லாத சேவையிலிருந்து அமர்த்தப்படும் வெளியகக் கணக்காய்வாளர்களுக்கான கொள்கையை அபிவிருத்தி செய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் குழு ஈடுபடும்.	ஏற்புடையதல்ல.
3 (6) (ii) (ஊ)	கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் குழுவானது கணக்காய்வின் தன்மையும் நோக்கெல்லையும் பற்றி வெளியகக் கணக்காய்வாளருடன் கலந்துரையாடி முடிவு செய்தல் வேண்டும்.	ஏற்புடையதல்ல. கணக்காய்வாளர் தலமை அதிபதியே வெளியகக் கணக்காய்வாளராக இருப்பதுடன், கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அளவு ஆகியன அவராலேயே தீர்மானிக்கப்படுகின்றன.
3 (6) (ii) (எ)	வங்கியின் நிதிக் கூற்றுக்கள் அதன் ஆண்டறிக்கை, கணக்கீடுகள் மற்றும் வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் அவற்றில் தரப்பட்டுள்ள அறிக்கையிடல் தீர்வுகளின் நேர்மைத் தன்மை ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவல்களை குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கையினை அவற்றை வெளிப்படுத்தும் நோக்கத்துக்காக அவை வெளியிடப்படத் தயாராக உள்ள போது கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒவ்வொரு நிகழ்வின் போதும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தனிப்பட்ட மீளாய்வு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கும். முக்கியமான தீர்வு விடயங்களில் ஏற்படும் மாறுபாடுகள் மீளாய்வு அறிக்கையில் கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றம் ஆகியவை உள்ளடங்கலாக சபைக் கணக்காய்வுக் குழுவின் கவனத்துக்கு அறிக்கையிடும்.
3 (6) (ii) (ஏ)	இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து எழக் கூடிய விடயங்கள், பிரச்சினைகள், ஒதுக்கி வைக்கப்பட்டவைகள் மற்றும் கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்பும் விடயங்கள் உட்பட அனைத்தையும் குழு ஆராயும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (ii) (ஐ)	வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதத்தையும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலையும் குழு மீளாய்வு செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) (இ) மற்றும் 13 (7) (அ) இன் கீழ் வழங்கப்பட்ட வெளியகக் கணக்காய்வாளரின் அறிக்கையையும் முகாமைத்துவத்தின் அதற்கான பதிலையும் சபைக் கணக்காய்வுக் குழு ஆண்டுதோறும் மீளாய்வு செய்யும்.
3 (6) (ii) (ஒ)	வங்கியின் உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும்.	
	(i) உள்ளகக் கணக்காய்வுப் திணைக்களத்தின் நோக்கெல்லை, கடமைகள் மூலவளங்களின் போதுமையை மீளாய்வு செய்வதுடன் திணைக்களமானது அதன் கடமையைச் செய்வதற்கு அவசியமிக்க அதிகாரங்களைக் கொண்டுள்ளது எனத் திருப்தியடைதல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
	(ii) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினையும், உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறைகளின் விளைவுகளையும் மீளாய்வு செய்ததுடன் அவசியமான இடங்களில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் உறுதி செய்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
	(iii) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பணியாள் தொகுதியினரின் செயற்பாடுகள் குறித்த கணிப்பீடுகளை அல்லது மதிப்பீடுகளை மீளாய்வு செய்யும	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
	(iv)உள்ளகக் கணக்காய்விற்காக தலைவர், சிரேஷ்ட பணியாள் தொகுதியினர் மற்றும் சேவை வழங்குதவற்கென வெளியிலிருந்து பெறப்பட்டவர்களின் எந்தவொரு நியமனங்கள் அல்லது பதவி நீக்கங்கள் பற்றி பரிந்துரை செய்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அத்தகைய நிலைமை இவ்வாண்டில் ஏற்படவில்லை.
	(v) சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் சேவை வழங்குவதற்கென வெளியிலிருந்து பெறப்பட்டவர்கள் உள்ளடங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணியாள் தொகுதியினரின் பதவி விலகல்களை மதிப்பீடு செய்தலை கண்காணிப்பதுடன் பதவி விலகிய சிரேஷ்ட பணியாள் தொகுதியினர் மற்றும் சேவை வழங்குவதற்கென வெளியிலிருந்து பெறப்பட்டவர்களுக்கு அவர்கள் பதவி விலகியதற்கான காரணங்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பமொன்றையும் வழங்குதல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
	(vi) உள்ளகக் கணக்காய்வு, அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமாகச் செயற்படுவதையும் தான் பாராட்சமின்றியும் திறமையுடனும் உரிய தொழில் சார் கவனத்துடனும் செயலாற்றியமையையும் உறுதிப்படுத்தல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (ii) (ஒ)	உள்ளகப் புலனாய்வின் முக்கிய கண்டு பிடிப்புக்களையும் அதற்கான முகாமைத்துவ பதில்களையும் குழு கருத்திற் கொள்ளல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. முக்கிய கண்டுபிடிப்புக்களையும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலையும் குழு மீளாய்வு செய்தது. குழுவின் அறிக்கையின் 190 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
3 (6) (ii) (ஔ)	பிரதான நிதி அலுவலர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் வெளியகக் கணக்காய்வாளரின் ஒரு பிரதிநிதி ஆகியோர் வழமையாக கூட்டங்களுக்கு வருகை தருவார்கள். நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் பிரசன்னம் இன்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது குழு நடத்தியது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. 2017 ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திலிருந்து ஒரு பிரதிநிதி எட்டுக் கூட்டங்களுக்கு வருகை தந்தார். அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்களாவர்
3 (6) (ii) (க)	பின்வரும் அதிகாரங்கள் குழுவிற்கு உள்ளன. (i) அதன் பார்வைக்குட்பட்ட எந்த விடயங்களையும் புலனாய்வு செய்வதற்கு திட்டவட்டமான அதிகாரம் உள்ளது. (ii) அவ்வாறு செய்வதற்கான மூலவளங்கள், (iii) தகவல்களை முழுமையாகப் பெறக் கூடியதாக இருத்தல், மற்றும் (iv) வெளியிலிருந்து தொழில் சார் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரமும் அத்துடன் அவசியமாயின் தொடர்புடைய அனுபவமுடையவர்களை வெளியிலிருந்து வருகை தருமாறு அழைப்பதும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபையின் கணக்காய்வுக் குழு பட்டயத்திற்கு அமைவாக எந்தவொரு விடயம் குறித்தும் புலனாய்வு செய்வதற்கும், நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மூல வளங்களைப் பெறுவதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தொழில் சார் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 190 ஆம் பக்கத்திலுள்ள குழு அறிக்கையைப் பார்க்கவும்.
3 (6) (ii) (ங)	ஆராயப்பட வேண்டிய விடயங்களின் போதிய முன்னறிவிப்புடன் குழு கிரமமாகக் கூடும் என்பதுடன் இதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான அதன் முடிவுகளையும் பதிவு செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. ஆண்டின் போது குழு 10 முறைகள் கூடியதுடன் தீர்மானங்களையும் பேணியது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (6) (ii) (ச)	தகவல் அளிக்கும் வகையில் சபை பின்வருமாறு வெளிப்படுத்தும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
	(i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விபரம்.	சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லை 168 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.
	(ii) ஆண்டில் இடம் பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கையும்	இவ்வாண்டில் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை 171 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.
	(iii) அத்தகைய கூட்டங்களுக்குச் சமுகமளித்த ஒவ்வொரு பணிப்பாளரினதும் வருகை பற்றிய விபரமும்.	பணிப்பாளர்களின் வருகை பற்றிய விபரங்கள் ஆண்டறிக்கையில171 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
3 (6) (ii) (ஞ)	குழுவின் செயலாளர், கம்பனிச் செயலாளராக அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் தலைவராக இருப்பதுடன் குழுக் கூட்டங்களின் விபர அறிக்கைகளையும் பதிவு செய்து வைத்திருப்பார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. சபையின் செயலாளர், செயலாளராக இருப்பதுடன் விபரமான கூட்ட அறிக்கைகளும் பேணப்பட்டன.
3 (6) (ii) (ட)	நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களில் தவறுகள் காணப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதெனும் அக்கறையை வங்கியின் பணியாளர்கள் எவரும் நம்பிக்கையுடன் எடுப்பார்களாயின் குழு ஒழுங்குகளை மீளாய்வு செய்யும். அதற்கமைய, அத்தகைய விடயங்களுக்கு நேர்மையும் சுதந்திர மானதுமான புலனாய்வுகளுக்கு சரியான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதையும் ஏற்புடைய பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதையும், வெளியகக் கணக்காய்வாளருடனான வங்கியின் தொடர்புகளை மேற்பார்வை செய்யும் முக்கியமான பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்பாகச் செயற்படுவதையும் குழு உறுதி செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. இவ்விடயங்களை உள்ளடக்கிய எச்சரிக்கைக் கொள்கை நடைமுறையில் இருப்பதுடன், பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளுக்காக குறிப்பிடத்தக்க கண்டு பிடிப்புக்கள் சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிவிக்கப்படும். வெளியகக் கணக்காய்வாளருடனான வங்கியின் தொடர்புகளை மேற்பார்வை செய்வதற்கான முக்கிய பிரதிநிதியாக சபை கணக்காய்வுக் குழு விளங்குகிறது.
3 (6) (iii)	**பின்வரும் விதிமுறைகள் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு தொடர்பில் பிரயோகிக்கப்படும்.**	
3 (6) (iii) (அ)	வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி (பிநிஅ) மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியங்கள் கொள்கையை (ஊதியங்கள், சம்பளப் படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) குழு நிர்ணயித்தல் வேண்டும்.	பணிப்பாளர்களின் ஊதியங்கள் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும். பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியம், கூட்டு உடன்படிக்கைகளின் அடிப்படையில் சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு வங்கிச் சபையினால் ஒப்புதல் அளிக்கப்படும்.
3 (6) (iii) (ஆ)	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்களையும் இலக்குகளையும் குழு நிர்ணயித்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தே சே வ சட்டத்தின் படி அமைச்சரினால் நியமிக்கப்பட்டும், நிறைவேற்று அதிகார மற்றவராயுமிருப்பதால் பணிப்பாளர்களுக்கு ஏற்புடையதல்ல. பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் மூலோபாய வர்த்தகத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.
3 (6) (iii) (இ)	நிறுவப்பட்டுள்ள குறிக்கோள்கள் இலக்குகளுக்கு எதிராக பி நி அ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றல்களை குழு காலத்துக்குக் காலம் மதிப்பீடு செய்வதுடன் ஊதியங்கள், நன்மைகள் மற்றும் செயலாற்றல்கள் அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்புகளுக்கான வேறு கொடுப்பனவுகள் ஆகியவற்றின் திருத்தங்களுக்கான அடிப்படையையும் தீர்மானிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (6) (iii) (ஈ)	பி நி அ குறித்த விடயங்களுடன் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படுவது தவிர்ந்த ஏனைய குழுக் கூட்டங்கள் அனைத்திலும் பி நி அ பங்கேற்பார்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (iv)	**நியமனக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படும்.**	
3 (6) (iv) (அ)	புதிய பணிப்பாளர்கள், பி நி அ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரைத் தெரிவு செய்யும/நியமிக்கும் செயல்முறையை குழு நடைமுறைப்படுத்தும்.	ஏற்புடையதல்ல தே சே வ சட்டத்தின் படி பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்கள். பிரிவு II – சபையின் பணிப்பாளர்களுள் ஒருவரை சபையின் தலைவராக அமைச்சர் நியமிப்பார். பிரிவு 26 – வங்கியின் பொது முகாமையாளராக தகுதியான பொருத்தமான ஒருவரை சபை தெரிவு செய்யும் இவர் வங்கியின் சிரேஷ்ட நிறைவேற்று அலுவலராகவும் இருப்பார். முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நியமனம் இணங்குவிப்பாகச் செயற்படுத்தப்பட்டது. பணிப்பாளர் சபை நியமனக் குழுவின் சிபாரிசில் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை நியமனம் செய்யும்.
3 (6) (iv) (ஆ)	தற்போது உள்ள பணிப்பாளர்களை மீண்டும் தெரிவு செய்வதற்குப் பரிந்துரை செய்ய (அல்லது செய்யாதிருக்க) குழு கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.	ஏற்புடையதல்ல. பணிப்பாளர்கள் தே சே வ சட்டத்திற்கு அமைவாக அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.
3 (6) (iv) (இ)	பி நி அ மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவி உயர்வுகளுக்கான தகுதிகளுக்கான மூலப் பிரமாணங்களை குழு தாபித்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (iv) (ஈ)	பணிப்பாளர்களும் பி நி அ வும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் பணிப்புரை 3 (3) இலும், நியமச் சட்டங்களிலும் தரப்பட்டுள்ள மூலப் பிரமாணங்களுக்கமைவாக பதவிகளை வகிப்பதற்குத் தேவையான தகைமைகளையும் கொண்டு சரியானவர்களாகவும் இருப்பார்கள் என்பதை குழு உறுதிப்படுத்தும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. பணிப்பாளர்களினதும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் கையெழுத்திடப்பட்ட சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனம் ஆகியவை சபைச் செயலாளரினால் பெறப்பட்டதுடன் இவை முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிடமிருந்து மனித வளப் பிரிவினாலும் பெறப்பட்டு தகுதி மற்றும் உடைமை மதிப்பீட்டுக்காக மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.
3 (6) (iv) (உ)	மேலதிகமானதும்/புதிய நிபுணத்துவமுள்ளதுமான தேவைப்பாடுகளை யும் ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு தொடர் அமர்வாளர் ஒழுங்குகளைச் செய்வதற்கும் காலத்துக்குக் காலம் சபை கருத்திற் கொண்டு பரிந்துரைத்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் பி நி அ வின் நியமனமானது தே சே வ சட்டத்தில் நிர்யணயிக்கப்பட்டுள்ளது. முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நியமனங்கள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும்.
3 (6) (iv) (ஊ)	சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரினால் குழு தலைமை தாங்கப்படும். அழைப்பின் பேரில் பி நி அ கூட்டங்களுக்குச் சமூகமளிப்பார்.	ஏற்புடையதல்ல. சுயாதீனமற்ற பணிப்பாளரினால் குழு தலைமை தாங்கப்படும். பணிப்பாளர்கள் அனைவரும் சுயாதீனமற்றவர்களாயிருப்பதால், மிகப் பொருத்தமான பணிப்பாளர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (6) (v)	**சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு**	
3 (6) (v) (அ)	பரந்தளவிலான இடர் வகைப்படுத்தல்களை மேற்பார்வை செய்வதற்கு குறைந்தது மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்கியதாக குழு இருக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (v) (ஆ)	வங்கிக்கு ஏற்படக் கூடிய அனைத்து இடர்களையும், எடுத்துக் காட்டாக கடன், சந்தை திரவத் தன்மை, செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்களையும் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்களினூடாக மாதாந்த அடிப்படையில் குழு மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகளைப் பொறுத்தவரையில் இடர் முகாமைத்துவமானது வங்கியடிப்படையிலும், குழு அடிப்படையிலும் மேற்கொள்ளப்படலாம்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. இடர் முகாமைத்துவப் பிரிவு, மாதாந்த இடர் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுடன், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் தீர்வின் அடிப்படையிலான காலாண்டு இடர் அறிக்கைகளையும் சமர்ப்பிக்கும்.
3 (6) (v) (இ)	கொடுகடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்கான குறிப்பிட்ட அளவு மற்றும் தர அடிப்படையிலான இடர் மட்டங்களை குழு மீளாய்வு செய்வதுடன், ஏதாவது இடர் குறிகாட்டிகள் இதன்பின் அவற்றை காலத்துக்குக்காலம் அறிவிக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது
3 (6) (v) (ஈ)	குறிப்பிட்ட இடர்களின் விளைவுகளைக் குறைப்பதற்கு, குழுவானது உடனடியாக சரிப்படுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (v) (உ)	நாளதற்குக் கொண்டு வரப்பட்ட வர்த்தகத் தொடர்ச்சித் திட்டங்கள் (BCP) உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் அனைத்து விடயங்களையும் மதிப்பீடு செய்வதற்காக குழு ஆகக் குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறை கூடும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. இவ் வாண்டில் குழு ஐந்து முறை கூடியது. கூட்டங்கள் மற்றும் வரவுகளின் விபரங்கள் 171 அம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
3 (6) (v) (ஊ)	விசேட இடர்களை அடையாளம் காணத் தவறும் பொறுப்பு மிக்க அதிகாரிகளுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை குழு மேற்கொள்ளும் என்பதுடன் குழுவினால் பரிந்துரைக்கப்படும் சரிப்படுத்தல் நடவடிக்கைகளையும்/அல்லது வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் நெறிப்படுத்தப்பட்டவாறு உடனடி சரிப்படுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவ்வாறான தேவைப்பாடு இவ்வாண்டில் ஏற்படவில்லை
3 (6) (v) (எ)	பணிப்பாளர் சபையின் நோக்கங்களையும் ஏற்றுக் கொண்டவைகளையும் மற்றும்/அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளையும் சபையிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு கூட்டமும் நடைபெற்ற ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையைக் குழு சமர்ப்பித்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (6) (v) (ஏ)	குழுவானது சட்டங்கள், ஒழுங்கமைப்பு விதிகள், ஒழுங்கமைப்பு வழிகாட்டல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வர்த்தகத் தொழிற்பாடுகளின் அனைத்து விடயங்கள் மீதுமான அங்கீகரிக்-கப்பட்ட கொள்கைகள் ஆகியன வங்கியின் இணங்குவிப்புக்கு ஏற்றவாறு உள்ளதை மதிப்பீடு செய்வதற்கு இணங்குவிப்புப் பிரிவொன்றை குழு தாபித்தல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அர்ப்பணிப்புள்ள இணங்குவிப்பு அதிகாரி இணங்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், காலத்துக்குக் காலம் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. இணங்குவிப்பு அலுவலர் (CO) ஒருவரை நியமிப்பதன் மூலம் இணங்குவிப்புத் தொழிற்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு காலத்துக்குக் காலம் இணங்குவிப்பு அலுவலர் அறிக்கை சமர்ப்பிப்பார்.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (7)	**தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல்கள்**	
3 (7) (i)	எவரேனும் ஒருவரிடமிருந்தும் வங்கியின் கொடுக்கல் வாங்கல்களில் உருவாகக் கூடிய எந்தவொரு ஈடுபாடுகளின் முரண்பாடுகளையும் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளல் வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது
3 (7) (ii)	தொடர்புடைய திறத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் வகையானது இவ் வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	இது தொடர்பான ததகவல் தொடர்புடைய திறத்தவர் வெளிப்படுத்தல்கள் பற்றிய அறிக்கையில் குறிப்பு 40 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
3 (7) (iii)	ஒரே வர்த்தகத்தில் வங்கியுடன் ஈடுபட்டுள்ள ஏனையவர்களை விட "அதிகமான நன்மையளிக்கும் வசதிகள்" அத்தகைய தொடர்புடையவர்களுக்குக் கிடைக்குமாயின், மேலேயுள்ள பணிப்புரை (3) (7) (i) இல் கூறப்பட்டுள்ளவாறு தொடர்புடையவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் வங்கி ஈடுபடாதிருப்பதை சபை உறுதி செய்யும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. ஆண்டுக்கான பிரகடனங்கள் அடையாளங் காணப்பட வேண்டிய நேரங்களில் பணிப்பாளர்களினால் அவை பெறப்பட்டன. அதே வியாபாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வங்கியின் ஏனைய பிரிவுகளுக்குப் பொருத்தமாயுள்ளவற்றை விட "மிகவும் சாதகமான செயற்பாட்டுடன்" எந்தக் கொடுக்கல் வாங்கலையும் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் முறைமையானது விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் காலத்துக்குக் காலம் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது. தொடர்புடைய திறத்தவர்களுடன் சாதாரண வியாபார நேரத்தில் மேற் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் (ஏதும் இருப்பின்) நிதிக் கூற்றுக்களுக் கான "தொடர்புடைய திறத்தவர்களின் வெளிப்படுத்தல்" குறிப்பு 40 இல் 345 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
3 (7) (iv)	சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்த்து, பணிப்பாளர்கள் சபையின் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பணிப்பாளர்கள் கூட்டமொன்றில் எத்தகைய உதவிக்கும் ஆதரவாக வாக்களித்தாலன்றி வங்கி அதன் பணிப்பாளர்களுக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு எவ்வித உதவிகளையும் வழங்காது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.
3 (7) (v) (அ)	எவரேனும் ஒருவருக்கு அல்லது ஒருவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது எந்தவொரு தொழில் நிறுவனத்திலும் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டைக் கொண்டுள்ள ஒருவர் வங்கியினால் எவ்வித உதவிகளும் வழங்கப்பட்டிருக்கும் போது அத்தகையவர் அதனைத் தொடர்ந்து வங்கியின் பணிப்பாளராக நியமனம் பெற்ற ஒரு வருடத்திற்குள் நாணயச் சபையிடமிருந்து அந்த நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள அவசியமான பிணையத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ள வேண்டும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.
3 (7) (vi)	வங்கி அதன் பணியாள் தொகுதியினருக்குப் பொருத்தமான அமைப்பு முறை அடிப்படையிலன்றி வேறெந்த உதவிகளையும் அல்லது "கூடுதலான சலுகைகளையோ" வழங்காது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.
3 (7) (vii)	மேலேயுள்ள 3 (7) (எ) மற்றும் 3 (7) (vi) இன் பணிப்புரைகளின் கீழ் ஒரு வங்கியினால் எந்த வித உதவிகளும் வழங்கப்படமாட்டாது. அல்லது அத்தகைய உதவிகளின் எந்த ஒரு பகுதியும் அதன் மீதான எந்தவொரு வட்டியும் நாணயச் சபையின் முன் அனுமதியின்றி பணமாக ஏற்றுக் கொள்ளப்படவும் கூடாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமின்றிச் செய்யப்படும் தள்ளுபடி செல்லுபடியற்றதாகவும் பயனற்றதாகவும் இருக்கும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (8)	**வெளிப்படுத்தல்கள்**	
3 (8) (i)	சபை பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.	
3 (8) (i) (அ)	மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு அதிகாரிகளினால் பிரயோகப்படுத்தப்படும் கணக்கீட்டு நியமங்களின் மாதிரிகளுக்கு அமைவாக கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் என்பவை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் அத்துடன்,	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (8) (i) (ஆ)	அத்தகைய கூற்றுக்கள் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் சுருக்கமாகத் தயாரிக்கப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
3 (8) (ii)	பின்வரும் மிகக் குறைந்த வெளிப்படுத்தல்கள் ஆண்டறிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை சபை உறுதிப்படுத்த வேண்டும்.	
3 (8) (ii) (அ)	விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட ஒரு கூற்று.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றி ஆண்டறிக்கையின் 241 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.
3 (8) (ii) (ஆ)	நிதி அறிக்கைகளின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான நம்பிக்கையை வழங்குவதாக அறிக்கையிடல்களின் அமைப்பு முறை வடிவமைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதுடன், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை குறித்து சபையின் அறிக்கையொன்றும் வெளியகத் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும் தயாரிக்கப்படும்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றினை 250 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
3 (8) (ii) (இ)	2008 டிசம்பர், 31 க்கு பின் தயாரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட எந்த கூற்றினையும் பொறுத்தவரையில், மேலேயுள்ள 3 (8) (ii) (ஆ) வில் தரப்பட்டுள்ள பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் பயனாற்றல் மீதான வெளியகக் கணக்காய்வாளரின் அறிக்கை வழங்கப்படல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. உள்ளகக் கட்டுப்பாடு மீதான சுயாதீனமான உறுதியளித்தல் அறிக்கையை 252 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
3 (8) (ii) (ஈ)	பணிப்பாளர்களின் விபரங்கள்:	இணங்குவிப்பாகச் செயற்பட்டது.
	(i) பெயர்கள், தகுதி மற்றும் நேர்மை உள்ளடங்கலாக	பணிப்பாளர்களின் விபரங்கள் 156 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	(ii) வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்	நிதிக் கூற்றுகளுக்கான 40(ஈ). குறிப்பை 348 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
	(iii) வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணங்கள்/ ஊதியங்கள்.	நிதிக் கூற்றுக்களுக்கான 40 (ஈ). குறிப்பை 348 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
3 (8) (ii) (உ)	3 (7) (iii) இல் வரையறுக்கப்பட்டவாறு மொத்த நிகர உதவிகள் தொடர்புடையவர்களின் ஒவ்வாரு வகைப்படுத்தலுக்கும் வழங்கப்பட்டன. தொடர்புடையவர்களின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் வழங்கப்பட்ட நிகர உதவிகள் வங்கியின் ஒழுங்கமைப்பு மூலதனத்தின் சதவீதமாகவும் வெளியிடப்பட வேண்டும	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வங்கியின் ஒழுங்கமைப்பு மூலதனத்தின் சதவீதமாக வழங்கப்பட்ட நிகர உதவிகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 40 (உ) இல் 348 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2017 இற்கான இணங்குவிப்பு மட்டம்
3 (8) (ii) (ஊ)	வங்கி அதன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்குக் கொடுத்த ஊதியங்களின் மொத்தப் பெறுமதியும் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான அதன் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதியும் ஊதியங்கள் போன்ற விரிவான வகைப்படுத்தல்களினுள் அடக்கப்பட்டுள்ளது.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. விபரங்கள், நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 40(ஈ) இல் கொடுக்கப்பட்டுள்ளன.
3 (8) (ii) (எ)	நிறுவன ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணங்குவிப்பு மீதான வெளியகக் கணக்காய்வாளரின் அறிக்கையை சபை பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துதல்.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. வெளியகக் கணக்காய்வாளரின் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 255 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுமுள்ளது.
3 (8) (ii) (ஏ)	விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்கமைப்புகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றுடனான இணங்குவிப்பு பற்றிய விபரங்கள் ஏற்படுத்தும் அறிக்கையொன்றாகக் காணப்படுவதுடன் ஏதேனும் இணங்குவிப்பற்ற விடயங்களைச் சரி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்றினை 248 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
3 (8) (ii) (ஐ)	ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வையுடன் சம்பந்தப்பட்ட கூற்று ஒன்றில் வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை குறித்த குறைபாடுகள் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற் பார்வைப் பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டிருப்பின், இத்தகைய விடயங்களைக் கவனிப்பதற்கு வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் சேர்த்து இதனை பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என நாணயச் சபை பணிப்புரை விடுக்கும்.	ஏற்புடையதல்ல பொது மக்களுக்கு எவ்வித வெளிப்படுத்தலும் இவ் வாண்டில் செய்ய வேண்டுமென நாணயச் சபை பணிப்புரை விடுக்கவில்லை.
3 (9)	**மாற்றப்படுவதற்கானதும் மற்றும் ஏனைய பொது ஏற்பாடுகளும்.**	இணங்குவிப்பாகச் செயற்பட்டது. பிரயோகிக்கத்தக்க மாற்றப்படுவதற்கான ஏற்பாடுகளுடன் வங்கி இணங்குவிப்பாகச் செயற்பட்டுள்ளது.

2007இன் 12 ஆம் இலக்க நிறுவன ஆளுகைப் பணிப்புரைகளின் இணங்குவிப்புத் தேவைப்பாடு.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிறுவன ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் இணங்குவிப்புத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக, பிரயோகிக்கக் கூடியதென இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளுடன் தொடர்புடைய 4400 சேவைகள் மீது இலங்கைத் தரப்படுத்தல் நியமங்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமையதிபதி நடைமுறைகளைச் செயற்படுத்தியுள்ளார். அவரது 2018 மே 2 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கையில் தரப்பட்ட அவரின் கண்டு பிடிப்புகள் மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களுடன் வேறுபட்டதாக இல்லை என்பதுடன் சபையினால் மேலே அறிக்கையிடப்பட்டுள்ளவற்றுடன் குறிப்பிடத்தக்க முரண்பாடுகளைக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்படவும் இல்லை.

எம்.ஏ.பி. முகாந்திரம்
சபைச் செயலாளர்

அஸ்வின் டி சில்வா
தலைவர்

2 மே 2018
கொழும்பு

பரந்தளவிலான கிளை வலையமைப்பு மற்றும் எண்ணின் வரிவடிவ அமைப்புக்களினூடாக வழங்கப்படும் எமது உயர் தரம் வாய்ந்த சேவையானது 19.9 மில்லியனுக்கும் மேற்பட்ட எமது கணக்குத்தளத்திற்கு, வங்கியுடன் இலகுவான, இடைவெளியற்ற நேரடியான ஈடுபாட்டை வழங்குவதாகக் காணப்படுகிறது.

மத்திய மாகாணம் →

1. அளவத்துகொட
2. பண்டாரவலை
3. தம்புள்ள
4. தெல்தோட்ட
5. திகன
6. கலகெதர
7. கலேவல
8. கம்பளை
9. கெலிஓயா
10. கினிகத்ஹேன
11. ஹாலிஎல
12. ஹட்டன்
13. கண்டி
14. கண்டி 2வது கிளை
15. கண்டி சிடி சென்டர்
16. கடுகஸ்தோட்ட
17. மஹியங்கனை
18. முல்கம்பொல
19. நாவுல
20. நாவலப்பிட்டி
21. பசறை
22. பேராதெனிய
23. பிலிமதலாவ
24. பூண்டுலோயா
25. புசல்லாவ
26. இராகலை
27. றிகிலகஸ்கட
28. தலவாக்கெல்ல
29. வத்தேகம
30. வெளிமட

கிழக்கு பிரதேசம் →

31. அக்கரைப்பற்று
32. அம்பாறை
33. ஆரையம்பதி
34. படல்கும்புர
35. பிபில
36. புத்தள
37. செங்கலடி
38. ஹிங்குராக்கொட
39. கல்முனை
40. களுவாஞ்சிக்குடி
41. கந்தளாய்
42. மெதிரிகிரிய
43. பளுகாமம்
44. பெரியகல்லாறு
45. பொத்துவில்
46. சம்மாந்துறை
47. சியம்பலாண்டுவ
48. தம்பிலுவில்
49. உகன
50. வாழைச்சேனை
51. வெள்ளவாய

வடக்கு பிரதேசம் →

52. அச்சுவேலி
53. சங்கானை
54. சாவகச்சேரி
55. சுன்னாகம்
56. ஹொரவபத்தான
57. யாழ்ப்பாணம்
58. கஹட்டகஸ்திகிலிய
59. காரைநகர்
60. ஊர்காவற்துறை
61. கெப்பிட்டிகொல்லாவ
62. கிளிநொச்சி
63. கொடிகாமம்
64. கோப்பாய்
65. மல்லாவி
66. மானிப்பாய்
67. மதவாச்சிய
68. முல்லைத்தீவு
69. நெல்லியடி
70. பருத்தித்துறை
71. திருநெல்வேலி
72. வங்காலை

வடமேற்கு பிரதேசம் →

73. அளவ்வ
74. ஆணமடுவ
75. அநுராதபுரம்
76. பிங்கிரிய
77. சிலாபம்
78. தங்கொட்டுவ
79. எப்பாவல
80. கலென்பிந்துனுவெவ
81. கல்கமுவ
82. கல்நாவ
83. கிரியுல்ல
84. ஹெட்டிபொல
85. இப்பாகமுவ
86. கெகிராவ
87. குளியாப்பிட்டி
88. குருநாகல்
89. மாதம்பை
90. மாகோ
91. மாறவில
92. மாவத்தகம
93. மெல்சிறிபுர
94. நாரம்மல
95. நிக்கவெரட்டிய
96. நொச்சியாகம
97. பொல்கஹவெல
98. புத்தளம்
99. ரிதிகம
100. தம்புத்தேகம
101. வாரியப்பொல
102. வென்னப்புவ

சப்பிரகமுவ பிரதேசம் →

103. அரநாயக்க
104. அவிசாவளை
105. பதுரலிய
106. பலாங்கொடை
107. புலத்கொஹுபிட்டிய
108. புளத்சிங்கள
109. தெரணியாகலை
110. எம்பிலிபிட்டிய
111. கொடகவெல
112. ஹங்வெல்ல
113. ஹொரண
114. இங்கிரிய
115. கஹவத்த
116. கலவான
117. கேகாலை
118. கிரியெல்ல
119. குருவிற்ற
120. மாவனல்ல
121. நிவிதிக்கலை
122. பெல்மடுல்ல
123. றம்புக்கண
124. இரத்தினபுரி
125. ருவன்வெல்ல
126. வறக்காபொல
127. எட்டியந்தோட்டை

தென் பிரதேசம் →

128. அகுரஸ்ஸ
129. அம்பலாங்கொடை
130. அங்குணகொலபெலஸ்ஸ
131. பத்தேகம
132. பெலியத்த
133. தெனியாய
134. தெவிநுவர
135. திக்வல்ல
136. எல்பிட்டிய
137. காலி
138. ஹபராதுவ
139. ஹக்மண
140. அம்பாந்தோட்டை
141. ஹிக்கடுவ
142. இமதுவ
143. கம்புறுபிட்டிய
144. கராப்பிட்டிய
145. கெகனதுற
146. மாத்தறை
147. மித்தெனிய
148. மொறவக்க
149. நெலுவ
150. பிட்டிகல
151. சூரியவவ
152. தங்காலை
153. திஸ்ஸமஹராம
154. உடுகம
155. ஊறகஸ்மங்கந்திய
156. ஊருபொக்க
157. வலஸ்முள்ள
158. வீரக்கெட்டிய
159. வெலிகம

மேற்கு 1 பிரதேசம் →

160. பொரல்ல
161. தெல்கொட
162. திவுலப்பிட்டிய
163. கம்பஹா
164. கணேமுள்ள
165. தலைமையகக் கிளை
166. ஜா எல
167. கடவத்த
168. கடுவல
169. கந்தானை
170. கட்டுநாயக்க
171. களனி
172. கிரிபத்கொட
173. கிரிந்திவல
174. கொச்சிக்கடை
175. கொட்டாஞ்சேனை
176. மஹபாகே
177. மாளிகாவத்தை
178. மினுவாங்கொட
179. மீரிகம
180. முல்லேரியா புது நகரம்
181. முகத்துவாரம்
182. நாரஹேன்பிட்ட
183. நீர்கொழும்பு
184. நிட்டம்புவ
185. பேலியகொட
186. புறக்கோட்டை
187. பூகொடை
188. றத்தொழுகம
189. இறாகம
190. வெயாங்கொடை
191. வத்தளை
192. வெல்லம்பிட்டிய
193. யக்கல

மேற்கு 2 பிரதேசம் →

194. அளுத்கம
195. அதுருகிரிய
196. பம்பலப்பிட்டிய
197. பண்டாரகம
198. பத்தரமுல்ல
199. பேருவல
200. பொறலஸ்கமுவ
201. நகரக் கிளை
202. சிற்றி பிளஸ்
203. தெஹிவளை
204. தெல்கந்த
205. ஹோமாகம
206. கஹதுடுவ
207. களுபோவில
208. களுத்தறை
209. கட்டுபெத்த
210. கொள்ளுப்பிட்டி 2வது
211. கொட்டாவ
212. மஹரகம
213. மாலபே
214. மத்துகம
215. மீகொட
216. மொறட்டுமுல்ல
217. மொறட்டுவ
218. கல்கிசை
219. நாவல
220. நுகேகொடை
221. பாணந்துறை
222. பிலியந்தலை
223. பிலியந்தலை 2வது
224. பிற்றகோட்டை
225. புவக்கரம்ப
226. இராஜகிரிய
227. தலவத்துகொட
228. வாத்துவ
229. வெள்ளவத்தை
230. உ.வ.மை.

அஞ்சல் நிருவாகம் →

231. அம்பலாந்தோட்டை
232. அம்பாறை 2 வது
233. அநுராதபுரம் 2வது
234. பதுளை
235. மட்டக்களப்பு
236. எஹெலியகொட
237. காலி 2வது
238. கம்பஹா 2வது
239. தலைமையக அஞ்சல் கிளை
240. யாழ்ப்பாணம் 2வது
241. கதுருவெல
242. களுத்தறை 2வது
243. கண்டி 3வது
244. கேகாலை 2வது
245. குருநாகல் 2வது
246. மன்னார்
247. மாத்தளை
248. மாத்தறை 2வது
249. மொனராகலை
250. நாத்தாண்டிய
251. நுவரெலிய
252. திருகோணமலை
253. வவுனியா

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை



குழுவின் அமைப்பு

சபைக் கணக்காய்வுக் குழு (சககு) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களின் விபரங்கள் இவ்வாண்டறிக்கையில் 156 ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன - தலைவர்
திரு. ஏ.கே. செனிவிரத்ன - உறுப்பினர்
திரு. அனில் ராஜகருணா - உறுப்பினர்

பணிப்பாளர்கள் சபையின் செயலாளர், சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகச் செயற்படுகிறார்.

கூட்டங்கள்

கூட்டத்திற்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு (2) உறுப்பினர்களாகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. டி.எல்.பி.ஆர் அபேரத்ன	10	10
திரு. ஏ.கே. செனிவிரத்ன	10	8
திரு. அனில் ராஜகருணா	10	10

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான, நிறுவன ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) சிறந்த ஆளுகைக்கான அரச தொழில் முயற்சிகளின், ஏற்பாடுகளுக்கமைய வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு (ச.க.கு.) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட பணிப்புரையின் பிரிவு 3 (6) (ii) இற்கு அமைய பொதுத் தொழில் முயற்சிகளின் சிறந்த ஆளுகைக்கான ஏற்பாடு மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை" என்பவையும் அதன் தொடர்ச்சியான திருத்தங்களாகும்.

சபையின் செயலாளர், 2013 யூலை 11 ஆம் திகதியிடப்பட்ட சபைத் தீர்மானத்திற்கு அமைவாக சபை கணக்காய்வுக் குழுவின் (ச.க.கு) செயலாளராகச் செயற்படுகிறார். 7 பணிப்பாளர்களைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையினது, திருத்தப்பட்டவாறான 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் உப பிரிவான பிரிவு 8 (i) இன் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. சபைக் கணக்காய்வுக் குழு உட்பட அனைத்து உப குழுக்களுக்கான உறுப்பினர்களும், மேலே கூறப்பட்ட ஏழு (7) உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். உறுப்பினர்கள், சபைக் கணக்காய்வுக் குழுவில் பணி புரிவதற்கு அவசியமான தராதரங்கள், தேர்ச்சி மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார்கள்.

அரச கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதி நிதியாக சபைக் கணக்காய்வுக் குழுவின் எட்டுக் கூட்டங்களுக்கும் அவதானிப்பாளராக அழைப்பின் பேரில் வருகை தந்துள்ளனர். பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) மற்றும் பதில் பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு) ஆகியோர் அழைப்பின் பேரில் சபை கணக்காய்வுக் குழுவின் சுதந்திரத்தை அனுகூலமான அளவில் உறுதிப்படுத்தும் வகையில் கலந்து கொண்டனர்.

சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டதுடன் குழுவின் குறிப்புக்களின் நியதியைத் தெளிவாக வரையறுக்கின்றது. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலும், பின்வரும் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு உதவுகிறது.

அ. வங்கியின் நிதிக் கூற்றுக்கள் நேர்மையானதாயிருத்தல்
ஆ. வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் செயற்றிறனுடையவையாயிருத்தல்
இ. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டுச் செயலாற்றம் மற்றும்
ஈ. வங்கியின் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாட்டுச் செயலாற்றம்

குழுவின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் குறித்தும் பட்டயம் குறிப்பிடுகின்றது. பட்டயச் சரிபார்த்தல் பட்டியலானது குழுவின் தொழிற்பாடுகளைச் செயற்படுத்தல் மற்றும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பட்டய குழுஇணக்கமாகச் செயற்படுவதை மதிப்பீடு செய்வதற்கு உதவுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதி அறிக்கையிடல்

வங்கியின் நிதிக் கூற்றின் நேர்மைத் தன்மை, வெளிப்படுத்துகைக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும், வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பான குறிப்பிடத்தக்க நிதி அறிக்கையிடல் தீர்வுகள் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக குழு, வங்கியின் நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்கிறது. குழுவானது, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலான மாற்றங்கள், கணக்காய்விலிருந்து ஏற்படும் குறிப்பிடத்தக்க சீராக்கங்கள், சிறந்த செயலாற்ற எடுகோள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கம் போன்ற முக்கியமான விடயங்கள் மீது தனது கவனத்தைச் செலுத்தும்.

“2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றின் மீளாய்வு பற்றிய அறிக்கை” குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு கணக்காய்வுப் பிரிவின் காண்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதுடன் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றின் வரைவும் மீளாய்வு செய்யப்பட்டது.

“SLFRS 9” இன் நடைமுறைப்படுத்தலிலான முன்னேற்றம்

2018 ஜனவரி 01 இல் இருந்து நடைமுறைக்கு வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி “நிதியியல் கருவி” கள் மீதான “SLFRS 9” இன் நடைமுறைப்படுத்தலிலான முன்னேற்றத்தை குழு கண்காணிக்கும்.

இடர் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளை இனங்காணுதல்

இடரினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் வியாபாரச் செயற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் ஆகியவற்றிலான தாக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கு வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் வங்கியின் துணைநிறுவனங்களே பொறுப்பாகும்.

சபைக் கணக்காய்வுக் குழுவானது, முழுமையான கட்டுப்பாட்டு சூழலின் போதுமையை உள்ளடக்கி வங்கியின் இடர் முகாமைத்துவச் செயன்முறையை மீளாய்வு செய்வதுடன் மதிப்பீடும் செய்கின்றது. அத்துடன் குறிப்பிடத்தக்க இடர் ஏற்படக்கூடிய விடயங்களில் கட்டுப்பாட்டையும் மேற் கொள்கிறது. மேலும், கணக்கீட்டு மற்றும் நிதி அறிக்கையிடல் தவறுகள், சொத்துக்களின் தவறான ஒதுக்கீடு, சட்ட மீறல் மற்றும் நடத்தையின் நிறுவனக் கோவையிலான இணக்கப்பாடின்மை ஆகியவற்றுக்கான வங்கி முறைகளை குழுவானது மீளாய்வு செய்வதுடன் மதிப்பீடும் செய்கிறது. இவ்விடயத்தை பொறுத்தவரையில் வெளியக மற்றும் உள்ளக் கணக்காய்வாளர்களின் இது தொடர்பிலான காண்புகள் மற்றும் விதந்துரைத்தல்களை முகாமையின் பதில்களுடன் மீளாய்வு செய்கிறது.

வங்கி இடர் அடிப்படையிலான கணக்காய்வு அணுகுமுறையை கைக் கொண்டதுடன் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டலின் பிரிவு 03 (08) (ii) (ஆ) இற்கமைய நிதி அறிக்கையிடல் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறனை குழு மதிப்பீடு செய்தது. அத்துடன், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA இலங்கை) வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே இவை தயாரிக்கப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வு மற்றும் மேற்பார்வை

சபைக் கணக்காய்வுக் குழு, தன்னால் கணக்காய்வு செய்யப்படும் உள்ளகக்கணக்காய்வுத் தொழிற்பாடு சுயாதீனத்துடன் இருப்பதை உறுதி செய்கிறது. அத்துடன், உள்ளகக் கணக்காய்வு வரவு செலவு, மூலவளத் திட்டம், நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வு பதில் பிரதி பொது முகாமையாளருடனான உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டில் நிறுவன ரீதியிலான அமைப்பு ஆகியவற்றை மீளாய்வு செய்கிறது. அத்துடன் பிரிவானது தனது பணியை மேற்கொள்வதற்கு தேவையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது எனவும் திருப்திப்படுகிறது.

ஆண்டுக்கான கணக்காய்வுத் திட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கிளைகள், பிரிவுகள் மற்றும் ஏனைய கூறுகளின் கணக்காய்வினை மேற்கொள்கின்றது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய காலம், மதிப்பீடு செய்யப்பட்ட இடரின் மட்டத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. கணக்காய்வுத் திட்டம், நடைமுறைப்படுத்தலுக்காக சபைக் கணக்காய்வுக் குழுவினால் (சககு) ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம், 2017 இன் இறுதியில் அடையப்பட்டது.

கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணக்கம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் செயற்றிறன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது கணக்காய்வு சரிபார்த்தலினை மேற்கொள்வதுடன், ஏதாவது இணங்காமை தொடர்பில் அதன் காண்புகளை அறிக்கையிடுவதுடன் முன்னேற்றத்துக்கான விதந்துரைப்புகளையும் வழங்குகின்றது. தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான சுதந்திரமானதும் நோக்க அடிப்படையிலான அறிக்கையை வழங்குவதற்காக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு முறையிலான கணக்காய்வுப் பரிசோதனைகளின் மற்றும் தகவல் முறைக் கணக்காய்வு ஆகியவற்றின் காண்புகளை சபைக் கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்தது. மேலும், 2016 நவெம்பரிலிருந்து 2017 நவெம்பர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக புலனாய்வுகள் தொடர்பான அறிக்கைகளை மீளாய்வு செய்து, வங்கியின் மோசடியான மீளப் பெறுகைகள் தொடர்பில் அறிவித்ததுடன், இவ்வாண்டில் பதில் பிரதி பொது முகாமையாளர் (கணக்காய்வு) மற்றும் கணக்காய்வுப் பிரிவின் சிரேஷ்ட அலுவலக உறுப்பினர்களின் செயலாற்றத்தையும் மீளாய்வு செய்தது.

வங்கியின் உள்ளகக் கணக்காய்வுக்கையேடு, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் செயற்பாடுகளைத் தொகுத்து வழங்குவதுடன் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினைப் பொதுவாக ஆட்சி செய்யும் கொள்கைகள், நியமங்கள் மற்றும் நடைமுறைகளை விபரிக்கின்றது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு, அதன் கடமைகளை செயற்றிறனுடனும், சுயாதீனத்துடனும் வழங்குவதற்கு, உள்ளகக் கணக்காய்வுப் பட்டயம் பயன்படுகிறது. இப்பட்டயமானது நோக்கெல்லை, தொழிற்பாடுகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள், அறிவித்தல் நடைமுறை மற்றும் சுயாதீனம் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் நோக்கம் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

வெளியகக் கணக்காய்வு

சட்டநிலவரப்படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராகும். வெளியகக் கணக்காய்வாளருடனான கூட்டங்கள் ஒப்பந்தப்படி, ஆகக் குறைந்தது இரு முறையாவது நடாத்தப்பட்டன. இவை, குழுவை, சுதந்திரமாகச் சந்திக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொண்டதுடன், குறிப்பிடத்தக்க எந்த விடயங்களையும் கலந்துரையாடவும், தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் இயலக் கூடியதாயிருந்தது. 2017 ஆம் ஆண்டில் சபைக் கணக்காய்வுக் குழுவின் பத்துக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்திலிருந்து பிரதிநிதியொருவர் எட்டுக் கூட்டங்களுக்கு வருகை தந்தார்.

கணக்காய்வுச் செய்முறையின் செயற்றிறன் சபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் அரச கணக்காய்வு அத்தியட்சகருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. கணக்காய்வுக்காக, வெளியகக் கணக்காய்வாளரினால் தேவைப்படுத்தப்பட்ட அனைத்து தகவல் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படுவதை குழு உறுதி செய்யும்.

முறைமை மற்றும் சிறந்த ஆளுகை

தேசிய சேமிப்பு வங்கியின் மோசடி இடர் முகாமைத்துவம் மற்றும் எச்சரிக்கை வழங்கும் கொள்கை வங்கியின் நேர்மைத் தன்மையை பாதுகாக்கும் முக்கியமான மூலமாக விளங்குகிறது. இது வங்கியின் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதுடன் அதன் நடவடிக்கைகளையும் நன்மதிப்பையும் சேதப்படுத்தக் கூடிய எதிர் நடவடிக்கைகளுக்கான முறைமைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை நோக்கக் கொண்டு மோசடி மற்றும் ஏனைய பிரச்சினைகள் நிறைந்த நிலைமைகளை முன்பே தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதலுமாகும்.

சபைக் கணக்காய்வுக் குழு (சககு) அனைத்து மோசடி விடயங்களையும் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யும். காலாண்டு மீளாய்வுக் காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு புள்ளி விபரத் தகவல்கள் ஒவ்வொரு மோசடி பற்றியும் விபரங்கள், மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கை ஆகியவற்றை ஆராய்வதுடன் தேவைப்படும் இடங்களில் தண்டனைக்குரிய மற்றும் மோசடிகளை தடுக்கும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மற்றும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. சபை கணக்காய்வுக் குழு எந்த நேரத்திலும் ஏதாவது ஆரம்ப புலனாய்வு மற்றும் காண்புகள் தொடர்பில் சுருக்கமான விபரங்களை தேவைப்படுத்தக் கூடிய உரிமையைக் கொண்டுள்ளது.

இணங்குவிப்பு


குழுவானது சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனான இணங்குவிப்பு மற்றும் முகாமைத்துவத்தின் புலனாய்வு பற்றிய விளைவுகள் மற்றும் இணங்காமை தொடர்பான எந்த சந்தர்ப்பங்களினதும் (ஒழுக்காற்று நடவடிக்கையை உள்ளடக்கி) பின்தொடர் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான முறைமையின் திறனாற்றலை மீளாய்வு செய்தல்.

குழு மதிப்பீடு

2017 ஆம் ஆண்டுக்கான, சுய மதிப்பீட்டுடனான மதிப்பீட்டுச் செய்முறையை குழு நிறைவு செய்ததுடன் அதன் செயலாற்றம் செயற்றிறன் வாய்ந்ததாகக் காணப்பட்டதென முடிவு செய்யப்பட்டது.

அறிக்கையிடல்

குழு தனது நடவடிக்கைகள், விடயங்கள் மற்றும் தொடர்பான விதந்துரைப்புக்களை கூட்டங்களின் குறிப்புரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகிறது. சபை கணக்காய்வுக் குழுவானது உள்ளக் கணக்காய்வு வெளியகக் கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கிடையில் சிறந்த தொடர்பாடல் வழிமுறையை வழங்குகிறது. குழுவின் குறிப்புக்களது நியதியானது அனைத்து பொருண்மையான விடயங்களுக்குள்ளும் இணக்கமாகச் செயற்படுகின்றதென்ற நோக்கினை குழு கொண்டுள்ளது.



டி.எல்.பீ.ஆர். அபேரத்ன

தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு

2018 மார்ச் 12
கொழும்பு

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை



குழுவின் அமைப்பு

குழுவானது (சமவஊகு) பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்களது விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 156 ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. அஸ்வின் டி சில்வா - தலைவர்
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்தன - உறுப்பினர்
திரு. அஜித் பத்திரன - உறுப்பினர்

மனிதவளம் மற்றும் ஊதியங்கள் பற்றிய விடயங்கள், கவனத்திலெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் பொதுமுகாமையாளர்/ பி.நி.அ. கூட்டங்களில் கலந்து கொள்வார் பணிப்பாளர் சபையின் செயலாளர் ச.ம.வ.ஊ.கு இன் செயலாளராக செயற்படுவார்.

கூட்டங்கள்

குழுக் கூட்டங்கள், தேவை அடிப்படையில் காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தப்படுவதுடன், அதனடிப்படையிலேயே கூட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. கூட்டங்களுக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு (2) உறுப்பினர்களாகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு:

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. அஸ்வின் டி சில்வா	10	10
திரு. டி.எல்.பி.ஆர் அபேரத்ன	10	10
திரு. அஜித் பத்திரன	10	8

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவானது திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 ஒ (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் (இமவ) நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் பணிப்புரையின் பிரிவு 03 (06) (i) மற்றும் (iii) இன் ஏற்பாடுகளின் நியதிகளின் படி உருவாக்கப்பட்டது. இக்குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது.

கூட்டு உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையை (சம்பளங்கள் சம்பளப்படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல் குழுவின் பொறுப்பாகும்.

குழுவானது, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோருக்கான முக்கியமான செயலாற்றக் குறிகாட்டிகளை ஏற்படுத்துகிறது. மேலும், காலத்துக்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றத்தை மதிப்பீடு செய்வதுடன் செயலாற்ற அடிப்படையிலான ஊக்குவிப்புக்களான ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஆகியவற்றை திருத்தியமைக்கும் அடிப்படையையும் தீர்மானிக்கிறது.

சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்களுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் காணப்பட்ட போதிலும் குழுவானது அனைத்து முக்கியமான மனித வளக் கொள்கைகள், முன்னெடுப்புக்கள், சம்பள அமைப்புக்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்கிறது. இச்செயல்முறையில் தேவைப்படும் தகவல் மற்றும் பரிந்துரைகள் ஆகியன பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2017 ஆம் ஆண்டில் குழுவினால் கவனத்தில் எடுக்கப்பட்டதும், மேற்கொள்ளப்பட்டதுமான முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- மனித வளக் கொள்கை மற்றும் வங்கியின் ஒழுக்கக் கோவை பற்றிய மீளாய்வு.
- முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் (KMPs) 2016 ஆம் ஆண்டுக்கான (பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்து ஆலோசகர்கள், இணங்குவிப்பு அலுவலர் மற்றும் அனைத்து உதவிப் பொது முகாமையாளர்கள்) முக்கியமான செயலாற்றக் குறிகாட்டிகளின் (KPI) அடிப்படையிலான செயற்றிட்டத்தினை மதிப்பிடுதல்.
- ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு தொடர்பில் வங்கியின் முறைமையை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் அலுவலர்களைத் தரம் உயர்த்துதல் ஆகியன மீளாய்வு செய்யப்பட்டன.
- வங்கியின் அலுவலர் நலத் திட்டத்திற்கு மீளவும் சென்று பெறுமதி அதிகரிப்பினை வழங்கியமை.
- மனித வளம் தொடர்பான விடயங்கள் பற்றி அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறையீடுகளைக் கவனத்தில் எடுத்தல்.

குழுக் கூட்டங்களின் நடைமுறைகள், பணிப்பாளர் சபைக்கு கிரமமான முறையில் அறிவிக்கப்பட்டன.

குழுவின் மதிப்பீடு

2017 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டுடனான மதிப்பீட்டுச் செயன்முறையை குழு நிறைவு செய்ததுடன் அதன் செயலாற்றம் செயற்றிறன் வாய்ந்ததாகக் காணப்பட்டதென்ற முடிவுக்கு வந்துள்ளது.



அஸ்வின் டி சில்வா
தலைவர் - மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

2018 மார்ச் 12
கொழும்பு

சபை நியமனக் குழுவின் அறிக்கை



குழுவின் அமைப்பு

சபை நியமனக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன் அவர்களது விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 156 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன - தலைவர்
(2017.02.03 இலிருந்து நியமிக்கப்பட்டதுடன் 2017.02.02 வரை உறுப்பினராக இருந்தார்.)

திரு. அஸ்வின் டி சில்வா - தலைவர்
(2017.02.03 இல் இருந்து பதவி விலகினார்)

திரு. அஜித் பத்திரன - உறுப்பினர்

திரு. ஏ.கே. செனிவிரத்ன - உறுப்பினர்
(2017.02.03 இலிருந்து நியமனம் பெற்றார்)

பணிப்பாளர் சபையின் செயலாளர் சபை நியமனக் குழுவின் செயலாளராக பணிபுரிகிறார்.

கூட்டங்கள்

கூட்டத்துக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை இரண்டு (2) உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன	1	1
திரு. அஜித் பத்திரன	1	1
திரு. ஏ.கே. செனிவிரத்ன	1	1

முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவில் சபையின் கவனக்குறைவு மற்றும் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்காக திருத்தப்பட்டவாறான 1988 இன் வங்கித் தொழில் சட்டத்தின் 30 ஆம் இலக்கப் பிரிவு 76 (ஒ) (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2017 இனது 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை நியமனக்குழுவை பணிப்பாளர் சபை நிறுவியது.

குழுவின் பங்கு மற்றும் பொறுப்புக்கள்

சபை நியமனக் குழு, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/நியமிப்பதற்கான செயன்முறையை நடைமுறைப்படுத்தல், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பதவிக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்காக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தகுதிக்கான தேவைப்படுத்தப்படும் தராதரங்கள், அனுபவம் மற்றும் முக்கிய விடயங்கள் போன்ற பிரமாணங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

மேலும் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளவாறும், பணிப்புரை 3 (3) இல் கொடுக்கப்பட்ட அளவுகளிலும் குறித்துரைக்கப்பட்ட பதவிகளை பெறுவதற்கு தகுதியான மற்றும் சரியானவர்கள் என பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை குழு உறுதிப்படுத்தும். ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குழு காலத்துக்குக் காலம் மேலதிகமான/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளையும், ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்து வரும் ஒழுங்குகளையும் கவனத்தில் எடுத்து பரிந்துரைகளை மேற்கொள்ளும்.


2017 ஆம் ஆண்டின் போதான நடவடிக்கைகள்

இவ்வாண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு கொண்டு நடாத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- 2017 இல் வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்ட பதவியணிக்கான ஒப்புதல் மற்றும் மீளாய்வு.
- வங்கிக்கான அடுத்துவரும் திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- வங்கித் தொழில் மற்றும் வங்கியல்லா பிரிவு மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான (KMPs) விசேட தரங்களின் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சைகளும் உதவிப் பொது முகாமையாளர்கள் (விசேட) பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை ஆரம்பித்தலும்.

குழு மதிப்பீடு

2017 ஆம் ஆண்டுக்கான சுய மதிப்பீட்டுடனான மதிப்பீட்டுச் செய்முறையை குழு நிறைவு செய்ததுடன் அதன் செயலாற்றம் செயற்றிறன் வாய்ந்ததெனவும் முடிவு செய்தது.



டி.எல்.பி.ஆர். அபேரத்ன
தலைவர் - சபை நியமனக் குழு

2018 மார்ச் 12
கொழும்பு

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு



குழுவின் அமைப்பு

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இடர் முகாமைத்துவத் தலைவர் ஆகியோரை முகாமைத்துவத்தின் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

பின்வரும் பணிப்பாளர்கள் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களாக இயங்குவதுடன் அவர்களின் விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 156 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. ஏ.கே. செனிவிரத்ன – தலைவர்
திரு. சுரங்க நாவுலகே – உறுப்பினர்
திரு. சந்திம ஹேமசந்திர – உறுப்பினர்
(14.08.2017 இருந்து பதவி விலகினார்)

திரு. அனில் ராஜகருணா – உறுப்பினர்
(14.08.2017 இருந்து நியமிக்கப்பட்டார்)

பணிப்பாளர் சபையின் செயலாளர் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுகிறார்.

கூட்டங்கள்

குழுவின் கூட்டங்கள் தேவையடிப்படையில் காலாண்டுக்கொருமுறை நடாத்தப்படுவதுடன் அதனடிப்படையிலேயே கூட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. கூட்டத்துக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு (2) உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. ஏ.கே. செனிவிரத்ன	5	5
திரு. சந்திம ஹேமசந்திர	3	1
திரு. சுரங்க நாவுலகே	5	5
திரு. அனில் ராஜகருணா	2	2

பணிப்பாளர்கள் சபை, 1988 இன் வங்கித் தொழில் சட்டத்தின் 30 ஆம் இலக்கப் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2017 இனது 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவை நிறுவியது.

குழுவின் பங்கு மற்றும் பொறுப்புக்கள்

பணிப்பாளர்கள் சபையினால் ஏற்படுத்தப்பட்ட குறிப்பின் நியதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- இடர் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் செயற்றிறன் வாய்ந்த இடர் முகாமைத்துவ வரையமைப்பொன்றை நிறுவுதல் ஆகியவற்றில் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
- ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துக் கொள்கை மற்றும் வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏனைய இடர் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுடன் வங்கிரீதியிலான இடர் முகாமைத்துவ வரையமைப்பினை காலத்துக்குக் காலம் நாளதற்குக் கொண்டுவருகிறது.
- அனைத்து கொடுகடன், சந்தை, தொழிற்பாடு மற்றும் வங்கியினால் எதிர் கொள்ளப்பட்ட மூலோபாய இடர்கள் ஆகியன அடையாளங் காணப்பட்டு, அளவிடப்பட்டு, கணிப்பீடு செய்யப்பட்டதுடன் போதிய அளவில் முகாமை செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.
- அனைத்து கடுமையான இடர் விடயங்கள் தொடர்பில் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாகக் பணிபுரிவதுடன் அதிகார வரையமைப்பு மற்றும் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் ஆகியவற்றுக்குள் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்தல்.

- புதிய செயற்பாட்டு விருத்திகளின் இடர் பற்றிய அடையாளம் காணுதல், மீளாய்வு, அறிவித்தல் மற்றும் பரிந்துரைத்தல் மற்றும் அவற்றோடு தொடர்புடைய இணக்கம் ஆகியன.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பாசல் III வழிகாட்டல்களுடனான நடைமுறைப்படுத்தல் மற்றும் இணக்கம் பற்றிய மீளாய்வு.

2017 ஆம் ஆண்டில், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு பட்டயத்தை மீளாய்வு செய்தது. குழு, கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் வங்கியுடன் தொடர்பான இடர் மற்றும் இணக்கம் பற்றிய எடுத்துரைப்புகள் ஆகியவற்றை மீளாய்வு செய்கிறது. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது ஆணையின் கீழ் வரும் முன் மொழிவுகளுக்கான ஒப்புதலை வழங்குவதுடன் சபையினால் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய முன் மொழிவுகள்/அறிக்கைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்கிறது.

இடர் முகாமைத்துவம் தொடர்பான உரிய பகுதி/பிரிவு ஆகியன வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விபரமான அறிமுகத்தை வழங்குகின்றன. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இடர் முகாமைத்துவம், இணக்குவிப்புப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகள் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் போதான நடவடிக்கைகள்

குழு செயற்பாட்டு, கொடு கடன், சந்தை, திரவத்தன்மை போன்ற வங்கியை கடுமையாகப் பாதிக்கும் அனைத்து முக்கியமான இடர்களையும் மதிப்பீடு செய்கிறது. இது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுவதுடன் சபையானது இடர் முகாமைத்துவத்திற்கான அதன் நியதிச் சட்ட, நம்பிக்கை வாய்ந்த மற்றும் ஒழுங்கு முறைப் பொறுப்புக்களையும் பூர்த்தி செய்கிறது.

இவ்வாண்டில் குழுவினால் கவனஞ் செலுத்தப்பட்ட, மற்றும் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- வங்கியின் இடர் பற்றிய நாட்டம், சகிப்புத் தன்மை மட்டங்கள் மற்றும் வங்கியின் இடர் தொடர்பான வேறுபட்ட விடயங்களை எடுத்துக் காட்டல் போன்றவற்றின் அறிக்கைகள் பற்றிய மீளாய்வு. (அதாவது, கொடு கடன் இடர், சந்தை இடர், தொழிற்பாட்டு இடர், மனித மூல வள இடர், தொழில்நுட்ப இடர் போன்றவை).
- வேறுபட்ட இடர் மட்டங்கள் மற்றும் அவசியமான ஒப்புதல்களை வழங்குதல் பற்றிய மீளாய்வு.
- கைத்தொழிலிலான சர்வதேச அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவங்களை ஈடு செய்வதற்காக வங்கியினால் பேணப்பட்ட வழிமுறைகள், மற்றும் நியமங்களின் போதுமை, வழி நடத்துநரான இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல்கள்/வழிகாட்டல்கள் மற்றும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP) ஆவணம் தொடர்பிலான கணக்காய்வுக்கு இணங்க உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறை ஆகியவற்றை மீளாய்வு செய்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் அவர்களது பரிசோதனையின் போது எழுப்பப்பட்ட மேற்பார்வை தொடர்பிலான சீர்ப்படுத்தல் செய்முறையின் முன்னேற்றத்தைத் தொடர்தல்.
- தொடர்பான திறத்தவரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வழங்கும் அறிக்கைகள், நிதி மோசடிகள், மோசடி இடர் முகாமைத்தும் எச்சரிக்கை வழங்கும் கொள்கை போன்ற வங்கியின் முக்கிய விடயங்களின் மீளாய்வு.
- வங்கி மீதான இணக்க மதிப்பீடுகள் மற்றும் அதன் மையத் தொழிற்பாடுகளான அடகு வைத்தல், கொடுகடன், மனித மூலவள முகாமை, உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தேவைப்பாடு ஆகியவற்றின் மீளாய்வு.
- பாசல் III நியமங்களுடனான வங்கியின் இணக்கப்பாட்டின் நிலை தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மீளாய்வு.
- இணங்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இணங்குவிப்புக் கையேட்டில் ஆண்டுக்கான மீளாய்வு.

குழு மதிப்பீடு

2017 ஆம் ஆண்டுக்கான சுய மதிப்பீட்டுடனான மதிப்பீட்டுச் செய்முறையை குழு நிறைவு செய்ததுடன் அதன் செயலாற்றம், செயற்றிறன் வாய்ந்தது எனவும் முடிவு செய்தது.



ஏ.கே. செனிவிரத்ன

தலைவர் - சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

2018 மார்ச் 12
கொழும்பு

சபை கடன் குழுவின் அறிக்கை



குழுவின் அமைப்பு

சபைக் கடன் குழுவானது (சகசு) மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர் (கடன்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (சில்லறைக் கடன்) ஆகியோரைக் கொண்டிருப்பதுடன் இவர்கள் அழைப்பின் பேரில் கலந்து கொள்ளலாம். பின்வரும் பணிப்பாளர்கள், சபை கடன் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்படுவதுடன், அவர்களின் விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 156 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. அஸ்வின் டி சி சில்வா - தலைவர்

திரு. அணில் ராஜகருணா - உறுப்பினர்
(03.02.2017 இலிருந்து நியமிக்கப்பட்டதுடன் 14.08.2017 இலிருந்து பதவி விலகினார்)

திரு. அஜித் பத்திரன - உறுப்பினர்
(14.08.2017 இலிருந்து நியமிக்கப்பட்டார்)

திரு. சந்திம ஹேமச்சந்திர - உறுப்பினர்

பணிப்பாளர் சபையின் செயலாளர் சபைக் கடன் குழுவின் செயலாளராகச் செயற்படுவார்.

கூட்டங்கள்

கூட்டமொன்றுக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு:

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. அஸ்வின் டி சில்வா	8	8
திரு. அணில் ராஜகருணா	5	5
திரு. அஜித் பத்திரன	3	2
திரு. சந்திம ஹேமசந்திர	8	6

பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், மற்றும் திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஒ (1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்திற்கு இணங்க சபைக் கடன் குழுவை (சகசு) நிறுவியது. வங்கியின் கடன் கொள்கை மற்றும் முதலீட்டுக் கொள்கை ஆகியவற்றின் மீளாய்வுகளை தேவைப்படும் போது காலத்திற்குக் காலம் மேற்கொள்வதிலும், வழங்கப்பட்ட எல்லைக்குள் கொடு கடன் வசதிகள், முதலீடுகளுக்கு ஒப்புதலளித்தலிலும் ஈடுபடும்.

குழுவின் பங்கு மற்றும் பொறுப்புக்கள்

கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்பான கொள்கை மட்டத்திலான ஆவணங்கள் உள்ளடங்கலாக கடன் மற்றும் முதலீடு தொடர்பில் வங்கியின் மூலோபாய நோக்கங்களை மீளாய்வு செய்வதுடன் விதந்துரைப்புகளையும் மேற்கொள்கின்றது.

ஸ்திரமான, வலிமையான மற்றும் ஆரோக்கியமான கடன் இடர் பெறுகை மற்றும் முகாமைத்துவக் கலாச்சாரம் ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் மீளச் செயற்படுத்தல் ஆகியவற்றுக்காக வங்கியின் கடன் கொள்கை மற்றும் முதலீட்டுக் கொள்கையுடன் தொடர்புடைய திறமையான செயற்றிறன் வாய்ந்த முகாமைத்துவத்தின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் (சொபொமுகு) விதந்துரைப்புகளுக்கு இணங்க கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகியவற்றிற்கான விலையிடல் மற்றும் முதலீடுகள் மீதான ஆலோசனைகளுக்கு ஒப்புதலளிக்கின்றது.

இடர்களைச் சமாளிக்கக் கூடிய பொருத்தமான முறைமைகளை நடைமுறைப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வங்கியின் கடன் கொள்கைக்கான முகாமைத்துவக் கடன் முறைமைகள் ஆகியவற்றை வலுப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

2017 ஆம் ஆண்டின் போதான நடவடிக்கைகள்

வங்கியின் கடன் மற்றும் முதலீட்டு நெறிப்படுத்தல் மீதான திறமையான மற்றும் செயற்றிறன் வாய்ந்த செயலாற்றத்தினை உறுதிப்படுத்துவதற்காக, வங்கியின் கடன் வழங்கல் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் கடன் இடர் தீர்வு ஆகியவை தொடர்பிலான சபையின் முன்கூட்டிய ஒப்புதலைப் பெறக் கூடிய கடன் மற்றும் முதலீட்டு எடுத்துரைப்புக்கள் மற்றும் ஏனைய குறிப்பிட்ட அறிக்கைகளுக்கு குழு ஒப்புதலளிக்கின்றது.

குழுவின் மதிப்பீடு

குழுவானது 2017 ஆம் ஆண்டுக்கான சுய மதிப்பீட்டுடனான மதிப்பீட்டு செயன்முறையைப் பூர்த்தி செய்ததுடன் அதன் செயலாற்றம் செயற்றிறன் வாய்ந்ததென்ற முடிவுக்கு வந்துள்ளது.



அஸ்வின் டி சில்வா
தலைவர் - சபைக் கடன் குழு

2018 மார்ச் 12
கொழும்பு

சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு



குழுவின் அமைப்பு

சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவானது (சததொமூகு) மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் அழைப்பின் பேரில் கலந்து கொள்வர். பின்வரும் பணிப்பாளர்கள் சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவில் உறுப்பினர்களாக இயங்குவதுடன் அவர்களின் விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 156 ஆம் பக்கங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. அஸ்வின் டி சில்வா – தலைவர்
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன – உறுப்பினர்
திரு. சந்திம ஹேமசந்திர – உறுப்பினர்

கூட்டங்கள்

கூட்டத்துக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு (2) உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் குழு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு

பெயர்	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு. அஸ்வின் டி சில்வா	5	5
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன	5	2
திரு. சந்திம ஹேமசந்திர	5	5

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஒ (1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்திற்கு இணங்க சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவினை நிறுவியது.

சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவானது, தகவல் தொழில்நுட்பத்தில் வங்கி தங்கியிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துக்கிணங்க (ததொதொ) வங்கியின் மூலோபாய நோக்கங்களை மேற்பார்வை செய்வதற்குமாக நிறுவப்பட்டது.

குழுவின் பங்கு மற்றும் பொறுப்புக்கள்

தலைமைத்துவ ஆதரவு, நிறுவன ரீதியான அமைப்பு மற்றும் வங்கியின் தகவல் தொழில்நுட்பச் செயல்முறை, பெறுமதி வழங்கல், தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம், மூலவள முகாமைத்துவம் மற்றும் செயலாற்ற முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப ஆளுகை வரையமைப்பினை நிறுவுதல் மற்றும் மீளாய்வு செய்தல்.

வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவத்தின் போதுமை மற்றும் திறனாற்றல் மற்றும் வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைகளின் அனர்த்த மீட்சி ஆகியனவற்றை உறுதிப்படுத்தல்.

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் மற்றும் சிறந்த சர்வதேச நடைமுறைகளின் படி தகவல் தொழில்நுட்பத்தின் போதுமை மற்றும் திறனாற்றலை உறுதிப்படுத்தல்.

2017 ஆம் ஆண்டின் போதான நடவடிக்கைகள்

வங்கியின் மூலோபாயங்கள் தொடர்பான மற்றும் திறனாற்றல் வாய்ந்த நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக வெளிப்படுத்தப்படும் தொழில்நுட்பங்களுடன் வங்கித் தொழிற்பாடுகள் அதிகளவில் இணைவதை இயலச் செய்யும் வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை உயர்த்தும் வகையில் குழுவானது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஒப்புதலளித்தது. மேலும், குழுவானது வாடிக்கையாளர்களின் தரவுப் பாதுகாப்பு தேவையை முன்பே அறிந்து கொண்டதுடன் தகவல் பாதுகாப்புக்கு எதிரான அவசியமான அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் உறுதி செய்கிறது.

குழு மதிப்பீடு

2017 ஆம் ஆண்டுக்கான சுயமதிப்பீட்டுடன் மதிப்பீட்டுச் செயன்முறையை குழு நிறைவு செய்ததுடன், அதன் செயலாற்றம் செயற்றிறன் வாய்ந்தது எனவும் முடிவு செய்தது.



அஸ்வின் டி சில்வா
தலைவர் – சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு
2018 மார்ச் 12
கொழும்பு

இடர் முகாமைத்துவ அறிக்கை

வங்கித் தொழிற்துறை இன்று எதிர்கொள்கின்ற சவால்கள் மத்தியில் மிகவும் முக்கியமானது அனைத்து அலுவல்களினதும் துணை நடவடிக்கைகளினதும் உள்ளார்ந்த பாகமான இடரினை புரிந்துகொள்வதும்முகாமை செய்வதுமாகும். இதனால், தேசிய சேமிப்பு வங்கியினது ஒட்டுமொத்த குறிக்கோளானது அதன் வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் நலன்கள் மற்றும் கடன் தீர்க்கும் இயலுமை ஆகியவற்றுக்கு சேவையளிப்பதனை சமநிலைப்படுத்தும் விதமொன்றில் அதன் தொழிற்பாடுகளையும் இணையப்பெற்ற இடர்களையும் முகாமை செய்வதாக விளங்குகின்றது.

வங்கியின் இடர்முகாமைத்துவ தொழிற்பாடானது இடர்களை இனங்காணுதல், கணிப்பிடுதல், அளவிடுதல், திரட்டுதல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றையும் வியாபார தொழிற்பாடுகள் மத்தியில் உகந்த மூலதன ஒதுக்கீட்டினை கண்காணிப்பதனையும் வேண்டுகின்றது.

இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது பொருளாதாரத்தின் பரந்த நோக்கு மற்றும் பொருத்தமானவாறு ஒவ்வொரு விடயப்பரப்பிற்குமென நிறுவப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் ஆளுகையுடன் கூடிய கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு, இணங்குவித்தல், நற்பெயர் மற்றும் உபாயம் போன்ற வேறு பிரதான இடர்பரப்புகளினதும் பரந்த செயற்பரப்பொன்றினை உள்ளடக்குவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட விதமொன்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அனைத்தையும் உள்ளக்கிய இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது செயல்திறன்மிக்க ஆளுகை மற்றும் நேரொத்த இடர்தணிப்பு கருவிகள் என்பவற்றுடன் வங்கி முழுவதும் பிரயோகிக்கப்படுகின்றது.

இடர் முகாமைத்துவத்தின் நோக்கெல்லையானது வங்கிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது முழுமையான உரித்துடைய துணை நிறுவனமான என் எஸ் பி நிதி முகாமைத்துவக் கம்பனிக்கும் காணப்படுகின்றது. துணை நிறுவன கம்பனியானது முதனிலை வணிகத் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. தேசிய சேமிப்பு வங்கித் தொகுதியில் வங்கியினது தொழிற்பாட்டில் முக்கியமான தன்மையினை கருத்தில் கொண்டு வங்கியில் இடர்முகாமைத்துவம் பற்றி இவ் அறிக்கை பிரதானமாக விள்ககுகின்றது (திரட்டிய சொத்துகளுக்கு வங்கி 99.3% இனையும் திரட்டிய மூலதனத்திற்கு 97.5% இனையும் பங்களிப்புச் செய்கின்றது)

செயலாற்றுகைக்கு முக்கியத்துவமிக்க தற்போது காணப்படுகின்ற மற்றும் தோற்றம்பெறுகின்ற இடர்கள்

தற்போது காணப்படுகின்ற அத்துடன் தோற்றம்பெறுகின்ற முக்கியமான இடர்கள் உறுதியாகுமெனில் வங்கியின் நடப்பு மற்றும் எதிர்கால செயலாற்றுகையினை கணிசமானளவு பாதிப்படையச்செய்து, நடப்பு வாய்ப்புவளங்களிலிருந்து விலகிச்செல்வதினை ஏற்படுத்தலாம் அத்துடன் இலாபத்தன்மை, திரவத்தன்மை, மூலதனப் போதுமை போன்ற முக்கிய செலாற்றுகை பரப்புகள் மீது பாதகமான தாக்கத்தினை விளைவிக்கலாம்.

குறித்த முதன்மை இடர்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மை இடர் மீது தாக்கம் நேரிடக்கூடிய இடர்களாக இவ் இடர்கள் இனங்காணப்படக் கூடியவையாகும். தேசிய சேமிப்பு வங்கியானது கடன் இடர், சந்தை இடர், தொழிற்பாட்டு இடர், மற்றும் திரவத்தன்மை இடர் என்பவற்றை முதன்மை இடர்களாக கருதுகின்றது.

நுண்பாக மற்றும் பேரண்ட சூழமைவுகளுடன் தொடர்புடைய தற்போதுள்ள இடர்கள், இடர் முகாமைத்துவ கட்டமைப்பினுள் இனங்காணப்பட்டு,கணிப்பிடப்பட்டு தணிக்கப்படுகின்றன/ குறைக்கப்படுகின்றன. தோற்றம்பெறும் இடர்கள் புதியனவாக அல்லது முன் அறிந்திருக்காதவையாக இருக்கலாம். இங்கு சாத்தியமான இழப்பு முழுமையாக அறியப்படுவதில்லை அத்துடன் அறிந்துகொள்வதற்கான காலவீச்சு எதிர்வு கூறுவதற்கு மிகவும் கடினமானதாகவிருக்கலாம்.

மாறிவருகின்ற அத்துடன் சிக்கலான இடர் சூழலினை திசைப்படுத்துவதற்கு மிக முக்கிமாக விளங்குகின்ற தோற்றம்பெறும் இடர்கள் மீது தேசிய சேமிப்பு வங்கி தொடர்ந்து இற்றைப்படுத்தல்களை மேற்கொள்கின்றது.

2017 ஆம் ஆண்டின் போது, இடர்கணிப்பீட்டு மாதிரிகளை மேம்படுத்துவதற்காக வங்கி, கடன் தரப்படுத்தல் மற்றும் புள்ளியிடல் மாதிரிகளை கொண்டுள்ள கடன் தரப்படுத்தல் மற்றும் புள்ளியிடல் முறைமையினை பெற்றுக்கொண்டது. ஊ III இன் கீழ் மூலதனத் தேவைப்படுத்தல்கள், வெளிநாட்டு நாணய கடன்பாடு, நிதியில் பெறுதிகள் மற்றும் வரிச்சட்டங்களில் மாற்றங்கள் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் இணங்கியொழுகுவதற்காக வங்கி மீதான அழுத்தத்தினை அதிகரிக்கலாம்.

விரிவடைகின்ற மற்றும் ஆழமாக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள்,தொழிநுட்ப முன்னேற்றத்தின் காரணமாக அதிகரிக்கின்ற வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகள், இயலாற்றல்மிக்க தொழிநுட்பவியல் போன்றவற்றின் காரணமாக பரிணமிக்கின்ற முன்னேற்றகரமான பகுப்பாராய்ச்சி போன்ற தோற்றம் பெற்று வரும் போக்குகளுடன் இடர் முகாமைத்துவ தொழிற்பாட்டின் வகிபாகம் மீள வடிவமைக்கப்படும். இவ் இடர்கள் சூழலில் எதிர்பாராத தளம்பல் மற்றும் துரிதமாக மாற்றமடைகின்ற சந்தை நிலமைகளின் காரணமாக வங்கித் தொழிற்துறை முழுவதும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன.

வியாபார பெறுபேறுகளுக்கும் நிதியியல் நிலமைகளுக்குமான இன்னல்களை முகாமை செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி தோற்றம் பெறும் இடர்களை பகுப்பாய்வு செய்கின்றது. இவ் அறிக்கையானது தற்போது காணப்படுகின்ற முதன்மை மற்றும் முக்கிய இடர்கள் அத்துடன் தோற்றம் பெறும் இடர்கள் அத்துடன் அத்தகைய இடர்களை முகாமை செய்வதில் வங்கியின் அணுகுமுறை என்பன பற்றி விரிவாக ஆராய்கின்றது.



ஒழுங்கு-முறைப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் இடர்

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் நோக்கெல்லையானது உலக அளவில் தொடர்ச்சியாக விரிவடையும். மூலதனம்முடுக்கி விகிதங்கள்,நிதியளித்தல் மற்றும் திரவத்தன்மை போன்ற பரப்புகளில் உள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள் வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்முறைகளுக்காக கணிசமான உள்ளார்ந்தங்களை கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. ஒழுங்குமுறைப் படுத்துனரும் (இலங்கை மத்திய வங்கி) அரசாங்கமும் உள்நாட்டு மற்றும் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் தரநியமங்கள் இரண்டுடனும் வங்கிகள் இணங்கியொழுக வேண்டுமென மேலும் கோருகின்றன.

ஒழுங்குமுறைப்படுத்தல்களின் நோக்கெல்லை கணிசமாக விரிவடைந்து செல்வதால் தற்போது காணப்படுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல்களுடன் இணங்குவது போதியனவாக இருப்பது எளிதில் நிகழமுடியாததாகும். எனவே, தேசிய சேமிப்பு வங்கியானது ஒழுங்குமுறைப்படுத்தல்களின் சாத்தியமான எதிர்கால மாற்றங்களுடனும் இணங்கியொழுகுவதற்கு தயாராகவுள்ளது.



இலகுவாக தொற்றக்கூடிய இடர்


வங்கிகளது நிதியியல் மற்றும் பேரண்ட பொருளாதார தொடர்புகைகளின் காரணமாக வங்கிகள், இலகுவாக தொற்றக் கூடிய நிதியியல இடருக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியனவாகும். எதிர்மறையான சந்தை அபிவிருத்திகள் வங்கியின் அல்லது ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் வேறு துறைக்கு பரவக் கூடியது என்பதுடன் விரைவாகவும் கணிசமாகவும் வங்கியின் தொழிற்பாட்டுச் சூழலை சீரழிக்க காரணமாக இருக்கக் கூடியதாகும். முற்செயற்பாடு மிக்க இடர் தணிப்பு நடவடிக்கையொன்றை எடுப்பதற்காக இலகுவாக தொற்றக் கூடிய இடர்காப்பற்ற அளவு எவ்வளவு என்பதனை புரிந்து கொள்வதற்கு வங்கி செயன்முறைகளையும், நடைமுறைகளையும் செயற்பாட்டில் நிறுத்தியுள்ளது.



மாதிரி இடர்


மாதிரிகள் மீது மேலும் மேலும் சாந்திருத்தலானது மாதிரி இடர்கள் பற்றிய சிறந்த புரிந்துகொள்ளலினையும் முகாமைத்தவத்தினையும் தேவைப்படுத்தும். மாதிரிப் பிழைகள், தரவுத்தரத்துடன் கூடிய பிரச்சினை, தொழில்நுட்ப அல்லது அமுலாக்கல் பிரச்சினைகள் மற்றும் இடைத்தொடர்பு இசைவின்மை போன்றவற்றிலிருந்து தோன்றுகின்றன.

வங்கியானது உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு என்பன ஊடாக உயர்தரம் கொண்ட தரவுகளுடன் கூடிய நவீன மாதிரி அபிவிருத்தி, சிறப்பான நிறைவேற்றல் போன்ற ஊடாக மாதிரி இடர்களை தணிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



இணையத்தள பாதுகாப்பு இடர்

கடந்த வருடங்கள் முழுவதும் மென்பொருள் முறைமைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும்வாடிக்கைளயாளரகளின் இரகசியத் தரவுகள் என்பன மீது வங்கித் தொழிற்துறை அதிகளவில் தங்கியிருப்பதன் காரணமான இணையத்தள இடரானது குறிப்பிடத்தக்களவு பரிணமித்துள்ளன. இணையத்தள தாக்குதல்கள் பேரழிவுமிக்க விளைவுகளை தோற்றுவிக்கக் கூடியன என்பதனால் இணையத்தள தாக்குதலுக்கான பாதுகாப்பு தேசிய சேமிப்பு வங்கியின் உபாய முன்னுரிமைகளில் முதலிடம் வகிக்கின்றது.




உரு 1: முதன்மை இடர்கள் அடிப்படையிலமைந்த முக்கியத்துவமிக்க தற்போதுள்ள மற்றும் தோற்றம்பெறும் இடர்கள்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் ஆளுகை

இடர் முகாமைத்துவத்திற்கான உரிமையும் பொறுப்பும் தேசிய சேமிப்பு வங்கியின் வியாபாரத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தனிப்பட்டவர்கள் மீதும் அமையப்பெறுகின்றது. வங்கியின் இடர் ஆளுகைக் கட்டமைப்பிற்காக "மூன்று பாதுகாப்பு நிலை" மாதிரியுடன் ஒன்றிணைந்த ஆற்றல்வாய்ந்த நிறுவன ஆளுகை கோட்பாடுகள் வலுவாக தாபிக்கப்பட்டுள்ள.

இடர் ஆளுகையானது சபை மட்டத்தில் தோற்றம் பெற்று இடர் ஏற்புக் கூற்று,கொள்கைகள், அதிகார ஒப்படைப்பு மற்றும் குழுக் கட்டமைப்புகள் ஊடாக வங்கியின் வியாபார தொழிற்பாடுகள் முழுவதும் ஒழுங்குமுறையாகச் செல்கின்றது. இது, சபை மட்டத்திலான மேற்பார்வையினையும் இடர் காப்பின்மையினை தோற்றுவிக்கின்றவர்களுக்கும் அனுமதிக்கின்றவர்களுக்கும் இடையில் கடமைகளை தெளிவாக வகுப்பதனையும் உறுதி செய்கின்றது. சபையும் அதன் இடர் குழுக்களும் அவர்களது தொடர்புடைய பட்டயங்களின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுகின்றன.



உரு 02: இடர் முகாமைத்துவத்திற்கான வங்கியின் உரிமைத்துவமும் பொறுப்பும்



சபை

சபையானது, பல்வேறு இடர் காப்பின்மைகளை முகாமைசெய்வதற்கும் உள்ளகக் கொள்கைகள் பொருத்தமான விதத்தில் நிறுவப்பட்டுள்ளது மற்றும் இணங்கியொழுகப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பொன்றினை நிறுவியுள்ளது என்பதனை இடர் மேற்பார்வை வகிபாகத்தனூடாக, உறுதிசெய்கின்றது.

சபையானது, வங்கியின் இடர் ஏற்பினை அனுமதிப்பதுடன் அதன் நடைமுறைப்படுத்தலினை மேற்பார்வை செய்கின்ற அதேவேளை அனைத்து வகையான இடர்களையும் சந்தை நிலைமைகளையும் பிரதிபலிப்பதற்கு அவை தொடர்ச்சியாக தொடர்புடையவையாக இருப்பதனை உறுதிசெய்வதற்கு மீளாய்வினை மேற்கொள்கின்றது.

மேலும், சபையானது வங்கியினுள் ஆற்றல்வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உத்தரவாத கட்டமைப்பு காணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதுடன் இடர் விழிப்பூட்டல் மற்றும் இடர் சீர்செய்யப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளுதல் கலாசாரமொன்றினை பேணிவளர்ப்பதற்கு அவசியதான நடவடிக்கை எடுப்பதற்கும் பொறுப்புடையதாகவும் காணப்படுகின்றது.



சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழு

சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவானது சபைக்கான செயல்திறன்மிக்க இடர் முகாதைத்துவ கட்டமைப்பொன்றினைப் பரிந்துரைப்பதற்கு அதன் இடர் தொடர்பிலான பொறுப்புடமைகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகின்றது. சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவின் முக்கிய நோக்கம், இடர் ஏற்பினை தாபிப்பதும் உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறையினைப் பரிந்துரைப்பதுமாகும்.

சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவானது இடர் முகாமைத்துவக் கட்டமைப்புடன் வங்கியின் இணங்குவித்தலினை கண்காணிக்கின்றது. அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களினதும் போதுமை, ஒழுங்குமுறைப்படுத்துநருடனான குறிப்பிடத்தக்க தொடர்புகள் மற்றும் வங்கியின் இடர் தோற்றப்பாடு போன்றவற்றை மீளாய்வு செய்கின்றது.



சபை கணக்காய்வுக் குழுக்கள்

இடர்களை முகாமைசெய்வதற்கு பயன்படுத்தப்படும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் சபை கணக்காய்வுக் குழுவினால் விவாதிக்கப்படுகின்றன. உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகளினதும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டினதும் செயல்திறனையும் வினைத்திறனையும் இது கண்காணிக்கின்றது.

சபை கணக்காய்வுக் குழுவானது தகவல்களின் ஒருமைப்பாடு, பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தல், சட்டரீதியான அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தல் பிரச்சினைகளை கண்காணித்தல் போன்றவற்றை உறுதிசெய்கின்றது. இடைக்கால மற்றும் ஆண்டிறுதி நிதியில் கூற்றுகளை அவை வெளியிடப்படுவதற்கு முன்னர் சபைக்கு பரிந்துரைக்கின்றது. வெளிவாரி கணக்காய்வாளர்கள் தமது காண்புகளை சபை கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடுகின்றனர்.



முகாமைத்துவ குழுக்கள்

முதன்மை இடர்களை முகாமைசெய்வதில் நேரடியாக ஈடுபடுகின்ற முகாமைத்துவமட்டக் குழுக்கள், கடன் குழு, சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு, மூலதனக் குழு, தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

தகவல் தொழில்நுட்ப செயற்படுத்தல் குழு, நிறுவன முகாமைத்துவக் குழு, தொழிற்பாட்டு செயலாற்றுகை மீளாய்வுக்குழு, சந்தைப்படுத்தல் குழு, தயாரிப்புகள் அபிவிருத்திக் குழு, மனித வளங்கள் குழு, நடவடிக்கைத் திட்ட மீளாய்வு, தகவல் தொழில்நுட்ப மீளாய்வு மற்றும் அட்டை நிலையம் போன்ற ஏனைய முகாமைத்துவக் குழுக்கள் போன்றன மக்கள், செயன்முறைகள், மற்றும் வெளிவாரி இடர் தூண்டுநர்களில் இருந்துவரும் வங்கிக்கான முக்கிய இடர்களை முகாமைசெய்கின்றன.

தேசிய சேமிப்பு வங்கியானது அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் ஊகிக்கப்படும்முதன்மை மற்றும் முக்கிய இடர்களை மதிப்பிடுவதற்கு, கண்காணித்து முகாமை செய்வதற்கு இடர் முகாமைத்துவ கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான அத்தியவசிய மேம்படுத்தல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இடர் முகாமைத்துவக் கொள்கைக் கட்டமைப்பு பின்வருனவற்றை கொண்டுள்ளது:

- ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவக் கொள்கை
- கொடுகடன் முகாமைத்துவக் கொள்கை
- சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்முகாமைத்துவக் கொள்கை
- தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை
- இடர் முகாமைத்துவ வெளிப்படுத்தல் கொள்கை
- தகைவுச்சோதனைக் கொள்கை
- உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறைக் கொள்கை

வங்கியின் இடர் முகாமைத்துவக்கட்டமைப்பு உள்ளக ரீதியாக மூன்று பாதுகாப்பு மட்டங்களை கொண்டுள்ளது. ஒழுங்குபடுத்துனரும் வெளிவாரி கணக்காய்வாளர்களும் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான பெறுமதி வாய்ந்த உள்ளீடுகளை வழங்குகின்றனர். இது வங்கியின் அக்கறைதாரர்களுக்கு மேலதிக உத்தரவாதம் ஒன்றாவதுடன் நான்காம் நிலைப் பாதுகாப்பாக கருதப்படுகின்றது.

1ஆம் நிலைப் பாதுகாப்பு

வியாபாரத் தொழிற்பாடுகள்

தமது தொடர்புடைய வியாபார பரப்புகளில் இடர்களை இனங்காணபதற்கும் தீர்ப்பதற்கும் ஆற்றல்வாய்ந்த கட்டுப்பாட்டு சூழலொன்றினுள் தொழிற்படுவதற்கும் கிளைகள்/தொழிற்பாட்டு பிரிவுகள் பொறுப்புக்கூறத்தக்கனவாகும்.

கிளைகளுக்கு/தொழிற்பாட்டு பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் எடுக்கப்படும் இடர்கள் பற்றி விழிப்புணர்வாக/பொறுப்பாக உள்ளதுடன் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு/இடர் முகாமைத்துவ நடைமுறைகளுக்கு உண்மையாக நடந்து கொள்கின்றனர்.

2ஆம் நிலைப் பாதுகாப்பு

இடர் முகாமைத்துவமும் இணங்குவித்தலும்

இடர் முகாமைத்துவப் பிரிவானது இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் முறையியல்கள் போன்றவற்றை வகுக்கின்றது. இடர் முகாமைத்துப் பிரவானது மூன்று முக்கிய அலகுகளான் கடன் இடர் முகாமைத்து அலகு, சந்தை இடர் முகாமைத்துவ அலகு மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இடர் மேற்பார்வைப் பிரிவொன்றாக இடர் ஒன்றுசேர்த்தல், உயர் மட்டங்களுக்கு இடர் அறிக்கையிடல் தொழிற்பாடுகள் இடர் முகாமைத்துவப் பிரிவினால் நடாத்தப்படுகின்றது.

இணங்குவித்தல் பிரவானது வங்கியின் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான இணங்குவித்தலினை மேற்பார்வை செய்கின்றது. விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் சட்டங்களுக்கு இசைவாக ஆளுகை, கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் காணப்படுவதை உறுதிசெய்கின்றது.

3ஆம் நிலைப் பாதுகாப்பு

உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது இடர் முகாமைத்துவ நடைமுறைகள், இணங்குவித்தல் தொழிற்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றின் மீதான சுயாதீன மற்றும் கிரமமான கணக்காய்வுகளை நடாத்துவதன் மூலம் போதிய உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவ தொழிற்பாடு மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடு என்பவற்றனை உறுதிசெய்கின்றது.

உள்ளக கணக்காய்வு பிரிவானது சபை கணக்காய்வு குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது.

4ஆம் நிலைப் பாதுகாப்பு

ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் வெளிவாரி கணக்காய்வுகள்

இலங்கை மத்திய வங்கியனதும் அரசாங்கத்தினதும் கணக்காய்வானது வங்கிக்கு மேலதிக உத்தரவாதத்தினை வழங்குகின்றது. அவற்றின் சுயாதீன மீளாய்வுகள்/கணகாய்வுகளில் இருந்தான உள்ளீடகளும் காண்புகளும் கட்டுப்பாட்டு மற்றும் இடர் முகாமைத்துவ கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

ஒழுங்குமுறைப்படுத்தனரின் காண்புகளுடனான இணங்குவித்தலினை சபையும் சிரேஷ்ட முகாமைத்துவமும் கண்காணிக்கின்றன. வெளிவாரி கணக்காய்வாளர்களினால் இனங்காணப்பட்ட இடைவெளிகளுக்கான இணங்குவித்தலினை சபைக் கணக்காய்வுக் குழு கண்காணிக்கின்றது.


உரு 3: இடர்முகாமைத்துவத்தின் பாதுகாப்பு நிலைகள்

இடர் ஏற்பு

இடர் ஏற்புக் கூற்றானது இடர் முகாமைத்துவக் கட்டமைப்பில் முக்கிய பாகமொன்றாக விளங்குகின்றது. இடர் ஏற்பானது வங்கி அதன் குறிக்கோள்களை எய்துவதில் ஏற்றுக் கொள்வதற்கு அது விரும்புகின்ற இடர் மட்டமாகும். இது வியாபாரத்தின் முக்கிய அம்சங்களையும் அக்கறைதாரர் எதிரபார்க்கைகளையும் பிரதிபலிக்கின்றது.

இடர் ஏற்பானது தேசிய சேமிப்பு வங்கியின் வியாபார திட்டமிடல் செயன்முறையில் இன்றியமையாத கூறொன்றாக விளங்குகின்றது. வங்கியின் இடர் ஏற்புக் கூற்றானது வியாபார தொழிற்பாடுகளையும் இடர்களையும் ஒருசீரமைப்பதன் மூலம் பெறுமதியினை அதிகரிக்கின்றது. நாளாந்த வியாபாரத் தொழிற்பாடுகளைத் தொடர்வதில் அவர்கள் தயாராக இருக்க வேண்டிய, இதன் மூலம் மிகவும் இடர்விழிப்பு தீர்மானங்களை அவர்கள் எடுக்கூடியவர்களாகவிருக்கின்ற இடர்மட்டத்தினை புரிந்து கொள்வதற்கு வியாபாரப் பிரிவுகளிலுள்ள அலுவலர்களுக்கு இது வசதியளிக்கின்றது.

வங்கியினது விழுமியங்களுக்கும் நிதியியல் நிலைமைகளுக்குமான பாதகமான தாக்கங்களை குறைக்கின்ற அளவுசார் மற்றும் பண்புசார் வழியலகுகளைப் பயன்படுத்தி நிறுவன மட்டத்தில் இடர் ஏற்பினை நிலைப்படுத்துவதில் வங்கி மேலிருந்து கீழ் அணுகுமுறையினைப் பயன்படுத்துகின்றது. நிறுவன மட்டத்தில் அளவுசார் இடர் ஏற்பானது பிரதானமாக மூலதனப் போதுமை, திரவத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் ஏனைய முன்மதியுடைய தேவைப்பாடுகளை வலியுறுத்துகின்றது.




உரு 4: இடர் ஏற்பு கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்

பண்புசார் கூற்றுகள், வங்கி பூச்சிய இடர் ஏற்பினைக் கொண்டுள்ள இடர்களை பிரதானமாக உள்ளடக்குகின்றது. வியாபாரத்துறை மட்டத்தில் இடர் ஏற்பு எல்லைகள் இடர் வகைவாரியாக காணப்படுகின்றன. அதாவது கொடுகடன், பங்குமூலதனம், வட்டி வீதம், வெளிநாட்டு செலாவணி மற்றும் தொழிற்பாடு என்பனவாகும்.

மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் அணுகுமுறையின் ஒன்றுசேர்தலானது எல்லைக்கட்டமைப்பு, வரவுசெலவு திட்டம் அமைக்கப்பட்ட மட்டங்கள் மற்றும் முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மிகவும் முன்மதியுடைய இடர் ஏற்பு மட்டங்களை நிறுவுவதற்காக பிரிவு மற்றும் தயாரிப்பு துறை மட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

தேசிய வங்கியின் இடர் ஏற்புக்கூற்றானது வருடாந்த அடிப்படையில் அல்லது வங்கியின் வியாபார உபாயம், ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல் மற்றும் அக்கறைதாரர்களின் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் அவை இசைவாகக் காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்யும் நோக்குடன் இடர் சூழலுக்கான எதிர்பாராத மாற்றங்கள் நிகழ்வின்போது மிகவும் அடிக்கடி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது. இடர் ஏற்பு மட்டங்களினுள் இடர்களை முகாமைசெய்வதற்கான இறுதிப் பொறுப்பினை சபை கொண்டுள்ளதுடன் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு பொறுப்பினை ஒப்படைத்துள்ளது.

இடர் ஏற்பு சாதன தொகுப்பு – நிறுவன மட்டம்



உரு 5

அளவுசார் மற்றும் பண்புசார் இடர் ஏற்பு வழியலகுகளுக்கு எதிராக உண்மையான செயலாற்றுகையினை இடர் முகாமைத்துவப் பிரிவு கண்காணிப்பதுடன் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவிற்கு/ சபைக்கு அறிக்கையிடுகின்றது.

வங்கியின் இடர் ஏற்பானது அதன் வியாபாரத் தொழிற்பாடுகளின் பாகமொன்றாக கடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்களை ஏற்பதனை அனுமதிக்கின்றது. இவ் முதன்மை இடர்கள், இடர்ஏற்புக் கட்டமைப்பில் வரையறைசெய்யப்பட்ட மட்டங்களினுள் முகாமைசெய்யப்படுகின்றன.

கடன் இடர்


கடன் இடர் என்பது வங்கிக்கான அதன் நிதியியல் அல்லது ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிதியியல் சாதனமொன்றுக்காக வாடிக்கையாளரொருவரிடமிருந்து அல்லது எதிர்த்தரப்பினரிடமிருந்து விளைகின்ற சாத்தியமான நிதியியல் இழப்பாகும்.

வங்கியானது ஐந்தொகை மீதான கடன் இடர்காப்பின்மை அதாவது கடன்கள் மற்றும் வருமதிகள் அத்துடன் படுகடன் பிணையங்களில் முதலீடுகள் மற்றும் நாணயக் கடிதங்கள் மற்றும் உத்தரவாதங்கள் போன்ற ஐந்தொகைக்கு வெளியிலான இடர்காப்பின்மை ஆகிய இரண்டிலிருந்தும் கடன் இடருக்கு வங்கி ஆட்படுகின்றது.

கடன் இடரானது எதிர்தரப்பு தவணைதவறுதல் இடர், திரட்சி இடர், தீர்ப்பனவு இடர் மற்றும் எஞ்சியுள்ள கடன் இடர் ஆகியவற்றை கொண்டதாகும்.

.

ஐந்தொகை மீதும் வெளியிலும் இடர்காப்பின்மை




உரு 6 :

டிசம்பர் 31இல் உள்ளவாறு	அதிகூடிய இடர்காப்பின்மை 2017 ரூபா '000	அதிகூடிய இடர்காப்பின்மை 2016 ரூபா '000	மாற்றம் %
காசும் காசுக்கு சமமானவையும்	**3,849,627**	4,619,699	(17)
வங்கிகளுடனான இருப்புகள்	**23,438,104**	19,013,572	23
பெறுதி நிதியியல் சாதனங்கள்	**1,360,714**	2,728,445	(50)
ஏனைய நிதியியல் சொத்துகள் - வர்த்தகத்திற்காக வைக்கபட்டவை	**6,472,314**	20,290,588	(68)
வங்கிக்கான கடன்களும் வருமதிகளும்	**27,714,565**	31,834,072	(13)
ஏனைய வாடிக்கையாளர்களுகான கடன்களும் வருமதிகளும்	**360,309,866**	291,976,942	23
நிதியியல் சொத்துகள் - விற்பனைக்கானவை	**5,693,829**	6,227,764	(9)
நிதியியல் சொத்துகள - முதிர்வுக்காக வைக்கப்பட்டவை	**544,273,077**	505,824,398	8
ஐந்தொகை மீதான இடர்காப்பின்மை	**973,112,096**	882,515,480	10
ஐந்தொகைக்கு வெளியிலான இடர்காப்பின்மை	**17,060,099**	24,501,480	(30)
கடன் இடர்காப்பின்மை	**990,172,195**	907,016,960	9

அட்டவணை 1: உச்ச கடன் இடர்காப்பின்மை.


வங்கிகளுக்கான மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் அத்துடன் படுகடன் பிணையங்களில் முதலீடுகள் என்பன மொத்த கடன் இடர்காப்பின்மையின் 98% இனை உள்ளடக்குகின்ற வங்கிக்கான கடன் இடரின் பாரிய மற்றும் மிகத் தெளிவான மூலங்களாக காணப்படுகின்றன. வங்கியின் கடன் இடர் காப்பின்மை 9%ஆல் அதிகரித்து குறித்த ஆண்டில் ரூ. 990 பில்லியனை அடைந்ததுடன் வங்கியின் சில்லறை மற்றும் நிறுவன கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பே வளர்ச்சிக்கான முக்கிய காரணிகளாகும்.

கடன்களும் வருமதிகளும் - பங்குமூலதன கலப்பு



உரு 7


சில்லறை கடன் வழங்கல் சொத்துப்பட்டியல்



உரு 8

நிறுவனக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல்

[%]



☐ நிறுவனக் கடன்கள் - அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகள் மற்றும் இலங்கை அரசாங்கம் ☐ வங்கிகளுக்கான கடன்கள்
☐ நிறுவனக் கடன்கள் - ஏனையவை ☐ ஏனைய சாதனங்கள்

உரு 9

இடர் மீளாய்வு

இடர் கூறு	விபரம்	கண்காணித்தல்/முகாமைத்துவக் கருவிகள்	இடர்காப்பின்மை	தாக்கம்*
எதிர்தரப்பினர் தவணைதவறுதல் இடர்	உடன்பட்ட நியதிகளுக்மைவாக வங்கியுடனான ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான எதிரதரப்பினரின் தவறுதல் காரணமாக சாத்தியமான தாக்கம்.	• முன்னெச்சரிக்கை குறிகாட்டிகள், NPA போக்குகளை கண்காணித்தல் • கடன் மீளாய்வுப் பெறிமுறை	உயர்வானது	நடுத்தரமானது
திரட்சி இடர்	தொழிற்துறையொன்றுக்கு அல்லது புவியியல் பிராந்தியத்திற்கான கடனில் எதிர்தரப்பினர்களின் ஒழுங்கற்ற பரம்பல்	• ஹேர்பின்டால்-ஹிர்ஸ்சமன் சுட்டெண் • வரையறையினைக் கண்காணித்தல் • அழுத்தப்பரிசோதனை	நடுத்தரமானது	நடுத்தரமானது
தீர்ப்பனவு இடர்	தீர்பப்னவு நேரத்தில் ஒப்பந்தமொன்றின் நியதிகள் மீது ஒப்படைக்கத்தவறுவதன் காரணமாக சாத்தியமான தாக்கம்	• கடன் தரப்படுத்தல்/புள்ளியிடல், அழுத்தப்பரிசோதனை • வரையறையினைக் கண்காணித்தல்	நடுத்தரமானது	குறைவானது
எஞ்சிய இடர்	அனைத்து ஏனைய இடர்களும் இல்லாதொழிக்கப்பட்ட, காப்பிடப்பட்ட, அல்லது வேறுவகையில் வகைகூறப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள் இடர்களில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான தாக்கம்	• பிணையஉறுதியாக்குதல் • மதிப்பீட்டனை/மீள்மதிப்பீட்டினை கண்காணிதத்ல • பெறுமதி விகிதங்களுக்கான கடன் கண்காணிப்பு	நடுத்தரமானது	குறைவானது


** உயர்வான அழுத்த நிலைமையொன்றில் வருவாய் மற்றும் மூலதனம் மீதான சாத்தியமான தாக்கம்*

அட்டவணை 2: கடன் இடர் மீளாய்வு

எதிர்தரப்பு தவணை தவறுதல் இடர்

கடன் இடரின் மிகமுக்கிய கூறான எதிர்தரப்பு தவணை தவறுதல் இடரானது உடன்பட்ட நியதிகளுக்கமைவாக வங்கியுடனான ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்தரப்பு தவணை தவறுகின்ற இடராகும்

கடன் தொகை எதிர் செயற்படாக் கடன்கள்



உரு *10*

எதிர்தரப்பு தவணை தவறுதல் இடரைக் குறைப்பதற்கான ஆற்றல்வாய்ந்த மற்றும் கண்டிப்புமிக்க கடன் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் கடந்த சில வருடங்களாக வங்கியின் சிறப்பாக முகாமைசெய்யப்பட்ட செயற்படா கடன் விகிதத்திலிருந்தான சான்றாக விளங்குகின்றது. வங்கியானது மொத்த செயற்படா கடன் விகிதத்தினை 2016 இல் 2.6% இலிருந்த 2017 இல் 1.34% ஆக மேலும் மேம்படுத்தியுள்ளது.


திரட்சி இடர்

ஒப்பிடத்தக்க பொருளாதாரப் பண்புகளுடன் அல்லது அத்தகைய எதிர்த்தரப்பினர் ஒரேமாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது ஒரேமாதிரியான புவியியல் பிரதேசங்களில் அல்லது தொழிற்துறைகளில் தொழிற்படுகின்ற பல எண்ணிக்கையான எதிர்தரப்பினர் அல்லது இடர்காப்பின்மைகள் காணப்படுகின்றபோது இதனால் ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அவர்களது கூட்டான இயலுமை பொருளாதார, அரசியல் அல்லது வேறு நிலைமைகள் போன்றவற்றின் மாற்றங்கள் மூலம் ஒருசீர்மையாக பாதிக்கப்படுகின்ற போது கடனில் திரட்சி இடர் தோன்றுகின்றது.

கடன் சொத்துப்பட்டியலில் திரட்சியினை மதிப்பிடுவதற்கு தேசிய சேமிப்பு வங்கியானது ஹேர்பின்டால்-ஹிர்ஸ்சமன் சுட்டெண்ணைப் பயன்படுத்துகின்றது. அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கான பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு துறைசார் திரட்சியினை நோக்கி வங்கி மிதமான இடர் ஏற்பொன்றினைக் கொண்டுள்ளது. மேற்குப் (பிராந்தியத்திற்கான) உயர்ந்தளவிலான புவியியல்சார்ந்த திரட்சியானது தலைமை அலுவலக கடன் பிரிவில் அனைத்து பாரிய கடன்களும் பதிவுசெய்யப்படுவதன் காரணமாக இடம்பெறுகின்றது.

திரட்சி இடரினை முகாமைசெய்வதற்காக வங்கி, சொத்துப்படியல் திரட்சி எல்லைகளை கண்காணித்தல் மற்றும் தகைவுச் சோதனை போன்ற வழிமுறைகளை எடுத்துள்ளது.


செயற்படாக் கடன்களின் வயதுப் பகுப்பாய்வு



உரு *11*

புவியியல்சார்ந்த திரட்சி


[%]



உரு 12

துறைசார் திரட்சி

[%]



உரு 13

தீர்ப்பனவு இடர்

தீர்ப்பனவு இடர் என்பது தீர்ப்பனவு நேரத்தின் ஒப்பந்தமொன்றின் நியதிகள் மீது கொடுக்கல் வாங்கலொன்று ஒப்படைப்பதற்கு எதிர்த்தரப்பொன்று தவறுகின்ற இடராகும். இவ்விடரானது இரண்டு தரப்பினர்களுக்கிடையிலான தீர்ப்பனவில் ஏதேனும் காலம் குறிக்கப்பட்ட வேறுபாடுகளுடன் சேர்த்து தவணை தவறுதல்களுடன் இணைந்திருக்கக் கூடியன.

வழமையாக எதிர்ப்பார்க்கப்பட்டவாறு மாற்றல் முறைமையொன்றில் தீர்ப்பனவு இடம்பெறாமையின் போது தீர்ப்பனவு இடர் தோன்றுகின்றது. இது, ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்த்தரப்பினர்களுக்கான அதன் தீர்ப்பனவு கடப்பாடுகளின் மீது ஒரு தரப்பினர் தவணை தவறுவதன் காரணமாக நிகழ்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியானது தீர்ப்பனவு இடரினை கண்காணிப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய வரையறை கட்டமைப்பொன்றினை நிறுவியுள்ளது.

எஞ்சிய இடர்


எஞ்சிய இடர்களை குறைப்பதற்கான செலவு மற்றும் கால நுகர்வினை கருத்திற் கொள்கின்ற ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டமொன்றில் எஞ்சிய இடரினை பேணும் பொருட்டு இடர் ஆளுகை கட்டமைப்பிற்கு வலுவான கட்டுப்பாட்டு பொறிமுறையும் இடர் தணிப்பு நுட்பங்களும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

சில்லறை கொடுகடன் கொள்கை மற்றும் கண்டிப்பான மீள்அறவீட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்கமைவான பிணையஉறுதிவாக்குறுதி, பெறுமதி விகிதங்களுக்கான கடன் பேணுகை போன்ற இடர் தணிப்பு செயன்முறைகளை மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குகின்ற தாக்குப்பிடிக்கத்தக்க உள்ளக கட்டுப்பாட்டு சூழலானது வங்கியின் எஞ்சிய இடர் ஏற்பினுள் முகாமை செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றது.

மேலும், முன்மதியுடைய விகிதங்களைப் பயன்படுத்தி வங்கியானது கடன் இடரை அளவிடுவதுடன் தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் மூலதன ஒதுக்கீட்டு நியமங்களிலும் அளவிடுகின்றது. மொத்த கடன் இடர்காப்பின்மையில் 69.4% ஆனவை மேல் 0% இல் இடர் நிறையேற்றப்பட்டுள்ளதுடன் 3.7% மாத்திரம் 100% இல் அல்லது அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் இடர் நிறையேற்றப்பட்டுள்ளன.

கடன் இடரானது வங்கியின் இடர் ஏற்பு எல்லைக் கட்டமைப்பு மற்றும் ஒப்படைக்கப்பட்ட அதிகார வரையறைகள் என்பன ஊடாக கண்காணிக்கப்படுகின்றது. கடன் இடரானது தெளிவான மற்றும் முரணற்ற கொள்கைகள் அத்துடன் வழிகாட்டல்களுடன் ஆற்றல் வாய்ந்த இடர் ஆளுகை கட்டமைப்பொன்றின் ஊடாக முகாமை செய்யப்படுகின்றது.

ஆளுகை கட்டமைப்பு



உரு 14 கடன் இடர் ஆளுகைக் கட்டமைப்பு

கடன் இடர் ஆளுகையானது சபையிலிருந்து தோற்றம்பெற்று கடன் இடர் முகாமைத்துவ பொறுப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை விவரிப்பதற்காக இணைந்த கடன் இடர் ஆளுகையினை வழங்கி முகாமைத்துவத்தின் வேறுபட்ட மட்டங்கள் ஊடாக தொடராகச் செல்கின்றது.

சபையானது இடர் ஏற்பு மற்றும் எல்லை கட்டமைப்பு, கடன் இடர் முகாமைத்துவ கொள்கைகள், ஒப்படைக்கப்பட்ட அதிகார வரையறைகள் மற்றும் வங்கியின் குழுக் கட்டமைப்பு என்பவற்றை எடுத்துரைக்கின்ற கடன் இடர் உபாயத்தின் ஊடாக கடன் இடர் காப்பின்மை மீதான மேற்பார்வையினை வழங்குகின்றது.

சபையினால் அனுமதிக்கப்பட்ட கடன் இடர் உபாயத்தினை நடைமுறைப்-படுத்துவதற்கும் கடன் இடரை இனங்காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

சபையானது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டக் குழுக்கள் அதாவது, கடன் குழு மற்றும் முதலீட்டுக் குழு போன்றவற்றினால் மேலும் மீள் வலுவூட்டப்பட்ட சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழு மற்றும் சபைக் கடன் குழு என்பவற்றுக்கான கடன் இடர் முகாமைத்துவ மேற்பார்வை பொறுப்புடைமையினை ஒப்படைத்துள்ளது.

இடர் முகாமைத்துவ பிரிவின் கடன் முகாமைத்துவ இடர் அலகானது வங்கியின் இடர் ஏற்பு மற்றும் கொள்கை கட்டமைப்பினுள் கடன் இடரை கண்காணிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் பொறுப்புடையதாகும். கடன் இடர் முகாமைத்துவ அலகின் பொறுப்புடைமைகள் உள்ளடக்குவன:

- கொள்கைகளை புதுப்பித்தல்/இற்றைப்படுத்தல்
- அளவுசார் இடர் மாதிரிகளை உருவாக்குதலும் பேணுதலும்
- இடர் ஏற்பு எல்லையினை கண்காணித்தல்
- கொடுக்கல் வாங்கல் மற்றும் சொத்து பட்டியல் மட்டத்தில் கடன் இடர் மீளாய்வு
- கடன் மீளாய்வுப் பொறிமுறையை செயற்படுத்தல்
- முக்கிய இடர் குறிகாட்டிகள் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் என்பவற்றை கண்காணித்தல்
- கடன் குழு, முதலீட்டுக் குழு மற்றும் சபை ஊடாக சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழு என்பவற்றுக்கு அறிக்கையிடுதல்

கடன் இடர் முகாமைத்துவ செயன்முறை

செயல்திறன்மிக்க கடன் இடர் முகாமைத்துவம் ஏதேனும் வங்கியின் நீண்டகால வெற்றிக்கு அனைத்தையும் உள்ளடக்கிய இடர் முகாமைத்துவ அணுகுமுறையொன்றின் முக்கிய கூறாக விளங்குவதுடன் அத்தியவசியமானதாகும்.

தேசிய சேமிப்பு வங்கியின் கடன் இடர் முகாமைத்துவத்தின் இலக்கு, இடர் ஏற்பு மட்டத்தினுள் கடன் தரத்தினையும் கடன் இடர் தோற்றப்பாட்டினையும் பேணுவதன் மூலம் வங்கியின் இடர் சீர்செய்யப்பட்ட வருவாய் வீதத்தினை உச்சப்படுத்துவதாகும்.

சொத்துப் பட்டியல் மட்டத்திலும் கொடுக்கல் வாங்கல் மட்டத்திலும் உட்பொதிந்-துள்ள கடன் இடரை முகாமை செய்வதற்கு வங்கி இடர் முகாமைத்துவ கருவிகள் மற்றும் நுட்பங்கள் கொண்ட தொகுதியொன்றினை நிலை நிறுத்தியுள்ளது.

2017ஆம் ஆண்டின் போது, வங்கி பின்வருவன மூலம் கடன் இடர் முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கு முயற்சிகளை எடுத்தது.

- கடன் தொழிற்பாடு மற்றும் கடன் இடர் முகாமைத்துவம் என்பவற்றினை நோக்கி சபையின் மேற்பார்வை தொழிற்பாட்டினை வலுப்படுத்துவதற்கு சபை கடன் குழுவொன்றினை வகுத்தல்.
- சில்லறை கடன் நிருவாக தொழிற்பாடுகளை சுயாதீனமாக கையாளுவதற்கு பொறுப்பளிக்கப்பட்ட கடன் நிருவாக அலகொன்றினை நிறுவுதல்.
- இடரினை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் தீர்மானங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் கடன் மதிப்பீட்டினை வலுப்படுத்துவதற்கும் தரப்படுத்துவதற்கும் உள்ளக இடர் தரப்படுத்தல் மற்றும் புள்ளி வழங்குதல் முறைமையினை நடைமுறைப்படுத்தல்.

இடர் தரப்படுத்தல்

எதிர் தரப்பினரின் கடன் நம்பகத்தன்மையினை கணிப்பிடுவதற்கு வங்கி கடன் தரப்படுத்தலினை பயன்படுத்துகின்றது. கடப்பாட்டாளர் மற்றும் கடன் இடர் என்பவற்றை மதிப்பிடுகின்ற பண்புசார் மற்றும் அளவுசார் இடர் வழியலகுகளை கொண்டுள்ள உள்ளக தரப்படுத்தல்கள் மாதிரிகளைப் பயன்படுத்தி கடன் நம்பகத்தன்மை கணிப்பிடப்படுவதுடன் ஒன்பது உள்ளக தரப்படுத்தல் தரங்களின் அளவுத்திட்டத்திலிருந்து தரப்படுத்தல் தரம்மொன்று குறித்தொதுக்கப்படுகின்றது.

நிறுவன கடன் வழங்கலுக்காக அனைத்தையும் உள்ளடக்கிய செல்லுபடியான உள்ளக தரப்படுத்தலொன்றினை பொறுப்பேற்கும் வரை அங்கீகாரம் ஒன்றாக உள்ளக தரப்படுத்தலுடன் சேர்த்து வெளிவாரி தரப்படுத்தல்களும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

வங்கியானது சில்லறை கடன் வழங்குதலில் கடன் நம்பகத் தன்மையினை மதிப்பிடுவதற்கு கடன் புள்ளி வழங்கலை பயன்படுத்துகின்றது. அனைத்து வாடிக்கையாளர்களும் கடன் நம்பகத்தன்மை மற்றும் இடர் என்பவற்றை பரசீலிக்கின்ற 08 புள்ளி வழங்கல் அளவுத்திட்டமொன்றிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இம்முறைமையானது வங்கியின் அனைத்து சில்லறை கடன் உற்பத்திகளையும் உள்ளடக்கி வங்கி வலையமைப்பு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த உற்பத்தியொன்றுக்கு சில்லறை எதிர்தரப்பிலிருந்து கடன் நம்பகத்தன்மை மற்றும் இடர் பற்றிய தனியொரு எடுத்துக் காட்டாக கடன் புள்ளி வழங்கலை வங்கி கருதுகின்றது. இம்முறைமையானது கடன் அங்கீகாரம் மற்றும் இடர் அடிப்படையிலான விலையிடல் என்பவற்றை சீரமைப்பதற்கான வசதிப்படுத்துநர் ஒன்றாக செயற்படுகின்றது.

பிணைய உறுதி முகாமைத்துவமும் விலை மதிப்பீடும்

கடன் வசதிகளுக்கான பிணையமாக வங்கி பிணைய உறுதிகளை ஏற்றுக் கொள்வதுடன் முதன்மை, வட்டி, சட்ட கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை முழுமையாக உள்ளடக்குவதற்கான கடன் தீர்க்கும் இயலுமையில் போதிய பெறுமதியினை கருத்திற் கொள்கின்றது.


அசையாத ஆதனங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன் வசதிகளுக்காக வங்கி பிணைய காப்பு எல்லைகளை வரையறை செய்துள்ளது. அனைத்து அசையாத ஆதனங்களும் விலை மதிப்பீட்டாளர் குழாம் ஒன்றினால் விலை மதிப்பீடு செய்யப்படுகின்றன. தொழில்சார் விலை மதிப்பீட்டாளர் குழாம், அசையாத ஆதனங்களின் விலை மதிப்பீட்டிற்கும் மீள் விலை மதிப்பீட்டிற்குமான அனைத்து தரநியம விலை மதிப்பீட்டு மூலப்பிரமாணங்களையும் பெற்றுக் கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. வங்கியின் அசையாத ஆதனங்களின் விலை மதிப்பீடு மற்றும் மீள் விலை மதிப்பீடு மீதான கொள்கையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கடன் இடர் முகாமைத்துவ அலகானது இடரினை தணிப்பதற்கான தாயர்மிக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டியாக நிலுவைக் கடன்களின் மீள் விலை மதிப்பீட்டினை கண்காணிக்கின்றது. மேலும், அசையாத ஆதனங்கள், அடகு மற்றும் காசு துணை அளிக்கப்பட்ட கடன் வழங்கல் என்பவற்றின் பெறுமதி விகிதத்திற்கான கடன்கள் கண்காணிக்கப்பட்டு கடன் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டின்போது கடன் சொத்து பட்டியலின் 78% ஆனவை 50% இற்கும் குறைவான பெறுமதி விகிதத்திற்கான கடனுடன் கூடிய அசையாத ஆதனங்களினால் துணையளிக்கப்பட்டிருந்தன.

கடன் சொத்து பட்டியல் - பிணைய உறுதி வாரியாக

[%]



உரு 15

டிசம்பர் 31 அன்று உள்ளவாறு	2017		2016	
	ரூபா. '000	தொகுப்பு (%)	ரூபா. '000	தொகுப்பு (%)
பெறுமதி விகிதத்திற்கான கடன்				
50% இனை விட குறைவு	**51,515,268**	**78.5**	48,438,163	78.3
51-75%	**12,160,610**	**18.5**	11,334,198	18.3
75% இற்கு மேல்	**1,988,195**	**3.0**	2,110,331	3.4
	65,664,073	**100.0**	61,882,692	100.0

அட்டவணை 3: அசையாத ஆதனத்தினால் துணையளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி விகிதத்திற்கான கடன் பரம்பல்

கடன் மீளாய்வுப் பொறிமுறை

வங்கி, கடன் வழங்குதல் மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறையில் உள்ள இடைவெளிகளை உடனடியாக இனங்காணுதல் மற்றும் சீர்செய்தல் மூலம் கடன் இடரை குறைப்பதற்கான செயல்திறன்மிக்க கருவியொன்றாக கடன் மீளாய்வு பொறிமுறையினை பயன்படுத்துகின்றது. இச்செயன்முறையானது கடன் செயன்முறையினதும், கடன் தரத்தினதும் தர உத்தரவாதத்தினை உறுதி செய்கின்றது.


வங்கியின் கடன் மீளாய்வு பொறிமுறைச் செயன்முறையானது தலைமை அலுவலகம் மற்றும் கிளை மட்டங்களில் கடன் தொழிற்பாட்டினை உள்ளடக்குவதனை உறுதி செய்வதுடன் கடன் இடர் மீளாய்வு அலகானது ஒப்புதலின் மூன்று மாதங்களினுள் உயர் பெறுமதி கொண்ட கடன்களை மீளாய்வதுடன் கடன் குழுவிற்கு அறிக்கையிடுகின்றது.

மதிப்பு இழப்பு ஏற்பாடு

வங்கியின் மதிப்பு இழப்பு ஏற்பாடானது ஏற்பட்ட இழப்பு முறையியலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணிக்கப்படுகின்றது. கூட்டான மதிப்பு இழப்பிற்கான ஏற்பாடானது கடன் தரத்தின் மேம்படுகைக்கு மத்தியில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33% இனால் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டுக் காப்பு 46% ஆகும். இது உள்ளக மட்டுப்பாடுகளுக்கு இணங்கி காணப்படுகின்றது.

2018 இல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09, நிதியியல் அறிக்கையிடுதலில் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்துவதற்கான எதிர்பார்க்கையுடன் நியாயப் பெறுமதியினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஐந்தொகை சொத்துகள் மற்றும் பொறுப்புகளை ஆக்குகின்ற வங்கிகளின் வருமானக் கூற்றுகள் மீது முதன் முறையாக நேரடித் தொடர்பொன்றை கொண்டிருக்கும். இது நிதியியல் கூற்றுகளில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளை இனங்காண்பதன் காரணமாக கடன் இழப்பு ஏற்பாடுகளை அதிகரிக்கும். இது வரலாற்று ரீதியான அறிக்கையிடுதலை விட முன்னோக்கிய எதிர்பார்ப்பொன்றினுள் நிதியியல் கூற்றுகளை தூண்டுவதாய் இருக்கும்.

செயற்படா கடன் எதிர் மதிப்பு இழப்பு ஏற்பாடு



உரு 16

இடர் மாற்றல்

வங்கியானது இடர் மாற்றல் உபாயமொன்றாக காப்புறுதியினை பயன்படுத்துகின்றது. இது, காப்புறுதி வழங்குநருக்கான ஒப்பந்தசார் இடர் இடமாற்றலொன்றை ஈடுபடுத்துகின்றது. கடன் பெறுநரின் கடன் நம்பகத்தன்மையினை கருத்திற் கொண்டு கடன் மீள் கொடுப்பனவுகளுக்கான மேலதிகக் காப்பொன்றாக வங்கி குறைந்து செல்லும் நியம உத்தரவாதத்தினை பயன்படுத்துகின்றது. மேலும், அசையாத ஆதனங்களினால் துணையளிக்கப்படும் சில்லறை மற்றும் நிறுவனக் கடன் வழங்கல் இரண்டிலும் உள்ள இடரினை மாற்றுவதற்கு உரித்து காப்புறுதி அத்துடன் தீக் காப்புறுதி என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

சூழ்நிலை பகுப்பாய்வும் தகைவுச் சோதனையும்

சூழலில் பாதகமான பொருளாதார, அரசியல் மற்றும் பௌதீக மாற்றங்களின் காரணமாக மாறுபடும் கடுமையான எதிர்பாராத நிகழ்வுகளிலிருந்து வங்கிக்கான கடன் இடரினை மதிப்பிடுவதற்கு வங்கி சூழ்நிலைப் பகுப்பாய்வு மற்றும் தகைவுச் சோதனை என்பவற்றைப் பயன்படுத்துகின்றது.

கடன் இடருக்கான தகைவுச் சோதனையானது பாசல் III இன் கீழ் வங்கியின் மூலதனப் போதுமை நிலைமை மீதான பொருளாதார நெருக்கடித் தாக்கத்தினை மதிப்பிடுகின்றது. இச்சோதனையானது அதிகரித்த தவணை தவறுதலின் நிகழ்வு மட்டத்தினை மதிப்பிடுகின்றது. இது இரு வழி தாக்கமொன்றினை கொண்டிருக்கக் கூடியது. மேலதிக எதிர்கால பொறுப்பு தேவைப்பாடுகளுடன் கூடிய சொத்து தரத்தில் சீரழிவு காரணமாக வங்கியின் இடர் நிறையேற்றப்பட்ட சொத்துகள் அதிகரிக்கும்.

விபரம்	மொத்த மூலதனப் போதுமை விகித தாக்கம் சாதகமானது/(பாதகமானது)(%)		
	குறைவானது	நடுத்தரமானது	உயர்வானது
கடன் இடர் - பொருளதார நெருக்கடி காரணமாக தவணை தவறுதல் நிகழ்வு அதிகரிப்பு *(குறைவு - 10% - நடுத்தரம் - 20% - உயர்வு - 30%)*	(0.12)	(0.24)	(0.36)

அட்டவணை 4: தகைவுச்சோதனை - கடன் இடர்

சந்தை இடர்

சந்தை இடர் என்பது விலை மாற்றங்கள் தனிப்பட்ட சாதனங்களுக்கான அல்லது அவற்றின் வழங்குநருக்கான அல்லது எதிர்தரப்பினருக்கான வழமையான காரணிகள் மூலம் அல்லது சந்தை மீது வர்த்தகப்படுத்தப்பட்ட அனைத்து சாதனங்களுடனும் தொடர்புடைய காரணிகள் மூலம் அல்லது சந்தை விலை மாற்றங்களின் விளைவொன்றாக இவ்விலை மாற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதா என்பதனை கருத்திற் கொள்ளாது ஐந்தொகை மீது மற்றும் ஐந்தொகைக்கு வெளியில் இரண்டிலும் நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் பெறுமதி தளம்பலடைகின்ற இடராகும். இதனால் சந்தை இடரானது நான்கு பிரதான பொருளாதார சந்தைகள் மீதான அதாவது, படுகடன் பிணையச் சந்தை, பங்குச் சந்தை, நாணயச் சந்தை மற்றும் வணிகப் பொருள் சந்தை என்பன மீதான விலை உறுதியின்மையுடன் இணையப் பெற்றுள்ளது.

இச்சந்தைகளின் விலைத் தளம்பல்கள், வர்த்தகப்படுத்தல் மற்றும் வங்கித்தொழில் பதிவேடு இரண்டிலும் வட்டி வீத இடர், பங்குமூலதன விலை இடர், வெளிநாட்டு செலாவணி இடர் மற்றும் வணிகப் பொருள் விலை இடர் என்பவற்றில் விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வங்கியானது வணிகப் பொருட்களில் முதலீடுகள் எதனையும் கொண்டிரா-மையினால் வணிகப் பொருள் விலை இடருக்கு நேரடி காப்பின்மையினைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தங்க விலைகள், மசகு எண்ணெய் விலைகள் போன்ற உலக வணிகப் பொருட்களின் விலை மாற்றங்கள், வங்கியின் வியாபார நடவடிக்கைகளை நேரடியற்று பாதிக்கின்றன.

வட்டி வீதங்கள், பங்குமூலதன விலைகள் மற்றும் செலாவணி வீதங்களில் சாதகமற்ற அசைவுகளானது நிதியியல் சாதனங்களில் சந்தைப் பெறுமதி, உண்மையான மற்றும் செயல்திறன்மிக்க உழைப்புகள் மற்றும் நிதியியல் சாதனங்களின் சொத்துப் பட்டியல் ஒன்றில் எதிர்காலக் காசுப் பாய்ச்சல் என்பவற்றில் வீழ்ச்சியினை தோற்றுவிக்கின்றது.

டிசம்பர் 31இல் உள்ளவாறு	ரூபா '000 (கணக்காய்வு செய்யப்பட்டது)			
	முதநிலைச் சந்தை இடர் காரணி	கொண்டுள்ள தொகை	சந்தை இடர அளவீடுகள்	
			வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல்	வர்த்தகப்படுத்தப்படாத சொத்துப்பட்டியல்
சந்தை இடருக்கு உட்படுகின்ற சொத்துகள்				
காசும் காசுக்கு சமமானவையும்	IRR*	3,849,627	–	**3,849,627**
வங்கிகளுடனான இருப்புகள்	IRR, FX**	23,438,104	–	**23,438,104**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	FX	1,360,714	1,360,714	–
ஏனைய நிதியியல் சொத்துகள் -வர்த்தகத்திற்காக வைக்கபட்டவை	IRR, பங்குமூலதனம்	6,472,314	6,472,314	–
வங்கிகளுக்கான கடன்களும் வருமதிகளும்	IRR	27,714,565	–	**27,714,565**
ஏனைய வாடிக்கையாளர்களுகான கடன்களும் வருமதிகளும்	IRR	360,309,866	–	**360,309,866**
நிதியில் சொத்துகள் - விற்பனைக்கானவை	IRR, பங்குமூலதனம்	5,693,829	5,693,829	–
நிதியில் சொத்துகள் - முதிர்வுக்காக வைக்கப்பட்டவை	IRR	544,273,077	–	**544,273,077**
		973,112,096	**13,526,857**	**959,585,239**
சந்தை இடருக்கு உட்படுகின்ற பொறுப்புகள்				
வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டியவை	IRR	180,439	–	**180,439**
பெறுதி நிதியியல் சாதனங்கள்	FX	956,937	956,937	
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டியவை	IRR	737,212,640	–	**737,212,640**
ஏனைய கடன்பாடுகள்	IRR, FX	217,955,777	–	**217,955,777**
சார்புநிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்	IRR	6,006,411	–	**6,006,411**
		962,312,204	**956,937**	**961,355,267**

அட்டவணை 5: சந்தை இடர் தோற்றப்பாடு

** வட்டி வீத இடர்*

*** வெளிநாட்டுச் செலாவணி இடர்*

அரசாங்கப் பிணையங்களின் வைப்புகளில் 60% இனை வைத்திருப்பதற்கு வங்கி கட்டாயப் படுத்தல் ஒன்றினைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் வங்கி, அரசாங்கப் பிணையங்களில் (வர்த்தகப்படுத்தல் மற்றும் வங்கித் தொழில் பதிவேடு) வைப்புகளின் 67% இனையும் மொத்த சொத்துகளின் 49% இனையும் வைத்திருந்தது. இது அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் தளம்பல்களின் காரணமாக வட்டி வீத இடருக்கு வங்கியினை ஆட்படுத்தியது.

பங்குமூலதன முதலீடானது வங்கியின் மொத்த முதலீடுகளின் ஒப்பீட்டளவில் சிறிய பாகம் ஒன்றாகும். இங்கு பங்குமூலதன முதலீட்டின் 53% வர்த்தகப்படுத்தல் முதலீடுகளில் காணப்படுவதுடன் 47% உபாய முதலீடுகளில் உள்ளன. வங்கியின் மொத்த பங்குமூலதன முதலீடுகள், 2017 ஆம் ஆண்டின் மொத்த சொத்துகளின் 1% இற்கு கீழ் காணப்பட்டன.

வங்கியின் வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகளானவை வெளிநாட்டு நாணய வர்த்தகம், வைப்புகளை ஏற்றுக் கொள்ளல், பணவனுப்பல்கள், கடன் வழங்கல், இருப்புகள், பெறுதிகள் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் முறி வழங்கலுக்கான நிலுவைக் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

இடர் மீளாய்வு

வங்கியின் சந்தை இடரானது வட்டி வீத இடர், வெளிநாட்டு செலாவணி இடர் மற்றும் பங்குமூலதன விலை இடர் ஆகிய நியதிகளில் மீளாயப்படுகின்றது. இது வர்த்தகப்படுத்தப்பட்ட, மற்றும் வர்த்தகப்படுத்தப்படாத சொத்து பட்டியல்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. வேறுபட்ட முறையியல்கள் மற்றும் மாதிரிகளைப் பயன்படுத்தி வங்கியின் சந்தை இடர் தோற்றத்தினை வங்கி மீளாய்வு செய்கின்றது.

இடர் கூறு	விபரம்	கண்காணித்தல்/முகாமைத்துவக் கருவிகள்	காப்பின்மை	தாக்கம்*
வட்டி வீத இடர்				
மீள் விலையிடல் இடர்	ஐந்தொகை மீதும் ஐந்தொகைக்கு வெளியிலும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான வீத உணர்விலிருந்தான வீத மாற்றங்கள் அல்லது காசுப் பாய்ச்சல்களுக்கு இடையிலான காலம் குறிப்பிடுதல் வேறுபாடுகளிலிருந்து இவ்விடர் தோன்றுகின்றது.	• மீள் விலையிடல் இடைவெளி எல்லைகள் மற்றும் வீத உணர்வு சொத்துகள் மற்றும் வீத உணர்வு பொறுப்புகள் என்பவற்றை கண்காணித்தல்	உயர்வானது	உயர்வானது
விளைவு வலையி இடர்	நீண்ட கால வீதங்களின் கூடிய அல்லது குறைவான மாற்றங்கள் மூலம் குறுகிய கால வீத மாற்றங்களின் இடர்	• உணர்வுத் தன்மை/வீத அதிர்வுகளுடன் தகைவுச் சோதனை	உயர்வானது	உயர்வானது
அடிப்படை இடர்	ஒரே மாதிரியான முதிர்வு அல்லது மீள் விலையிடல் திகதிகளுடன் கூடிய வீத உணர்வுச் சொத்துகள் மற்றும் வீத உணர்வுப் பொறுப்புகள் மீதான வட்டி வீதங்களில் சமமற்ற அசைவுகளிலிருந்தான இடர்	• -வீத உணர்வுச் சொத்துகள் மற்றும் வீத உணர்வுப் பொறுப்புகள் மீதான வீத அதிர்வுகளின் உணர்வுத் தன்மை	உயர்வானது	உயர்வானது
வெளிநாட்டு செலாவணி இடர்	வெளிநாட்டு நாணய நிலைமைகளில் முதிர்வு உணர்வுச் சொத்துகள் மற்றும் வீத உணர்வுப் பொறுப்புகளின் மீள் விலையிடல் காலங்களில் பொருத்தமின்மைகளிலிருந்து தோன்றுகின்ற செலாவணி வீதங்களின் பாதகமான மாற்றங்களில் இருந்து தோன்றுகின்ற வருவாய் அல்லது மூலதனம் மீதான சாத்தியமான தாக்கம்	• எல்லை கண்காணித்தல் • இடரில் உள்ள வெளிநாட்டு செலாவணி பெறுமதி • தகைவுச் பரிசோதனை	உயர்வானது	நடுத்தரமானது
பங்கு மூலதனம்	பங்கு மூலதனச் சந்தைகளிலிருந்தான மாற்றங்களில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான நட்டங்கள்	• இடரிலுள்ள பங்கு மூலதனப் பெறுமதி • எல்லை கண்காணித்தல் • நாளாந்த அடிப்படையில் சந்தைப் பெறுமதி வர்த்தகப் படுத்தலும் விற்பனைக்காக கிடைக்கத்தக்க சொத்துப் பட்டியலும்	குறைவானது	குறைவானது
வணிகப் பொருள்	வணிகப் பொருள் விலைகளில் (தங்கம்) மாற்றங்களின் காரணமாக வருவாய் மீது சாத்தியமான எதிர்மறையான தாக்கம்	• அடகு முற்பணங்களுக்கு எதிரான பிணைய உறுதிப் பெறுமதி மீதான நேரடியற்ற தாக்கம்	நேரடியான காப்பின்மை இல்லை	குறைவானது

**உயர்வான தகைவு நிலைமையொன்றில் வருவாய் மற்றும் மூலதனம் மீதான சாத்தியமான தாக்கம்*

அட்டவணை 6: சந்தை இடர் மீளாய்வு

வட்டி வீத இடர்

வட்டி வீத இடர் என்பது வட்டி வீதங்களில் நிகழக்கூடிய மாற்றங்களின் காரணமாக வங்கியின் தேறிய பெறுமதியினை சீர்கெடுக்கின்ற உழைப்புகள் மற்றும் மூலதனம் என்பவற்றில் குறைகின்ற இடராகும். வங்கியானது வர்த்தகப்படுத்தல் ஏடுகளிலுள்ள அதன் முதலீடுகள் அதே போன்று வங்கி ஏடுகளிலுள்ள வீத உணர்வுச் சொத்துகள் மற்றும் வீத உணர்வுப் பொறுப்புகளின் மீள் விலையிடல் காலங்களில் பொருத்தமின்மை என்பற்றிலிருந்து தோன்றுகின்ற வட்டி வீத இடருக்கு ஆட்படுகின்றது.

வங்கி, வட்டி வீத மீள் விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வொன்றின்னூடாக வட்டி வீத இடரினை அடிப்படையில் மதிப்பிடுகின்றது. வட்டி வீத மீள்விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வானது வரையறை செய்யப்பட்ட முதிர்வு தொகுதிகளினுள் மீள் விலையிடப்படுகின்ற வட்டி, உழைக்கின்ற சொத்துகளினதும் வட்டியுடைய பொறுப்புகளினதும் தொகைக்கிடையிலான வேறுபாட்டை அளவிடுகின்றது.

	<1 மாதம் ரூபா மில்	1-3 மாதம் ரூபா மில்	3-6 மாதம் ரூபா மில்	6-12 மாதம் ரூபா மில்	1-3 வருடம் ரூபா மில்	3-5 வருடம் ரூபா மில்	>5 வருடம் ரூபா மில்
வீத உணர்வுச் சொத்து	24,624	30,922	61,835	199,780	178,933	155,174	310,219
வீத உணர்வுப் பொறுப்பு	199,861	256,153	129,752	316,234	47,012	10,138	2,206
கால இடைவெளி (வீ.உ.சொ-வி.உ.பொ)	(175,237)	(225,231)	(67,917)	(116,454)	131,921	145,036	308,013
திரண்ட இடைவெளி	(175,237)	(400,468)	(468,385)	(584,839)	(452,918)	(307,882)	131
வீ.உ. பொறுப்பின் சதவீதமொன்றாக உண்மை இடைவெளி - 2017	(88%)	(88%)	(52%)	(37%)	281%	1,431%	13,966%
வீ.உ. பொறுப்பின் சதவீதமொன்றாக உண்மை இடைவெளி - 2016	(74%)	(89%)	(32%)	(64%)	76%	1,111%	–

அட்டவணை - 07 வட்டி வீத உணர்வுத் தன்மைப் பகுப்பாய்வு

வர்த்தகப்படுத்தல் ஏடுகளில் வட்டி வீத இடர்

அரசாங்க பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்காக கிடைக்கப்பெறுகின்ற சொத்துப்பட்டியலானது திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் உள்ளடக்குகின்றது. இது ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 4.2 பில்லியன் மற்றும் 1.2 பில்லியன் தொகையாகவிருந்தது. அரசாங்க பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் சொத்துப்படுத்தலின் வட்டி வீத இடரானது சொத்துப் பட்டியலின் நியாயப் பெறுமதியளவீட்டில் மதிப்பிடப்படுகின்றது. மேலும், பங்குமூலதன காலம் காலாண்டு அடிப்படையொன்றில் கண்காணிக்கப்படுகின்றது.

வங்கி ஏடுகளில் வட்டி வீத இடர்

சந்தை இடர் முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வங்கி ஏட்டின் பிரதான அம்சம், தேறிய வட்டி வருமானம் பங்குமூலதன பொருளாதாரப் பெறுமதி போன்ற உழைப்புகள் மீதான வட்டி வீத அசைவுகளின் சாத்தியமான பாதாகமான தாக்கத்தினை குறைப்பதில் ஈடுபடுகின்றது. இவ் இடர் வங்கி ஏடு சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வேறுபட்ட மீள் விலையிடல் பண்புகளிலிருந்து விளைகின்றது.

பங்குமூலதன இடர்

பங்குமூலதன இடரானது வருமானம் மற்றும் ஒதுக்குகளில் சாத்தியமான மாறுபாடுகளுக்கு வங்கியினை ஆட்படுத்தி பங்குச் சந்தை இயலாற்றலின் காரணமாக தேசிய சேமிப்பு வங்கியின் முதலீடுகள் தேய்வடைகின்ற இடரினை குறிப்பீடு செய்கின்றது. வங்கியானது சாதாரண பங்குகள் மற்றும் கூறு நம்பிக்கைகள் இரண்டிலும் பட்டியிலடப்பட்ட பட்டியலிடப்படாத சாதனங்களின் அதன் முதலீடுகளிலிருந்தான பங்குமூலதன நிலைக்கு ஆட்படுகின்றது.

வங்கியின் பட்டியிலிடப்பட்ட பங்குமூலதன சொத்துப்பட்டியலானது வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்காக கிடைக்கப்பட்ட பங்குமூலதன இரண்டினையும் உள்ளடக்குவதுடன் பங்குமூலதனத்தில் முதலீட்டு அடிப்படை அதன் எல்லைக் கட்டமைப்பு மூலமும் அதன் முதலீட்டுக் கொள்கைக் கூற்று மூலமும் இடைநடுப்படுத்தப்பட்டுள்ளது.


	2017		2016		தேறாத இலாபம்/(நட்டம்)
	ஏட்டுப் பெறுமதி ரூபா '000	சந்தைப் பெறுமதி ரூபா '000	ஏட்டுப் பெறுமதி ரூபா '000	சந்தைப் பெறுமதி ரூபா '000	ரூபா '000
வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல்	**3,521,949**	**2,357,336**	4,533,006	3,095,911	(738,575)
விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற சொத்துப்பட்டியல்	**3,107,875**	**4,440,951**	2,753,905	4,123,733	317,218
மொத்தம்	**6,629,824**	**6,798,287**	7,286,911	7,219,644	(421,357)

அட்டவணை 08: பங்குமூலதன நிலை

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது பங்குச்சந்தை சுறுசுறுப்பாக காணப்பட்டதுடன் பட்டியலிடப்பட்ட பங்குமூலதனங்களில் முதலீடுகளில் அதிகரித்த உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர் ஆர்வத்தினை காணக்கூடியதாகவிருந்தது. அதற்கமைய, பிரதான சுட்டெண்கள் அதாவது அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் எஸ் அன்ட் பி எஸ் எல் 20 என்பன வங்கியின் பங்குமூலதன முதலீடுகளில் சாதகமான வருவாயொன்றினை எய்தி 2% மற்றும் 5% இனால் அதிகரித்தது. ஆண்டின் போது, வங்கி, பங்குமூலதன முதலீடுகளிலிருந்து (பட்டியலிடப்படாத முதலீடுகள் தவிர) மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களாக ரூபா 225.9 மில்லியன் மற்றும் ரூபா 297.1 மில்லியன் பெற்றுக்கொண்டது. இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்டதை விட கணிசமானளவு உயர்வானதாகும்.


2017 ஆம் ஆண்டானது பாசல் III மூலதன தேவைப்படுத்தலுடன் இணங்கியொழுகுவதில் மூலதனத்தை திரட்டுவதற்காக ஆண்டுமுழுவதும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உரிமை வெளியீடுகள் மற்றும் தொகுதிக் கடன் வெளியீடுகளின் ஆண்டாக இருந்தது. இதனால் உயர் திரவத் தன்மைமிக்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்குகளை நோக்கிய அதிகரிக்கப்பட்ட முதலீட்டாளர்களின் ஆர்வமானது 2017ஆம் ஆண்டு மேம்படடிருந்ததுடன் நியாயப் பெறுமதி அளவீட்டில் இலாபங்களைப் பதிவு செய்தது.

பங்குமூலதன சொத்துப் பட்டியல் தொகுப்பு



உரு 17

பங்குமூலதன வருவாய் எதிர் சந்தை வருவாய்



உரு 18

வெளிநாட்டு நாணய இடர்

வெளிநாட்டு நாணய இடர் என்பது செலாவணி வீதத்தில் எதிர்பாராத மற்றும் சாதகமற்ற தளம்பல்களின் விளைவொன்றாக வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட சொத்தொன்று அல்லது முதலீடு அல்லது கொடுக்கல் வாங்கல்கள் பெறுமதி இழக்குகின்ற இடராகும். 2017 இன் போது ஐ.அ.டொ/ரூபா சராசரி வீதம் ரூபா 149.81 – 153.70 வீச்சில் தளம்பலடைந்தது. (மூலம்: இலங்கை மத்திய வங்கி) ஆண்டுக்கான ரூபா மதிப்பிறக்கம் 2.3% ஆகவிருந்தது.

வர்த்தகப்படுத்தல் மற்றும் ஏனைய வியாபார தொழிற்பாடுகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அங்கீகாரத்துடன் வங்கி அதன் வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகளை விரிவுபடுத்தியது.

ஐ.அ.டொ 1000 மில்லியன் மொத்த தொகைக்கான ஐ.அ.டொலரில் வகைப்படுத்தப்பட்ட முறிகள் வழங்கலானது வங்கியின் வெளிநாட்டு நாணய இடர்காப்பின்மைகளை அதிகரித்தது. மூலதன மீட்பிலுள்ள வெளிநாட்டு நாணய இடர், இலங்கை மத்திய வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினூடாக, முறையே 2018 மற்றும் 2019 களில் ஒரே தடவை கொடுப்பனவு நிலுவையினை வசதிப்படுத்தும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகள் மற்றும் அரசுக்குரித்தான தொழில் முயற்சிகளுக்கான ஐ.அ.டொ கடன் வழங்கல் ஊடாக காப்பளிக்கப்பட்டுள்ளது.


நாணயம்	<1 மாதம் ரூபா '000	1-3 மாதம் ரூபா '000	3-6 மாதம் ரூபா '000	6-12 மாதம் ரூபா '000	1-3 வருடம் ரூபா '000	>3 வருடம் ரூபா '000	மொத்தம் ரூபா '000
ஐ.அ.டொலர்	69,623,008	1,669,527	4,672,413	(22,577,603)	(38,257,264)	–	15,130,081
யூரோ	(262,453)	405,044	350,989	307,925	–	–	801,505
ஸ்ரேலிங் பவுண்	(122,887)	364,061	217,589	(371,954)	–	–	86,809
சிங்கப்பூர் டொலர்	75	–	–	–	–	–	75
அவுஸ்திரேலிய டொலர்	(53,672)	77,254	238,141	(215,090)	–	–	46,633
யப்பான் யன்	(121)	–	–	–	–	–	(121)

அட்டவணை: 9 வெளிநாட்டு நாணய முதிர்வு இடைவெளிகள்

வெளிநாட்டு நாணய இடரானது அனைத்து வெளிநாட்டு நாணயங்களிலும் காப்பிடப்படாத நிலையுடன் இணையப்பெற்றதாகும். வங்கியானது தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தேறிய வெளிநாட்டு நாணய இடர்காப்பின்மையினை கருத்தில் கொண்டு வெளிநாட்டு நாணய இடருக்கான மூலதனத்தினை ஒதுக்கீடு செய்கின்றது. திறைசேரி தொழிற்பாடுகளின் வெளிநாட்டு நாணய இடரின் முக்கிய குறிகாட்டிகளில் ஒன்றான நாளாந்த தேறிய திறந்த நிலை கண்காணிக்கப்பட்டு தொடர்புடைய அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்டுள்ள விதிவிலக்குகளற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட விதிவிலக்குகளுடன் ஆண்டு முழுவதும் கடைபிடிக்கப்படுகின்றது.

உள்ளக வரையறைக்கு எதிரான நாளாந்த தேறிய திறந்த நிலை

[ஐ.அ.டொ 000]



உரு 19

ஆளுகைக் கட்டமைப்பு

வங்கியின் இடர் முகாமைத்துவத்தின் இன்றியமையாத பாகமொன்றான முன்மதிவுடைய சுயாதினமான சந்தை இடர் ஆளுகைக் கட்டமைப்புடன் வங்கி வசதியளிக்கப்பட்டுள்ளது. சந்தை இடர் ஆளுகையானது சபையினதும் வங்கியின் முகாமைத்துவக் குழுக்களினதும் முதன்மை பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது.


வங்கியின் இலாபத்தன்மை, மூலதன மட்டங்கள் மற்றும் இடர் தோற்றம் என்பன மீதான சந்தை இடர் காரணிகளின் தாக்கத்தினை முகாமை செய்வதற்கு வங்கியின் சந்தை இடர் ஏற்பு, கோட்பாடுகள், கொள்கைகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் அறிக்கையிடுதல் என்பன ஒழுங்கு விதிகள் மற்றும் தொழிற்துறையின் சிறந்த நடத்தைகள் போன்றவற்றுக்கு முற்றிலும் இசைவாகக் காணப்படுகின்றன.

சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழுவானது வங்கியின் இடர் ஏற்பினை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றுகை/இடர் வழியலகுகளினுள் ஐந்தொகையினை முகாமை செய்வதற்கு பொறுப்பான முகாமைத்துவ மட்டத்தின் உச்ச மட்ட குழு ஆகும். முதலீடுகளிலுள்ள இடரை முகாமை செய்யும் பொருட்டு வங்கியின் முதலீட்டு சொத்துப் பட்டியலை அல்லது அதன் பாகமொன்றினை முதலிடுவதற்கு அல்லது முதலீட்டிலிருந்து மீட்பதற்கு அவசியமாயின் அல்லது விரும்பத்தக்காதாக கருதப்படுமாயின் பரிந்துரைகளை பரிந்துரைப்பதன் மூலம் முதலீட்டுக் குழு பணிப்பாளர் சபைக்கு பரிசீலனை வழங்கும்.

இடர் முகாமைத்துவப் பிரிவின் சந்தை இடர் முகாமைத்துவ அலகானது, சந்தை இடர்கள் பற்றிய தெளிவான அனைத்தையும் உள்ளடக்கிய புரிதலொன்றை சபைக்கும் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்துக்கும் வழங்குவதற்கு பொறுப்புடையதாகும். சந்தை இடர் முகாமைத்துவ அலகின் பொறுப்புகள் உள்ளடக்குவன:

- கொள்கைகளை இற்றைப்படுத்தல்
- பண்புசார் இடர் மாதிரிகளை உருவாக்குதலும் பேணுதலும்
- திறைசேரி தொழிற்பாடுகள், இடர் ஏற்புக்கு எதிரான காப்பின்மை மற்றும் நிலை எல்லைகள் அத்துடன் திறைசேரி எல்லைகள் போன்றவற்றை கண்காணித்தல்
- வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் நாளாந்த மீளாய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை நடாத்துதல்.
- கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துப்பட்டியல் மட்டத்தில் முக்கிய இடர் காப்பின்மைகளை கண்காணித்தல்

சந்தை முகாமைத்துவ அலகின் பாகமொன்றான திறைசேரி மத்திய அலுவலகமானது முன் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்கு எதிராக வங்கியின் திறைசேரி தொழிற்பாடுகளில் உட்பொதிந்த இடர் மற்றும் வர்த்தகப்படுத்தல் இடர் என்பவற்றை கண்காணித்தல், அளவிடுதல், பகுப்பாய்தல் மற்றும் அறிக்கையிடுதலுக்காக நாளாந்த அடிப்படையில் வங்கியின் திறைசேரி முன்னரங்கு அலுவலகம் மற்றும் திறைசேரி நிருவாக அலுவலகம் என்பவற்றிலிருந்து சுயாதீனமாக தொழிற்படுகின்றது. அவதானிப்புகள், சுயாதீன அபிப்ராயம் ஒன்றினை வழங்கி முதலீட்டுக் குழு சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு மற்றும் சபை என்பவற்றுக்கு நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது.



உரு 20 – சந்தை இடர் ஆளுகைக் கட்டமைப்பு

சந்தை இடர் முகாமைத்துவச் செயன்முறை

வங்கியானது சந்தை இடர் காப்பின்மைகளை முகாமை செய்து கட்டுப்படுத்துகின்ற அதேவேளை இடர் ஏற்புக்கு இசைவாக சந்தை இடர் தோற்றத்தினை பேணுகின்றது. சொத்தப்பட்டியல் மற்றும் கொடுக்கல் வாங்கல் மட்டத்தில் சந்தையிலுள்ள தோற்றப்பாடுகளை கண்காணிப்பதற்கு வங்கி பல்வேறு மாதிரிகள், முறையியல்கள், மற்றும் கருவிகளை பயன்படுத்துகின்றது.

வரையறைகளை கண்காணித்தல்

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இடர் வரையறை கட்டமைப்பொன்று இடர் கட்டுப்படுத்தல் மற்றும் தணித்தலுக்கான முக்கிய பொறிமுறைகளில் ஒன்றாக விளங்குகின்றது. வங்கியானது திறைசேரி மத்திய அலுவலகத்தின் தொழிற்பாடொன்றாக திறைசேரி தொழிற்பாட்டை கண்காணிப்பதற்கு இடர் ஏற்பு மற்றும் அனைத்தையும் உள்ளடக்குகின்ற இடர் வரையறை கட்டமைப்பொன்றினை நிறுவியுள்ளது. இவ்வரையறைகள், வருடாந்த அடிப்படையில் அல்லது இடர்மிக்க சூழல் மாற்றமடையச்செய்கின்ற உள்ளக அல்லது வெளிவாரி நிகழ்வொன்று இடம்பெறுதலின் மீது மீளாயப்படுகின்றது. இடர் வரையறைகளுக்காகவும் இடர் வரையறை கட்டமைப்பினுள் சந்தை இடர் மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகளை கண்காணிப்பதற்காகவும் சபையின்/சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவின் அனுமதி பெறப்படுகின்றது.

இடர் வரையறைகளானது திறைசேரித் தொழிற்பாடுகள் மற்றும் வர்த்தகப்படுத்தல் அத்துடன் வர்த்தகப்படுத்தப்படாத சொத்துப் பட்டியல்களை உள்ளடக்குகின்ற தெளிவான அதிகார வரையறைகளை உள்ளடக்குகின்றன. வரையறைக் கட்டமைப்பானது வங்கியின் சந்தை இடர் தொடர்புபட்ட நடவடிக்கைகளின் செயல்திறன்மிக்க கட்டுப்பாட்டினை வசதிப்படுத்தும் விதத்தை போதியளவாக்கப்பட்டுள்ளதுடன் திறைசேரி முன்னரங்கு அலுவலகத்தினால் பொறுப்பேற்க்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய தொடர்சியான மீளாய்வினையும் புரிந்துகொள்ளளினையும் வழங்குகின்றது.

திறைசேரி மத்திய அலுவலகமானது மிகவும் அடிக்கடி நிகழும் அடிப்படையில் இடர் வரையறைகளுக்கு எதிராக வட்டி வீதங்கள், பங்குமூலதன விலை மற்றும் வெளிநாட்டு நாணய வீதங்கள் போன்றவற்றின் தளம்பங்களை உண்ணிப்பாக கண்காணிக்கின்றது. வெளிநாட்டு நாணய இருப்பு, அரசாங்க பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு காப்பின்மைகள் மீதான எதிர்த்தரப்பு இடர் வரையறைகள் நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன. ஏதேனும் விதிவிலக்குகள் இருப்பின், முதலீட்டுக் குழுவுக்கும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழுவுக்கும் சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றன.


இடரில் உள்ள பெறுமதி

“இடரிலுள்ள பெறுமதி” என்பது சந்தை வீதங்களின் மற்றும் விலைகளின் அசைவுகள் காரணமாக குறித்த காலவீச்சொன்றிலும் ஊகிக்கப்பட்ட நம்பிக்கை மட்டமொன்றிலும் இடர் நிலைமைகள் மீதான சாத்தியமான நட்டங்களை மதிப்பீடுவதற்கான நுட்பமொன்றாகும். வங்கியானது பங்குமூலதன விலையிடலையும் வெளிநாட்டு நாணய இடரையும் முகாமை செய்வதற்கும் இடரிலுள்ள பெறுமதி மாதிரிகளை உள்ளக ரீதியாக உருவாக்கியுள்ளது.

வங்கியின் இடர் ஏற்புக்கு எதிராக கண்காணிப்பதற்கு 365 நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்கான வரலாற்று தரவுகளை பயன்படுத்துகின்ற 99% நம்பிக்கை மட்டத்தினையும் மற்றும் 10 நாள் பிடித்துவைத்தல் காலமொன்றினையும் கருத்தில் கொண்டு பாசல் III இற்கு அமைவாக வங்கி, பங்குமூலதன இடர் பெறுமதியினையும் வெளிநாட்டு நாணய இடர் பெறுமதியினையும் கணிப்பதுடன் நாளாந்த அடிப்படையில் பொது முகாமையாளர் - திறைசேரி/ திறைசேரி முன்னரங்கு அலுவலகத்திற்கு அறிக்கையிடுகின்றது. அனைத்து விதிவிலக்குகளும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழுவுக்கும் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவூடாக சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றது.


ஏற்பு வரையறையகளுக்கு எதிரான இடரிலுள்ள பங்குமூலதனப் பெறுமதி

[ரூபா மில்லியன்)]



உரு 21

இடரிலுள்ள வெளிநாட்டு நாணயம்



உரு 22

உணர்வுப் பகுப்பாய்வு

உணர்வுப் பகுப்பாய்வானது விளைவில் ஒரு அடிப்படை புள்ளி மாற்றத்தின் தாக்கம் போன்ற வட்டி வீதங்கள், வெளிநாட்டு செலாவணி வீதங்கள் மற்றும் பங்குமூலதன விலைகள் உள்ளடங்கலாக குறித்த சாதனங்கள் அல்லது சொத்துப்பட்டியல்கள் மீதான தனிப்பட்ட சந்தை காரணி அசைவுகளின் தாக்கத்தினை அளவிடுகின்றது.

பாதகமான வட்டி வீத தளம்பல்களின் காரணமாக வர்த்தகப்படுத்தல் மற்றும் வங்கி ஏடுகள் மீதான தாக்கத்தினை இனங்காண்பதற்கு வங்கி பிரதானமாக உணர்வு பகுப்பாய்வினை பயன்படுத்துவதுடன் கால முறையான அடிப்படையொன்றில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கப்டுகின்றது. இவ்வறிக்கைகள், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்திலும், வங்கியின் விலையிடல் தீர்மானங்களிலும் முக்கியமானவையாக விளங்குகின்றன.

தகைவுச் சோதனை

தகைவுச் சோதனையானது தெளிவாகத் தெரியக்கூடிய நிகழ்வுகள் அல்லது சந்தை அசைவுகள் இருப்பினும் சொத்துப்பட்டியல் பெறுமதிகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை மிகவும் கடுமையான தன்மையிலிருந்து மதிப்பிடுவதற்கு சந்தை இடர் முகாமைத்துவ கட்டமைப்பினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள முக்கிய வழிமுறையொன்றாக காணப்படுகின்றது.

சந்தை இடர் முகாமைத்துவ அலகானது வங்கியின் தகைவுச் சோதனை கொள்கைக்கு அமைவாக தகைவுச் சோதனைகளை நடாத்துகின்றது. சந்தை இடர் தகைவுச் சோதனையானது வட்டி வீதங்கள், பங்குமூலதன விலைகள், வெளிநாட்டு செலாவணி வீதங்கள் போன்ற சந்தை மாறிலிகளின் பாதகமான அசைவுகளின் காரணமாக மூலதனப் போதுமை விகிதத்திற்கான (பாசல் III) தாக்கத்தினை மதிப்பிடுகின்றது. தகைவுப் பரிசோதனை நடைமுறையானது சாத்தியமான பாதகமான தாக்கங்களை இனங்காணுவதற்கு வங்கியினை இயலச்செய்கின்றது. இது திட்டமிடப்பட்ட தீர்மானங்களையும் தணிப்புகளையும் எடுப்பதனை இயலச்செய்கின்றது.

	வர்த்தகப்படுத்தல் ரூபா '000	விற்பனைக்கு ரூபா '000	மொத்தம் சுள. "000
2017 இன் இறுதியில் உள்ளவாறு செலவுக்கு எதிராக அ பிணையங்கள் சொத்துப்பட்டியலின் தேறாத இலாபம்/(நட்டம்)	220,485	96,503	316,988
நியாயப் பெறுமதி அளவீட்டு பெறுமதியில் மாற்றம்			
விளைவில் 100 அடிப்படை புள்ளி அதிகரிப்பு	(96,657)	(6,267)	(102,924)
விளைவில் 200 அடிப்படை புள்ளி அதிகரிப்பு	(190,187)	(12,394)	(202,581)
விளைவில் 100 அடிப்படை புள்ளி குறைவு	99,786.6	6,415	106,202
விளைவில் 200 அடிப்படை புள்ளி குறைவு	202,949.4	12,998	215,947

அட்டவணை 10: தகைவுச் சோதனை – வர்த்தகப்படுத்தல் ஏடுகளில் வட்டிவீத இடர் - அரசாங்கப் பிணையங்கள்

எதிர்மறை இடைவெளிகள் மீதான 100 அடிப்படை புள்ளி அதிர்வு		ஒரு மாதம் வரை	1-3 மாதங்கள்	3-6 மாதங்கள்	6-12 மாதங்கள்	1-3 வருடங்கள்	3-5 வருடங்கள்	5 வருடங்களுக்கு மேல்	மொத்தம்
தனியான நிலை மட்டம்	இடைவெளி	(175,237)	(225,232)	(67,917)	(116,454)	131,921	145,036	308,013	131
	தே.வ. வருமானம் மீதான தாக்கம் (ரூபா மில்)	(1,680)	(1,882)	(428)	(303)	–	–	–	(4,293)
திரட்டிய மட்டம்	இடைவெளி	(177,093)	(227,378)	(67,706)	(117,598)	133,636	148,347	309,759	1,968
	தே.வ. வருமானம் மீதான தாக்கம் (ரூபா மில்)	(1,698)	(1,900)	(427)	(306)	–	–	–	(4,331)

அட்டவணை 11: வங்கி ஏட்டில் விளைவு வளையி இடரின் தகைவுச் சோதனை மதிப்பீடு

விபரங்கள்	மொத்த மூலதன போதுமை விகிதம் மீதான தாக்கம் சாதகமான/(பாதகமான) %		
	குறைவானது	நடுத்தரமானது	உயர்வானது
வட்டி வீத இடர்: சந்தை விளைவில் அதிகரிப்பு *(குறைவு 50 அடிப்படை புள்ளி, நடுத்தரம் 100 அடிப்படை புள்ளி., உயர்வு 200 அடிப்படை புள்ளி)*	(0.02)	(0.04)	(0.08)
பங்குமூலதன விலை இடர்: சந்தை விலைகளில் வீழ்ச்சி *(குறைவு 15%, நடுத்தரம் 20%, உயர்வு 25%)*	0.14	0.47	0.57
அந்நியச்செலவாணி இடர்: ரூபாவின் பெறுமானத் தேய்வு (குறைவு 05%, நடுத்தரம் 10%, உயர்வு 15%)	(0.57)	(0.87)	(1.16)


அட்டவணை 12: தகைவுச் சோதனை – சந்தை இடர்

திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடரானது வங்கி கடன் தீர்க்கும் திறன் கொண்டதாக இருப்பினும், அதன் கொடுப்பனவு கடப்பாடுகள், நிலுவையாகின்ற போது முழுமையாக நிறைவேற்றுவதற்க்கு அல்லது முக்கியமான பிரதிகூலமான நியதிகளில் மாத்திரம் அவ்வாறு செய்யக்கூடியதாகவிருக்கின்ற போதியளவு திரவ நிதியங்களை பேண இயலாமை அல்லது உருவாக்க இயலாமை என வரைவிளக்கணம் செய்யப்படுகின்றது.

வங்கியானது மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது ஒழுங்குமுறைப்-படுத்தல் குறைந்தபட்ச மட்டங்களுக்கு நன்கு உயர்வாக திரவத்தன்மை நிலைமைகளை பேணியது. வங்கியின் இடர் தோற்றப்பாடு மற்றும் சந்தை நிலைமைகளை கருத்தில் கொண்டு ஒழுங்குமுறைப்படுத்தல், முன்மதிமிக்க மற்றும் உள்ளக தகைவுச் சோதனை தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு அமைவாக பொருத்தமான திரவத்தன்மை தடுப்புகள் வைத்திருக்கப்பட்டன.


வைப்பாளர் திரட்சி



உரு 23

நிதியளித்தல் பன்முகப்படுத்தல்

[%]



சேமிப்பு வைப்புகள் நிலையான வைப்புகள் ரெபோ கடன்பாடு ஐ.அ.டொ கடன்பாடு சார்பு நிலைப்படுத்தப்பட்ட படுகடன்

உரு 24

நிதியளித்தல் கலப்பின் முக்கிய கூறொன்றாக அதன் வைப்புத் தளத்தினை கட்டியெழுப்புவதன் மீது வங்கி தொடர்ந்தும் கவனம் செலுத்துகின்றது. அடிப்படை நிதியளித்தல் மூலங்கள், சில்லறை மற்றும் நிறுவனசார் வைப்பாளர்களின் வைப்புச் செயற்பரப்பு முழுவதும் வைப்பாளர்கள் வடிவத்தில் காணப்படுகின்றது. 2017இல் பொறுப்புக்களுடன் தொடர்புபட்ட மொத்த நிதியளித்தலானது 76.7% வைப்புகளை கொண்டுள்ள ரூபா 961.2 பில்லியன் ஆக 10.4% இனால் வளர்ச்சி அடைந்தது.

84% வைப்புகள் சில்லறை வைப்பாளர்கள் மூலம் நிதியளிக்கப்படுவதனால் சில்லறை வைப்புகளை நோக்கிய உயர் திரட்சி காரணமாக வங்கியின் நிதியளித்தல் திரட்சி குறைவாக காணப்படுகின்றது. நிதியளித்தல் பன்முகப்படுத்தலானது உற்பத்திகள் முழுவதும் பேணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கும் ஏற்பு எல்லைகளுக்கான கடைபிடித்தலினை உறுதிசெய்வதற்கும் வங்கி திரட்சி வரையறைகளை நிறுவியுள்ளது.

வங்கியின் துணைக் கம்பனியானது உயர்திரவச் சொத்து தொகுப்புடன் அதிகளவில் ஒழுங்கு முறைப்படுத்தப்படும் முதனிலை வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

ஆளுகை கட்டமைப்பு

சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு வங்கியின் திரவத்தன்மை இடரினை மேற்பார்வை செய்கின்றது. முதன்மை திரவத்தன்மை இடர் ஆளுகை ஆவணமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் திரவத்தன்மை மற்றும் சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கையாகும்.

சந்தை இடர் முகாமைத்தவ அலகானது கையிருப்பு அணுகுமுறை, பாய்ச்சல் அணுகுமுறை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் விகிதங்களைப் பயன்படுத்தி திரவத்தன்மை இடரினை கண்காணிக்கின்றது. மேலும், நெருக்கடியான சூழலில் செயற்படுவதற்காக திரவத்தன்மை நெருக்கடிக்கான வேறுபட்ட கடுமையான சூழ்நிலைகள், கடன் இறுக்கம் மற்றும் வேகம்/ நேரம் என்பவற்றைக் கருத்திற்கொள்கின்ற தகைவுச் சோதனைகள் காலமுறையான அடிப்படையில் செயலாற்றப்படுகின்றன.

தகைவுச் சோதனை பெறுபேறுகளும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழுவிற்கும் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழு ஊடாக சபைக்கும் தொடர்பூட்டப்படுகின்றன.

திரவத்தன்மை இடர் முகாமைத்துவச் செயன்முறை

ஒழுங்குமுறைப்படுத்துனரினால் நிர்ணயிக்கப்பட்ட தொடர்புடைய நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு இசைவாகவும், இடர் ஏற்பு கட்டமைப்பினுள்ளும் வங்கி திரவத்தன்மையினை முகாமை செய்கின்றது. அனைத்து வேலைகளிலும் அதன் சொத்து தளத்திற்கு உறுதுணையளிப்பதற்கு வங்கியானது பொருத்தமான தொகை, பன்முகப்படுத்தல் மற்றும் திரவத்தன்மைக் காலம் என்பவற்றை கொண்டுள்ளது என்பதனை திரவத்தன்மை இடர் முகாமைத்துவம் உறுதி செய்கின்றது.

வங்கியானது பாசல் III தேவைப்பாடுகளுடன் அணிசேர்கின்ற நியதிச்சட்ட விகிதங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி திரவத்தன்மை இடரினை முகாமை செய்கின்றது.

விவேகமான (குறுகிய கால) திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்	கட்டமைப்பு (நீண்ட கால) திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்	அவசரகால திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்
நாளுக்குள்ளான திரவத்தன்மை நிலைமைகளை முகாமை செய்தல்	கட்டமைப்புசார்ந்த ஆற்றல் வாய்ந்த நிதியியல் நிலையினை உறுதிசெய்தல்	முன்கூட்டிய எச்சரிக்கை திரவத்தன்மை குறிகாட்டிகளை கண்காணித்தலும் முகாமை செய்தலும்.
இடர் ஏற்பினுள் திரவத்தன்மை செயற்பரப்பு விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதி விகிதத்தினை உறுதிசெய்தல். வங்குக்குள்ளான மற்றும் மீள்கொள்வனவு ஒப்பந்த பற்றாக்குறை மட்டங்களை கண்காணித்தல்	கட்டமைப்புசார்ந்த திரவத்தன்மை பொருத்தமின்மைகளை இனங்காணுதல் மற்றும் முகாமைசெய்தல்	அவசரகால நிதியளித்தல் திட்டங்களை தாபித்துப் பேணுதல்.
நாளாந்த காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளை கண்காணித்தல்	நடத்தைசார்ந்த தோற்றம் பெறுதலினை நிர்ணயித்து பிரயோகித்தல்	கிரமமான திரவத்தன்மை தகைவுச் சோதனையும் சூழ்நிலைப் பகுப்பாய்வுகளையும் பொறுப்பேற்றல்
குறுகிய கால காசுப்பாய்ச்சல்களை முகாமைசெய்தல்	நீண்ட கால காசுப்பாய்ச்சல்களை முகாமைசெய்தல்	தேவைப்படின் திரவத்தன்மை நெருக்கடி முகாமைத்துவ குழுக்களை கூட்டுதல்
நாளாந்த வெளிநாட்டு நாணய திரவத்தன்மையினை முகாமை செய்தல்	பன்முகப்படுத்தப்பட்ட நிதியளித்தல் தளமொன்றினை பேணுதல்	எதிர்பார்க்கப்படும் தகைவு நிகழ்வுகளுக்கு எதிராக திரவத்தன்மை தடுப்பு மட்டங்களை நிறுவுதல்
சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழுவினால் அறிவிக்கப்பட்டவாறு கட்டமைப்புசார்ந்த மற்றும் அவசரகால திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கு அமைவாக வைப்பு வீதங்களை நிர்ணயித்தல்.	தவணை நிதியளித்தல் தேவைப்பாடுகளை அறிவித்தல்	திரவத்தன்மை தடுப்பு சொத்துப் பட்டியல்களின் பன்முகப்படுத்தல் மீது ஆலோசனை வழங்குதல்
	வெளிநாட்டு நாணய திரவத்தன்மையினை மதிப்பிடுதல்.	பாசல் III திரவத்தன்மை தேவைப்பாடுகளுடனான இணங்குவித்தலினை உறுதி செய்தல்
	திரவத்தன்மை இடர் ஏற்பினை நிறுவுதல்.	
	திரவத்தன்மை செலவுகளின் பொருத்தமான விலையிடல் மாற்றல்களை உறுதிசெய்தல்	

அட்டவணை 13: திரவத்தன்மை முகாமைத்துவச் செயன்முறை

ஒழுங்கு முறைப்படுத்தல் விகிதங்கள்

வங்கியானது இருப்பு அணுகுமுறை, பாய்ச்சல் அணுகுமுறை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விகிதங்கள் என்பவற்றின் கீழான விகிதங்களைப் பயன்படுத்தி திரவத்தன்மை இடரினை கண்காணிக்கின்றது.


நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதமும் திரவத்தன்மை செயற்பரப்பு விகிதமும் நியதிச்சட்ட விகிதங்களின் கீழ் மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன.

வங்கியானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டுடன் ஒழுங்குமுறை உறுதிசெய்தவற்காக பாசல் III திரவத்தன்மை செயற்பரப்பு விகிதத்தினை 100% இனை விஞ்சியும் நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதத்தினை 20% இனை விஞ்சியும் வெற்றிகரமாக பேணியுள்ளது.

பாசல் III தேறிய நிலையான நிதியளித்தல் விகிதத்தின் மீதான வரைவு கணிப்பீட்டுக்கு அமைவாக வங்கியானது ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச தேவைப்பாட்டிற்கு மேல் நன்கு காணப்படுகின்றது.

ஒழுங்கு முறைப்படுத்தல் விகிதங்களின் போக்கு

[%]



திரவத்தன்மை செயற்பரப்பு விகிதம் அனைத்து நாணயங்களும்

திரவத்தன்மை செயற்பரப்பு விகிதம் - ரூபா ..... நியதிச் சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் (RHS)

உரு 25

பாய்ச்சல் அணுகுமுறை

பாய்ச்சல் அணுகுமுறையின் கீழ் திரவத்தன்மை இடரினை மதிப்பிடுவதற்கு வங்கியினால் பயன்படுத்தப்படுகின்ற முறைகளில் ஒன்றாக திரவத்தன்மை இடைவெளிப் பகுப்பாய்வு காணப்படுகின்றது. திரவத்தன்மை இடைவெளிப் பெறுபேறுகள் காலமுறையாக கணிக்கப்பட்டு கண்காணிக்கப்படுவதுடன் உணர்வுப் பகுப்பாய்வு தகைவுச் சோதனை என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

	டிசம்பர் 2017	டிசம்பர் 2016	ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச வீதம்
நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் - உள்நாட்டு வணிக அலகு	73.44	72.56	20
திரவத்தன்மை செயற்பரப்பு விகிதம் - ரூபா	377.57	379.26	100
திரவத்தன்மை செயற்பரப்பு விகிதம் - அனைத்து நாணயங்களும்	376.18	393.96	100

வங்கி	3 மாதங்கள் வரை ரூபா. '000	3-12 மாதங்கள் ரூபா. '000	1-3 வருடங்கள் ரூபா. '000	3-5 வருடங்கள் ரூபா. '000	5 வருடங்களுக்கு மேல் ரூபா. '000	மொத்தம் ரூபா. '000
ஒப்பந்த முதிரச்சியுடனான சொத்துகள்						
காசும் காசுக்கு சமமானவையும்	3,849,627	–	–	–	–	3,849,627
மத்திய வங்கிகளுடனான நிலுவைகள்	–	–	–	–	–	–
வங்கிகளுடனான இருப்புகள்	4,706,549	18,731,555	–	–	–	23,438,104
பெறுதி நிதியியல் சாதனங்கள்	650	1,360,064	–	–	–	1,360,714
வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட ஏனைய நிதியியல் சொத்துகள்	681,127	1,919,984	535,258	3,335,945	–	6,472,314
வங்கிகளுக்கான கடன்களும் வருமதிகளும்	3,056,673	6,616,175	17,241,717	800,000	–	27,714,565
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும்	22,722,801	67,835,029	83,264,461	57,112,104	129,375,471	360,309,866
நிதியியல் மூதலீடுகள்- விற்பனைக்கு கிடைக்கத்ததக்கவை	942	1,172,235	–	26,045	4,494,608	5,693,830
நிதியியல் மூதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை	24,583,892	167,108,102	77,891,419	93,900,259	180,789,405	544,273,077
துணை நிறுவனங்களில் முதலீடுகள்	–	–	–	–	900,000	900,000
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	–	–	–	–	12,015,376	12,015,376
அருவச் சொத்துக்கள்	–	–	–	–	380,308	380,308
ஏனைய சொத்துகள்	712,063	7,168,611	7,173,278	5,004,266	5,637,471	25,695,689
மொத்த சொத்துகள்	**60,314,324**	**271,911,755**	**186,106,133**	**160,178,619**	**333,592,639**	**1,012,103,470**
ஒப்பந்த முதிரச்சியுடனான பொறுப்புகள்						
குறிக்கப்பட்ட மூலதனம்/சாட்டப்பட்ட பொறுப்புக்கள்	–	–	–	–	6,700,000	6,700,000
நியதிச் சட்ட ஒதுக்கு நிதி	–	–	–	–	3,002,952	3,002,952
பிடித்துவைக்கப்பட் உழைப்பு	–	–	–	–	2,228,885	2,228,885
ஏனைய ஒதுக்குகள்	–	–	–	–	28,289,941	28,289,941
வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டியவை	180,439	–	–	–	–	180,439
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டியவை	391,222,111	330,921,064	8,725,472	4,138,492	2,205,501	737,212,640
ஏனைய கடன்பாடுகள்	64,611,281	115,058,141	38,286,355	–	–	217,955,777
பெறுதிப் பொறுப்புக்கள்	956,937	–	–	–	–	956,937
ஒத்தி வைக்கப்பட்டுள்ள வரிப் பொறுப்புக்கள்	–	–	–	–	507,063	507,063
ஏனைய பொறுப்புகள்	2,288,755	2,500,117	480,835	474,946	3,317,771	9,062,424
சார்புநிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்	–	6,411	–	6,000,000	–	6,006,411
மொத்தப் பொறுப்புகள்	**459,259,523**	**448,485,733**	**47,492,662**	**10,613,438**	**46,252,114**	**1,012,103,470**
முதிர்வு இடைவெளி	(398,945,199)	(176,573,978)	138,613,471	149,565,181	287,340,525	0
ஒன்றுசேர்ந்த இடைவெளி	(398,945,199)	(575,519,177)	(436,905,706)	(287,340,525)	0	-

அட்டவணை 14: சொத்துகளினதும் பொறுப்புகளினதும் முதிர்வுத் தோற்றப்பாடு

இருப்பு அணுகுமுறை


இருப்பு அணுகுமுறையின் கீழ் திரவத்தன்மை இடர் குறிகாட்டிகள் உள்ளடக்குவன:

- மொத்த சொத்துகளுக்கான தேறிய கடன்கள்
- வாடிக்கையாளர்கள் வைப்புகளுக்கான கடன்கள்
- குறுகிய கால பொறுப்புகளுக்கான திரவத்தன்மை சொத்துகள்
- மொத்த சொத்துகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட நிதியங்கள்
- மொத்த கடன்களுக்கான கடமைப் பொறுப்புகள்
- (உழைக்கும் சொத்துகள் - தற்காலிக முதலீடுகள்) இற்கான (பாரிய பொறுப்புகள் - தற்காலிக முதலீடுகள்)

இருப்பு அணுகுமுறையினால் அளவிடப்பட்டவாறு வங்கியின் ஒட்டுமொத்த திரவத்தன்மை மற்றும் வருடம் முழுவதும் உயர்ந்த மட்டத்தில் நிலவியது. வைப்புகள் விகிதத்திற்கான கடன்கள் மேம்பட்டுள்ளது. ஆயினும், உயர் திரவத்தன்மையாக விளங்குகின்ற அரசாங்கப் பிணையங்களில் வைப்புகளின் 60% இனை முதலிடுவதற்கான கட்டாயத் தேவைப்படுத்தலின் காரணமாக தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடுகையில் குறைவாக காணப்படுகின்றது.

இருப்பு அணுகுமுறையின் கீழ் விகிதங்களின் போக்கு

[%]



மொத்த சொத்துகளுக்கான தேறிய கடன்கள்
வைப்புகளுக்கான கடன்கள்
குறுகிய கால பொறுப்புகளுக்கான திரவத்தன்மை சொத்துகள்
பாரிய பொறுப்புக்கள் - தற்காலிக முதலீடுகள்/உழைக்கும் சொத்துகள் - தற்காலிக முதலீடுகள்
மொத்த சொத்துகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட நிதியங்கள்
மொத்த கடன்களுக்கான கடமைப் பொறுப்புகள்

உரு 26

திரவத்தன்மை அவசரகாலத் திட்டம்

திரவத்தன்மை அவசரகாலத் திட்டமானது குறித்த அல்லது சந்தை நெருக்கடி சூழ்நிலைகளில் வங்கியின் தாக்குப் பிடிப்பதற்கான இயலுமையினை உறுதி செய்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியின் தற்போது காணப்படுகின்ற திரவத்தன்மை இடர் தோற்றப்பாடானது பின்வரும் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டது.

- தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக அரசாங்கப் பிணையங்களில் (உயர் திரவத் தன்மை/இடர் அற்ற சொத்துகள்) வைப்புகளின் 60% முதலிடப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.
- நெருக்கடியான நிலைமையொன்றில் நிலையான வருமானப் பிணையங்கள் சந்தைக்கும் பங்கு மூலதனச் சந்தைக்குமான அணுகுவழி கிடைக்கும் தன்மை
- பிணைய உறுதியாக நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் வங்கியின் உயர் கடன் தரப்படுத்தல் என்பவற்றைப் பயன்படுத்தி குறைந்த செலவில் கடன் பெறுவதற்கான இயலுமை

சந்தை இடர் முகாமைத்துவ அலகானது திரவத்தன்மை குறிகாட்டிகள் மற்றும் தகைவுச் சோதனை என்பன மீது அடிக்கடி நிலவும் அடிப்படையில் திரவத்தன்மை இடரினைக் கண்காணித்து அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றது. இது நெருக்கடி பதிலிறுத்தல் உபாயங்களுக்கு துணை அளிப்பதற்கு முன்கூட்டியே எச்சரிக்கையாக செயற்படும். உயர்வாக சந்தைப்படுத்தத்தக்கதான அரசாங்கப் பிணையங்கள், சொத்துப் பட்டியல் காசுப் பாய்ச்சலில் முன்னறியாத தடங்கல்களுக்கு எதிராக பாதுகாப்பொன்றினை வழங்குகின்றது. இச்சொத்துப் பட்டியல்கள் பன்முகப்படுத்தல் மற்றும் திரவத்தன்மை அடிப்படையில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவினால் வரையறை செய்யப்பட்ட எல்லைகளினுள் முகாமை செய்யப்படுகின்றன.

தொழிற்பாட்டு இடர்


தொழிற்பாட்டு இடரானது வங்கியின் அனைத்து நடவடிக்கைகளிலும் உட்பொதிந்துள்ளதுடன் தேவைக்கு குறைவான அல்லது வெற்றியடையாத உள்ளகச் செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகளிலிருந்து அல்லது வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து விளைகின்ற இழப்பு இடராக வரைவிலக்கணப்படுத்தக்கூடியது. தொழிற்பாட்டு இடரானது சட்ட இடரை உள்ளடக்குகின்றது. ஆனால் நற்பெயர் சார்ந்த மற்றும் உபாய இடரினை உள்ளடக்குவதில்லை.

பாசல் ஒப்பந்தங்களுக்கு அமைவாக தொழிற்பாட்டு இடர் நிகழ்வுகளை வங்கி வகைப்படுத்தி மீளாய்கின்றது.


2017 இன் போது தன்னியக்க மயப்படுத்தப்பட்ட சூழல் ஒன்றில் சேவை வழங்குநர் ஒருவரில் உட்பொதிந்துள்ள மிக அடிக்கடி நிகழும் வியாபார தடங்கல்கள் மற்றும் முறைமை செயலிழப்புகள் காணப்பட்டன. நிகழ்வுகளின் கடுமையான தன்மையானது தடங்கல்களின் அதிகூடிய சகிப்பு காலத்தினுள் நிகழ்வுகள் இருந்தமையினால் முகாமை செய்யப்படக்கூடியனவாக இருந்தன.

“பௌதீக சொத்துகளுக்கான சேதங்கள்”, மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள சில கிளைகளை தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காலத்தின் போது வெள்ளப் பெருக்கு பாதித்தமையின் காரணமாக கடுமையான தன்மையினை கொண்டிருந்தது. உள்ளக மற்றும் வெளிவாரி தூண்டுதல்களில் இருந்து தோன்றுகின்ற மோசடி இடரானது வங்கிக்கான முக்கிய இடர்களில் ஒன்றாகும். மோசடி இடரை செயல்திறன்மிக்கவாறு முகாமை செய்வதற்கு வங்கி செயல்திறன்மிக்க மோசடி இடர் முகாமைத்துவத்தினையும் தகவல் தெரிவித்தல் செயன்முறை ஒன்றினையும் கொண்டுள்ளது.

இழப்பு நிகழ்வுகள் நிகழும் தன்மை



இழப்பு நிகழ்வுகளின் கடுமையான தன்மை



IF – உள்ளக மோசடி
EF – வெளிவாரி மோசடி
DPA – பௌதீக சொத்துகளுக்கான சேதம்
BDSF – வியாபாரத் தடங்கல்கள், முறைமை செயலிழத்தல்கள்
EPWS – தொழில் நடைமுறை மற்றும் பணியிட பாதுகாப்பு
CPBP – சேவை நாடிகள், உற்பத்தி மற்றும் வியாபார நடைமுறைகள்
EPPM – நிறைவேற்றுதல், ஒப்படைத்தல் மற்றும் செயன்முறை முகாமைத்துவம்


நிகழும் தன்மை – 0%-2017: EPWS 2016: CPBP, EPWS

கடுமையான தன்மை – 0% - 2017: BDSF, EPWS 2016: BDSF, EPWS, CPBP

உரு 27

உரு 28

இடர் ஏற்பு மற்றும் சகிப்பு எல்லைக்கு எதிராக உண்மையான தொழிற்பாட்டு நட்டங்கள்



உரு 29

2017 நிதியியல் ஆண்டிற்கான தொழிற்பாட்டு நட்டங்கள் கடந்த 3 வருடங்களுக்கான சராசரி கணக்காய்வு செய்யப்பட்ட மொத்த வருமானத்திலிருந்து 0.19% ஆக இருந்தது. இது தொழிற்பாட்டு இடரினை முகாமை செய்வதற்கு செயற்பாட்டில் உள்ள ஆளுகைக் கட்டமைப்புகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் செயற்திறன் தன்மையின் "உச்ச பலம்" இனை பிரதிபலிக்கின்ற உள்ளக விழிப்பு மட்டத்திற்கு நன்கு கீழ் காணப்படுகின்றது. போக்கு நிலையும் கடந்த 5 வருட காலமாக நட்டங்களை குறைந்த மட்டத்தில் பேணுவதில் வங்கியின் முரண்பாடற்ற தன்மையினை எடுத்துக் காட்டுகின்றது. இடர் ஏற்பினுள் தொழிற்பாட்டு இடரினை முகாமை செய்வதற்கும் குறைப்பதற்கும் வங்கியினால் தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இடர் மீளாய்வு

இடர் தொகுப்பு	விபரம்	கண்காணித்தல்/முகாமைத்துவ கருவிகள்	காப்பின்மை	தாக்கம்*
மோசடி இடர்	உள்ளக அல்லது வெளிவாரி தரப்பினர் மூலமான மோசடியான செயற்பாடுகள்	• மோசடி இடர் முகாமைத்துவம் மற்றும் தகவல் தெரிவித்தல் செயன்முறை • உள்ளக கட்டுப்பாடுகள் (முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல்) • நட்ட நிகழ்வு கண்காணிப்பு • இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு	உயர்வானது	நடுத்தரமானது
முறைமை/தகவல் தொழில்நுட்பம்/ தகவல் பாதுகாப்பு இடர்	செயலிழந்த, தேவைக்கு போதாத செயன்முறைகள், முறைமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்	• உள்ளக கட்டுப்பாடுகள் • தகவல் பாதுகாப்பு முறைமை • வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமை • முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல் • நிகழ்வு அறிக்கையிடல்	உயர்வானது	நடுத்தரமானது
இணங்குவித்தல் இடர்	ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதில் தவறுகை	• இணங்குவித்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் பரிசோதனைகளும் • முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல் • இணங்குவித்தல் இடர் புள்ளியிடல் அட்டை	உயர்வானது	நடுத்தரமானது
சட்ட இடர்	சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் போதமை/தவறுதல்	• அனைத்து ஒப்பந்த கடப்பாடுகள் மீதும் சட்ட இசைவு • முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல்	நடுத்தரமானது	குறைவானது

**உயர் தகைவு நிலைமையொன்றில் உழைப்புகள் மற்றும் மூலதனம் மீதான சாத்தியமான தாக்கம்*

உரு 30: தொழிற்பாட்டு இடர் மீளாய்வு

ஆளுகை கட்டமைப்பு

வங்கி அனைத்தையும் உள்ளடக்கிய தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பை கொண்டுள்ளது. இது தற்போது காணப்படுகின்ற மற்றும் தோற்றம் பெறுகின்ற தொழிற்பாட்டு இடர்களுக்கு உணர்வுமிக்கதாக விளங்குகின்றது. இது மிகவும் வினைத்திறன்மிக்க, வெளிப்படையான, இலாபகரமான மற்றும் நிலைத்திருக்கத்தக்க வியாபாரத் தொழிற்பாடுகளை எய்துவதற்கு பாடுபடுகின்றது. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது தொழிற்பாட்டு இடரினை இனங்காணுதல், மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தலில் முறையான ஆளுகை கட்டமைப்பினையும் தேசிய சேமிப்பு வங்கியின் அணுகுமுறையினையும் விவரிக்கின்ற சபை அனுமதித்த தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்தில் ஒழுங்காகத் தொகுக்கப்பட்டுள்ளது. பதியப்பட்டுள்ளது. மேலும் பின்வரும் கொள்கைகள் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கொள்கை கட்டமைப்பிற்கு துணையளிக்கின்றன.

- தகவல் பாதுகாப்பு முகமைத்துவ கொள்கை
- வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவக் கொள்கை
- மோசடி இடர் முகாமைத்துவ மற்றும் தகவல் தெரிவித்தல் கொள்கை
- வெளியிலிருந்து சேவை பெற்றுக் கொள்ளும் கொள்கை

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது, செயல்திறன்மிக்க ஆளுகை கட்டமைப்பினாலும் சிரேஷ்ட முகாமைத்துவ மேற்பார்வையினாலும் மீள் வலுவூட்டப்பட்டுள்ளது. தொழிற்பாட்டு இடர் முகாமைக்கான பொறுப்பு சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவின் உதவியுடன் சபையிடம் காணப்படுகின்றது.



உரு 31: தொழிற்பாட்டு இடர் ஆளுகை கட்டமைப்பு

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவானது தொழிற்பாட்டு இடர் முகாமைத்தினை மேற்பார்வை செய்வதற்கான உச்ச மட்ட முகாமைத்துவக் குழுவாகும்.

இடர் முகாமைத்துவ பிரிவின் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகானது இணையப்பெற்ற ஆளுகை உட்கட்டமைப்பு உள்ளடங்கலாக தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ சட்டகத்தின் வடிவமைப்பு மற்றும் பேணுகைக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகின் பொறுப்புகள் உள்ளடக்குவன-

- கொள்கைகளை மீளாய்தல்/இற்றைப்படுத்தல்
- இடர் மற்றும் கட்டுப்பாடு சுயமதிப்பீடு, முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகள் மற்றும் நட்ட நிகழ்வு தரவுகளைப் பயன்படுத்தி தொழிற்பாட்டு இடரை மதிப்பிடுதல்
- வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமையின் நடைமுறைப்படுத்தலினை கண்காணித்தல்
- தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை கண்காணித்தல்
- வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளின் இடரினைக் கண்காணித்தல்
- புதிய உற்பத்திகள்/செயன்முறைகளை மீளாய்தல்
- தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழு ஊடாக சபைக்கும் அறிக்கையிடுதல்

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறை

வங்கியானது அதன் இடர் ஏற்புக்கான ஒப்பீட்டுடன் ஒப்பிடுகையில் அதன் தொழிற்பாட்டு இடர் தோற்றப்பாட்டின் நிர்ணயத்தினை இயலச்செய்கின்ற வங்கி முழுவதுமான இசைவான கட்டமைப்பொன்றின் அடிப்படையில் தொழிற்பாட்டு இடரினை முகாமைசெய்கின்றது.

தொழிற்பாட்டு இடரானது ஒவ்வொரு ஆள், செயன்முறை மற்றும் முறைமையில் உள்ளார்ந்து காணப்படுவதனால் குறித்த குழு அல்லது அணி அத்தகைய இடரினை செயல்திறன்மிக்கவாறு சுயமாக முகாமை செய்ய முடியாது.

தேசிய சேமிப்பு வங்கியானது சபையினதும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும் திடமான அர்பணிப்புடன் ஆரம்பிக்கின்ற இடர்முகைமைத்துவ கலாசாரமொன்றினை தோற்றுவித்துள்ளது.

கிளைகளும் தொழிற்பாட்டு பிரவுகளும் தொழிற்பாட்டு இடரின் முதனிலை உரிமையாளர்களாக இனம்காணப்படுகின்றன. அவர்களது பொறுப்பு விடயத்தில் உட்பொதிந்துள்ள இடர்கள் பற்றி தெளிவு பெறுவதற்கு அவர்களுக்கு போதிய பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

எனவே, வங்கியானது முறைமைக் கட்டுப்பாடுகள், அணுகுவழிக்கட்டுப்பாடுகள், கடமைகளை வகுத்தல், கொடுக்கல் வாங்கல்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் சரிபார்த்தலூடாக இரட்டைப் பரிசோதனைகள், இணக்கம் பார்த்தல், கணக்காய்வுப் பரீட்சிப்புகள் மற்றும் கணக்காய்வு பதிவேடுகள் அத்துடன் அனைத்துக்கும் மேலாக முறையான பயிர்சித்திட்டங்;டாக இடர் உரிமையாளர்களை அறிவூட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற தொழிற்பாட்டு இடருக்கான முதல்நிலை பாதுகாப்பாக விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது.

இடர் முகாமைத்துவப் பிரிவும் இணங்குவித்தல் பிரிவும் பாதுகாப்பின் இரண்டாம் நிலையாக செயற்படுவதுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தொழிற்பாட்டில்/இடர் முகாமைத்துவத்தில் பாதுகாப்பின் மூன்றாம் நிலையாக செயற்படுகின்றது.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவச் செயன்முறையானது இடர் காப்பின்மைகளை முகாமைசெய்வதற்கும் குறைப்பதற்கும் வேறுபட்ட கருவிகள் மற்றும் நுட்பங்களை பயன்படுத்தி வங்கியின் தொழிற்பாட்டு இடர் தோற்றப்பாட்டினை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதலுடன் ஆரம்பிக்கின்றது.

நட்ட நிகழ்வு தரவு சேகரித்தலும் பகுப்பாய்வும்

உள்ளக மற்றும் வெளிவாரி நட்ட தரவு சேகரித்தலானது தொழிற்பாட்டு இடர் மூலதன அறவீட்டு கணிப்பில் முன்னேற்றமான அணுகுமுறைகளை நோக்கிச் செல்லுவதற்கான முக்கிய தேவைப்பாடொன்றாகும். தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகு, காலமொன்றுக்கான நட்ட நிகழ்வுத் தரவுகளை தொடர்சியாக சேகரிப்பதுடன் அத்தகைய தொழிற்பாட்டு நட்டங்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய அறிக்கையிடுதலினை வசதிப்படுத்தவதற்காக பாசல் வகைப்படுத்தலுக்கு அமைவாக 7 நட்ட நிகழ்வு வகைகளாக வகுக்கப்படுகின்றன.

சரியான காலத்தில் சீராக்கல் மற்றும் தடுத்தல் நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அவற்றின் தன்மை, அடிப்படைக் காரணம் மற்றும் நிகழும் வாய்ப்புகள் பற்றி இனங்காண்பதற்காக நட்ட நிகழ்வுத் தரவுகள் கடுமையான பகுப்பாய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

தொழிற்பாட்டு இடருக்காக, தேசிய சேமிப்பு வங்கி குறைவான ஏற்பொன்றினைக் கொண்டுள்ளதுடன் அனைத்து முக்கிய தொழிற்பாட்டு இடர்வகைகளுக்குமென சகிப்பு மட்டங்களை நிறுவியுள்ளது.


முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை கண்காணித்தல்

முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டி அமைவுருவானது இடர் காப்பின்மையொன்றின் மட்டங்களின் மாற்றல்களை கண்காணிப்பதனை இயலச்செய்வதுடன் சரியான காலத்தில் இடர் தணிப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக முன்கூட்டிய எச்சரிக்கையாகவும் செயற்படுகின்றது.

வங்கியின் முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டி – கருவதொகுப்பானது கணக்காய்வுப் பிரச்சினை முகாமைத்துவம், வியாபார தொடர்ச்சி முகாமைத்துவம், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், உற்பத்தி தரம், செயன்முறைத் தரம் மற்றும் இணங்குவித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இடர் அமைவுரு ஒன்றின் மூலம் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்தினை இனங்கண்டு மதிப்பிடும் பொருட்டு வங்கியின் முக்கிய வியாபார தொழிற்பாடுகள் மற்றும் துணைச் சேவைகளுக்கு காப்பளிக்கின்றது.

முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகள், முன்நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு இடரினை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு விடயத்தின் கீழும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன. இவ் அடிப்படை எல்லைகள் வருடாந்தம் அல்லது தொழிற்பாட்டு சூழலிலுள்ள மாற்றங்களை கருத்தல் கொண்டு மிகவும் அடிக்கடி நிகழ்கின்ற அடிப்படையில் திருத்தப்படுகின்றன.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகானது முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகளை பயன்படுத்தி தொழிற்பாட்டு இடர் தோற்றப்பாட்டினை கண்காணிப்பதுடன் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவூடாக சபைக்கும் அறிக்கையிடுகின்றது.



உரு 32: முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிக் கட்டமைப்பு

இடரும் கட்டுப்பாட்டு சுயமதிப்பீடும்

இடரும் கட்டுப்பாட்டு சுயமதிப்பீடும் என்பது அத்தகைய இடர்களை முகாமைசெய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக வியாபரத் துறை முழுவதும் தொழிற்பாட்டு இடரை மீளாய்வு செய்கின்ற மற்றும் மதிப்பிடுகின்ற முறையியலொன்றாகும். இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுயமதிப்பீட்டின் அடிப்படையான ஊகங்கள், வியாபாரச் செயன்முறை உரிமையாளர்கள்/பாதுகாப்பின் முதல் நிலை தமது சொந்த இடர்களை புரிந்து கொள்வதற்கு சிறப்பான நிலையொன்றில் காணப்படுகின்றது என்பதாகும்.

உடனடிக் கவனிப்பு தேவையான இடர்கள் மீதான விழிப்பூட்டலை அதிகரிப்பதிலும் கட்டமைக்கப்பட் விதமொன்றில் தொழிற்பாட்டு பலவீனங்களை தீர்த்துக்கொள்வதிலும் முன்னுரிமை அளிப்பதற்கும் இது உதவுகின்றது.

2017 இன் போது வங்கியானது நெருக்கடியான செயன்முறைகளில் தொழிற்பாட்டு இடரினை இனங்காண்பதற்கும் தணிப்பதற்கும் இடர் மற்றும் கட்டுப்பாட்டு மதிப்பீட்டினை செயற்திறன் மிக்கவாறு பயன்படுத்தியது.

வாடிக்கையாளர் முறைப்பாடுகள் முகாமைத்துவம்

வங்கியின் வாடிக்கையாளர் முகாமைத்துவச் செயற்பாடானது காத்திரமான வாடிக்கையாளர் சேவையொன்றினை உறுதிசெய்வதற்காக முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றதன் மீது அளவிடக் கூடிய நேரத்தினுள் பதிவுசெய்தல் மற்றும் பதிலிறுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகானது வாடிக்கையாளர் முறைப்பாடுகளை வங்கியின் தொழிற்பாடுகளில் தொழிற்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் இடர்களை இனங்காண்பதற்கான மூலமொன்றாக கருதுகின்றது. வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு மேலதிக இடர் தணிப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக தொடர்புடைய காண்புகள் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக்குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றது.

புதிய உற்பத்தி மற்றும் செயன்முறை இடர் மதிப்பீடு

அண்மைய உலக நிதியியல் நெருக்கடியுடன் புதிய உற்பத்தியொன்றின் அல்லது முறைமையொன்றின் சோதனை கட்டத்திலிருந்து தொழிற்பாட்டு வர்த்தகத்திற்கான மாறுதலானது பழக்கப்படாத சூழல் ஒன்றில் குறைவான அனுபவம் அல்லது நிபுணத்துவத்தின் காரணமாக குறிப்பாக இடர்மிக்கதாகும் என்பது சான்றாக காணப்படுகின்றது. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவமானது. புதிய உற்பத்திகள், வழிமுறைகள் மற்றும் செயன்முறைகளிலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு இடர் மூலங்களை அவற்றை அறிமுகப்படுத்துவதற்கு/நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் வங்கியினுள் மதிப்பிடுகின்றது. அத்துடன் வங்கிக்கான தொழிற்பாட்டு இடரினை மேலும் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தியதன்/நடைமுறைப்படுத்தியதன் பின்னரான மீளாய்வுகள் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகினால் நடாத்தப்படுகின்றது.

தகவல் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தோற்றம் பெற்றுவரும் பாதிக்கப்படும் தன்மைகளிலிருந்து தகவல்களின் செம்மை, கட்டுப்பாடு, ஒருமைப்பாடு மற்றும் இரகசியத்தன்மை போன்ற நியதிகளில் வாடிக்கையாளர்களுக்காக பாதுகாப்பான வங்கிச் சேவையினை வழங்குவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சட்டங்கள் ஒழுங்குவிதிகளின் படிப்படியான வளர்ச்சி, தொழிற்துறை நிபுணத்துவத்தின் உதவியுடன் தளநிலைப் பாதுகாப்பு நியமங்களுடன் இணங்கி ஒழுகுவதற்கு வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், தகவல் தொழில்நுட்ப செயற்படுத்தல் குழுவூடாக கண்காணிக்கப்படுகின்றது. அதற்கமைய, தேசிய சேமிப்பு வங்கியின் மேன்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையையும் ISO 27001:2013 இன் அடிப்படையில் மீளாயப்படுகின்றன. இதன் கீழ், தற்கால நடைமுறைகளை சீரமைப்பதற்கு தகவல் பாதுகாப்பு கொள்கைகளும் நிபுணத்துவ அபிப்ராயங்களுடன் மீளாயப்படுகின்றன.

தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ அலகானது முன்னேற்ற மீளாய்வுக; டாக தகவல் பாதுகாப்பு அமுலாக்கத்தினை கண்காணிப்பதுடன் ஏதேனும் மேலதிக மேம்படுத்தல்கள் இருப்பின் பரிந்துரைகளை வழங்கும்.

வியாபார தொடரச்சி முகாமைத்துவ முறைமை

சேவைகள், உற்பத்திகள் அல்லது தொழிற்பாடுகள் இடைத்தடங்கலின்றி தொடர்சியாக விநியோகிக்கப்பட வேண்டுமென்பதனை வியாபார தொடர்ச்சித் திட்டமும் அனர்த்த மீட்புத் திட்டமும் அங்கீகரிக்கின்றன. வங்கி நிறுவியுள்ள வியாபார தொடர்ச்சித் திட்டம் உள்ளடக்குபவன:

- வியாபார தாக்க மதிப்பீடு
- முக்கிய சேவைகள் மற்றும் உற்பத்திகளின் தொடர்சியான விநியோகித்தினை உறுதி செய்வதற்கான திட்டங்கள், வழிமுறைகள் மற்றும் ஒழுங்குகள்
- ஆளணி, தகவல், உபகரணங்கள், நிதி ஒதுக்கீடுகள், சட்ட ஆலோசனை மற்றும் உட்கட்டமைப்பு பாதுகாப்பு உள்ளடங்களாக வியாபார தொடரச்சிக்கு துணையளிப்பதற்கு அவசியமான மூலவளங்களை இனம்காணுதல்.

வியாபார தொடர்ச்சி திட்டமிடலானது தடங்கல்களுக்கு மத்தியிலும் முக்கிய சேவைகள்/உற்பத்திகள் மற்றும் முறைமைகள் அல்லது தொழிற்பாடுகள் விநியோகிக்கப்படுவதனை உறுதி செய்கின்ற முற்செயற்பாடு மிக்க திட்டமிடல் செயன்முறையொன்றாகுவதுடன் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும் வியாபார தாக்க மதிப்பீடொன்றின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டது.

வியாபாரத் தொடர்ச்சி திட்டமொன்றினை உருவாக்கி பேணி வருவதானது இயற்கை அனர்த்தங்கள், விபத்துகள், மின்சக்தி மற்றும் எரிசக்தி இடைத்-தடங்கல்கள், தொடர்பூட்டல்கள், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சேவைத் துறை செயலிழத்தல், மாசடைதல் மற்றும் ஆபத்தான பொருட்கள் கசிதல் போன்ற சுற்றாடல் அனர்த்தங்கள், இணையத்தளத் தாக்குதல்கள், இணையத்தளத்தளத்தில் ஊடுருபவர்களின் நடவடிக்கைகள் போன்ற அவசரகால நிலைகளினை கையாளுவதற்கு தேவையான மூலவளங்களையும் தகவல்களையும் வங்கி கொண்டுள்ளதனை உறுதி செய்கிறது. வியாபார தொடர்சித் திட்டமிடலொன்றினை கொண்டுள்ள போது வங்கிக்கான நிதியியல், தொழிற்பாட்டு மற்றும் நட்பெயர்சார் இழப்புகள் குறைக்கப்படுகின்றன.

அனர்த்தம் மீட்பு திட்டமென்பது பொதுவாக வியாபார தொடர்சித் திட்டத்தின் பாகமொன்றாகும். இதனால், வங்கி வியாபாரத் தொடர்சித் திட்டத்துடனான கூட்டிணைப்பில் அனர்த்த மீட்புத் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. வங்கியின் அனர்த்த மீட்பு நிலையமானது எதிர்பாரத நிகழ்வுகளுக்கான மாற்றுவழி ஏற்பாடுகளுடன் கொழும்புக்கு வெளியில் அமைந்துள்ளது. அனர்த்த மீட்புத் திட்டமானது சூழலுக்கு இயைபானதாக காணப்படுவதுடன் வழமையாக இற்றைப்படுத்தப்படுகின்றது.

இடர் மாற்றல்

வெளியிலிருந்து சேவையினை பெற்றுக்கொள்ளலானது செயல்திறன்வாய்ந்த செலவுச் சிக்கனமிக்கதாகவும் இடர் மாற்றல் உபாயமொன்றாகவும் பயன்படுத்தப்படுகின்றது. வங்கி வெளியிலிருந்து சேவையினை பெற்றுக்கொள்ளும் தொழிற்பாடானது இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கமைவாக தயாரிக்கப்பட்ட சபை அனுமதித்த வெளியிலிருந்து சேவை பெற்றுக்கொள்ளும் கொள்கையினை அடிப்படையைக் கொண்டதாகும். வங்கியின் பெறுகை வழிகாட்டல்கள் மூலம் இது மேலும் நிறைவுபடுத்தப்பட்டுள்ளது.

வியாபார தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்கின்ற இடர், தொழிற்பாட்டினையும், அறிக்கையிடுதலனையும் சீர்படுத்தும் பொருட்டு நிறுவப்பட்ட தனியான வெளியிலிருந்து சேவைப் பெற்றுக்கொள்ளும் அலகினால் முகாமை செய்யப்படுகின்றது.

வெளியிலிருந்து சேவைப்பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை செயலாற்றுவதற்கு சேவை வழங்குனர்களின் இயலளவினை உறுதி செய்வதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய உரிய சிரத்தை நடைமுறைகளை வங்கி நடாத்துகின்றது.

காப்புறுதியானது முக்கிய காப்பிடத்தக்க இடரினை காப்புறுதிச் சேவை வழங்குனருக்கு மாற்றுவதற்கான தொழிற்பாட்டு இடர் தணிப்பானொன்றாக முக்கிய பங்கொன்றினை ஆற்றுகின்றது. இயற்கை அனர்த்தங்கள், தீ போன்றவற்றின் காரணமாக பொளதீக சொத்துக்களுக்கான சேதம் போன்ற "குறைவாக நிகழ்கின்ற உயர் தாக்கம் கொண்ட" நிகழ்வுகளை காப்பிடுவதற்கு காப்புறுதி ஒப்பந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வங்கிக்கான தற்போது நடப்பிலுள்ள மற்றும் தோற்றம் பெறுகின்ற இடர்களை கருத்தில் கொண்டு காப்புறுதி ஒப்பந்தங்களின் போதியதன்மை தொடர்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றது. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகானது காப்புறுதி ஒப்பந்தம், செயன்முறை மற்றும் மீட்புப்போக்கு போன்றவற்றினை கண்காணித்து தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடுகின்றது. 2017 ஆம் ஆண்டின் போது வங்கிக்கான காப்புறுதி நலன்களை உச்சப்படுத்துவதற்கு காப்புறுதி செயன்முறை மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளது.

தகைவுப் பரிசோதனையும் சூழ்நிலைப் பகுப்பாய்வும்

தெளிவாக தோன்றக் கூடிய தொழிற்பாட்டு இடர் நிகழ்வுகளின் தாக்கத்தினை இனங்காண்பதற்கு தகைவுப் பரிசோதனையும் சூழ்நிலைப் பகுப்பாய்வும் உதவியளிக்கின்றன. குறித்துரைத்த தொழிற்பாட்டு இடர் சூழ்நிலைகளின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்காக சூழ்நிலை பகுப்பாய்வு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை தகைவுப் பரிசோதனை வங்கியின் நிதியியல் மற்றும் கடன் தீர்க்கும் தன்மை நிலைக்கான ஒன்றுக்கு மேற்பட்ட சூழ்நிலைளின் தாக்கத்தினை இனங்காண்பதில் உதவுகின்றது. இடர் தணிப்பு நடவடிக்கைகளை கண்டுபிடிப்பதற்கு உதவுவதற்காக பெறுபேறுகள், தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சபை ஒருங்கிணைத்த முகாமைத்துவ குழுவூடாக சபைக்கும் அறிவிக்கப்படுகின்றன.

விபரங்கள்	மொத்த மூலதனப் போதுமை விகிதம் மீதான தாக்கம் சாதகமானது/(பாதகமானது) %		
	குறைவானது	நடுத்தரமானது	உயர்வானது
தொழிற்பாட்டு நட்டம் - உண்மையாக தொழிற்பாட்டு நட்டங்கள் மீதான கடுமையான தன்மையில் அதிகரிப்பு (கடந்த 3 ஆண்டுகளின் போது உண்மையான மொத்த கடுமைத்தன்மை உயர்ந்தபட்சம் இடம்பெற்றது.)	(0.03)	(0.05)	(0.07)

குறைவானது – உயர்ந்தபட்ச கடுமைத்தன்மை
நடுத்தரமானது – உயர்ந்தபட்ச கடுமைத் தன்மையின் 1.5 தடவைகள்
உயர்வானது – உயர்ந்தபட்ச கடுமைத் தன்மையினை விட இரண்டு மடங்கு கடுமையானது.

சட்ட இடர்

பாசல் II சட்ட இடரினை தொழிற்பாட்டு இடரின் பாகம் ஒன்றாக வரையறை செய்கின்றது. சட்ட இடரானது பிழையாக வரையப்பட்ட ஒப்பந்தங்களும் அவற்றை நிறைவேற்றுதலும், குற்றப்பணங்கள், தண்டனைகள், தண்ட நடவடிக்கை சேதங்கள் போன்றவற்றைத் தோற்றுவிக்கின்ற எழுதப்பட்ட உடன்படிக்கைகள் இன்மை அல்லது போதாத உடன்பாடு போன்றவற்றை உள்ளடக்குவதாயினும் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. சட்ட இடரானது பின்வருவன ஊடாக முகாமைசெய்யப்படுகின்றது:

- வாடிக்கையாளர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் போன்ற மூன்றாம் தரப்பினர்களுடனான ஒப்பந்த தொடர்புகளை கைச்சாத்திடும்போது வியாபாரத் தொழிற்பாடுகளில் அனைத்து ஏற்புடைய சட்டங்களும் முழுமையாக கருத்தில் கொள்ளப்படுவதை உறுதிசெய்தல்.
- அத்தகைய அனைத்து ஒப்பந்த தொடர்புகளும் தேவையான ஆவணப்படுத்தல் மூலம் துணையளிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- உற்பத்திகளை/செயன்முறைகளை அறிமுகப்படுத்தப்படுகின்ற போது ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான ஒத்திசைவினை உறுதி செய்வதற்கான பொறிமுறைகளை நிறுவுதல்.

சட்ட இடரை முகாமை செய்யும் பொறுப்புடமைகள், சட்டப் பிரிவின் வழிகாட்டலுடன் அலுவல் உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டடுள்ளது. வங்கியின் சட்ட இடர் உபாய முகாமைத்துவத்தில் சட்டப்பிரிவு ஈடுபடுகின்றது.


சட்ட இடர் காரணமாகத் தோன்றுகின்ற தெளிவாக காணக்கூடிய தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகளை தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவப் பிரிவு கண்காணிக்கின்றது.

இணங்குவித்தல் இடர்

ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், வங்கித் தொழிற்துறையில் காணப்படும் நடத்தைக் கோவை மற்றும் நடமுறைத் தரநியமங்கள் போன்றவற்றுடன் இணங்காமையின் காரணமாக வங்கியின் நிதியியல் நிலைமைகள் மற்றும் நற்பெயர் நேரடியாக பாதிக்கப்படுவதனால் இணங்குவித்தல் இடரானது சிக்கல்வாய்ந்ததாக கருதப்படுகின்றது. இதனால், இணங்குவித்தல் அலுவலரின் தலைமையிலான இணங்குவித்தல் பிரிவானது சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவக் குழுவின் ஊடாக சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் வங்கியின் இணங்குவித்தல் இடரினை குறைப்பதற்கு வழிமுறைகளை மேற்கொள்கின்றது.

சிறந்த இணங்குவித்தல் சூழலொன்றினை தோற்றுவித்தல் மற்றும் இணங்குவித்தல் இடரை குறைக்கும் நோக்குடன் 2017 இன்போது இணங்குவித்தல் பிரிவினால் எடுக்கப்பட்ட முயற்சிகள்:

- இலங்கை மத்திய வங்கியின் வாடிக்கையாளர் உரிய சிரத்தை விதிகளின் கீழ் இணங்குவித்தலுக்காக இடர் அடிப்படையிலான அணுகுமுறையினை நடைமுறைப்படுத்தல்.
- 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவெணிச் சட்டத்தினுள் இணங்குவித்தல் ஒருமுகப்படுத்தலை விரிவுபடுத்தல்.
- தூர இடங்களில் உள்ள கிளைகள் மீதும் நெருக்கடியான பிரிவுகளிலும் இணங்குவித்தல் மதிப்பீட்டினை நடாத்துதல்.
- பிராந்திய மற்றும் தலைமை அலுவலக மட்டத்தில் இணங்குவித்தல் பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.



உரு 33: இணங்குவித்தல் இடர் முகாமைத்துவச் செயன்முறை

நற்பெயர் சார் இடர்

நற்பெயர் சார் இடர் என்பது வியாபார நடைமுறைகள் மற்றும் நிதியியல் நிலைமைகள் பற்றி அக்கறைதாரர்களின் எதிர்மறையான எண்ணப்பாங்கின் காரணமாக வங்கியின் உழைப்பிற்கும் கடன்தீர திறனுக்கும் எற்படுகின்ற இன்னல்கள் பற்றிய இடராகும். பொதுவாக, கொள்கைள், நடைமுறைகள், நடத்தைக் கோவை மற்றும் வியாபார ஒழுக்கநெறிகள் மூலம் முகாமை செய்யப்படுகின்ற வேறு வியாபார இடர்களின் பரந்தளவிலான வீச்சொன்றின் மூலம் நற்பெயர்சார் இடர் தூண்டப்படுவதனால் ஏனைய அனைத்து இடர்களுக்கும் பின்பற்றப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஊடாக நற்பெயரசார் இடர் பரந்தளவில் முகாமைசெய்யப்படுகின்றது.

பிரதம நிவைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் நிறுவன முகாமைத்துவம் மூலம் கொண்டுநடாத்தப்படுகின்ற நற்பெயர்சார் இடர் முகாமைத்துவத்தினை சபை மேற்பார்வை செய்கின்றது.


நற்பெயர்சார் இடருக்கென வங்கி பூச்சிய ஏற்பொன்றினைக் கொண்டுள்ளது. இதனால், முக்கிய தொழிற்பாட்டு இடர் குறிகாட்டிகள், மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாட்டுப் பகுப்பாய்வு போன்ற கருவிகளைப் பயன்படுத்தி வங்கியின் நற்பெயர்சார்ந்த பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை இடர் முகாமைத்துவப் பிரிவு கண்காணிக்கின்றது. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக்காக நற்பெயர்சார் இடரினை மதிப்பிடுவதற்கு வங்கி, புள்ளிவழங்கும் அட்டை - அடிப்படையிலமைந்த மாதிரியொன்றினை பயன்படுத்துகின்றது.

உபாய இடர்

வங்கியின் உழைப்பின் மீதும் மூலதனம் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற வெற்றியளிக்காத வியாபாரத் திட்டங்கள், பொருத்தமான வியாபாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமை, வியாபராச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தி செயலாற்றத் தவறுதல், மற்றும் தேவைக்கு குறைந்த வள ஒதுக்கீடு போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற இழப்புளின் இடராக உபாய இடர் கருத்திற்கொள்ளப்படலாம். சாத்தியமான உயரிய வாய்ப்புகளை தவறவிடுவதும் உபாய இடரின் கீழ் கருத்திற்கொள்ளப்படக்கூடியன.

உபாய உருவாக்கத்திற்கான பொறுப்பானது தேசிய சேமிப்பு வங்கியின் நோக்கு, பணி மற்றும் இடர் ஏற்பு என்பவற்றுடன் அணிசேர்கின்ற உபாயத் திட்டமிடல் மற்றும் வரவுவெசலவுத்திட்டமமைத்தல் செயன்முறை என்பன ஊடாக பிரிவுகளின் பிரதானிகளிடம் காணப்படுகின்றது. உள்நாட்டிலும் உலகளவிலும் பொதுவான பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகள் மோசமடைவதன் காரணமாக உபாய இடர் தோன்றலாம். வியாபார உபாயங்களை வகுப்பதில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்தான உள்ளீடுகள் கூட்டிணைக்கப்படுகின்றன.

வங்கியின் உபாய இடரை நோக்கிய மேற்பார்வைப் பொறுப்பினை சபை கொண்டுள்ளது. அடிக்கடி நிகழும் மீளாய்வுகள் ஊடாக உபய இடரை சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக்காக உபாய இடரினை மதிப்பிடுவதற்கு வங்கி, புள்ளிவழங்கும் அட்டை - அடிப்படையிலமைந்த மாதிரியொன்றினை பயன்படுத்துகின்றது.



உரு 34: உபாய இடர் கூறுகள்

மூலதன முகாமைத்துவம்

மூலதன முகாமைத்துவமானது வங்கியின் தாக்குப்பிடிக்கும்தன்மையினை உறுதிசெய்கின்ற அதேவேளை பங்குதாரர்களுக்கு வருவாயினை உருவாக்குவதற்கான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பாகமொன்றாக காணப்படுகின்றது. மூலதன முகாமைத்துவ செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கமைவாக காணப்படுகின்றது.

குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளும் தடுப்புகளும் - தூண் 01

2016 இன் 1 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரையானது குறைந்தபட்ச மூலதன விகிதங்களை அதிகரிப்பதற்கு குறித்துரைத்த கால எல்லைகளுடன் கூடிய 2017 ஜூலை 01 முதல் ஆரம்பிக்கின்ற உரிமம் பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இது 2019 சனவரி 01 அளவில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.


2017 ஆம் ஆண்டின் போது வங்கி, மூலதன போதுமைக்காக நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச தேவைப்பாடுகளை எய்தியது. இவ்வாண்டின் போது பொது பங்குமூலதன அடுக்கு 1 விகிதம், 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 11.31% இலிருந்து 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 11.93% ஆக சிறிதளவு அதிகரித்தது. இதற்கு பிரதான காரணம், பங்குமூலதனத்தில் அதிகரிப்பும் திரட்டு நிதியத்துக்கான/பங்கிலாபத்திற்கான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டிலிருந்த ரூபா 12.02 பில்லியனுக்கு எதிரான 2017 ஆம் ஆண்டில் 5.1 பில்லியன் ஆன குறைப்புமாகும். தகைமைபெறுகின்ற மேலதிக அடுக்கு 1 மூலதன

சாதனங்கள் இல்லாமையானது வங்கியின் பொது பங்குமூலதன அடுக்கு 1 விகிதமானது மொத்த அடுக்கு 1 மூலதன அடுக்கு விகிதத்திற்கு சமமானதாகும்.

வங்கியின் ஏட்டு மட்டத்தினுள் இடர் நிறையேற்றப்பட்ட சொத்துகளை கண்காணிப்பதற்கும் பேணுவதற்கும் வங்கி நடவடிக்கைகளை எடுத்தது. மொத்த மூலதன விகிதம் 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 13.86% இற்கு எதிராக 2017 டிசம்பர் 31 அன்று 15.31% ஆக அதிகரித்தது.

வங்கியின் துணை நிறுவனமான என் எஸ் பி நிதி முகாமைத்துவக் கம்பனி, தொகுதி மட்டத்தில் மூலதன போதுமை விகிதத்திற்கு சாதகமாக பங்களிக்கின்றது. 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு தொகுதியானது பொது பங்குமூலதன அடுக்கு 1/அடுக்கு 1 விகிதம் 12.65% ஆகக் காணப்பட்டதுடன் மொத்த மூலதன விகிதம் 16.00% ஆக காணப்படுகின்றது

மூலதன மட்டம் - வங்கியும் தொகுதியும்



உரு 35

100% அரசுக்கு உரித்தான வங்கியென்பதனால் வெளிவாரியாக மூலதனம் திரட்டுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளே காணப்படுகின்றன. பாசல் III இன் கீழ் கிடைக்கத்தக்க ஒரேயொரு ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன சாதனம் திறைசேரியின் செயலாளருக்கு விநியோகிக்கப்பட்ட பங்குகள் ஆகும். 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்புச் சட்டத்திற்கு அமைவாக, பாசல் III வழிகாட்டல்களின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமாக தகைமை பெறுவதற்கான மூலப் பிரமாணங்களை நிறைவுசெய்கின்ற அடுக்கு 2 மூலதனத்தை வங்கி திரட்ட முடியாது.

வங்கியின் மூலதன மட்டங்களை அதிகரிப்பதற்கான முன்முயற்சிகள்:

- இடர் ஏற்பு மட்டங்களுக்கு மூலதனப் போதுமை விகித்தினை மேன்படுத்தம் வரை பங்கிலாபக் கொடுப்பனவுகளை குறைப்பதன் மூலம் மூலதனத்தைக் பேணுதல்.
- இடர் சீர்செய்யப்பட்ட பெறுமதிக்கு எதிராக சொத்துப்பட்டியல்கள் மற்றும் உயர் பெறுமதியான முதலீடுகளை கண்காணித்தல் ஊடாக உள்ளக மூதலன உருவாக்கத்தினை உறுதிசெய்தல்.
- மூலதன மட்டங்கள் மீதான பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு இடர் தோற்றப்பாட்டில் உள்ள இடர் நிறையேற்றப்பட்ட சொத்துகள் கலப்பு மற்றும் மாற்றங்களை கண்காணித்தல்.
- மூலதன மட்டங்களை மேம்படுத்துவதற்கு பங்குரிமையாளர்களின் ஆதரவினை பெறும் நோக்குடன் பாசல் III இனால் விதிக்கப்பட்ட மூலதனத்திற்கான அதிகரிக்கப்பட்ட கேள்வியின் காரணமாக உபாய வியாபார குறிக்கோள்களை எய்துவதிலுள்ள சவால்கள் பற்றி அக்கறைதாரர்களின் விழிப்புணர்வை அதிகரித்தல்

விகிதங்கள் (%)	2017.12.31 இல் உண்மையானது		2016.12.31 இல் உண்மையானது		குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் 2017.07.01	குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் 2018.01.01	குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் 2019.01.01
	வங்கி	தொகுதி	வங்கி	தொகுதி			
டி- எஸ்ஐபிஎஸ் இற்கான பொது பங்குமூலதன அடுக்கு 1 உடன் சீசீபீ மற்றும் மூலதன அதிர்வு	11.93	12.65	11.31	12.03	6.25	7.375	8.50
எ- எஸ்ஐபிஎஸ் இற்கான அடுக்கு 1 உடன் சீசீபீ மற்றும் மூலதன அதிர்வு	11.93	12.65	11.31	12.03	7.75	8.875	10.00
எ- எஸ்ஐபிஎஸ் இற்கான மொத்த மூலதனத்துடன் உடன் சீசீபீ மற்றும் மூலதன அதிர்வு	15.31	16.00	13.86	14.54	11.75	12.875	14.00

அட்டவணை 14 ஒழுங்குமுறைப்படுத்தல் விகிதங்கள் - உண்மையானது எதிர் குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல்


மூலதனம் என்பது விலையுயர்ந்த வளமொன்றாகும்: இதனால், செயலாற்றுகைக்கும் இடருக்குமிடையில் சரியான சமனிலையொன்றினை எய்துவதன் மூலம் மிகவும் வினைத்திறன் மிக்கவாறு மூலதனத்தை முகாமை செய்வதற்கு வங்கி பாடுபடுகின்றது. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது தொழிற்பாட்டு வினைத்திறன்களையும் வளர்சினையும் கடன்தீர் திறனையும் பெற்றுக்கொள்வதற்கு இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் உபாய வியாபார திட்டமிடல் என்பவற்றை ஒன்றிணைக்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினை ஊக்குவிக்கின்றது.

உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை – தூண் 02

உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது அனைத்து முக்கிய இடர்களையும் பற்றிக்கொள்வதற்கு ஆற்றல் வாய்ந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றுடன் கூடிய இடர் ஏற்பு, தகைவுச் சோதனை மற்றும் மூலதன திட்டமிடல் எண்ணக்கருக்களை உள்ளடக்குகின்றது. இது வங்கியின் இடர் தோற்றப்பாட்டிற்கு உள்ளக மூலதன பொதுவளவான மட்டமொன்றினை நிறுவுவதற்கு மிகவும் ஆய்ந்தரிந்த முறையொன்றில் வியாபாரச் செயலாற்றம், இடர்முகாமைத்துவ நடடிவக்கைகள் மற்றும் இடர் உணர்வு மூலதனம் என்பவற்றை ஒன்றிணைப்பதை இயலச்செய்கின்றது.

தேசிய சேமிப்பு வங்கியானது சபை அனுமதித்த உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை கொண்டுள்ளது. இது மேற்பார்வை, மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை நடாத்துவதன் மீது வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பாசல் III தூண் II வழிகாட்டல்களின் மீதான இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கும் சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கும் அமைவாக காணப்படுகின்றது.

வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது வங்கிக்கும் ஒழுங்குமுறைபடுத்துனருக்கும் அடிப்படையாகக் காணப்படுகின்ற 04 கோட்பாடுகளினால் ஆளப்படுகின்றது. தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான ஒருங்கிணைத்தல் இடர், அனைத்தையும் உள்ளடக்கிய இடர் மதிப்பீடு, உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல், கண்காணித்தல், அறிக்கையிடுதல், சபையின் மேற்பார்வை பொறுப்புடன் தகைவுச் சோதனை இடர்கள் என்பவற்றை இச்செயன்முறை ஈடுபடுத்துகின்றது.



உரு 36: உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக் கட்டமைப்பு

இடர் மதிப்பீடானது தூண் I மற்றும் தூணு II இடர்கள் இரண்டினையும் பற்றிக்கொள்கின்றது. தூண் I இடர்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் தொடர்புபடுவதுடன் தூணு II இடர்கள் பொருளாதார மூலதனத்துடன் தொடர்புபடுகின்றது. தூண் II இடர்களை மதிப்பிடுவதற்கு வங்கியானது அளவுசார் மற்றும் பண்புசார் அணுகுமுறைகள் இரண்டினையும் பயன்படுத்துகின்றது.

உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை மதிப்பீடுகளுக்-கமைவாக வங்கியின் மொத்த இடர் தோற்றப்பாட்டினை காப்பிடுவதற்கான வங்கி மூலதன தேவைப்பாடுகளை இனங்கண்டுள்ளது. உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் அனைத்தையும் உள்ளடக்கிய ஆவணமாக்கல், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக்குழு மூலம் கலந்தாயப்பட்டு அனுமதிக்கப்படுவதுடன் ஒழுங்குமுறைப்படுத்துனருக்கு சமர்பிக்கப்படுத்துவதற்கு முன்னர் சபை ஒருங்கிணைத்த இடர் முகாமைத்துவ குழுவூடாக சபையும் கலந்தாய்வு செய்து அனுமதிக்கின்றது.

குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் - தூண் III

குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் வங்கியின் மூலதன போதுமையினையும் இடர் காப்பின்மைகளையும் அளவிடுவதற்கு சந்தை பங்கேற்பாளர்களை அனுமதிப்பதற்கு பாசல் III கட்டமைப்பினுள் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

2016 இன் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கமைவாக குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்காக பக்கம் 379 தொடக்கம் 391 வரை பார்க்கவும்.

**இப் பிரிவில் உள்ள அனைத்து வெளிப்படுத்தல்களும் (பக்க இலக்கம் 201 முதல் 238 வரை) வேறு வகையில் குறிப்பிட்டாளன்றி கணக்காய்வு செய்யப்படாதவையாகும்.*

நிதியியல் அறிக்கைகள்

நிதியியல் நாட்காட்டி - **240**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை - **241**

நிதியியல் அறிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள் - **248**

நிதியியல் அறிக்கைகளில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்று - **250**

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை - **252**

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று - **253**

கணக்காய்வாளர் நாயகத்தின் கூற்று - **255**

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று - **256**

நிதி நிலைமைக் கூற்று - **258**

பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று - **260**

காசுப் பாய்ச்சல் கூற்று - **264**

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - **265**

நிதியியல் நாட்காட்டி

நிதியியல் நாட்காட்டி 2017

2017 மார்ச் 31 இல் முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் கூற்று வெளியீடு	**2017 மே 27**
2017 யூன் 30 இல் முடிவுற்ற காலாண்டுக்கான நிதியியல் கூற்று வெளியீடு	**2017 ஓகஸ்ட் 31**
2017 செப்தெம்பர் 30 இல் முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் கூற்று வெளியீடு	**2017 நவம்பர் 30**
2017 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் கூற்று (கணக்காய்வுக்கு உட்பட்டது) வெளியீடு	**2018 மார்ச் 15**

உத்தேச நிதியியல் நாட்காட்டி 2018

2018 மார்ச் 31 இல் முடிவடையும் காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் கூற்று வெளியீடு	**2018 மே 31**
2018 யூன் 30 இல் முடிவடையும் காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் கூற்று வெளியீடு	**2018 ஓகஸ்ட் 31**
2018 செப்தெம்பர் 30 இல் முடிவடையும் காலாண்டுகான இடைக்கால நிதியியல் கூற்று வெளியீடு	**2018 நவெம்பர் 30**
2018 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கான நிதியியல் கூற்று (கணக்காய்வுக்கு உட்பட்டது) வெளியீடு	**2019 மார்ச் 29**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பொது

2017 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் இணைத்து வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய தமது ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். வங்கியானது கடந்த ஆண்டுகளிலும் மற்றும் எதிர் காலத்திலும் எவ்வாறு பெறுமதி வாய்ந்ததாகவும் அதனை நிலை நிறுத்துவதாகவும் விளங்குமென்பதைத் தெரிவிக்கும் வகையில் வங்கியின் செயற்பாடுகள் மூலோபாயத் தோற்றத்தை வழங்குவதாக நாம் உறுதிப்படுத்துகிறோம்.

வரைவு நிதிக் கூற்றுக்கள், 2018 பெப்ரவரி 08இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், 2018 பெப்ரவரி 9 இல் கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 12 இல் விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் அத்துடன் நிறுவன ஆளுகை மீதான பணிப்புக்கள் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடன் சேர்த்து இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட 2005 ஜனவரி 27 ஆம் திகதிய பிரிவு/PED/ 27 ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கமைவாக 2018 மே 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிதியமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கி, 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மூலம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியென்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. இவ் வங்கிக்கு தொடர்ச்சியாக 15 ஆவது ஆண்டாக பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் நீண்டகால கடன் இறுக்கும் ஆற்றல் AAA (lka) தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பிட்ச் இங்க் நிறுவனத்தினால் இன்டர்நெஷனல் கிரடிற் ட்ரேட்டிங் நிறுவனத்தினால் B+ உறுதிப்பாடும், புவர் ரேட்டிங் சேவிசஸ் நிறுவனத்தினால் B+ உறுதிப்பாடும் வழங்கப்பட்டது.

நோக்கம், பணி மற்றும் மதிப்பீடுகள்

வங்கியின் நோக்கம், பணி, மதிப்பீடுகள் ஆகியன இவ் ஆண்டறிக்கையின் 3 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து நிரந்தர ஊழியர்களும் வங்கியின் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட்டுள்ளதுடன், வங்கியின் நோக்கு மற்றும் பணியை அடைவதற்கான நோக்கில் அரச சத்தியப் பிரமாணத்துக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

முதன்மைச் செயற்பாடுகள்

வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் முதன்மைச் செயற்பாடானது, இலங்கை மக்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் ஆகும்.

துணை நிறுவனம்

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிட்டெட் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடு, இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர் ஒருவராக, அரசாங்கப் பிணையங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். இக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 40 (ஆ) ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

வங்கியினதும், தொகுதியினதும் முக்கிய நடவடிக்கைகளின் தன்மையில் மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படவில்லை.

தொழிற்பாட்டு செயலாற்றுகை மீளாய்வு

2017 ஆம் நிதி ஆண்டுக்கான வங்கியின் முழுமையான நிதிச் செயலாற்றுகை மற்றும் 2017 டிசெம்பர் 31 இல் வங்கியின் நிதி நிலைமை ஆகியன தலைவரின் செய்தி (பக்கம் 21) பொது பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு (பக்கம் 27) 2017 இன் வரலாறு (பக்கம் 12) மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் (பக்கம் 256) ஆகியவற்றில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் ஆண்டறிக்கையின் முக்கிய பாகம் ஒன்றினைத் தோற்றுவிக்கின்றன.

வலையமைப்பு விரிவாக்கமும் எதிர்கால அபிவிருத்திகளும்

தீவு முழுதும் வங்கியின் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் நோக்கில் மீளாய்வின் கீழான ஆண்டில் மூன்று கிளைகள் வலையமைப்பில் சேர்க்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 253 கிளைகளை வங்கி தனது வலையமைப்பில் கொண்டிருந்தது. வாடிக்கையாளர் வசதிகளை அதிகரிக்கும் விதத்தில் தன்னியக்கக் காசு இயந்திர வலையமைப்பு (ATM) மேலும் விரிவாக்கப்பட்டது. வங்கியானது இவ் ஆண்டில் நாடு முழுவதிலும் 7 தன்னியக்கக் காசு இயந்திரங்களை நிறுவி, தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய இணையான வங்கிகளின் தன்னியக்கக் காசு இயந்திரங்கள் தவிர்ந்த அவற்றின்

எண்ணிக்கையை 286 ஆக்கியது. வாடிக்கையாளர்கள் 16,000 க்கும் மேற்பட்ட "mcash" வெளிநிலையங்கள் வாயிலாக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கி அடுத்து வரும் ஆண்டுகளில் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லத் தீர்மானித்துள்ளது. இது வங்கியின் வாடிக்கையாளர் தளத்துக்கான வசதியை மேம்படுத்துவதாக அமையும். வங்கியின் எதிர்கால அபிவிருத்திகள் பற்றிய மேலோட்டமான மீளாய்வு ஒன்று தலைவரின் செய்தி (பக்கம் 21) பொது முகாமையாளர்/பி.நி.அ வின் மீளாய்வு (பக்கம் 27) மற்றும் 2017 இன் வரலாறு (பக்கம் 12) ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

முன்னறிகின்ற எதிர்காலத்தின் போது அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினைப் பேணுவதற்கு செயற்பாடுகளைத் தடை செய்கின்ற கட்டுப்பாடுகள் அல்லது திட்டம் போன்ற வங்கியின் இயலுமை மீது சந்தேகத்தினைத் தோற்றுவிக்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் இருப்பதாக பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய (SLFRS/LKAS) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை திருத்தப்பட்ட 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் தேவைப்பாட்டுடன் இணங்குவதாகவும் அமைந்துள்ளன. 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) இனால் முறையாக சான்றுபடுத்தப்பட்டு, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் தலைவர் உள்ளிட்ட இரு பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டும், கையொப்பமிடப்பட்டும் 256 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இது வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது.

நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

2017 டிசெம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியினது அலுவல்களை உண்மையான மற்றும் நேர்மையான நோக்கத்தினைப் பிரதிபலிப்பதற்கும் அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான இலாபத்தினைப் பிரதிபலிப்பதற்கும் வங்கியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையது ஆகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLFRS / LKAS) மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். இவ் ஆண்டறிக்கையின் 248 ஆம் பக்கத்தில் காணப்படும் பணிப்பாளர்களின் பொறுப்புடைமைக் கூற்று வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புடமை இதில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளரின் அறிக்கை

2017 டிசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியினதும் அதன் துணைக் கம்பனியான தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி மற்றும் குழுவின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பனவற்றின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமையதிபதி மேற்கொண்டுள்ளார். 2017 இல் வங்கிக்கான கணக்காய்வு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டது. அவர்களின் கணக்காய்வில் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் உடனடி நடவடிக்கைக்காக கிரமமான முறையில் முகாமைத்துவத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதி அறிக்கையிடல் முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களுடன் நிதியியல் கூற்றுக்கள் பரிசோதனைக்காக கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம் ஆண்டறிக்கையின் 255 ஆம் பக்கத்தில் காணப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பணிப்புரைகளின் இணங்குவிப்பை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் பதிவுகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் பரிசோதனைகளை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மேற்பார்வை நிறுவனம் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியானது காலத்துக்குக் காலம் மேற்கொண்டது. அத்துடன் தேவைப்படும் மட்டங்களில், தேவைப்படும் நிதிக் குறிகாட்டிகள் பேணப்படுகின்றன என்பதையும் இது தீர்மானிக்கும். இதனால், பங்குதாரர்களின் குறிப்பாக வைப்பாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும்.

முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் இவ்வாண்டின் போது ஏற்பட்ட மாற்றங்களும்

வங்கி தனது நிதிக் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS / LKAS) அமைவாகத் தயாரித்துள்ளது. இவ்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் 265 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் கணக்கீட்டுக் கொள்கைகளில் காணப்பட்டிருப்பின் அவையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மூலோபாய வர்த்தகத் திட்டம்

வங்கியானது 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 2017 – 2019 காலப்பகுதிக்கான மூலோபாய வர்த்தக திட்டத்தை மீளவும் செயற்படுத்தும் வகையில் 2018 – 2020 காலப்பகுதிக்கான தனது இற்றைப்படுத்தப்பட்ட மூலோபாய வர்த்தக திட்டமொன்றை விருத்தி செய்துள்ளது. கவனம் செலுத்தக் கூடிய விடயங்கள் மற்றும் மூலோபாய முன்னெடுப்புக்கள் ஆகியன இச் செய்முறையில் அடையாளங் காணப்பட்டுள்ளன. புதிய வர்த்தகத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட எல்லைக்குள் தொழிற்படுவதற்கான முயற்சிகளை வங்கி மேற்கொள்வதுடன், இது தே சே வ இன் எதிர்கால இயக்கத்தினை விரைவுபடுத்துவதற்கும் உதவி புரிவதாக அமையும். மூலோபாய வர்த்தகத் திட்டத்தின் தொடர்ச்சியாக KPI நிறுவனக் கணக்கு அட்டையை அறிமுகஞ் செய்வதுடன், ஒவ்வொரு நடவடிக்கை மற்றும் பணிக் கூறினை இலகுவாக கண்காணிக்கும் நோக்கத்தை இது கொண்டுள்ளது

வருமானம்

2017 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூபா 107,817 மில்லியனாகக் (2016 – ரூபா 87,399 மில்லியன்) காணப்பட்ட வேளையில் தொகுதியின் வருமானம் ரூபா 108,056 மில்லியனாக (2016 – ரூபா 88,039 மில்லியன்) விளங்கியது. வருமானங்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

பெறுபேறுகளும் பகிர்வும்

வங்கியினதும் தொகுதியினதும் வருமான வரிக்கு முன்பான இலாபம் முறையே ரூ. 14,029 மில்லியனாகவும், ரூ. 13,645 மில்லியனாகவும் (2016 – ரூ 13,303 மில்லியன் மற்றும் ரூ. 13, 397 மில்லியன்) விளங்கியது. இது வங்கிக்கான 5.45% அதிகரிப்பையும், தொகுதிக்கான 1.85% அதிகரிப்பையும் (2016 – 2.07% மற்றும் 0.94% அதிகரிப்பு) கொண்டிருந்தது.

வருமான வரிக்குப் பின்பான வங்கியினதும், தொகுதினதும் இலாபம் முறையே ரூ. 9,610 மில்லியனாகவும் ரூ 9,050 மில்லியனாகவும் (2016 – ரூ. 9,498 மில்லியன் மற்றும் ரூ. 9,562 மில்லியன்) விளங்கியிருந்தன. இது வங்கி மற்றும் தொகுதிக்கு முறையே 1.18% அதிகரிப்பையும், 5.36% வீழ்ச்சியையும் (2016 – 9.52% மற்றும் 8.27%) கொண்டிருந்தன. வங்கிக்கான இலாபம் பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன

வரி விதிப்பிற்கான ஏற்பாடு

வங்கித் தொழிலுக்கு ஏற்புடைய வருமான வரி 28% ஆகும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15% ஆகவும் மற்றும் தேச நிர்மாண வரி 2% ஆகவும் வங்கித் தொழிற்பாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் LKAS 12 இற்கமைய வருமான வரிகள் மீது பொறுப்புடைமை முறையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீதும் பிற்போடப்பட்ட வரியினை வங்கி வழங்கியது. வருமான வரிச் செலவினம் மற்றும் பிற்போடப்பட்ட வரி விதிப்பு பற்றிய தகவல்கள் முறையே குறிப்புகள் 13 இலும் 29 இலும் 289 ஆம் பக்கத்திலும் 324 ஆம் பக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன.

குறித்துரைக்கப்பட்ட மூலதனம்

வங்கியின் அங்கீகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 பில்லியன் ஆகும். இது ஒவ்வொன்றும் ரூ. 10.00 கொண்ட ஒரு பில்லியன் சாதாரண பங்குகளைக் கொண்டு ஆக்கப்பட்டது. திறைசேரிச் செயலாளருக்கான கோரப்படாத வைப்பு ஒதுக்கினைப் பயன்படுத்தி வங்கி ரூ. 10.00 கொண்ட 50 மில்லியன் சாதாரண பங்குகளை 2017 டிசெம்பர் 31 இல் வங்கி வழங்கியது. வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் 2017 டிசெம்பர் 31 இல் ரூ. 6.7 பில்லியன் ஆக விளங்கியது. திறைசேரியின் செயலாளர் அவரது அலுவல்சார் பதவிக்கிணங்க விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் அனைத்திற்கும் உரிமையாளராவார்.

பெறப்பட்ட மூலதனம்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ஐ.அ.டொலர் 750 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதி கொண்ட சர்வதேச முறி ஒன்றை வழங்கியது. இதுவே வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து தனியொரு வழங்கலில் வங்கி ஒன்றினால் திரட்டப்பட்ட ஆகக் கூடிய தொகையாகும். திரட்டப்பட்ட மூலதனம் பற்றிய தகவல் 33 ஆம் குறிப்பில் 327 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

	2017 **ரூ. மில்.**	2016 ரூ. மில்.
அனைத்துச் செலவுகள் தேய்வுக்கான ஒதுக்கீடு ஏற்படக் கூடிய கடன் இழப்புக்கள் மற்றும் VAT, NBT மற்றும் வரிக்கு முன்பான எதிர்காலத் தேய்வுகள் ஆகியவற்றின் பின்பான ஆண்டுக்குரிய இலாபம்	**17,523**	16,094
நிதிச் சேவைகள் மீதான வற் வரி	**3,083**	2,405
நிதிச் சேவைகள் மீதான தேச நிர்மாண வரி	**411**	386
வருமான வரிக்கான ஏற்பாடு	**4,419**	3,805
தேறிய இலாபம்	**9,610**	9,498

2017 டிசெம்பர் 31 இல் வங்கி ரூ. 6 பில்லியன் சார்நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களை கொண்டிருந்தது. தனிப்பட்ட வைப்பாக 2016 டிசம்பர் 29 அன்று விநியோகிக்கப்பட்ட ரூபா 100 கொண்ட தரப்படுத்தப்பட்ட காப்பளிக்கப்படாத சார்புநிலைப்படுத்தப்பட்ட மீட்கத்தக்க தொகுதிக் கடன்களை உள்ளடக்கியிருந்தது. சார்நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் குறிப்பு 35 இல் 339 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பங்குடைமை

இலங்கை அரசாங்கமானது, தேசிய சேமிப்பு வங்கியின் தனிப்பட்ட பங்குதாரர் ஆகும்.

ஒதுக்குகள்

வங்கியின் ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

	2017 ரூ. மில்.	2016 ரூ. மில்.
நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம்	**3,003**	2,522
மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	**7,793**	3,297
வைத்திருக்கப்பட்ட வருவாய்கள்	**2,229**	2,379
ஏனைய ஒதுக்குகள்	**20,497**	17,848
	33,522	26,046

ஒதுக்குகளின் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்றில் 260 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கான பங்களிப்பு

2017 ஆம் ஆண்டில் வங்கி அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் அறவீடுகள் வாயிலாக ரூ. 13,440 மில்லியன் (2016 – ரூ. 19,251 மில்லியன்) பங்களிப்புச் செய்தது. இது வருமான வரி ரூ. 4,419 மில்லியன் (2016 – ரூ. 3,805 மில்லியன்), பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூ. 3,083 மில்லியன் (2016 – ரூ. 2,406 மில்லியன்), தேச நிர்மாண வரி ரூ. 411 மில்லியன் (2016 – ரூ. 386 மில்லியன்), விசேட கட்டணம் ரூ. 320 மில்லியன் (2016 – ரூ. 533 மில்லியன்), திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு ரூ. 5,111 மில்லியன் (2016 – ரூ. 12,026 மில்லியன்) மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்பு ரூ. 96 மில்லியன் (2016 – ரூ. 95 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

தபால் மா அதிபருக்கான சேவைக் கட்டணங்கள் (த.மா.அ)

தபால் மா அதிபருக்கான 2017 ஆம் ஆண்டுக்குரிய சேவைக் கட்டணங்கள் ரூ. 141 மில்லியனாக, 2016 இல் வழங்கப்பட்ட அதே அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

ஓய்வூதிய நிதியம்

பங்களிப்பற்ற ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்துடைய 6423 ஊழியர்களுக்கான (ஓய்வு பெற்ற ஊழியர்கள் உட்பட) தொகை ரூ. 489 மில்லியன் (2016 – ரூ. 829 மில்லியன்) நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவன உறுதிப்பாடு மற்றும் பொறுப்பு

நிறுவன சமூக பொறுப்புணர்வின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் விபரங்கள் (நிசபொ) இந்த ஆண்டறிக்கையின் 135 தொடக்கம் 139 வரையான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கட்புலனாகாச் சொத்துக்கள்

சொத்து, பொறி மற்றும் கருவி மற்றும் கட்புலனாகாச் சொத்துக்களின் பெறுமதி, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே ரூ. 15,108 மில்லியன் மற்றும் ரூ. 959 மில்லியனாக (2016 இல் ரூ. 10,188 மில்லியன் மற்றும் ரூ. 639 மில்லியன்) விளங்கியது.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்கள் (நடைமுறையிலுள்ள பிரதான வேலை வாடகை மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட கட்டிடங்களிலான முன்னேற்றங்கள் உள்ளடங்கலாக) ஆகியனவற்றைக் கையேற்றல் தொடர்பிலான வங்கியின் மொத்த மூலதனச் செலவினம் இவ்வாண்டில் ரூ. 1,109 மில்லியனாகவும் (2016 – ரூ. 750 மில்லியன்) மற்றும் தொகுதியின் செலவினம் ரூ. 1,111 மில்லியனாகவும் (2016 – ரூ. 751 மில்லியன்) விளங்கின. இவற்றின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 27 மற்றும் 28 இல் 315 ஆம் பக்கத்திலிருந்து 322 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

நிரந்தரச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

உரிமம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் பெறுமதி மீதான 2014 இன் எண் 01 கொண்ட மத்திய வங்கிப் பணிப்புரையின் பிரிவு 3 இற்கு அமைவாக வங்கியானது 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிரந்தர ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீடொன்றை மேற்கொண்டது.

வங்கியின் ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுச் செய்முறையானது, மேற் கூறப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க தொழில் சார் தகைமை பெற்ற சுயாதீனமான மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. நிரந்தரச் சொத்து மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுத் தொகையானது, அவற்றின் சந்தைப் பெறுமதியை விஞ்சவில்லை என்ற அபிப்பிராயத்தை பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

அறிவித்தல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 46 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கணக்குகளுக்கான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவித நிகழ்வுகளும் அறிவிக்கும் திகதியிலிருந்து ஏற்படவில்லை.

முடிவுறாதுள்ள வழக்காடல்கள்

பணிப்பாளர்களினதும் வங்கியின் சட்டத்தரணிகளினதும் கருத்திற்கு இணங்க நிதிக் கூற்றின் 45 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வங்கிக்கு எதிரான வழக்காடல்கள் வங்கியின் நிதி நிலைமை மீது அல்லது அதன் எதிர்காலத் தொழிற்பாடுகள் மீது முக்கிய தாக்கமொன்றினைக் கொண்டிருக்காது.

பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நிதி அமைச்சு மற்றும் தபால் மா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு பதவி வழி உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. 1955 இன் 28 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1971 இன் 30 ஆம் இலக்க தேசேவ சட்டத்தின் பிரிவு 11 (1) இன் ஏற்பாடுகளின் கீழ் தலைவர் மற்றும் ஏனைய நான்கு பணிப்பாளர்கள் ஆகியோர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர். இவ்வாண்டின் பணிப்பாளர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளதுடன் இவர்களின் சுருக்க முகக் குறிப்புகள் இவ் ஆண்டறிக்கையின் 156 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளரின் பெயர்	காலம்	அந்தஸ்து
திரு. அஸ்வின் டி சில்வா, தலைவர்	**2015.02.09 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ /சுஅ
திரு. டி.எல்.பி.ஆர் அபேரத்ன, பணிப்பாளர் (நிறைவேற்று அலுவல்சார்)	**2012.02.09 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ
திரு. சுரங்க நாவுலகே, பணிப்பாளர்	**2015.02.09 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ
திரு. அஜித் பதிரன, பணிப்பாளர்	**2015.03.20 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ
திரு. ஏ.கே. செனவிரத்ன, பணிப்பாளர் (நிறைவேற்று அலுவல்சார்)	**2015.05.27 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ
திரு. சந்திம ஹேமச்சந்திர, பணிப்பாளா	**2015.11.02 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ
திரு. அனில் ராஜகருணா, பணிப்பாளர்	**2015.11.02 இலிருந்து நியமிக்கப்பட்டார்**	நிஅஅ / சுஅ

சுஅ - சுயாதீனம் அற்ற பணிப்பாளர், நிஅஅ - நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்

பணிப்பாளர்களின் வேதனங்களும் ஏனைய நலன்களும்

வங்கி மற்றும் தொகுதி தொடர்பில் 2017 நிதியாண்டுக்கான பணிப்பாளர்களது வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 40 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

சபை உப குழுக்கள்

சபையானது ஒட்டுமொத்த பொறுப்பு மற்றும் வகை கூறலைப் பொறுப்பேற்கும் அதேவேளை, மத்திய வங்கியின் நிறுவன ஆளுகை நியமங்கள் மற்றும் ஏனைய நியதிச் சட்டங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் சபை உப குழுக்களை நியமித்தது.

2017 டிசெம்பர் 31 அன்று உள்ளவாறு, நான்கு கட்டாய உப குழுக்களை உள்ளடக்கி சபை உப குழுக்களின் உள்ளடக்கம் பின்வருமாறு.

சபைக் கணக்காய்வுக் குழு

திரு. டி.எல்.பி.ஆர் அபேரத்ன	தலைவர் (2015.11.30 இலிருந்து)
திரு. ஏ.கே. செனவிரத்ன	உறுப்பினர் (2015.06.04 இலிருந்து)
திரு. அனில் ராஜகருணா	உறுப்பினர் (2015.11.30 இலிருந்து)

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 190 முதல் 191 ஆம் பக்கம் வரை கொடுக்கப்பட்டுள்ளது.

சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு

திரு. அஸ்வின் டி சில்வா	தலைவர் (2015.03.12 இலிருந்து)
திரு. டி.எல்.பி.ஆர் அபேரத்ன	உறுப்பினர் (2015.03.12 இலிருந்து)
திரு. அஜித் பதிரன	உறுப்பினர் (2015.11.30 இலிருந்து)

சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை 193 மற்றும் 194 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

சபை நியமனக் குழு →

திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன	தலைவர் (2017.02.03 இலிருந்து மற்றும் உறுப்பினர் 2015.11.30 இலிருந்து 2017.02.03 வரை)
திரு. அஸ்வின் டி சில்வா	தலைவர் (2017.02.03 இலிருந்து பதவி விலகினார்)
திரு. அஜித் பதிரன	உறுப்பினர் (2015.04.30 இலிருந்து)
திரு. ஏ.கே. செனிவிரத்ன	உறுப்பினர் (2017.02.03 இலிருந்து)

சபை நியமனக் குழுவின் அறிக்கை மற்றும் 195 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு →

திரு. ஏ.கே. செனிவிரத்ன	தலைவர் (2015.11.30 இலிருந்து)
திரு. சுரங்க நாவுலகே	உறுப்பினர் (2015.11.30 இலிருந்து)
திரு. சந்திம ஹேமசந்திர	உறுப்பினர் (2017.08.14 இலிருந்து பதவி விலகினார்)
திரு. அனில் ராஜகருணா	உறுப்பினர் (2017.08.14 இலிருந்து)

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 196 மற்றும் 197 ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

சபை கடன் குழு →

திரு. அஸ்வின் டி சில்வா	தலைவர் (2017.02.03 இலிருந்து)
திரு. அனில் ராஜகருணா	உறுப்பினர் (2017.02.03 இலிருந்து மற்றும் 2017.08.14 இல் பதவி விலகினார்)
திரு. சந்திம ஹேமசந்திர	உறுப்பினர் (2017.02.03 இலிருந்து)
திரு. அஜித் பதிரன	உறுப்பினர் (2017.08.14 இலிருந்து)

சபை கடன் குழுவின் அறிக்கை 198 மற்றும் 199 ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு →

திரு. அஸ்வின் டி சில்வா	தலைவர் (2017.02.03 இலிருந்து)
திரு. டி.எல்.பி.ஆர். அபேரத்ன	உறுப்பினர் (2017.02.03 இலிருந்து)
திரு. சந்திம ஹேமசந்திர	உறுப்பினர் (2017.02.03 இலிருந்து)

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவின் அறிக்கை 200 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் கூட்டங்கள் →

பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை, சபை கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள், சபை நியமனக் குழுக் கூட்டங்கள், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மற்றும் சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு, சபை கடன் குழு, சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு மற்றும் முன் கூறப்பட்ட கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகைகள் இவ்வாண்டறிக்கையின் நிறுவன ஆளுகை அறிக்கையில் (பக்கம் 171) கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை →

நேரடி மற்றும் நேரடியற்ற வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள் நிதிக் கூற்றுக்கான குறிப்பு 40 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந் நலன்கள், சபைக் கூட்டங்களில் பிரகடனப்படுத்தப்பட்டன. வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் ஏதேனும் நேரடி அல்லது நேரடியற்ற நலன்களைக் கொண்டிருக்கவில்லை.

தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல்கள் →

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் LKAS 24 இல் தொடர்புடைய திறத்தவர்களின் நியமங்களுக்கமைய “தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல்களை” வகைப்படுத்தக் கூடிய ஏதேனும் இருப்பின் பணிப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையின் பகுதியொன்றாக விளங்கும் நிதிக் கூற்றுக்களுக்கான 40 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO)

பொது முகாமையாளரே வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பதுடன், பணிப்பாளர் சபையினால் இவர் நியமிக்கப்படுவார். பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையின் கூட்டங்களுக்கு வருகை தரவும், கூட்டங்களில் பங்குபற்றவும் உரிமையுடையவராவார்.

மனித வளங்கள்

உயர் தரச் சேவையினூடாக, நிலை பெறத்தக்க பெறுமதியினைத் தோற்றுவிப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க மற்றும் உயர் ஊக்கமிகு ஊழியர்களை விருத்தி செய்வதற்கும், பேணுவதற்கும் வங்கி தொடர்ந்தும் செயலாற்றியது. வங்கியின் மனித மூலவளத் தரத்தினை விருத்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மனித வளத்தைத் தரமுயர்த்துவதற்கு வங்கியினால் பின்பற்றப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் 2017 இன் வரலாற்றில் 108 ஆம் பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளன

சுற்றாடல் பாதுகாப்பு

வங்கியின் நிலைபெறத் தக்க அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு இன்றியமையாத சுற்றாடலினைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான முயற்சிகளை வங்கி மேற்கொண்டுள்ளது. சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது அபாயங்களை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் செயற்பாட்டில் வங்கியும் தொகுதியும் ஈடுபடவில்லை.

நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசுக்கான நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களுக்கான அதனோடு தொடர்புபட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள்

இடர் முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினையும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந் நோக்கத்திற்காகப் பணிப்பாளர்கள் சபையானது செயற்திறன் மிக்க மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைகளை வங்கியில் ஆரம்பித்து அமுல்படுத்தியுள்ளது. வங்கி எதிர் கொள்ளக் கூடிய இடர்களைக் குறைத்தல், முக்கிய தவறுக் கூற்றுக்கள் அல்லது இழப்புகளுக்கு எதிராக நியாயமான உத்தரவாதங்களை வழங்குதல் என்பவற்றுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வங்கியினால் எதிர்கொள்ளப்படும் அத்தகைய இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகியவற்றுக்கான செயல்முறையொன்று நடைமுறையிலுள்ளது. இடர்களைக் குறைப்பதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வழிமுறைகள் இவ்வறிக்கையின் 201 ஆம் பக்கத்திலிருந்து 238 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிறுவன ஆளுகை

வங்கியின் முகாமையைப் பொறுத்த வரையில் சிறந்த நிறுவன ஆளுகை நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை ஏற்படுத்துவதில் பணிப்பாளர்கள் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளனர். இதன்படி, இடர் முகாமைத்துவ வழிமுறைகளை அதிகரிப்பதற்கும், பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தலுக்குமாக முறைமைகள் மற்றும் அமைப்பு முறைகள் ஆகியன காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்டும் முன்னேற்றமடையவும் செய்யப்பட்டன.

சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமிக்க தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்

வங்கி, அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்துடனும், ஏனைய அனைத்து பொருந்தக் கூடிய சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமிக்க தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தியுள்ளது.

அரசாங்க உத்தரவாதம்

வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணங்களை, அதற்கான வட்டியுடன் சேர்த்து மீளச் செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் உத்தரவாதமளிக்கின்றது.

கணக்காய்வாளர்கள்

2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொண்டுள்ளார்.

சபையின் ஆணைப்படி



அஸ்வின் டி சில்வா
தலைவர்



எம்.ஏ.பீ. முகாந்திரம
சபை செயலாளர்

2018 மார்ச் 12
கொழும்பு

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் (வங்கி) மற்றும் வங்கியினதும், அதன் துணை நிறுவனத்தினதும் (தொகுதி) திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்பு இக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

அனைத்துக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளினதும் முறையான பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நியதிச் சட்ட வேண்டுதலுக்கிணங்க ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் நிலைமையின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்ற, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு வங்கியின் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, பங்கு மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

வங்கியினதும், அதன் துணை நிறுவனத்தினதும் நிதிக் கூற்றுக்கள், உண்மையானதும் நியாயமானதுமான நோக்கினை பின்வருவன தொடர்பில் தருகின்றன.

1. 2017 டிசெம்பர் 31 இல் வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதி நிலைமை மற்றும்
2. 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதிச் செயலாற்றம்.

நிதிக் கூற்றுக்கள் தயாரித்தலில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

1. நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பக்கம் 265 – 370 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், தற்போது நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புகளுக்கு அமைவாக பொருத்தமாகக் காணப்படுகின்றன. இக் கொள்கைகள் முரண்பாடின்றிப் பிரயோகிக்கப்பட்டதுடன் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டுமுள்ளன.
2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் அவற்றின் போதுமை ஆகியவற்றின் சரியான பிரதிபலிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற நியாயமானதும், விவேகமிக்கதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. இயையுடைய அனைத்துப் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்படுகின்றன.

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும், 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 7 (i) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர்கள் சபை வங்கியின் அலுவல்கள் மற்றும் தொழிற்பாட்டினைக் கட்டுப்படுத்தி நிருவகிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மாதிரியுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்தும்.

பணிப்பாளர்கள் சபையானது கணக்கீட்டு பதிவுகள் சரியாக பதிவு செய்யப்பட்டு வங்கியினால் நிர்ணயி க்கப்பட்ட நியாயமான செம்மையுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களை எவ்வேளையிலும் தயாரிக்க இயலச் செய்வதனை உறுதி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒருமைப்பாடு மற்றும் குறிக்கோள்களுக்கான பொறுப்புடைமையினையும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்கின்றது. (256 ஆம் பக்கங்களில் நிதிக் கூற்றுகள் காட்டப்பட்டுள்ளன.) இவ்வாண்டறிக்கையில், தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், கணக்குப் பதிவேடுகளுடன் முரண்படாத மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றுக்கான திருத்தங்கள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

பணிப்பாளர்கள் சபை வங்கியினதும் தொகுதியினதும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளையும் கவனத்தையும் எடுத்தல், மோசடிகள் மற்றும் வேறு ஒழுங்கீனங்களைக் கண்டு பிடித்தல் என்பற்றுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் செயற்றிறன் மிக்க மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவி மற்றும் உள்ளகக் கணக்காய்வினை உள்ளடக்குகின்ற அதன் செயற்றிறனைக் கண்காணிக்கின்ற செயற்றிறன் மிகு முறைமையினை ஏற்படுத்தியுள்ளது. பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்கள், அவர்களது கிரமமான கூட்டங்களில் அவர்களால் நேரடியாகவும், சபைக் கணக்காய்வுக் குழுவினூடாகவும் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றனர். நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இவ்வாண்டறிக்கையின் 250 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை 252 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக வங்கியின் அனைத்துப்பதிவேடுகளும் பணிப்பாளர்கள் சபை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வறிக்கையின் 255 ஆம் பக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்டவாறு காணப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகளை வெளிப்படுத்தியுள்ள மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் ஆய்வு செய்துள்ளது பொருத்தமானதென அவரால் கருதப்பட்ட அனைத்துப் பரிசோதனைகளையும் பொறுப்பேற்பதற்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இணங்குவிப்பு அறிக்கை

அரசாங்கத்திற்கும் ஏனைய தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குமானதும், வங்கி மற்றும் தொகுதியின் தொடர்பிலும் ஊழியர்கள் தொடர்பிலும் வங்கியினால் செலுத்தப்படத்தக்க அனைத்து வரிகள், அத்துடன் அனைத்து ஏனைய அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளையும் பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உறுதி செய்கின்றனர். நிதி நிலைமைக் கூற்று திகதியன்று உள்ளவாறான வங்கியினாலும் தொகுதியினாலும் நிலுவையாகச் செலுத்தப்படத்தக்கதாயுள்ள அதிகார நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன, அல்லது தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், நிதி நிலை, தொழிற்பாட்டு நிலைமைகள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA) மற்றும் பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு (SEC) என்பவற்றினால் இணைந்து விநியோகிக்கப்பட்ட "நிறுவன ஆளுகைக் கோவை" இல் தீர்க்கப்பட வேண்டிய ஏனைய காரணிகளைக் கருத்திற் கொண்டதன் பின்னர் வங்கி மற்றும் தொகுதி முன்னறிகின்ற எதிர்காலத்திற்குத் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்காக போதிய வளங்களைக் கொண்டுள்ளன. மற்றும் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் பிரயோகத்தினை நியாயப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு சபை அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

சபையின் ஆணைப்படி



எம்.ஏ.பி. முகாந்திரம்
சபைச் செயலாளர்

2018 மார்ச் 12
கொழும்பு

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை 3 (8) (ii) (ஆ) இற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA இலங்கை) வழங்கப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில், போதிய மற்றும் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தாபிக்கப்பட்டு பேணப்படுவதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை (சபை) பொறுப்புடையதாகும். எனினும், அத்தகைய முறைமையொன்று வங்கியின் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கான தவறு இடரினை இல்லாதொழிப்பதனை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர் வழிவகைகளினுள் வங்கியின் முக்கிய இடர் பகுதிகளை முகாமை செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, முகாமைத்துவத்தின் மற்றும் நிதித் தகவல்களின், அத்துடன் பதிவேடுகளுக்கு எதிரான அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கெதிரான முக்கிய புறழ் கூற்றுக்களுக்கு எதிரான தீர்க்கமான உத்தரவாதத்தையன்றி நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கக் கூடியதாகவுள்ளது.

வங்கினால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு முகாமை செய்வதற்காக முன்னெடுக்கப்படும் செயன்முறை ஒன்றை பணிப்பாளர்கள் சபை தாபித்துள்ளதுடன், இச் செயன்முறை வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் அத்துடன் ஏனைய வழிகாட்டல்களில் மாற்றங்கள் ஏற்படும் போது அல்லது வேண்டப்படும் போது நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்குகின்றது. இச் செயன்முறைகள் சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட உள்ளக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்குகின்றமை உறுதி செய்யப்படுகின்றது. இவ் வழிகாட்டலில் வழங்கப்பட்டவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் கொள்கைகளுக்கமைய சபையானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்தது.

நிதி அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு தற்போது செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்றிறன் மிக்கது, மற்றும் போதுமானது எனவும், அத்துடன் புற நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் இயைபுடைய கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது எனவும் சபை கருதுகின்றது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதனூடாக இடர் மற்றும் கட்டுப்பாடு என்பவை மீது சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் அமுலாக்குவதிலும் இவ்விடர்களைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல் தொழிற்படுத்தலிலும், கண்காணித்தலிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவுகின்றது.

காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்ற முறைமையினை சபை செயற்படுத்தியுள்ளது. ஏனைய வற்றுக்கிடையிலான முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வங்கித் தொழிற்பாடுகளின் செயற்றிறன் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனக் குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் கொள்கைகளும் வியாபாரப் பணிப்புரைகளுக்கும் இணங்கி வங்கித் தொழிற்பாடுகள் காணப்படுகின்றன என்றும் உறுதி செய்வதில் சபைக்கு உதவுவதற்குமான வரையறை செய்யப்பட்ட நோக்கெல்லைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் சபை உப குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- சபைக் கணக்காய்வுக் குழுவானது (BAC), வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரிகள் ஆகியோரால் அடையாளங் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பில் காலத்துக்குக்காலம் மீளாய்வுகளை மேற்கொள்வதுடன், அத்தகைய குறைபாடுகளைச் சரிசெய்வது தொடர்பில் திருத்த நடைமுறைகளையும் மேற்கொள்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியகக் கணக்காய்வினை மேற்கொள்கின்றார். பொதுவாக, அரச கணக்காய்வு மேற்பார்வையாளர் சபைக் கணக்காய்வுக் குழுக்கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்.
- சபைக் கணக்காய்வுக் குழு, கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அதன் தரம் தொடர்பில் குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்தி உள்ளக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மீளாய்வு செய்கிறது. 2017 ஆம் ஆண்டில் சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் 190 ஆம் பக்கத்தில் காணப்படும் சபைக் கணக்காய்வுக்குழுவின் அறிக்கையில் காட்டப் பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கிளைகள், பிரிவு மற்றும் ஏனைய அலகுகளின் கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. கணக்காய்வு இடை வெளிகள் மதிப்பிடப்பட்ட இடர் மட்டங்களின் மூலம் நிர்ணயிக்கப் படுகின்றன. கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்துவதற்காக சபை கணக்காய்வுக் குழுவினால் ஒப்புதலளிக்கப் படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுடனான இணக்கத்தையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்றிறன் தன்மைகளையும் உறுதி செய்வதற்கு கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்துவதுடன் ஏதேனும் இணங்கியொழுகாமை தொடர்பில் அதன் காண்புகளை அறிக்கையிடுகின்றது. தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் மீதான சுயாதீன மற்றும் பொருண்மை அறிக்கை யொன்றினை வழங்கும் பொருட்டு கணக்காய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. கணக்காய்வுகளின் காண்புகள், சபைக் கணக்காய்வுக் குழுவின் பருவகாலக் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள், குழுக் கூட்டங்களின் குறிப்புகளோடு காலத்துக்குக் காலம் என்ற அடிப்படையில் சபையின் தகவலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
- வங்கியின் இடரினது பிரதான பகுதிகளின் முழுமையான முகாமைத்துவத்தைக் கண்காணிப்பதற்கு சபைக்கு உதவுவதற்காக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)

சபையினால் நிறுவப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்து வதற்காக சபையானது சுயாதீன இணங்குவிப்புப் பிரிவொன்றை நிறுவியது. ஏதாவது இணங்குவிப்பற்ற விடயங்கள் தொடர்பில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுக்கு காலத்துக்குக் காலம் அறிவிக்கப்படும். இடர் மதிப்பீடு பற்றிய அறிக்கை சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்படும்.

- முகாமைத்துவ மட்டக் குழுக்கள், வங்கியின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய விடயங்களின் செயற்றிறன் வாய்ந்த முகாமை மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவற்கு ஏற்புடைய உரித்துடன் இயங்குகின்றன. இம் மதிப்பீடு, வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட செயன்முறையை மட்டும் உள்ளடக்கியுள்ளதுடன், அதன் துணை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கவில்லை.

வங்கியானது LKAS மற்றும் SLFRS ஆகியவற்றை உள்ளடக்கிய, புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை 2012 இல் ஏற்றுக் கொண்டது. அத்தகைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டமையினால் ஏற்றுக் கொள்ளுகைக்கான புதிய தேவைப்பாடுகள், அறவீடு, பகுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்துகை ஆகியவற்றுடன் இணங்கிச் செல்லும் செய்முறைகளில் முன்னேற்றகரமான அதிகரிப்பும், தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன. சபையானது SLFRS – 9 – "நிதிக் கருவிகளின்" பயன்பாட்டிற்கு உரிய கவனத்தைச் செலுத்தியுள்ளதுடன் 2018 ஜனவரி 01 இல் அல்லது அதன் பின் ஆரம்பிக்கும் நிதி அறிக்கையிடல் காலப்பகுதியில் இது பிரயோகிக் கப்படும். இது, நிதிக் கருவிகள் மீதான மதிப்புக் குறைப்பின் கணக்கீடு மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கும். மேலும் LKAS 39 இன் கீழ் முன்பு பயன்படுத்தப்பட்ட "ஏற்பட்ட கடன் இழப்பு மாதிரி" என்ற முறையுடன் ஒப்பிடுகையில் "எதிர் பார்க்கப்பட்ட கடன் இழப்பு மாதிரி" என முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்ட முறையாகக் காணப்படும். SLFRS 9 இனை நடைமுறைப்படுத்துவதற்கு வெளியக ஆலோசனையாளர் ஒருவரது சேவையை வங்கி பெற்றுக் கொண்டதுடன், SLFRS 9 மீதான நிர்ணயக் கட்டம் (ஆரம்ப தாக்க மதிப்பீட்டு பயிற்சி) மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டம் (தீர்வு அபிவிருத்தி) ஆகியவற்றை மேற் கொண்டது. வங்கியானது, SLFRS 9 எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றி முக்கியமான ஆய்வொன்றை மேற் கொண்டதுடன் தற்காலிகமான கணக்கீட்டுக் கொள்கை தீர்மானங்களையும் மேற் கொண்டது.

உறுதிப்படுத்தல்

மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு சபை வெளியக நோக்கங்களுக்காக நிதி அறிக்கையிடல் நம்பகத் தன்மை மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பில் நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கும் பொருட்டு வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதி செய்கின்றது.


வெளியகக் கணக்காய்வாளர்களின் கூற்று மீளாய்வு

2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று பற்றிய மேலே உள்ள பணிப்பாளர்களின் கூற்றினை வெளியகக் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதி மீளாய்வு செய்வதுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடுவார். நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று தொடர்பான அவர்களது அறிக்கை இவ் ஆண்டறிக்கையின் 252 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சபையின் ஆணைப்படி



அஸ்வின் டி சில்வா
தலைவர்



டி.எல்.பி.ஆர். அபேரத்ன
தலைவர் – சபைக் கணக்காய்வு குழு/பணிப்பாளர்



சுரங்க நாவுலகே
பணிப்பாளர்

2018 மார்ச் 12
கொழும்பு.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. BAF/A/NSB/2017/29

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 27 April 2018

தலைவர்,

தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை

அறிமுகம்

2017 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு ("கூற்று") மீதான பணிப்பாளர் சபைக் கூற்றுத் தொடர்பான உறுதிப்பாட்டை இவ்வறிக்கை வழங்குவதாக உள்ளது.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2007ன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட நெறிப்படுத்தலின் 3(8) (ii) (ஆ) பிரிவிற்கிணங்க விநியோகிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு உரித்தான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கியின் "பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்"களுக்கிணங்க கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்பித்தல் ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

எனது பொறுப்புக்களும் எஸ்.எல்.எஸ்.ஏ.ஈ. 3050 உடனான இணக்கமும்

நிறைவேற்றப்பட்ட எனது பணியின் அடிப்படையில் கூற்று பற்றிய அறிக்கை ஒன்றை பணிப்பாளர் சபைக்கு வழங்க வேண்டியது எனது பொறுப்பாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கையான எஸ்.எல்.எஸ்.ஏ.ஈ. 3050 மீதான இலங்கை நியமங்களுக்கு அமைவாக எனது ஈடுபாட்டுப் பணியை நடத்துகின்றேன்.

மேற்கொள்ளப்பட்ட பணிகளின் தொகுப்பு

உரிய கூற்று, பணிப்பாளர்களினாலோ அல்லது பணிப்பாளர்களுக்காகவோ தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றமை பற்றியும், வங்கிக்கான உள்ளகக் கட்டுபாட்டு முறை மீளாய்வு செய்யப்படுகையில், பணிப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் போதியளவில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்ற மதிப்பீட்டிற்காகவும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், வங்கி ஆளணியினரின் விசாரணை மற்றும் பணிப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட செயற்பாடுகளுக்காகக் பயன்படும் ஆவணங்களின் நிலைப்பாட்டில் முக்கியமாக மட்டுப்படுத்தப்படுகின்றது.

இக்கூற்றின்மூலம் சகல இடர்களும், கட்டுப்பாடுகளும் உள்ளடக்கப் படுகின்றனவா எனக் கருத்திற் கொள்ளப்படவோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுபாட்டுச் செயற்படுகையின் இயலுமை தொடர்பில் அபிப்பிரயாத்தைத் தெரிவிக்கவோ எஸ்.எல்.எஸ்.ஏ.ஈ. 3050 என்னைத் தேவைப்படுத்தவில்லை.ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்த முக்கியமான பிரச்சனைகளினதும் பொருண்மையினை உள்ளக கட்டுப்பாட்டு விடயங்களைக் கையாளுதற்காக விபரிக்கப்பட்ட செயல் முறைகள் உண்மையில் பிரச்சனைகளுக்குத் தீர்வை வழங்குமா என்பதைக் கவனத்திலெடுக்குமாறு எஸ்.எல்.எஸ்.ஏ.ஈ. 3050 என்னைத் தேவைப்படுத்தவில்லை.

எனது முடிவுரை

மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் அடிப்படையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்று வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் திட்டமிடல் மற்றும் செயற்திறன் தொடர்பான மீளாய்வின்போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பாக எனது அறிவு முரண்படுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கான காரணங்கள் எதுவும் எனது கவனத்திற்குட்படுவதில்லை

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

பொது முகாமையாளர்/பிரதரம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் (தொகுதி) ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக் கிணங்க தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள்
- 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS/LKAS)
- 1955 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மாதிரி மற்றும் தகவல் வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய வழிகாட்டல்கள்.
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை

நிதிக் கூற்றுக்கள் மற்றும் வெளிப்படுத்தல்களைத் தயாரிக்கையில் பயன்படுத்திய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்பட்ட வடிவங்களுடன் இணங்கியிருந்தது. இவை கணக்கீட்டு நியமம் – LKAS1இ "நிதிக் கூற்றுக்களை எடுத்துரைத்தல்" இனது வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடனும் இணங்கியிருந்தது. குழு காலாண்டு அடிப்படையில் அதன் பாவனையாளர்களுக்கு நிதியியல் பெறுபேறுகளை எடுத்துரைக்கின்றது.

முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் குழுவினால் நிலையாகப் பிரயோகிக்கப்பட்டன. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் உயர் நிலைத் தீர்மானங்கள் மற்றும் சிக்கல்களில் ஈடுபடுத்திய மதிப்பீடுகளும் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுடன் கலந்துரையாடப்பட்டன. ஒப்பீட்டுத் தகவல்கள், நடைமுறை எடுத்துரைத்தல் மற்றும் முக்கிய மாறுபாடு என ஏதாவது இருப்பின் அவற்றுடன் இணங்குவதற்கு அவசியமானவிடத்து மீள் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் விளக்கப்பட்டுமுள்ளன.

இவ்வாண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய நிதித் தகவல்கள் மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது குழுவினது நிதி நிலைமைகள், தொழிற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல்களின் பெறுபேறுகள் தொடர்பில் அனைத்து முக்கிய விடயங்களையும் நியாயமாக எடுத்துரைக்கின்றது என நாம் எமது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதி செய்கின்றோம். குழு தொடர்ச்சியான தொழிற்பாட்டுக்கு போதிய வளங்களைக் கொண்டுள்ளது என்றும் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் தொடர்ந்தியங்கும் எண்ணக் கரு பிரயோகிக்கப்பட்டது என்றும் நாம் உறுதி செய்கின்றோம்.

வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகளைத் தாபித்து அமுலாக்கிப் பேணுவதற்கு நாம் பொறுப்புடமை கொண்டுள்ளோம். முன்னெடுக்கப்படும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு சமகாலப்படுத்தப்படுகின்ற சொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடி அல்லது தவறுகள் அத்துடன் வேறேதேனும் ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் முக்கிய தவறுகளை உறுதி செய்கின்ற செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாடுகளும் நடவடிக்கை முறைகளும் செயன் முறையிலுள்ளன என்பதை நாம் உறுதி செய்கின்றோம். எமது அறிவுக்கு எட்டிய வரையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைமைகளின் வடிவமைத்தல் அல்லது தொழிற்படுத்தலில் முக்கிய குறைபாடுகள் அல்லது பலவீனங்கள், இல்லையென்றும் மற்றும் முகாமைத்துவம் அல்லது ஏனைய ஊழியர்களுடன் தொடர்பான எதுவித மோசடியும் காணப்பட்டிருக்கவில்லையெனவும் நாம் உறுதிப்படுத்துகின்றோம். வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளர்களும் உள்ளகக் கட்டுப்பாடுகளும் மற்றும் நடைமுறைகளும் முரணின்றிப் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை நடாத்துகின்றனர்.

நிதி அறிவித்தல் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இந்த ஆண்டறிக்கையின் 250 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வினை மேற்கொண்டதுடன் அவரால் வழங்கப்பட்ட தகுதியற்ற அபிப்பிராயம் 252 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை


இவ்வாண்டறிக்கையின் 255ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு ஏனைய பணிகளுக்கு மத்தியில் அனைத்து உள்ளகக் கணக்காய்வு மற்றும் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளினதும் நடவடிக்கை முறைகளினதும் வினைத் திறனையும் மீளாய்வு செய்ததுடன் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் மீளாய்வு செய்தது. அத்துடன், அவர்களது நியதிச்சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைக்கைக் கொண்டமை பற்றிய விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 190 முதல் 191 வரையான பக்கங்களில் சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கையில் தரப்பட்டுள்ளன. முழுமையான சுயாதீனத் தன்மையினை உறுதி செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியும், உள்ளகக் கணக்காய்வாளர்களும் ஏதேனும் முக்கிய விடயம் பற்றி கலந்துரையாடுவதற்கு, சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முழுமையான சுதந்திரத்துடன் அடையும் வழியினைப் பெற்றுள்ளனர். எனினும், ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் கணக்கீட்டு முறைமையினால் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தரவாதத்தினை மதிப்பளிப்பதில் இனங்காணப்பட வேண்டிய இயற்கையான கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இதனை எமது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதி செய்கின்றோம்.

- வங்கியும் தொகுதியும் அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் அத்துடன் வழிகாட்டல்கள் என்பவற்றுடன் இணங்கியொழுகியதுடன், நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 45 இல் 351 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர குழுவிற்கு எதிராக வழக்காடல்கள் எதுவும் காணப்படவில்லை.
- பொருண்மையான இணங்குவிப்பற்ற தன்மைகள் எதுவும் காணப்படவில்லை.
- வங்கி மற்றும் தொகுதி மூலமான அனைத்து வரிகள், தீர்வைகள், அறவீடுகள் மற்றும் நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் அனைத்தும் அத்துடன் வங்கியினதும் தொகுதியினதும் ஊழியர்கள் சார்பில் 2017 டிசெம்பர் 31 இல் கொடுப்பனவு செய்யத்தக்க அனைத்து பங்களிப்புக்கள், அறவீடுகள் மற்றும் வரிகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன. அல்லது தேவையான போது உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




எஸ்.டி.என். பெரேரா
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி



கே.பி. விஜேரத்ன
பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்)

2018 மார்ச் 12
கொழும்பு.



தலைவர்,

தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் 2017 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய சேமிப்பு வங்கியினதும் ("வங்கி"), வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் ("தொகுதி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு இயக்குனர் சபையின் ("சபை") பொறுப்பாக உள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐ.எஸ்.எஸ்.ஏ.ஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத தல்களையும் பற்றி கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளர் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணகீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

அபிப்பிராயம் – வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் 2017 மார்கழி 31ல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

அபிப்பிராயம் – தொகுதி

தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2017 திசெம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

இந் நிதிக்கூற்றுக்களானவை 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களால் வேண்டப்பட்ட தகவல்களை தருகின்றன.

பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிராமத்தில் சமர்பிக்கப்படும்.

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி			தொகுதி		
		2017 ரூ. '000	2016 ரூ. '000	மாற்றம் %	**2017 ரூ. '000**	2016 ரூ. '000	மாற்றம் %
மொத்த வருமானம்	3	**107,816,909**	87,399,144	23	**108,055,746**	88,038,610	23
வட்டி வருமானம்		**103,399,962**	86,390,039	20	**104,245,541**	87,142,784	20
கழிக்குக: வட்டிச் செலவு		**78,444,825**	60,923,221	29	**78,987,596**	61,453,898	29
தேறிய வட்டி வருமானம்	4	**24,955,137**	25,466,818	(2)	**25,257,945**	25,688,886	(2)
கட்டணம் மற்றும் தரகு வருமானம்		**782,776**	650,164	20	**785,077**	651,160	21
கழிக்குக: கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள்		**109,082**	137,432	(21)	**113,037**	140,122	(19)
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	5	**673,694**	512,732	31	**672,040**	511,038	32
வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்)	6	**1,206,408**	(39,270)	3,172	**1,520,740**	(136,897)	1,211
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம்/நட்டம்	7	**–**	–	–	**–**	–	–
நிதியியல் முதலீடுகளிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)	8	**707,491**	40,923	1,629	**707,491**	40,923	1,629
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)	9	**1,720,272**	357,288	381	**796,897**	340,640	134
மொத்த தொழிற்பாட்டு வருமானம்		**29,263,002**	26,338,490	11	**28,955,113**	26,444,590	9
கழிக்குக: கடன்களுக்கும் ஏனைய நட்டங்களுக்குமான பெறுமதி குறைப்பு	10	**693,233**	(99,693)	795	**693,233**	(99,693)	795
தேறிய தொழிற்பாட்டு வருமானம்		**28,569,769**	26,438,183	8	**28,261,880**	26,544,283	6
கழிக்குக: செலவுகள்							
ஆளணிச் செலவுகள்	11	**6,886,505**	6,235,370	10	**6,918,813**	6,266,515	10
ஏனைய செலவுகள்	12	**4,160,911**	4,108,538	1	**4,107,116**	4,068,918	1
பெறுமதி சேர் வரி மற்றும் தேச நிர்மாண வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		**17,522,354**	16,094,275	9	**17,235,951**	16,208,850	6
கழிக்குக: நிதியியல் பணிகள் மீதான பெறுமதி சேர்வரி		**3,082,619**	2,405,618	28	**3,168,299**	2,423,091	31
நிதிச் சேவைகள் மீதான தே.நி.வ.		**411,016**	385,670	7	**422,440**	388,482	9
பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசநிர்மாண வரிக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம்		**14,028,719**	13,302,987	5	**13,645,212**	13,397,277	2
வருமான வரிக்கு முன்னரான இலாபம்		**14,028,719**	13,302,987	5	**13,645,212**	13,397,277	2
கழிக்குக: வருமான வரிச் செலவினம்	13	**4,419,019**	3,805,271	16	**4,595,065**	3,834,995	20
ஆண்டிற்கான இலாபம்		**9,609,700**	9,497,716	1	**9,050,147**	9,562,282	(5)
பகிர்ந்தளிக்கத் தக்க இலாபம்							
வங்கியின் பங்கு மூலதன உரிமையாளர்களுக்கு		**9,609,700**	9,497,716	1	**9,050,147**	9,562,282	(5)
ஆண்டிற்கான இலாபம்		**9,609,700**	9,497,716	1	**9,050,147**	9,562,282	(5)
இலாபம் மீதான பங்கொன்றின் உழைப்பு							
சாதாரண பங்கொன்றின் அடிப்படை வருவாய் (ரூ.)	14	**15.50**	29.68	(48)	**14.60**	29.88	(51)
சாதாரண பங்கொன்றின் குன்றிய வருவாய் (ரூ.)		**15.50**	29.68	(48)	**14.60**	29.88	(51)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி			தொகுதி		
		2017 ரூ.'000	2016 ரூ.'000	மாற்றம் %	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	மாற்றம் %
ஆண்டிற்கான இலாபம்		**9,609,700**	9,497,716	1	**9,050,147**	9,562,282	(5)
வரி நீங்கலாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்							
வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்பட வேண்டிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்							
காசுப் பாய்ச்சல் காப்பு மீதான தேறிய இலாபம்/(நட்டம்)		**290,074**	(137,256)	311	**290,074**	(137,256)	311
விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்களின் மீள் அளவீட்டின் மீதான தேறிய இலாபம்/(நட்டம்)		**656,807**	(299,996)	319	**822,050**	(402,955)	304
விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்களின் விற்பனையால் வருமானக கூற்றுக்கு மாற்றப்பட்ட நியாய மதிப்பீட்டு வருவாய்கள்		**(690,388)**	46,952	(1,570)	**(690,388)**	46,952	(1,570)
வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்பட வேண்டிய ஏனைய அனைத்தையும உள்ளடக்கிய மொத்த வருமானம்		**256,492**	(390,300)	(166)	**421,735**	(493,259)	(185)
வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்							
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பீடு மீதான தேறிய இலாபம்/(நட்டம்)		**4,508,480**	–	100	**4,508,480**	–	100
ஓய்வூதிய நன்மைத் திட்டம் மீதான காப்பு கணிப்பீட்டு இலாபம்/(நட்டம்)		**(2,072,425)**	2,379,307	(187)	**(2,072,155)**	2,379,640	(187)
வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்		**2,436,055**	2,379,307	2	**2,436,325**	2,379,640	2
வரி நீங்கலாக ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்		**2,692,547**	1,989,007	35	**2,858,060**	1,886,381	52
ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்		**12,302,247**	11,486,723	7	**11,908,207**	11,448,663	4
பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:							
வங்கியின் பங்குரிமையாளர்கள்		**12,302,247**	11,486,723	7	**11,908,207**	11,448,663	4
ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்		**12,302,247**	11,486,723	7	**11,908,207**	11,448,663	4

265 முதல் 370 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.


நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	குறிப்பு	வங்கி			தொகுதி		
		2017 ரூ.'000	2016 ரூ.'000	மாற்றம் %	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	மாற்றம் %
சொத்துகள்							
காசும் காசுக்கு சமனானவைகளும்	16	**3,849,627**	4,619,699	(17)	**3,854,086**	4,627,629	(17)
மத்திய வங்கியுடன் மீதிகள்	17	**–**	–	–	**94**	477	(80)
வங்கிகளிலுள்ள இருப்புகள்	18	**23,438,104**	19,013,572	23	**23,438,104**	19,013,572	23
பெறுதி நிதியியல் சாதனங்கள்	19	**1,360,714**	2,728,445	(50)	**1,360,714**	2,728,445	(50)
வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய நிதியியல் சொத்துகள்	20	**6,472,314**	20,290,588	(68)	**9,389,950**	27,303,207	(66)
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்	21	**–**	–	–	**–**	–	–
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	22	**27,714,565**	31,834,072	(13)	**27,971,234**	31,834,072	(12)
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும்	23	**360,309,866**	291,976,942	23	**358,766,093**	291,178,121	23
நிதியியல் முதலீடுகள் – விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாக உள்ளவை	24	**5,693,829**	6,227,764	(9)	**7,713,852**	8,122,516	(5)
நிதியியல் முதலீடுகள் – முதிர்ச்சி அடையும் வரை வைக்கப்பட்டுள்ளவை	25	**544,273,077**	505,824,398	8	**547,924,390**	507,624,954	8
துணை நிறுவனங்களில் முதலீடுகள்	26	**900,000**	150,000	500	**–**	–	–
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	27	**12,015,376**	7,119,651	69	**12,018,679**	7,121,823	69
அருவச் சொத்துக்கள்	28	**380,308**	157,271	142	**380,655**	157,271	142
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	29	**–**	–	–	**–**	588	(100)
ஏனைய சொத்துகள்	30	**25,695,689**	21,761,440	18	**25,976,944**	21,890,777	19
மொத்த சொத்துக்கள்		**1,012,103,470**	911,703,842	11	**1,018,794,797**	921,603,453	11
பொறுப்புகள்							
வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை	31	**180,439**	115,391	56	**828,433**	2,858,673	(71)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	19	**956,937**	–	100	**956,937**	–	100
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை	32	**737,212,640**	657,280,315	12	**737,212,640**	657,280,315	12
ஏனைய கடன்பாடுகள்	33	**217,955,777**	207,039,909	5	**222,771,969**	212,629,427	5
நடப்பு வரிப் பொறுப்புகள்		**–**	–	–	**137,344**	17,153	701
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்	29	**507,063**	416,180	22	**507,138**	416,180	22
ஏனைய பொறுப்புகள்	34	**9,062,425**	8,600,056	5	**9,107,460**	8,608,506	6
சார்பு நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்	35	**6,006,411**	6,006,411	–	**6,006,411**	6,006,411	–
மொத்த பொறுப்புகள்		**971,881,692**	879,458,262	11	**977,528,332**	887,816,665	10
பங்கு மூலதனம்							
ஒதுக்கப்பட்ட மூலதனம்/சாட்டப்பட்ட மூலதனம்	36	**6,700,000**	6,200,000	8	**6,700,000**	6,200,000	8
நியதிச் சட்ட ஒதுக்க நிதியம்	37	**3,002,952**	2,522,467	19	**3,002,952**	2,522,467	19
பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகள்		**2,228,885**	2,379,307	(6)	**2,805,727**	3,708,614	(24)
ஏனைய ஒதுக்கங்கள்	38	**28,289,941**	21,143,806	34	**28,757,786**	21,355,707	35
தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களது மொத்த பங்குரிமை மூலதனங்கள்		**40,221,778**	32,245,580	25	**41,266,465**	33,786,788	22
மொத்த பங்குமூலதனம்		**40,221,778**	32,245,580	25	**41,266,465**	33,786,788	22
மொத்த பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		**1,012,103,470**	911,703,842	11	**1,018,794,797**	921,603,453	11
எதிர்பாராத பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்	39	**18,320,312**	24,970,060	(27)	**18,320,312**	24,970,060	(27)

265 முதல் 370 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

உறுதிப்படுத்தல்

மேலே உள்ள நிதிக் கூற்றுக்கள், 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் தொகுதியினதும் விவகாரங்களின் நிலை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினையும் முடிவுற்ற ஆண்டுக்கான அவற்றின் இலாபத்தினையும் தருகின்றன என்பதனை சான்றுதிப்படுத்துகின்றேன்.




கே.பி. விஜேரத்தன
பிரதி பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்)

இந் நிதியில் கூற்றுகளை தயாரிப்பதும் ஏடுத்துரைப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும்.

சபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.



அஸ்வின் டி சில்வா
தலைவர்



டி.எல்.பீ.ஆர். அபேரத்ன
பணிப்பாளர்



எஸ்.டி.என். பெரேரா
பொதுமுகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

12 மார்ச் 2018
கொழும்பு இலங்கை

பங்குரிமை மாற்றங்களின் கூற்று

வங்கி →

	ஒதுக்கப்பட்ட மூலதனம்/ சாட்டப்பட்ட மூலதனம் ரூ. '000	நியதிச்சட்ட ஒதுக்கு நிதி ரூ. '000	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. '000	
2016.12.01 இல் உள்ளவாறான மீதி	3,200,000	2,047,581	3,296,565	
2016 ஆம் ஆண்டிற்கான இலாபம்	–	–	–	
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக)	–	–	–	
ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்	–	–	–	
பங்கு மூலதன உரிமையாளர்களுடன் பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்				
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை	–	474,886	–	
திரட்டு நிதியம் – பங்குலாபத்திற்கான/அறவீட்டுக்கான பங்களிப்பு	–	–	–	
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு	–	–	–	
கோரப்படாத வைப்பு ஒதுக்கத்திற்கு/வழங்கப்பட்ட பங்குமூலதனத்திற்கு மாற்றல்கள்	3,000,000	–	–	
பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்	3,000,000	474,886	–	
2016.12.31 இல் உள்ளவாறான மீதி	6,200,000	2,522,467	3,296,565	
2017 ஆம் ஆண்டிற்கான இலாபம்	–	–	–	
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக)	–	–	4,508,480	
ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	–	–	4,508,480	
பங்குரிமையில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்				
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு/களிலிருந்து மாற்றப்பட்டவை	–	480,485	(11,728)	
திரட்டு நிதிக்கான பங்களிப்பு பங்கிலாபம்/அறவீடு	–	–	–	
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு	–	–	–	
கோரப்படாத வைப்பு ஒதுக்கத்துக்கு/விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்திற்கு மாற்றல்	500,000	–	–	
பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	500,000	480,485	(11,728)	
2017.12.31 இல் உள்ளவாறான மீதி	6,700,000	3,002,952	7,793,317	

	விற்பனைக்காக கிடைக்கக கூடிய ஒதுக்கம்	காசுப் பாய்ச்சல் காப்பு ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள	பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு	மொத்த பங்கு மூலதனம்
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
	1,631,862	139,106	22,108,709	–	32,423,827
	–	–	–	9,497,716	9,497,716
	(253,044)	(137,256)	–	2,379,307	1,989,007
	(253,044)	(137,256)	–	11,877,023	11,486,723
	–	–	(3,098,147)	2,623,262	–
	–	–	–	(12,026,000)	(12,026,000)
	–	–	–	(94,977)	(94,977)
	–	–	(2,543,992)	–	456,008
	–	–	(5,642,139)	(9,497,716)	(11,664,969)
	1,378,818	1,850	16,466,570	2,379,307	32,245,580
	–	–	–	9,609,700	9,609,700
	(33,581)	290,074	–	(2,072,425)	2,692,547
	(33,581)	290,074	–	7,537,274	12,302,247
	–	–	2,000,000	(2,480,485)	(11,728)
	–	–	–	(5,111,114)	(5,111,114)
	–	–	–	(96,097)	(96,097)
	–	–	392,891	–	892,891
	–	–	2,392,891	(7,687,696)	(4,326,048)
	1,345,237	291,924	18,859,461	2,228,885	40,221,778

தொகுதி →

	ஒதுக்கப்பட்ட மூலதனம்/ சாட்டப்பட்ட மூலதனம் ரூ. '000	நியதிச்சட்ட ஒதுக்கு நிதி **ரூ.** '000	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் **ரூ.** '000	
2016.01.01 இல் உள்ளவாறான மீதி	3,200,000	2,047,581	3,296,565	
2016 ஆம் ஆண்டிற்கான இலாபம்	–	–	–	
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக)	–	–	–	
ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்	–	–	–	
பங்கு மூலதன உரிமையாளர்களுடன் பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்				
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு/களிலிருந்து மாற்றப்பட்டவை	–	474,886	–	
திரட்டு நிதியம் – பங்குலாபத்திற்கான/அறவீட்டுக்கான பங்களிப்பு	–	–	–	
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு	–	–	–	
கோரப்படாத வைப்பு ஒதுக்கத்திற்கு/வழங்கப்பட்ட பங்குமூலதனத்திற்கு மாற்றல்கள்	3,000,000	–	–	
பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்	3,000,000	474,886	–	
2016.12.31 இல் உள்ளவாறான மீதி	6,200,000	2,522,467	3,296,565	
2017 ஆம் ஆண்டிற்கான இலாபம்	–	–	–	
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக)	–	–	4,508,480	
ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	–	–	4,508,480	
பங்குரிமையில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்				
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு/களிலிருந்து மாற்றப்பட்டவை	–	480,485	(11,728)	
திரட்டு நிதிக்கான பங்களிப்பு – பங்கிலாபம்/அறவீடு	–	–	–	
பங்கிலாபம் மீதான பிடித்துவைத்தல் வரி	–	–	–	
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு	–	–	–	
கோரப்படாத வைப்பு ஒதுக்கத்துக்கு/விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்திற்கு மாற்றல்	500,000	–	–	
பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	500,000	480,485	(11,728)	
2017.12.31 இல் உள்ளவாறான மீதி	6,700,000	3,002,952	7,793,317	

265 முதல் 370 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

	விற்பனைக்காக கிடைக்கக கூடிய ஒதுக்கம்	காசுப் பாய்ச்சல் காப்பு ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள்	பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு	மொத்த பங்கு மூலதனம்
	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
	1,452,761	139,106	22,582,817	1,285,911	34,004,744
	–	–	–	9,562,282	9,562,282
	(356,003)	(137,256)	–	2,379,640	1,886,381
	(356,003)	(137,256)	–	11,941,922	11,448,663
	–	–	(3,078,293)	2,603,408	–
	–	–	–	(12,027,650)	(12,027,650)
	–	–	–	(94,977)	(94,977)
	–	–	(2,543,992)	–	456,008
	–	–	(5,622,285)	(9,519,219)	(11,666,619)
	1,096,758	1,850	16,960,532	3,708,614	33,786,788
	–	–	–	9,050,147	9,050,147
	131,662	290,074	–	(2,072,155)	2,858,060
	131,662	290,074	–	6,977,992	11,908,207
	–	–	2,090,699	(2,571,184)	(11,728)
	–	–	–	(5,111,114)	(5,111,114)
	–	–	–	(102,483)	(102,483)
	–	–	–	(96,097)	(96,097)
	–	–	392,891	–	892,891
	–	–	2,483,590	(7,880,878)	(4,428,531)
	1,228,420	291,924	19,444,122	2,805,727	41,266,465

காசுப் பாய்ச்சல்கள் கூற்று

31 டிசம்பரில் முடிவுற்ற ஆண்டிற்கானது	குறிப்பு	வங்கி		தொகுதி	
		2017 ரூ.'000	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்					
வரிக்கு முன்னரான இலாபம்		**14,028,719**	13,302,987	**13,645,212**	13,397,277
சீராக்கல்கள்:					
வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசு அல்லாத விடயங்கள்	42	**(1,176,426)**	1,153,639	**(731,037)**	1,271,628
செயற்பாட்டு சொத்துக்களில் மாற்றங்கள்	43	**(90,981,284)**	(54,762,416)	**(88,112,777)**	(56,499,933)
செயற்பாட்டு பொறுப்புகளில் மாற்றங்கள்	44	**81,073,681**	61,611,498	**79,015,251**	64,316,597
வங்கிகளுடனான இருப்புகள்		**(4,424,532)**	(6,387,063)	**(4,424,532)**	(6,387,063)
வரையறை செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களுக்குச் செலுத்திய பங்களிப்பு		**(881,812)**	(1,390,261)	**(881,812)**	(1,390,261)
செலுத்திய வரி		**(4,328,136)**	(3,893,514)	**(4,383,329)**	(4,005,853)
சார்புநிலைப்படுத்தப்பட்ட படுகடன் மீதான வட்டிச் செலவு		**780,000**	–	**780,000**	–
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு		**(87,253)**	(104,375)	**(87,253)**	(104,375)
துணை நிறுவனங்களின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள்		**(172,350)**	(14,850)	**–**	–
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் ஈட்டப்பட்ட தேறிய காசு		**(6,169,393)**	9,515,645	**(5,180,277)**	10,598,017
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்					
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு		**(730,492)**	(450,150)	**(732,376)**	(450,732)
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான வருமானம்		**7,189**	1,948	**7,189**	1,948
விற்பனைக்காக உள்ளவற்றின் மீதான முதலீடுகளில் தேறிய (அதிகரிப்பு)/குறைவு		**1,228,954**	(2,052,611)	**1,268,928**	(2,029,052)
அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு		**(319,428)**	(134,926)	**(319,828)**	(134,926)
கோரப்படாத ஒதுக்கு நிதியத்தில் தேறிய (அதிகரிப்பு)/குறைவு		**(49,054)**	456,008	**(49,054)**	456,008
துணை நிறுவனங்களின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள்		**172,350**	14,850	**–**	–
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு		**309,519**	(2,164,881)	**174,858**	(2,156,754)
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்					
சார்புநிலைப்படுத்தப்பட்ட படுகடன் மீது செலுத்தப்பட்ட வட்டி		**(780,000)**	–	**(780,000)**	–
ஏனைய கடன்பாடுகள்		**10,915,868**	14,384	**10,142,542**	(1,074,004)
செலுத்தப்பட்ட பங்கிலாபம் மீதான பிடித்து வைத்தல் வரி		**–**	–	**(84,983)**	–
திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு – பங்கிலாபம்/அறவீடு		**(5,111,114)**	(12,026,000)	**(5,111,114)**	(12,027,650)
சார்புநிலைப்படுத்தப்பட்ட படுகடன் விநியோகத்திலிருந்து விற்றுவரவு		**–**	6,000,000	**–**	6,000,000
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு		**5,024,754**	(6,011,616)	**4,166,445**	(7,101,654)
காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)		**(835,120)**	1,339,148	**(838,974)**	1,339,610
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		**4,504,308**	3,165,160	**4,512,715**	3,173,105
ஆண்டின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		**3,669,188**	4,504,308	**3,673,741**	4,512,715
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் இணக்கம்					
கையிருப்பிலுள்ள காசு		**944,759**	691,527	**944,769**	691,537
வங்கி மீதி		**2,892,643**	3,881,589	**2,897,093**	3,889,509
அழைப்பு மற்றும் குறுகிய அறிவித்தலில் உள்ள காசு		**12,224**	46,583	**12,224**	46,583
மத்திய வங்கியுடனான மீதிகள்		**–**	–	**94**	477
வங்கிகளுக்கு கொடுக்க வேண்டியவை – ஏனைய வசதிகள்		**(180,439)**	(115,391)	**(180,439)**	(115,391)
ஆண்டின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		**3,669,188**	4,504,308	**3,673,741**	4,512,715

265 முதல் 370 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

1. அறிக்கையிடும் நிறுவனம் →

1.1 நிறுவனத் தகவல்கள் →

தேசிய சேமிப்பு வங்கியானது, 1971 இன் 30ம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச்சட்டத்தின் கீழ் 1972 இல் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்றாவதுடன் இலங்கையில் அதன் அமைவிடத்தைக் கொண்டுள்ளது. வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், "சேமிப்பகம்", இல. 255, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் ஆளணி 4,470 ஆக காணப்பட்டது (2016 – 4,384).

வங்கியானது 253 கிளைகள், 28 பாடசாலை வங்கிக் கூறுகள் மற்றும் அதன் சேவை நிலையங்களில் 286 தன்னியக்க இயந்திரங்களையும் (ATM) கொண்டுள்ளதுடன், தனது முகவர் வலையமைப்பில் மேலும் 653 அஞ்சல் அலுவலகங்கள், 3,409 உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

1.2 ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள் →

2017 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், வங்கியினையும் (தாய்க் கம்பனி) அதன் முழுமையான உரித்துடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனியினையும் உள்ளடக்குகின்றது

வங்கியானது முழுமையாக இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தானதாகும். வங்கியே குழுமத்தின் இறுதி முடிவான தாய் நிறுவனமாகும்.

வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகள் டிசம்பர் 31 அன்று முடிவடைகின்ற பொதுவான நிதியியல் ஆண்டொன்றினை கொண்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கென டிசம்பர் 31இல் முடிவடைகின்ற பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கான "வங்கியினதும்" அதன் "தொகுதியினதும்" நிதியியல் கூற்றுக்களை வங்கி தயாரிக்கும்.

1.3 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும் – GRI 102 – 2 →

வங்கி

இலங்கை மக்கள் மத்தியியல் சேமிப்பினை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டிய சேமிப்புகளை இலாபகரமாக முதலிடுவதும் வங்கியின் பிரதான செயற்பாடாக தொடர்ந்தும் இருந்து வந்தது. தேசிய சேமிப்பு வங்கியானது வைப்புகளை ஏற்றுக் கொள்ளல், நிறுவன மற்றும் சில்லறைக் கடன், வரத்தக நிதியளித்தல், அரசாங்க கருத்திட்டங்களுக்கான கடன்கள், அடகுபிடித்தல், இணைய வங்கிச் சேவை மற்றும் குறுந்தகவல் வங்கிச் சேவை போன்ற பல்வேறு தீர்வுகளை வழங்குகின்றது.

துணை நிறுவனம்

வரையறுக்கப்பட்ட என்.எஸ்.பி. நிதி முகாமைத்துவ கம்பனி என்ற பெயரில் வங்கிக்கு முழுமையாக உரித்துடைய துணை நிறுவனமானது முதல்நிலை வணிகரொருவராக அரசாங்க பிணையங்களை கையாழுவதில் ஈடுபடுகின்றது.

1.4 தயாரித்தல் அடிப்படை →

1.4.1 இணக்கக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று, முழுமையான வருமானக் கூற்று, பங்கு மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நியமங்களுக்கமைவாக (இகநி மற்றும் இநிஅநி) தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்படுவதுடன் 1988 இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கும் அதனைத் தொடர்ந்த அதற்கான திருத்தங்களுக்கும் இணங்கி காணப்படுகின்றன. காசுப்பாய்ச்சலில் காணப்படும் தகவல்களுக்கானவை தவிர இந் நிதியியல் கூற்றுகள் கணக்கீட்டின் திரளுதல் அடிப்படையினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுக்களினை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகளும் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களும் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளின் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளினை தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றிற்காக இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட மாதிரிகளுடன் இணங்கி காணப்படுகின்றன.

1.4.2 நிதியியல் கூற்றுகளுக்கான பொறுப்புடைமை

1971இன் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றிற்கமைவாக குழுவினதும் வங்கியினதும் நிதியியல் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைத்தல் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புடைமையாகும்.

1.4.3 நிதியியல் கூற்றுகளுக்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

2017 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியினதும் குழுவினதும் நிதியியல் கூற்றுகள் 2018 மார்ச் 12 அன்று பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டு வெளியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்டன.

1.4.4 அளவீட்டு அடிப்படை

நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்டுள்ள பின்வரும் முக்கிய விடயங்களுக்கானவை தவிர ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள், வரலாற்று கிரய அடிப்படையொன்றில் தயாரிக்கப்பட்டன.

(i) விற்பனைக்காக கிடைக்கத்தக்க முதலீடுகள்

(ii) பெறுதி நிதியியல் சாதனங்கள்

(iii) வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள்

(iv) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

(v) காணி மற்றும் கட்டடங்கள்

(vi) ஊழியர்களுக்காக வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்கள்

1.4.5 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

தொகுதி தொழிற்படுத்தும் அடிப்படை பொருளாதார சூழலின் நாணயமாகவுள்ள இலங்கை ரூபாவில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன.

1.4.6 நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்

நிதியியல் நிலைமைக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்புடைய திரவத்தன்மை மற்றும் முதிர்வு விதங்களுக்கு ஏற்றவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் முதிர்வு விதங்கள் பற்றிய பகுப்பாய்வொன்று குறிப்பு 49 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான சட்ட ரீதியான உரிமை காணப்படுமிடத்து மாத்திரம் அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்ப்பனவு செய்வதற்கான நோக்கமொன்றும் உள்ளவிடத்து, அல்லது ஒரே சமகாலத்தில் சொத்துக்கள் தேறுவதற்கு அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்வதற்கு நோக்கமொன்றும் உள்ளவிடத்து நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துகளும் நிதிப் பொறுப்புகளும் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகை அறிக்கையிடப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடல் ஒன்றினால் வேண்டப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி, அத்துடன் தொகுதியின் கணக்கீட்டு கொள்கைகளில் குறித்துரைத்து வெளியிடப்பட்டுள்ளவாறு வருமானக் கூற்றில் வருமானமும் செலவும் ஈடுசெய்யப்படவில்லை.

1.4.7 பொருண்மையும் ஒன்றுசேர்தலும்

ஒரே வகையின் ஒவ்வொரு முக்கிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரே வகையற்ற தன்மையுடைய அல்லது தொழிற்பாடுகள் கொண்ட விடயங்கள், "நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் – இகநி 1 இனால் அனுமதிக்கப்பட்டவாறு அவை முக்கியமற்றதாக காணப்படவில்லையெனின் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன.

1.4.8 ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு காலத்தின் நிதியியல் கூற்றுகள் பற்றிய புரிதலினை அதிகரிக்கும் பொருட்டும் காலங்களுக்கிடையிலான ஒப்பீட்டினை அதிகரிப்பதற்கும் அளவுசார், விளக்கம்சார், மற்றும் விவரணம்சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலாக ஒப்பீட்டுத் தகவல்கள், நிதியில் கூற்றுகளில் உள்ள முந்திய ஆண்டு தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பாக எடுத்துரைப்பதற்கும் நடைமுறை ஆண்டின் எடுத்துரைத்தலுக்கு இனங்கக்கூடியவாறும் ஒப்பீட்டுத் தகவல்கள் அவசியமான இடங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. 352 ஆம் பக்கத்தில் காணப்படும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு 47 இல் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

1.4.9 முக்கிய கணக்கீட்டு தீர்வுகளும் மதிப்பீடுகளும் மற்றும் ஊகங்களும்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற அல்லது தாக்கம் செலுத்துகின்ற அத்துடன் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உண்மைப் பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படையான ஊகங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் மீளாயப்படுகின்ற காலத்திலும் அத்துடன் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் எதிர்கால காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள் இனங்காணப்படுகின்றன.

கணக்குகளில் மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கை பிரயோகித்தலில் மதிப்பிடுதல், முக்கிய தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள் என்பனவற்றின் முக்கிய பகுதிகள் வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகளில் பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன

1.4.9.1 தொடர்ந்து இயங்கும் நிறுவனம்

வங்கியானது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனமாக தொடர்ந்தும் இருப்பதற்கான தகைமையினை தொடர்ந்து கொண்டிருப்பதாக பணிப்பாளர்கள் சபை/முகாமைத்துவம் மதிப்பிட்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்தில் வியாபார அலுவல்களை தொடர்ந்து நடாத்தவதற்கான மூலவளங்களைக் கொண்டிருப்பதாக திருப்தியடைகின்றது. மேலும், இயங்கும் நிறுவனமாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தொகுதியின் தகைமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகம் எதனையும் ஏற்படுத்தக் கூடிய உணரக்கூடிய நிச்சயமின்மைகள் எவற்றையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

1.4.9.2 நிதியியல் சாதனங்களின் நியாயப் பெறுமதிகள்

நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துகளினதும் நிதிப்பொறுப்புகளினதும் நியாயப் பெறுமதி தொழிற்படும் சந்தைகளிலிருந்து உருவாக்கப்படமுடியாத போது கணித மாதிரிகளின் பயன்பாடு உள்ளடங்கலாக மதிப்பீட்டு நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டு அவை தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் அனேகமாக அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகளிலிருந்து பெறப்படுவதாயினும், அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகள் கிடைக்காத நிலையில் நியாயப் பெறுமதியைத் தாபிப்பதற்கு தீர்ப்புகள் தேவைப்படுகின்றன.

நிதிச் சாதனங்களின் மதிப்பீட்டிற்காகவும் நியாயப் பெறுமதி அதிகார ஒழுங்கு என்பவற்றிற்கு பயன்படுத்தப்படும் முறையியல்கள் என்பன 364 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு 50 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

1.4.9.3 கடன்கள் மற்றும் வருமதிகள் மீதான மதிப்புக் குறைப்பு நட்டங்கள்.

தனிப்பட்ட ரீதியாக மதிப்புக் குறைப்பு மதிப்பீடு

வருமானக் கூற்றில் பெறுமதிக் குறைப்பு நட்டம் ஒன்று பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதை மதிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதியானது. அதன் தனிப்பட்ட ரீதியாக முக்கியமான கடன்கள் மற்றும் முற்பணங்களை மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக மதிப்புக் குறைப்பு நட்டங்களைத் தீர்மானிக்கும் போது எதிர்கால காசுப்பாய்ச்சலின் தொகையையும் நேரத்தையும் மதிப்பீடுவதில் முகாமைத்துவ தீர்வுகள் தேவைப்படுகின்றன. இத்தகைய உத்தேச மதிப்பீடுகள் அநேக காரணிகளின் ஊகங்களை அடிப்படையாக கொண்டிருப்பதால் உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம். அதன் விளைவாக, எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம்.

கூட்டான மதிப்புக் குறைப்பு மதிப்பீடு

தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்புக் குறைப்பு தேவையில்லை என காணப்பட்ட கடன்களும் வருமதிகளும், மற்றும் தனித்தனியாக முக்கியமற்றவையான கடன்களும் வருமதிகளும் பின்னர் நியாயமான சான்றுகள் இருப்பினும் அவற்றின் விளைவுகளுக்கு இன்னமும் சான்றுகள் கிடைக்காத ஏற்பட்ட நட்ட நிகழ்வுகளின் காரணமாக ஏற்பாடு தேவையா என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரே மாதிரியான இடர் தன்மைகளைக் கொண்ட வகைகளாக அவற்றை தொகுதிகளாக்குவதன் மூலம் கூட்டாக மதிப்பீடு செய்யப்படும். கூட்டு மதிப்பீடானது கடன் சொத்துப்பட்டியல் (நிலுவை மட்டங்கள், கடன் பயன்பாடு, பிணைய உறுதி விகிதங்களுக்கான கடன் போன்றவை) இடர் அவதானிப்புக்கள் மற்றும் பொருளாதார தரவுகள் என்பவற்றின் தீர்ப்புக்கள் (வேலைவாய்ப்பு இன்மையின் மட்டங்கள், உண்மைச் சொத்துக்களின் விலைகள், சுட்டெண்கள், நாட்டின் இடர் மற்றும் வெவ்வேறு தனிப்பட்ட குழுக்களின் செயலாற்றல்கள் உள்ளடங்கலாக) என்பவற்றிலிருந்து தரவுகளைப் பெற்றுக் கொள்கின்றன.

நிதியியல் சொத்துகளின் மதிப்புக்குறைப்பு பற்றி 273 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 2.3.6 இல் மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

1.4.9.4 விற்பனைக்கான நிதியியல் முதலீடுகளின் பெறுமதிக்குறைப்பு

படுகடன் பிணையங்கள்

விற்பனைக்கான முதலீடுகளாக வகைப்படுத்தப்பட்ட அதன் படுகடன் பிணையங்கள் அவை மதிப்புக் குறைந்துள்ளனவா என்பதை கணிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் குழு அவற்றை மீளாய்வு செய்கின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனிப்பட்ட மதிப்பீடுகளுக்கு பிரயோகிக்கப்படுவதையொத்த அதே விதமான தீர்வுகளை இது வேண்டுகின்றது.

பங்குரிமை மூலதன முதலீடுகள்

விற்பனைக்கான பங்கு மூலதன முதலீடுகளின் மீதான மாற்றங்கள் அவற்றின் கிரயத்திற்கு கீழான நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட வீழ்ச்சியொன்று காணப்படும்போது தொகுதியானது பெறுமதி இழப்பு விதிப்பனவுகளை பதிவு செய்கின்றது. "குறிப்பிடத்தக்க" அல்லது "நீண்ட" என்ற பதங்கள் யாது பற்றி நிர்ணயித்தல் தீர்ப்பினை வேண்டுகின்றது. இத்தீர்ப்பினை மேற்கொள்ளும்போது முதலீட்டின் நியாயப் பெறுமதியானது அதன் கிரயத்தினை விட குறைவாக காணப்படுவதற்கான ஏனைய காரணிகள், வரலாற்று பங்குவிலை அசைவுகள் மற்றும் காலம் என்பவற்றிற்கு மத்தியில் குழு மதிப்பீடு செய்கின்றது.

1.4.9.5 ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் மீள் விலைமதிப்பு

வங்கியினதும் தொகுதியினதும் இறையிலி காணி மற்றும் கட்டடங்கள் மீள்விலைமதிப்பிடப்பட்ட தொகைகளில் பிரதிபலிக்கின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் – இநிஅநி 13 "நியாயப் பெறுமதி அளவீடு" இந்நியதிகளின்படி நிரந்தரக் காணியினதும் கட்டடங்களினதும் நியாயப் பெறுமதியினை நிர்ணயித்தலுக்காக தொகுதி சுயாதீன தொழில்சார் விலை மதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்தியது.

இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் நியாயப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறைகளும் முக்கிய ஊகங்களும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு 2.4 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

1.4.9.6 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பயன்பாட்டு ஆய்வுக்காலம்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் மிஞ்சிய பெறுமதி, பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைகளை தொகுதி மீளாய்கின்றது. இப்பெறுமதிகளினதும் வீதங்களினதும் முறைகளினதும் மதிப்பீடுகளில் முகாமைத்துவத் தீர்வு பிரயோகிக்கப்படுகின்றது. ஆதலால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுத்தப்பட்டவையாகும்.

1.4.9.7 பிற்போடப்பட்ட வரிச் சொத்து

வரிச் சொத்து எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறுகின்ற அத்தகைய வரி இழப்புகள் பயன்படுத்தக்கூடியதாகவிருக்கும் என்பதற்கெதிராக இது நிகழும் என்ற ரீதியில் வரி இழப்புக்களுடன் தொடர்புபட்டு பிற்போடப்பட்ட வரி சொத்துகள் இனங்காணப்பட்டுள்ளன. எதிர்கால வரி திட்டமிடல் மூலோபாயங்களுடன் சேர்த்து எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்கள் நிகழக்கூடிய காலம் மற்றும் மட்டம் என்பதனை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்து தொகையினை நிர்ணயிப்பதற்கு தீர்ப்பு தேவைப்படுத்தகின்றது.

1.4.9.8 வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள்

வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்களின் கிரயமும் அவற்றின் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதிகளும் கணிப்பீட்டு பெறுமதிகளை பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கணிப்பீட்டு மதிப்பீடானது கழிவு விகிதங்கள், சொத்துகள் மீதான வருவாயில் எதிர்பார்க்கப்பட்ட விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு விகிதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் என்பன பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது.

பொருத்தமான கழிவு விகிதத்தினை நிர்ணயிக்கும்போது முகாமைத்துவமானது வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்கு நேரொத்த புறச்செருகல் முதிர்வுகளுடனான இலங்கை அரசாங்கத்தின் முறிகளில் உள்ள வட்டி விகிதங்களை கருத்திற் கொள்கின்றது

இறப்பு வீதமானது பொதுவாக கிடைக்கத்தக்க இறப்பு வீத அட்டவணைகளை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும் ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்கத்தினையும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்பு வீதத்தையும் அடிப்படையாக கொண்டமைந்துள்ளன.

இத்திட்டங்களின் நீண்டகால தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

1.4.9.9 ஏற்பாடுகள், கடமைப்பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா செலவுகள்

தொகுதியானது சாதாரண வியாபார நடவடிக்கைகளில் அதற்கெதிரான சட்டக்கோரிக்கைகளை பெறுகின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் ஏதேனும் பின்தொடர்கின்ற உரிமைக் கோரிக்கை நேரிடக்கூடியதற்கேற்ப முகாமைத்துவம் தீர்ப்புகளை மேற்கொள்கின்றது. பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சல் தொகை சாத்தியமாக காணப்படுவதனால் சட்டக்கோரிக்கைகளை முடிவுறுத்தும் காலம் நிச்சயமற்றதாகவுள்ளது. காலம் குறித்தலும் செலவும் தொடர்புடைய சட்ட நியாயாதிக்கத்தில் காணப்படும் உரிய செயன்முறையிலேயே இறுதியாக தங்கியிருக்கின்றன.

2. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் →

கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள், வேறு வகையில் எடுத்துக்காட்டப்பட்டால் அன்றி இந்நிதியியல் கூற்றுகளில் எடுத்துரைக்கப்பட்ட அனைத்து காலங்களுக்கும் முரண்பாடின்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. வங்கியினது கணக்கீட்டு கொள்கைகளும் பொருத்தமான இடங்களில் தொகுதிக் குழுமங்களினால் முரண்பாடின்றி பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் மாறுபாடுகள் அதற்கிணங்க வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.1 திரட்டுதலுக்கான அடிப்படை →

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள், இநிஅநி 10 "திரட்டிய நிதியியல் கூற்றுகள்" மற்றும் இகநி 27 – "வேறான நிதியியல் கூற்றுகள்" ஆகிய நியதிகளுக்கமைவாக வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 துணை நிறுவனம்

துணை நிறுவனத்தின் நிதியியல் கூற்றுகள் வங்கிக்கு கட்டுப்பாடு மாற்றப்பட்ட திகதியிலிருந்தும் முழுமையாக திரட்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு நிறுத்தப்படும் திகதி வரை திரட்டப்படுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். ஏதேனும் நிறுவனமொன்றின் அதன் செயற்பாடுகளிலிருந்து நலன்களைப் பெறுவதற்காக நிதியியல் மற்றும் தொழிற்படுத்தல் கொள்கைகளை ஆளுவதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளவரை கட்டுப்படுத்தல் நிலைத்திருக்கும். திரட்டுதல் நோக்கத்திற்கான வங்கியின் துணை நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்கள் தேசிய சேமிப்பு வங்கியைப் போன்று அதே அறிக்கையிடும் காலத்திற்காக ஒரேமாதிரியான கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.2 திரட்டுதலின் மீது இல்லாதொழிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

குழுக்களுக்குள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து விளைகின்ற அனைத்து குழுக்களுக்கிடையிலான மீதிகள், வருமானம் மற்றும் செலவுகள் அத்துடன் தேறாத பெறுகைகள் மற்றும் நட்டங்கள் என்பன திரட்டிய நிதியியல் கூற்றுகள் தயாரிக்கின்ற போது முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டன.

2.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும் →

கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயங்களும் இலங்கையில் செயற்படும் நாணயமான இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட நாணய சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் அத் திகதியில் ஆளுகின்ற நடுத்தர நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் மீள்நாணயமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாணய விடயங்களில் தீர்ப்பனவில் ஏற்படும் அனைத்து செலாவணி வேறுபாடுகளும் அல்லது ஆரம்பத்தில் அவை பதிவுசெய்யப் பட்டவற்றிலிருந்து வேறுபட்ட வீதத்தில் நாணய விடயங்களை மாற்றும் போதும் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத விடயங்கள், ஆரம்பக் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட திகதிகளின் நாணய மாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் உண்மைப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நாணயமல்லாத விடயங்கள், உண்மைப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணய மாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும்.

வெளிநாட்டு நாணய வங்கி தொழில் அலகின் நிதி நிலைமைக் கூற்றானது, அறிக்கையிடும் திகதியிலான நடுத்தர செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கி தொழில் அலகின் கொடுக்கல் வாங்கல்கள் மேற்குறித்த கொள்கைக்கு அமைவாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட இலாபங்கள்/நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

2.3 நிதியியல் சாதனங்கள் →

2.3.1 நிதியியல் சாதனங்கள் – ஆரம்ப இனங்காணல், வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு

i. இனங்காணப்பட்ட திகதி

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் வர்த்தக திகதியில் அதாவது சாதனத்தின் ஒப்பந்தம் செய்யும் ஏற்பாடுகளின் ஒரு தரப்பினராக வங்கி ஆகுகின்ற திகதி ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன

வர்த்தக திகதியிலிருந்து 3 நாட்களின் பின்னர் வருகின்ற தீர்ப்பனவு திகதியில் அரசாங்கப் பிணையங்கள் இனங்காணப்படுகின்றன. நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் அறிக்கையிடும் திகிதியில் இந்நிலைமை சரி செய்யப்படுனகின்றது

ii. நிதியியல் சாதனங்களை இனங்காணலும் ஆரம்ப அளவீடும்

ஆரம்ப இனங்காணலில் நிதியியல் சாதனங்களை வகைப்படுத்தலானது நிதிச் சாதனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான நோக்கம் மற்றும் முகாமைத்துவத்தின் எண்ணம் அத்துடன் அவற்றின் பண்புகள் என்பனவற்றைச் சார்ந்துள்ளது.

“நிதியியல் சாதனங்கள்: இனங்காணலும் அளவீடும்” மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இகநி 39 இற்கமைவாக இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் என்ற விடயங்கள் தவிர நிதியியல் சாதனங்களை பெற்றுக் கொள்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு நேரடியாக உடமையாக்கத்தக்க அவற்றின் கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அனைத்து நிதியியல் சாதனங்களும் ஆரம்பத்தில் அளவிடப்பட்டுள்ளன.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அமைந்த நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் செலவுகள், இலாபம் அல்லது நட்டம் ஊடாக கையாளப்பட்டுள்ளன.

iii. "முதலாம் நாள் இலாபம் அல்லது நட்டம்"

ஏனைய அவதானிக்கத்தக்க நடப்புச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களின் உண்மைப் பெறுமதியிலிருந்து ஒரே சாதனத்துக்கான கொடுக்கல் வாங்கல் விலை வேறுபடும் போது அல்லது அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகளை மட்டுமே உள்ளடக்கிய வேறுபாடுகளின் மதிப்பீட்டு நுட்பங்களின் அடிப்படையில் அமையும்போது அல்லது தொகுதியானது வருமானம் மற்றும் தனிப்பட்ட செலவுகளில் கொடுக்கல் வாங்கல் விலை மற்றும் உண்மைப் பெறுமதிக்கிடையிலான (முதலாம் நாளொன்றின் இலாபம் அல்லது நட்டம்) வேறுபாட்டினை உடனடியாக இனங்காண்கின்றது. அவதானிக்கப்பட முடியாத தரவுகளைப் பயன்படுத்தி உண்மைப் பெறுமதி தீர்மானிக்கப்படும் விடயங்களில் கொடுக்கல் வாங்கல் விலை மற்றும் மாதிரிப் பெறுமதிக்கிடையிலான வேறுபாடு அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் மட்டும் இனங்காணப்படும். இது உள்ளீடுகள் அவதானிக்கத்தக்கதாயிருக்கும்போது அல்லது அச்சாதனம் இனங்காணப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களிலேயே ஏற்படும். ஒரே மாதிரியாகப் பொருந்தக் கூடிய திட்டங்களின் கீழ் சலுகை வீதங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரையில் ஏற்படக் கூடிய "முதலாம் நாள் இழப்பானது" ஊழியர்களின் எஞ்சியுள்ள சேவைக் காலப்பகுதி அல்லது கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய காலப்பகுதி ஆகிய இரண்டில் எது குறுகியதோ அதற்குப் பொருந்தக் கூடிய விளைவு வட்டி வீதங்களை (EIR) பயன்படுத்துகின்றது.

2.3.2 நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

நிதியியல் சொத்தொன்று, ஆரம்பத்தில் பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்

(அ) வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்
(ஆ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்.

- முதிர்வு நிதியியல் சொத்துகளுக்காக பிடித்து வைக்கப்பட்டவை
- கடன்களும் வருமதிகளும்
- விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள்

நிதியியல் சொத்துகளின் அதனைத் தொடர்ந்த அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது.

நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு பற்றிய விரிவான பகுப்பாய்வு 292 ஆம் பக்கத்தில் குறிப்பு 15இல் தரப்பட்டுள்ளது.

2.3.2.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள் என்பது வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(அ) வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் பற்றி விபரங்கள் 301 ஆம் பக்கத்தில் குறிப்பு 20இல் தரப்பட்டுள்ளன

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட பெறுதிகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட பெறுதிகள் பற்றி 297 ஆம் பக்கத்தில் குறிப்பு 19 இல் கலந்துரையாடப்பட்டுள்ளது.

காப்பு சாதனங்களாக பயன்படுத்தப்படும் பெறுதிகள்

காப்பு சாதனங்களாக பயன்படுத்தப்படும் பெறுதிகள் பற்றிய விபரங்கள் 297 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 19 இல் தரப்பட்டுள்ளன.

(ஆ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பெறுமதி குறிக்கப்பட்டதன் மீது ஆரம்ப இனங்காணலின் மேல் ஏதேனும் சொத்தினை தொகுதி நியமித்திருக்கவில்லை.

2.3.2.2 முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகள்

முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகள் பற்றிய விபரங்கள் 314 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 25 இல் தரப்பட்டுள்ளன.

2.3.2.3 வங்கிக்கானதும் ஏனைய வாடிக்கையாளர்களுக்குமான கடன்களும் வருமதிகளும்

வங்கிக்கானதும் ஏனைய வாடிக்கையாளர்களுக்குமான கடன்களும் வருமதிகளும் பற்றிய விபரங்கள் 305 மற்றும் 306 ஆம் பக்கத்தில் காணப்படும் முறையே குறிப்பு 22, குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன

(i) மீள்விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்படும் பிணையங்கள்

குறிப்பிட்ட ஓர் எதிர்காலத் திகதியில் மீள் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைக் கூற்றில் இனங்காணப்படவில்லை. தொகுதியானது உரித்துடைமையின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதியினை கணிசமான அளவில் கொண்டுள்ளது. ஒன்றுசேர்ந்த வட்டி உள்ளடங்களாக கொடுப்பனவு செய்யப்பட்ட கைமாறுகள், தொகுதியினால் வழங்கப்பட்ட கடன் ஒன்றாக கொடுக்கல் வாங்கலின் பொருளாதார பிரதிபலனை பிரதிபலிக்கின்ற "மீள்விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்" இனுள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட விலைகளுக்கிடையிலான வேறுபாடு, "தேறிய வட்டி வருமானத்தில்" பதியப்பட்டுள்ளதுடன் விற்பனைக்கும் மீள் கொள்வனவுக்கும் இடையிலான வித்தியாசம் வட்டிச் செலவாக கருதப்படுவதுடன் விளைவு வட்டி வீதத்தை பயன்படுத்தி ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் வரை நீடிக்கப்படும்.

மீள்விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்படும் பிணையங்கள் பற்றிய விபரங்கள் 305 மற்றும் 306 ஆம் பக்கத்தில் காணப்படும் முறையே குறிப்பு 22, குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன.

2.3.2.4 விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள்

விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் 310 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளன.

2.3.2.5 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் மற்றும் காசுக்கு சமமானவையும் பற்றிய விபரங்கள் 296 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளன.

2.3.3 நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்.

தொகுதியானது ஆரம்பத்தில் அதன் நிதியியல் பொறுப்புகளை பின்வரும் வகுதிகள் ஒன்றினுள் வகைப்படுத்துவதை நிர்ணயிக்கின்றது.

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதியியல் பொறுப்புகள்

அ) வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள்

ஆ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள்

- பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் நிதியியல் பொறுப்புகள்

நிதியியல் பொறுப்புகளின் தொடரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கும். தயவு செய்து கீழே விவரிக்கப்பட்ட குறிப்புகள் 2.3.3.1 மற்றும் 2.3.3.2 ஐப் பார்க்க.

2.3.3.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடான நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்களை உள்ளடக்குகின்றது. ஆரம்ப அடையாளப்படுத்தலினைத் தொடர்ந்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதியியல் பொறுப்புகள், நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன. அத்துடன் அங்கு காணப்படும் மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதியியல் பொறுப்புக்கள், அண்மைய காலத்தில் விற்பனை செய்தல் அல்லது மீள் கொள்வனவு செய்தல் நோக்கத்திற்காக அல்லது குறுகியகால இலாபம் அல்லது நிலையைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றுடன் சேர்த்து முகாமை செய்யப்படுகின்ற தொகுதியொன்றின் பாகமொன்றாக வைக்கப்பட்டுள்ள நோக்கத்திற்காக பிரதானமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருக்குமெனில் வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப் பட்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகுதி இலங்கை கணக்கீட்டு நியமம் – இகநி 39 "நிதியியல் சாதனங்கள்: இனங்காணலும் அளவீடும்" இனால் வரையறை செய்யப்பட்டவாறு காப்பு தொடர்புகளில் அடிப்படை மாற்று சாதனங்களாக பெயர் குறிக்கப்பட்டிருக்காத தொகுதியினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட பெறுதி நிதியியல் சாதனங்களை உள்ளடக்குகின்றது.

வர்த்தகத்திற்காக பிடித்துவைக்கப்பட்ட பொறுப்புகள் மீதான வருவாய்கள் அல்லது நட்டங்கள், வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

தொகுதியானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ளவாறு ஆரம்ப இனங்காணலின் மீது ஏதேனும் நிதியியல் பொறுப்புக்களை பெயர் குறித்திருக்கவில்லை.

2.3.3.2 பெறுமதி குறைத்த கிரயத்தில் நிதியியல் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பெயர் குறிக்கப்படாத தொகுதியினால் விநியோகிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் என்பது பொருத்தமானவாறு "வங்கிக்கு கிடைக்க வேண்டியவை", "ஏனைய வாடிக்கையாளருக்கு கிடைக்க வேண்டியவை," " மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்" மற்றும் "விநியோகிக்கப்பட்ட படுகடன் மற்றும் ஏனைய கடன்பெறப்பட்ட நிதியங்கள்" இன் கீழ் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன, இங்கு நிலையான காசுத் தொகை ஒன்றின் பரிமாற்றம் அல்லது விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் சொந்த பங்கு மூலதன பங்குகளில் நிலையான எண்ணிக்கை ஒன்றிற்கான மற்றுமொரு நிதியியல் சொத்து மூலமானது தவிர காசு அல்லது வேறு நிதியியல் சொத்துகளை உரிமையாளருக்கு ஒப்படைத்தல் அல்லது கடப்பாட்டினை திருப்திப்படுத்துவதற்கான கடமைப்பாடு ஒன்றினைதொகுதி கொண்டுள்ள போது ஒப்பந்த உடன்படிக்கையின் நோக்கம் பெறுபேறுகளைத் தோற்றுவிக்கும்.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் அத்தகைய நிதியியல் பொறுப்புகள் கணிசமாக விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டுள்ளன. வெளியீட்டின் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் அத்துடன் விளைவு வட்டி வீதத்தின் முழுமையாக்கும் பாகமொன்றாக காணப்படுகின்ற ஏதேனும் கிரயங்களை கருத்திற் கொண்டு மதிப்புக் குறைக்கப்பட்ட கிரயம் கணிக்கப்பட்டுள்ளது. விளைவு வட்டி வீத மதிப்புக் குறைத்தலானது வருமானக் கூற்றில் "வட்டிச் செலவுகளில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் இனங்காணப்படாமை அதே போன்று விளைவு வட்டி வீத மதிப்புக் குறைத்தல் செயன்முறை ஊடாக காணப்படும் போது வருமானங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(i) வங்கிக்கு கிடைக்க வேண்டியவை

வங்கிக்கு கிடைக்க வேண்டியவை பற்றிய விபரங்கள் 325 ஆம் பக்கத்தில் குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளன.

(ii) ஏனைய வாடிக்கையாளருக்கு கிடைக்க வேண்டியவை

ஏனைய வாடிக்கையாளருக்கு கிடைக்க வேண்டியவை பற்றிய விபரங்கள் 325 ஆம் பக்கத்தில் குறிப்பு 32 இல் தரப்பட்டுள்ளன.

(iii) மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் பற்றிய விபரங்கள் 327 ஆம் பக்கத்தில் குறிப்பு 33இல் தரப்பட்டுள்ளன.

(iv) ஏனைய கடன்பாடுகள் – விநியோகிக்கப்பட்ட ஏனைய படுகடன் பிணையங்கள்

ஏனைய கடன்பாடுகள் – விநியோகிக்கப்பட்ட ஏனைய படுகடன் பிணையங்கள் பற்றிய விபரங்கள் 327 ஆம் பக்கத்தில் குறிப்பு 33, தரப்பட்டுள்ளன.

(v) சார்பு நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்

"சார்பு நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்" பற்றிய விபரங்கள் 339 ஆம் பக்கத்தில் குறிப்பு 35 இல் தரப்பட்டுள்ளது

2.3.4 நிதியியல் சாதனங்களின் மீள் வகைப்படுத்தல்

தொகுதியானது இலங்கை கணக்கீட்டு நியமம் – இகநி 39 "நிதியியல் சாதனங்கள்: இனங்காணலும் அளவீடும்" இனால் அனுமதிக்கப் பட்டவாறு பெறுதி அற்ற நிதியியல் சொத்துகளை "வர்த்தகத்திற்காக பிடித்துவைக்கப்பட்டவை" வகுதியிலிருந்து "விற்பனைக்காக கிடைக்கப்பெறுகின்றவை", "கடன்கள் மற்றும் வருமதிகள்", அல்லது "முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டவை" வகுதிகளுக்குள் மீள் வகைப்படுத்துகின்றது. சில சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்துகளை "விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை" வகுதியிலிருந்து "கடன்கள் மற்றும் வருமதிகள்", "வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்டவை" அல்லது "முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டவை" வகுதியினுள் மீள் வகைப்படுத்துவதற்கும் தொகுதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மீள் வகைப்படுத்தல்களானவை மீள் வகைப்படுத்தல் திகதியன்று நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது புதிய மதிப்புக் குறைக்கப்பட்ட செலவாக தோற்றம் பெறுகின்றது.

"விற்பனைக்காக கிடைக்கத்தக்க" வகுதியிலிருந்து மீள் வகைப்படுத்தப்பட்ட நிலையான முதிர்வு ஒன்றுடன் கூடிய நிதியியல் சொத்து ஒன்றிற்காக பங்கு மூலதனத்தில் இனங்காணப்பட்டுள்ள அச்சொத்து மீதான ஏதேனும் முந்திய வருவாய்கள் அல்லது நட்டங்கள் விளைவு வட்டி வீதத்தினை பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்திற்கு மதிப்பு குறைக்கப்படுகின்றது. புதிய மதிப்பு குறைக்கப்பட்ட கிரயம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல் என்பவற்றிற்கிடையிலான ஏதேனும் வேறுபாடானது, விளைவு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி சொத்தொன்றின் எஞ்சிய காலத்தின் மீது மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது.

நிதியியல் சொத்து ஒன்று நிலையான முதிர்ச்சி ஒன்றினைக் கொண்டிராத சந்தர்ப்பம் ஒன்றில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்ற போது அல்லது விற்று அகற்றப்படும் போது இலாபத்தில் அல்லது நட்டத்தில் வருமானம் அல்லது நட்டம் இனங்காணப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து சொத்து மதிப்புக் குறைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பின் பங்கு மூலதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அப்போதைய தொகை வருமானக் கூற்றிற்கு மீள் சுழற்சி செய்யப்பட்டுள்ளது.

பெறுதியற்ற வர்த்தக சொத்து ஒன்று அது கடன்கள் மற்றும் வருமதிகள் பற்றிய வரைவிலக்கணத்தினை நிறைவுசெய்யுமிடத்து அத்துடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை நிதியியல் சொத்து ஒன்றினை தொகுதி பிடித்து வைப்பதற்கு குழுவானது நோக்கத்தினையும் இயலுமையினையும் கொண்டிருக்குமெனில் "வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்ட" வகுதியிலிருந்து "கடன்கள் மற்றும் வருமதிகள்" வகுதியினுள் மீள் வகைப்படுத்தலாம். நிதியியல் சொத்து மீள் வகைப்படுத்தப்பட்டிருப்பின் அத்துடன் தொகுதி அதனைத் தொடர்ந்து அதன் அத்தகைய பணப் பெறுகைகளின் அதிகரிக்கப்பட்ட அறவீட்டுத் தன்மையின் விளைவொன்றாக எதிர்கால காசுப் பெறுகைகளின் மதிப்பீடுகளை அதிகரிக்குமாயின் அத்தகைய அதிகரிப்பின் விளைவு, மதிப்பீட்டு மாற்றத் திகதியிலிருந்து விளைவு வட்டி வீதத்திற்கான சீராக்கல் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

மீள்வகைப்படுத்தலானது முகாமைதுவத் தெரிவில் காணப்படுகின்றது. அத்துடன் சாதனத்திற்கு சாதனம் அடிப்படையொன்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொகுதியானது ஏதேனும் நிதியியல் சாதனத்தினை ஆரம்ப இனங்காணலின் பின்னர் "இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதி" இனுள் மீள்வகைப்படுத்துவதில்லை. அதேபோன்று இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ளவாறு அது நியமிக்கப்பட்டிருந்த ஆரம்ப இனங்காணல் இருக்குமெனின் குழு ஏதேனும் நிதியியல் சாதனங்களை "இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதி" வகுதிக்கு வெளியில் மீள்வகைப்படுத்துவதில்லை.

2.3.5 இனங்காணாத நிதியியல் சாதனங்கள்

(அ) நிதியியல் சொத்துகள்

பின்வருவனவற்றின்போது நிதிச் சொத்து ஒன்றினை (அல்லது இயைபானவிடத்து நிதிச் சொத்து ஒன்றின் பாகமொன்று அல்லது அதே நிதியியல் சொத்துகளின் குழுவொன்றின் பாகமொன்றினை) தொகுதி இனங்காணாது

- சொத்துகளிலிருந்து காசுப்பாய்ச்சலினை பெற்றுக் கொள்வதற்கான உரிமை முடியுமிடத்து காலாவதியாகின்ற போது: அல்லது
- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கான அதன் உரிமைகளை தொகுதி இடமாற்றியுள்ளது அல்லது "அனுப்புதல்" ஒழுங்கமைப்பு ஒன்றின் கீழ் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான முக்கிய தாமதமின்றி பெற்றுக் கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கான ஊகிக்கப்பட்ட கடப்பாடு ஒன்றினை தொகுதி கொண்டுள்ளது. அத்துடன் தொகுதி சொத்தின் அனைத்து இடர்களையும் கைமாறுகளையும் பொருண்மையாக இடமாற்றியோ அன்றில் தொகுதி சொத்தின் அனைத்து இடர்களையும் கைமாறுகளையும் பொருண்மையாக தக்க வைக்காதிருக்கும் நிலையில் ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை இடமாற்றியுள்ள போது

சொத்து ஒன்றிலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை தொகுதி இடமாற்றியுள்ள போது அல்லது அனுப்புதல் ஒழுங்கு ஒன்றினை தொகுதி கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்து ஒன்றின் அனைத்து இடர்களையும் கைமாறுகளையும் பொருண்மையாக இடமாற்றாது, தக்க வைக்காது, சொத்து ஒன்றின் கட்டுப்பாட்டினை இடமாற்றாது உள்ள போது சொத்து ஆனது சொத்தில் தொகுதியின் தொடர்ச்சியான ஈடுபாடு உள்ளது என்ற ரீதியில் சொத்து இனங்காணப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தொகுதி இணையப்பபெற்ற பொறுப்பு ஒன்றினையும் இனங்காண்கின்றது. இடமாற்றப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் தொகுதி தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படை ஒன்றில் அளவிடப்பட்டுள்ளன.

இடமாற்றப்பட்ட சொத்து ஒன்றின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவத்தினை எடுத்துக் கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்கின்ற தொகையின் குறைவிலும் தொகுதி மீள் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு வேண்டப்படக்கூடியதாகவிருக்கின்ற அதிகூடிய ஈட்டுத் தொகையிலும் அளவிடப்படுகின்றது.

(ஆ) நிதியியல் பொறுப்புக்கள்

கடப்பாடானது தள்ளுபடி செய்யப்படும் போது, இல்லாமற் செய்யப்படும் போது அல்லது முடிவடையும் போது நிதியியல் பொறுப்பொன்று, இனங்காணப்படுவதில்லை.

தற்போது காணப்படுகின்ற நிதியியல் பொறுப்பு ஒன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் அதே கடன் வழங்குநரிடமிருந்து மற்றொரு வடிவத்தினால் மாற்றீடு செய்யப்படும் போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பு ஒன்றின் நியதிகள் கணிசமானளவு மாற்றப்படுமிடத்து அத்தகைய மாற்றமொன்று அல்லது திருத்தம் ஒன்று அடிப்படை பொறுப்பினை இனங்காண முடியாத ஒன்றாக கொள்ளப்படுவதுடன் புதிய பொறுப்பு ஒன்றாக இனங்காணப்படுகின்றது. அடிப்படை அல்லது மூல நிதியியல் பொறுப்பின் கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட ஈடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

2.3.6 நிதியியல் சொத்துகளின் பெறுமதிக் குறைப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதியியல் சொத்தொன்றிற்கு அல்லது ஒரு தொகுதியான நிதியியல் சொத்துகளுக்கு பெறுமதிக் குறைப்பு ஏற்பட்டுள்ளதற்கான உண்மையான சான்றுகள் எவையும் உள்ளதா என்பதை தொகுதி மதிப்பீடு செய்யும். சொத்து ஒன்றின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக பெறுமதிக் குறைப்பு செய்யப்படுவதற்கான உண்மையான சான்றுகள் இருந்தால் மட்டுமே ஒரு நிதியியல் சொத்துக்கு அல்லது ஒரு தொகுதியான நிதியியல் சொத்துக்கு பெறுமதிக் குறைப்பு ஏற்படும் என கருத முடியும். (உள்ளான நட்ட நிகழ்வு) என்பதுடன், நம்பகத் தன்மையுள்ள உத்தேச மதிப்பீடுகளை செய்யக் கூடியதான நிதிச் சொத்து அல்லது தொகுதி நிதியியல் சொத்துகளின் உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அந்த நட்ட நிகழ்வின் (அல்லது நிகழ்வுகளின்) பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே பெறுமதிக் குறைப்பு செய்யப்படும்.

கடன் பெறுநர் அல்லது ஒரு தொகுதி கடன்பெறுநர்கள் குறிப்பிடத்தக்க நிதியியல் கஸ்டங்களை அனுபவிக்கின்றனர். இதனால் வங்குரோத்து நிலையை அடைதல் அல்லது ஏனைய நிதியியல் மீள் அமைப்புக்கள், கடன் செலுத்தத் தவறுதல்கள் அல்லது வட்டி முதல் தொகையைச் செலுத்தத் தவறுதல்கள் ஆகியவற்றுடன் கடன் தவறுதல்கள் நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலைமைகள் எவையும் அவதானிக்கப்பட்ட தரவுகள் சுட்டிக்காட்டும் உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய குறைவுகள் என்பவையும் பெறுமதிக் குறைப்பு சான்றுகளில் உள்ளடங்கும்.

நிதியியல் சொத்துகள் (பங்கு மூலதன பிணையங்கள் உள்ளடங்கலாக) மதிப்பு குறைந்துள்ளன என்ற பொருண்மையான சான்று பின்வருவனவற்றை உள்ளடக்ககூடியது:

- கடன் பெறுநரின் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதிக் கஸ்டம்.
- கடன் வசதிகளை மீள் அட்டவணைப்படுத்தல்,
- பாதகமான நிதி விகிதாசாரமும் பங்கு மூலதனத்துடன் தொடர்புடைய நிறுவனத்தின் படுகடன் விகிதாசார மட்டங்களும்
- வெளிவாரி கடன் தரப்படுத்தலின் தரமிறக்கம்,
- கடன் பெறுநர் ஒருவர் மூலமான தவணை தவறுதல் அல்லது புறக்கணித்தல்,
- வேறுவகையில் தொகுதி கருத்திற் கொள்ளாது என்ற நியதிகளின் மீது கடனொன்று அல்லது முற்பணம் மீள்கட்டமைக்கப்படல்,
- கடன் பெறுபவர் அல்லது வழங்குநர் வங்குரோத்து நிலைக்கு ஆளாகின்ற குறிகாட்டிகள்,
- பிணையத்திற்கான செயற்பாடுமிக்க சந்தை மறைந்து போதல், அல்லது
- தொகுதியின் கடன் பெறுபவர் அல்லது வழங்குநர் நிலைமையில் பாதகமான மாற்றங்கள் அல்லது தொகுதியின் தவணை தவறுதலுடன் தொடர்புபடுகின்ற பொருளாதார நிலைமைகள் போன்ற சொத்துக்கள் குழுவொன்றுடன் தொடர்புபடுகின்ற ஏனைய அவதானிக்கத்தக்க தரவுகள்

பொதுவாக தொகுதியானது 20% கொண்ட வீழ்ச்சியை "குறிப்பிடத்தக்க" தொன்றாகவும், ஆறு மாதங்கள் கொண்ட காலப் பகுதியை "நீண்ட காலமாக" ஆகவும் கருதுகின்றது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் சிறிய வீழ்ச்சியொன்று அல்லது குறுகிய காலப்பகுதியொன்று பொருத்தமானதாயிருக்கும்.

i. பெறுமதிக் குறைக்கப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களின் மதிப்புக் குறைப்பு

பெறுமதி கழிப்பின் தனிப்பட்ட மற்றும் கூட்டான மதிப்பீட்டின் விபரங்கள் 286ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளது.

ii. விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதியியல் முதலீடுகளின் மதிப்புக் குறைப்பு

விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதியியல் முதலீடுகளின் பெறுமதிக் குறைப்பு பற்றிய விரிவான கலந்துரையாடல் 310ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளன.

2.3.7 நிதியியல் சாதனங்களுக்கான வருமானத்தினையும் செலவினையும் இனங்காணல்

வங்கிக்கு பொருளாதார நலன்கள் கிடைக்கும் என்ற நிகழ் தன்மை மற்றும் வருமானம் நம்பகத்தக்கதாக அளவிடக் கூடியது என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்பட்டுள்ளது. "வருமானம் மற்றும் செலவுகள்" பற்றிய விபரங்கள் 282 முதல் 291 வரையான பக்கங்களில் உள்ள குறிப்புகள் 03 தொடக்கம் 14 வரை தரப்பட்டுள்ளன.

i. வட்டி மற்றும் அதையொத்த வருமானமும் செலவுகளும்

வட்டியும் அதையொத்த வருமானமும் செலவுகளும் பற்றிய விபரங்கள் 282 மற்றும் 291 ஆம் பக்கங்களில் காணப்படும் குறிப்புகள் 03 தொடக்கம் 04 தரப்பட்டுள்ளன.

ii. கட்டணமும் தரகு வருமானமும்

கட்டணமும் தரகு வருமானமும் பற்றிய விபரங்கள் 284 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 5 இல் தரப்பட்டுள்ளன.

iii. தேறிய வர்த்தக வருமானம்

"வர்த்தகப்படுத்தலில் இருந்து தேறிய (இலாபம்/(நட்டம்)" பற்றிய விபரங்கள் 285 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 6 இல் தரப்பட்டுள்ளன.

iv. பங்கிலாப வருமானம்

வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது. வழமையாக இது, விலைகுறிக்கப்பட்ட பங்குரிமை பிணையங்களுக்கான முந்திய பங்கிலாப திகதியாகும் பங்கிலாபம் பற்றிய விபரங்கள் 286ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 9 இல் தரப்பட்டுள்ளன.

2.4 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் →

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரங்கள் 315ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 27 இல் தரப்பட்டுள்ளன.

2.5 அருவச் சொத்துக்கள் →

அருவச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் 322ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 28 இல் தரப்பட்டுள்ளன.

2.6 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் மதிப்பு குறைத்தல் →

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று மதிப்புக் குறைக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதை தொகுதி கணிக்கும். சாத்தியமொன்று காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு மதிப்பீட்டு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப் பெறப்பட வேண்டிய தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்து ஒன்றின் கொண்டு செல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறவேண்டிய தொகையை விஞ்சுமிடத்து சொத்தானது மதிப்பிறக்கம் செய்யப்பட்டதாக கருதப்படுவதுடன், அதன் மீளப் பெறப்பட வேண்டிய தொகையிலிருந்து மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றது

2.7 ஊழியர் நலன்கள் →

2.7.1 வரையறை செய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்

2.7.1.1 ஊழியர் ஓய்வூதிய நிதியம் – I

1995 ஒக்டோபர் 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் இணைந்த நிரந்தர பணியாளர்களுக்கு வரையறை செய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டமொன்றை வங்கி செயற்படுத்துகின்றது. இதில் வேறாக நிர்வகிக்கப்படும் நிதியமொன்றிற்கு பங்களிப்பு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரையறை செய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டம் I இன் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் செலவானது, திட்டமிடப்பட்ட செலவு கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி ஒவ்வொரு திட்டத்துக்கும் தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்ட பெறுகைகள் மற்றும் இழப்புகள், அவற்றுக்குரிய காலப்பகுதியில் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வரையறை செய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட அறுதியிட்ட நன்மைக கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறை செய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங் காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப் பிந்திய மதிப்பீடு, அமெரிக்கன் அகடமி ஒப் அக்சுவரீஸ் அன்ட் கொன்சல்ரிங் அக்சுவரிஸ் இன் உறுப்பினரான பியால் எஸ். குணதிலக்க F.S.A. (USA) என்பவரினால் 2017 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2017.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

வட்டி/கழிவு வீதம்	ஆண்டுக்கு 11.00%
வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு	ஆண்டுக்கு 4.50%
சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு	ஆண்டுக்கு 6.50%

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டு தோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினால் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் I பற்றிய விபரங்கள் 328 முதல் 331 ஆம் பங்கங்களில் குறிப்பு 34. (அ) I இல் தரப்பட்டுள்ளன.

2.7.1.2 நிதியளிக்கப்படாத ஓய்வூதிய பொறுப்பு

நிதியிடப்படாத கடந்தகால சேவைச் செலவானது மதிப்பீட்டு கணிப்பு முடிவடைந்தவுடன் ஏனைய முழுமையான வருமானத்தின் மீது இனங்காணப்படுகின்றது. 2017 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு கணிப்பு ரூபா 2,750 மில். கொண்ட கடந்த காலச் சேவை செலவுப் பற்றாக்குறை ஒன்றைக் காட்டியது. இது முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. நிதியிடப்படாத ஓய்வூதியப் பொறுப்பின் விபரங்கள் 328 மற்றும் 331 ஆம் பங்கங்களில் குறிப்பு 34(அ) 1 இல் தரப்பட்டுள்ளன.

2.7.1.3 ஊழியர் ஓய்வூதிய நிதியம் – II

1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வங்கியில் இணைந்த நிரந்தர அலுவலர்களுக்காக வங்கி வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒன்றினைத் தாபித்து தொழிற்படுத்துகின்றது. இது வேறாக நிர்வகிக்கப்பட்ட நிதியம் ஒன்றிற்கு அங்கத்தவர்களின் மொத்த சம்பளத்தில் 12 சதவீதத்தினை மாதாந்தம் பங்களிப்பதற்கு வங்கியினை தேவைப்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட நல ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குவதற்கான செலவு எதிர்வு கூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு மதிப்பு முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. கணிப்பீட்டு பெறுகைகளும் நட்டங்களும் அவை நிகழும் ஆண்டுக் காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

வரையறை செய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட அறுதியிட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. அறுதியிட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப் பிந்திய மதிப்பீடு, அமெரிக்கன் அகடமி ஒப் அக்சுவரீஸ் அன்ட் கொன்சல்ரிங் அக்சுவரிஸ் இன் உறுப்பினரான பியால் எஸ்.குணதிலக்க F.S.A. (USA) அவர்களினால் 2017டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2017.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

வட்டி/கழிவு வீதம்	ஆண்டுக்கு 11.00%
வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு	ஆண்டுக்கு 4.50%
சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு	ஆண்டுக்கு 6.50%

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பக்கை நிதியத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினால் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் II பற்றிய விபரங்கள் 332 மற்றும் 334 ஆம் பங்கங்களில் குறிப்பு 34. (அ) இல் தரப்பட்டுள்ளன.

2.7.1.4 விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

2013 டிசம்பரில் இருந்து ஓய்வூதிய நிதியம் – II உறுப்பினர்களுக்காக வங்கியானது விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஒன்றினை நிறுவியது. ஓய்வூதியத் திட்டம் – II இன் உறுப்பினர்கள் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு தெரிவு செய்யலாம். இந்நிதியத்திற்கு வங்கி பங்களிப்பு செய்வதில்லை. அதேவேளை வங்கி ஊழியர்கள் தமது மொத்த அடிப்படை சம்பளத்தில் மாதாந்தம் 5% இனை நிதியத்திற்கு செலுத்துகின்றனர்.

2.7.2 பணிக்கொடை

பதவியினர் ஓய்வூதியத் திட்டம் – II நிறுவப்பட்டதுடன் 1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டம் – II இன் உறுப்பினர்களாயினர். இதனால் சேவைப் பணிக்கொடைத் திட்டத்தின் கீழான உரிமைகள் மற்றும் சலுகைகளுக்கு அவர்கள் உரித்துடையவர்களல்லர். எவ்வாறாயினும், இவ் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏதேனும் ஓய்வூதியநலனுக்கு உரித்துடையவராவதற்கு ஓய்வு பெறும் நேரத்தில் வங்கியில் ஆகக்குறைந்தது 120 மாதகால தடங்கலற்ற செயற்பாடுமிக்க சேவையொன்று வேண்டப்படுகின்றது. எனவே 10 வருட சேவைக்கு முன்னர் ஓய்வு பெறுகின்ற ஊழியர்கள் அத்துடன் அவர்களது சேவைகள் ஓய்வினை விட ஐந்து வருட சேவைக்கு பின்னர் முடிவுறுத்தப்பட்டிருப்பின் 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், தொடர்ச்சியான ஒவ்வொரு வருட சேவைக்கும் நிதியாண்டின் கடைசி மாதத்திற்கு ஏற்புடைய மொத்த சம்பளத்தின் ஒரு அரை விகிதத்தில் நிறுத்தல் பணிக்கொடையினை பெறுவதற்கு உரித்துடையவர்.

முகாமைத்துவத்தின் தீர்வுகளுக்கமையவும் கடந்த கால அனுபவத்தின் படியும் அத்தகைய நிகழ்வுகளின் நிகழும் தன்மை அரிதாக காணப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று முக்கிய பொறுப்பு ஒன்று மதிப்பிடப்பட்டிருந்தாலன்றி நிதியியல் கூற்றுகளில் பணிக்கொடை ஏற்பாடு ஒன்று பேணப்படுவதில்லை. 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் அத்தகைய நிகழ்வின் ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடை ஒன்று செலுத்தப்பட்டிருக்கப்படுமிடத்து, அதே ஆண்டில் வருமானக் கூற்றில் பணிக்கொடை செலவொன்றாக இது இனங்காணப்பட்டுள்ளது.

2.7.3 தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள்

ஓய்வு பெற்ற ஊழியர்களுக்காக பங்களிப்புடனான வைத்திய உதவித் திட்டம் ஒன்றினை வங்கி கொண்டுள்ளது. இத்திட்டத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளில் சுயாதீனமாக வைக்கப்பட்டுள்ளதுடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்தின் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு முகமைத்துவம் மற்றும் ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது.

வங்கியின் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினை வங்கியானது பங்களிப்பு மருத்துவ திட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு சிபாரிசுகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி 2017ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து ரூபா 96.1 மில். கொண்ட தொகையொன்று வழங்கப்பட்டுள்ளது.

தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள் பற்றிய விபரங்கள் 335, 336 ஆம் பக்கங்களில் காணப்படும் குறிப்பு 34 (அ)3 இல் தரப்பட்டுள்ளது.

2.7.4 வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் பற்றிய விபரங்கள் 287 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 11 இல் தரப்பட்டுள்ளது.

2.8 ஏனைய பொறுப்புக்கள் →

ஏனைய பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள் 328 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 34 இல் தரப்பட்டுள்ளது.

2.9 ஏற்பாடுகள் →

முன்னைய நிகழ்வொன்றின் விளைவாக நிகழ் காலத்தில் கடப்பாடு ஒன்றை (சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான) தொகுதியானது கொண்டிருக்கையில், இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொருளாதார நலன்களுடனான மூல வளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று நிகழக்கூடியதாகவிருக்கின்ற அத்துடன் இக்கடப்பாட்டு தொகை தொடர்பில் நம்பத் தகுந்த மதிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்படக் கூடியதாகவிருக்கின்ற போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன.

அத்தகைய ஏற்பாடுகள் தொடர்பான செலவுகளும், ஏதேனும் மீளளித்தலைக் கழித்து வருமானக் கூற்றில் எடுத்தரைக்கப்படுகின்றது.

2.9.1 மோசடியான மீளப் பெறுதலுக்கான ஏற்பாடு

2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு இனங்காணப்பட்ட மோசடியான பணமீளப் பெறுதலின் மொத்த பெறுமதி ரூபா 94.7 மில். ஆகும். ரூபா 85.7 மில். கொண்ட ஏற்பாடு ஏற்கனவே கணக்கிலுள்ளது.

2.10 எதிர்பாரா பொறுப்புகளும் கடமைப் பொறுப்புகளும் →

எதிர்பாரா கடமைப் பொறுப்புகளும் பற்றிய விபரங்கள் 344, 345 ஆம் பக்கங்களில் காணப்படும் குறிப்பு 39 இல் தரப்பட்டுள்ளது.

2.11 வரிவிதிப்பு →

2.11.1 நடப்பு வரி வதிப்பு

நடப்பு வரி வதிப்பு பற்றிய விபரங்கள் 289 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளது.

2.11.2 பிற்போடப்பட்ட வரி விதிப்பு

பிற்போடப்பட்ட வரி விதிப்பு பற்றிய விபரங்கள் 289 ஆம் பக்கத்திலும் 324 ஆம் பக்கத்திலும் முறையே குறிப்பு 13 இலும் குறிப்பு 29 இலும் தரப்பட்டுள்ளன.

2.11.3 நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (பெ.சே.வ.)

நிதிச்சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, 2002இன் 14ஆம் இலக்க பெ.சே.வ. சட்டத்தின் 25(அ) பிரிவு மற்றும் அதற்கான அதனைத் தொடர்ந்த திருத்தங்களுக்கமைவாக கணிக்கப்படுகின்றது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு நிதியியல் சேவை மீதான செயற்பாட்டு இலாபத்தின் மீது 15% இல் செலுத்தப்படக் கூடியதாகும் சேர்க்கப்பட்ட அத்துடன் நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் பொருளாதார பெறுமானத் தேய்வுகளுக்கு சீராக்கம் செய்யப்படுகின்றது.

2.11.4 நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 2014இல் 10ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) சட்டத்திற்கமைவாக கணிக்கப்படுகின்றது. நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு உட்பட்டு அதே அடிப்படையில் 2% செலுத்தப்படக் கூடியதாகும்.

2.11.5 பொருளாதார சேவைக் கட்டணம்

2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் கீழ், அதன் பின்னரான திருத்தங்களுக்கேற்ப 2006 ஏப்ரல் 01 முதல் பொருளாதார சேவைக் கட்டணம் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் 2004.04.01 தொடக்கம் 2006.04.01 வரை 2004 இன் 11 ஆம் இலக்க மற்றும் 2005 இன் 11 இலக்க நிதிச் சட்டங்களின் கீழ் இது நிருவகிக்கப்பட்டது. தொடர்புடைய புரள்வின் மீது ஏற்புடைய விகிதம் 0.25% ஆகும். ஏதேனும் கோரப்படாத பொருளாதார சேவைக் கட்டணங்கள், தொடர்கின்ற ஐந்து வருடங்களில் முன் கொண்டு செல்லப்பட்டு செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்படக்கூடியது. 2017 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய, 2017.01.01 தொடக்கம் ஏற்புடைய விகிதமானது தொடர்புடைய புரள்வு மீது 0.50% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் கோரத்தக்க காலம் செயற்படத்தக்கவாறு நடைமுறை ஆண்டு உள்ளடங்கலாக 03 வருடங்களாக மட்டுப்படத்தப்பட்டது.

2004 இன் நிதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் அதற்கான திருத்தங்களுக்கும் அமைவாக 2004 ஏப்ரல் 01 தொடக்கம் செயற்படத்தக்கவாறு பொருளாதார சேவைகள் கட்டணங்கள் அறிமுகப்படத்தப்பட்டன. தற்போது, "விதிவிலக்கு புரள்வு" மீது 0.25% பொருளாதார சேவைகள் கட்டணங்கள் செலுத்தப்படத்தக்கதுடன் வருமான வரிக் கொடுப்பனவுகளில் இருந்து கழிக்கப்படக்கூடியது. கோரப்படாத பொருளாதார சேவைகள் கட்டணங்கள் ஏதும் இருப்பின், முன்கொண்டு செல்லப்பட்டு அதனைத் தொடர்கின்ற ஐந்து ஆண்டுகளில் செலுத்தத்தக்க வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்படக்கூடியது.

2.12 காசுப் பாய்ச்சல் கூற்று →

காசுப் பாய்ச்சல் கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமம் 7 (இகநி 7) இற்கமைவாக காசுப் பாய்ச்சல் தயாரித்தலின் "நேரடியற்ற முறை" இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. காசும் காசுக்கு சமமானவையும், அறியப்பட்ட பணத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடரொன்றுக்கு உட்படுத்தப்படுகின்ற குறுகிய கால, உயர் திரவத் தன்மை கொண்ட முதலீடுகளை உள்ளடக்குகின்றது. கையிலுள்ள காசு, வங்கி நிலுவைகள், அழைப்பு மற்றும் குறுகிய அறிவித்தலில் உள்ள காசு என்பவற்றை காசும் காசுக்கு சமனானவையும், உள்ளடக்குகின்றன.

2.13 ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் →

2.13.1 வைப்புக் காப்புறுதித் திட்டம்

வங்கியின் மூலதனப் போதுமை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்புடைய நியதிச் சட்டமான 0.10% இல் தகுதியானது வைப்புத்தளத்தின் மீதான காப்புறுதிக் கட்டுப்பணம் ஒன்றினை வங்கி கணக்கிடுகின்றது. பணிப்புரையினால் எடுத்துக்கூறப்பட்டவாறு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்தும் 15 நாட்கள் காலமொன்றினுள் ஏற்புடைய கட்டுப்பணத்தை வங்கி அனுப்புகின்றது.

2.13.2 பயிர் காப்புறுதி அறவீடு (CIL)

2013 இன் 12ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகளுக்கு அமைய 2013 ஏப்ரல் 01 தொடக்கம் பயிர் காப்புறுதி அறவீடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாகும். நடைமுறையில் பயிர் காப்புறுதி அறவீடானது வரிக்குப் பிந்திய இலாபத்தின் 1% ஆக கொடுப்பனவு செய்யப்படுகின்றது

2.14 அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் →

அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் 351 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 46 இல் தரப்பட்டுள்ளன.

2.15 வெளியிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு இன்னும் செயற்பாட்டில் அல்லாதவை →

எதிர்காலத்தில் செயற்பாட்டுத் திகதியொன்றினைக் கொண்டுள்ள இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பின்வரும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள், இந்நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கையில் பிரயோகிக்கப்படவில்லை. கணக்கீட்டுக் கொள்கைகள் மீது செயற்பாடொன்றினை கொண்டிருக்கும் அவ் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் நடைமுறையில் வங்கியினாலும் தொகுதியினாலும் பின்பற்றப்படுபவையும், எதிர்கால நிதியியல் கூற்றுகளில் தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்கக்கூடியனவும் ஆகும்.

2.15.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (இநிஅநி 9) – "நிதியியல் சாதனங்கள்: வகைப்படுத்தலும் அளவீடும்"

2014 ஜூலையில் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், பின்பற்றுதலுக்கான முன்கூட்டிய அனுமதியுடன் 2018 ஜனவரி 01 அல்லது அதற்கு பின்னர் வருடாந்த காலப்பகுதிகளுக்காக இகநி 39 இனை மாற்றீடு செய்கின்ற இநிஅநி 9 "நிதியியல் சாதனங்கள்" (சர்வதேச கணக்கீட்டுச் நியமங்கள் சபைக்கு இசைவாக) இனை வெளியிட்டது.

இநிஅநி 9 நிதியியல் சாதனங்கள் மீது, வங்கி, பரிசோதனைக் கட்டத்தினையும் (பூர்வாங்க தாக்க மதிப்பீட்டு பரிசோனை நடவடிக்கை) அமுலாக்க கட்டத்தினையும் (தீர்வு உருவாக்கம்) செயலாற்றியது. எவ்வாறு இநிஅநி 9 அமுல்படுத்தப்படவேண்டும் என்பது பற்றி வங்கி குறிப்பிடத்தக்க பகுப்பாய்வொன்றினை பொறுப்பேற்றுள்ளதுடன் உத்தேச கணக்கீட்டு கொள்கைத் தீர்மானங்களை எடுத்துள்ளது.

இநிஅநி இன் 9 முக்கிய நோக்குகள் பின்வருமாறு

2.15.1.1 வகைப்படுத்தலும் அளவீடும்

வகைப்படுத்தல் மற்றும் அளவீடு என்று நோக்குகையில், புதிய நியமமானது பங்குமூலதன சாதனங்கள் மற்றும் பெறுதிகள் தவிர, அனைத்து நிதிச் சொத்துகளும், சொத்துகள் மற்றும் சாதனங்களின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல் பண்புகள் ஆகியவற்றை முகாமைசெய்வதற்காக குழுமத்தின் இணைந்த வர்த்தக மாதிரியினை அடிப்படையாக கொண்டு மதிப்பிடப்படவேண்டியதனை தேவைப்படுத்துகின்றது.

வியாபார மாதிரி மதிப்பீடு

வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்கு நிதியியல் சொத்துகளை அது எவ்வாறு முகாமை செய்கின்றது என்பதனை சிறப்பாக பிரதிபலிக்கின்ற மட்டத்தில் அதன் வியாபார மாதிரியினை வங்கி நிர்ணயிக்கின்றது. வங்கியின் வியாபார மாதிரியானது சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை ஆனால் அது ஒன்று திரண்ட சொத்துப்பட்டியலின் உயர்மட்டத்தில் மதிப்பிடப்படுவதுடன் பினவருவன போன்ற அவதானிக்கத்தக்க காரணிகளின் அடிப்படையிலமைந்தது.

- வியாபார மாதிரியினதும் அவ் வியாபார மாதிரியினுள் வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகளினதும் செயலாற்றுகை எவ்வாறு மதிப்பிடப்பட்டு குழுமத்தின் முக்கிய ஆளணிக்கு அறிக்கையிடப்படுகின்றது.
- வியாபார மாதிரியின் (அத்துடன் அவ் வியாபார மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்து) செலாற்றுகையினைப் பாதிக்கின்ற இடர்கள் குறிப்பாக, அவ் இடர்கள் முகாமை செய்யப்படும் வழிமுறை.
- வியாபாரத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன. (உதாரணமாக, ஊதியமானது முகாமை செய்யப்படுகின்ற சொத்துகளின் நியாயப்பெறுமதியின் அடிப்படையிலானதா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்த காசுப்பாய்ச்சலின் மீதா என்பது)
- விற்பனைகள் நிகழும் தன்மை, அளவு மற்றும் கால அளவு எனபவும் வங்கியின் மதிப்பீட்டின் முக்கிய அம்சமாக காணப்படுகின்றன.

வியாபார மாதிரி மதிப்பீடானது "மோசமான நிலை" அல்லது "அழுத்தமான நிலை" சூழ்நிலைகளை என்பவற்றைக் கருத்தில்கொள்ளாது நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாக கொண்டவை. ஆரம்ப இனங்காணலின் பின்னர் காசுப்பாய்ச்சல் வங்கியின் அடிப்படையான எதிர்பார்ப்பிலிருந்து வேறுபட்ட வழியில் தேறியிருக்குமாயின், அவ் வியாபார மாதிரியில் வைக்கப்பட்ட எஞ்சிய நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலை வங்கி மாற்றுவதில்லை ஆனால் புதிதாக தோற்றம்பெற்ற அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளை மதிப்பிடுகின்ற போது அத்தகைய தகவல்களை கூட்டிணைக்கும்.

ஒப்பந்த காசுப்பாய்ச்சல் பண்பு பரிசோதனை

வியாபார மாதிரிவகைப்படுத்தல் செயன்முறையின் இரண்டாம் பரிசோதனையாக, நிதியியல் சொத்துகள் பிரத்தியேகமாக முதன்மை மற்றும் வட்டி நிறைவு செய்கினறனவா என்பதனை இனங்காண்பதற்கு நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இப்பரிசோதனை நோக்கத்திற்காக "முதன்மை" என்பது ஆரம்ப இனங்காணலில் நிதியியல் சொத்தின் நியாயப்பெறுமதியாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் நிதியியல் சொத்தின் ஆயட்காலத்தின் போது மாற்றமடையலாம் (உதாரணமாக, முதன்மை மீள்கொடுப்பனவுகள் அல்லது கட்டுப்பண மிகை/கழிவு பெறுதிக்குறைப்பு காணப்படுமெனில்).

கடன் வழங்குதல் ஒழுங்கொன்றினுள் மிக முக்கிய வட்டிக்கூறுகள், சாதாரணமாக பணப்பெறுமதி மற்றும் கடன் இடருக்கான ஈடாகும். பிரத்தியேகமாக முதன்மை மற்றும் வட்டி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக வங்கி தீர்புகளைப் பிரயோகிப்பதுடன் நிதியியல் சொத்து வகைப்படுத்தப்பட்ட நாணயம் மற்றும் வட்டி வீதம் நிர்ணயிக்கப்பட்ட காலம் போன்ற தொடர்புடைய காரணிகளை கருத்திற்கொள்கின்றது.

அடிப்படை கடன்வழங்குதல் ஒழுங்கொன்றுடன் தொடர்பற்றதான ஒப்பந்த காசுப்பாய்ச்சலில் இடருக்கான அல்லது தளம்பலுக்கான தோற்றப்பாட்டினை மிகச் சிறியளவிற்கு மேல் அறிமுகப்படுத்துகின்ற ஒப்பந்த வெளிப்பாடுகளுக்கான வேறுபாடு நிலுவையாகவுள்ள தொகை மீதான பிரத்தியேகமாக முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளான ஒப்பந்த காசுப்பாய்ச்சலுக்கு அதிகரிப்பை ஏற்படுத்துவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் நிதியியல் சொத்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப்பெறுமதியில் அளவிடப்பட வேண்டும்.

பூர்வாங்க தாக்க மதிப்பீட்டு நடைமுறைக்கமைவாக, நிதியியல் சொத்து வகைப்படுத்தல் தொடர்பில் வங்கியின் நிதியியல் கூற்றுகளுக்கு குறிப்பிடத்தக்க தாக்கமெதுவும் காணப்படவில்லை.

2.15.1.2 நிதியியல் சொத்துகளின் மதிப்பு குறைப்பு

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு பற்றிய பொதுநோக்கு

இநிஅறி 9, இகநி 39 முன்னோக்கிய எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அணுகுமுறையுடன் சேர்த்து நிதியியல் சாதன இனங்காணல் மற்றும் அளவீட்டினது ஏற்பட்ட இழப்பு அணுகுமுறையினை மாற்றீடு செய்வதன் மூலம் வங்கியின் மதிப்புக் குறைப்பு ஏற்பாட்டினை அடிப்படையாக மாற்றுகின்றது.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பானது, தோற்றம் பெற்றதிலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லாதவிடத்து, அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பு ஒதுக்கீடு, 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பாகவிருக்கும், சொத்தின் ஆயுட்காலத்தின் மீது (ஆயுட்காலம் எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பு) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அடிப்படையாக கொண்டிருக்கும்.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு என்பது ஆயுட்காலம் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகும். இது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாத காலங்களினுள் சாத்தியமானதான நிதியியல் சாதனமொன்றின் தவணை தவறுதல் நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. நிதியியல் சாதனமொன்றின் கடன் இடரானது ஆரம்ப இனங்காணலில் இருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதா என்பதனை ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிதியிலும் கணிப்பீடொன்றினை செயலாற்றுவதற்கு வங்கி கொள்கையொன்றினை நிறுவியுள்ளது. அத்தகைய செயன்முறையொன்றின் அடிப்படையில் வங்கி கடன்களை கீழே விவரிக்கப்பட்டவாறு படிமுறை 1, படிமுறை 2, படிமுறை 3 ஆக வகைப்படுத்தியுள்ளது.

படிமுறை 1 கடன்கள் முதலாவதாக இனங்காணப்படுகின்றபோது, வங்கி 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அடிப்படையில் ஒதுக்கீடொன்றினை இனங்காண்கின்றது. படிமுறை 1 கடன்கள் கடன் இடர் அதிகரித்துள்ள வசதிகளையும் படிமுறை 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் உள்ளடக்குகின்றது. படிமுறை 1 இன் மதிப்பீடு கூட்டாக செயலாற்றப்படும்.

படிமுறை 2 கடனொன்று தோற்றம்பெற்றது முதல் கொடுகடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காண்பித்துள்ளபோது, சொத்தின் ஆயுளின் மீது தோன்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவு செய்கின்றது. படிமுறை 2 கடன்களும் கொடுகடன் இடர் அதிகரித்துள்ள வசதிகளையும் படிமுறை 2 இலிருந்த வகைப்படுத்தப்பட்ட கடனையும் உள்ளடக்குகின்றது. படிமுறை 2 பற்றிய கணிப்பீடு கூட்டாக செயலாற்றப்படும்.

படிமுறை 3 கொடுகடன் மதிப்புக் குறைக்கப்படுவதற்கான/ஏற்பட்ட நட்டங்கள் பற்றி பொருண்மையான சான்றினை உள்ளடக்குவதாக கருதப்படுகின்ற கடன், சொத்தின் ஆயுளின் மீது தோன்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடொன்றினை பதிவு செய்கின்றது. படிமுறை 3 பற்றிய கணிப்பீடு தனியாகவும் கூட்டாகவும் செயலாற்றப்படும்.

கொடுகடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு

சாதனமொன்று அல்லது சாதனங்களின் சொத்துப்பட்டியலொன்று 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அல்லது சொத்தின் ஆயுளின் மீது தோன்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்பட்டுள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பிற்கு உட்படுகின்ற அனைத்து சொத்துகளையும் வங்கி தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது, வங்கி, ஆரம்ப அடையாளப்படுத்தல் முதல் கொடுகடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுள்ளதா என்பதனை கணிப்பிடுகின்றது. பின்வரும் மூலப்பிரமாணங்களில் ஏதேனுமொன்று நிறைவு செய்யப்படுகின்ற போது வெளிப்பாடொன்று கணிசமாக அதிகரித்துள்ளதாக வங்கி கருதுகின்றது:

- 30 நாட்கள் கடந்தகால நிலுவையினை விஞ்சுகின்ற வசதிகள்
- மீள் – கட்டமைக்கப்பட்ட வசதிகள்
- கண்காணிப்பு பட்டியலுக்கு வாடிக்கையாளரொருவரை/வசதியினை நகர்த்துதல் போன்ற சொத்தொன்றுக்கான கொடுகடன் இடரில் குறிப்பிடத்க்க அதிகரிப்பொன்றினை உந்துகின்ற இரண்டாம் நிலை பண்புசார் குறிகாட்டிகள்.

தனிப்பட்ட ரீதியான குறிப்பிடத்தக்க மதிப்பீடும் தனிப்பட்ட ரீதியாக மதிப்பு இழக்காதவையும்

தனிப்பட்டரீதியான குறிப்பிடத்தக்க ஆனால் தனிப்பட்டரீதியான மதிப்புக் இழக்காத கடன்கள், தொடக்கம் முதல் குறிப்பிடத்தக்க கொடுகடன் சீர்கேடொன்றுள்ளதா என்ற மூலப்பிரமாணத்தை அடிப்படையாக கொண்டு படிமுறை 1 அல்லது படிமுறை 2 ஏதேனுமொன்றின் கீழ் மதிப்பு இழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்படும்.

வங்கியானது குறிப்பிடத்தக்க கொடுகடன் சீர்கேடொன்றினை வெளிக்கொண்டுவருகின்ற அதேவேளை பின்வரும் மூலப்பிரமாணங்களை கருத்திற்கொள்ளும்.

- சாதனமானது புதிதாக உருவாக்கப்பட்டிருப்பின், குறிப்பிடத்தக்களவு வேறுபாடு இருக்ககூடிய ஏற்கனவே காணப்படுகின்ற நிதியியல் சாதனமொன்றின் வீதங்களில் அல்லது நியதிகளில் வேறு மாற்றங்கள்.
- குறித்த நிதியியல் சாதனமொன்றுக்கான அல்லது அதே போன்ற நிதியியல் சாதனமொன்றுக்கான கொடுகடன் இடரின் வெளிவாரி சந்தைக் குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.
- கடன்பெறுநரொருவரின் படுகடன்/பங்குமூலதன சாதனம் விலையில் மாற்றங்கள் போன்ற கடன்பெறுநருடன் தொடர்புட்ட ஏனைய தகவல்கள்.
- கடன்பெறுநரொருவருக்கான உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட உள்ளக கடன் தரப்படுத்தல் தரமிறக்கம் அல்லது கொடுகடன் இடரை உள்ளகரீதியாக மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் நடத்தைசார் புள்ளியில் குறைவு.
- கடன்பெறுநரின் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான அவரின் இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வியாபார, நிதியியல், அல்லது பொருளாதார நிபந்தனைகளில் தற்போது காணப்படுகின்ற அல்லது ஏதிர்வுகூறப்படுகின்ற பாதகமான மாற்றங்கள்.
- உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட வருவாயில் வீழ்ச்சி, தொழிற்பாட்டு இடரில் அதிகரிப்பு, பணியாற்று மூலதனப் பற்றாக்குறை, சொத்து தரத்தில் குறைவு, நிறுவனத்தின் படுகடன் விகிதாசாரத்தில் அதிகரிப்பு, திரவத் தன்மை முகாமைத்துவப் பிரச்சினைகள், போன்றன தொடர்பில் கடன்பெறுநரின் தொழிற்பாட்டுப் பெறுபேறுகளில் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க மாற்றம்.
- அதே கடன்பெறுநரின் வேறு நிதியியல் சாதனங்கள் மீதான கொடுகடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.
- கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான கடன்பெறுநரின் இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றில் விளைவை ஏற்படுத்துகின்ற கடன்பெறுநரின் ஒழுங்குமுறைப்படுத்தல், பொருளாதார அல்லது தொழில்நுட்பவியல் சுற்றாடலில் உண்மையான அல்லது எதிர்வுகூறப்படுகின்ற பாதகமான மாற்றமொன்று.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கணிப்பீடு

எதிர்பார்க்கப்பட்ட காசுபற்றாக்குறைகளை அளவிடுவதற்கு, விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டத்தட்ட சமமாக்கலொன்றில் கழிவுசெய்யப்பட்ட 3 நிகழக்கூடிய சூழ்நிலைகளை அடிப்படையாக கொண்டு வங்கி எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பினை கணிக்கின்றது. காசு பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்திற்கு அமைவாக நிறுவனமொன்றிற்கு நிலுவையாகவுள்ள காசுப்பாய்ச்சலுக்கும் பெறுவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்ற காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டு பொறிமுறைகள், கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

தவணை தவறுதல் நிகழும்தன்மை: தவணை தவறுதல் நிகழும்தன்மை என்பது வழங்கப்பட்ட கால வீச்சொன்றின் மீது தவணை தவறுதல் நிகழக்கூடிய மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் இனங்காணப்படவில்லையாயின் அத்துடன் இன்னும் சொத்துப்பட்டியலில் உள்ளதாயின், மதிப்பிடப்பட்ட காலமொன்றிற்காக குறித்த நேரமொன்றில் மாத்திரம் தவணைதவறுதல் நிகழலாம்.

தவணை தவறுதல் தோற்றப்பாடு: தவணை தவறுதல் வெளிப்பாடு என்பது ஒப்பந்தத்தினால் அல்லது வேறுவகையில் அட்டவணைப்படுத்தப்பட்ட, கடப்பாடுடைய வசதிகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குறைப்-பாகவுள்ள முதன்மை தொகை மற்றும் வட்டி மீள் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் வெளிப்பாட்டில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கருத்திற் கொண்டு எதிர்கால தவணை தவறுதல் திகதியொன்றில் உள்ள தோற்றப்பாட்டின் மதிப்பீடாகும்.

இழப்பு வழங்கப்படும் தவணை தவறுதல்: இழப்பு வழங்கப்படும் தவணை தவறுதல் என்பது தரப்பட்ட நேரமொன்றில் தவணை தவறுதலொன்று நிகழுமிடத்து அதிலிருந்தது தோன்றுகின்ற இழப்பின் மதிப்பீடொன்றாகும். ஒப்பந்த காசுப்பாய்ச்சல் நிலுவை மற்றும் ஏதேனும் பிணைய உறுதி தேறுதல் உள்ளடங்கலாக கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றவை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை இது அடிப்படையாக கொண்டது. இது பொதுவாக தவணை தவறுதல் தோற்றப்பாட்டின் வீதமாக வெளிப்படுத்தப்படும்.

முன்னோக்கி எதிர்பார்க்கும் தகவல்கள்

வங்கியின் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில், அது பினவருவன போன்ற பொருளாதார உள்ளீடுகளாக பரந்த வீச்சு அளவுசார்/பண்புசார் முன்னோக்கி எதிர்பார்க்கின்ற தகவல்களில் தங்கியுள்ளது.

அளவுசாரந்தவை	பண்புசார்ந்தவை
மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி	அரசாங்க கொள்கைகள்
பணவீக்கம்	தொழிற்துறை வியாபார நிலைமைகள்
தொழிலின்மை	ஒழுங்குமுறைப்படுத்தல் தாக்கம்
வட்டி வீதங்கள்	
செலாவணி மாற்று வீதங்கள்	

2.15.2 இலங்கை நிதிய கணக்கீட்டு நியமம் (இநிஅநி 15) – "வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்து வருவாய்"

எவ்வளவு வருவாய் எப்போது இனங்காணப்படுகின்றது என்பதனை நிர்ணயிப்பதற்காக இநிஅநி 15 அனைத்தும் அடங்கிய சட்டகம் ஒன்றினை நிறுவுகின்றது. இலங்கை கணக்கீட்டு நியமம் (இகநி – 18) – "வருவாய்", இலங்கை கணக்கீட்டு நியமம் (இகநி – 11) – "நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் IFRIC – 13 " வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித்திட்டங்கள்" என்பன உள்ளடங்கலாக தற்போது காணப்படும் வருவாய் இனங்காணல் வழிகாட்டலை மாற்றீடு செய்கின்றது. இந்த நியமமானது 2018 ஜனவரி 01 இல் ஆரம்பிக்கின்ற அல்லது அதற்கு பின்னரான வருடாந்த காலங்களுக்கு செயற்பாடுடையதாகும்.

வங்கியும் தொகுதியும் இந்நியமங்கள் செயற்பாட்டிற்கு வரும்போது அவற்றை பின்பற்றும். விரிவான மீளாய்வு நிறைவு முடிவுறாதுள்ள நிலையில் இந்நிதியியல் கூற்றுகள் வெளியிடப்படும் திகதியில் உள்ளவாறு நிதியியல் தாக்கத்தினை நியாயபூர்வமாக மதிப்பிட முடியாது.

2.15.3 இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅநி – 16) – "குத்தகைகள்"

இந்நியமமானது குத்தகைகளை இனங்காணுதல், அளவிடுதல், எடுத்துரைத்தல், மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுக்கான கோட்பாடுகளை விதந்துரைக்கின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை நம்பகமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்ற விதமொன்றில் குத்தகைதாரரும் குத்தகை பெறுநரும் உரிய தகவல்களை வழங்குகின்றனர் என்பதனை உறுதிசெய்வது இதன் குறிக்கோளாகும். குழுமம் ஒன்றின் நிதியியல் நிலை, நிதியியல் செயலாற்றுகை. மற்றும் காசுப்பாய்ச்சல் மீது அக்குத்தகைகள் கொண்டுள்ள தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு நிதியியல் கூற்றுகளின் பயன்பாட்டாளர்களுக்கான அடிப்படையொன்றினை அத் தகவல்கள் வழங்குகின்றன. பின்வரும் நியமங்கள் மற்றும் பொருள் கோடல்களை இந் நியமம் மாற்றீடு செய்கின்றது

(அ) இலங்கை கண்கீட்டு நியமம் 17 குத்தகைகள்

(ஆ) IFRIC 4 – குத்தகையொன்றினை உடன்படிக்கையொன்று உள்ளடக்குகின்றதா என்பதனை நிர்ணயித்தல்

(இ) SIC 15 – தொழிற்படுகின்ற குத்தகைகள் – ஊக்குவிப்புகள்: மற்றும்

(ஈ) SIC 27 – குத்தகையொன்றின் சட்ட வடிவத்தினை ஈடுபடுத்துகின்ற கொடுக்கல் வாங்கலின் குறிப்பிடத்தக்க மூலதனத்தை மதிப்பிடுதல்

2019 ஜனவரி 01 இன் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதிகளுக்காக இந்நியமத்தினை நிறுவனமொன்று பிரயோகித்தல் வேண்டும். வங்கியும் தொகுதியும் இந்நியமங்கள் செயற்பாட்டிற்கு வரும்போது அவற்றை பின்பற்றும். விரிவான மீளாய்வு நிறைவு முடிவுறாதுள்ள நிலையில் இந்நிதியியல் கூற்றுகள் வெளியிடப்படும் திகதியில் உள்ளவாறு நிதியியல் தாக்கத்தினை நியாயபூர்வமாக மதிப்பிடப்பட முடியாது.

3. மொத்த வருமானம்

கணக்கீட்டு கொள்கை

தொகுதிக்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கும் என்ற நிகழ்வொன்று காணப்படுகின்ற ரீதியிலும் அத்துடன் வருவாய் நம்பத் தகுந்தவாறு அளவிடக்கூடியது என்ற ரீதியிலும் மொத்த வருவாய் இனங்காணப்படுகின்றது. வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய குறித்த இனங்காணுதலுக்கான மூலப்பிரமாணங்கள் தொடர்புடைய வருமானக் குறிப்புகளின் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளன.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
வட்டி வருமானம்	**103,399,962**	86,390,039	**104,245,541**	87,142,784
தரகு மற்றும் கட்டணம் வருமானம்	**782,776**	650,164	**785,077**	651,160
வர்த்தகத்தலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	**1,206,408**	(39,270)	**1,520,740**	(136,897)
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	**707,491**	40,923	**707,491**	40,923
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய)	**1,720,272**	357,288	**796,897**	340,640
மொத்த வருமானம்	**107,816,909**	87,399,144	**108,055,746**	88,038,610

4. தேறிய வட்டி வருமானம்

கணக்கீட்டு கொள்கை

வட்டி வருமானத்தினையும் வட்டி செலவுகளையும் இனங்காணல்

பெறுமதிக்குறைப்பு செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்கள், விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்பட்டுத்தப்பட்ட அளவிடப்பட்ட வட்டியுடைய நிதியயில் சாதனங்கள், வட்டியுடைய நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம், ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள், வட்டி வருமானம் அல்லது செலவு ஆகிய அனைத்துக்கும் பொருத்தமானவிடத்து, நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு கொண்டு செல்கின்ற தேறிய தொகைக்கு நிதியியல் சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் அல்லது குறுகிய காலம் ஒன்றினூடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுகைகளை சரியாக கழிப்பனவு செய்கின்ற விகிதமாக காணப்படுகின்ற விளைவு வட்டி வீதத்தை பயன்படுத்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. கணிப்பீடானது அனைத்து நிதியியல் சாதன ஒப்பந்த நியதிகளையும் (உதாரணமாக கொடுப்பனவுத் தெரிவுகள்) கருத்திற் கொள்வதுடன் சாதனத்திற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏதேனும் கட்டணங்கள் அல்லது அதிகரிக்கின்ற செலவுகளை உள்ளடக்குவதுடன் அத்துடன் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படும் ஆயினும் எதிர்கால கொடுகடன் இழப்புகளை உள்ளடக்காது.

தொகுதி, அதன் கொடுப்பனவு அல்லது அதன் பெறுகை மதிப்பீடுகளை மீளாய்வு செய்யுமாயின் நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு கொண்டுசெல்கின்ற தொகை சீர் செய்யப்படுகின்றது. அடிப்படை விளைவு வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சீர் செய்யப்பட்ட கொண்டு செல்லும் தொகை கணிக்கப்படுவதுடன் கொண்டு செல்லும் தொகையில் காணப்படும் மாற்றம் நிதியியல் சொத்துக்கான வட்டி வருமானமாகவும் நிதியியல் பொறுப்புகளுக்கான வட்டிச் செலவாகவும் பதிவு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய காசுப் பெறுகைகளின் திகரிக்கப்பட்ட மீளஅறவிடும் தன்மையின் விளைவொன்றாக எதிர்கால காசுப் பெறுகைகளை அதனைத் தொடர்ந்து வங்கிஅதன் மதிப்பீடுகளை அதிகரிக்கின்ற மீள் வகைப்படுத்தப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்து ஒன்றிற்காக, அவ் அதிகரிப்பின் விளைவு, மதிப்பீடு மாற்றத் திகதியிலிருந்து விளைவு வட்டி வீத வீதத்திற்கான சீராக்கல் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளன.

நிதியியல் சொத்து ஒன்றின் அல்லது அதனையொத்த நிதியியல் சொத்துகள் தொகுதி ஒன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதியானது மதிப்புக் குறைத்தல் இழப்பொன்றின் காரணமாக குறைக்கப்பட்டால், பெறுமதி குறைப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல் கழிவிற்கு பயன்படுத்தப்பட்ட வட்டி வருமானது வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி தொடர்ந்தும் இனங்காணப்படும்.

4. தேறிய வட்டி வருமானம் (தொடர்ச்சி)

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
4. (அ) வட்டி வருமானம்				
காசும் காசுக்கு சமமானவையும்	**51,967**	37,992	**51,967**	37,992
வங்கிகளிலுள்ள இருப்புகள்	**710,462**	597,916	**710,462**	597,916
பெறுதி நிதியியல் சாதனங்கள்	**–**	–	**–**	–
வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய நிதியியல் சொத்துகள்	**1,337,694**	1,370,010	**1,854,041**	1,816,446
வங்கிக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	**3,178,875**	2,751,558	**3,180,780**	2,756,295
ஏனைய வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	**40,580,453**	29,937,593	**40,411,921**	29,916,980
விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நிதியியல் முதலீடுகள்	**568,219**	36,612	**725,318**	195,556
நிதியியல் முதலீடுகள் முதிர்ச்சியடையும் வரை வைக்கப்பட்டுள்ளவை	**56,972,292**	51,658,359	**57,311,051**	51,821,600
மொத்த வட்டி வருமானம்	**103,399,962**	86,390,039	**104,245,541**	87,142,784
4. (ஆ) வட்டிச் செலவுகள்				
வங்கிக்கான வருமதிகள்	**–**	–	**267,689**	44,951
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	**60,161,942**	44,365,840	**60,161,942**	44,365,840
ஏனைய கடன்பாடுகள்	**17,502,883**	16,550,970	**17,777,965**	17,036,696
சார்புநிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள்	**780,000**	6,411	**780,000**	6,411
மொத்த வட்டிச் செலவுகள்	**78,444,825**	60,923,221	**78,987,596**	61,453,898
தேறிய வட்டி வருமானம்	**24,955,137**	25,466,818	**25,257,945**	25,688,886
4. (இ) இலங்கை அரசாங்க பிணையங்களில் இருந்தான தேறிய வட்டி வருமானம்				
வட்டி வருமானம்	**58,878,205**	53,064,981	**59,890,410**	53,833,602
(கழிக்குக): வட்டி செலவினங்கள்	**–**	–	**–**	–
தேறிய வட்டி வருமானம்	**58,878,205**	53,064,981	**59,890,410**	53,833,602

4. தேறிய வட்டி வருமானம் (தொடர்ச்சி)

4. (ஈ) அரச பிணையங்கள் மீதான இரண்டாம் தர சந்தை கொடுக்கல் வாங்கல்களில் பிடித்து வைத்தல் வரிக்கான உத்தேச வரிவரவு

2006 இன் 10ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டத்தின் 137ஆம் பிரிவு மற்றும் அதற்கான திருத்தத்திற்கமைய தொகுதியானது அரசாங்க பிணையங்களிலான சந்தை கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானத்தின் 1/9 பங்கிற்கு சமனான உத்தேச வரிவரவிற்று உரித்துடையதாகும்.

இதற்கிணங்க தொகுதியினால் அரசாங்க பிணையங்களிலான இரண்டாம் தர சந்தைகளிலிருந்து உழைத்த தேறிய வருமானம் நிதியியல் கூற்றுகளில் மொத்தமாக தரப்பட்டுள்ளதுடன், இதன் விளைவாக வங்கிக்கான உத்தேச வரி வரவு ரூபா 4,787 மில். (2016: ரூபா 4,447 மில்.) தொகுதிக்கான ரூபா 4,815 மில் (2016: ரூபா. 4,467 மில்) ஆகக் காணப்பட்டது.

4. (உ) உத்தேச வரி வருமதிகள்

உத்தேச வரி வருமதிகள் மீளப்பெறப்பட வேண்டிய தொகையை கழித்த பின் நிதியியல் கூற்றுகளின் 30ஆவது குறிப்பில் தரப்பட்டுள்ளன.

5. தேறிய கட்டணமும் தரகு வருமானமும்

கணக்கீட்டுக் கொள்கை

வாடிக்கையாளர்களுக்கு தொகுதி வழங்குகின்ற பல்வேறு வகையான சேவைகளிலிருந்து அது கட்டணம் மற்றும் தரகு வருமானங்களை ஈட்டுகின்றது. இவை பின்வரும் இரண்டு வகைகளாக பிரிக்கப்படக் கூடியவை

(அ) குறித்த காலம் ஒன்றிற்காக வழங்கப்படும் சேவைக்கு வழங்கப்படுகின்ற சேவையிலிருந்து ஈட்டுகின்ற கட்டணம் மற்றும் தரகு வருமானம்

காலப்பகுதியொன்றிற்கு சேவை வழங்குதலுக்காக ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு அக்காலத்திற்காக ஒன்று திரட்டப்பட்டுள்ளன.

(ஆ) கொடுக்கல் வாங்கல் சேவைகள் வழங்குவதிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்.

மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான கொடுக்கல் வாங்கல் பேரம்பேசுகையில் மீள் பேரம்பேசுதலிலிருந்து அல்லது பங்கேற்றலிலிருந்து தோன்றுகின்ற கட்டணம் மற்றும் தரகு வருமானம் அடிப்படை கொடுக்கல் வாங்கல் நிறைவு பெறுதலின் மீது இனங்காணப்பட்டுள்ளன. ஒரு சில செயலாற்றுகையுடன் இணைந்துள்ள கட்டணங்கள் அல்லது கட்டணக் கூறுகள், தொடர்புடைய சேவைகள் செயலாற்றப்படுகின்றமைக்கமைய இனங்காணப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல்களுடனும் சேவைக்கட்டணங்களுடனும் தொடர்புடைய கட்டணங்களும் தரகுச் செலவுகளும் சேவைகள் கிடைக்கப்பெறுகின்றவாறு செலவிடப்படுகின்றன. கட்டணமும் தரகுச்செலவுகளும் ஒன்று திரளுகின்ற அடிப்படையில் இனங்காணப்படுகின்றன.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**782,776**	650,164	**785,077**	651,160
கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள்	**(109,082)**	(137,432)	**(113,037)**	(140,122)
தேறிய கட்டணமும் தரகு வருமானமும்	**673,694**	512,732	**672,040**	511,038
ஈட்டிக் கொள்ளப்பட்ட வழிகள்				
கடன்கள்	**675,382**	547,761	**675,382**	547,760
அட்டைகள்	**(43,413)**	(76,986)	**(43,413)**	(76,986)
ஏனையவை	**41,726**	41,957	**40,071**	40,264
தேறிய கட்டணமும் தரகு வருமானமும்	**673,694**	512,732	**672,040**	511,038

6. வர்த்தகப்படுத்தலில் இருந்து இலாபம்/(நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

தேறிய வர்த்தக வருமானமானது வெளிநாட்டு நாணய மாற்றிலிருந்தான வட்டி வருமானம்/வருமானம் தவிர நியாயப் பெறுமதி மாற்றத்திலிருந்து அனைத்து இலாபம் அல்லது நட்டங்கள் மற்றும் வர்த்தகத்திற்காக "பிடித்து வைக்கப்பட்ட" நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளுக்கான தொடர்புபட்ட பங்கிலாபம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

கொடுப்பனவு ஒன்றிற்கான தொகுதியின் உரிமை நிறுவப்படுகின்றபோது பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வெளிநாட்டு நாணயமாற்று	**200,639**	296,380	**200,639**	296,380
வட்டி வீதம் – நடப்புச் சந்தைக்குச் சந்தைபெறுமதி இலாபம்/(நட்டம்) மற்றும் ஏனையவை	**973,468**	(72,705)	**1,287,800**	(170,332)
பங்கு மூலதனங்கள் – நடப்புச் சந்தைக்குச் சந்தைபெறுமதி இலாபம்/(நட்டம்) மற்றும் ஏனையவை	**334,601**	(314,945)	**334,601**	(314,945)
ஏனையவை – முன்நோக்கிய பரஸ்பரமாற்றல்/ஒப்பந்தம்	**(302,300)**	52,000	**(302,300)**	52,000
மொத்தம்	**1,206,408**	(39,270)	**1,520,740**	(136,897)

7. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கலிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)

அறிக்கையிடும் திகிதியிலுள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஏதேனும் நிதியியல் சொத்துகளை வங்கி/தொகுதி நியமித்திருக்கவில்லை.

8. நிதியியல் முதலீடுகளிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

நிதியியல் முதலீடுகளிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்) ஆனது விற்பனைக்காக கிடைக்கும் முதலீடுகள் மற்றும் கடன்களும் வருமதிகளும் என்பவற்றுடன் தொடர்புடைய நட்டங்களைக் கழித்து இலாபத்தினை உள்ளடக்குவதுடன் அனைத்து தேறிய மற்றும் தேறாத நியாயப் பெறுமதி மாற்றங்களையும் உள்ளடக்குகின்றது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
விற்பனைக்கு கிடைக்கத்தக்கதான சொத்துகள்				
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி முறிகள், உண்டியல்கள்	**707,491**	40,923	**707,491**	40,923
மொத்தம்	**707,491**	40,923	**707,491**	40,923

9. ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறியது)

கணக்கீட்டுக் கொள்கை

i. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கையுதிரத்தல் மீதான இலாபம்/(நட்டம்)

கையுதிர்கின்ற நேரத்தின்போது சொத்து கொண்டுள்ள தொகை மற்றும் கையுதிர்ப்பு விற்று வருவாய்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டின் மீது தேறிய கையுதிர்ப்புச் செலவுகளை கழித்து ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கையுதிர்ப்பு மீதான இலாபம் அல்லது நட்டம் நிர்ணயிக்கப்படுகின்றது. உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் கைமாறுகளும் வாக்குபவருக்கு மாற்றப்படுகின்ற ஆண்டில் இது ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளது

ii. வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது/(நட்டம்)

ஒவ்வொரு அறிக்கையிலும் திகதியிலும் வெளிநாட்டு நாணயமாற்று நிலைமைகள் மீள்மதிப்பிடப்படுகின்றன. நாணயமாற்று வீதங்களில் காணப்படுகின்ற மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபங்களும் நட்டங்களும் அவை நிகழுகின்ற காலத்தில் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

iii. பங்கிலாப வருமானம்

கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக தொகுதிக்கு உரிமையொன்று தாபிக்கப்படும்போது விற்பனைக்காக கிடைக்கத்தக்க முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட பங்கிலாபம் இனங்காணப்படுகின்றது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017** **ரூ.'000**	2016 ரூ.'000	**2017** **ரூ.'000**	2016 ரூ.'000
ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் விற்பனை மீதான இலாபம்	**2,826**	70,016	**2,824**	70,014
வெளிநாட்டு நாணயமாற்றின் மீள்மதிப்பீடு மீதான இலாபம்/(நட்டம்)	**111,687**	16,726	**111,687**	16,726
பங்கு மூலதனங்கள் – பங்கிலாப வருமானம்	**163,707**	137,747	**163,743**	137,774
துணை நிறுவனங்களில் இருந்து பங்கிலாப வருமானம்	**922,350**	14,850	**–**	–
ஏனையவைகள்	**519,702**	117,950	**518,643**	116,126
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறியது)	**1,720,272**	357,288	**796,897**	340,640

10. கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதிக் குறைப்பு

கணக்கீட்டுக் கொள்கை

"நிதியியல் சாதனங்கள்: இனங்காணலும் அளவீடும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் – (இ.க.நி) 39 இற்கமைவாக மதிப்பிடப்படும் வங்கிக்கும் ஏனைய வாடிக்கையாளர்களுக்குமான கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான பெறுமதிக் குறைத்தல் ஏற்பாடுகளிலுள்ள மாற்றங்களை தொகுதி இனங்காண்கின்றது. நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு 23(ஈ) இல் பெறுமதி குறைத்தலுக்காக பின்பற்றப்பட்ட முறையியல் பற்றி விளக்கப்பட்டுள்ளது. வங்கியானது விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் மற்றும் நிதி முதலீடுகள் – கடன்கள் அத்துடன் வருமதிகள் என்பனவற்றிற்கு அம்முதலீடுகள் கொண்டுள்ள பெறுமதியில் நிரந்தரமான குறைதல் காணப்படுகின்றபோது ஏற்பாடுகளை/(மீள் பதிதலை) மேற்கொள்கின்றது. மேலும் நிதி அல்லாத சொத்து ஒன்று அச்சொத்திலிருந்து மதிப்பிடப்பட்ட அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற கொண்டுசெல்லும் தொகை ஒன்று உள்ளபோது வங்கி/தொகுதி மதிப்புக் குறைப்பு நட்டம் ஒன்றினை இனங்காண்கின்றது.

10. கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதிக் குறைப்பு (தொடர்ச்சி)

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
கடன்களும் வருமதிகளும் ஏனைய வாடிக்கையள்களுக்கானவை [குறிப்பு 23 (ஈ) ஐப்பார்க்க]	**693,233**	(99,693)	**693,233**	(99,693)
மொத்தம்	**693,233**	(99,693)	**693,233**	(99,693)

11. ஆளணிச் செலவுகள்

கணக்கீட்டுக் கொள்கை

i. வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியானது நிதியியல் சொத்தின் அடிப்படை விளைவு வட்டி வீதத்தில் கழிவு செய்யப்பட்டுள்ளது. கடன் ஒன்று மாறுபடுகின்ற வட்டி வீதத்தினைக் கொண்டிருக்குமாயின் ஏதேனும் பெறுமதிக் குறைத்தல் நட்டத்தினை மதிப்பிடுதல் நடப்பு விளைவு வட்டி வீதத்திலாகும். தொகுதியானது வர்த்தக சொத்துகளை கடன்களுக்கும் வருமதிகளுக்கும் மீள்வகைப்படுத்தியிருப்பின் ஏதேனும் பெறுமதிக் குறைத்தல் நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவு வட்டி வீதம், மீள் வகைப்படுத்தல் திகதியில் நிர்ணயிக்கப்பட்ட புதிய விளைவு வட்டி வீதம் ஆகும். பிணையமாக்கப்பட்ட நிதியியல் சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக் கணிப்பானது பிணையத்தினை பெற்றுக் கொள்வதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான முன்முடிப்புச் செலவுகளிலிருந்து, முன்முடிப்பு நிகழுவதற்கு சாத்தியமிருப்பினும் இல்லாதிருப்பினும், தோன்றக்கூடிய காசுப்பாய்ச்சல்களை பிரதிபலிக்கின்றது.

எதிர்காலத்தில் கடன்களை மீளஅறவிடுவதற்கான நம்பகத் தன்மை காணப்படாத போது அத்துடன் அனைத்து பிணை உறுதிகளும் தேறியுள்ள அல்லது தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ள போது கடன்கள் அவற்றுடன் இணைந்த கொடுப்பனவுகளுடன் பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. அதனைத் தொடர்ந்த ஆண்டொன்றில் பெறுமதிக் குறைப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்வொன்று நேர்ந்தமையினால் மதிப்பிடப்பட்ட பெறுமதிக் குறைப்பு நட்டத் தொகை அதகரித்திருக்குமானால் அல்லது குறைந்திருக்குமானால் முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதிக் குறைத்தல் நட்டமானது ஒதுக்கீட்டுக் கணக்கினை சீராக்குவதனூடாக அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழித்தல் ஒன்று பின்னர் மீள் அறவிடப்படுமாயின், மீள் அறவீடானது "கடன் நட்ட செலவுகள்" இற்கு வரவு வைக்கப்படுகின்றது.

23. ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும் (தொடர்ச்சி) →

23. (ஈ) ஆண்டின்போதான கூட்டான மதிப்புக் குறைத்தல் விதிப்பனவுகளில் அசைவுகள் →

கூட்டான மதிப்புக் குறைப்பு மதிப்பீடு

தனிப்பட்ட ரீதியாக மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்து ஒன்றுக்காக பெறுமதிக் குறைப்பு காணப்படுவதன் பொருண்மைச் சான்று இல்லையென தொகுதி நிர்ணயிக்குமாயின் அச்சொத்தினை அதையொத்த கடன் இடர் குணாதியசங்களுடன் கூடிய நிதியியல் சொத்து குழுவொன்றில் உள்ளடக்கி பெறுமதிக் குறைத்தலுக்காக கூட்டாக அவற்றை மதிப்பீடு செய்யும்.

பெறுமதிக் குறைத்தல் கூட்டு மதிப்பீடு ஒன்றின் நோக்கத்திற்காக நிதியியல் சொத்துகளானவை, சொத்து வகை, தொழிற்றுறை, புவியியல் ரீதியான அமைவிடம், பிணைய வகை, கடந்தகால நிலுவை நிலைமைகள் மற்றும் வேறு தொடர்புடைய காரணிகள் போன்ற கடன் இடர் பண்புகளைக் கருத்திற் கொள்கின்ற தொகுதியின் உள்ளக கடன் தரப்படுத்தல் முறைமையினை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பெறுமதிக் குறைத்தலுக்காக கூட்டாக மதிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துகள் குழுவொன்றின் மீதான எதிர்கால காசுப்பாய்ச்சல்கள், தொகுதியில் காணப்படும் அதற்குச் சமமான கடன் இடர் பண்புகளுடன் கூடிய சொத்துகளுக்கான வரலற்று ரீதியான நட்ட அனுபவங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. வரலாற்று நட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள நடைமுறை நிபந்தனைகளில் தாக்கத்தினை பிரதிபலிப்பதற்கு வரலாற்று நட்ட அனுபவம் நடைமுறையில் அவதானிக்கத்தக்க திகதிக்கு சீர் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது நடப்பில் இல்லாத வரலாற்று காலத்தில் உள்ள நிபந்தனைகளின் தாக்கத்தினை அகற்றுவதற்கும் சீர் செய்யப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலிலுள்ள மாற்றங்களின் மதிப்பீடுகளைப் பிரதிபலித்து, ஆண்டுக்கு ஆண்டு தொடர்புடைய அவதானிக்கத்தக்க தரவுகளில் உள்ள மாற்றங்களுடன் பணிப்புரை ரீதியாக ஒத்துக் காணப்படுகின்றது. (வேலையின்மை வீதங்கள், ஆதன விலைகள், பொருட்கள் விலைகள், கொடுப்பனவு நிலைமைகள் என்பவற்றில் மாற்றங்கள் அல்லது தொகுதியில் அத்துடன் அவற்றின் பரிமாணத்தில் ஏற்பட்ட நட்டங்களைக் குறித்துக் காட்டுகின்ற ஏனைய காரணிகள் போன்றவை) எதிர்கால காசுப்பாய்ச்சல்களை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட முறையியலும் ஊகங்களும், நட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மையான நட்ட அனுபவம் என்பவற்றிற்கிடையிலான எவையேனும் வேறுபாடுகளைக் குறைப்பதற்காக கிரமமாக மீளாயப்படுகின்றன.

மீளப்பேரம் பேசப்பட்ட கடன்களின் பெறுமதிக் குறைத்தல்

இயலுமானபோது, பிணைகளைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து கடன்களை மீளமைப்பதற்கு வங்கி முற்படும். இதனால் கொடுப்பனவு ஒழுங்குகள் நீடிக்கப்படவும், புதிய கடன் நிபந்தனை ஒப்பந்தங்கள் செய்யப்படவும் நேரிடலாம். நியதிகள் பேரம்பேசப்பட்ட பின்னர் விதிகள் மீளமைக்கப்பட முன்னர் கணக்கிடப்பட்ட ஆரம்ப விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு எவையும் அளவீடு செய்யப்படும் என்பதுடன் அதன் பின்னர் நிலுவையிலுள்ளவை என கருதப்படவும் மாட்டாது. மீளப்பேரம்பேசப்பட்ட கடன்களுக்கு அனைத்து தேவைப்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதை முகாமைத்துவம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யும் என்பதுடன் எதிர்கால கொடுப்பனவுகளும் ஏற்படக் கூடிய வாய்ப்பும் உண்டு. தனிப்பட்ட வகையிலும் அல்லது கூட்டாகவும் கடன்களின் ஆரம்ப விளைவு வட்டி வீதத்தை பயன்படுத்தி கணக்கிடப்படும் பெறுமதிக் குறைப்பு மதிப்பீடுகளுக்கு கடன்கள் தொடர்ந்தும் உள்ளாகும்.

பிணைய உறுதிகள் மதிப்பீடு

நிதியியல் சொத்துகளின் இடரினைக் குறைப்பதற்காக இயலக்கூடிய தருணங்களில் தொகுதியானது பிணைய உறுதிகளை பயன்படுத்துகின்றது. காசு, தங்கம், அரச பிணையங்கள் ஆகிய பல்வேறு வடிவங்களில் பிணைய உறுதி ஏற்படுத்தப்படுகின்றது. பிணைய உறுதியாக வைக்கப்பட்டிருக்கும் நிதியியல் சொத்துகளை மதிப்பீடு செய்வதற்காக வங்கியானது நடப்புச் சந்தை தரவுகளை இயலக்கூடிய அளவிற்கு பயன்படுத்துகின்றது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31இல் உள்ளவாறு	**2017**	2016	**2017**	2016
	ரூ.'000	ரூ.'000	**ரூ.'000**	ரூ.'000
கூட்டான மதிப்புக் குறைப்பு				
ஆரம்ப மீதி	**1,731,772**	3,092,209	**1,731,772**	3,092,209
வருமானக் கூற்றிற்கான விதிப்பனவு (குறிப்பு 10)	**693,233**	(99,693)	**693,233**	(99,693)
ஆண்டின்போதான தேறிய பதிவளித்தல்	**(126,664)**	(1,260,744)	**(126,664)**	(1,260,744)
இறுதி மீதி	**2,298,341**	1,731,772	**2,298,341**	1,731,772

24. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள்

கணக்கீட்டுக் கொள்கை

பங்கு மூலதனம் மற்றும் படுகடன் பிணையங்களை விற்பனைக்காக கிடைக்கத்தக்க முதலீடுகள் உள்ளடக்குகின்றது. விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட பங்கு மூலதன முதலீடுகள், வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டவையோ அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பெயர் குறிக்கப்பட்டவையோ அல்லாதவையாகும். இவ்வகையில் காணப்படும் படுகடன் பிணையங்கள், முடிவற்ற காலப்பகுதியொன்றிற்காக பிடித்து வைத்திருப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளவை அத்துடன் திரவத் தன்மைக்கான தேவைகளுக்கு விற்பனை செய்யக்கூடியவை அல்லது சந்தை நிபந்தனைகளிலுள்ள மாற்றங்களுக்கு அமையக்கூடியவையாக காணப்படுகின்றவை இவ்வகுதியில் அடங்கும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், நியாயப் பெறுமதியில் அதனைத் தொடர்ந்து விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் அளவிடப்படுகின்றன. விற்பனைக்காக கிடைக்கத்தக்கவற்றின் கீழ் காணப்படும் பங்கு மூலதன முதலீடுகள் அவை விலை குறிக்கப்பட்ட சந்தை விலையினைக் கொண்டிருக்காத அத்துடன் அவற்றின் நியாயப் பெறுமதி நம்பத்தகுந்தவாறு அளவிடப்பட முடியாது இருக்கும்போது செலவில் அளவிடப்பட வேண்டும்.

தேறாத இலாபங்களும் நட்டங்களும் "விற்பனைக்காக கிடைக்கத்தக்க ஒதுக்கு" இல் பங்கு மூலதனத்தில் (ஏனைய முழுமையான வருமானம்) நேரடியாக இனங்காணப்படுகின்றன. முதலீடு அகற்றப்படுகின்றபோது பங்கு மூலதனத்தில் முன்னர் இனங்கண்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் "நிதியியல் முதலீட்டிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)" இல் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. தொகுதியானது அதே பிணையத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட முதலீடுகளை கொண்டிருக்குமானால் முதல் வந்தது முதல் வெளியில் செல்லல் என்ற அடிப்படையில் அகற்றப்பட வேண்டும் என கருதப்படுகின்றது. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் வைக்கப்படும்போது உழக்கைப்பட்ட வட்டியானது விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி வட்டி வருமானமாக வேண்டப்பட்டுள்ளது. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளை வைக்கப்படும்போது உழைக்கப்பட்ட பங்கிலாபங்கள், கொடுப்பனவுக்கான உரிமை தாபிக்கப்படுகின்றபோது (ஏனைய தொழிற்படுத்தல் வருமானமாக இனங்காணப்படுகின்றன) அத்தகைய முதலீடுகளின் பெறுமதிக் குறைப்புகிளிலிருந்து தோன்றுகின்ற நட்டங்கள், "நிதியியல் முதலீடுகள் மீதான பெறுமதிக் குறைத்தல் நட்டங்கள்" இல் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. அத்துடன் "விற்பனைக்காக கிடைக்கத்தக்க ஒதுக்கு" இலிருந்து அகற்றப்படுகின்றன.

விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் மதிப்பிழப்பு

படுகடன் பிணையங்கள் உட்பட விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளுக்காக தொகுதியானது முதலீடொன்று மதிப்பிழந்துள்ளது என்ற பொருண்மையான சான்று உள்ளதா என்பதனை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக படுகடன் சாதனங்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தொகுதியானது பெறுமதிக் குறைப்பு செலவில் கொண்டுசெல்லப்பட்ட நிதியியல் சொத்தாக அதே மூலப்பிரமானத்தின் அடிப்படை பெறுமதிக் குறைத்தல் பொருண்மைச் சான்று உள்ளதா என்பதனை தனியாக மதிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், பெறுமதிக் குறைத்தலுக்காக பதிவுசெய்யப்பட்ட தொகையானது பெறுமதிக்குறைப்புச் செலவு மற்றும் நடப்பு நியாயப் பெறுமதி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடாக வருமானக் கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட அம்முதலீடுகள் மீது ஏதேனும் பெறுமதிக் குறைவினைக் கழித்து ஒன்றுசேர்ந்த நட்டம் அளவிடப்படுகின்றது. எதிர்கால வட்டி வருமானமானது குறைக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகையினை அடிப்படையாக கொண்டிருப்பதுடன் பெறுமதிக் குறைத்தல் நட்டத்தினை அளவிடுவதற்கான நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் கழிவிற்கு பயன்படுத்தப்பட்ட வட்டி வீதத்தினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. வட்டி வருமானம் ஆனது "வட்டி மற்றும் அதையொத்த வருமானம்" இன் பகுதியொன்றாக பதியப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து வரும் காலத்தில் படுகடன் சாதனத்தின் நியாயப் பெறுமதி அதிகரிக்குமானால் அத்துடன் வருமானக் கூற்றில் பெறுமதிக் குறைப்பு நட்டம் இனங்காணப்பட்ட பின்னர் கடன் நிகழ்வான்று நிகழ்வது தொடர்பில் அதிகரிப்பானது பொருண்மையாக தொடர்புபட்டிருக்குமாயின் பெறுமதிக் குறைத்தல் நட்டமானது வருமானக் கூற்றினூடாக பின்தள்ளப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட பங்கு மூலதன விடயத்தில் பொருண்மைச் சான்றானது அதன் செலவிற்கு கீழ் முதலீட்டின் நியாயப் பெறுமதியில் "குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட" வீழ்ச்சியினையும் உள்ளடக்கும். தொகுதியானது "குறிப்பிடத்தக்க" என்பதனை பொதுவாக 20% ஆகவும் "நீண்ட" என்பதனை பொதுவாக 6 மாதங்களை விட கூடியதாகவும் கொள்கின்றது. பெறுமதிக் குறைத்தலுக்கான சான்று ஒன்று காணப்படும் எனில் ஒன்றுசேர்ந்த நட்டமானது பெற்றுக்கொள்ளப்பட்ட செலவு மற்றும் நடப்பு நியாயப் பெறுமதி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடாக ஏனைய முழுமையான வருமானத்தில் முன்னர் இனங்காணப்பட்ட அம்முதலீட்டின் மீதான ஏதேனும் பெறுமதிக் குறைத்தல் நட்டத்தினைக் கழித்து அளவிடப்படுவதுடன் பங்கு மூலதனத்திலிருந்து அகற்றப்பட்டு வருமானக் கூற்றில் அடையாளப்படுத்தப்படுகின்றது. பங்கு மூலதன முதலீடுகள் மீதான பெறுமதிக் குறைத்தல் நட்டங்கள் வருமானக் கூற்றினூடாக பின்னோக்கிச் செலுத்தப்படுவதில்லை: பெறுமதிக் குறைத்தலுக்குப் பின்னரான நியாயப் பெறுமதியில் அதிகரிப்பானது ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

24. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி) →

டிசம்பர் 31இல் உள்ளவாறு	வங்கி		தொகுதி	
	2017 ரூ. '000	2016 ரூ. '000	**2017 ரூ. '000**	2016 ரூ. '000
விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள்				
பங்கு மூலதன பிணையங்கள் [குறிப்பு 24(அ)]	**3,876,570**	3,332,148	**3,876,570**	3,332,148
படுகடன் பிணையங்கள் [குறிப்பு 24(ஆ)]	**–**	–	**199,920**	199,839
ஏனைய முதலீடுகள்				
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி முறிகள் [குறிப்பு 24(இ)]	**81,390**	2,104,031	**1,900,493**	3,797,944
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி உண்டியல்கள் [குறிப்பு 24(ஈ)]		–	**1,171,488**	–
விலைகுறிக்கப்படாத முதலீடுகள்				
பங்கு மூலதன பிணையங்கள் [குறிப்பு 24(உ)]	**564,381**	791,585	**565,381**	792,585
விற்பனைக்காக கிடைக்கத்தக்க தேறிய முதலீடுகள்	**5,693,829**	6,227,764	**7,713,852**	8,122,516

24. (அ) விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள் – வங்கியும் தொகுதியும் →

	2017			2016		
விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள் – பங்கு மூலதன பிணையங்கள்	**பங்குகளின் எண்ணிக்கை**	**செலவு ரூ. '000**	**நியாயப் பெறுமதி ரூ. '000**	பங்குகளின் எண்ணிக்கை	செலவு ரூ. '000	நியாயப் பெறுமதி ரூ. '000
ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி.	**11,262,707**	**1,655,816**	**2,773,004**	9,523,878	1,301,845	2,118,873
சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி.	**13,158,700**	**445,642**	**369,522**	13,158,700	445,643	474,913
பீபள்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி.	**43,668,157**	**784,405**	**734,044**	43,668,157	784,405	738,362
		2,885,863	**3,876,570**		2,531,893	3,332,148

24. (ஆ) விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள் – தொகுதிக்கடன் பிணையங்கள் – தொகுதி →

	2017			2016		
	தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை	**செலவு ரூ. '000**	**நியாயப் பெறுமதி ரூ. '000**	தொகுதிக் கடன்களின் எண்ணிக்கை	செலவு ரூ. '000	நியாயப் பெறுமதி ரூ. '000
பான் ஏசியா பேங் கோபரேஷின் பிஎல்சி.	**500,000**	**50,000**	**51,234**	500,000	50,000	51,234
பீபள்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி.	**945,000**	**94,500**	**95,735**	945,000	94,500	95,735
இலங்கை HDFC வங்கி	**386,800**	**38,680**	**39,154**	386,800	38,680	39,154
செலான் வங்கி பிஎல்சி.	**129,400**	**12,940**	**13,717**	129,400	12,940	13,717
		196,120	**199,920**		196,120	199,839

24. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி) →

24. (இ) ஏனைய முதலீடுகள – திறைசேரி முறிகள் →

	2017 – வங்கி			2016 – வங்கி		
	முகப்-பெறுமதி	**முதலீட்டுச் செலவு**	**நியாயப் பெறுமதி**	முகப்-பெறுமதி	முதலீட்டுச் செலவு	நியாயப் பெறுமதி
	ரூ. '000	**ரூ. '000**	**ரூ. '000**	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி முறிகள்	**76,000**	**74,709**	**81,390**	2,175,000	2,012,176	2,104,031
		74,709	**81,390**		2,012,176	2,104,031

	2017 – தொகுதி			2016 – தொகுதி		
	முகப்-பெறுமதி ரூ. '000	**முதலீட்டுச் செலவு ரூ. '000**	**நியாயப் பெறுமதி ரூ. '000**	முகப்-பெறுமதி ரூ. '000	முதலீட்டுச் செலவு ரூ. '000	நியாயப் பெறுமதி ரூ. '000
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி முறிகள்	**1,751,000**	**2,037,829**	**1,900,493**	3,850,000	3,975,296	3,797,944
		2,037,829	**1,900,493**		3,975,296	3,797,944

24. (ஈ) ஏனைய முதலீடுகள் – திறைசேரி உண்டியல்கள் →

	2017 – வங்கியும் தொகுதியும்			2016 – வங்கியும் தொகுதியும்		
	முகப்-பெறுமதி	**முதலீட்டுச்-செலவு**	**நியாயப் பெறுமதி**	முகப்-பெறுமதி	முதலீட்டுச் செலவு	நியாயப் பெறுமதி
	ரூ. '000	**ரூ. '000**	**ரூ. '000**	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
இலங்கை அரசாங்க பிணையங்கள் – திறைசேரி உண்டியல்கள்	**1,200,000**	**1,164,059**	**1,171,488**	–	–	–
		1,164,059	**1,171,488**		–	–

24. விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி) →

24. (உ) விலைகுறிக்கப்படாத முதலீடுகள் – பங்குமூலதன பிணையங்கள் →

	2017 – வங்கி			2016 – வங்கி		
	பங்குகளின் எண்ணிக்கை	**செலவு ரூ. '000**	**செலவு/ நியாயப்-பெறுமதி ரூ. '000**	பங்குகளின் எண்ணிக்கை	செலவு ரூ. '000	செலவு/ நியாயப்-பெறுமதி ரூ. '000
முதலீடு – கடன் தகவல் பணியகம்	**30,450**	**57,364**	**57,364**	30,450	57,364	57,364
முதலீடு – அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட்	**20,000**	**127**	**127**	20,000	127	127
முதலீடு – பிராந்திய அபிவிருத்தி வங்கி (RDB)	**16,452,126**	**164,521**	**506,890**	16,452,126	164,521	734,094
(கழிக்குக): மதிப்புக் குறைப்பு		**–**	**–**		–	–
		222,012	**564,381**		222,012	791,585

	2017 – தொகுதி			2016 – தொகுதி		
	பங்குகளின் எண்ணிக்கை	**செலவு ரூ. '000**	**செலவு/ நியாயப்-பெறுமதி ரூ. '000**	பங்குகளின் எண்ணிக்கை	செலவு ரூ. '000	செலவு/ நியாயப்-பெறுமதி ரூ. '000
முதலீடு – கடன் தகவல் பணியகம்	**30,450**	**57,364**	**57,364**	30,450	57,364	57,364
முதலீடு – அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் சிலோன் லிமிட்டட்	**20,000**	**127**	**127**	20,000	127	127
முதலீடு – பிராந்திய அபிவிருத்தி வங்கி (RDB)	**16,452,126**	**164,521**	**506,890**	16,452,126	164,521	734,094
முதலீடு – இலங்கை நிதிச் சேவைகள் பணியகம்	**100,000**	**1,000**	**1,000**	100,000	1,000	1,000
(கழிக்குக): மதிப்புக் குறைப்பு		**–**	**–**		–	–
		223,012	**565,381**		223,012	792,585

விற்பனைக்காக கிடைக்கத்தக்க பங்கு மூலதன பிணையங்கள் அனைத்தையும் (பிராந்திய அபிவிருத்தி வங்கி தவிர) நம்பகமாக அவற்றின் நியாயப் பெறுமதியில் மதிப்பிட முடியாமையினால் செலவில் பதிவுசெய்யப்படுகின்றன. இம்முதலீடுகளுக்கு சந்தை காணப்படவில்லை. அத்துடன் வங்கியானது நீண்டகாலத்திற்காக அவற்றை பிடித்து வைத்திருப்பதற்கு உத்தேசிக்கின்றது. பிராந்திய அபிவிருத்தி வங்கி பங்குகளிலுள்ள முதலீடானது அவதானிக்கத்தக்க தரவுகள் மீதான விலை மதப்பீட்டு மாதிரி ஒன்றைப் பயன்படுத்தி நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

25. முதிர்விற்காக பிடித்து வைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள்

கணக்கீட்டுக் கொள்கை

முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள், முதிர்வுக்காக பிடித்து வைப்பதற்கு தொகுதி நோக்கத்தினையும் இயலுமையினையும் கொண்டுள்ள நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் அல்லது நிலையான முதிர்வுகள் என்பவற்றுடன் கூடிய பெறுதிகள் அல்லாத நிதியியல் சொத்துகள் ஆகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர் முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்ட முதலீடுகள் விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் பெறுமதிக் குறைப்பினைக் கழித்து அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. கடன்தீர் செலவானது பெற்றுக் கொள்தொகுதி மிதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாகக காணப்படுகின்ற கட்டணங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கணிக்கக்கப்படுகின்றது. கடன் தீர்த்தலானது வருமானக் கூற்றில் "வட்டி மற்றும் அதையொத்த வருமானம்" இல் உள்ளடக்கப்படுகின்றது. அத்தகைய முதலீடுகளின் பெறுமதிக் குறைப்பிலிருந்து தோன்றுகின்ற நட்டங்கள், "கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான மதிப்புக்குறைப்பு அறவீடு" வருமானக் கூற்று நிரையில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

முதிர்வுக்கு முன்னர் (குறித்த சூழ்நிலைகள் தவிர) முதிர்வுக்காக வைக்கப்பட்ட முதலீடுகளின் முக்கியமற்ற தொகையொன்றிற்கு மேற்பட்டவற்றை தொகுதியானது விற்பனை செய்வதற்கு அல்லது மீள் வகைப்படுத்துவதற்கு முற்பட்டிருக்குமானால் முழுமையான வகையும் கலங்கம் ஏற்படுவதுடன் விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக மீள்வகைப்படுத்தப்பட வேண்டும். மேலும் தொகுதியானது தொடருகின்ற 2 ஆண்டுகளின்போது முதிர்வுக்காக வைக்கப்பட்டவையாக ஏதேனும் நிதியியல் சொத்துகளை வகைப்படுத்தவதிலிருந்து தடுக்கப்படும்.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31இல் உள்ளவாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
இலங்கை அரசாங்க பிணையங்கள்				
திறைசேரி உண்டியல்கள்	**35,115,115**	17,279,328	**35,115,115**	17,279,328
திறைசேரி முறிகள்	**450,001,836**	430,456,075	**453,653,149**	432,256,631
இலங்கை அபிவிருத்தி முறிகள் – ஐ.அ.டொ.	**59,156,126**	58,088,995	**59,156,126**	58,088,995
(கழிக்குக): மதிப்பு குறைப்பு	**–**	–	**–**	–
தேறிய முதிர்வுக்காக வைக்கப்பட்ட முதலீடுகள்	**544,273,077**	505,824,398	**547,924,390**	507,624,954

வங்கியானது 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ரூபா 48,382 மில். கொண்ட முதிர்வுக்காக வைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை பிணையமாக (2016: ரூபா 63,413 மில்.) தொகுதிக்காக ரூபா 56,229 மில். (2016: ரூபா 73,809 மில்.) வாக்குறுதியளித்துள்ளது.

26. துணை நிறுவனத்திலுள்ள முதலீடுகள்

கணக்கீட்டுக் கொள்கை

வங்கியின் நிதியியல் கூற்றுகளில் பெறுமதிக் குறைத்தலுக்காக துணைக் கம்பனிகளிலுள்ள முதலீடுகள், ஒதுக்கீட்டினை கழித்த செலவில் கணக்கிடப்பட்டுள்ளன. பெறுமதிக் குறைத்தலுக்கான ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படுகின்றதா என்பதனை நிர்ணயிப்பதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் துணைக் கம்பனியின் தேறிய சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. ஏதேனும் அத்தகைய குறிகாட்டி காணப்படும் எனின் முதலீட்டின் அப்போதைய மீள் அறவிடத்தக்க தொகை மதிப்பிடப்பட்டு பெறுமதிக் குறைத்தல் நட்டமானது தேறிய சொத்துகளில் அதன் நட்டம் என்ற அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

	2017	2016	**2017**		2016	
டிசம்பர் 31இல் உள்ளவாறு	**உரித்து**	உரித்து	**செலவு***	**பணிப்-பாளர்களின் மதிப்பீடு****	உரித்து	பணிப் பாளர்களின் மதிப்பீடு**
	%	%	**ரூ. '000**	**ரூ. '000**	ரூ. '000	ரூ. '000
விலை குறிக்கப்படாத பங்கு மூலதன பங்குகள்						
என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிட்டட்	**100**	100	**900,000**	**1,944,687**	150,000	1,691,209
ஒவ்வொன்றும் ரூபா 10 கொண்ட 90,000,000 சாதாரண பங்குகள்						
(கழிக்குக) மதிப்பு குறைத்தல்			**–**	**–**	–	–
தேறிய மொத்தம்			**900,000**	**1,944,687**	150,000	1,691,209

** ஆண்டின்போது மிகை பங்கிலாபமாக ரூபா 750 மில் பெறுமதியான பங்குகளை துணைக்கமபனி விநியோகித்துள்ளது.*

*** துணைக் கம்பனியில் உள்ள முதலீடுகளின் பணிப்பாளர் விலைமதிப்பீடானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை அடிப்படையாக கொண்டு 2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு தேறிய சொத்து அடிப்படை மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

கணக்கீட்டுக் கொள்கை

இனங்காணுவதற்கான அடிப்படை

சொத்தொன்றுடன் இணைந்த எதிர்கால நன்மைகள் தொகுதிக்குச் செல்லக் கூடியதாயிருத்தல், ஆதனத்தின் கிரயம் நம்பத் தகுந்த அளவில் அளவீடு செய்யப்படுதல் ஆகியவற்றினால் மட்டுமே ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியன இனங்காணப்படுகின்றன. சொத்துக்கள் கையேற்புக்கான நேரடிச் செலவுகளை உள்ளடக்கிய செலவிலேயே ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

அளவீட்டுக்கான அடிப்படை

சொத்தொன்றாக இனங்காண்பதற்கு தகைமை பெறுகின்ற ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரண வகைகளில் ஒன்று ஆரம்பத்தில் செலவில் அளவிடப்படுகின்றது. செலவானது சொத்தினைக் கையேற்பதற்கு நேரடியாக சாட்டத்தக்க செலவினம் மற்றும் அதனைத் தொடர்ந்த செலவுகளை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துகள், பொருட்களின் செலவு, நேரடி ஊழியம் மற்றும் அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கான செயற்படுகின்ற நிலைமைக்கு சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க எவையேனும் செலவுகள். அதேபோன்று சொத்துகள் அமையப் பெற்றுள்ள பிரதேசத்தில் கழற்றுதல் மற்றும் அகற்றுதல் மற்றும் மீளமைத்தல் செலவுகள் அத்துடன் மூலதனமாக்கப்பட்ட கடனாக்கல் செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. தொடர்புடைய உபகரணத்தின் தொழிற்பாட்டினை முழுமையாக்கும் பாகமான கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்கள் கணனி உபகரணப் பாகம் ஒன்றாக மூலதனமாக்கப்பட்டுள்ளன.

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஒன்றின் பாகங்கள் வேறுபட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினைக் கொண்டிருக்கும்போது, அவை, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் வேறான உருப்படிகளாக (பாரிய கூறுகள்) கொள்ளப்படுகின்றன.

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)

செலவு மாதிரி

தொகுதியானது இறையிலி காணி மற்றும் கட்டடங்கள், பதிவுகள் ஆகியவற்றிற்கானவை தவிர, ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திற்கான செலவு மாதிரிகளைப் பிரயோகிப்பதுடன் கொள்வனவு அல்லது கட்டுமானச் செலவினை ஒன்றுசேர்த்த தேய்மானம் அத்துடன் ஏதேனும் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டு செலவுகளைக் கழித்து பதிவுசெய்கின்றது.

மீள்மதிப்பீட்டு மாதிரி

தொகுதியானது இறையிலி காணி மற்றும் கட்டிங்களில் முழு வகுப்புக்கும் மீள்மதிப்பீட்டு மாதிரியினை பிரயோகிக்கின்றது. அத்தகைய ஆதனங்கள், தொடர்ந்துவரும் ஏதாவது ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டு இழப்புக்கள் ஆகியவற்றைக் கழித்து மீள்மதிப்பீட்டு திகதியிலான நியாயப் பெறுமதியில் மீள்மதிப்பிடப்பட்ட தொகை கொண்டிருக்கும். தொகுதியின் இறையிலி காணி மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றின் கொண்டுசெல்லும் தொகைகள் அறிக்கையிடும் திகதியில் நியாயப் பெறுமதியிலிருந்து மிகமுக்கியளவில் வேறுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் அவை கொண்டு செல்லும் தொகையிலிருந்தான நியாயப் பெறுமதி கணிசமாக மாறுபட்டிருப்பின் 3 வருடங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மீள்மதிப்பீடு செய்யப்படும்.

சொத்து ஒன்று மீள்மதிப்பீடு செய்யப்படும்போது கொண்டுசெல்லும் தொகையிலான ஏதேனும் அதிகரிப்பு ஏனைய முழுமையான வருமானத்திலும் பங்கு மூலதனத்தில் ஒன்றுதிரண்டவற்றிலும் இனங்காணப்படும். அல்லது வருமானக் கூற்றிற்காக அதே சொத்து தொடர்பிலான முன்னைய மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியைத் திருப்புவதற்கு பயன்படுத்தப்படும். இத்தகைய சூழ்நிலையில் அதிகரிப்பானது முன்னைய மதிப்புக் குறைப்பின் அளவிலான வருமானம் ஆக இனங்காணப்படும். கொண்டுசெல்லப்படும் தொகையிலான ஏதேனும் வீழ்ச்சியும் வருமானக் கூற்றிலான செலவு ஒன்றான இனங்காணப்படும். அல்லது அச்சொத்துக்கான மூலதன ஒதுக்கில் காணப்படும் ஏதேனும் கடன் நிலுவையின் அளவுக்கான ஏனைய முழுமையான வருமானத்தில் கழிக்கப்படும். ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்ட வீழ்ச்சி மூலதன ஒதுக்கின் கீழ் ஒன்றுசேர்ந்த தொகையினைக் குறைக்கின்றது. சொத்து ஒன்றிற்கான மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள ஏதேனும் மீதி, சொத்து ஒய்வு பெறும்போது அல்லது கையுதிர்ப்பின்போது வைக்கப்பட்டிருந்த வருவாய்களுக்கு நேரடியாக மாற்றம் செய்யப்படும்.

இனங்காணாமை

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியன கையுதிர்ப்பின்போது போது அல்லது அதன் பயன்பாட்டுக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் இல்லாதபோது இனங்காணப்படுவதில்லை. சொத்தொன்று இனங்காணப்படாததினால் எழக்கூடிய ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய கையுதிர்த்தல் வருவாய்களும் விற்றுவரவுகளுக்கும் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்குமிடையிலான வேறுபாடாக கணக்கிடப்பட்டது) சொத்து இனங்காணப்படாத வருமானக் கூற்றில் “ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்” இல் இனங்காணப்படுகின்றது.

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி

இவை, கட்டிங்கள் நிர்மாணித்தல், பிரதான பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் அத்துடன் முறைமை அபிவிருத்தி, மூலதனமாக்கலுக்காக காத்திருப்பவை ஆகியவற்றின் நேரடியாக ஏற்பட்ட தன்மையிலான மூலதனச் செலவுகளாகும். இவை எவையேனும் ஒன்றுதிரட்டிய பெறுமதிக் குறைப்புகளைக் கழித்து நிதியியல் நிலைமைக் கூற்றில் செலவில் குறிப்பிடப்படுகின்றன. முன்னெடுக்கப்படும் மூலதன பணியானது முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்பட்ட முறையில் அவை தொழிற்படுத்துவதற்கு அவசியமான கொள்ளளவினை அதன் அமைவிடத்திலும் நிபந்தனைகளிலும் நிறைவு செய்கின்றபோது தொடர்புடைய சொத்துக்கு மாற்றப்படுகின்றது.

கடனாக்க செலவுகள்

வங்கியின் முலம் ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கையேற்புடன் தொடர்பட்ட மூலதனமாக்கப்பட்ட கடனாக்க செலவுகள் எதுவும் காணப்படவில்லை

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)

பெறுமானத் தேய்வு

நேர் வரிசை முறையினைப் பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தில் ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உத்தேச பயன்பாட்டுக் காலத்தில் எஞ்சிய பெறுமதிகளில் அவற்றின் செலவினைக் குறைப்பதன் மூலம் பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகின்றது. காணிக்கு பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுவதில்லை. இனங்காணப்பட்ட சொத்து வகுப்புகளுக்கான பெறுமானத் தேய்வு வீதங்கள் பின்வருமாறு.

வாடகை/குத்தகை உடமைக் கட்டிடங்களுக்கான மேம்படுத்தல்கள்

2017.01.01 முதல் செயற்படத்தக்கவாறு வாடகை/குத்தகை உடமைக் கட்டிடங்களுக்கான மேம்படுத்தல்களை மூலதனமாக்குவதற்கு வங்கி தீர்மானித்தது. மேம்படுத்தலானது அதே திகதியிலிருந்து செயற்படத்தக்கவாறு குத்தகைக்காலத்தின் மீது பெறுமதிக் குறைப்புச் செய்யப்படும்

சொத்துகளின் வகை	ஆண்டொன்றுக்கான பெறுமானத் தேய்வு வீதம் (%)
குத்தகை உடமை ஆதனம், வாடகை/குத்தகை உடமைக் கட்டிடங்களுக்கான மேம்படுத்தல்	குத்தகைக் காலத்தின் மீது
இறையிலி கட்டிடங்கள்	ஆண்டுக்கு 2.5%
அலுவலக மற்றும் நானாவித உபகரணம்	ஆண்டுக்கு 10%
மோட்டார் வாகனங்கள்	ஆண்டுக்கு 20%
கணனி வன்பொருள், மென்பொருள்	ஆண்டுக்கு 20%
தளபாடங்களும் பொருத்துகளும்	ஆண்டுக்கு 10%

2017.01.01 முதல் செயற்படத்தக்கவாறு கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் மீதான பெறுமானத் தேய்வு வீதமானது பொருட்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்தினைக் கருத்திற்கொண்டு 25% இலிருந்து – 20% ஆக திருத்தப்பட்டுள்ளது.

சொத்து ஒன்று பயன்பாட்டிற்காக அது கிடைக்கப்பெறும் திகதியில் ஆரம்பித்து சொத்து கையுதிர்த்தல் திகதி வரை தொகுதியானது பெறுமானத் தேய்வினை ஏற்பாடு செய்கின்றது.

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி) →

27. (அ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் – வங்கி 2017 →

	காணியும் கட்டடங்களும் ரூ. '000	குத்தகை உடமை ஆதனம் வாடகை/ குத்தகை உடமைக் கட்டடங்களுக்கான மேம்படுத்தல்* ரூ. '000	கணனி வன்பொருள் ரூ. '000	அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துகள் ரூ. '000	ஏனையவை ரூ. '000	முன்னெடுக்கப்படும் கட்டட பணி ரூ. '000	மொத்தம் ரூ. '000
செலவு/மதிப்பீடு							
2017.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	5,565,220	488,317	2,061,817	1,650,968	344,735	77,280	10,188,337
சீராக்கல்	(1,500)	1,500	(128)	–	–	(15,785)	(15,913)
கூட்டுதல்கள்	43,065	58,194	393,032	122,621	4,878	167,681	789,471
மீள் மதிப்பீடு	4,496,752	–	–	–	–	–	4,496,752
மீள் மதிப்பீடுசெய்யப்பட்ட சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கம்	(83,404)	–	–	–	–	–	(83,404)
கையுதிர்த்தல்	–	–	(184,696)	(39,106)	(11)	(43,065)	(266,878)
2017.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	10,020,133	548,011	2,270,025	1,734,483	349,602	186,111	15,108,365
(கழிக்குக): திரண்ட பெறுமானத் தேய்வு							
2017.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	41,214	65,881	1,732,391	988,753	240,447	–	3,068,686
சீராக்கல்	–	–	–	–	–	–	–
ஆண்டிற்கான விதிப்பனவு	42,190	11,415	111,180	125,860	36,512	–	327,157
மீள் மதிப்பீடுசெய்யப்பட்ட சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கம்	(83,404)	–	–	–	–	–	(83,404)
கையுதிர்த்தல்	–	–	(184,293)	(35,146)	(11)	–	(219,450)
2017.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	–	77,296	1,659,278	1,079,467	276,948	–	3,092,989
(கழிக்குக): மதிப்பிழப்பு	–	–	–	–	–	–	–
2017.12.31 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி	10,020,133	470,715	610,747	655,016	72,654	186,111	12,015,376

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி) →

27. (அ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் – வங்கி 2016 →

	காணியும் கட்டடங்களும் ரூ. '000	குத்தகை உடமை ஆதனம் வாடகை/ குத்தகை உடமைக் கட்டடங்-களுக்கான மேம்படுத்தல்* ரூ. '000	கணனி வன்பொருள் ரூ. '000	அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துகள் ரூ. '000	ஏனையவை ரூ. '000	முன்னெடுக் கப்படும் கட்டட பணி ரூ. '000	மொத்தம் ரூ. '000
செலவு/மதிப்பீடு							
2016.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	5,498,292	474,060	1,877,980	1,512,787	290,826	134,375	9,788,320
சீராக்கல்	(35,475)	–	(16,661)	–	–	(46,268)	(98,404)
கூட்டுதல்கள்	102,403	14,257	208,230	180,577	53,914	56,101	615,482
மீள் மதிப்பீடு	–	–	–	–	–	–	–
கையுதிர்த்தல்	–	–	(7,732)	(42,396)	(5)	(66,928)	(117,061)
2016.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	5,565,220	488,317	2,061,817	1,650,968	344,735	77,280	10,188,337
(கழிக்குக): திரண்ட பெறுமானத் தேய்வு							
2016.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	–	58,683	1,639,704	915,173	207,690	–	2,821,250
சீராக்கல்	–	–	(3,371)	–	–	–	(3,371)
ஆண்டிற்கான விதிப்பணவு	41,214	7,198	103,790	115,289	32,762	–	300,253
கையுதிர்த்தல்	–	–	(7,732)	(41,709)	(5)	–	(49,446)
2016.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	41,214	65,881	1,732,391	988,753	240,447	–	3,068,686
(கழிக்குக): மதிப்பிழப்பு	–	–	–	–	–	–	–
2016.12.31 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி	5,524,006	422,436	329,426	662,215	104,288	77,280	7,119,651

** 2017.12.31 அன்று உள்ளவாறு ரூபா 5.3 மில்லியன் கொண்ட வாடகை/குத்தகை உடமைகளுக்கான முன்னெடுக்கப்படும் பணி மேம்படுத்தல்களை வாடகை ஆதனங்கள், வாடகை/குத்தகை உடமைக் கட்டடங்களுக்கான மேம்பட்டுத்தல்கள் உள்ளடக்குகின்றன.*

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)

27. (ஆ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் – தொகுதி 2017

	காணியும் கட்டடங்களும் ரூ. '000	குத்தகை உடமை ஆதனம் வாடகை/ குத்தகை உடமைக் கட்டடங்களுக்கான மேம்படுத்தல்* ரூ. '000	கணனி வன்பொருள் ரூ. '000	அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துகள் ரூ. '000	ஏனையவை ரூ. '000	முன்னெடுக்கப்படும் கட்டட பணி ரூ. '000	மொத்தம் ரூ. '000
செலவு/மதிப்பீடு							
2017.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	5,565,220	488,317	2,065,843	1,652,758	344,734	77,444	10,194,317
சீராக்கல்	(1,500)	1,500	(128)	–	–	(15,949)	(16,077)
கூட்டுதல்கள்	43,065	58,194	394,787	122,914	4,878	167,681	791,519
மீள் மதிப்பீடு	4,496,752	–	–	–	–	–	4,496,752
மீள் மதிப்பீடுசெய்யப்பட்ட சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கம்	(83,404)	–	–	–	–	–	(83,404)
கையுதிர்த்தல்	–	–	(184,937)	(39,154)	(11)	(43,065)	(267,167)
2017.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	10,020,133	548,011	2,275,565	1,736,518	349,601	186,111	15,115,940
(கழிக்குக): திரண்ட பெறுமானத் தேய்வு							
2017.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	41,214	65,881	1,735,142	989,810	240,447	–	3,072,494
சீராக்கல்	–	–	–	–	–	–	–
ஆண்டிற்கான விதிப்பணவு	42,190	11,415	111,776	126,015	36,512	–	327,908
மீள் மதிப்பீடுசெய்யப்பட்ட சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கம்	(83,404)	–	–	–	–	–	(83,404)
கையுதிர்த்தல்	–	–	(184,534)	(35,192)	(11)	–	(219,737)
2017.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	–	77,296	1,662,384	1,080,633	276,948	–	3,097,261
(கழிக்குக): மதிப்பிழப்பு	–	–	–	–	–	–	–
2017.12.31 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி	10,020,133	470,715	613,181	655,886	72,653	186,111	12,018,679

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி) →

27. (ஆ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் – தொகுதி 2016 →

	காணியும் கட்டடங்களும் ரூ. '000	குத்தகை உடமை ஆதனம் வாடகை/ குத்தகை உடமைக் கட்டடங்களுக்கான மேம்படுத்தல்* ரூ. '000	கணனி வன்பொருள் ரூ. '000	அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துகள் ரூ. '000	ஏனையவை ரூ. '000	முன்னெடுக் கப்படும் கட்டட பணி ரூ. '000	மொத்தம் ரூ. '000
செலவு/மதிப்பீடு							
2016.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	5,498,292	474,060	1,883,308	1,514,177	290,825	134,375	9,795,038
சீராக்கல்	(35,475)	–	(16,661)	–	–	(46,268)	(98,404)
கூட்டுதல்கள்	102,403	14,257	208,230	180,995	53,914	56,265	616,064
மீள் மதிப்பீடு	–	–	–	–	–	–	–
கையுதிரத்தல்	–	–	(9,034)	(42,414)	(5)	(66,928)	(118,381)
2016.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	5,565,220	488,317	2,065,843	1,652,758	344,734	77,444	10,194,317
(கழிக்குக): திரண்ட பெறுமானத் தேய்வு							
2016.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி	–	58,683	1,643,238	916,135	207,690	–	2,825,746
சீராக்கல்	–	–	(3,371)	–	–	–	(3,371)
ஆண்டிற்கான விதிப்பணவு	41,214	7,198	104,309	115,400	32,762	–	300,883
கையுதிரத்தல்	–	–	(9,034)	(41,725)	(5)	–	(50,764)
2016.12.31 அன்றுள்ளவாறான இறுதி மீதி	41,214	65,881	1,735,142	989,810	240,447	–	3,072,494
(கழிக்குக): மதிப்பிழப்பு	–	–	–	–	–	–	–
2016.12.31 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி	5,524,006	422,436	330,701	662,948	104,287	77,444	7,121,823

** 2017.12.31 அன்று உள்ளவாறு ரூபா 5.3 மில்லியன் கொண்ட வாடகை/குத்தகை உடமைகளுக்கான முன்னெடுக்கப்படும் பணி மேம்படுத்தல்களை வாடகை ஆதனங்கள், வாடகை/குத்தகை உடமைக் கட்டடங்களுக்கான மேம்படத்தலகள் உள்ளடக்குகின்றன.*

27. (இ) மீள்மதிப்பீடு →

தொழில் ரீதியாக தகமை பெற்ற சுயாதீன விலை மதிப்பிட்டாளர்களை கொண்டு வங்கி அதன் காணியினையும் கட்டடங்களையும் மீள் மதிப்பீடு செய்துள்ளது. செயற்பாடு மிக்க சந்தையில் காணப்படும் அவதானிக்க தக்க விலைகள் அல்லது கிட்டியகால அடிப்படையில் அண்மைய சந்தை கொடுக்கல் வாங்கல்களை கருத்தில் கொண்டு மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, ரூபா 4,508.48 மில். தொகைக்கான மீள்மதிப்பீட்டு மிகை ஒன்று 2017 இல் மீள் மதிப்பீடு ஒதுக்குக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 11.73 மில். முன்னைய ஆண்டு தொடர்பில் இதே நோக்கத்திற்காக சீர்செய்யப்பட்டிருந்நது.

27. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி) →

27. (ஈ) வங்கியின் காணியும் கட்டடங்களும் →

காணியும் கட்டடங்களும் மீதி, ரூபா 7,996.2 கொண்ட இறையிலி காணி பெறுமதியினை உள்ளடக்குகின்றது.

27. (உ) பொறுப்புக்களுக்கான பிணையமாக வைக்கப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் →

எவ்விதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பொறுப்புக்களுக்கான பிணையங்களாக வைக்கப்படவில்லை

27. (ஊ) முற்றாக பெறுமானம் தேய்விற்கு உட்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் →

அறிக்கையிடும் திகதியில் இன்னும் பயன்பாட்டில் உள்ள, முற்றாக பெறுமானத் தேய்விற்கு உட்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஆரம்ப செலவு கீழே தரப்பட்டுள்ளது.

	தொகுதி	
டிசம்பர் 31ல் உள்ளவாறு	**2017** **ரூ.'000**	2016 ரூ.'000
கணனி வன் பொருள்	**1,370,615**	1,525,529
அலுவலக உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்துக்கள்	**271,677**	270,382
அருவச் சொத்துக்கள்	**433,977**	401,879
ஏனையவை – நாணாவித உபகரணங்கள்	**27,840**	160,881

28. அருவச் சொத்துகள் →

கணக்கீட்டுக் கொள்கை

தொகுதியினது அருவச் சொத்துகளானவை கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்குகின்றது.

இனங்காணுவதற்கான அடிப்படை

அருவச் சொத்தொன்றின் செலவு நம்பத்தகுந்தவாறு அளவிடக் கூடிய போதும் அத்துடன் அச் சொத்துக்கு சாட்டத்தக்க பொருளாதார நலன்கள் தொகுதியினுள் உட்பாய்கின்ற எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் நிகழக்கூடியதாக உள்ளது என்ற அடிப்படையிலும் மாத்திரம் அருவச் சொத்தொன்று இனங்காணப்படுகின்றது.

அளவீட்டுக்கான அடிப்படை

வேறாக பெற்றுக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்கானல் செலவில் இனங்காணப்படுகின்றன. வியாபார இணைப்பொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துகளின் செலவு, கையேற்கப்பட்ட திகதியில் உள்ளவாறு அவற்றின் நியாயப் பொறுமதியில் காணப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து, அருவச் சொத்துக்கள், ஏதேனும் ஒற்றுதிரட்டிய பெறுமதிக்குறைபிம்னையும் எதேனும் ஒன்றுதிரட்டிய மதிப்புபிழபபினையும் கழித்து கொண்டு செல்லப்படுகின்றன.

28. அருவச் சொத்துகள் (தொடர்ச்சி)

பயன்பாடு மிக்க பொருளாதார ஆயுட் காலமும் பெறுமதி குறைப்பும்

அருவச் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுற் காலமானது முடிவிலியிலோ முடிவிலியற்றோ மதிப்பிடப்படுகின்றது. முடிவிலி உடனான அருவச் சொத்துகள், பயன்பாட்டு பொருளாதார ஆயுற் காலத்தின் மீது பெறுமதி குறைக்கப்படுகின்றன. வரையறைக்குட்பட்ட ஆயுற் காலம் ஒன்றுடன் கூடிய அருவச் சொத்தொன்றுக்கான பெறுமதி குறைப்புக் காலமும், பெறுமதி குறைப்பு முறையும் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாயப்படுகின்றது. எதிர்பாக்கப்பட்ட பயன்பாட்டு ஆயுற் காலத்தில் உள்ள மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நலன்களில் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு விதங்களில் உள்ள மாற்றங்கள் பொருத்தமானவாறு பெறுமதிக்குறைப்புக் காலம் அல்லது முறையினை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுகின்றன, அத்துடன் அவை கணகீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்களாக கொள்ளப்படுகின்றன. வரையறையற்ற ஆயுளுடன் கூடிய அருவச் சொத்துகள் மீதான பெறுமதி குறைத்தல் செலவுகள், அருவச் சொத்தின் தொழிற்பாடுகளுக்கு ஒத்த செலவு வகையில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

இனங்காணாமை

அருவச் சொத்துகளை கையுதிர்த்தலின் மீது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்ப்படட எதிர்கால பொருளாதார நலன்கள் இல்லாமையின் போது அவை இனங்காணப்படுவதில்லை. சொத்தின் இனங்காணாமையில் இருந்து தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய கையுதிர்தத்ல் விற்று வரவு மற்றும் சொத்து கொண்டு செல்கின்ற தொகை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடாக கணிக்ப்பட்டவை), சொத்து இனங்காணப்படாத ஆண்டின் வருமானக் கூற்றில் "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" இல் இனங்காணப்பட்டுள்ளது.

வரையறையற்ற பயன்பாட்டு பொருளாதார ஆயுட் காலத்துடன் கூடிய அருவச் சொத்துக்களை தொகுதி கொண்டிருக்கவில்லை தொகுதியில் கணணி மென்பொருளின் மதிப்பிடப்பட்ட பொருளாதார ஆயுற் காலம் 4 வருடங்களாகும் (வருடத்திற்கு 25%)

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
செலவு				
ஆரம்ப மீதி	**639,336**	504,410	**641,306**	506,380
கூட்டல்கள்	**319,428**	134,926	**319,828**	134,926
கையுதிர்த்தல்கள்	**–**	–	**–**	–
இறுதி மீதி	**958,764**	639,336	**961,134**	641,306
(கழிக்குக): திரண்ட பெறுமதிக் குறைப்பு				
ஆரம்ப மீதி	**482,065**	446,553	**484,035**	448,523
ஆண்டுக்கான விதிப்பனவு	**96,391**	35,512	**96,444**	35,512
கையுதிர்த்தல்கள்	**–**	–	**–**	–
இறுதி மீதி	**578,456**	482,065	**580,479**	484,035
தேறிய புத்தகப் பெறுமதி	**380,308**	157,271	**380,655**	157,271

29. பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள்/பொறுப்புகள்

கணக்கிட்டுக் கொள்கை

பிற்போடப்பட்ட வரி பற்றிய விரிவான கலந்துரையாடல் 289ம் பக்கத்தில் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளது

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
29. (அ) பிற்போடப்பட்ட வரி சொத்துகள்				
பிற்போடப்பட்ட வரி சொத்துகள்	**–**	–	**588**	228
வருமான கூற்று	**–**	–	**(588)**	360
பிற்போடப்பட்ட வரி சொத்துகள்	**–**	–	**–**	588
29. (ஆ) பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்				
பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள்	**416,180**	504,423	**415,592**	504,423
வருமானக் கூற்று	**90,883**	(88,243)	**91,546**	(88,243)
தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	**507,063**	416,180	**507,138**	416,180

30. ஏனைய சொத்துகள்

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
உத்தேச வரி/பிடித்துவைதல் வரி வருமதிகள் [குறிப்பு 04 உ ஐப் பார்க்கவும்]	**7,184,079**	5,813,616	**7,212,333**	5,833,897
வருமதிகள்	**2,195,402**	3,601,388	**2,448,403**	3,710,443
வட்டி மீது திறைசேரியிடமிருந்து (சிரேஷ்ட பிரஜைகள்) கிடைக்கப்பெறவேண்டியவை	**8,150,352**	4,332,737	**8,150,352**	4,332,737
வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும்	**363,458**	199,139	**363,458**	199,139
திறைசேரிக்கான முற்பணக் கொடுப்பனவு (குறிப்பு அ)	**4,480,000**	4,800,000	**4,480,000**	4,800,000
ஓய்வூதியம் II இற்கு செலுத்தப்பட்ட முற்பணம் [34.(அ).2.ஐப் பார்க்க]	**46,384**	80,656	**46,384**	80,656
நானாவித கடன்படுநர்	**27,436**	35,022	**27,436**	35,022
முற்செலுத்தப்பட்ட ஊழியர் நட்டஈடு	**3,115,069**	2,362,379	**3,115,069**	2,362,379
ஏனைய சொத்துகள்	**133,509**	536,502	**133,509**	536,502
மொத்தம்	**25,695,689**	21,761,440	**25,976,944**	21,890,777

30. ஏனைய சொத்துகள் (தொடர்ச்சி)

குறிப்பு (அ)

திறைசேரியின் வேண்டுதலின் பேரில், 2014 இல் இருந்து ஆரம்பிக்கின்ற 6 வருட காலமொன்றினுள் இலாபத்திற்கெதிராக எதிரீடு செய்வதற்காக திறைசேரியினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு 2012 இல் ரூபா 6,000 மில். மற்றும் 2013 இல் ரூபா 2,000 மில் கொண்ட முற்பணமொன்றை வங்கி செலுத்தியுள்ளது. 2016.01.01 இலிருந்து செயற்படக்கூடியவாறு 10 வருட காலப்பகுதியினுள் இலாபத்திற்கெதிராக ரூபா 5,333 மில் மீதி தொகையினை எதிரீடு செய்வதற்கு திறைசேரி உடன்பட்டுள்ளது. அதன்பின்னர் 2017.01.01 முதல் செயற்படத்தக்கவாறு 15 வருடகாலமொன்றினுள் இலாபத்திற்கெதிராக ரூபா 4,800 மில் மீதி தொகையினை எதிரீடு செய்வதற்கு திறைசேரி உடன்பட்டுள்ளது.

31. வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை

கணக்கீட்டுக் கொள்கை

மேலதிக பற்றுகள், அழைப்புப் பணம் கடனாக்கங்கள் மற்றும் உப நிறுவனத்தின் மூலமான மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் (ரெப்போ) என்பவற்றை வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை உள்ளடக்குகின்றது. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி வைப்புகள் அவற்றின் கடன் தீர் செலவில் அளவிடப்பட்டுள்ளன. இவ் நிலுவைகள் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட/கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி, வட்டிச் செலவின் கீழ் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உள்ளவாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்(ரெப்போ)	**–**	–	**647,994**	2,743,282
ஏனைய வசதிகள்	**180,439**	115,391	**180,439**	115,391
மொத்தம்	**180,439**	115,391	**828,433**	2,858,673

32. ஏனைய வாடிக்கையளர்களுக்கு செலுத்த வேண்டியவை

கணக்கீட்டுக் கொள்கை

எனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை, சேமிப்பு வைப்புகளையும் தவணை வைப்புகளையும் உள்ளடக்குகின்றது. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி வைப்புகள் அவற்றின் பெறுதிக்குறைப்பில் அளவிடப்பட்டுள்ளன. வைப்புகள் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட/கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி, வட்டிச் செலவின் கீழ் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உள்ளவாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
ஏனைய வாடிக்கையளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை	**737,212,640**	657,280,315	**737,212,640**	657,280,315
மொத்தம்	**737,212,640**	657,280,315	**737,212,640**	657,280,315

32. ஏனைய வாடிக்கையளர்களுக்கு செலுத்த வேண்டியவை (தொடர்ச்சி) →

32. (அ) உற்பத்தி ரீதியிலான பகுப்பாய்வு →

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
சேமிப்பு வைப்புகள்	**188,191,882**	176,347,004	**188,191,882**	176,347,004
நிலையான வைப்புகள்	**549,020,758**	480,933,311	**549,020,758**	480,933,311
மொத்தம்	**737,212,640**	657,280,315	**737,212,640**	657,280,315

32. (ஆ) நாணய அலகு ரீதியிலான பகுப்பாய்வுகள் →

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
இலங்கை ரூபா	**727,849,199**	648,802,789	**727,849,199**	648,802,789
ஐக்கிய அமொரிக்க டொலர்	**5,924,264**	5,330,985	**5,924,264**	5,330,985
யூரோ	**1,211,334**	1,245,906	**1,211,334**	1,245,906
ஸ்ரேலிங் பவுண்	**1,207,599**	1,076,387	**1,207,599**	1,076,387
அவுஸ்திரேலிய டொலர்	**1,020,083**	824,248	**1,020,083**	824,248
யப்பான் யென்	**161**	–	**161**	–
மொத்தம்	**737,212,640**	657,280,315	**737,212,640**	657,280,315

33. ஏனைய கடன்பாடுகள்

கணக்கீட்டுக் கொள்கை

33.1 மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

தொகுதியானது உரிமைத்துவத்தினது அனைத்து இடர்களையும் கைமாறுகளையும் கணிசமான அளவில் தக்க வைத்திருப்பதால் குறித்த எதிர்கால திகதி ஒன்றில் மீள் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், நிதியியல் நிலமை கூற்றிலிருந்து இனங்காணப்படுவதில்லை. கிடைக்கப்பெற்ற நேரொத்த பணம் தொகுதிக்கு கிடைக்கப்பெற்ற கடன் ஒன்றாக நிதியில் பொறுப்பினை பிரதிபலிப்பதனால் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் நிலைமை கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. இது கொடுக்கல் வாங்கலின் பொருளாதார விடயத்தினை பிரதி பலிக்கின்ற "மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்" இனுள் பொறுப்பொன்றாக ஒன்று சேர்ந்த வட்டியினையும் உள்ளடக்குகின்றது. விற்பனை மற்றும் கொள்வனவு விலைகளுக்கு இடையிலான வேறுபாடு, வட்டிச் செலவாக கொள்ளப்பட்டு விளைவு வட்டி வீதத்தினை பயன்படுத்தி ஒப்பந்தத்தின் ஆயுட் காலத்தின் மீது கணிக்கப்பட்டுள்ளது.

33.2 விநியோகிக்கப்பட்ட முன்நிகழ்வுப் பிணையங்கள்

நீண்ட கால நிதி அளித்தல் தேவைகளுக்காக வங்கியினால் பெறப்பட்ட நிதியங்களை இவை பிரதிநிதித்துவ படுத்துகின்றன. இது சர்வதேச முறிகள் (ஐ.அ.டொ மாற்றப்பட்டவை) ஊடான கடன்பாடுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி அதன் பெறுதிக் குறைப்பு செலவில் அளவிடப்பட்டுள்ளன. செலுத்தப்பட்ட.·. செலுத்தப்பட வேண்டிய வட்டி இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்கானப்பட்டுள்ளது.

அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட படுகடன் பிணையங்கள் அத்திகதி அன்று தொழிற்பாட்டு நாணயத்தின் மத்திம நாணய மாற்று விகிதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. அறிக்கையிடும் திகதி அன்று மீளமாற்றுதலின் மீது தோன்றுகின்ற வெளிநாட்டு நாணய வேறுபாடுகள், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் (ரெப்போ)	**61,253,161**	54,111,728	**66,069,353**	59,701,246
விநியோகிக்கப்பட்ட முன்நிகழ்வுப் பிணையங்கள் (குறிப்பு 33. அ)	**156,702,616**	152,928,181	**156,702,616**	152,928,181
மொத்தம்	**217,955,777**	207,039,909	**222,771,969**	212,629,427

33. (அ) விநியோகிக்கப்பட்ட முன்நிகழ்வுப் பிணையங்கள

விநியோகிக்கப்பட்ட முன்நிகழ்வுப் பிணையங்கள்	வட்டி	விநியோகிக்கப்-பட்ட திகதி	முதிர்வுத் திகதி	கூப்பன் வீதம் %	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
750 மில்லியன் ஐ.அ.டொ. முன்நிகழ்வுப் பிணையம்	வருடத்திற்கு இருமுறை	18.09.2013	18.09.2018	8.875	**117,831,970**	114,980,416
250 மில்லியன் ஐ.அ.டொ. முன்நிகழ்வுப் பிணையம்	வருடத்திற்கு இருமுறை	10.09.2014	10.09.2019	5.150	**38,870,646**	37,947,765
					156,702,616	152,928,181

34. ஏனைய பொறுப்புகள்

கணக்கீட்டுக் கொள்கை

வட்டி கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், கட்டணங்களும் செலவுகளும், ஓய்வூதியம், விடுமுறை பணமாக்கல் மற்றும் ஏனைய செலவுகள் ஆகியவற்றை ஏனைய பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன. இப் பொறுப்புக்கள் அறிக்கையிடும் தினத்தன்று கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31ல் உளள்வாறு	**2017 ரூ.'000**	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
நானாவித கடன் கொடுனர்கள்	**119,903**	91,375	**124,903**	92,487
செலுத்த வேண்டிய வட்டி	**–**	88,054	**–**	88,054
ஓய்வூதியத் திட்டம் 1 இற்கான ஏற்பாடு [குறிப்பு 34.(அ).1.]	**2,750,601**	1,252,553	**2,750,601**	1,252,553
மருத்துவ உதவித் திட்டத்திற்கான ஏற்பாடு [குறிப்பு 34.(அ).3.]	**960,830**	644,377	**960,830**	644,377
பணிக்கொடைக்கான ஏற்பாடு [குறிப்பு 34.(அ).4.]	**–**	–	**1,234**	1,260
பெறுமதி குறைப்புச் செய்யப்படாத முதலாம் நாள் வேறுபாட்டு நாணய பரஸ்பரமாற்றல் [குறிப்பு 19.3 ஐ பார்க்க]	**1,099,322**	2,448,670	**1,099,322**	2,448,670
ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்கவை		4,075,027	**4,170,571**	4,081,104
மொத்தம்	**9,062,425**	8,600,056	**9,107,460**	8,608,506

34. (அ) வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள்

வங்கி, இரு வேறான ஓய்வூதிய திட்டங்களை தாபித்துள்ளது. ஓய்வுதிய திட்டம் I இது 1995 ஒக்டோபர் 01ம் திகதிக்க முன்னர் இணைந்த நிரந்தர ஊழியர்களுக்கானது. அத்துடன் ஓய்வுதிய திட்டம் II, இது 1995 ஒக்டோபர் 01ம் திகதிக்கு பின்னர் இணைந்த நிரந்தர ஊழியர்களுக்கானது. ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான மருத்துவ உதவித் திட்டமும் காணப்படுகின்றது.

இத்திட்டங்களின் சொத்துகள் வங்கியின் சொத்துகளில் இருந்து சுயாதீனமாக வைக்கப்பட்டுள்ளதுடன் நம்பிக்கை நிதிய ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறும்/தொடர்புடைய நிதியங்களின் விதிகளுக்கு அமைவாகவும் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற நம்பிக்கையாளர்கள் சபை/முகாமையாளர்களினால் நிர்வகிக்கப்படுகின்றது.

அனைத்து நிதியங்களும் உறுப்பினர்களால் நியமிக்கப்படட் பட்டய கணக்காளர்கள் நிறுவனம் ஒன்றினால்/நிறுவனங்களினால் வங்கியின் கணக்காய்விலிருந்து சுயாதீனமாக வருடாந்த கணக்காய்விற்கு உட்படுகின்றன. அத்துடன் கணிபீட்டு மதிப்பீடுகள் இந்த நிதியங்களை ஆளுகின்ற நிதியங்களுக்கு அமைவாக குறைந்தது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகின்றன.

34. (அ) 1 தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் I

ஓய்வூதிய திட்டம் – I

பியால் எஸ் குணதிலக்க அன்ட் அசோசியேட் இன் அக்சுவரீஸ் சங்க உறுப்பினரான (ஐ.அ.) பியால் எஸ். குணதிலக்க என்பரினால் நடைமுறைக் கணீப்பீட்டு மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

2017 டிசம்பர் 31 வரையான திகதிக்கு ஊழியர்களினால் சம்பாதிக்கப்பட்ட எதிர்வு கூறப்பட்ட நலன்களின் நடைமுறைக் கணீப்பீட்டு மதிப்பீட்டின் தற்போதைய பெறுமதியை ஒதுக்கீடு செய்வதற்காக எதிர்வு கூறப்பட்ட அலகு வரவு முறை பயன்படுத்தப்பட்டது.

34. ஏனைய பொறுப்புகள் (தொடர்ச்சி) →

34. (அ) வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் (தொடர்ச்சி) →

34. (அ) 1. தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் I (தொடர்ச்சி)

	வங்கி		தொகுதி	
	2017 ரூ.'000	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
(அ) நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்பட்ட தேறிய சொத்து/ (பொறுப்பு)				
திட்டச் சொத்தின் நியாயப் பெறுமதி	**13,552,607**	13,198,392	**13,552,607**	**13,198,392**
வரையறை செய்யப்பட்ட நன்மைக் கடப்பாடு	**(16,303,208)**	(14,450,945)	**(16,303,208)**	**(14,450,945)**
மொத்தம்	**(2,750,601)**	(1,252,553)	**(2,750,601)**	**(1,252,553)**
(ஆ) வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட தொகை				
நடப்புச் சேவை செலவு	**137,244**	155,778	**137,244**	**155,981**
நலக்கடப்பாடு மீதான வட்டிச் செலவு	**254,833**	421,816	**254,833**	**421,816**
தேறிய நன்மைச் செலவு	**392,077**	577,594	**392,077**	**577,797**
(இ) ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகை				
ஏற்பாட்டுச் சீராக்கம்	**–**	(796,913)	**–**	(796,913)
நடைமுறை (இலாபம்/நட்டம்)	**526,139**	1,017,720	**526,139**	1,017,720
ஊக மாற்றங்களினால் ஏற்பட்ட (இலாபம்/நட்டம்)	**1,062,775**	(2,400,266)	**1,062,775**	(2,400,266)
திட்டச் சொத்துக்கள் மீதான ஆயுட் கணிப்பீட்டு (இலாபம்/நட்டம்)	**(90,866)**	84,779	**(90,866)**	84,779
திட்டச் சொத்துக்கள் மீதான வட்டி வருமானத்தில் வேறுபாடு	**–**	153,482	**–**	153,482
மொத்தம்	**1,498,048**	(1,941,199)	**1,498,048**	(1,941,199)
(ஈ) திட்டச் சொத்துக்களின் உண்மை பெறுமதியிலான மாற்றங்கள் பின்வருமாறு				
திட்டச் சொத்துக்களின் ஆரம்ப நியாயப் பெறுமதி	**13,198,392**	12,189,981	**13,198,392**	**12,189,981**
திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட வருவாய்	**1,479,280**	966,365	**1,479,280**	**966,365**
உண்மையான தொழில் தருநர் பங்களிப்பு	**392,077**	1,642,381	**392,077**	**1,642,381**
செலுத்தப்பட்ட நன்மைகள்	**(1,608,008)**	(1,515,555)	**(1,608,008)**	**(1,515,555)**
திட்டச் சொத்துகள் மீதான கணிப்பீட்டு இலாபம்/நட்டம்	**90,866**	(84,779)	**90,866**	**(84,779)**
திட்டச் சொத்துகளின் இறுதி நியாயப் பெறுமதி	**13,552,607**	13,198,392	**13,552,607**	**13,198,392**

34. ஏனைய பொறுப்புகள் (தொடர்ச்சி) →

34. (அ) வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் (தொடர்ச்சி) →

34. (அ) 1. தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் I (தொடர்ச்சி)

	வங்கி		தொகுதி	
	2017 ரூ.'000	2016 ரூ.'000	**2017 ரூ.'000**	2016 ரூ.'000
(உ) வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடுகளின் நடப்பு பெறுமதியிலான மாற்றங்கள் பின்வருமாறு				
ஆரம்ப வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடு	**14,450,945**	15,651,403	**14,450,945**	15,651,403
வட்டிச் செலவு	**1,734,113**	1,541,663	**1,734,113**	1,541,663
நடப்பு சேவைச் செலவு	**137,243**	155,980	**137,243**	155,980
செலுத்தப்பட்ட நலன்கள்	**(1,608,008)**	(1,515,555)	**(1,608,008)**	(1,515,555)
ஊகங்களின் மாற்றங்கள் காரணமாக (இலாபம்/நட்டம்)	**1,062,775**	(2,400,266)	**1,062,775**	(2,400,266)
கடப்பாடுகள் மீதான கணிப்பீட்டு (இலாபம்/நட்டம்)	**526,140**	1,017,720	**526,140**	1,017,720
இறுதி வரையறை செய்யப்பட நலக் கடப்பாடுகள்	**16,303,208**	14,450,945	**16,303,208**	14,450,945
(ஊ) வரையறை செய்யப்பட்ட சொத்துகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்				
திறைசேரி முறிகள்	**7,438,650**	7,114,705	**7,438,650**	**7,114,705**
திறைசேறி உண்டியல்கள்	**237,424**	2,577,678	**237,424**	**2,577,678**
நிலையான வைப்புகள்	**267,939**	673,231	**267,939**	**673,231**
மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	**242,285**	262,843	**242,285**	**262,843**
தொகுதிக்கடன்கள்	**4,699,545**	2,230,133	**4,699,545**	**2,230,133**
நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்	**100,000**	–	**100,000**	**–**
இலங்கை வங்கியில் உள்ள காசு	**52**	11,194	**52**	**11,194**
ஏனைய சொத்துகள்	**566,712**	328,609	**566,712**	**328,609**
மொத்தம்	**13,552,607**	13,198,392	**13,552,607**	**13,198,392**

	ஓய்வூதியத்திட்டம் I 2017	ஓய்வூதியத்திட்டம் I 2016
(எ) கணிப்பீட்டு ஊகங்கள்		
எதர்கால சம்பள அதிகரிப்பு வீதம் (%)	**6.50**	6.50
கழிவு வீதம் (%)	**11.00**	12.00
எதிர்கால வாழ்கைச்செலவு படி அதிகரிப்பு (%)	**4.50**	4.50
இறப்பு வீதம் (%)	**GA 1983 இறப்பு வீத அட்டவனை**	GA 1983 இறப்பு வீத அட்டவனை
ஓய்வு பெறும் வயது	**57 வருடங்கள்**	57 வருடங்கள்
சாதாரன கொடுப்பனவு முறை	**மாதாந்தம்**	மாதாந்தம்

34. ஏனைய பொறுப்புகள் (தொடர்ச்சி) →

